
ஐயாரப்பன் வீடு
மைதிலி சம்பத்

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஐயாரப்பன் வீடு |
| ஆசிரியர் | : மைதிலி சம்பத் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஆகஸ்ட், 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 428 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : முத்து நிலையம்<br>B-4/2, ராசி பிளாட்ஸ்,<br>பு.எண்: 52 அம்மையப்பன், தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.160.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை-14. |


## ஐயாரப்பன் வீடு

இந்த நாவலில் வரும் முக்கிய கதா பாத்திரங்களின்
பெயர்களும் மற்ற விவரங்களும் - இங்கு 6 வீடுகள் 5 குடித்தனங்கள்

**1 & 2. வீட்டின் பெயர் காவேரி** (முதல் இரண்டு வீடுகள் சேர்ந்தது)

1. வரதன் — ஓய்வு பெற்ற ஆசிரியர்
2. பரிமளா — வரதனின் மனைவி
3. கணேசன் — வரதனின் ஒரே மகன் எல்.ஐ.சி.யில் உயர் அதிகாரி
4. ஜயந்தி — கணேசனின் மனைவி கல்லூரி விரிவுரையாளர்
5. விஜய் — கணேசனின் மூத்த மகன் கணினிப் பொறியாளர்
6. ஷோபா — விஜய்யின் மனைவி நிதி நிறுவன அதிகாரி
7. ப்ரதீப் — விஜய்யின் மகன் - பள்ளிச் சிறுவன்
8. விவேக் — கணேசனின் இரண்டாவது மகன் விற்பனைப் பிரதிநிதி
9. வீணா — கணேசனின் மகள் 10-வது வகுப்பு மாணவி

**3. வடவாறு**

1. சீனிவாசன் — சூப்பர் மார்க்கெட் உரிமையாளர்
2. லஷ்மி — சீனிவாசனின் மனைவி
3. திவ்யா — சீனிவாசனின் முதல் மகள் - பட்ட மேற்படிப்பு மாணவி
4. ரம்யா — சீனிவாசனின் இரண்டாவது மகள் - கல்லூரி மாணவி
5. காவ்யா — சீனிவாசனின் மூன்றாவது மகள் - கல்லூரி மாணவி

**4. வெண்ணாறு**

1. ராமனாதன் — மாநில அரசாங்க அதிகாரி
2. கல்யாணி — ராமனாதனின் மனைவி - இல்லத்தரசி
3. பொன்னி — கல்யாணியின் அத்தை
4. ப்ருகதீஷ் — ராமனாதனின் குழந்தை

**5. குடமுருட்டி**

1. சுப்ரமணியம் — ரெடிமேட் ஷாப் உரிமையாளர்
2. நளினி — சுப்ரமணியத்தின் மனைவி - இல்லத்தரசி
3. சுபாஷிணி — சுப்ரமணியத்தின் முதல் மகள் கல்லூரி மாணவி
4. வினோதினி — சுப்ரமணியத்தின் இரண்டாவது மகள் - கல்லூரி மாணவி
5. சாமிநாதன் — சுப்ரமணியத்தின் தந்தை - ஓய்வு பெற்ற தபால் துறை அதிகாரி

**6. வெட்டாறு**

1. ரங்கராஜன் — காவல் துறையில் உயர் அதிகாரி
2. தேவிகா — ரங்கராஜன் மனைவி - மத்திய அரசாங்க அதிகாரி
3. சுந்தராம்பா — ரங்கராஜனின் தாயார்
4. அரவிந்த் — ரங்கராஜனின் மூத்த மகன் - வைத்தியக் கல்லூரி மாணவன்
5. ராஜேந்திரன் — ரங்கராஜனின் இரண்டாவது மகன் - கல்லூரி மாணவன்
6. குந்தவை — ரங்கராஜனின் மகள் 8-ம் வகுப்பு மாணவி

ஐயாரப்பன் வீடு



# ஐயாரப்பன் வீடு

## 1

சத்திய நாராயணா கோவிலிலிருந்து 'கௌசல்யா சுப்ரஜா ராமா' என்று எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின் தேன் குரலில் சுப்ரபாதம் ஒலிக்கத் துவங்கிய நேரம். 'ஐயாரப்பன் வீடு' என்ற அந்த ஐந்து வீடுகள் கொண்ட காம்பௌண்ட்டின் 'வெண்ணாறு, வெட்டாறு' ஆகிய இரண்டு வீடுகளில் வாசல் விளக்கைப் போட்டு கதவைத் திறந்து வெளி வந்தார்கள், பொன்னியத்தை என்ற பொன்னியம்மாளும், சுந்தரா என்கிற சுந்தராம்பாள்.

''பொன்னியக்கா, ராத்திரி தூக்கம் வந்ததா? நல்லா தூங்கினீங்களா?'' என்று கேட்டபடி பொன்னியத்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் சுந்தரா.

''பரவாயில்லேம்மா, தூங்கினேன். நீ கால் வலி இல்லாமல் தூங்கினியா?'' என்று கேட்ட பொன்னியத்தை அந்த காம்பௌண்ட்டின் கேட்டைப் பார்க்க எதிர் சுவர் அருகே இருந்த பவளமல்லி மரத்தை நோக்கி நடந்தாள். தரையில் விரித்திருந்த பிளாஸ்டிக் ஷீட் முழுவதும் பவளமல்லி பூக்கள் கொட்டிக் கிடந்தன. சுந்தரா மரத்தினருகே போய் ஒரு உலுக்கு உலுக்கவும் இன்னும் மரத்திலிருந்த பூக்களும் கீழே கொட்ட, வெள்ளையும் சிவப்புமாய் அந்த பிளாஸ்டிக் ஷீட் கைதேர்ந்த காஷ்மீர் நெசவாளன் ஒருவன் கைகளால் நெய்யப்பட்ட ரத்னக் கம்பளம் போல் கண்களைக் கவர்ந்தது. ஷீட்டின் ஓரங்களில் கனத்திற்காக வைத்திருந்த கற்களை அகற்றிவிட்டு இருவரும் மௌனமாகப் பூக்களைப் பொறுக்கி கையோடு கொண்டு வந்திருந்த பித்தளை பூஜைக் கூடைகளில் போட ஆரம்பித்தார்கள். இதெல்லாம் பொன்னியத்தையின் அறிவுரைதான். பூப்பறிக்கும்போது பேசக்கூடாது. எச்சில் பட்டுவிடும் ஸ்வாமிக்குப் போடும் பூக்களில். ஸ்வாமிக்காக உபயோகப்படுத்தும் பொருட்கள் பித்தளை, செம்பு என்றுதான் இருக்க வேண்டும்.

அந்த காம்பௌண்ட்டின் ஐந்து குடும்பங்களுக்கும் அவள் பொன்னியத்தை தான். எல்லோருக்கும் நல்லது. பொல்லாதது சொல்பவள் அவள்தான். எல்லோரும் அவள் வார்த்தைக்கு மரியாதை தந்து கேட்டுக் கொள்ளவும் செய்வார்கள்.

இவர்கள் பூக்களை எடுத்துக் கொண்டிருக்கையிலேயே 'குடமுருட்டி' வீட்டுப் பெரியவர் சாமிநாதன் ஒரு பித்தளைக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு வந்து இவர்களிடம் கொடுத்து விட்டு வாசல் கேட்டைத்



திறக்கவும், பால்காரன் ஜகதீசன். பசுவையும், கன்றையும் கொண்டு வரவும் சரியாக இருந்தது. வாசல் கேட்டை ஒட்டிய தூணில் பசுவைக் கட்டிவிட்டு கன்றை அதன் அருகில் விட்டார்.

பெரியவர் சாமிநாதன் போய் பால் பாத்திரத்தை எடுத்து வந்தார். பூக்களை சேகரித்து முடித்த பெண்களும் உள்ளே போய் பாத்திரங்களை எடுத்து வந்தனர். அதற்குள் 'காவேரி' வீட்டு ஜயந்தியும் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''என்ன ஆச்சு, இன்னும் லக்ஷ்மி கதவைத் திறக்கலையா?'' என்று கேட்ட பொன்னியத்தை இன்னுமொரு பாத்திரத்தை எடுத்துவர ஜகதீசன் ஐந்து பாத்திரங்களிலும் அவரவரின் அளவுபடி பாலை ஊற்றினார். ஜயந்தி ''குட் மார்னிங் அத்தை. குட்மார்னிங் ஆன்ட்டி அங்கிள் குட் மார்னிங்'' என்றபடியே பாலுடன் உள்ளே போய்விட்டாள்.

''என்ன சுந்தரா லக்ஷ்மி இத்தனை நாழி தூங்க மாட்டாளே. போய்த் தட்டிப் பார்ப்போமா?'' என்றாள் பொன்னியத்தை.

''வேண்டாங்க்கா. ஒரு கால் மணி பார்ப்போம்'' என்று சுந்தரா சொல்லவும் இருவரும் வீட்டிற்குள் போய் விட்டனர். பெரியவர் சாமிநாதன் வாசல் கேட்டைத் தாள் போட்டுக் கொண்டு உள்ளே போனார்.

எல்லார் வீட்டிலும் எல்லாரும் அவரவர் வழக்கமான நேரத்திற்கு எழுந்து, வழக்கமான வேலைகளைப் பார்க்கத் தொடங்க, அன்றைய தினம் சூரியனுடன் சேர்ந்து சூடு பிடித்தது.

ஒரு அரை மணி ஆகியிருக்கும். 'வடவாறு' வீட்டின் திவ்யா, ''பாட்டி, பாட்டி'' என்று கூப்பிட்டுக் கொண்டே ''தட்டமாக ஓடி வந்தாள். ''என்னம்மா திவ்யா, என்ன ஆச்சு, அம்மா வந்து பால் வாங்கவே வரலையே? இந்தா, நான் பால் வாங்கி வைச்சுருக்கேன். எடுத்துண்டுபோ'' என்றாள் பொன்னியத்தை.

''அம்மாவிற்கு ரொம்ப ஜுரம் அடிக்கிறது, பாட்டி! அப்பா வர பத்து மணி ஆகும்னு நினைக்கிறேன். எனக்கும், ரம்யாவிற்கும் இன்னிக்கு பரிட்சை இருக்கு. காலேஜ் போகணும். காவ்யாவிற்கு கிச்சன் வேலை ஒண்ணுமே தெரியாதே! கொஞ்சம் வரமுடியுமா'' என்று கேட்கும்போதே கண் கலங்கிவிட்டது திவ்யாவிற்கு.

''எதுக்குப் பைத்தியம் மாதிரி கண் கலங்கறேம்மா. இதோ கல்யாணி எழுந்தாச்சு இங்கே பாத்துக்க. நான் வரேன் வா'' என்றாள் பொன்னியத்தை.

''இல்லை பாட்டி! என்னால்தான் அம்மாவிற்கு ஜுரம் வந்துவிட்டது. அதுதான் ரொம்ப வருத்தமாயிருக்கு'' என்றாள் திவ்யா.

''அசடு! அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆனால் உங்கம்மா சுபாவம்தான் தெரியுமே உனக்கு. நீ எதுக்கு அப்பா இல்லாதபோது இந்தப் பேச்சை எடுத்தே? அவள் எல்லாத்துக்கும் கவலைப் படுவாள். பயப்படுவாள். அப்பா வரும் வரை நீயும் சும்மா இருந்திருக்கலாம். சரி போ. நான் இதோ வரேன்'' என்றவள் கல்யாணியிடம் அன்றைக்குத் தான் என்ன சமைக்க நினைத்திருந்தாளோ அதைச் சொல்லிவிட்டு திவ்யா வீட்டிற்குப் போனாள்.

முதலில் லக்ஷ்மியைத் தொட்டுப் பார்த்தவள், ''அம்மாடி, ஜுரம் ரொம்ப அடிக்கிறது. குரோசின் மாதிரி



ஏதாவது மாத்திரை இருக்கா'' என்று கேட்க திவ்யா ஒரு குரோசினும் வெந்நீரும் கொண்டு வந்து கொடுத்தாள். கொஞ்சம் பாலைக் காய்ச்சி ஆற வைத்து பின் மாத்திரை கொடுக்கலாம் என்றவள் அடுப்பில் பாலை வைத்து விட்டு ஃபிரிட்ஜைத் திறந்தாள். நல்ல வேளையாக இட்லி மாவு இருந்தது.

அதற்குள் ரம்யா குளித்துவிட்டு வந்தாள். ''அம்மா ரம்யா, போய் கல்யாணி ஆன்ட்டி சட்னி அரைச்சிருப்பா. கொஞ்சம் வாங்கிண்டு வாம்மா'' என்றாள்.

''பாட்டி, நானும் திவ்யாக்காவும் காலேஜ் கேண்ட்டினில் ஏதாவது சாப்பிட்டுக்கறோம்'' என்றாள் ரம்யா.

''நீ போய் சொன்னதைச் செய்'' என்று அதட்டலாக பொன்னியத்தை சொல்லவும், மறுத்துப் பேசாமல் கிளம்பிப் போனாள் ரம்யா.

இட்லியை ஊற்றிவிட்டு பதமாக ஆறவைத்த பாலை லக்ஷ்மிக்கு மாத்திரையுடன் கொடுத்தாள் பொன்னியத்தை. லக்ஷ்மிக்கு ஜுர வேகம். ஒரு பேச்சும் சொல்லாமல் பாலை மாத்திரையுடன் குடித்துவிட்டுப் படுத்தாள்.

''வாங்கோ ரம்யா, திவ்யா! இரண்டு பேரும் இட்லியை சாப்பிட்டுவிட்டு கையில் தயிர் சாதம் தரேன், எடுத்துண்டு போங்கோ. காவ்யா வேணும்னா லீவுபோட முடிஞ்சா அம்மாவோட இருக்கட்டும். இல்லாட்டாலும் பரவாயில்லை. நான் பார்த்துக்கறேன்'' என்றாள் பொன்னியத்தை.

அதற்குள் அங்கு வந்த சுந்தரா, ''இந்தாங்கோ, இந்த மூணு டப்பாலேயும் தயிர் சாதமும் ஊறுகாயும் வைத்திருக்கிறேன். நான் பாத்துக்கறேன் லக்ஷ்மியை. பொன்னக்கா, நீங்க போய் வேலையைப் பாருங்கோ.

சீனி வந்தா நம்மாத்தில் சாப்பிடட்டும்'' என்றாள். ''ஆனா, சரி நான் போய் ஸ்நானம் செய்துட்டு வந்துடறேன்'' என்று கிளம்பினாள் பொன்னியத்தை.

பொன்னியத்தைக் கிளம்பிப் போனதும் சுந்தராவிடம் இன்னுமொரு பாட்டம் புலம்பித் தீர்த்துவிட்டு காலேஜுக்குக் கிளம்பினாள் திவ்யா. ரம்யாவும் காலேஜுக்கு கிளம்ப, காவ்யா மட்டும் ''நான் வீட்டில இருக்கேன் அம்மாவைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லவும் சுந்தரா கிளம்பிப் போனாள்.

## 2

சீனிவாசன் தன் சூப்பர் மார்க்கெட்டுக்கு சில பருப்பு மிளகாய் வகைகளைத் தானே பார்த்து ஆர்டர் செய்ய ஆந்திரா போயிருந்தார். அன்று அவர் திரும்பும் நாள். ஆனால் ரயில் லேட்டாகி பகல் 12 மணிக்குத்தான் வீடு வந்து சேர்ந்தார். சற்றே இறங்கியிருந்த ஜுரம் லக்ஷ்மிக்குத் திரும்ப ஏறியிருந்தது. மாத்திரையும், ஹார்லிக்ஸும் கொடுத்துக் கொண்டிருந்தாள் காவ்யா. வீட்டிற்குள் வந்த சீனிவாசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இரண்டு நாள் முன் தான் போகும்போது நன்றாகத்தானே இருந்தாள் என்று தோன்றியது.

''இன்னிக்கு காலைலேருந்துதான் ஜுரம்பா அம்மாவுக்கு, இன்னிக்கு திவ்யா, ரம்யா இரண்டு பேருக்கும் பரிட்சை இருக்கு. அதுதான் போயிருக்காங்கப்பா'' என்றாள் காவ்யா.



''என்னம்மா சாப்டீங்க?'' என்று கேட்டார் சீனிவாசன்.

''பாட்டி வந்து இட்லி செய்து கொடுத்தாங்கப்பா. மதியத்திற்கு சுந்தரா மாமி தயிர் சாதம் கொடுத்திருக்காங்க. இப்போ உங்களையும் என்னையும் அங்கே சாப்பிட வரச் சொன்னாங்கப்பா'' என்று ஒப்பித்தாள், காவ்யா.

''சரி, நான் குளிச்சிட்டு வரேன், டாக்டரிடம் போயிட்டு வரலாம்'' என்று சொல்லிவிட்டு குளிப்பதற்காக விரைந்தார். குளித்துவிட்டு, பூஜை அறையில் இரண்டு நிமிடம் நின்று தியானித்தார்.

''லக்ஷ்மி, இப்போ எப்படிம்மா இருக்கு? எதுனாலே ஜுரம்?'' என்று கேட்டுக் கொண்டே அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். நல்ல ஜுரம் இருக்கிறது. இன்னும் மாத்திரை வேலை செய்ய ஆரம்பிக்கவில்லை. என்று நினைத்துக் கொண்டார். அதற்குள் காவ்யா, ''அம்மாவிற்காக வைத்த இட்லி இருக்குப்பா, இரண்டு சாப்பிடுங்கோ. காபியும் தரேன். அம்மாவை டாக்டரிடம் கூட்டிப் போய் வந்தப்புறம் சுந்தரா ஆன்ட்டி வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வரலாம்'' என்றாள்.

''சரிம்மா, எடுத்து வை. நானும் BP மாத்திரை சாப்பிடணுமே'' என்றபடி டைனிங் டேபிளுக்குப் போனார். சாப்பிட்டுவிட்டு, ''லக்ஷ்மி டாக்டர் கிட்ட போய்ட்டு வந்துடலாம், வா'' என்றார்.

''வேண்டாங்க. சாதாரண சளி, ஜுரம் தான். நாளைக்கு சரியாயிடும்'' என்று திரும்பிப் படுத்தாள் லக்ஷ்மி.

''ஆமாம்பா. பொன்னியத்தை, சுந்தரா ஆன்ட்டி. இரண்டு பேருமே வெறும் சளி, ஜுரம்னுதான் சொன்னாங்க. பொன்னியத்தை இன்னும் கொஞ்ச நேரத்தில் மிளகு கஷாயம் போட்டுண்டு வரேன்னாங்கப்பா'' என்றாள்

காவ்யா. ராத்திரி நடந்ததை எல்லாம் இப்போது அம்மா சொல்லி, அப்பா வந்ததும் வராததுமாய் ருத்ர தாண்டவம் ஆடப் போகிறாரே என்று இவளுக்குப் பயம்.

சீனிவாசன் கிளம்பிப் போனார். லக்ஷ்மிக்குக் கொஞ்சம் ஜுரம் குறைந்திருந்து. பொன்னியத்தை சற்று நேரத்தில் கஷாயத்துடன் வந்து விட்டாள்.

''ஏம்மா, ஆனாலும் இப்படியா அழுது உடம்புக்கு வர வழிச்சுப்பே? கண்ணும் மூஞ்சியும் பார்க்கவே சகிக்க வில்லை'' என்றாள்.

''பின்னே என்னத்தை அவள் கேட்டது மட்டும் ரொம்ப ரைட்டா?'' என்றாள் லக்ஷ்மி.

''அப்படி என்ன ஊரிலே, உலகத்திலே இல்லாததை அவள் கேட்டு விட்டாள்? அதுக்காக வயசு வந்த பெண்ணை அடிக்கற அளவுக்கா போவே?'' என்று கடிந்து கொண்டாள் பொன்னியத்தை.

''சரி, சரி! நேத்திக்கே பாஸ்போர்ட்டுக்காக விவரமெல்லாம் கொடுக்கணும்னா. என்னால் ஆனது அதைத் தடுத்துட்டேன். அவள் அப்பா வந்தாச்சு. இனிமேல் அவள் பாடு அவள் அப்பா பாடு. நான் ஏன் வாயைத் திறக்கிறேன்?'' என்றாள் லக்ஷ்மி.

''சரி, இந்தக் கஷாயத்தைச் சாப்பிடு. சீனி வரட்டும். சாப்பிட்டுவிட்டு சித்தே தூங்கி எழுந்திருக்கட்டும். அப்புறமா இதெல்லாம் பேசிக்கலாம். உனக்கும் ரசம் சாதம் கரைத்துக் கொடுக்கிறேன். கொஞ்சம் தூங்கு. எல்லாம் சரியாகிவிடும்'' என்றவள் காவ்யாவிடம் ''நீ கொஞ்சம் நேரம் கழித்து வா... அம்மாவுக்கு சாதம் கரைச்சுத் தரேன்'' என்றாள்.



லக்ஷ்மி அசதியில் தூங்க ஆரம்பிக்க, காவ்யா சற்று நேரம் ஏதோ பாடம் எழுதிக் கொண்டிருந்தாள். சீனிவாசன் வந்ததும் அப்பாவும் பெண்ணுமாக சுந்தரா வீட்டிற்குச் சாப்பிடப் போனார்கள். சுந்தராவின் பிள்ளை ரங்கராஜனும் சாப்பிட வந்திருந்தார். அவர் டெபுட்டி சூப்பிரண்டன்ட் ஆஃப் போலீஸ் ஆக இருப்பவர்.

''டேய், சீனி! என்னடா கொறிக்கறே. பெண்டாட்டி சமையல் மாதிரி இல்லையா? அம்மா, சீனிக்கு இன்னும் கொஞ்சம் கறி போடேன். ஏம்மா, காவ்யா! இதுதான் சாக்குன்னு ஸ்கூலுக்கு மட்டமா? அம்மா, நீயும் வாயேம்மா, சேர்ந்து சாப்பிடலாம்'' என்று அவர் உத்தியோகத்திற்குப் பொருத்தமில்லாமல் சளசளவென்று சிரித்துப் பேசிக் கொண்டே சாப்பிட்டுவிட்டு வேலைக்குக் கிளம்பி விட்டார்.

அவர் மனைவி தேவிகா மத்திய அரசாங்க வேலையில் இருப்பவள். காலையில் புறப்படும் முன் அவளும், இப்போது சீனி வரும்முன் சாமிநாதனும் படித்துப் படித்துச் சொல்லியிருந்தார்கள், ராத்திரி நடந்ததெல்லாம் பற்றி சீனியிடம் மூச்சு விடக்கூடாதென்று.

சாயந்திரம் திவ்யா, ரம்யா இரண்டு பேரும் வரும் முன் லக்ஷ்மிக்கு ஜுரம் நன்றாக விட்டிருந்தது. ஸ்ரீனிவாசனும் ஒரு தூக்கம் தூங்கி எழுந்து உற்சாகமாக உட்கார்ந்திருந்தார். திவ்யா வந்ததும் டீ போட்டு எல்லோருக்கும் கொடுத்து தானும் எடுத்துக் கொண்ட பின் எல்லோருமாக கூடத்தில் வந்து அமர்ந்தனர்.

திவ்யா பேச்சை ஆரம்பித்தாள். ''அப்பா, எனக்கு ஒரு விஷயம் கேக்கணும்பா உங்ககிட்டே!'' என்றாள்.

ஃபாரின் போக செலக்டாகியிருக்கே. அதுதானே?''

தூக்கிவாரிப் போட்டது எல்லோருக்கும். ''ஆமாம், சாமி மாமாவைப் பார்த்தேன் நீ வெளிநாட்டுக்குப் போக ஏற்பாடு ஆரம்பிக்கணும்னு சொன்னியாம். இன்னிக்கு நான் வந்துடுவேன்னும் போது. நேத்திக்கு என்ன அத்தனை அமர்க்களம்?'' என்று கேட்டார் சீனி.

''இல்லேப்பா, என்னோடு படிக்கிற பையன்கள் இரண்டு பேரும் இன்னிக்கு அந்த ஏற்பாடெல்லாம் தொடங்க றாங்க. அதுதான் எனக்கும் துணையாக இருக்குமேன்னு நினைச்சேன்'' என்றாள் திவ்யா தயங்கியவாறு.

''உன்னை என்ன பண்ணினாத் தேவலை? எங்க இரண்டு பேருக்கும் இதெல்லாம் பிடிக்காதுன்னு தெரிஞ்சும் என்ன தைரியம் உனக்கு'' சீறினார் சீனிவாசன்.

''சாமி மாமாவை எப்போ பாத்தீங்க? என்ன சொன்னார்?'' என்று கேட்டாள் லக்ஷ்மி.

''மத்தியானம் சாப்பிட வரும்போது கேட்டார். என்ன சீனிவாசா, சீக்கிரமே சாப்பிட வந்துட்டே'ன்னு 'லக்ஷ்மிக்கு ஜுரமாக இருக்கு, மாமா'ன்னேன். 'பின்னே, நேத்திக்கு கொஞ்சமாவா அழுதிருக்கா'ன்னார். எனக்கு ஒண்ணுமே புரியல்லே. 'என்ன நடந்தது மாமா'ன்னு கேட்டேன். 'என்னவோப்பா! உன் பொண்ணோட வாக்குவாதம். நான் இதையே உங்கிட்டே சொல்லியிருக்கக் கூடாது. ஏதோ வாய் தவறி சொல்லிட்டேன். ஸாரிப்பா! வீட்டிலே சொல்லும்போது தெரிஞ்சுக்கப்போறே. நான் சொல்லி யிருக்கப் படாது'ன்னு வருத்தப்பட்டுண்டு போயிட்டார். ஆமாம், நான் இல்லாதபோது நேத்திக்கு என்ன நடந்தது?'' என்று காட்டமாகக் கேட்டார்.



''ஒண்ணுமில்லேப்பா! ஸ்டான்ஃபோர்ட் யூனிவர் சிட்டியிலேர்ந்து எனக்கு அட்மிஷன் கிடைச்சிருக்குன்னு லெட்டர் வந்ததும் எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அம்மாவுக்கும் உங்களுக்கும் தெரிஞ்சதானே நான் அப்ளை பண்ணினேன்? அதுதான் அம்மாவும் சந்தோஷப்படுவான்னு விஷயத்தைச் சொன்னேன். அம்மாவானா ரொம்ப கோபமாயிட்டா. எனக்கு ரொம்ப வருத்தமா இருந்தது'' என்றாள் திவ்யா.

''அதுக்கு இவ சொன்னது என்ன தெரியுமா? எனக்கும், என் குடும்பத்திலேயே ஒருத்தருக்கும் படிப்பறிவு இல் லாததனால்தான் இவ செலக்ட் ஆன அருமை தெரியல்லை யாம். எனக்கே பொறாமையாம். இவளைக் கல்யாணம் பண்ணி அனுப்பி கை கழுவப் பார்க்கிறோமாம். இப்படி யெல்லாம் பேசினால் ஆத்திரம் வராதா?'' என்றாள் லக்ஷ்மி கலங்கிய கண்களுடன்.

''எம்மா, அதோட நிறுத்திட்டே? நீ என்ன பண்ணினே, அதையும் சொல்லேன்'' என்றாள் ரம்யா, கூடவே அப்பா விடம், ''அம்மா கையிலிருந்த இரும்புக் கரண்டியாலேயே திவ்யா தலையில் ஒண்ணு போட்டாப்பா. அவ தலைல பாருங்கப்பா வீக்கத்தை'' என்றாள்.

''லக்ஷ்மி, உனக்கு ஆனாலும் இவ்வளவு ஆத்திரம் கூடாது. அதென்ன வயசு வந்த பெண்ணை கை நீட்டி அடிக்கறது? எதானாலும் பேசினால் பிரச்னையைத் தீர்த்துடலாம். இரண்டு பேர் பண்ணினதும் தப்புதான்'' என்றார் சீனிவாசன் ஆணித்தரமாக.

''ஸாரிம்மா, என்னை மன்னிச்சுக்கோ'' என்றாள் திவ்யா ''இது எத்தனை பெரிய வாய்ப்புன்னு நீ புரிஞ்சுக் கலியேன்னு எனக்கு ரொம்ப வருத்தமா இருந்ததும்மா.

அதனால்தான் நான் அப்படிப் பேசிட்டேன். ஸாரிம்மா'' என்றாள் தொடர்ந்து.

''எனக்கும் என்னவோ ரொம்ப கவலையாயிடித்து. அதனால்தான் கை நீட்டிட்டேன். ஸாரிடா கண்ணா'' என்றாள் லக்ஷ்மி.

''இதுதான் சரி, இப்போ பிரச்னைக்கு வருவோம். இதோ பார் திவ்யா! உன்னை அத்தனை தூரமெல்லாம், அதுவும் இரண்டு வருடம் அனுப்ப நாங்க தயாரா இல்லை'' என்றார் சீனிவாசன்.

''பின்னே எதுக்குப்பா என்னை அந்த பரிட்சையெல்லாம் எழுத வெச்சீங்க'' என்று கண்களில் நீர் தளும்பக் கேட்டாள் திவ்யா.

''என்னவோ கிடைக்கும்போது பாத்துக்கலாம்ங்கற எண்ணம் தான். அதுக்கு நான் சாரி கேட்டுக்கறேம்மா. ஒங்கிட்டே, சரியா?'' என்றார் சீனி.

''அப்பா, எதுக்குப்பா இப்படியெல்லாம் பேசறீங்க? எனக்கு மேலே படிக்கணும்பா. கொஞ்சம் புரிஞ்சுக்கோங்கப்பா, ப்ளீஸ்'' என்றாள் திவ்யா.

''இதோ பார், நீ நன்னாதான் படிக்கறே. அதுக்காக உனக்குக் கல்யாணம் பண்ணாமல் கன்னிகா மாடமா கட்ட முடியும்? அடுத்து உனக்குக் கல்யாணத்துக்குப் பாக்கணும். உனக்குப் பின்னாடி இரண்டு பேர் இருக்காங்களேம்மா! அதெல்லாம் யோசிக்க வேண்டாமா?''

''ஏம்பா, அவங்களும் நல்லாத்தானே படிக்கறாங்க. பெண்களுக்கு படிப்பு பெரிய சொத்துன்னு நீங்க அடிக்கடி சொல்லுவீங்களேப்பா, ஆனால் நடைமுறையிலே அதுக்குச் சரின்னு சொல்லுங்கப்பா'' என்று. மறுபடியும் கெஞ்சினாள் திவ்யா.



''இதோ பார், நீ போய்விட்டு இரண்டு வருஷம் கழித்து வரும்போது ஒத்தையா வருவியா இல்லே யாராவது வெளிநாட்டுக்காரனோட வந்து இறங்குவியா, யாருக்குத் தெரியும்? நம்ம வீட்டுலே நீ மட்டுமா இருக்கே? உனக்குக் கீழே இரண்டு பொண்ணுங்க இருக்கறத மறந்துட்டுப் பேசினா என்ன அர்த்தம்? தவிர உனக்கு மேலே படிச்சவனைத் தேடி உனக்குக் கட்டி வைக்க வேணாமா? உனக்கு மட்டுமே படிப்புக்கும், கல்யாணத்துக்கும் அத்தனை செலவு பண்ண முடியுமா? சொல்லம்மா!'' என்றார் சீனி.

''எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்குப்பா!''

''கிடைச்சாப்பல ஆச்சா? மேலே செலவே இல்லையா? இதெல்லாம் நான் நேத்திக்கு சொல்லப் போகத்தான் சுந்தரா மாமி, பொன்னியத்தை எல்லாரும் வந்து சமாதானப்படுத்தற மாதிரி சண்டையாயிடுத்து. இப்போ நினைச்சா எனக்கே வெக்கமா இருக்கு'' என்றாள் லக்ஷ்மி.

''அப்பா, திவ்யாவுக்குக் கிடைச்சது ரொம்ப பெரிய வாய்ப்பு. அற்புதமான கௌரவம். பிடிவாதம் பண்ணாதீங்கப்பா, சரின்னு சொல்லுங்கப்பா'' என்றாள் ரம்யாவும் தன் பங்குக்கு.

''அப்பா, இரண்டு நாள் யோசித்து ஒரு நல்ல முடிவா சொல்லுங்கப்பா'' என்றாள் திவ்யா.

''பார்க்கலாம்'' என்றவர் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினார். அடுத்தது என்ன நடக்கும் என்பது இவர்களுக்கெல்லாம் தெரிந்ததுதான். தினம் இரவில் நடப்பது போன்ற ஐயாரப்பன் வீட்டின் இன்றைய மீட்டிங்கில் இன்று இந்த விஷயத்தை அப்பா சிநேகிதர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவு எடுப்பார்.

திவ்யா மனதுள் கூத்தனூர் சரஸ்வதிக்கு வேண்டிக் கொண்டாள். எப்படியும் ஃபாரின் போவதென்று முடிவெடுத்தால் பட்டீச்வரம் துர்க்கை கோவிலுக்குக் கூட்டிப் போய்விட்டுத்தான் போவார்கள். அப்படியே கூத்தனூர் போய் வரலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

## 3

ஆம், ஐயாரப்பன் வீட்டில் எப்போதும் அதுதான் வழக்கம். எந்த விஷயமானாலும் ஐந்து சிநேகிதர்களுமாகச் சேர்ந்துதான் முடிவெடுப்பார்கள். இன்று எத்தனையோ பேர்களின் கண்களை ராஜா அண்ணாமலைபுரத்தில் உறுத்திக் கொண்டிருக்கும். அந்த வீடுகள் இருக்கும் இடம் ஜப்பான்காரன் குண்டு போடப் போகிறான் என்று மதராஸிலிருந்து எல்லோரும் 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று ஓடிக் கொண்டிருந்த காலத்தில், துணிந்து கணேசனுடைய தாத்தா வாங்கிப் போட்ட நிலம். ரொம்பக் குறைந்த விலைக்குக் கிடைத்ததனால்தான் வாங்கினார். வாங்கிவிட்டு அவருக்கும் அங்கிருக்கத் துணிவில்லாமல் சொந்த ஊரான தஞ்சாவூருக்கு குடும்பத்துடன் போய்விட்டார். போனவர் அதிக நாள் இருக்கவில்லை.

கணேசனின் அப்பா வரதன் போஸ்டாபீஸிலிருந்து ரிடையர்ட் ஆகும் வேளையில் எல்.ஐ.ஸி.யில் வேலைக்குச் சேர்ந்துவிட்ட கணேசனுக்கு சென்னைக்கு மாற்றலானது. கொஞ்ச நாட்களில் கல்யாணமும் ஆக சொந்த வீடு கட்டும் யோசனை வந்தது. முதலில் ஒரு இரண்டு



பெட்ரூம், ஹால், சமையலறை மாடியில் ஒரு ரூமும், மொட்டை மாடியும் என்று கட்டிக் கொண்டார்கள். அதை அடுத்து இன்னொரு வீடும் அதே போல் கட்டினார்கள். அதை வாடகைக்குக் கொடுக்கும் எண்ணத்தில் இருந்தவர்கள், பின்னால் கணேசன் மனைவி ஜயந்தி காலேஜ் லெக்சரர் ஆனதால் ட்யூஷனுக்கு நிறைய பேர் வந்து போய்க் கொண்டிருந்ததாலும், அவளுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்து விட்டதாலும், அந்த இரண்டு வீடுகளுமே வேண்டியிருந்ததால் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தாங்களே இரண்டு வீடுகளையும் வைத்துக் கொண்டு விட்டார்கள். இதெல்லாம் 25 வருடங்களுக்கு முந்திய கதை. பாக்கி நிலம் காலியாக இருந்தது. நிறைய பேர் கண்களை உறுத்தியது. முன்னே பின்னே தெரியாதவர்களையெல்லாம் தங்கள் நிலத்தில் புக விடுவது அப்பா, பிள்ளைக்கு கொஞ்சம்கூட இஷ்டமில்லை.

அந்த நேரம் தற்செயலாக இவர்கள் சிநேகிதன் ராமனாதனுக்கும் சென்னைக்கு மாற்றலாகியது. அவனுக்கு ஸ்டேட் கவர்ன்மெண்டில்தான் வேலை என்பதால் சென்னையில் இடம் வாங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

போலீஸில் வேலைக்குச் சேர்ந்த ரங்கராஜன், சுப்ரமண்யம், சீனிவாசன் இவர்கள் எல்லோரும் ஆரம்பப் பள்ளி, காலேஜில் எல்லாம் ஒன்றாகப் படித்தவர்கள். தஞ்சாவூர் பக்கத்து கிராமங்கள் தான் ஐவருக்குமே சொந்த ஊர்.

அந்த பிளாட்டில் ஆறு வீடுகள் கட்ட தாராளமாக இடமிருந்தது. சுப்ரமண்யமும், சீனிவாசனும் பிஸினஸ்

பண்ணுகிற எண்ணத்தில் இருந்தனர். மனமொத்த சிநேகிதர்களான மற்ற மூன்று பேரும்கூட அந்த இடத்திற்கு விலையைக் கொடுத்துவிட்டு அங்கே வீடு கட்டிக் கொள்வதாக முடிவாயிற்று. ஆக, ஐயாரப்பன் காம்பவுண்ட்டில் ஆறு வீடுகளாகிவிட்டன. முக்கியமாக கணேசனின் தாத்தா ஊர் திருவையாறு ஆனதால் ஐயாரப்பன் வீடு என்ற பெயர் தான் வைக்க வேண்டும் என்று கணேசனின் அப்பா தீர்மானமாக இருந்தார்.

முதலில் "தஞ்சை வீடு" என்றுகூட யோசித்தார்கள். ஆனால் கணேசனின் தீவிரமான ஆசைக்கு ஒப்புக் கொண்டு விட்டனர். ஆனால் தனித்தனியாக வீடுகளுக்குப் பெயர் வைக்கும்போது 'வடவாறு' என்று வைப்பது சரியா என்று ராமனாதன் சந்தேகப்பட்டான்.." என்னப்பா நீ! வடவாற்றங்கரை என்றதும் கடைசியாக கொண்டு வைக்கும் இடம் என்று நினைக்கிறாயா? அங்கு ராகவேந்திர ஸ்வாமி பிருந்தாவனமும் இருக்க. இன்னும் புண்ணிய காலங்களிலும் ஸ்நானம் செய்ற இடம்தாம்ப்பா. அது. அதனால் தாராளமாக அந்தப் பெயரையும் வைக்கலாம்" என்றார் வரதன். சாமிநாதன் யோசனைப்படி 'காவேரி' என்ற பெயரை ஏற்கனவே கணேசன் தன் வீட்டிற்கு வைத்து விட்டதால், வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, என்ற பெயர்களை சீட்டு எழுதிப் போட்டு அவரவர்களுக்கு வந்த பெயரை முழு மனதோடு ஏற்றுக் கொண்டனர். இன்று வரைக்கும் எந்தக் குறையும் இல்லாமல் நல்லபடியாகத்தான் இருக்கிறார்கள்.

ஆக, ஐயாரப்பன் வீடு உருவாகிவிட்டது. இடதுபுறம் மூன்று வீடுகள், வலதுபுறம் மூன்று வீடுகள். எல்லா வீடுகளுக்கும் பின்னால் கார் நிறுத்த இடம். ஏற்கனவே



கணேசன் இரண்டு வீடுகளை சேர்த்து எடுத்துக் கொள்ள, அவரின் அடுத்த வீடு சீனிவாசனுடையது அதற்கு நேர் எதிர் வீடு ரங்கராஜனுடையதாகியது. அவரின் மனைவி தேவிகா சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டில் நல்ல பொறுப்புள்ள வேலை. தேவிகாவின் அப்பா இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்து ரிடையர்ட் ஆனவர். எனவே அந்த இடத்தை விலைக்குக் கொடுக்கச் சொல்லி கட்டாயப் படுத்திக் கொண்டிருந்தவர்கள் வாயை மூடிக் கொண்டார்கள்.

இந்தப் பக்கத்து முதல் வீடு ராமனாதனுடையது. பார்க்கப் போனால் பொன்னியத்தை தன் அண்ணா பெண், அதுதான் ராமனாதனின் மனைவி, கல்யாணிக்குக் கொடுத்த சீதனப் பணத்தில் வாங்கிக் கட்டியது. பொன்னி பணக்காரி, சின்ன வயதிலேயே ஒரு குழந்தைகூடப் பிறக்குமுன் கணவனை இழந்தவள். தன் ஒரே அண்ணாவும், அண்ணியும் ஒரு விபத்தில் இறந்துபோக, பிழைத்திருந்த அவர்களின் பெண் குழந்தை கல்யாணியைத் தன் வாரிசாக வளர்த்து கல்யாணம் செய்து கொடுத்துத் தானும் கூடவே இருந்தாள். ராமனாதனுக்கென பெற்றோரோ, வேறு யாருமோ கிடையாது. அதனால் பொன்னியத்தையிடம் ரொம்ப அபிமானமாகத்தான் இருப்பான். என்ன, இன்னும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை என்ற வருத்தம் அவர்களுக்கு.

நினைத்தது போல் சீனிவாசன் ஒரு சூப்பர் மார்க் கெட்டும், சுப்ரமண்யம் ஒரு ரெடிமேட் துணிக்கடையும் ஆரம்பிக்க இரண்டும் நன்றாக நடந்து கொண்டிருந்தது இருவர் மனைவிகளும் அவ்வப்போது போய் வியாபாரத் தில் உதவி செய்வார்கள்.

ராமனாதன் வீட்டிற்கும் ரங்கராஜனுடைய வீட்டிற்கும் நடுவில் சுப்ரமண்யத்தின் வீடு கட்டப்பட்டது.

எல்லோருக்கும் பெண்கள், பிள்ளைகள் என்று பிறந்து ஐயாரப்பன் காம்பௌண்ட் கலகலப்பாகியது. ராமனாதன், கல்யாணி தம்பதியரும் தங்கள் வருத்தத்தை யாரிடமும் காண்பித்துக் கொள்ள மாட்டார்கள்.

பெரியவர்கள் என்றால் பொன்னியத்தை, ரங்கராஜனின் தாயார் சுந்தராம்பா, சுப்ரமண்யத்தின் தந்தை சுவாமி நாதன் கணேசனின் அப்பா வரதன், அம்மா பரிமளா ஆகியோர். சுந்தராம்பா கணவர் ஏதோ ஒரு பையனைப் பெற்றாரே தவிர, முதலிலிருந்தே அவருடைய நாட்ட மெல்லாம் ஆன்மீகத்தில்தான் இருந்தது. ஏதோ காத்திருந்ததுபோல் ரங்கராஜன் படித்து முடித்ததும் ஒரு நாள் வீட்டை விட்டே போய் விட்டார். எத்தனையோ தேடிப் பார்த்தார்கள். காலாகாலத்தில் அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையே போய் விட்டது. பேரன், பேத்திகளைப் பார்த்தும், பிள்ளை நாட்டுப் பெண்ணின் மரியாதையிலும் சுந்தரா தன் துக்கத்தை மறக்கப் பழகி விட்டாள்.

ஐயாரப்பன் வீட்டில் சில எழுதப்படாத சட்டங்கள் இருந்தன. எந்தப் பெரியவர்களையும் யாரும் எதிர்த்துப் பேசக் கூடாது. எல்லாக் குழந்தைகளும் எல்லாருடைய குழந்தைகள்தான். யார் வீட்டிலும் யார் வேண்டு மானாலும் போய் இருப்பதைச் சாப்பிடலாம். இரண்டு ஓரங்களிலும் மூன்றும், மூன்றும் ஆறு வீடுகள் இருக்க நடுவில் இருந்த காலியிடத்தில் பவளமல்லிச் செடி தவிர இன்னும் சில பூச்செடிகளும் இருந்தன. யாருக்கு வேண்டு மானாலும் பறித்துக் கொள்வார்கள்.



மாலை வேளைகளில் நடுவில் இருந்த காலியிடத்தில் டென்னிஸ் வலை கட்டி குழந்தைகள் விளையாடுவார்கள். முக்கியமாக எக்காரணம் கொண்டும் யாரும் ஜாதி பற்றி பேசுவதில்லை என்று ஒரு கொள்கையாகவே வைத்திருந் தார்கள். ஏனெனில் அவர்கள் எல்லோரும் மிகவும் அந்நியோன்யமாக இருந்தனர். சிநேகிதர்களே தவிர உறவுமுறை ஒன்றுமில்லை. வெவ்வேறு ஜாதிகள் கூட.. வம்பு பேசுவதில்லை என்பது பெண்களின் கொள்கை. மரங்களுக்கு முன்னே இரண்டு சிமெண்ட் பெஞ்சுகள் கட்டியிருந்தார்கள். மத்தியானங்களில் வீட்டிலிருக்கும் பெண்களும், மாலை வேளையில் அவரவர் வேலையி லிருந்து திரும்பியபின் ஆண்களும் உட்கார்ந்து அளவ ளாவுவது ஒரு வழக்கமாகவே இருந்தது. அந்த மாநாடு களில் எல்லோருடைய எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைத்து விடும்.

எல்லாருக்கும் பொதுவாக ஒரு பிள்ளையார் கோவில் கட்டணும் என்று சொன்னபோது வரதன் தீர்மானமாக மறுத்து விட்டார். கோவில் என்றால் அக்கம் பக்கத்தினர் யார் வேண்டுமானாலும் நுழைவார்கள். பணம் போடு வார்கள் மெயின்டனன்ஸ் அது, இது என்று பிரச்னை வரும். அவரவர் வீட்டில் சாமி கும்பிட்டால் போதும் என்று அவர் சொன்னதை எல்லோரும் ஒப்புக் கொண்டு அந்த எண்ணத்தையே விட்டு விட்டனர்.

இத்தனை ஒற்றுமையாக, அழகாக ஒரு காம்பௌண்ட் வாழ்க்கையா என்று யாராவது கண் போட்டு விடுவார்கள் என்று வாரம் ஒரு நாள் பொன்னியத்தைத் திருஷ்டி கழித்து விடுவாள் காம்பவுண்ட் மொத்தத்திற்கும்.

# 4

அன்றைக்கு சாயந்திரம் எல்லோரும் போய் சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்தனர். ''என்ன முடிவெடுத்தே, சீனிவாசா?'' என்று சுப்ரமணியம் பேச்சை ஆரம்பித்தார்.

''இதிலே மறு பேச்சுக்கே இடமில்லை. அத்தனை தூரமெல்லாம் ஒரு சின்னப் பெண்ணை அனுப்பறதுங்கறது சரியில்லை. வேண்டாம்ன்னுதான் சொல்லப் போறேன்'' என்றார் சீனி.

''இத்தனை தீவிரமாக அனுப்புவதில்லை என்ற முடிவில் இருக்கறவன் அவளை அனாவசியமாக GRE, TOFEL ன்னுல்லாம் எதற்கு எழுதவச்சே? தேவையே இல்லாமல் அந்தக் குழந்தையின் மனதில் ஒரு ஆசையை வளர்த்துட்டு இப்போது பிடிவாதம் பிடிக்கலாமா?'' என்றான் ராமனாதன் கோபமாக.

''நன்னா சொன்னே ராமனாதா! அவள் எத்தனை நன்னா மனது வைச்சு தீவிரமாகப் படிச்சு பரிட்சை எழுதியிருந்தா அவளுக்கு அங்கே படிக்க உதவிப் பணத்துடன் இந்த ஸீட் கிடைத்திருக்கும்? சொல்லுப்பா, சீனி!'' என்றார் ரங்கராஜன்.

''உன் பயம் என்ன? அவ யாராவது வெள்ளைக் காரனை கல்யாணம் பண்ணிக் கொண்டு விடுவாளோ என்கறதுதானே? காதல் பண்ணனும்னா இங்கேயே பண்ண மாட்டாளா? அப்படி இங்கேயே எவனையாவது காதலிச்சுட்டா என்ன செய்வே? உன் பிடிவாதத்திலே லாஜிக்கே இல்லையே!'' என்றார் கணேசன்.



''எல்லோரும் ஒரு ரவுண்ட் முடிச்சாச்சா? இவளே ஒரு ஆம்பிள்ளையா இருந்தா நான் கவலைப்பட மாட்டேன். இவள் ஏதாவது பைத்தியக்காரத்தனமாக ஒரு வெள்ளைக்காரனை கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து நாளை நின்னுட்டா, மத்த ரெண்டு பெண்களின் கதி என்ன?'' என்று சீனி கேட்டுக் கொண்டிருக்கும் போதே எல்லார் வீட்டுப் பெண்களும் வேறே அங்கு வந்து விட்டனர்.

''சரிப்பா சீனிவாசா இதெல்லாம் இந்தக் காலத்தில் வீட்டிற்கு வீடு நடக்கும் விஷயம்தான். காதல் கல்யாணம் இல்லாத ஒரு வீடு, ஒரே ஒரு வீடு, சொல்லேன் பார்க்கலாம்'' என்றாள் அங்கு வந்த பொன்னியத்தை.

''சரியத்தை! நீங்கள் சொல்றது சரின்னே வைச்சிண்டாலும், நாளைக்கு இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு என்ன ஸ்டேட்டஸ்? தவிர இவள் தங்கைகளும் இவளை மாதிரியே ஆரம்பிக்க மாட்டாங்களா? சொல்லுங்கத்தை'' என்றாள் லக்ஷ்மி.

''ஏம்மா, எந்தக் காலத்தில் இருக்கே நீ? உன் இரண்டாவது பெண் நேத்திக்கே எத்தனை தூரம் அக்காவிற்கு சாதகமாகப் பேசினா, பார்த்தாயா? அவளும் நன்றாகப் படிக்கிற பெண். அவளும் தான் படிக்க வெளிநாடு போவாள்'' இது சுந்தரா.

சாதாரணமாக ஐயாரப்பன் காம்பௌண்டின் மாலை நேர மீட்டிங்குகளில் பெண்கள் வந்து கலந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் இன்று பிரச்னையின் தீவிரம் எல்லாரையும் அழைத்து வந்து விட்டது என்று எல்லா ஆண்களுக்கும் புரிந்தது.

வரதன் வந்ததும்.. சுப்ரமண்யம் எழுந்து அவருக்கும் இடம் விட்டார். அதற்குள் காவ்யா இரண்டு, மூன்று

நாற்காலிகளை கொண்டு வந்து போட்டாள். வரதன் தொண்டையைக் கனைத்தது எல்லோரும் மௌனமாக அவர் சொல்வதைக் கவனிக்கத் தலைப்பட்டனர்.

''எனக்கு ஒரே கவலைதான் சீனிவாசா. அவ யாரை வேண்டுமானாலும் கல்யாணம் பண்ணிக்கட்டும். ஆனா வெளிநாட்டுக்காரர்களுக்கு விவாக ரத்துங்கறதெல்லாம் சகஜம். நம் பெண்ணுக்கு இதெல்லாம் வேணுமான்னு தோன்றது'' என்றார்.

''என்னவோ அவள் அங்கு போறதே காதலிச்சு வெளி நாட்டுக்காரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்றத்துக் குத்தான் என்பதுபோல் பேசறீங்களே, மாமா! அவள் படிக்கிற பெண். படிக்கறதுக்குத்தான் போக நினைக்கிறா என்பதை தயவு செய்து புரிஞ்சுக்கோங்கோ இங்கே இருக்கறவங்கள்ளே எவ்வளவு பேர் காதல் கல்யாணமும், விவாக ரத்தும் செய்து கொள்றதில்லே? எங்க ஆபீஸில் தினமும் பாக்கற கூத்துதானே இதெல்லாம்?'' என்றாள் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஆபீஸரான தேவிகா. அவள் சாதாரணமாக ரொம்பப் பேச மாட்டாள். பேசினால் சரியாக இருக்கும் என்று எல்லோரும் கணித்து வைத்திருந்தனர்.

அதற்குள் அங்கு வந்திருந்த ஜயந்தி, ''நான் சில விஷ யங்கள் சொல்லலாமா?'' என்று கேட்டாள்.

''சொல்லும்மா, இது படிப்பு விஷயம். என்னதான் திவ்யா சொன்னபோது கோபம் வந்தாலும் அவள் ஒரு டிகிரி வரை படித்திருக்கிறாள், நான் ஒரு எஸ்.எஸ்.எல்.சி. தான் என்பது உண்மைதானேம்மா. நீ நினைக்கறதைத் தாராளமாகச் சொல்லு. நீ ஒரு காலேஜ் லெக்சரர். நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்'' என்றாள் லக்ஷ்மி. ''ஆமாம்மா! உன்னுடைய அபிப்ராயத்தை தாராளமாகச் சொல்லும்மா'' என்றார் சீனிவாசனும்.



''இதோ பாருங்கோ, நான் ஒரு லெக்சரர்ங்கற முறை யில் திவ்யாவை நன்னா புரிஞ்சு வைச்சிருக்கேன். அவ ஒரு சராசரி பெண்ணில்லை. அவளுக்குன்னு உயர்ந்த லட்சியங்கள் இருக்கு. அவ பள்ளிப் பாடம் படிச்ச நாழிகைபோக மத்த நேரத்திலே படிக்கற புத்தகங்களை யெல்லாம் யாராவது பார்த்திருக்கீங்களா? சாதாரணமா அவள் வயசு பெண்களெல்லாம் படிக்கற புத்தகங்களை யெல்லாம் அவள் படிக்கறது கிடையாது. டேல் கார்னிகி, எம்.எஸ்.உதயமூர்த்தி மாதிரியானவர்களோட வெற்றிக்கு வழிகாட்டும் புத்தகங்கள்தான் அவகிட்டே எப்போதும் இருக்கும். காலேஜிலும் லெக்சரர்ஸ் எல்லோருக்கும் அவள் மேல் ரொம்ப நல்ல அபிப்ராயம். தெரியுமா? தவிர அவ ஆரம்பத்திலிருந்தே ஆண்களோடு சேர்ந்து படிச்சவள் அதனாலே ஆண்களைப் பார்த்தா புத்தி தடுமாற்றம் என்கறதெல்லாம் அவளிடம் கிடையாது.''

''நீ சொல்றதெல்லாம் சரிதாம்மா. அவள் நல்ல பொண்ணுதான். ஆனா அவள் வயசை நினைச்சுதான் லக்ஷ்மிக்கும், சீனிவாசனுக்கும் கவலை'' என்றாள் பொன்னியத்தை.

''இல்லையத்தை. அது ப்ளஸ் 2 அல்லது டிகிரி முதல் அல்லது இரண்டாம் வருடம் படிக்கும். மாணவி களுக்குத்தான் சாதாரணமாக ஏற்படும். இவள் அந்த நிலையெல்லாம் தாண்டிட்டாள். உங்களுக்கெல்லாம் தெரியுமோ என்னவோ, எஞ்சினியரிங் படிப்பு ஒண்ணும் விளையாட்டில்லை. எத்தனை கஷ்டமான ப்ராஜக்ட் எல்லாம் கொடுக்கிறோம் தெரியுமா? மனச ஒரு நிலைப் படுத்தி செய்யல்லேன்னா காலேஜிலும் இத்தனை மார்க் வாங்க முடியாது. வெளிநாடு போகும் பரிட்சையில் 96

சதவிகிதம் வாங்கியிருக்கிறாளே, அதுவும் நிச்சயமாக முடியாது.''

''அடுத்தது நீங்க சொல்லும் காதல் கல்யாண பயம். அப்படியெல்லாம் அவள் செய்யணும்னா அதுக்கு வெளி நாடு போக வேண்டியதில்லை. போன வருஷம் எங்க காலேஜிலேயே மதம் மாறிக் கல்யாணம் செய்து கொண்டவங்க 8 ஜோடிகள். அதுவும் ரகசியக் கல்யாணம் தான் எல்லாமே.

ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணைப் படிக்க வைச்சா அந்த குடும்பத்திற்கு கௌரவம் கூடுமே தவிர குறை யாது. மத்த இரண்டு பெண்களும் கூட படிக்கட்டுமே! இப்போதெல்லாம் இப்படி படிச்ச பெண்களானால் யாரும் சீர், செனத்தி, வரதட்சிணைனுல்லாம் கட்டாயப் படுத்தி வாங்கறதில்லை'' என்றாள் ஜயந்தி.

''அப்புறம் என்ன அங்கிள் இவ்வளவு தூரம் சொல்றா, பாசிட்டிவாக யோசியுங்களேன்'' என்றார் ரங்கராஜன்.

''நீங்க என்ன சொல்றீங்க?'' என்று வரதனைப் பார்த்துக் கேட்டார் சீனிவாசன்.

''இதோ பார், சீனிவாசா, நான் கூட முதல்ல வேண்டான்னது எல்லோருக்கும் உண்டான இயற்கையான பயத்தினால்தான். ஆனா ஜயந்தி சொன்னதைக் கேட்டப் பறம் என் அபிப்ராயத்தை மாத்திண்டுட்டேன். அனுப்ப மறுத்தீன்னா நீ அந்தப் பெண்ணிற்கு நல்லது செய்யல லேன்னு அர்த்தம். நீ வளர்த்த பெண் அவமீது உனக்கு நம்பிக்கையில்லையா? நீ அவளை முழுமனசா நம்ப றேங்கறதே அவள் தப்பு பண்ண நினைச்சாலும் அதைத் தடுத்துடும். இந்தக் காலத்தில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் எப்படியெல்லாம் முன்னேறுறாங்க! அந்த



லிஸ்டில் நம் பெண்ணும் இருந்தால் நமக்குப் பெருமை தானே! அதற்கு நீ அவளை மேலே படிக்க அனுமதிச் சாத்தான் முடியும். நாம் நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும்'' என்றார் வரதன்.

சீனிவாசன் சாமிநாதனைப் பார்க்க அவரும் ''என் அபிப்ராயமும் அதுதானப்பா. ஆனால் நாங்களெல்லாம் அபிப்ராயம்தான் சொல்ல முடியும். ஆனா நீ தான் அவள் அப்பா. நாளைக்கு அவ நல்லது பொல்லாததை நீ தான் தீர்மானிக்கணும். ஆனா எங்களுக்கெல்லாம் இந்த நாட் களில் இந்த மாதிரி விஷயங்கள் ஒரு நல்ல காரியமே தவிர, இத்தனை பதட்டப்படற விஷயமாத் தோணல்லே'' என்றார்.

எல்லா வாதங்களையும் கவனமாகக் கேட்டுக் கொண்ட லக்ஷ்மி, ''சரி, நான் தீர்மானிச்சுட்டேன். இத்தனை பேர் இத்தனை நல்லதுன்னு சொல்லும்போது அதை ஒதுக்கறது சரியில்லை. இவர் வேண்டாம்ன்னு சொல்வதுகூட என்னை உத்தேசித்துத்தான். அவருக்கும் பெரிசா ஆட்சேபணை இல்லைன்னுதான் நான் நினைக்கிறேன்'' என்று அவள் சொல்லி முடிக்குமுன், அதுவரை அங்கே ஒரு ஓரமாய் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த திவ்யா ஓடி வந்து அம்மாவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டாள். எல்லா பெரியவர்கள் கால்களிலும் விழுந்து வணங்கினாள். ''நன்னா, கவனமா படிச்சு, பெரிய புகழோடு திரும்பிவா. அம்மா, அப்பா, ஏன் எங்க எல்லோருடைய நம்பிக்கையையும் காப்பாத்தும்மா'' என்று அவளை எல்லோரும் ஆசிர் வதித்தனர்.

பிறகென்ன? மளமளவென்று காரியங்கள் தொடங்கி. மிக விரைவில் பாஸ்போர்ட், விசா எல்லாம் கைக்கு

வந்துவிட்டன. அமெரிக்காவின் குளிருக்குத் தகுந்த துணிமணிகள் வாங்கவும், இன்னும் பொடி வகைகள், சில உலர்ந்த ஊறுகாய் வகைகள், அவசரத்திற்குத் தேவையான மருந்து, மாத்திரைகள் ஆகியவைகளைச் சேகரிக்க முழு மனதுடன் மற்றவர்கள் உதவினார்கள்.

யாருக்கெல்லாம் சௌகரியமோ ஒரு வேன் வைத்துக் கொண்டு பட்டீச்வரம் துர்கை கோவிலுக்கும் இன்னும் சில கோவில்களுக்கும் போய் வந்தனர். நல்ல பட்டுப் புடவையாகவே எடுத்துக் கொண்டு போய் கூத்தனூர் சரஸ்திக்கு சமர்ப்பித்துவிட்டு சந்தோஷமாகத் திரும்பி வந்தனர்.

எல்லா பண்டிகை நாட்களையும் போல் அழகாக எல்லோரும் ஆளுக்கு ஒரு பதார்த்தம் அவரவர் வீட்டிலிருந்து செய்து வந்து பெரிதாக விருந்து உண்டனர். சாயிபாபா கோவிலில் அன்னதானம் நடந்தது. எல்லோரும் அவளுக்கும் டிரஸ், நல்ல ஹேண்ட் பேக், பெரிய சூட்கேஸ், சமையல் புத்தகம் என்றெல்லாம் பரிசுகளைத் தந்து மகிழ்ந்தனா.

முதலிலெல்லாம் ஆசையாக ஆர்வமாக ஷாப்பிங் போன்ற வேலைகளில் ஈடுபட்ட திவ்யா கிளம்பும் நாள் நெருங்க நெருங்க ரொம்பக் கவலையாகவே காணப்பட்டாள். லக்ஷ்மி அதற்கும் மேலே வருத்தமாயிருந்தாள்.

''திவ்யா, நீ ஆசைப்பட்டியேன்னுதானே நான் இதுக்கு ஒத்துண்டேன். நீ இத்தனை கவலையாக இருக்கும் பட்சத்திலே போறதையே கேன்ஸல் பண்ணினாலும் பரவாயில்லைன்னு தோன்றது'' என்றார் சீனிவாசன்.

''இல்லையப்பா, என்னிக்குமே நாமெல்லாம் பிரிந்திருந்ததே இல்லை. அதுதான் ஒரு மாதிரியாக இருக்கு'' என்றாள் திவ்யா.



ஊருக்குப் போகும் நாளும் வந்தது. பாதி ராத்திரி விமானம் என்பதால் சீனிவாசன், லக்ஷ்மி, வித்யா, ரம்யா மற்றும் கணேசன், ஜயந்தியும் அவர்களுடன் வழியனுப்பச் சென்றனர்.

செக்யூரிட்டி செக்கப்பிற்குப் பின் திவ்யா மட்டும் உள்ளே நுழையும்போது எல்லோரும் அழுது விட்டனர். கணேசனும், ஜயந்தியுமாக எல்லோரையும் சமாதானப் படுத்தி வீட்டிற்குக் கூட்டி வந்தனர்.

அடுத்து வந்த நாட்களில் தினமும் கொஞ்ச நேரம் சுந்தராவாவது, பொன்னியத்தையாவது வந்து லக்ஷ்மியுடன் இருந்து கம்பெனி கொடுத்துப் பார்த்துக் கொண்டார்கள். பாவம். திவ்யா போகும் முன் அவர்களிடம் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தாள், அம்மாவுடன் சற்று நேரமாவது இருந்து அவளைப் பார்த்துக் கொள்ளும்படி.

இவர்கள்தான் என்றில்லை. ஐயாரப்பன் காம்பவுண்டில் எல்லோருமே கொஞ்சம் பெருமை, கொஞ்சம் கவலை, கொஞ்சம் வருத்தம் என்று கலவையான உணர்ச்சிகளுடன் தான் இருந்தார்கள், திவ்யா அமெரிக்கா போய் சேர்ந்து, அவள் குடும்பத்தினர், இன்னும் ஐயாரப்பன் வீட்டின் எல்லோருடனும் போனில் இரண்டு மூன்று தரம் பேசிய பின் தான் அவர்கள் அனைவரும் சற்று சமாதானம் ஆனார்கள்.

## 5

பொன்னியத்தை தன் கட்டிலில் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு படுத்துக் கிடந்தாள். மருமாள் கல்யாணி

கட்டாயப்படுத்திக் கொடுத்த இரண்டு இட்லிதான் அன்று முழுவதும் அவள் சாப்பிட்ட ஆகாரம். மனது துக்கத்தில் இருக்கும்போது எப்படி சாப்பிடப் பிடிக்கும். லக்ஷ்மி வந்து இவள் மருமாள் கல்யாணியிடம் கொடுத்திருந்த போன வார பத்திரிகை ஒன்றை கேட்டு வாங்கிப் போக வந்திருந்தாள். பொன்னியத்தையை அவள் பார்த்த பார்வையில் நிஷ்டூரம் இருந்த மாதிரிதான் அத்தைக்குத் தோன்றியது. வாசலுக்குப் போய்தான் கல்யாணி கேட்டாள், "நளினி எப்படியிருக்கா?" என்று.

"பரவாயில்லை. நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்துடுவாங்கன்னு தோணறது. ஆனாலும் செத்துப் பிழைச்சுட்டா. நான் இப்போது அவளுக்குத் துணைக்காக ஆஸ்பத்திரிக்குத்தான் போறேன். அதுக்குத்தான் இந்தப் புஸ்தகம்" என்று லக்ஷ்மி சொல்லிவிட்டுப் போனாள்.

பொன்னியத்தைக்கு ஆறு நாள் முந்தி நடந்ததெல்லாம் மனதில் திரைப் படமாக ஓடியது. அன்று காலை சுப்ரமணியம், நளினி தம்பியரின் சின்னப் பெண் ப்ளஸ் 2 படிக்கும் வினோதினி விடியற் காலையிலேயே வந்து "பாட்டி, எங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, உங்களை கூட்டி வரச் சொன்னாங்க" என்று வந்து கூப்பிட்ட உடனே கிளம்பி அவர்கள் வீட்டிற்குப் போனாள் பொன்னியத்தை.

"என்னாச்சு, நளினி ஜுரமா?" என்று கேட்டபடியே வந்து அவளைத் தொட்டுப் பார்த்தாள்.

"வழக்கம்போல 5 மணிக்கு எழுந்திருக்கப் பார்த்தால் முடியவேயில்லை, அத்தை. ஒரே தலை சுத்தலா இருக்கு. ஒரே குமட்டல், வாந்திக்கு வரது" என்றாள் நளினி.



"என்ன சாப்பிட்டே, நேத்திக்கு?" என்று கேட்டாள் அத்தை.

"நேத்திக்கு வியாழக்கிழமை, நானே விரதமாச்சே! ராத்திரி கஞ்சிதான் வெச்சு சாப்பிட்டேன்."

"அதுதான் வயத்திலே ஒண்ணுமில்லாமல் படுத்தறதா இருக்கும். இன்னும் பால் கூட காச்சலை போலிருக்கே?"

"இல்லை பாட்டி, பால் காய்ச்சி காபி போட்டுவிட்டேன். அம்மாவுக்கு வேண்டாமாம்" என்றாள் நளினியின் பெரிய பெண் சுபாஷிணி.

"எம்மா, பால் காபி எதுவும் வேண்டாமாம்மா?" என்று அத்தை இதமாகக் கேட்க, "இல்லையத்தை. நினைத்தாலே பிடிக்கவில்லை" என்றாள் நளினி.

"டீ வேணா போட்டுத் தரட்டுமா?" என்று கேட்டாள் சுபாஷிணி.

"வேண்டாம்மா, கொஞ்ச நாழியில் சரியாகிவிடும். அப்புறமா சாப்பிடறேன்" என்றாள் நளினி.

"சுபா, உங்கப்பா எங்கேம்மா?" என்று கேட்டாள் பொன்னியத்தை.

"இன்னிக்கு 31-ம் தேதி இல்லையா பாட்டி? கடையிலே ஸ்டாக் டேக்கிங்காம். அதனாலே காலையிலே சீக்கிரமாகப் போகணும்னார். நான் காபி போட்டுக் கொடுத்தேன். டிபன், சாப்பாடு அங்கேயே பாத்துக்கறேன்னு கிளம்பிப் போயிட்டார், பாட்டி" என்றாள் சுபா. "ரொம்ப முடியலேனா அம்மாவை டாக்டரிடம் கூட்டிப் போகச் சொன்னார். நான் லீவு போடலாமான்னு பாக்கறேன்" என்றனார். சுபா, "இல்லையானால் நீ வீட்டில் இருக்கிறாயா, வினோ?" என்று கேட்டாள் தங்கையை.

''வேணாம்மா, நீங்க இரண்டு பேருமே காலேஜுக்குப் போங்கோ. கொஞ்ச நாழியிலே சரியாயிடும் எனக்கு ஒண்ணுமில்லை'' என்றாள் நளினி.

''நான் நடுவிலே வந்து பாத்துக்கறேன், நீங்க இரண்டு பேருமே கிளம்புங்கோ. என்ன சாப்பிடப் போறீங்க?'' என்று கேட்டாள் பொன்னியத்தை.

''பிரெட் இருக்கு பாட்டி. சாப்பிட்டுட்டுப் போனால், காலேஜ் கேண்டினில் மத்தியானம் பாத்துக்கறோம்'' என்றாள் சுபாஷிணி.

''சரி, கிளம்பங்கோ. கொத்தமல்லி விதை இருக்கா'' என்று கேட்டவள் உள்ளே போய் கொத்தமல்லி விதையைத் தேடி எடுத்து மிக்ஸியில் போட்டாள். பெண்ணே, இதை மசிய அறைச்சுக் கொடும்மா'' என்றாள். வினோதினி அறைத்துக் கொடுக்க அதை வடிகட்டி வெல்ல டப் பாவைத் தேடி எடுத்துக் கொஞ்சம் சேர்த்தாள். ''எலுமிச்சை இருக்கா'' என்று கேட்டபடி ஃபிரிட்ஜில் தேடினாள். பழம் இருக்கவில்லை. ''சுபா, கல்யாணிகிட்டே கேட்டு ஒரு எலுமிச்சம் பழம் வாங்கி வாம்மா'' என்றாள். அது வந்ததும் அதையும் கொத்தமல்லி விதைச் சாற்றுடன் வடிகட்டி சேர்த்தாள்.

''இந்தாம்மா, நளினி, இதைக் குடி. வாந்தி, தலை சுத்தல் எல்லாம் பறந்துவிடும். நான் வீட்டில் டிபன் செய்ததும் கொண்டு வரேன்'' என்று சொல்லி நளினிக்கு அந்த ரசத்தைக் கொடுத்தாள். ''வேண்டாம் அத்தை!'' என்ற நளினியிடம், ''இதோ பார்! குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்காதே. இதைக் குடிச்சா எல்லாம் சரியாப் போயிடும் இந்தா'' என்று அவள் கையில் கொடுத்ததும் நளினி அதைக் குடித்துவிட்டு ''நன்னா இருக்கு அத்தை'' என்றாள்.



''சரி, நான் போயிட்டு கொஞ்சம் நேரம் கழிச்சு வரேன்'' என்று புறப்பட்டாள், பொன்னியத்தை. இவர்கள் வீட்டில் இவளும், மருமாள் கல்யாணி, அவள் கணவர் ராமனாதனும் தான். என்ன பெரிய அவசர காரியம் அங்கு? கல்யாணிக்கு ஒரு குழந்தை பிறக்கணும் என்பதுதான் ஐயாரப்பன் வீட்டில் எல்லோருடைய பிரார்த்தனையும்.

பொன்னியத்தை குளித்து, பூஜை முடித்து, காலை வேளைகளில் அவள் ஆகாரமான சத்துமாக் கஞ்சியைக் குடித்துவிட்டு, கல்யாணியிடம் சொல்லிவிட்டு, நளினியைப் பார்க்கப் போனாள்.

''இப்போது தேவலையா, நளினி'' என்று அவளைக் கேட்க, ''குமட்டல், தலை சுத்தல் தேவலை. ஆனால் எதுவும் சாப்பிடப் பிடிக்கவேயில்லை'' என்று சொன்ன நளினி மெதுவாக எழுந்து கூடத்திற்கு வந்தாள்.

''இங்கே வாடி பெண்ணே! என்ன முகமெல்லாம் வெளுத்திருக்கு? கையைக் கொடு'' என்று நாடியைப் பிடித்துப் பார்த்தவள், ''அடியே, நீ திரும்ப அம்மாவாகப் போறே'' என்றாள்.

''என்ன அத்தை சொல்றீங்க? நிஜமாவா சொல்றீங்க?'' என்று கலக்கமாக நளினி கேட்கவும், ''இதோ பார், உன் கையிலே. சுத்தமா இரண்டு நாடி சப்தம் கேட்கிறது. சந்தேகமே இல்லாமல் நீ உண்டாகியிருக்கே'' என்றாள் வாயெல்லாம் பல்லாக பொன்னியத்தை.

மிகவும் கலங்கிப் போன நளினி, ''என்னத்தை இது? சந்தோஷப்படுகிற விஷயமா இது? என் வயசுக்கு இதெல் லாம் இப்போது தேவையா? என் சின்னப் பெண்ணுக்கு என்ன வயசு தெரியுமா? கண்றாவி, கஷ்டம், கஷ்டம் ரொம்ப அவமானமாக இருக்கு'' என்று தலையில்

அடித்துக் கொண்டாள் நளினி. அவளுக்குக் கண்ணில் நீர் பெருகிவிட்டது.

''என்னடி பெண்ணே! என்னவோ இப்படி அலுப்பு, அழுகை எல்லாம்? என் மருமாள் போல் எத்தனையோ பேர் ஒரு குழந்தையாவது பிறக்காதான்னு தவம் இருக்காங்க. நீ என்ன கண்றாவிங்கறே, அவமானங்கறே! அப்படியெல்லாம் பேசாதே. பகவான் கொடுக்கும் வரம் இல்லையா, இது?'' என்றாள் பொன்னியத்தை.

''போதும், அத்தை! பகவான் ஏங்குபவர்களுக்குக் கொடுக்கறதுதானே! காலம்கெட்ட காலத்தில் இன்னொண்ணு பிறந்து, அதுவும் பெண்ணாகப் பிறந்து வைச்சா ரொம்ப அழகாகத்தான் இருக்கும். வெட்கக் கேடு!''

''இதில் வெட்கக்கேடு என்ன இருக்கும்மா? பெருமாள் இருக்கறவரைக்கும் திருநாள் உண்டு. அந்தக் காலத்திலே அம்மாவும் பெண்ணும் ஒண்ணா பிள்ளை பெத்ததெல்லாம் நீ கேட்டதில்லையா? யார் குழந்தைக்கும் யார் வேணுமானாலும் பால் கொடுப்பாங்க. உனக்கு அப்படி என்ன வயசாயிடுத்துன்னு நீ இப்படி வருத்தப்படுறே? இதெல்லாம் நம்ம கையிலே இல்லே. நடப்பதெல்லாம் நாராயணன் செயல். எல்லாம் நல்லதுக்குன்னே நினைச்சுக்கோ. அது சரி, எத்தனை நாளாச்சு?'' என்று கேட்டாள் பொன்னியத்தை.

''ஹூம்! அது இருக்கும் 3 மாதம். இது எனக்கு வேண்டாம் அத்தை'' என்று நளினி சொல்லவும், ''என்னடிம்மா இது! வேண்டாம் என்கிறவள் 3 மாதம் வரை என்னடி பண்ணிண்டிருந்தே?'' என்றாள் பொன்னியத்தை.



''எனக்கும் நாற்பது வயசாகப் போறது. நல்லவாளுக்கு நாற்பதிலே போயிடும்பா. எனக்கும் அப்படி போயிடுத்து இந்தத் தொல்லைன்னு நினைச்சேன். எங்கம்மாவுக்குக் கூட 40 வயதிலே போயிடுத்து. அதுதான் கொஞ்சம் அசட்டையாயிருந்தேன். இப்போ என்ன பண்றது?''

''என்ன பண்றது என்ன? மூத்தது இரண்டும் பொண்ணாப் போச்சு. உனக்கு பிள்ளைக் குழந்தை பாக்கியம் இருக்கு போலிருக்கு.''

''இல்ல அத்தை. எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம், கலைச்சுடலாம்'' என்றாள் நளினி.

அதற்குள் அங்கு வந்த பொன்னியின் மருமாள் கல்யாணி, ''என்னத்தை, நளினியக்காவுக்கு இப்போ எப்படியிருக்கு? நான் கோவிலுக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கேன். வேலைக்காரி துணி துவைச்சிண்டு இருக்கா. நீங்க வறேளா?'' என்றாள்.

''சரி போயிட்டு வா. நளினிக்குத் தேவலை. நான் இதோ வரேன்.''

பொன்னியத்தை அவள் வீட்டுக்குப் போன பத்தாவது நிமிடம் நளினி அங்கு வந்துவிட்டாள்.

''அத்தை, இதைக் கலைச்சாகணும். எனக்கு நீங்கதான் ஒத்தாசை செய்யணும், அத்தை!'' என்றாள் நளினி கலக்கத்தோடு.

''இதோ பார்! எந்த ஜன்மத்துப் பாவமோ, இந்த ஜன்மத்தில் எங்க வீட்ல ஒரு வாரிசு பொறக்கல்லே. நான் இந்த பாவத்தைச் செய்ய மாட்டேன். நீயும் கூட அப்படி யோசிக்காதே!''

''என்னத்தை, என்னை எல்லோரும் எப்படி ஈனமா பாப்பாங்க஌றதையெல்லாம் யோசிக்க மாட்டேங்கறீங்களே, அத்தை.''

''ஈனமா உன்னைப் பார்க்க நீ என்ன ஏதாவது திருட்டுப் பிள்ளையா பெறப்போறே? அர்ஜுனன் மாதிரி ஆம்படையான் இருக்கச்சே அன்னியமா என்னடி பேச்சு இது? நீ சுப்புகிட்டே இன்னும் சொல்லக்கூட இல்லை. அதற்கு முன்னாலே எதுக்கு இத்தனை கலவரப்படறே?''

''அவர்கிட்டே சொன்னால் காதிலேயே போட்டுக்க மாட்டார், இல்லையானா இதிலே என்ன பெரிய தப்பு, பெத்துக்கிட்டாப் போச்சு என்பார். எனக்கு சர்வ நிச்சய மாத் தெரியும். அத்தை, நீங்கதான் எனக்குத் துணையாக இருக்கனும். எனக்கு வேற யாரிருக்கா, அம்மா, அப்பாவா? கொஞ்சம் ஒத்தாசை பண்ணுங்கத்தை'' என்று நளினி கண்களில் நீர் தளும்பச் சொல்லவும் பொன்னியத்தை உருகி விட்டாள்.

''இல்லேடி கண்ணே! இதோ பார், ஏதோ 40, 50 நாள் என்றால் பரவாயில்லை. முழுசா 100 நாளைக்கு மேலா யிடுத்து. இதெல்லாம் ரொம்ப ஆபத்தான வேலைம்மா. இந்த ஒண்ணைப் பெத்துக்கோ. அப்புறமா இனி உண் டாகாம ஏதாவது பண்ணிக்கோ. உனக்கு நாங்கள் எல் லோரும் இல்லையா? பிள்ளை பெற ஒத்தாசையா இருப்போம்'' என்றாள் பொன்னியத்தை.

''அத்தை, பிள்ளையைக் கரைக்க ஒத்தாசை பண்ணச் சொன்னா பிள்ளை பெற ஒத்தாசை பண்றேன்னா என்ன அர்த்தம் அத்தை'' என்ற நளினி விக்கி விக்கி அழுது விட்டாள்.

''சரி, என்ன பண்ணனும் சொல்லு? ஆனா என் மனசாட்சிக்கு விரோதமாத்தான் இதை பண்ணறேன். நாளைக்கு ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னா ஒம் புருஷனுக்கு யார் பதில் சொல்லறது? நன்னா யோசிம்மா'' என்றாள் பொன்னியத்தை.



''இதுலே யோசிக்க ஒண்ணுமேயில்லை. முதல்ல இதுக்கு என்ன வைத்தியமோ அதைச் சொல்லுங்க, அத்தை'' என்றாள் நளினி.

''ஏதோ பப்பாளிப் பழம், எள்ளு அப்படின்னு எல்லாம் சொல்லிக் கேட்டுருக்கேன். ஆனா, அது எப்போ பலிக்கும்? ஒரு 40, 50 நாளுக்குள்ளே இருந்தா ஒரு வேளை பலிக்கலாம். ஆனா, இப்போ 100 நாளைக்கு மேலாயுடுத் தேம்மா! ஏதோ காதில் விழுந்ததைச் சொல்லறேன். என் வயத்திலே ஒருதரம் கூட ஒண்ணும் தங்கல்லே இதில் எனக்கு இந்த மாதிரி அவசியம் எங்க வந்திருக்கு?'' என்று பொன்னியத்தை சொல்லவும்,

''அத்தை, நான் உங்களைத் தொந்திரவு தான் பண்ண றேன். எனக்கே நன்னா தெரியறது. ஆனா எனக்கும் வேறே வழி தெரியாமத்தான். அத்தை உங்களைக் கேட்கறேன். நம்ம ஐயாரப்பன் காம்பவுண்ட்லே ஹவுஸ் ஒய்ஃப்ன்னு வீட்டுலே இருக்கறது கல்யாணி மட்டும் தான். அவளை நான் இந்தக் காரியத்துக்குக் கூப்பிடறது கொஞ்சம் கூட நியாயமில்லையே. அத்தை. சுந்தரா மாமிக்கு மாட்டுப் பெண் வேலைக்குப் போறதுனாலே நாள்பூரா வீட்டிலே இருக்கனும். பரிமளா மாமிக்கோ வெளி உலகமே தெரியாது. அதுதான் அத்தை உங்களைக் கேட்கறேன்'' என்றாள் நளினி.

''நீ இரண்டு நாள் பப்பாளி, எள்ளுன்னு ஏதாவது முயற்சி பண்ணு. அன்னாசி பழம் கூட சூடுதான்னு நாள் தள்ளினா சாப்பிடறதுண்டு. ஒரு இரண்டு நாள் பாரு. அப்புறமா யோசிக்கலாம். உன் மனசு கூட மாறலாம் இல்லையா?'' என்றாள் பொன்னியத்தை.

''இரண்டுமே நடக்காது, அத்தை! பார்க்கலாம்'' என்று நளினி தன் வீட்டுக்குப் போனாள்.

''சாமி, ஆண்டவா! இந்தப் பாவத்துக்கு நான் துணை போகாம காப்பாத்து'' என்று இரண்டு நாள் இடைவிடாமல் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள், பொன்னியத்தை.

ஆண்டவனுக்குச் சில வேளைகளில் காது கேட்காதோ என்னவோ. மூன்றாம் நாள் நளினி, ''அத்தை, அத்தை'' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தாள். கல்யாணி ''வாங்க நளினி'' என்று கூப்பிட்டு உட்காரச் சொன்னாள்.

''உட்காருவதற்கில்லை. அத்தை சாப்பிட்டாச்சா?'' என்று கேட்டாள் நளினி.

''சாப்பிட்டாச்சே! என்ன விஷயம், நளினி?''

''இல்லை என் ஒன்றுவிட்ட சித்தப்பா கிராமத்திலிருந்து வந்திருக்காராம். சிந்தாதிரிப் பேட்டையில் அவர் மச்சினி வீட்டில் தங்கியிருக்கிறாராம். ரொம்ப வயசானவர். உடம்பும் சரியில்லாதவர். நாளைக்கே புறப்படுகிறாராம். அங்கு வந்து பார்க்க முடியுமா என்று போனில் அட்ரஸ் கொடுத்தார். எனக்கு துணைக்கு கொஞ்சம் அத்தையைக் கூட்டி கொண்டு போகலாமா என்று கேட்கத்தான் வந்தேன். தனியாகப் போனால், புது இடமா, திக், திக்கென்று இருக்கும். என்ன சொல்றே, கல்யாணி, கூட்டிண்டு போகவா?'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள் நளினி.

''என்ன நளினி இது. என்னக் கேட்பானேன்? அத்தை வந்தா தாராளமாகக் கூட்டிக் கொண்டு போங்களேன்'' என்றாள் கல்யாணி. கூடவே, ''அத்தை, நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன். நீங்க இன்னொரு சாவியால் வீட்டைப் பூட்டிண்டு போங்க. வரேன் நளினி'' என்று கிளம்பி விட்டாள்.



''உட்கார் நளினி. இப்போ விவரம் சொல்லு'' என்று அத்தை கேட்க, ''கை வைத்தியமெல்லாம் ஆயாச்சு. இன்னும் நாளாக, நாளாகக் கஷ்டமாகி விடும், இல்லையா? நான் கர்ப்பம்தான்கறதை முந்தா நாளே மெடிக்கல் ஷாப்பில் விற்கும் டெஸ்ட்கிட் வாங்கிப் பார்த்து உறுதிப் படுத்திண்டுட்டேன். அசோக் நகரில் ஒரு ஆஸ்பத்திரிக்கு முன்பு எப்போதோ ஒரு முறை போயிருக்கேன். அங்கே ஒரு சீனியர் நர்ஸ் எனக்குப் பழக்கம். அவங்க வீடு கிட்டேதான் இருக்காம். நான் விஷயத்தைச் சொன்னதும் ''என் வீட்டிலேயே இதைச் செய்துடலாம்''னு சொன்னாங்க. இன்னிக்கு வரச் சொன்னாங்க. அதுதான் கிளம்பிப் போகலாம்னு உங்களைக் கூப்பிட வந்தேன். சாயந்திரத்துக்குள்ளே வீடு வந்து விடலாமாம். என் விஷயத்தைக் கேட்டுப் பரிதாபப்பட்டு தைரியம் சொன்னாங்க. சின்ன சிகிச்சைதானாம். வீட்டிற்குப் போய் ஜுரம்னு நாலு நாள் படுத்து ரெஸ்ட் எடுங்க, எல்லாம் சரியாகிவிடும்னு சொன்னாங்க. என் நல்ல காலம் என் மாமனாரும் இப்போ ஊரிலே இல்லே. அறுபடை வீடுடூர்னு போயிருக்கார். திருச்செந்தூர்லே இரண்டு நாள் தங்கிட்டு வரேன்னு சொல்லியிருக்கார் அத்தை. அவர் திரும்பி வரதுக்குள்ளே நாம ஏதாவது பண்ணனும்'' என்றாள் நளினி.

''என்னம்மா நீ! அந்த நர்ஸ் அனுபவம் உள்ளவங்கதானா? அவங்களுக்கு என்ன வயசிருக்கும்? பணம் ஏற்பாடு பண்ணிட்டாயா?'' என்று கேட்டாள் பொன்னியத்தை.

''பணம் பிரச்னை இல்லை அத்தை. எங்கிட்டே இருக்கு. அவங்க வயசு 50ஆவது இருக்கும். அனுபவம் நிறைய உள்ளவங்கதான், பயப்பட ஒண்ணுமேயில்லேங்கறாங்க. கிளம்புங்க அத்தை'' என்று அவசரப்படுத்தினாள் நளினி.

"என்ன எடுத்துக்கணும்னு சொன்னாங்களா."

"எல்லாம் அவங்களே பாத்துக்கறாங்களாம். சும்மா வந்தாப் போதும்னுட்டாங்க. சீக்கிரம் கிளம்புங்கத்தை" என நளினி துரிதப்படுத்தவும், "என்னவோம்மா! சுந்தரா கிட்டேயாவது ஒரு வார்த்தை கேட்டு இருக்கலாம்" என்று புலம்பியபடியே புறப்பட்டாள் பொன்னியத்தை.

## 6

இவர்கள் போக வேண்டிய நர்ஸ் வீடு அசோக் நகரில் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலேயேதான் இருந்தது. இவர்களுக்காகத்தான் அந்த நர்ஸ் காத்துக் கொண்டிருந்தாள். போனதும் பொன்னியத்தை அந்த நர்ஸைக் கேட்ட கேள்வி "ஏம்மா, ஒண்ணும் சிக்கல் இருக்காது, இல்லையா? நல்லபடியா சாயங்காலம் வீட்டுக்குக் கூட்டிப் போய்விடுவேனில்லையா?" என்பதுதான்.

"அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதீங்கம்மா. எனக்கு எத்தனை வருஷ அனுபவம் தெரியுமா?" என்ற அந்த நர்ஸ் பொன்னியத்தையை வெளியே உட்கார வைத்து விட்டு, நளினியை உள் ரூமிற்குக் கூட்டிப் போனாள்.

என்ன பண்ணினாளோ என்னவோ 3/4 மணிகூட ஆயிருக்காது. பதட்டத்துடன் வெளியே வந்த அந்த நர்ஸ், "இதோ பாருங்க பெரியம்மா! அந்த லேடிக்கு 100 நாளுக்கு மேலே ஆயிடுச்சுல்லே கொஞ்சம் பிரச்னையாயிடும் போலிருக்கு. ரத்தப் போக்கு ரொம்ப ஜாஸ்தியாயிருக்கு. BPயும், பல்ஸும் கீழே போயிட்டே இருக்கு. அபார்ஷனும் ஆகல்லே சாதாரணமா இதுக்கெல்லாம்



கொடுக்கிற மயக்க மருந்துக்கு அரை மணிக்குள்ள கண்ணு முழிச்சுடுவாங்க. 3/4 மணி நேரத்துக்கு மேலேயே ஆச்சு இன்னும் கண் முழிக்கல்லே. கூப்பிடக் கூப்பிட பதிலேயில்லை. அதனாலே இவங்களை பக்கத்திலே இருக்கிற எங்க ஆஸ்பத்திரிக்குக் கூட்டிகிட்டுப் போயிட்டீங்கன்னா எங்க டாக்டர் எப்படியும் காப்பாத்திடுவாங்க. சீக்கிரமா கொண்டு போயிடுங்க" என்றாள்.

"என்னம்மா சொல்லறே. நீ! பயமில்லே, பயமில்லேன்னு சொல்லிட்டு இப்ப இப்படி சொல்றியேம்மா. என்னைல்லே எல்லோரும் கொத்திப் பிடுங்கிடுவாங்க. நான் இப்போ என்ன பண்ணுவேன்?" என்று தவித்துப் புலம்பினாள் பொன்னியத்தை.

"இதைப் பாரம்மா பேசிகிட்டு இருக்கிற நேரமில்லை. இது லேட்டானா அவங்க பொழைக்கிறதே கஷ்டமாயிடும். சீக்கிரமா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போற வழியைப் பாரு" என்றாள் அந்த நர்ஸ்.

"ஏம்மா உன் பேச்சை நம்பி ஒரு ஆம்பிளைத் துணை கூட இல்லாமல் வந்திருக்கோம். இப்ப இப்படிச் சொன்னா எப்படி? நான் ஒண்டியா எப்படிம்மா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவேன்? சரியில்லேம்மா நீ பேசறது" என்று பொரிந்தாள் பொன்னியத்தை.

"இதோ பாரம்மா, பக்கத்திலே எனக்குத் தெரிஞ்ச ஆட்டோக்காரன் இருப்பான். ஏத்திவிட்டு ஆஸ்பத்திரியிலே இறக்கி விடச் சொல்றேன். ஆனா நீ என் பெயரை யார் கேட்டாலும் சொல்லக் கூடாது. சத்தியம் பண்ணு. இல்லேன்னா நான் இந்த ரூமில் ஒண்ணும் பெரிய சாமான் செட்டு கிடையாது. இதை இப்படியே திறந்து போட்டுட்டு நான் உள்ளே போய் பூட்டிக் கொண்டு

விடுவேன். அந்த பொம்பளை உயிருக்கு நான் கியாரண்டி இல்லை. நீ தான் எல்லார் வாயிலும் விழுவே. என்ன சொல்றே?'' என்று மிரட்டினாள்.

''முதல்லே நான் ஒரு போன் பண்ணிக்கணும்'' என்றாள் பொன்னியத்தை.

''இந்தா கிழவி! நான் என்ன சொல்றேன் நீ என்ன செய்யுறே. நீ என்னத்துக்கு இங்கே இருக்கோம், வான்னு வீட்டுக்கு சொல்லப் போறே?''

''நான் ஒண்ணும் இங்கே இருக்கறதா சொல்லப் போறதில்லே. ஆஸ்பத்திரிக்குத்தான் வரச் சொல்லப் போறேன்'' என்றபடி அங்கிருந்த போனில் தன் வீட்டு நம்பருக்குப் போன் செய்தாள்.

போனை எடுத்த கல்யாணியிடம், ''இதோ பார், கல்யாணி! நீ உடனே ராமனாதனுக்கு ஒரு போன் போட்டு அவனை உடனே அசோக் நகரில் இருக்கும் அபயா நர்ஸிங் ஹோமிற்கு வரச் சொல்லு. நீயும் வீட்டைப் பூட்டிண்டு அந்த ஆஸ்பத்திரிக்கு உடனே வா, ரொம்ப, ரொம்ப அவசரம்'' என்றாள்.

கல்யாணி ஒரே பதட்டமாக, ''என்ன ஆச்சு அத்தை?'' என்று கேட்க, ''நளினிக்கு ஒரு ஆக்ஸிடெண்ட் ஆயிடுத்து. நான் அவளுடன் அபயா நர்ஸிங் ஹோமிற்குத் தான் போயிண்டுயிருக்கேன். நீங்க இரண்டு பேரும் உடனே புறப்பட்டு அங்கு வந்து சேருங்க'' என்றாள் பொன்னியத்தை.

அதற்குள் ஆட்டோ வந்து விட மூவருமாக நளினியை ஏற்றினர். நர்ஸ் ''இதோ பார் பெரியம்மா, இப்போ மட்டுமில்லை எப்போதும் என் பெயர் வெளியே வரக்கூடாது. ஜாக்ரதை! சத்தியம் பண்ணியிருக்கே'' என்று எச்சரித்து விட்டு உள்ளே போய் விட்டாள்.



கிழவியையும் ஏற்றிக் கொண்டு ஆட்டோ பறந்தது. ஆஸ்பத்திரி வாசலிலேயே பொன்னியத்தை பெரிய குரலில், ''அவசரம், அவசரம், உடனே வாங்க'' என்றெல்லாம் கூச்சலிடவே, உடனே ஸ்ட்ரெச்சர் வந்து நளினியை ஏற்றி அவசர அவசரமாக உள்ளே கொண்டு போனார்கள்.

நல்ல வேளையாக அந்த ஆஸ்பத்திரியின் ஓனரான டாக்டர் அபயாம்பாளே அங்கிருக்க உடனடியாக சிகிச்சை ஆரம்பிக்கப் பட்டது. சிறிது நேரம் கழித்து வெளியே வந்த டாக்டர், பொன்னியத்தையிடம் ''ஏம்மா, நீ தான் அந்தப் பொண்ணை அழைச்சிட்டு வந்தியா? ஒனக்கு புத்தி வேண்டாம்? பாத்தா படிச்சவ மாதிரி தெரியுது. கண்ட இடத்துக்கும் போய் ஆபத்தாக விட்டுதான் சரியான டாக்டர்கிட்டே வருவீங்களா? உங்களை மாதிரி ஆட்களையெல்லாம் திருத்தவே முடியாது. நான் திருப்பி அனுப்பி வழியில் செத்தாத்தான் புத்தி வரும் ஒன்னை மாதிரி பொம்பளைங்களுக்கெல்லாம்'' என்று கண்டபடி ஏசினாள்.

பொன்னியத்தை மிகவும் பயந்து விட்டாள். டாக்டரின் கால்களில் விழவே போன அவளைத் தடுத்து, ''ஆமா! ஏதாவது சொன்னா கால்ல விழுவீங்க. இதில் ஒண்ணும் குறைச்சலில்லை'' என்று கத்திவிட்டு ஆபரேஷன் தியேட்டருக்குள் போய்விட்டாள்.

அதற்குள் ரிசப்ஷனில் இருந்த பெண் பொன்னியத்தையிடம் வந்து, ''அம்மா, இந்த பேப்பரிலெல்லாம் கையெழுத்துப் போடணும். யார்கிட்டே கையெழுத்து வாங்கறது'' என்று கேட்டாள்.

''இதோ என் அண்ணன் பொண்ணும், மாப்பிள்ளையும் வந்துடுவாங்க'' என்று அவள் தடுமாறுவதைப்

பார்த்ததும் ரிஸப்ஷனிஸ்ட் என்ன செய்யலாம் என்று டாக்டரிடம் கேட்கப் போனாள்.

நல்ல வேளையாக அடுத்த ஐந்து நிமிடங்களில் கல்யாணி, ராமனாதன் மட்டுமில்லை, சுப்ரமணியமும் கூட வந்து விட்டனர். எல்லோரும் பதை பதைப்புடன் பொன்னியத்தையைக் கேள்விகளால் துளைக்க ஆரம்பிக்க அதற்குள் அங்கு நர்ஸ் வந்து விட்டாள். கையில் ஒரு மருந்துச் சீட்டு. ''அவசரமாக யாராவது ஓடிப்போய் இந்த இஞ்செக்ஷனை வாங்கி வாங்க. அப்புறம் யாருக்கு இங்கே ஓ-பாசிடிவ் குரூப் ரத்தம்'' என்று கேட்டாள்.

சுப்ரமணியம், ''ஐயோ! எனக்கு அந்த குரூப் இல்லையே'' என்று பரிதவிக்க, ராமனாதன் ''எனக்கு அந்த குரூப்தான். நான் ரத்தம் கொடுக்கிறேன், நீங்க போய் மருந்தை சீக்கிரம் வாங்கிட்டு வாங்க'' என்றார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, கழுவிய கைகளை பூத்துவாலையால் துடைத்துக் கொண்டே வெளியே வந்த டாக்டர், ''இப்போதைக்கு பரவாயில்லை. பிளட் கொடுத்து அதை அவங்க உடம்பு ஏத்துக்க ஆரம்பிக்கணும். இஞ்செக்ஷன் வந்து போட்டப்புறம்தான் எதுவும் சொல்ல முடியும்'' என்றாள்.

சுப்ரமணியம் இஞ்செக்ஷனுடன் வரவே ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. அதற்குள் பொன்னியத்தையிடமிருந்து விட்டுவிட்டு சேகரித்து அறிந்த விஷயங்களை. கல்யாணியால் ஜீரணிக்கவே முடியவில்லை.

சுப்ரமணியம் வந்து என்ன நடந்தது என்று கேட்டபோது அவளாலும் சரி, பொன்னியத்தையாலும் சரியாக எதுவும் சொல்ல முடியவில்லை. ஆனாலும் சொல்லித்தானே ஆக வேண்டும்? கேட்டதும் சுப்ரமணியம் ஒரு



பார்வை பார்த்தாரே, வெறுப்பும், கோபமும் நிறைந்த அந்தப் பார்வையை பொன்னியத்தையால் ஆயுசுக்கும் மறக்க முடியாது.

மூன்று மணி நேரம் போல் எல்லோரும் அங்கேயே அப்படியே உட்கார்ந்திருந்தனர். அவரவருக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தனர்.

ராமனாதன் ரத்தம் கொடுக்க, நளினிக்கு ஏற்ற ஆரம்பித்து, ரத்தத்தை அவள் உடம்பும், ஏற்றுக் கொள்ள ஆரம்பித்திருந்தது. டாக்டர் திரும்ப வந்து இவர்களிடம், ''இனி பயமில்லை. பெரியம்மா, நீங்களும் நளினியின் கணவரும் என்னுடைய ரூமிற்கு வாங்க. உங்களோட பேசணும்'' என்றாள்.

தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தாள் பொன்னியத்தை. கூடவே சுப்ரமணியமும், கல்யாணியும் கூட நுழைந்தனர். அவர்களை உட்காரச் சொன்ன டாக்டர் அபயாம்பா ''இப்போ சொல்லுங்கம்மா, இதெல்லாம் எப்படி நடந்தது?'' என்று அமைதியாகக் கேட்டாள்.

பதிலுக்கு உடனடியாக பொன்னியத்தையிடமிருந்து வந்தது ஒரு கேவல் சப்தமே. ''பெரியம்மா, வருத்தப் படாதீங்க. அவங்க வந்த நிலைமையில் எனக்கு ரொம்ப கோபம் வந்துடுச்சு. அதுதான் திட்டிட்டேன். என்ன நடந்தது அவங்களுக்கு, இந்த அறைகுறை வைத்தியம் பண்ணியது யார்? விவரமா சொல்லுங்க'' என்றாள்.

எச்சில் முழுங்கினாள் பொன்னியத்தை. ''பயப்படாதீங்க. தைரியமா சொல்லுங்க'' என்று டாக்டர் ஊக்குவிக்கவும், மூன்று நாள் முந்தி நளினிக்கு தலை சுற்றல் வந்ததிலிருந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி முடித்தாள். ஆனால் ஃப்ளாரன்ஸ் நர்ஸ் பெயரை மட்டும் மறந்தும் சொல்லவில்லை.

சொல்லி முடித்ததும் டாக்டர் நினைவாகக் கேட்டாள். ''எல்லாம் சரி, நீங்கள் போன அந்த நர்ஸின் பெயரை சொல்லலையே, யார் அது?''

''எந்த ஜென்மத்துப் பாவமோ என் மருமகளுக்கு இன்னும் வயிறு வாய்க்கவே இல்லை. இன்னும் சத்தியத்தை மீறிய பாவம் வேறு பண்ணனுமா'' என்று வருத்தப்பட்டாள் பொன்னியத்தை.

''அதற்கென்று இப்போதெல்லாம் எத்தனையோ சிகிச்சைகள் வந்தாச்சு. உங்க மருமகளையும் பாத்து உங்க வீட்டுக்கும் ஒரு ராஜகுமாரனை வரவழைச்சுடலாம்'' என்ற டாக்டர், ''சொல்லுங்கம்மா, யார் அந்த நர்ஸ்'' என்றாள்.

பொன்னியத்தையின் தயக்கத்தைக் கவனித்த டாக்டர், ''இதோ பாருங்கம்மா, நீங்க சொன்னத்தானே அடுத்தவங்களையாவது இந்த மாதிரி அறை குறைகளிடமிருந்து காப்பாத்த முடியும். இன்னிக்கு நல்ல வேளையா நான் ஆஸ்பத்திரியிலே இருந்தேன். நளினி பொழைச்சாங்க, இல்லேன்னா விபரீதமா போயிருக்கும். அதனால் தாம்மா கேக்கறேன், தயங்காம சொல்லுங்க'' என்றாள்.

கல்யாணியும் கூடவே ''அத்தை சொல்லுங்க, டாக்டர் இவ்வளவு தூரம் கேக்கறாங்க இல்லே'' என்றாள்.

''இல்லேம்மா, நான் சத்தியம் பண்ணியிருக்கேனே, அதுதான்'' என்று இழுத்தாள் பொன்னியத்தை.

''அம்மா, ஒரு நல்ல காரியத்துக்காக சத்தியத்தை மீறினா தப்பில்லேம்மா. சரி ஒரு வேலை பண்றேன். நான் கேள்வி கேக்கறேன், நீங்க ஆமான்னா ஒண்ணும் சொல்ல வேண்டாம், இல்லைன்னா மட்டும் தலை யாட்டுங்க, போதும் சரியா?'' என்ற டாக்டர் அவளின் பதிலுக்குக் காத்திராமல் ஆரம்பித்தாள்.



''அவங்க இந்த ஏரியாதானேம்மா?''

பொன்னியத்தை மௌனமாக இருந்தாள். அடுத்த கேள்வி ''ஆமாம், அவங்களுக்கு ஒரு ஐம்பது வயது இருக்கும், இல்லையா?''

பொன்னியத்தையின் மௌனத்தைக் கவனித்த டாக்டர் அடுத்த கேள்வி கேட்டாள் ''அவங்க இந்த ஆஸ்பத்திரியிலேதான் வேலை செய்யுறாங்க, இல்லையா?''

இதற்கும் பொன்னியத்தை பேசாமல் இருக்கவே, ''அவங்க பேரு ஃப்ளாரன்ஸ், சரியா?'' என்று கேட்டார் டாக்டர்.

திரும்ப பொன்னியத்தை ''டாக்டர், நான் பண்ணின சத்தியம்...'' என்று தயங்கினாள்.

''இதோ பாருங்கம்மா! இப்போ நீங்க ஆளோ, பேரோ சொன்னீங்களா, இல்லையே? அப்படியிருக்க என்ன பயம் உங்களுக்கு? என்னிடம் ஏற்கனவே இரண்டு, மூன்று புகார்கள் வந்திருக்கு. எதையும் நிச்சயமாக சொல்ல முடியாததனாலே என்னாலே ஒண்ணும் செய்ய முடியல்லே. இனிமே நான் பாத்துக்கறேன். அம்மா, நீங்க கவலைப்படாதீங்க. நான் உங்க பேர் வெளியே வர மாதிரி சொல்லாதீங்க. உங்க வீடுங்களை பத்தி எனக்கு நல்லாத் தெரியும். புதுசா இப்ப ஒருத்தருக்கொருத்தர் மனஸ்தாபப் பட்டுக்காதீங்க. இந்த பெரியம்மா மனசை முக்கியமா நோகடிக்காதீங்க. தப்பு செய்யாதவங்க உலகத்திலே யாரிருக்கா? இப்போ எல்லாம் நல்லபடியா முடிஞ்சதனாலே இதைப் பத்தி இனிமே மனசுலே போட்டுக் குழப்பிக்காதீங்க.

''நளினிக்கு இன்னும் ஒரு வாரம் கூட இங்க இருக்க வேண்டி வரலாம். அதுக்கப்புறம் வீட்டுக்கு அழைச்சிட்டுப்

போகலாம். ஆனா அப்புறம் கூட அவங்களை ரொம்ப கவனமா பாத்துக்கணும். உடம்பு தேற ஒரு மாசமாவது ஆகும்'' என்றவள் இனி பேச ஒன்றுமில்லை என்பது போல் எழுந்து நின்றாள்.

''ராமனாதன்...'' என்று ஆரம்பித்தாள் பொன்னத்தை.

''அவர் ஒரு இரண்டு மணி நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு வரட்டுமே'' என்று டாக்டர் வெளியே நடந்தார். இவர்களும் தொடர்ந்து வெளியே வந்தனர். சுப்ரமணியம் ஒன்றும் பேசாமல் உள்ளே நடக்க, கல்யாணியும் பொன்னியத்தையும் வாசலுக்கு வந்து ஒரு ஆட்டோவைப் பிடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். கல்யாணி ஒன்றும் பேசவேயில்லை.

பொன்னியத்தை போய் குளித்துவிட்டு வந்தாள். கல்யாணி சூடாகப் போட்டுக் கொடுத்த காபியைக் குடித்து விட்டு கட்டிலில் படுத்து விட்டாள். இரவு வீட்டிற்கு வந்த ராமனாதன் அத்தை படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு, ''ஏய், என்ன இது? அத்தையை ஏதாவது சொன்னியா? ஏன் இப்படி படுத்துக் கிடக்கறாங்க?'' என்று அக்கறையாகக் கேட்டான்.

''நான் ஒண்ணுமே சொல்லல்லே. அவங்களுக்கே ஒரு குத்த உணர்ச்சி. அவ்வளவுதான்.''

''அவங்க என்ன பண்ணுவாங்க? நளினி படிச்சவங்க, யோசிச்சிருக்கணும். துணைக்குப் போனதாலே அத்தை குற்றவாளியாயிடுவாங்களா?'' என்றவன் ''ஆமா, சாமிநாதன் அங்கிள் எப்போ டூரிலிருந்து திரும்பி வரார்?'' என்று கேட்டான்.

''அவர் இன்னும் ஒரு வாரம் திருச்செந்தூரிலேயே தங்கிவிட்டு வராதா போன் பண்ணினாராம்.''



''அதுவும் நல்லதுக்குத்தான். இதோ பார், கல்யாணி, அவர் வந்ததும் யாரும் இந்த நிகழ்ச்சியைப் பத்தி அவர் கிட்டே மூச்சு விடப்படாது. எல்லார் கிட்டேயும் சொல்லிவை. அவருக்குத் தெரிஞ்சா நளினி ரொம்பவே சங்கடப்படுவாங்க, என்ன தெரிஞ்சுதா?'' என்ற ராமனாதன். அத்தையிடம் வந்து ''சூடா ஏதாவது சாப்பிட்டுவிட்டு படுங்க அத்தை'' என்றான்.

''எனக்கு ஒண்ணுமே வேண்டாம்பா'' என்றாள் பொன்னியத்தை.

''என்னத்தை இது? அவங்க செஞ்ச தப்புக்கு நீங்க ஏன் பட்டினி கிடக்கணும்? இந்தாங்க, கொஞ்சம் ரசம் சாதம் சூடா கரைச்சிட்டு வந்திருக்கேன். சாப்பிட்டு விட்டு படுங்க'' என்றாள் கல்யாணி.

இப்படித்தான் இவர்கள் வீட்டில் நான்கு நாட்களாக நடக்கிறது. பொன்னியத்தை மிகவும் சோர்ந்து போய் விட்டாள். ''நான் வேணா ஒரு தடவை ஆஸ்பத்திரிக்குப் போய் நளினியைப் பார்த்துவிட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம் அத்தை! எல்லோருக்கும் உங்க மேலே ஒரு கோபம் இருக்கு. அதுதான் நானே போய் பார்க்கலே. போயிட்டு வந்தவங்களை விசாரிச்ச வரை நளினி நல்லா தேறிட்டு வராங்கன்னுதான் சொல்றாங்க. அவங்க வீட்டுக்கு வரவிட்டுப் போய்ப் பார்க்கலாம்'' என்றாள் கல்யாணி. ராமனாதனும் இதை ஆமோதிக்கவே, பொன்னியத்தையால் நளினியைப் போய் பார்க்கவே முடியவில்லை.

ஒரு வாரம் ஆகும் என்று சொன்ன டாக்டரே நான்கு நாட்களில் ''நன்றாக ஆகி விட்டாள், நளினியை நீங்க நாளை வீட்டிற்குக் கூட்டிப் போகலாம்'' என்றார்.

ஆஸ்பத்திரியில் தன்னைப் பார்க்க எல்லோரும் வந்த போதெல்லாம் நளினிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. நல்ல வேளையாக ஆண்கள் யாருமே உள்ளே போய் பார்க்கவேயில்லை.

நளினி வீட்டுக்கு வந்த அன்று வாசலில் கற்பூரம் சுற்றி திருஷ்டி கழித்து உள்ளே கூட்டிப் போனாள் சுந்தராம்பா. இந்த நாலு நாட்களில் சுந்தராம்பாவும் இரண்டு மூன்று தரம் வந்து பொன்னியைப் பார்த்தாள். ஆதரவாகத்தான் பேசினாள். ஆனால் பொன்னியத் தைக்கு என்னவோ அவள் பட்டும் படாமலும் பேசி விட்டுப் போன மாதிரிதான் தோன்றியது.

அன்று காலை 8 மணிக்கே ஆஸ்பத்திரியிலிருந்து நளினியைக் கூட்டி வந்து விட்டதால் 10 மணிக்கு மேல் அவளைப் போய் பார்த்துவிட்டு வரலாம் என்று பொன் னியத்தை புறப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் நளினியின் பெரிய பெண் சுபா ''கல்யாணி ஆன்ட்டி'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

''நீங்க கோவிலுக்குப் போனா அம்மா பேர்ல ஒரு அர்ச்சனை பண்ணிடறீங்களா, ஆன்ட்டி? யாருக்கும் சொல்லாம தப்பு வைத்தியம் பண்ணிண்டு செத்து பொழைச்சு வந்துருக்கா அம்மா. இன்னிக்கு நான் அவங்களோடு இருந்துட்டு நாளைக்குத் தான் காலேஜ் போகப் போறேன்'' என்றவள் பொன்னியத்தையை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவளிடம் பேசாமல் போய்விட் டாள்.

'தப்பு வைத்தியம்' என்று சொல்லிவிட்டு அவள் பொன்னியத்தையைப் பார்த்த பார்வை எரித்து விடுவது போல் இருந்ததாக பொன்னிக்குத் தோன்றவில்லை.



நிஜமாகவே அந்த பெரிய மனுஷி அப்படித்தான் பார்த் தாள். இந்த மாதிரி அவள் பொன்னியத்தையிடம் பேசா மல் போனதே இல்லை. பாட்டி பாட்டி என்று உயிரை விடுவாள். அர்ச்சனை செய்வதைவிட பாட்டியைக் குற்றம் சொல்வதுதான் அவள் வந்த நோக்கமோ என்று கூடத் தோன்றியது.

நளினியைப் பார்க்கக் கிளம்பின பொன்னி மனம் தளர்ந்து உட்கார்ந்து விட்டாள். நளினி உடம்பு பலவீன மாக இருந்தாலும் மனதளவில் சாதாரணமாகத்தான் இருந்தாள். வெட்கம், ஏதாவது ஆகியிருந்தால் என்று நினைக்கும் போது வரும் பயம் ஆகியவற்றோடு கூட பொன்னியத்தை ஏன் தன்னைப் பார்க்க வரவில்லை என்ற கேள்வி வேறு அவள் மனதைக் குடைந்து கொண் டிருந்தது. கேட்டால் கணவர் பார்த்த வெறித்த பார்வை அவளுக்கு அனைத்தையும் உணர்த்தி விட்டது.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த அன்று இரவு வரை தன்னைப் பார்க்க அத்தை வரவில்லை என்றதும் வினோதினியிடம், ''பாட்டியைக் கூட்டிண்டு வா'' என்று அனுப்பினாள்.

''இல்லேம்மா, பாட்டி வருவான்னு தோணலே!'' என்றாள் வினோதினி.

''ஏம்மா அப்படிச் சொல்றே?'' என்ற நளினியிடம் ''ஆமம்மா அக்கா, அப்பா எல்லோரும் பொன்னிப் பாட்டியை ரொம்பவே இன்ஸல்டிங்கா நடத்தியிருக்காங் கம்மா. பாட்டி நாலு நாளா எழுந்திருக்கவேயில்லைம்மா.''

''ஏன், என்ன சொன்னாங்க உனக்குத் தெரியுமா?''

''வார்த்தையாலே நேருக்கு நேரா எதுவுமே சொல்ல லேம்மா. ஆனா சுபாவின் ஜாடைப் பேச்சு, அப்பாவின்

கோபமான, வெறுப்பான பார்வை இதிலேயே பாட்டி ரொம்ப வருத்தமா இருக்காங்கம்மா'' என்றாள் வினோதினி.

''சரி, நான் பாத்துக்கறேன், நீ போ'' என்ற நளினி கணவன் வரக் காத்திருந்தாள். வந்ததும் அவனிடம், ''கொஞ்சம் வினோதினியைப் போய் பொன்னியத்தைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்லுங்களேன்'' என்றாள் சாதாரணமாக.

சுப்ரமணியம் வாயே திறக்கவில்லை.

''சொல்றது காதில் விழவில்லையா? வினோ வாசல்லே விளையாடிண்டுருக்கா. கொஞ்சம் கூப்பிட்டு அனுப்புங்க. அத்தை வீட்டுக்கு. இல்லேன்னா, நீங்களாவது போய் கூட்டி வாங்க. ராமனாதன் அண்ணாவுக்கு தேங்க்ஸ் சொன்னீங்களா?'' என்று கேட்டாள்.

''தேங்க்ஸ் என்ன வேண்டியிருக்கு, தேங்க்ஸ்? கிழவி பண்ணின தப்புக்கு ஏதோ பரிகாரம் பண்ணியிருக்கான். அவ்வளவுதான். என்னவோ பொன்னியத்தை, பொன்னியத்தை என்கிறாயே அவங்க பண்ணின காரியத்துக்கு அவங்க ஒண்ணும் இங்கே வர வேண்டாம்'' என்றார் காட்டமாக.

''என்ன பேசறீங்க? நடந்த விஷயம் முழுவதும் என் யோசனைப்படித்தான் நடந்தது. அவங்களுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என் வயசுக்கு நான் கொஞ்சம் யோசிச்சிருக்கணும். பாவம், அவங்க எப்படி இதுக்குப் பொறுப்பாவாங்க?'' என்றாள் நளினி.

''நீ சொல்றியே, அந்த யோசனை அவங்களுக்கும் வந்திருக்கலாம், இல்லையா? எத்தனை பெரிய அபாயத்திலிருந்து தப்பிச்சிருக்கே, நீ தெரிஞ்சுதான் பேசுறியா?''



''தெரிஞ்சுதான் பேசறேன். அவங்க முதல்லயே என்னோட யோசனையை ஏத்துக்கவேயில்லை. உங்ககிட்டே சொல்லாம எது ஒண்ணும் செய்யக்கூடாதுன்னு அவங்க எத்தனையோ எடுத்துச் சொன்னாங்க. நான்தான் அழுது அடம் பிடிச்சு அவங்களை சம்மதிக்க வெச்சேன், தெரியுமா?''

''ஏதானாலும் அவங்க பண்ணினது பெரிய தப்புதான். இந்த விஷயத்தை இதோடு விட்டுவிட்டு இதோ, மாத்திரை மருந்து எடுத்து வெச்சுருக்கேன், சாப்பிட்டுட்டு இந்தப் பாலைக் குடி.''

''இதோ பாருங்க! பொன்னியத்தையைக் கூட்டி வராத வரை நான் நிச்சயமாக மாத்திரை, மருந்து எதுவும் சாப்பிடுவதாக இல்லை. நடந்த தப்பு முழுவதுக்கும் நான் தான் பொறுப்புன்னு நான் இத்தனை தூரம் சொன்ன அப்புறமும் நீங்க கேட்க மாட்டேன்னா எப்படி? தயவு செய்து நன்றாக யோசித்துப் பாருங்க. அதுவும் அத்தையின் கோணத்திலிருந்து யோசியுங்க. ''எனக்கு யாரும் இல்லை. நீங்கதான் எனக்கு உதவணும். நான் அவுங்க காலிலே விழுந்து அழுததனாலே என்கூட வந்தது தவிர அவுங்க ஒரு தப்பும் பண்ணலல்லே. எனக்கு மருந்தும், பாலும் ஒண்ணும் வேண்டாம்'' என்று நீளமாகச் சொல்லி விட்டு திரும்பிப் படுத்துக் கொண்டாள் நளினி.

தீவிரமாக யோசித்துக் கொண்டே சுப்ரமணியம் சோபாவில் சாய்ந்தார் பொன்னி அத்தையைப் பற்றி நினைத்துப் பார்க்கப் பார்க்க அவளைப் பற்றிய நல்ல எண்ணங்கள் அவர் மனதில் ஓட ஆரம்பித்தன. அவள் இத்தனை வருடமாக தாயாய், பிள்ளையாய் அன்பு செலுத்தி வாழ்வது எல்லாம் அவர் மனதில் நிழலாடின.

அன்றைக்கு நளினிக்கு அவசியம் என்றதும் ராமனாதன் சிறிதும் யோசிக்காமல் ரத்தம் கொடுத்தது. அப்படி அவர் கொடுக்காமல் தாமதப் படுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதெல்லாம் நினைத்துப் பார்த்தார். தலையை சிலிர்த்துக் கொண்டு ஒரு தீர்மானத்துடன் சோபாவை விட்டு எழுந்தார்.

அதற்குள் அங்கு வந்த சுபாஷிணி, ''என்னப்பா, எங்கே கிளம்பிட்டீங்க?'' என்று கேட்டாள்.

''போய் பொன்னிப் பாட்டியைக் கூட்டி வா'' என்றார்.

''எதுக்கப்பா? அவங்களாலதான் இன்னிக்கு அம்மா இப்படி படுத்து இருக்காங்க'' என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நளினி, ''இதோ பார் இதெல்லாம் பெரியவங்க விஷயம். உன் அப்பாவே நான் விளக்கினதுக்கப்புறம் தன் கோபத்தை விட்டுட்டார். நீ அனாவசியமா பேசாம அப்பா சொன்னதைச் செய்'' என்றாள் சற்றே கோபத்துடன்.

சுபாஷிணி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு தட தடவென்று கோபமாக நடந்து போக, ''நீங்களும் கொஞ்சம் பின்னாலேயே போங்களேன், அது ஒரு இரண்டுங்கெட்டான்'' என்றாள் நளினி.

சுபா போய் கதவருகே நின்று கொண்டு கல்யாணியிடம் ''பாட்டியை அப்பா கூட்டி வரச் சொன்னார்'' என்று சொல்லிவிட்டு வெடுக்கென்று திரும்பினாள். எதிரே வந்த சுப்ரமணியம் சுபாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். பொன்னியத்தை கட்டிலில் படுத்துக் கிடந்தாள். நான்கு நாட்களில் சட்டென்று இளைத்திருந்தாள். கல்யாணி



மௌனமாகக் கட்டிலைக் காட்ட, ''அத்தை, அத்தை'' என்று பக்கத்திலிருந்த ஸ்டூலில் போய் உட்கார்ந்தார் சுப்பு.

திரும்பிய பொன்னி ''சுப்புவா? வாப்பா, வா. நளினி எப்படிப்பா இருக்கா?'' என்று பலவீனமாகக் கேட்டாள்.

''பரவாயில்லை, அத்தை. நன்னா தேறிண்டு வரா. எங்களையெல்லாம் தப்பா நினைச்சுக்காதீங்க, அத்தை! ஏதோ டென்ஷனில் நான் வித்தியாசமாக நடந்துனுட்டேன். வாங்கோ, நளினி உங்களைப் பார்க்கணும்னு தவிக்கிறா. வந்து பாருங்கோ அத்தை'' என்றார்.

சுபாவும் பாட்டி படுத்திருந்த கோலத்தைப் பார்த்தாள். ''ஸாரி பாட்டி! வீட்டுக்கு வாங்கோ பாட்டி. நான் கையைப் பிடிச்சி கூட்டிப் போறேன்'' என்றாள்.

''வரேம்மா, வரேன்'' என்று மெதுவாக எழுந்திருக்க முடியாமல் எழுந்தாள் பொன்னி. கல்யாணி கரைத்துக் கொண்டு வந்த ஹார்லிக்ஸை குடித்துவிட்டு வாசலைப் பார்க்க நடந்தனர் மூவரும். கல்யாணியும் பின் தொடர்ந்தாள்.

ஐயாரப்பன் காம்பௌண்டில் வீடு பூட்டும் வழக்கம் கிடையாது. வெறும் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டால் போதும்.

நளினியைப் பார்த்த பொன்னியத்தை ''எப்படி இருக்கேம்மா?'' என்று கேட்டபடி அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''அத்தை, என்ன நீங்க நாலே நாள்லே இப்படி ஆயிட்டீங்க'' என்ற நளினி பொன்னியத்தையும் கையைப் பிடித்துக் கொண்டாள். இருவரும் கண்ணீர் பெருகிய

வண்ணம் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தனர்.

''என்னை தயவு செய்து மன்னிச்சுடுங்க, அத்தை'' என்று மட்டுமே சொன்னாள் நளினி.

''நீ வேண்டாம்னு சொன்னாலும் நான் சுப்புகிட்டே விஷயத்தைச் சொல்லியிருக்கணும். சுப்புதான் என்னை மன்னிக்கணும்'' என்று மட்டுமே பொன்னியத்தைச் சொன்னாலும் அவர்கள் மௌனமாக இன்னும் நிறைய பேசிக் கொண்டார்கள். சற்று நேரத்தில் சுந்தராம்பாளும் அங்கு வந்து விட்டாள். எல்லோரும் சீக்கிரம் ஒருவருடன் ஒருவர் சகஜமாகப் பேசிக் கொள்ள ஆரம்பிக்க அங்கு சீக்கிரமே ஐயாரப்பன் வீட்டு அங்கத்தினர்கள் எல்லோரும் சகஜ நிலைக்குத் திரும்பினர்.

அடுத்து வந்த நாட்களில் அவர்கள் எல்லோரும் நளினியைக் கவனித்துக் கொண்ட விதம், அவளைப் பெற்றவர்கள் இருந்திருந்தால் கூட அப்படிப் பார்த்துக் கொண்டிருப்பார்களா என்று நளினியையும், சுப்ரமணியத்தையும் நினைக்க வைத்தது.

## 7

திவ்யா இரண்டு முறை வெளி நாட்டிலிருந்து கூப்பிட்டு எல்லோருடனும் பேச, மற்ற எல்லோரும் சரியானார்களே தவிர அவள் நிலைமை ரொம்ப பாவமானதுதான்.

ஊருக்குப் புறப்படும் கடைசி நாலு நாட்களாகவே தன் கலகலப்பையெல்லாம் இழந்து மௌனியா திவ்யா புறப்படும் முதல் நாள் ரொம்ப அழுது விட்டாள்.



''இதோ பார், நீ போகணும்னே, நாங்கள் சரின்னோம். நீ வேண்டாம்னு நினைச்சா இப்பக்கூட கான்சல் பண்ணிடலாம்''னு சீனிவாசனும் லக்ஷ்மியும் சொல்ல நிஜமாகவே அப்படிச் செய்து விடுவார்களோ எனப் பயந்து தன்னைத் தேற்றிக் கொண்டாள். அடுத்த நாள் ஏர் போர்ட்டில் செக்யூரிடி செக் முடிந்த பிறகு உள்ளே தனியா நுழையும் போது நெஞ்சை அடைத்து ஒரு துக்கப் பந்து வந்து வயிற்றைப் புரட்டித் தள்ளியது. லக்ஷ்மிக்கும் வெளியே அதே உணர்வுதான். வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் நீள நடந்தாள் திவ்யா.

விமானம் மேலே ஏறும்போது இவள் தெரிவதாகப் பாவித்துக் கொண்டு குடும்பத்தினரும், அவர்கள் தெரிவதாக இவளும் கையாட்டிக் கொண்டிருக்க, விமானம் உயரப் பறக்க ஆரம்பித்தது. இவளுக்கு குமட்டல் அதிமானது. விமானப் பணிப்பெண் கொடுத்த மிட்டாயை வாயில் போட்டுக் கொண்டாள். விமானத்தில் பயணம் செய்வது அவளுக்கு இது முதல் முறையல்ல. இதற்கு முன் அப்பா, அம்மா தங்கைகளுடன் டெல்லிக்குப் போயிருக்கிறாள். மற்றொரு முறை கொல்கத்தா போய் அங்கிருந்து டார்ஜிலிங் எல்லாம் போயிருக்கிறாள் எல்லாம் ஊர் சுற்றிப் பார்க்கத்தான்.

பாவம் அப்பா, அம்மா எத்தனை நல்லவர்கள். ஒரு நாளும் தங்கள் மூன்று பெண்கள் கேட்டு எதையும் மறுத்தவர்கள் இல்லை. வெளிநாட்டிற்கு அனுப்ப முதலில் மறுத்ததுகூட தன் நன்மைக்குத்தானே என்று நினைத்துக் கொண்டாள். இந்த நினைப்பு அவள் துக்கத்தை அதிகப்படுத்தியது. இவள் பக்கத்தில் ஒரு வயதான பெண்மணி உட்கார்ந்திருந்தாள். ''மேல்

படிப்பிற்காகப் போகிறாயாம்மா?'' என்று கேட்டு பேச ஆரம்பிக்க கொஞ்ச நேரம் பேச்சில் கழிந்தது. இவளுக்கும் அந்த நேரத்தில் அந்தப் பேச்சுத் துணை தேவையாக இருந்தது.

அந்தப் பெண்மணி அமெரிக்கா போவது இது நான் காவது தடவையாம். இந்த முறை தாத்தாவை பெண் வீட்டில் அவள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற் காக விட்டு விட்டு தான் மருமகளின் பிரசவத்திற்கு ஒத்தாசை செய்யப் போய்க் கொண்டிருக்கிறாளாம். என்ன செய்ய? வயதானால் கௌரவ சாக்கிரி என அலுத்துக் கொண்டவள் கூடவே நம்மால் முடிந்ததை நாம் இன்று செய்தால்தானே நாளைக்கு அவர்களுக்கு நம்மைப் பார்த்துக் கொள்ளணும் என்று தோன்றும்! வயதான காலத்தில் அவர்கள் தானே துணை என்றும் சொன்னாள். தன் கணவர் வேலையிலிருந்தபோது ஒரு நாள் கூட ஒரு ஸ்பூனைக் கூட எடுத்து அலம்பப் போட்டது கிடையாதாம். ஆனால் இப்போது மூன்று மாதத்திற்குப் பெண் வீட்டில் முடிந்த வேலைகளெல்லாம் செய்வாராம். பாவம்! தானே வருத்தப்பட்டு, கேள்விகள் கேட்டு, பதில் சொல்லி புலம்பிக் கொண்டிருந்தாள். முடிந்த போதெல்லாம் ஒரிரு வாக்கியங்கள் ஆறுதலாகச் சொல்லிக் கொண்டிருந் தாள் திவ்யா.

கொஞ்ச நேரத்தில் ''தூக்கம் வருதும்மா, சித்த நாழி கண்ணை மூடிக்கிறேன்'' என்று தூங்க ஆரம்பித்தாள் அந்த பெண்மணி.

திவ்யாவிற்கு தன் ஐயாரப்பன் காம்பௌண்டின் வயதான பெண்மணிகளின் நினைவு தான் வந்தது. பொன்னி என்று அழகாக காவிரியின் பெயரை வைத்த



பெரியவர்கள் அவள் கணவன் இறந்த போது ''காவேரி யில்லையா, அதுதான் கணவனையே முழுங்கி விட்டாள்'' என்றெல்லாம் பேசினார்களாம். சாதாரணமாக பொன்னி தன் சிறு வயது வாழ்க்கையைப் பற்றிப் பேசவே மாட்டாள். என்றோ ஒரு முறை தன்னை மீறி வந்த வார்த்தைகள் இவை. மற்றபடி தன் அண்ணன் பெண்ணை வளர்த்துக் கல்யாணம் பண்ணி வைத்து வீடும் வாங்கிக் கொடுத்த அவளுக்கு தன் மருமாளுக்கு ஒரு குழந்தை பிறக்காத ஒரு வருத்தம் தான். எல்லோருக்கும் சரீர ஒத்தாசை செய்வதிலேயே ஒரு திருப்தி காணும் ஒரு உயர்ந்த ஆத்மா அவள்.

சுந்தராம்பாள் ஆன்ட்டியை எடுத்துக் கொண்டால் அது ஒரு பரிதாபம். பாவம் ரங்கராஜன் அங்கிள்! அவர் அப்பா ஏதோ க்ஷேத்திராடனம் போகிறேன் என்று போன வர்தான் காசியில் பார்த்தேன், ஹரித்வாரில் கண்ணில் பட்டார் என்றெல்லாம் முதல் கொஞ்ச வருடங்கள் வரை கூட யார் யாரோ சொன்னார்கள். இப்போது நிறைய வருடங்களே ஆகிவிட்டன ஒரு சமாசாரமும் இல்லை. கூட இல்லாத புருஷனுக்காக வகிட்டில் குங்குமமும், தொங்கத் தொங்க தினம் மஞ்சள் பூசிய தாலிச் சரடுமாக பளிச்சென்று இருப்பாள். வீட்டில் பிள்ளை மாட்டுப் பெண், பேரக் குழந்தைகள் எல்லோரும் பிரியமாக இருப்ப தால் அவள் பாட்டுக்கு குடும்பத்தில் உழல்வதிலேயே நிம்மதியாக இருக்கிறாள் என்று தோன்றும்.

பரிமளா மாமி, வரதன் மாமா இரண்டு பேரும் ரொம்ப அமைதி. அதுவும் மாமி ரொம்ப பேசவும் மாட்டாள். தன் வீட்டு வேலைகளையெல்லாம் சலிக்காமல் செய்து கொண்டு அவள் பாட்டுக்கு இருப்பாள். சுந்தராம்பா, பொன்னிப் பாட்டி போலெல்லாம் எல்லோருடனும்

ரொம்ப கலந்து பழகுற டைப் இல்லை அவள். கொஞ்சம் ரிசர்வ்ட் டைப்.

நளினியின் மாமனாருக்கும் சளசளவென்று எல்லோருடன் பேசணும், பழகணும். ஆக ஒவ்வொரு பாட்டி தாத்தாவும் ஒவ்வொரு ரகம்.

இப்படி ஏதேதோ எண்ணத்தில் இருந்த திவ்யா தூங்கிப் போனாள். அது தூக்கமா அல்லது தூக்கம் போன்ற ஒரு நிலையோ தெரியவில்லை. அதில் யார் யாரோ வந்தனர். அரவிந்த், அதுதான் தேவிகா ஆன்ட்டியின் பிள்ளை வந்தான். ''பயப்படாதே'' என்றான். நிறைய பவள மல்லிகளை எடுத்து இரண்டு பேரும் இரண்டு பக்கத்திலிருந்து கோத்துச் சேர்த்து பெரிய மாலையாக்கி விட்டுச் சிரித்தனர். திடுக்கிட்டு விழித்தாள் திவ்யா. ஏர் ஹோஸ்டஸ் தான் எழுப்பியிருந்தாள். முதலில் அவள் தன்னை அந்தக் கனவிலிருந்து கலைத்து விட்டதற்காக கோபம் வந்தது. பிறகு, 'சீ, நாமா இப்படியெல்லாம் யோசிக்கிறோம், எல்லாம் ஹார்மோன் செய்யும் கலாட்டா'' என்று நினைத்துக் கொண்டாள். அந்தக் கனவை முழுதும் கண்டிருந்தால் எப்படி முடிந்திருக்கும் என்றும் யோசித்துப் பார்த்தாள். யோசிக்கத் துணிவில்லை. முகம் சிவக்க வலுக்கட்டாயமாக அந்த எண்ணங்களை ஒதுக்கி விட்டு பக்கத்து சீட் பெண்மணியுடன் ஏதோ பேசத் துவங்கினாள்.

ஏர் ஹோஸ்டஸ் கொண்டு வந்து கொடுத்த சாப்பாட்டை 'ஏஷியன் வெஜிடேரியன்' என்று முன்னமே சொல்லியிருந்ததால் பயமில்லாமல் சாப்பிட முடிந்தது. நன்றாகவே இல்லை. ஆனால் நல்ல சாப்பாடு என்றெல்லாம் ஆசைப்படக் கூடாது, நடக்காது என்றெல்லாம் நினைத்துக் கொண்டாள். கொஞ்ச நேரம் சுடாகு



போட்டாள். கால் வலித்தது. மொத்தத்தில் 21 மணி நேரம் பயணம் எப்போது முடியும் என்றிருந்தது அவளுக்கு. ஒருவழியாக விமானம் ஸ்டான்ஃபோர்ட் விமான நிலையத்தில் இறங்கியது. இவளுடைய சிநேகிதர்கள் ஜயகர், ராஜ்கிஷன் இரண்டு பேரும் அவளை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். சென்னையிலிருந்தே ஒன்றாக டிக்கெட் வாங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இவள் வீட்டில் சம்மதம் சொல்வதற்குள் அவர்கள் கிளம்பி விட்டார்கள். அவர்கள் இங்கு வந்து நான்கு நாட்கள் ஆகி விட்டன.

ஸ்டான்ஃபோர்ட் மாதிரி நல்ல பல்கலைக்கழகங்களில் மாணவ, மாணவிகள் வரும் முன்பே அவர்களுக்குத் தங்க இடம் ஃபேஸ்புக் மூலம் அறையில் கூடத் தங்குபவர்களைத் தேர்ந்தெடுக்கும் வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்து விடுவதால், புதிதாகப் போகிறவர்களுக்குப் பெரிய சிரமம் ஒன்றும் இருக்காது. என்ன, அவரவர் வீட்டிலிருந்து கொஞ்ச நாளைக்குப் பணம் அனுப்ப வேண்டும். இவர்கள் செய்யக் கூடியதாக வேலைகளும் சீக்கிரம் கிடைத்து விடும். லைப்ரேரியன் போன்ற வேலைகள் கொஞ்சம் சீனியர் மாணவர்களுக்குத்தான் கிடைக்கும். அதுவரை ஏதாவது ஸூப்பர் மார்க்கெட்டின் விற்பனையை அதிகரிப்பதற்கான ''ஃப்ளையர்ஸ்'' எனப்படும் நோட்டீசுகளை விநியோகிப்பது போன்ற வேலைகளைச் செய்யலாம். அது பாதியளவாவது பெற்றோர்களின் சுமையைக் குறைக்கும். அவரவர்களே சமைத்துச் சாப்பிடவும் வசதிகள் உண்டு.

இவளுக்குக் கிடைத்த ரூம்மேட் ஒரு தெலுங்குப் பெண். ரூபா என்று பெயர். ரொம்ப சிநேகிதமாகத்தான்

தெரிந்தால். இவ்வளவு தூரம் படிக்க வருபவர்கள் சாதாரணமாக நன்றாகப் படிப்பவர்களாகவும், நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்களாகவும் தானே இருப்பார்கள்? இந்தப் பெண் ரூபாவும் நல்லவளாகத்தான் இருந்தாள். அவளும் சைவம் என்பதால் சமைத்துச் சாப்பிடுவதெல்லாம் பெரிய பிரச்னை இல்லாமல் இருந்தது.

பாவம்! ஊரில் அம்மா இவர்களையெல்லாம் ஒரு துரும்பு எடுத்து அந்தப் பக்கம் போட விடமாட்டாள். ஆனால் இங்கே இவள் தான் முழுக்க முழுக்க செய்து கொள்ள வேண்டும். வாரம் ஒரு நாள் பொது வாஷிங் மெஷினில் போய் வரிசையில் நின்று துணிகளைத் துவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். குளிரோ குலை நடுக்கியது. இவளே கம்பளித் துணிகள் நிறைய எடுத்து வந்தும் போதவில்லை.

இவளுடைய சிநேகிதன் ராஜ்கிரண் ஒரு மார்வாரி வகுப்பைச் சேர்ந்த பெரிய பணக்காரன். நிறைய பணம் அவனுக்கு ஊரிலிருந்து வரும். மற்றொரு சிநேகிதன் ஜயகரும் பெரிய பணக்காரன் தான். அவன் வீட்டில் எல்லோரும் மஹாராஷ்ட்ராவில் பெரிய பிஸினெஸ் காரர்கள். நண்பர்கள் இருவரும் இவளுக்குப் பணத் தேவை அவசியமாக இருக்கும்போது பணம் கொடுத்து உதவுவார்கள். கடன் என்பதுகூட இவள் கண்டித்துச் சொன்னதுதான். ஆரம்பத்திலிருந்து ஒன்றாகப் படித்த இவர்களிடம் ஆண், பெண் என்ற பேதமெல்லாம் இருக்கவேயில்லை. இருந்த ஒரே எண்ணமெல்லாம் நன்றாகப் படித்து இந்த ஒன்னரை வருடத்தை நல்லபடியாக கழிக்க வேண்டும் என்பதுதான்.

ஏற்கனவே அவரவர் வீடுகளை, ஊரை விட்டு ஹாஸ்டலில் வந்து தங்கி படித்துக் கொண்டிருந்ததால்



ஆண் பிள்ளைகளுக்கு புதிதாக தனிமை ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் இவளுக்குத் தான் தனிமை மிகவும் வாட்டியது. ஏன் வந்தோம், தவறான முடிவெடுத்து விட்டோமோ என்று கூடத் தோன்றியது. வந்து சேர்ந்ததும் போன் செய்து வீட்டிற்குத் தெரியப்படுத்தி விட்டாள். அடுத்த நாள் தன் குடும்பத்தாருடன் 15 நிமிடம் போல் பேசினாள். தன் குடும்பத்தினர் மட்டுமின்றி, ஐயாப்பன் காம்பௌண்டில் உள்ள எல்லோரையும் ரொம்பவே மிஸ் பண்ணியதால் இரண்டு நாட்கள் கழித்து காம்பௌண்டில் எல்லோரையும் வரச் சொல்லி போனை ஸ்பீக்கரில் போடச் சொல்லி எல்லோருடனும் பேசினாள்.

''ஜாக்ரதையாக இரு. உடம்பைப் பார்த்துக்கோ. நன்றாகப் படி'' என்று எல்லோருடைய புத்திமதிகளையும் அலுக்காமல் கேட்டு, ''அங்கு எப்படி இருக்கிறது? குளிர் தாங்குகிறதா? ரூம் மேட் எப்படி? என்ன சமைத்துச் சாப்பிடுகிறாய்?'' என்பன போன்ற எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லி முடிக்கும்போது 30 நிமிடங்களுக்கு மேலேயே ஆகிவிட்டது.

ஒரு சினிமாவில் நடிகர் வடிவேலு பட்டணத்திற்கு வந்துவிட்டு தன் ஊரில் எல்லோருடனும் குசலம் விசாரித்துவிட்டு பில்லைப் பார்த்ததும் எகிறுவாரே, அதுதான் நினைவுக்கு வந்தது அவளுக்கு. பில்லைப் பார்த்ததும் இது கட்டுப்படியாகாத விஷயம் என்று தோன்றிவிட்டது.

வீட்டில் கம்ப்யூட்டர் இருந்தது. இன்டர்நெட் போட்டு விட்டார்களானால் அடிக்கடி பேசலாம். நிறைய நேரம் பேசலாம் என்றும் தோன்றியது. ரம்யாவிடம் சொன்னாள்.

அவளுக்கு அதை சரியாகச் செய்யத் தெரியாமல் ரங்கராஜன், தேவிகா தம்பதியினரின் மூத்த பிள்ளையைக் கேட்டிருக்கிறாள். அவன் இவள் அடுத்த முறை போனில் பேசும்போது இன்டர்நெட்டில் எந்த கனெக்ஷனில் வருவது அவளுக்கு சௌகரியம் என்பது போன்ற விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

இரண்டே நாளில் வீட்டிற்கு நெட் கனெக்ஷன் வந்து விட்டது. ''ஸ்கைப்'' பில் இஷ்டம்போல் பேச முடிந்தது. மிகவும் சந்தோஷமாக இருந்தது. அரவிந்தைக் கூப்பிட்டு நன்றி தெரிவித்தாள். ஐயாரப்பன் வீட்டைப் பொறுத்த வரையில் எல்லோரும் ஒன்றாக வளர்ந்திருந்ததால் பெரியவர்கள் இவர்கள் யார் யாருடனும் பேசினாலும் ஆட்சேபிப்பதில்லை.

ஆனால் இங்கு வந்ததிலிருந்து திவ்யாவிற்கு எல்லோரையும் விட அரவிந்த் ரொம்ப நினைவுக்கு வந்து கொண்டே இருந்தான். அவன் என்ன ஸ்பெஷல் என்று இவளுக்கே அந்த எண்ணம் புதிதாகத்தான் இருந்தது. ஒரு வேளை ஊருக்குப் புறப்படும் முன் அவன் கொடுத்த சின்ன அழகு வெல்வெட் பெட்டி, அதற்குள் இருந்த சிறிய உலக உருண்டை, அந்தப் பெட்டியைத் திறக்கும் போதெல்லாம் அது மேல் நாட்டு மெட்டில் east or west home is the best என்ற பாடலும், '' நன்றாகப் படித்து விட்டு நல்லபடியாக திரும்பிவா, எல்லோரும் உனக்காக இங்கே காத்துக் கொண்டிருப்போம்'' என்ற அவனுடைய வார்த்தைகளும், ஆக இவை எல்லாம் தான் காரணமோ என்று கூடத் தோன்றியது அவன் அவளிடம் அந்த வார்த்தைகளைச் சாதாரணமாகத்தான் சொன்னானா. பிறகு சொல்லிவிட்டு ஏன் தன் முகத்தை அவளுக்குக்



காட்டாமல் சடக்கென்று திரும்பிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்?'' என்றெல்லாம் அவளுக்குத் தோன்றாமலில்லை.

''சேச்சே, இந்த மாதிரி எண்ணங்களுக்கெல்லாம் மனதில் இப்போது இடம் கொடுத்தால், அத்தனை பெரிய யூனிவர்சிட்டியில் சீட் கிடைக்க கஷ்டப்பட்டு உழைத்துப் படித்ததும், சீட் வாங்கியதும், அங்கு போய் படிக்க அப்பா, அம்மாவிடம் போராடி அனுமதி வாங்கியதும் எல்லாமே அர்த்தமில்லாமல் போய்விடுமென்று அந்த நினைப்பை துடைத்தெறிந்தாள்.

ஆனால் சின்ன வயதிலிருந்தே தன்னைவிட மூன்று வயது பெரியவனான அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பார்த்து எத்தனையோ முறை வியந்திருக்கிறாள். அது மட்டுமில்லை அவனுடைய அழகான, கண்ணியமான தோற்றம், யாருக்கு என்ன ஒத்தாசை செய்ய வேண்டுமென்றாலும் முன்வரும் அவன் குணம் எல்லாமே அவளைக் கவர்ந்தவைதான். இவளுக்கு என்றில்லை, இவர்கள் காம்பௌண்டில் எல்லோருக்குமே அரவிந்த் கொஞ்சம் ஸ்பெஷல் தான். தன்னுடன் அவன் நடந்து கொண்ட விதமும் அதைப் போன்ற ஒரு நல்ல எண்ணத்தினால்தான். வேறு எதுவும் இல்லை என்று அவ்வப்போது தனக்குள் சொல்லிக் கொண்டாள். வேறு எதுவும் இல்லை என்று அடிக்கடி சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறதே அதுவே அவன் தனக்கு ஸ்பெஷல் என்பதற்கு அறிகுறியோ என்று தோன்றியது. அதனால் அந்த 'வேறு எதுவுமில்லை' என்ற நினைப்பை அவள் அந்தரங்க மனது ஏற்றுக் கொள்ள மறுத்தது.

வகுப்புகள் ஆரம்பித்து விட்டன. பார்ட் டைம் ஜாப், வகுப்புகள், அதற்கான பாடங்கள், வீட்டு வேலை என்று

நெட்டி வாங்கியது. அதற்கு நடுவே கம்ப்யூட்டரைத் திறந்த போதெல்லாம் அரவிந்த் ஆன்லைனில் இருந்தான். அவன் வீட்டில் அவனுக்கென்று தனி அறை உண்டு என்பது அவளுக்குத் தெரியும். ஒரிரு முறை அவனைக் கூப்பிட்டு விட்டு, நான் சௌக்கியமாக இருக்கிறேன், வீட்டுக்குச் சொல்லிவிடு. நேரம் அதிகமில்லை அப்புறமாகப் பேசுகிறேன் என்று சொல். எல்லோரையும் மிஸ் பண்ணுகிறேன் என்றும் சொல்'' என்றெல்லாம் ஏதேதோ சொன்னாள். அவனும் தக்க பதில்களைத் தாண்டி எதுவும் பேச மாட்டான். எல்லோரையும் மிஸ் பண்ணுகிறேன் என்பதில் அவனுக்குத்தான் முதல் இடம் என்பதை அவன் புரிந்து கொண்டானோ என்றும் கவலைப் பட்டாள்.

வகுப்புகள் சூடு பிடிக்கப் பிடிக்க, வீட்டு மனிதர்கள், அரவிந்த் உள்பட எல்லா எண்ணங்களையும் தூரத் தள்ளிவிட்டுப் படிப்பில் மூழ்கினாள். ஒரு நாளில் இரண்டு முறையாவது தியானம் செய்து மனதை ஒருமுகப் படுத்திக் கொண்டாள்.

திவ்யா அமெரிக்கா கிளம்புமுன், ''ஒரு குரூப் போட்டோ எடுத்துண்டுடலாம். மொதமொதல்லே இவதான் படிக்கன்னு வெளி தேசம் போறாள். இனி ஒவ்வொரு குழந்தையாகப் படிக்க எங்கே போகுமோ'' என்று அதிகம் பேசாத பரிமளா பாட்டி சொல்ல ஒரு போட்டோ கிராபரை வரவழைத்து, ஐயாரப்பன் வீட்டில் ஒருவரைக் கூட விடாமல் நிற்க வைத்து போட்டோ எடுத்துக் கொண்டார்கள். திவ்யா குடும்பத்தினர் தனியாகவும் போட்டோ எடுத்துக் கொண்டனர். அமெரிக்கா வந்த புதிதில் ஐயாரப்பன் குடும்பங்களின் போட்டோவை



உள்ளே வைத்துவிட்டு தன் குடும்பத்தினரின் போட்டோவை மட்டும் வெளியில் வைத்தாள்.

ஆரம்பக் காலத் தனிமை உணர்ச்சியும், பயமும் போய் சற்று நிம்மதியாகப் படிக்கத் துவங்கினாள். ரூமில் ரூபாவும், காலேஜில் ஜயகர், ராஜ்கிரணும் நல்ல தோழர்களாக இருந்தனர். நெட் மூலம் வீட்டு மனிதர்களுடன் பேச முடிந்ததால் சற்று சௌகரியமாக உணர்ந்த திவ்யா, அரவிந்த் ஆன்லைனில் இருந்தாலும் ஆரம்ப நாட்களுக்குப் பிறகு அவனுடன் தனியே பேசுவதில்லை என்றிருந்தாள்.

மொத்தத்தில் அத்தனை பெரிய யூனிவர்சிடியில் அவளால் ஆசிரியர்களிடம் நல்ல மதிப்பு பெற முடிந்தது.

# 8

''ஆன்ட்டி, ஆன்ட்டி!'' என்று ப்ரதீப்பின் குரல் வெண்ணாறு வீட்டின் வாசலில் கேட்ட போது காலை 7 மணிதான் ஆகியிருந்தது. கல்யாணி வந்து பார்த்துவிட்டு ''வா! கண்ணா, வா!'' என்றாள். ''ஆன்ட்டி, உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமானால் சொல்லுங்க ஆன்ட்டி. செய்யறேன்'' என்றான்.

''என்னப்பா திடீர்ன்னு வந்து இப்படிக் கேக்கறியே! என்ன விஷயம்?'' என்று கல்யாணி கேட்டாள்.

''எங்க ஸ்கூலிலே மாரல் சயின்ஸுக்கு ஒரு புது டீச்சர் வந்திருக்காங்க. ரொம்ப ஸ்மார்ட்டாக இருக்காங்க. ஆன்ட்டி. அவங்க தினம் யாருக்காவது ஒரு உதவியாவது

எல்லோரும் செய்யணும்னு சொல்லியிருக்காங்க. ஆன்ட்டி. இந்த வீட்டில்தான் நம்ம ஐயாரப்பன் காம்பௌண்டிலேயே வயதான பாட்டி இருக்காங்க. அதுதான் கேட்க வந்தேன். பாட்டி எங்கே?'' என்று அவன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே பொன்னிப் பாட்டி அங்கு வந்து விட்டாள்.

ஆமாம், அவள் சிலருக்குப் பாட்டி. வேறு சிலருக்கு அத்தை சுந்தராம்பாவுக்கு அக்கா. எப்படிக் கூப்பிட்டாலும் அவளுக்கு சரிதான்.

ப்ரதீப் சொன்னதைக் கேட்டுக் கொண்டே வந்த அவள் ''எங்களுக்கெல்லாம் என்னடா ஒத்தாசை வேணும்? குழந்தைகள் நீங்கள் எல்லோரும் நன்றாகப் படிக்கணும். பெரிய வேலைக்குப் போகணும். நல்லவளா இருக்கணும் அவ்வளவு தான். வேறு என்ன ஒத்தாசை நீங்களெல்லாம் எங்களுக்குச் செய்ய முடியும்?'' என்று கேட்டாள்.

''இல்லை பாட்டி! இன்னிக்கு நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்து விட்டுத்தான் போவேன்'' என்றான் ப்ரதீப்.

அப்படியா, சரி! இன்னிக்கு ஆப்பமும், தேங்காய்ப் பாலும் பண்ணியிருக்கேன், இதைச் சாப்பிடு'' என்றாள்.

''என்ன பாட்டி! இப்படிச் சொன்னால் எப்படி? நான் சாப்பிடறேன். ஆனா இந்த டி.வி. ஸ்டாண்டையும் அந்த டேபிளையும் ஒழித்து துடைத்து வைத்து விட்டுதான் போவேன்'' என்றவன் முதலில் டி.வி. மேலே வைத்திருந்த கண்ணாடி பூஜாடியைத் தூக்கினான்.

''டமால்'' அவன் கையிலிருந்த ஜாடி கை நழுவிக் கீழே விழுந்து நொறுங்கியது. ஒரு நிமிடம் நடுநடுங்கிப் போன ப்ரதீப் சுவரோரமாய் பம்மிப் போய் நின்றான். பயத்தில் அழுது விடுவான் போல் இருந்தது.



''சரி, சரி! இன்னிக்கு அதுக்குப் போக வேண்டிய நேரம். நீ எதுக்குப் பயப்படறே? இந்தா, தேங்காய்ப் பாலைச் சாப்பிட்டு விட்டு ஸ்கூலுக்குப் போற வழியைப் பார்'' என்றாள் கல்யாணி.

''ஸாரி, ஆன்ட்டி! நான் வேணும்ன்னு செய்யல்லே, கை தவறி கீழே விழுந்துடுச்சி. என்னை மன்னிச்சுடுங்க, ஆன்ட்டி'' என்றான் கேவியபடியே.

''வேணும்னு யாராவது எதையாவது கீழே போட்டு உடைப்பாங்களா? போனாப் போகுது. நான் உங்க வீட்டுல சொல்ல மாட்டேன். கவலைப் படாம போ, கண்ணா'' என்றாள் பொன்னி.

''நான் கண்ணடியைப் பெருக்கி அள்ள ஒத்தாசை செய்யறேன் பாட்டி'' என்று ஆரம்பித்த அவனை ஒருமுறை முறைத்த பொன்னி ''நீ ஒத்தாசை செய்தது போதும். இப்போ கைலே கால்லே கிளாஸ் குத்தி அது வேற பிரச்னையாகணுமா? நீ ஸ்கூலுக்குக் கிளம்பற வழியைப் பாரு'' என்றாள்.

''பகவானே, யார் அந்த புது டீச்சரோ, இது தொடராம இருக்கணும்'' என்று சொல்லிக் கொண்டே கேஸரோலில் செய்து வைத்திருந்த ஆப்பத்தைச் சாப்பிட உட்கார்ந்தார்கள் அத்தையும், மருமாளும்.

''இந்த காம்பௌண்டில் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு ரகம், இல்லையா, அத்தை?'' என்று கேட்டாள் கல்யாணி.

''ஆமாம்மா! நேத்திக்குக் கூட தேவிகா'' இந்த ராஜேந்திரனைப் பத்தி கவலையாக இருக்கு. அரவிந்தனால் அத்தனை நன்றாகப் படிக்கிறான். இவன் என்னமோ ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்ன நடக்குமோ''

என்று ரொம்ப வருத்தப்பட்டாள். பரிமளாவிற்கானால் பேத்தி இன்னும் பெரியவளாக வில்லையே என்ற கவலை'' என்றாள் பொன்னியத்தை.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த ராமனாதன் ''என்ன கலா! யாரைப் பற்றிக் கவலை?'' என்று கேட்டான்.

கேட்டும் கேட்காததுபோல் உள்ளே போய்விட்டாள் கல்யாணி. அத்தையை வைத்துக் கொண்டு என்ன சொல்லுவாள் அவள்?

ராமனாதன் விடவில்லை. ''என்ன அத்தை. இப்போ யார் கவலை உங்க இரண்டு பேருக்கும்?'' என்றான்.

''எதற்குப்பா இவ்வளவு பிடிவாதமாகக் கேக்கறே'' என்று கேட்டாள் பொன்னியத்தை.

''நான் ஒரு கவலையை வைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தால் நீங்களும் ஏதோ கவலை என்று பேசிக் கொண்டிருக்கிறீர்களே.''

''அட ராமா! உனக்கென்னப்பா கவலை இப்போ?''

''நீங்க சொல்லுங்க அத்தை. அப்புறமா நான் சொல்றேன்'' என்றான் ராமனாதன்.

''ஒண்ணுமில்லேப்பா, இந்த வீணா இருக்கா இல்லையா, அவளைப் பத்தித்தான் பேசிக் கொண்டிருந்தோம்.

''யார், நம்ப கணேசன் அண்ணா பெண் வீணாதானே? என்ன ஆச்சு வீணா குட்டிக்கு?

''பிரச்னை அவளுக்குத்தான்.''

''என்ன அத்தை, புரியவில்லையே! ஏதாவது லவ் மேட்டரா? ஸ்கூலுக்கு மட்டம் போட்டுறாளாமா? விவரமாகத்தான் சொல்லுங்களேன்.''

''விவரம் என்ன விவரம்? நீ இப்போ சொன்னியே வீணா குட்டின்னு. அதுதான் பிரச்னை.''



''அவள் இன்னும் குட்டியாகவே இருக்கிறாளே, அது தான் கவலை'' என்றாள் உள்ளிருந்து வந்த கல்யாணி.

''இல்லையே, அவள் நன்றாக உயர்ந்திருக்கிறாளே, காவ்யாவும் அவளும் ஒரே உயரம்தான். காவ்யா இவளை விடப் பெரியவள், இல்லையா?''

''இல்லேப்பா, இவள் இன்னும் பெரியவளாகவில்லை. 10-ம் கிளாஸ் வந்துட்டாளே! இப்போவெல்லாம் பெண்கள் 10 வயசிலேயே மெச்சூராகி விடுகிறார்கள். இவளுக்கு 18 முடியப் போகிறது.''

''18-ஆ?''

''ஆமாம், அவளுக்கு சின்ன வயதில் உடம்பு சரியில்லாமல் போனதாலே லேட்டாகத்தான் ஸ்கூலில் சேர்த்தா. அதுதான் 18 வயதில் 10-ம் கிளாஸ்.''

''அடப் பாவமே! எனக்குப் புரியவேயில்லை, பாரு! அவளை டாக்டர்கிட்டே கூட்டிப் போனாங்களா, அத்தை?'' என்றான் ராமனாதன்.

''இத்தனை கவலைப்படறவங்க கூட்டிப் போகலாமா இருப்பாங்க? எல்லாம் நார்மலாகத்தான் இருக்கு. சீக்கிரமே எதிர்பார்க்கலாம்னு டாக்டர் சொல்லியே வருடக் கணக்கில் ஆகிறது. தெய்வம் தான் கண் திறக்கணும், பாவம் பரிமளா! இப்போதெல்லாம் வாயைத் திறந்தா இதே புலம்பல்தான். சரி, நீ என்னவோ கவலைன்னியே! என்னப்பா அது?''

''அப்புறமா சொல்றேனே, அத்தை!'' என்றார் ராமனாதன்.

''சொல்லலாமானால் சொல்லுப்பா, ஏதாவது ஆபீஸ் பிரச்னையா?'' என்று கேட்டாள் பொன்னியத்தை.

''இது அநியாயம். எங்களை எல்லாம் என்ன கவலைன்னு கேட்டீங்க. நாங்கள் சொல்லலையா? நீங்க மட்டும் முழுக்கிக்கிறீங்களே!'' என்றாள் கல்யாணி.

''இல்லேம்மா, இது ஆபீஸ் சம்பந்தப்பட்டதெல்லாம் இல்லை. நம்ப ஐயாரப்பன் வீட்டு மனிதர்கள் கவலை தான்'' என்றான் ராமனாதன்.

''என்னப்பா, என்ன ஆச்சு? இப்பத்தான் ஒரு புயல் அடிச்சு ஓய்ஞ்சிருக்கு. அடுத்தது என்ன?''

''ஏன் அத்தை இப்படி பதட்டப் படுறீங்க? சொல்லிட றேன். ஆனால் நிச்சயமா இப்போ நம்ப மூணு பேர்களுக் குள்ள மட்டும் இருக்கட்டும் இந்த விஷயம்.''

''ஆகட்டும், சொல்லுப்பா.''

''நம்ப ரங்கராஜன் பிள்ளை ராஜேந்திரன் இல்லே, அவனைப் பத்தித்தான்'' என்று ராமனாதன் சொல்லவும், ''என்ன ஆச்சு அவனுக்கு?'' என்று கவலையுடன் கேட்டனர் அத்தையும், கல்யாணியும்.

''அவனை எங்க ஆபீஸ் பக்கத்திலே ஒரு இடம், பார்க்கக் கூடாத இடம், அங்கே இரண்டு, மூன்று தடவை பார்த்துட்டேன். அது ஒரு பார். டிஸ்கொதேயும் உண்டு. நேத்து மூணாம் தடவை அங்கே பார்க்கவே நானும் துணிந்து உள்ளே போனேன். எல்லாரும் தண்ணியில் இருந்தாங்க Drug. கன்னாபின்னா டான்ஸ்னு இருந்தது. எனக்கு வந்த பதற்றத்தில் உடனே அங்கிருந்து வந்துட் டேன். ரொம்ப சுலபமாக அவன் அப்பாவிடம் சொல் லிட்டு ஒதுங்கிடலாம். ஆனா, அதனாலே அவன் உருப் படுவானா? எனக்கு அப்படித் தோணல்லை. அவன் அப்பாகிட்டே சொன்னா அவர் அவனை போட்ட அடித்து துவைத்தெடுப்பார். அதனால் அவன் இன்னும் முரட னாவான். இன்னும் தப்புக்கு மேல் தப்பு செய்வானே தவிர பலிதம் ஏதும் இருக்காது.''

''ஐய்யோ! ரங்கராஜனும், தேவிகாவும் ரொம்பவும் நல்லவர்கள். அவர்களுக்கு இப்படி ஒரு கவலையை



எதற்கு ஆண்டவன் தருகிறான்? ஆனால் இந்த விஷயத் தில் நாம் என்ன செய்ய முடியும்?'' என்றாள் பொன் னியத்தை மிகுந்த கவலையுடன்.

''இல்லையத்தை! கூடுமான வரை அவங்ககிட்டே சொல்லாமே வேறே ஏதாவது வழியில் அந்தப் பையனை மீட்க வேண்டும். பாவம் இந்த விஷயத்தைப் பத்தி கேள்விப்பட்டா அவன் அப்பா, அம்மா இரண்டு பேருமே மனசொடிஞ்சு விடுவாங்க. நீங்க ஸ்வாமியை வேண்டிக் கோங்கோ அத்தை'' என்ற ராமனாதன் மறுபடியும் அவர் களை இந்த விஷயம் நமக்குள்ளேயே இருக்க வேண்டும் என எச்சரித்தான்.

''இந்த விஷயத்தைப் பத்தி நாம் தனித்தனியாக யோசிப்போம். பெருமாள் ஒரு நல்ல வழியைக் காட்டு வார். சரி, கல்யாணி! சாப்பிடலாமா? தட்டு வையேன்'' என்றான் ராமனாதன்.

மூவருமாக உட்கார்ந்து சாப்பிட்டவுடன், கல்யாணி சமையலறையை சுத்தம் செய்ய பொன்னியத்தை சற்று வெளியே நடக்கப் போனாள். காம்பௌண்டிற்குள்ளேயே ஒரு நாலு சுத்து சுத்தினால்தான் அவளுக்கு படுக்கச் சரிப்படும். இவள் வெளியே நடப்பதைப் பார்த்ததும் சுந்தராம்பாவும் வந்து சேர்ந்து கொண்டாள். நிறைய நாட்களும் இருவரும் சேர்ந்துதான் நடப்பார்கள். பொதுப் படையாகப் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

பிறகு சுந்தராம்பாவே ''பரிமளாவைப் பார்த்தாலே பாவமா இருக்கு. இல்லையா?'' என்றாள்.

''ஆமாம் சுந்தரா, இப்போ கூட அதைப் பத்தித்தான் பேசிட்டிருந்தோம் வீட்டில. பாவம்'' என்று அங்கலாய்த் தாள் பொன்னி.

''எனக்கு ஒரு உபாயம் தெரியும். ஆனால் சொல்லத் தான் யோசனையாக இருக்கு'' என்றாள் சுந்தராம்பா.

''என்ன ரொம்ப செலவாகுமோ? அவங்களுக்கு இப்போ இருக்கிற கவலையில் அதைப் பத்தியெல்லாம் கவலைப்பட மாட்டாங்க'' என்று பொன்னி தானே கேள்வியும் கேட்டு பதிலும் சொல்லிக் கொண்டாள்.

''அதில்லை'' என்று சுந்தரா ஆரம்பிக்குமுன், வரதன் மெயின் கேட்டைப் பூட்ட வந்து விட்டார். அது தினமும் அவர் வேலை. சுந்தராம்பாவும் பொன்னியும் ''சரி, நாளை பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டு அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.

## 9

மறுநாள் மாலை தினம்போல் 3 மணிக்கு சரியாக இருவரும் சிமெண்ட் பெஞ்சில் ஆஜர். அடுத்தது பரிமளாவும் வர மூவருமாக சற்று நேரம் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பரிமளா கேட்டாள். ''என்ன பொன்னி, கூப்பிட்டியாமே?''

''ஆமாம், சில நாள் நீ வராமல் இருப்பே. அதுக்குத் தான் கூப்பிட்டேன்'' என்றாள் பொன்னி.

இந்த மூன்று பெண்மணிகளில் யார் பெரியவரோ, யார் சின்னவரோ தெரியாது. சுந்தராம்பா பொன்னியை அக்கா என்பாள். சுந்தராம்பாவைப் பொன்னி வா, போ என்பாள்.

''என்ன விஷயம், சொல்லேன் சுந்தரா!'' என்றாள் பரிமளா.

''நீ உன் பேத்தி பெரியவளாகவில்லைன்னு புலம்பிக் கொண்டிருக்கியே. ஒரு உபாயம் இருக்காம். சுந்தரா



சொல்லறா. அதையும் தான் கேட்போமேன்னுதான் கூப்பிட்டேன்.''

சுந்தராம்பா தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''எங்கள் ஊர் தேனி பக்கத்திலே கருப்பம்பட்டின்னு தெரியுமில்லையா? அதுலே...'' என்று சொல்லத் தொடங்கும் போது அங்கு ப்ரதீப் வந்து விட்டான். ''உனக்கு இங்கே என்னடா வேலை? பேச்சுக் கேக்க வந்தியா, பெரியவா பேசும்போது?'' என்று கண்டித்தாள் பரிமளா.

''ஐய்யோ, பாட்டி! நான் எதுக்கு உங்க பேச்சைக் கேக்கப் போறேன். இன்னிக்கு யாருக்கும் உதவி செய்யல்லையேன்னுட்டு வந்தேன். உங்களுக்கெல்லாம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

''போதும்டா, நீயும் உன் உதவியும்'' என்று பரிமளா கோபிக்க, ''ஒண்ணும் சொல்லாதே அவனை. ஏதோ நல்லதைக் கேட்டுவிட்டு அதை அப்படியேச் செய்ய நினைக்கிறான்.. விடு. ப்ரதீப், இப்போ வேண்டாம், கொஞ்ச நாழி கழிச்சுக் கொண்டாடா, கண்ணா, என்ன சரியா?'' என்றாள் சுந்தரா.

''சொல்லு சுந்தரா, என்ன உபாயம் அது? எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற நிலையில் இருக்கோம். சொல்லு'' என்றாள் பரிமளா.

''இது கொஞ்சம் நம்பக் கஷ்டமானது. செய்யவும் கஷ்டமானதுதான். அதுதான் கொஞ்சம் தயக்கமாக இருக்கு. சொல்ல'' என்றாள் சுந்தரா.

''ஏதானாலும் சொல்லு, பரவாயில்லை. சௌகரியப்பட்டால்தானே பண்ணப் போறோம்'' என்றாள் பொன்னி.

''அதுதான் சொல்ல வந்தேன். எங்க ஊர் தேனிக்குப் பக்கத்திலே ஒரு இருபது மைல் தூரத்திலே இருக்கு-

அந்தக் கிராமம் கருப்பம்பட்டின்னு பேர் சொன்னேன் இல்லையா, அது 'கருப்பாயிப்பட்டி'ங்கறதிலேந்துதான் மாறி வந்ததுன்னு சொல்லுவா. அங்கேயிருக்கிற அம்மன் கோவில் பூசாரிதான் இதுக்கு மருந்து கொடுப்பார். அங்கே போய் இருந்துதான் மருந்து சாப்பிடணும்.''

''அப்படியா, எத்தனை நாள் இருக்கணும்?'' என்று கேட்டாள் பரிமளா.

''16 நாள்'' என்று சுந்தரா சொன்னதும், ''ஐயோ, அத்தனை நாளா?'' என்று பதட்டமாகக் கேட்டாள் பரிமளா.

''ஆமாம், அத்தனை நாள்தான். ஆனால் நிச்சயமாகப் பலிதம்னு சொல்றதாலே முயற்சி பண்ணலாம்னுதான் தோணுது'' என்றாள் சுந்தரா.

''சரி, பாக்கியையும் சொல்லு'' என்று கேட்டாள் பரிமளா.

''அந்த பூசாரியும் குடும்பஸ்தர்தான். அவருடைய அம்மா, பொண்டாட்டி 2 பெண்களோட கோவிலின் அடுத்த வீட்டில் தான் இருக்கார்.

''உனக்கு இத்தனை விவரம் எப்படித் தெரியும்'' என்று கேட்டாள் பொன்னி.

''அதுவா, என் அக்கா பேத்திக்கு இந்தப் பிரச்னை இருந்தது. இவளுக்காவது 18. அவளுக்கு 21 வயதாகிவிட்டது. ஆனாலும் அங்கு போய் அந்தப் பெண் பெரியவளா ஆகி விட்டாள். அதனால்தான் எனக்கு நம்பிக்கை. அவள் அப்பா பெரிய பணக்காரர். அவர்தான் அங்கு வைத்தியத்துக்குப் போறவங்களுக்கு தங்க வசதியா ஒரு விடுதி கட்டிக் கொடுத்திருக்கார். எல்லா சௌகரியத்துடனும் இருக்கு இதில முக்கியமான விஷயம் அங்கு அந்தப் பெண்ணோடு அவளுடைய அப்பா, அம்மா தங்கக் கூடாது.''

''இது என்ன அதிசயமாக இருக்கு?''



''ஆமாம். அது மட்டுமில்லை. நாம முன்னாடியே சொல்லி வெச்சிருந்தா, அமாவாசை கழிந்த வெள்ளிக்கிழமை பூசை போட்டு அம்மனிடம் உத்தரவு வாங்குவார். எப்ப வாவது உத்தரவு கிடைக்காமலும் போகும்னு சொல்றதுண்டு. உத்தரவு கிடைத்ததும் நாம் அங்கு போய் இருக்கணும். 16வது நாள் பெண் பெரியவளாவது சர்வ நிச்சயம். அதன் பின் அந்த பெண்ணோட அப்பா, அம்மா போய் அம்மனுக்கு சிகப்பு புடவை சாத்தி பூசை செய்துவிட்டுத் திரும்பி விடலாம். இந்த 16 நாட்கள் அவர்களும் அசைவம் சாப்பிட மாட்டார்கள். அந்த பெண்ணும் கூட இருப்பவர்களும் கூட சாப்பிடக் கூடாது. கட்டணமெல்லாம் ரொம்ப அதிகமில்லை. 500 ரூபாயோ 1000 ரூபாயோ அவரவர் இஷ்டப்படி கொடுக்கறதுதான். ஒண்ணும் கட்டாயப் படுத்தறதில்லை'' என்று சொல்லி முடித்தாள்.

''கொஞ்சம் கஷ்டமான வைத்தியமாத்தான் தெரியறது. ஆனா அலோபதி டாக்டர்களிடம் நிறையக் கூட்டிப் போயாகி விட்டது. ஒண்ணும் பிரச்னை இல்லைன்னு சொல்லியே இரண்டு வருஷத்துக்கு மேலாகி விட்டது ஒரு பிரயோஜனமும் காணும். நீ இவ்வளவு தூரம் சொல்றதனாலே பாக்கலாம்னுதான் தோணுது. ஆனால் வீட்டிலே எல்லோரும் என்ன அபிப்ராயப்படுவாங்களோ தெரியல்லே! வீணாவிற்கு நான் இருந்தால் போதும், ஆனா வெளியூரில் போய் இருக்கணும்னா அதுவும் 15 நாள்னா, அவள் என்ன சொல்றாளோ'' என்றாள் பரிமளா, கூடவே, ''ஆமாம், தாத்தா, பாட்டி கூடப் போய் இருக்கலாமா, சுந்தரா?'' என்றாள்.

''அம்மா, அப்பாவைத் தவிர யார் வேணுமானாலும் இருக்கலாம். முதல்லே பூஜைக்கு அம்மா, அப்பாவும் போய்ட்டு அங்கே வசதியெல்லாம் எப்படின்னு பாத் துட்டு வரலாம். ஆனால் நீ போய் இருக்கலாம்னு நினை

கிறையா? உன்னால் முடியுமா? உன் வீட்டுக்காரர் வருவாரா? எல்லாம் யோசியுங்க. நீங்கதான் போக வேண்டியிருக்கும்.''

''சரி, பார்க்கலாம் சாதாரணமாக ஜயந்தி நியாயமாக எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்பவள்தான். ஆனாலும் என் மாட்டுப் பெண் என்கிறதாலே என் அபிப் ராயம் எல்லாம் நான் அவள் மீது திணிக்க முடியாது. அவள் படித்து காலேஜ் லெக்சரராக இருப்பவள். பேசிப் பார்க்கிறேன். ஏதாவது செய்யத்தானே வேணும்.''

இவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ப்ரதீப் கையில் ஒரு ட்ரேயில் மூன்று பேருக்கும் டீ எடுத்து வந்தான்.

''ரொம்ப தேங்க்ஸ்டா, கண்ணா! யார் போட்டுக் கொடுத்தா?'' என்று கேட்டாள் சுந்தரா.

''தாத்தாதான் 'அங்கே பேசிக் கொண்டிருக்கும் மூன்று ஓல்ட் லேடிஸுக்கும் கொடு' என்று போட்டுக் கொடுத்தார்'' என்று சொல்லிச் சிரித்தான்.

எல்லோரும் சிரித்தபடி டீயை அருந்தினர். ''டேய், தாத்தாவுக்கு 100% மார்க்ன்னு சொல்லிடுடா'' என்றவாறே எழுந்தாள் சுந்தரா. மற்றவர்களும் எழுந்து அவரவர் வேலையைப் பார்க்க நகர்ந்தனர்.

பொன்னி வீட்டிற்குப் போனால் ராமனாதன் கவலையோடு உட்கார்ந்திருந்தான். ''என்ன விஷயம், ராமனாதா?'' என்று விசாரித்தாள். இவளுக்கு கல்யாணி தான் வளர்த்த மருமாள், ராமனாதன் அவள் கணவன், மாப்பிள்ளை என்ற பெயர் தானே ஒழிய, ராமனாதனுக்கு இவள் மேல் ரொம்ப அபிமானம், மரியாதை. தவிர அவரும் இவளுக்கு தூரத்து உறவு என்பதாலோ என்னவோ அந்த வீட்டில் அவளைப் பொருத்தவரை ராமனாதன் பிள்ளை. கல்யாணி பெண் என்பது போலத்தான் ஒரு பாவம் நிலவியது. சிநேகிதர்களிலும் அவன்தான்



சின்னவன் எனவே எல்லோரிடமும் அவன் மரியாதையாக இருப்பான். அவரிடமும் சற்று அதிகப் பிரியமாகவேதான் மற்றவர்களும் இருப்பார்கள்.

இவள் என்ன விஷயம் என்று கேட்டவுடன், ராமனாதன் வாயைத் திறக்கவில்லை. கல்யாணியும் வந்து தூண்டித் துருவி கேட்ட பின் விஷயம் வெளியே வந்தது. இன்று காலை ஆபீசுக்குப் போகும்போது ராஜேந்திரனை மறுபடியும் அந்த பார் அருகே பார்த்தாராம். 'இதென்ன, காலேஜ் நேரத்தில் இப்படி சுற்றுகிறானே' என்று குழம்பிப் போய் அவனுடன் பேச நினைக்கையில் இவரைப் பார்த்துவிட்ட ராஜேந்திரன் அவன் நண்பனுடன் ஒரு மோட்டார் சைக்கிளில் சிட்டாகப் பறந்து விட்டானாம். அந்தப் பையனைப் பார்த்தாலே நன்றாகக் குடித்திருப்பது தெரிந்ததாம். நல்ல படியாக வீடு வந்து சேரணுமே. இன்னும் மேல் கொண்டு அவன் பத்திரத்திற்கு என்ன வழி என்றெல்லாம் புலம்பித் தீர்த்து விட்டார்.

''இதோ பார்! நீ தெரிஞ்சு அவன் அப்பாகிட்டே சொல்லாம இருந்தா அது தப்புதான். ரங்கராஜன் சாதாரணமா கலகலன்னு ஜோக் அடித்துப் பேசிச் சிரித்துப் பழகக் கூடியவர்தான். ஆனால் இந்த மாதிரி தப்பு தண்டான்னா தோலை உரிச்சுடுவார். அது வேலைக்காகாது. யோசிச்சுத் தான் இந்தப் பிரச்னையைச் சமாளிக்கணும். நீ வந்து ஏதாவது சாப்பிட்டாயாப்பா?'' என்று ஆதரவாகக் கேட்டாள் பொன்னி.

''டீ குடிச்சேன். ஆனா இதைப் பற்றி யோசிச்சு, யோசிச்சு தலையே பாரமாக இருக்கு. நான் சற்று காலார நடந்துட்டு வரேன்'' என்று கிளம்பினார் ராமனாதன்.

''கல்யாணியையும் அழைச்சிண்டு போப்பா'' என்றாள் பொன்னி.

''இல்லை, நான் தனியாவே போறேன்'' என்று
சொல்லிப் புறப்பட்டான்.

வெளியில் வந்தவன் கொஞ்ச தூரம் நடந்து பெருமாள்
கோவிலுக்குப் போனான். தரிசனம் முடிந்து இரண்டு
பிரதட்சணம் செய்து விட்டு பிரகாரத்தில் இருந்த மரத்
தடியில் உட்கார்ந்தான் தன் மனதிலிருந்த பிரச்னையை
எப்படி எவர் மனமும் புண்படாதபடி தீர்வு காண்பது
என்பது பற்றித் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

பின்னாலிருந்து யாரோ அவர் தோளைத் தொட்டதும்
தூக்கிவாரிப் போட்டது அவருக்கு. திரும்பிப் பார்த்தால்
சீனிவாசன் நின்று கொண்டிருந்தார். சூப்பர் மார்க்
கெட்டில் எவ்வளவு வேலை இருந்தாலும் புதன் மாலை
யென்றால் கண்டிப்பாகக் கோவிலுக்குப் போவதை
வழக்கமாகக் கொண்டிருந்தார்.

''என்னப்பா ராமனாதா, ரொம்ப ஓய்ந்து போய் உட்
கார்ந்து இருக்கே, எனி பிராப்ளம்?'' என்று கேட்டார்
சீனிவாசன்.

''ஒண்ணுமில்லையே, அண்ணா'' என்று கூறிய ராம
னாதனை உற்றுப் பார்த்த சீனிவாசன், ''ஏய் உன் முகம்
அப்படிச் சொல்லலியேப்பா! ஏதோ பெரிய பிராப்ளம்
போலிருக்கு. நீ இல்லைன்னா ஆச்சா? இன்னும் உனக்குக்
குழந்தை பிறக்காத வருத்தம்தான் என்றால், கவலையே
படாதே. கும்பகோணம் கச்யப ஜோஸ்யர் வாக்கை நினைச்
சுக்கோ அவர் சொல்லி யாருக்குமே தவறியதில்லை.
உனக்கு லேட் மேரேஜ். ஆனாலும் அப்படி என்ன உங்க
இரண்டு பேருக்கும் வயசாயிடுத்து? நம்பிக்கையோடு
இரப்பா?'' என்று தொடர்ச்சியாகப் பேசினார்.

''இல்லைண்ணா, அதில்லை ஆனா என் மனசிலிருக்
கும் பிரச்னைக்கு யாராவது பதில் சொன்னால் நன்னா



இருக்கும். யாரிடம் சொல்லித் தீர்வு காண்றதுன்னுதான்
யோசிச்சிண்டிருக்கேன்.''

''ஏய், ராஜேந்திரனை எங்கேயாவது பாத்தியா என்ன?''
திடீரென்று கேட்டார் சீனிவாசன்.

''என்ன அண்ணா சொல்லி வெச்ச மாதிரி கேக்கறீங்க.''

''ஏன்னா நானும் இரண்டு நாளா அதே நினைவிலே
இருக்கறதனாலேதான் கேட்டேன். என்ன செய்யலாம்
சொல்லு. ரங்கராஜனிடம் சொன்னால் பெல்ட் பிஞ்சுடும்.
ஆனா இதை இப்படியே விட்டா பையன் உருப்படு
வானா என்கிறது சந்தேகம் தான். இந்த விஷயத்தை
கொஞ்சம் நாசுக்காகத்தான் அணுகணும். யோசிக்கலாம்.
வா, எழுந்திரு போகலாம்'' என்றார் சீனிவாசன்.

''அது சரி, நாம யோசித்து ஏதாவது செய்யறதுக்குள்ள
அவனுக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாதில்லையா? எதுக்கு
சொல்றேன்னா, இன்னிக்குக் கார்த்தால அவனைப்
பாக்கறச்சே ஒரு குடிச்சிருந்தவன் பின்னாடி உட்கார்ந்து
டூவீலர்ல போனான். ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு
ஆகறதுக்குள்ள நாம ஏதாவது செஞ்சு அவனைக் காப்
பாத்தணும், அண்ணா!''

''சரிப்பா, நீ சொல்றதும் சரிதான். சீக்கிரமே ஏதாவது
செய்யலாம். என் நினைப்புப்படி பார்த்தா, அவனைக்
கூப்பிட்டுக் கேட்டா தான் தப்பு பண்ணிக் கொண்டிருப்ப
தையும் ஒத்துக்க மாட்டான், அந்தத் தப்பை விடவும்
மாட்டான். வேறு ஏதாவதுதான் செய்யணும். இன்னிக்குத்
தான் நான் பார்த்தேன். என் முதல் அதிர்ச்சி மாறட்டும்.
ராத்திரி குல தெய்வத்தை வேண்டிக் கொண்டு படுப்
போம். தானே நாளைக்கு வழி காண்பிப்பார். இப்போ நீ
வா, வீட்டிற்குப் போகலாம்.''

ராமனாதனுக்கு அதற்கு மேல் பேச ஒன்றும் இருக்க
வில்லை. இருவரும் மௌனமாக நடக்க ஆரம்பித்தனர்.

# 10

அன்றைக்கு ஒரு வேலை நாள். காலை மணி 12. நல்ல வெயில். ஐயாரப்பன் வீட்டு காம்பவுண்டில் யாரோ காலிங் பெல் அடித்தார்கள்.

அந்த காம்பௌண்டின் ஐந்து வீடுகளுக்குமே இண்டர் லிங்க்டு காலிங் பெல் கனெக்‌ஷன் இருந்ததால் யார் வீட்டில் மணி அடித்தாலும் எல்லார் வீட்டிலும் மணி அடிக்கும் சப்தம் கேட்கும். அந்த காம்பௌண்டில் அநேகமாக எல்லா ஆண்களும் பகல் நேரத்தில் வீட்டில் இருப்பதில்லையாதலால், ஒரு பாதுகாப்பிற்காக இந்த ஏற்பாடு செய்திருந்தார்கள். வீட்டு வேலை ஆகி சூப்பர் மார்க்கெட் போய் தன்னாலான உதவியைச் செய்வோம் என்று புறப்பட்டுக் கொண்டிருந்த நளினி கேட்டில் இருந்த ஜன்னலைத் திறந்து பார்த்தாள். வாசலில் ஒரு ஆணும், இரண்டு பெண்களுமாக நின்றிருந்தனர். கையில் ஒரு அட்டையில் பேப்பர்கள் சகிதம், தோளில் குத்திய பெயர் அடையாள அட்டையுடன் இருக்கவே கதவைத் திறந்தாள்.

''சென்ஸஸ் எடுக்கறோம்மா. இந்த காம்பவுண்டில் இருக்கறவங்க பத்திய விவரம் தேவை'' என்றார் அந்த ஆண். அதற்குள் காவேரி வீட்டிலிருந்து வரதன் வந்து விட்டார். இவர்கள் சென்ஸஸ் எடுக்க வந்திருக்கிறார்கள் எனத் தெரிந்ததும், அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தவர், திருப்தியாக அவர்களைத் தன் வீட்டின் வராண்டாவில் உட்கார வைத்தார். அதற்குள் பரிமளா குடிக்க தண்ணீர் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தாள்.



''நீங்க சொன்னா நாங்க குறிச்சிண்டு மத்த வீடு களுக்குப் போவோம்'' என்றாள் கூட வந்திருந்த பெண்.

''நானே 6 வீட்டின் உறுப்பினர்கள் விவரம் எல்லாம் சொல்லிவிடுகிறேன்'' என்று வரதன் சொல்ல அவர்கள் சந்தேகமாய் நளினியைப் பார்த்தனர். அதற்குள் அங்கு வந்த கல்யாணி, ''ஆமாம்! மாமாவே எல்லா விவரமும் சொல்லி விடுவார். எங்கள் எல்லார் வீட்டிற்குமே அவர்தான் பெரியவர்'' என்றாள்.

''சரி சார்! முழுக்க விவரமாகச் சொல்லுங்க. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், எல்லோருடைய வயது வேலை முதலிய எல்லா விவரமும் தேவை. சொல்றீங்களா?''

''இங்கு ஆறு வீடுகள். ஆனா குடித்தனம் ஐந்துதான். முதல் இரண்டு வீட்டிற்கும் சேர்த்து 'காவேரி' என்று பெயர். இதில் எங்க குடும்பம் இருக்கு. நான், வரதன், வயது 79, ரிடையர்டு டீச்சர் என் மனைவி பரிமளா, வயது 76. எங்கள் ஒரே பிள்ளை கணேசன், வயது 57. அவன் எல்.ஐ..சி.யில் சீனியர் மேனேஜராக இருக்கிறான். அவன் மனைவி ஜயந்தி வயது 53, காலேஜ் லெக்சரரா இருக்கா. அவங்களுக்கு இரண்டு பிள்ளைங்க ஒரு பொண்ணு. பெரியவன் விஜய், வயது 34, எம்.டெக் படிச்சுட்டு ஸாப்ட் வேர் இஞ்ஜினியராக இருக்கான். அவனுக்குக் கல்யாணம் ஆயிடுத்து. அவன் மனைவியின் பெயர் ஷோபா. வயது 30. அவள் ஒரு ஃபைனான்ஸ் கம்பெனியிலே ஆபீசர். அவங்களுக்கு ஒரே பையன். ப்ரதீப் என்று பெயர் வயது 10. சின்னவன் விவேக், வயது 28, எம்.ஏ. படித்திருக்கிறான். ஸேல்ஸ் ரெப்பாக இருக்கான். இவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. கணேசனுக்கு ஒரே பெண் பெயர் வீணா, வயது 18, 10ம் வகுப்பு படிக்கிறா. இவ்வளவுதான் என் குடும்பம். எங்கள் குடும்பத்தில் மொத்தம் 9 பேர்.

அடுத்ததா இருக்கிற வீடு 'வடவாறு' வீட்டிற்குச் சொந்தக்காரர் சீனிவாசன். வயது 54, அவர் ஒரு சூப்பர் மார்க்கெட் வெச்சுருக்கார். அவர் மனைவி பெயர் லக்ஷ்மி, வயது 48, ஹவுஸ் ஒய்ஃப். இவங்களுக்கு மூணு பொண்ணுங்க. பெரியவ பேர் திவ்யா, வயது 23, வெளிநாட்டில் படிக்கிறாள். அடுத்தவள் ரம்யா வயது 20, மூணாவது காவ்யா, வயது 18. இவர்கள் இருவரும் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ். எவருக்கும் இன்னும் கல்யாணம் ஆகல்லை.

எதிர்சாரியிலே முதல் வீடு 'வெண்ணாறு' ஓனர், ராமனாதன். அவர் வயது 43. ஸ்டேட் கவர்ன்மெண்ட்லே ஆபீஸராக இருக்கார். அவர் மனைவி பெயர் கல்யாணி, வயது 35. குழந்தை இனிமேதான் பொறக்கணும். கல்யாணியின் அத்தை பொன்னி, வயது 74'' வரதன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையிலே அவர்கள் வீட்டு போன் மணி அடித்தது. போனை எடுத்துப் பேசிய பரிமளா ''என்னங்க, உங்களுக்குத்தான் போன், பேசிட்டு வாங்க, பாக்கியை நான் சொல்றேன் இவங்களுக்கு'' என்றாள்.

எதிர்சாரியிலே ''வெண்ணாறு'' வீட்டிற்குப் பக்கத்து வீடு ''குடமுருட்டி'' சொந்தக்காரர் பெயர் சுப்ரமணியம், வயது 52, ரெடிமேட் கிளாத் ஷாப் வெச்சுருக்கார். அவர் சம்சாரம் பேரு நளினி வயது 44. அவங்களுக்கு சுபாஷிணின்னு 21 வயசுப் பொண்ணும், வினோதினின்னு 18 வயதுப் பொண்ணும் இருக்காங்க. சுப்பிரமணியத்தின் அப்பா சுவாமிநாதன், வயது 75 அவங்களோட இருக்கார்'' என்று சொல்லிக் கொண்டிருக்கையில் போன் பேசிவிட்டு வரதன் வந்துவிட்டார்.

வரதன் தொடர்ந்தார். ''எதிர் தரப்பில் கோடி வீடு ''வெட்டாறு'' ரங்கராஜனுடையது. அவர் இந்த ஏரியா டி.எஸ்.பி.யாக இருக்கிறார். அவருக்கு 52 வயது. அவர் மனைவி பேரு தேவிகா, வயது 44. சென்ட்ரல் கவர்ன்



மெண்டில் வேலை. அவங்களுக்கு 2 பிள்ளைகளும் ஒரு பொண்ணும்.. பெரிய பையன் அரவிந்த் எம்.பி.பி.எஸ். கடைசி வருஷம் படிக்கிறான். அவன் வயது 24. அடுத்தவன் ராஜேந்திரன். வயது 20 ஸ்டுடெண்ட். பொண்ணு சின்னவள். பெயர் குந்தவை. வயது 13 ஸ்டுடெண்ட். ரங்கராஜன் அம்மா சுந்தராம்பா வயது 70. இதுதான் எங்கள் ஐயாரப்பன் வீட்டின் மனிதர்களின் விவரம்'' என்று சொல்லி முடித்தார் வரதன்.

''எப்படி சார், இப்படி 'ஐயாரப்பன் வீடு'ன்னு பேர் வெச்சீங்க? தப்பா நினைக்கல்லேன்னா எனக்கு விவரம் சொல்லுங்களேன்!''

''தப்பா நினைக்க இதிலே என்னம்மா இருக்கு? எங்களுக்கெல்லாம் இதிலே ரொம்ப பெருமைம்மா. திருவையாற்று கோவிலின் ஸ்வாமிக்கு 'பஞ்சநதீச்வரன்' அப்படீன்னு வடமொழிலயும், 'ஐயாரப்பன்'ன்னு தமிழிலும் பேரு எங்க எல்லாருக்குமே பூர்வீகம் திருவையாறும், அதன் பக்கத்து கிராமங்களும் தான் அப்புறம் தஞ்சாவூருக்கு வந்தோம். அப்புறம் இங்கே வந்து வீடு கட்டிண்டிருக்கோம். காவேரி டெல்டாவில அஞ்சு ஆறு பாயற இடமில்லையா, திருவையாறு? அதனாலதானே அந்த பக்கமெல்லாம் அத்தனை செழிப்பு! அத நெனச்சுத்தான் அந்த அஞ்சு ஆறுகளோட பேரான, காவேரி, வடவாறு, வெண்ணாறு, குடமுருட்டி, வெட்டாறு அப்படீன்னு எங்க வீடுகளுக்கும் சந்தோஷமா பேர் வெச்சு வாழ்ந்துண்டிருக்கோம். பிறந்த மண்ணையும், பெத்த தாயையும் யாரும் மறக்கக் கூடாதில்லையா?'' மகிழ்ச்சி பொங்க விளக்கினார் வரதன்.

''இது ஒரு அதிசயம்தான் சார்! எத்தனை பேருக்கு இப்படி ஒரு எண்ணம் தோணும்?'' என்றார் வந்திருந்தவர்.

''இது என்ன அதிசயம்? வெட்டாறு வீட்டு ரங்கராஜன் தன் பிள்ளை பெண்ணுக்கு சோழ ராஜாக்களை மனசில

வெச்சுண்டுதானே 'ராஜேந்திரன், குந்தவை'ன்னு பேர் வெச்சுருக்கார்'' என்றார் சிரித்துக் கொண்டே.

''ஐயா, இங்கே தனித் தனியே அவரவர் வீட்டிலே தான் சமையலா, இல்லே ஒரே சமையலா?'' என்று புன்னகையுடன் கேட்டாள் வந்திருந்த பெண்களில் ஒருத்தி.

''என்னம்மா, ஐந்து குடித்தனம் என்கிறோம், இப்படி கேக்கறீங்களே?'' என்றார் வரதன்.

''அப்படி இல்லை ஐயா, எல்லா வீட்டு விவரமும் ஒரு வீட்டு மனிதருக்குத் தெரிஞ்சு அதை அவர் சொல்ல அதை மற்றவர்கள் தடை சொல்லாமல் ஏத்துக்கறதே பெரிய விஷயம். பெரியவங்ககிட்டே முகம் கொடுத்துப் பேசவே சின்னவங்க தயங்கும் இந்தக் காலத்தில், ஒரு பெரியவரை முன்னே வைத்துப் பேசும் மரியாதை, நீங்க உங்க காம்பௌண்டை வச்சிருக்கும் நேர்த்தி எல்லாமே வியப்பா இருக்கு. கண்ணு படப் போகுது. சுத்திப் போடச் சொல்லுங்க'' என்று அந்தப் பெண்மணி சொல்ல, ''நீங்களெல்லாம் ஒருவருக்கொருவர் என்ன உறவு'' என்று கேட்டார் அந்த ஆண்.

''உறவுன்னா நீங்க கேட்கிற அர்த்தத்தில் உறவில்லை தான். ஆனா நாங்க ஐந்து நண்பர்களும் உறவுக்கும் மேலே'' என்றார் வரதன். இதற்குள் பரிமளா கொண்டு வந்த உப்பு, கறிவேப்பிலை போட்ட ஜில் என்ற மோரைக் குடித்துவிட்டு அவர்கள் நன்றி சொல்லிக் கிளம்பினார்கள்.

## 11

தன் வயதையொத்த பொன்னியுடனும், சுந்தராம்பாவுடனும் பேத்தி பெரியவளாவது பற்றிப் பேசிக்



கொண்டிருந்துவிட்டு, வீட்டுக்குப் போன பரிமளா அன்றே தன் கணவரிடம் இதைப் பற்றிப் பேசினாள். சுந்தராம்பா சொன்ன சாங்கியமெல்லாம் கேட்டுக் கொண்ட வரதன், ''நீ சொல்றதும் சரிதான். எதையாவது செய்து பிரச்னை தீர்ந்தால் சரிதான். ஆனா யோசித்துப் பாரு! அவள் அம்மா படிச்சவ. காலேஜ் லெக்சரர். நம்ம பிள்ளையோ எல்.ஐ.சி.யில் பெரிய ஆபீஸர். அவங்க இதுக்கெல்லாம் ஒத்துக்கறதே கஷ்டம்.

''சரி, ஒத்துக்கறது கஷ்டம், கஷ்டம்னு சொல்லிண்டு சும்மாவே இருந்துட முடியுமா? சொல்லியாவது பார்க்கலாமே!'' என்றாள் பரிமளா.

''சொல்லுவோம், நிச்சயமாக முழு மனதோடு முயற்சி செய்து பார்க்கலாம். அப்புறம் பகவான் விட்ட வழி'' என்றார் வரதன்.

பிறகு இரவு எல்லோருமாக சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்கும் போது வரதனே பேச்சை ஆரம்பித்தார். ''ஏம்பா, கணேசா! அம்மா என்னமோ சொல்றா, நீ என்னன்னு கேட்டியா?''

''என்னம்மா, என்ன விஷயம்?'' என்ற கணேசனிடம், ''ஒண்ணுமில்லேப்பா, எல்லாம் நம்ப வீணா விஷயம் தான் கவலையாக இருக்கு. அதைப் பத்தி சுந்தராம்பா ஒரு விஷயம் சொன்னா. அதைப் பத்தித்தான் யோசிக்கணும்'' என்று ஆரம்பிக்கும்போதே குழந்தைகள் எல்லோரும் உள்ளே போய் விட்டார்கள். ஏற்கனவே கணேசன் மருமகள் ஷோபாவும், வீணாவும் சமையலறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். விவேக்கும், விஜய்யும் நாசுக்காக வெளியே போய் விட்டார்கள். ப்ரதீப் தான் அங்கேயே உட்கார்ந்திருந்தான். ''போடா உள்ளே,

போய்ப் படி'' என்றதும் அவனும் ''போ, தாத்தா, நான் இத்தனை நாழி படிச்சாச்சு'' என்று சொல்லிக் கொண்டே வாசலுக்குப் போனான்.

பரிமளாவிடம் கணேசன், ''என்னம்மா சொல்லு'' என்றதும் பரிமளா சொல்ல ஆரம்பித்தாள். அவள் ஆரம்பித்து பாதி கூடச் சொல்லவில்லை. அவளைத் தடுத்து நிறுத்திய கணேசன் சிடுசிடுத்தார். ''என்னம்மா இது, சுத்த நான்ஸென்ஸாக இருக்கு. நாம எந்த காலத்திலே இருக்கோம்? இதெல்லாம் எனக்கு சுத்தமாப் பிடிக்கல்லே! வேணும்னா இன்னொரு தரம் டாக்டர்கிட்டே கூட்டிப் போய்க் காமிக்கலாம். அதை விட்டுவிட்டு இதென்ன அபத்தக் களஞ்சிய யோசனை? ஜயந்தி, நீ என்ன சொல்லறே?'' என்று கேட்டவுடன் அவளும் பொரிந்து தள்ளிவிட்டாள். ''கொஞ்சம் கூட கவைக்கு உதவாத விஷயம் இதில யோசிக்கவே ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு எழுந்து விட்டாள்.

பரிமளாவிற்கு முகம் தொங்கிப் போய்விட்டது. என்ன இவர்கள் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள். எதையாவது பண்ணி பிரச்னை தீர்க்கணும்னுதானே பார்க்கணும்? என்னவோ அந்த பொண்ணுக்கு எப்போது வேளை வரப் போகிறதோ'' என்று புலம்பியபடி படுக்கப் போனாள். காலையில் அவரவர் அவசரம் அவரவர்களுக்கு. மாலையில் கூட அவர்கள் எல்லோருமே வந்தது லேட்.

மறுநாள் மாலை ஜயந்தி வேகமாக உள்ளே வந்தவள் ''வீணா எங்கே?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''அவள் மாடியில்தான் படிச்சிட்டு இருந்தா'' என்று பரிமளா சொல்லவும், ஜயந்தி தடதடவென்று மாடியேறினாள். ஒன்றும் புரியாமல் பின்னாடியே மாடிக்குச் சென்ற



பரிமளா, ''என்னம்மா ஆச்சு'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''இந்த வீணா கழுதை என்ன பண்ணியிருக்கா, தெரியுமா?'' என்று சொல்லிக் கொண்டு இருக்கையிலேயே வீணாவின் குரல் கீழே கேட்டது. தடதடவென்று கீழே இறங்கி வந்த ஜயந்தி, வீணாவைப் பார்த்ததும் அவள் கையைப் பிடித்தாள். அவளை ஓங்கி ஒரு அறை விட்டிருப்பாள். அதற்குள் வேகமாய் அங்கு வந்த பரிமளா ஜயந்தியின் கையைப் பிடித்துக் கொண்டாள். ''இந்தா, என்ன காரியம் பண்றே, நீ? பொறுமையா இரு. இத்தனை பெரிய பொண்ணுக்கு அம்மா செய்யற வேலையா இது? எதுவாயிருந்தாலும் என்ன விஷயம்னு தெரிஞ்சுண்டு அப்புறமா என்ன செய்யணுமோ அதைச் செய்'' என்றாள் ''சரி, அப்படி என்ன அவள் செய்து விட்டாள்?'' என்று கேட்டாள்.

''இதெல்லாம் உங்களாலே வந்ததுதான். அந்த உருப்படாத யோசனை ஒண்ணு சொன்னீங்களே, சுந்தராம்பா ஆன்ட்டி சொன்னாங்கன்னு அதை நாம அப்படியே கடைபிடிக்கலையாம். இவள் போய் ரம்யாவிடம் சொல்லி அழுதிருக்கிறாள். இன்னிக்கு ரம்யாவும், லக்ஷ்மியும் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டார்கள். இவளுக்கு எதற்கு இவ்வளவு வாய்? பெண்ணாகப் பிறந்துவிட்டு வெட்கம் வேண்டாமா? இவ்வளவு பெரியவங்க இருக்கச்சே அவங்க பாத்துப்பாங்கன்னு இருக்கலாமா இல்லையா? சொல்லுங்கோ'' என்று பட்டாசாகப் பொரிந்தாள் ஜயந்தி.

''அவள் கவலையும் நியாயம்தானேம்மா'' என்றாள் பரிமளா மெதுவாய்.

''ஏன், நீங்க ஐடியா கொண்டு வந்ததாலா'' என்று சீறினாள் ஜயந்தி.

அதற்குள் வீணா குறுக்கிட்டாள். ''பாட்டியிடம் ஏன் பாயறேம்மா? எனக்குத் தோணித்து. நான் சொன்னேன்'' என்றாள்.

''நன்னாத் தோணித்து. வெக்கமாயில்லே உனக்கு. இதைப் பற்றி நீயே பேச?'' என்று மகள் மேல் பாய்ந்தாள், ஜயந்தி.

''அம்மா, நான் கொஞ்சம் பேசணும். பாட்டியும் அம்மாவும் நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்க. இப்போ நான் நம்ப மனுஷா ஐயாரப்பன் காம்பௌண்ட் மனுஷாகிட்டப் பேசினது உனக்கு இவ்வளவு கௌரவக் குறைச்சலாக இருக்கு. என் சிநேகிதிகள்லே, என் கிளாசிலே, ஏன் அதற்குக் கீழ் இரண்டு கிளாஸ் வரைகூட பெரியவளாகாத பெண் நான் ஒருத்தி தான். எத்தனை கிண்டல் பார்வை, கேலிப்பேச்சு தெரியுமா? முதுகுக்குப் பின்னாடி அன்னிக்கு ஒருத்தி எனக்கு ஔவைப் பாட்டின்னு நிக் நேம் வெச்சுருக்கா. இதெல்லாம் தெரியும் போது எத்தனை வேதனையாக இருக்கும் எனக்கு? இன்னும் பாய்ஸுக்கு இதெல்லாம் தெரியாதுன்னு நினைக்கிறேன். இதுவே பரவாயில்லை. எவ பையிலாவது ஸானிடரி நாப்கின் இருந்தாலோ, இல்லைன்னா யாராவது ஒருத்தர் அது பத்திப் பேசும்போது 'வீணாவா, பாவம்டி அவள்னு சொல்லும்போது மனசு ரொம்ப வலிக்கிறது. அம்மாவ குந்தவை கூட உட்கார்ந்துட்டாள்னு நினைக்கிறேன். நான் பாவம் வருத்தப் படுவேன்னுதான் அவள் வெளியே சொல்லவில்லை. முந்தா நாள் எங்க கிளாஸ் டீச்சர் கூப்பிட்டு, ''ஏம்மா,



உன் விஷயம் இப்பத்தான் கேள்விப்பட்டேன். டாக்டர் கிட்டே காண்பிச்சீங்களா''னு கேட்டார். எனக்கு ரொம்ப அழுகை வந்துடுத்து. நீ வருத்தப் படுவியோன்னு நான் வந்து வீட்டுலே சொல்லல்லே. எனக்கு ஒவ்வொரு சமயம் நினைச்சா தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணுது'' பேசிக் கொண்டே போன வீணா ஓவென்று கதறி விட்டாள்.

திகைத்துப் போய் நின்ற ஜயந்தி தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''என் கண்ணே, நான் கூட உன் மனசு நோகும்படி பேசிட்டேன், என்னை மன்னிச்சுடும்மா, இதோ பார், உனக்கு எல்லாம் சரியாயிடும். நீ வருத்தப் படாதே! அம்பாள் கண் திறக்காமலா போய்விடுவாள்?'' என்று தன் மடியில் விழுந்து அழுத வீணாவைத் தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்தினாள்.

அப்போதுதான் ஆபீஸிலிருந்து வந்த ஷோபா, ''அம்மா, நம்ம பாட்டி சொல்றதைப் பண்ணித்தான் பார்ப்போமே'' என்று தன் பங்குக்குச் சொன்னாள்.

ஜயந்தி தன் பக்கத்திலிருந்த வீணாவைத் தன்னுடன் அணைத்துக் கொண்டு, ''ஐயாம் ஸாரி, டியர். நான் உன்னைக் குழந்தையாவே நினைச்சிண்டு இருந்துட்டேன். உன் மனசு இவ்வளவு காயப்பட்டிருக்கும்னு நான் நெனைக்கலேம்மா. தப்புதான் நான் பண்ணினது. ஸாரிம்மா! ஷோபா சொல்றதும் சரிதான். நான் அப்பாவுக்கு எடுத்துச் சொல்றேன். எப்படி இதைச் செய்ய முடியும்னு பார்க்கலாம். ஏன்னா, நம்ம டாக்டர் என்னவோ ஹார்மோன் மருந்துகளெல்லாம் கொடுக்கப் பயப்படுகிறார். உனக்கு ஹோமியோபதியும் ஒத்துக்கல்லே பார்க்கலாம்'' என்றாள்.

அன்னிக்கே ஜயந்தி கணேசனிடம் பேசுகிற விதமாகப் பேசி சம்மதிக்க வைத்து விட்டாள். ''அன்னிக்கு என்னமோ அத்தனை தீவிரமா மறுத்தியே'' என்று அவர் கேட்க, இவள் ''வீணாவே மனசிலே இத்தனை குமுறலை அடக்கி வெச்சிண்டிருந்திருக்கா. எனக்குத்தான் தெரியாமப் போயிடுத்து. சரி இது ஒர்க்கவுட் ஆகுமான்னு பார்க்கலாமே!'' என்றாள்.

''யார் கூடப் போவது? அம்மா, அப்பா போறதா இருக்காளா?'' என்றார் கணேசன்.

''ஆமாம், அம்மா யோசிச்சுத்தான் வெச்சுருக்கா. அம்மா பொறந்தாத்திலிருந்து தந்த நிலம் கொஞ்சம் சின்னமனூர் கிட்டே இருக்கில்லையா. அதைப் போயெல்லாம் பார்க்க முடியறதேயில்லை. அதை வித்துடலாம்னு பேசிண்டிருந்தோம், இல்லையா. அதைப்பத்தி அங்கே இருக்கிற குடியானவனுக்குச் சொல்லிவிட்டுப் போனா அதையும் முடிச்சிண்டு வந்துடலாம்னு நெனைக்கிறா.''

''சரி, இரண்டு நாள் கொஞ்சம் யோசிச்சுட்டு ஏதானாலும் பார்க்கலாம்.''

பார்க்கலாம்னு அவர் சொன்னா சாயந்திரம் சிநேகிதர்கள் எல்லோருடனும் அபிப்ராயம் கேட்கப் போகிறார் என்று அர்த்தம். கேட்கட்டும், நல்லதாக ஒரு தீர்வு கிடைக்கட்டும் என்று நினைத்துக் கொண்டாள் ஜயந்தி.

சாயந்திரம் இந்தப் பேச்சு வந்ததும், சாமிநாதன் முதலில் ''பயமாயிருக்கும்போல இருக்கேடா'' என்று சொல்லவும், ''இல்லேப்பா, சாமிநாதா! ஏதாவது ஒண்ணு செய்துதானே ஆகணும், இப்படியே விட முடியாதில்லையா?'' என்றார் வரதன். ''நேத்திக்கு அவள் அப்படி அழுது தீர்த்ததும் எனக்கும் சரி, பரிமளாவிற்கும் சரி



ராத்திரியெல்லாம் தூக்கமே வரல்லை. அந்தப் பெண் ஏதாவது தப்பான முடிவெடுத்துட்டாள்னா நஷ்டம் யாருக்கு. சொல்லு? இவா சொல்றதை முழுசையும் கேட்டா நம்பற மாதிரிதான் இருக்கு. சுந்தரா அவ அக்கா பொண்ணுக்கே சரியாயிருக்குன்னு சொல்றதனால்தான் எனக்கும் முயற்சிக்கலாம்னு எண்ணம்'' என்றார்.

அதற்குள் ப்ரதீப் அங்கு வந்து ''உங்களுக்கெல்லாம் என்ன வேணும்'' என்று கேட்டான். அவனை ஒருமுறை முறைத்துப் பார்த்த வரதன் ''நீ இந்த இடத்தைவிட்டுப் போகணும், வேறே ஒண்ணும் வேண்டாம்'' என்றார் எரிச்சலுடன்.

''எதுக்கு குழந்தையைக் கோவிச்சுக்கறே, வாதா! நம்ப டென்ஷன் நம்பளோட குழந்தைகளுக்கு என்ன தெரியும்? கண்ணா, நீ போய் சுந்தரா பாட்டியைக் கூட்டிவாப்பா'' என்றார் சாமிநாதன்.

இவர்கள் கூப்பிடவே காத்திருந்ததுபோல் உடனே வந்து விட்டாள் சுந்தராம்பா. வந்ததுமே, ''வீணா விஷயம்தானே, நான்தான் சொன்னேனே, நிச்சயமாக இதில் பலிதமாகும். நான் இத்தனை நாள் ஏன் சொல்லலேன்னு எனக்கே தெரியல்லே. என்னவோ, எதற்கானாலும் நேரம் காலம் கூடி வரணுமில்லையா? போன நாள் போக இப்போவாவது ஆக வேண்டியதைப் பார்க்கலாம். உங்களுக்கு நான் அந்த கோவில் பூசாரியோட போன் நம்பர் வாங்கித்தரேன். போன்லே பிக்ஸ் பண்ணிண்டு நேர்லே புறப்பட்டுப் போங்கோ. அந்த அம்மன் வரப் ப்ரசாதி. அவள் அருளாலே நம்ம காரியம் நிச்சயம் நடக்கும்'' என்றாள் சுந்தரா.

''போ, கணேசா, யோசிச்சுப் பார்த்தா ஏதோ ஒரு வழி பொறந்திருக்கு. உபயோகப் படுத்திக்கறது நல்லதுன்னு

தான் தோணுது. ஆனால் நீங்க தனியாகப் போகக் கூடாது'' என்றார் ரங்கராஜன். ''என்னதான் எங்கம்மா தைரியம் சொன்னாலும் நீங்க போகும் முன் நான் ஒரு தடவை அங்கே போய்ப் பார்த்துவிட்டு வரலாம்னு நினைக்கிறேன்.''

''ஆமாம்பா, நானும் அதைத்தான் நினைக்கிறேன். முதல் தடவை இவங்களை நீ கூட்டிப் போய் வருவது தான் தேவலை. 'போலீஸ்' என்று போட்ட வண்டியில் இரண்டு, மூணு கான்ஸ்டேபிளையும் உன்னோடு கூட்டிப் போய் அந்த ஊர்லே நீ ஒரு ரவுண்டு அடிச் சுட்டு வந்தாலே, பாக்கிப்பேர் வரதன் கிட்டேயும், பரிமளா அண்ணிகிட்டேயும் மரியாதையாக இருப்பார்கள். வீணாவின் பத்திரத்துக்கும் அதுதான் நல்லது. எல் லோரும் என்ன சொல்றீங்க?'' என்று கேட்டார் சாமிநாதன்.

''அதேதான் நான் நினைக்கறதும் அம்மா. நீ போய் நம்பரை வாங்கிக் கொடு. பரிமளா மாமியை ஒரு நல்ல நாள் பாக்கச் சொல்லு. மத்த ஏற்பாடுகளையும் பாரு. கணேசா'' என்றார் ரங்கராஜன். கூடவே,

''முதல் தடவை நீ, ஜயந்தி, வீணா, உன் அம்மா, அப்பாவுடன் நானும் தேவிகாவும் கூட வருகிறோம். அப்புறம் உன் அப்பா, அம்மா வீணா போகட்டும். திரும்ப பிரார்த்தனை முடிக்க எல்லோருமா போவோம் அம்மா. பெரியம்மாவோட நானும் ஒருதடவை பேசிடு றேன். நிம்மதியாய் இருக்கும்'' என்றார்.

''ரொம்ப தேங்க்ஸ்டா'' என்று கணேசன் சொல்ல ஒரு முறை முறைத்தார் ரங்கராஜன். ''இல்லைடா'' என்று மீண்டும் ஏதோ சொல்ல ஆரம்பித்தவரை, ''போறும்டா. போய் பிரயாணத்திற்கு ஏற்பாடு பண்ற வழியைப் பாரு'' என்றார் ரங்கராஜன்.



''இன்னும் இரண்டு நாள்லே அமாவாசை வருது. அடுத்த நாளே வெள்ளிக்கிழமைதான். கிளம்பற வழியைப் பார்க்கணும். போன் நம்பர் வாங்கணும். நிறைய வேலை இருக்கு. கிளம்பலாம்'' என்றதும் எல்லோரும் கிளம்பினர்.

வீட்டிற்கு வந்த கணேசன் விஷயத்தைச் சொன்னதும் எல்லோருக்கும் சந்தோஷம்தான்.

ராத்திரி படுக்கும்போது ஜயந்தி வீணாவிடம் கேட் டாள். ''பயமாயிருக்காடா கண்ணா!''

''இல்லேம்மா'' என்றாள் வீணா.

''இதோ பார், தாத்தா பாட்டியோடு நீ தனியா இருப்பே. அது பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனா பாட்டி நிச்சயமா அங்கே உன்கிட்டே இன்னும் கண்டிப்பாத் தானிருப்பா. நீ அதுக்கெல்லாம் கோவிச்சுக்கப் படாது. புது ஊர், உன்னைப் பத்திரமாய் பாதுகாக்கணுங்கற டென்ஷன் இருக்குமில்லையா பாட்டிக்கு? நீ பாட்டுக்கு உன் பாடப் புஸ்தகங்களை எடுத்துப் போய் படிச்சிண்டு இருக்கணும். பாட்டியாலே என்ன சமைச்சுப் போட முடி யுமோ, போடுவா, நீ படுத்தாம சாப்பிடணும், என்ன?''

''அம்மா நீ கவலையே படாதே! நாம்தான் தினமும் செல்போனில் பேசிக்குவோமே, இல்லையா?''

''அது என்னவோ, நீ என்னை விட்டுட்டு இருப்பியோ என்னவோ, எனக்கு ரொம்ப கஷ்டமாத்தான் இருக்கும். எப்படியோ உனக்கு நல்லது நடக்கணும்னுதான் நான் இதுக்கு ஒத்துண்டேன்'' என்றாள் ஜயந்தி.

வீணாவிற்குத் தூக்கமே வரவில்லை. ஏதேதோ எண் ணங்கள். ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தது. மறுபக்கம் ரொம்பவும் பயமாக இருந்தது. இப்படியே எண்ண அலைகளினால் அலைக்கழிக்கப்பட்ட அவள் எப்போது

தூங்கினாளோ, அவள் அப்பா, அம்மா எப்போது மாடிக்குப் போய் படுத்தார்களோ தெரியாது.

விடியற்காலை மணி நான்கு இருக்கும். பக்கத்தில் படுத்திருந்த பாட்டியை எழுப்பினாள் வீணா. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த பரிமளா, ''என்னம்மா, என்ன ஆச்சு.''

''பாட்டி நாம்ப ஊருக்குப் போக வேண்டாம், பாட்டி'' என்றாள்.

''ஏம்மா இதைச் சொல்லவா எழுப்பினே? நீ ரொம்ப பயந்துட்டே போலே இருக்கு. எதுக்குப் பயப்படணும்? நாங்கள் எல்லாம் உன் கூடவே இருப்போம்மா. ஒரு தம்ளர் தண்ணீர் குடிச்சுட்டுப் பேசாமல் படு. மணி என்ன ஆறது? இன்னும் பொழுது விடியவேயில்லை, எல்லாம் கார்த்தாலே பேசிக்கலாம்'' என்றாள் பரிமளா.

''ஐயோ, பாட்டி, உனக்கு ஒண்ணும் புரியல்லே. பாட்டி நீ எழுந்து சரியா டைம் பாத்துக்கோ. அம்மா தானே எழுந்து வரட்டும்'' என்றாள் வீணா.

''என்னடி சொல்றே'' என்று பதறியபடியே எழுந்த பரிமளா லைட்டைப் போட்டாள்.

''ஆமாம் பாட்டி, கருப்பம்பட்டிக்கெல்லாம் போக வேண்டாம். என்ன புரியல்லையா, நான் பெரியவளா யிட்டேன், பாட்டி'' என்றாள்.

சந்தோஷத்தில் திகைத்துப்போய் நின்ற பாட்டியிடம் ''என்னை ஆசீர்வாதம் பண்ணு, பாட்டி'' என்று அவள் காலில் விழுந்து வணங்கினாள் வீணா.

''அம்மாடி, நிசமாத்தான் சொல்றியா? எல்லார் வயத்திலேயும் பாலை வார்த்துட்டேம்மா, நீ நன்னா தீர்க்காயுசுடன் இருக்கணும் அம்மன் கண் திறந்துட்டா. அம்மா,



ஜயந்தி, எழுந்து கொஞ்சம் கீழே வாம்மா'' என்று உரக்கக் குரல் கொடுத்தாள். பேத்தியை கன்னத்தை வருடி திருஷ்டி கழித்தாள்.

கீழே பேச்சுக் குரலும் கேட்டு, விளக்கும் போட்டிருக்கவும் ஜயந்தியே எழுந்து கீழே வந்து விட்டாள்.

வீணா என்று பரிமளா ஆரம்பிக்கும்போதே பதறிவிட்டாள். ஜயந்தி, அன்றைக்கு அவள் தற்கொலை பண்ணிக்கலாமான்னு தோன்றுகிறது என்றெல்லாம் சொன்னதிலிருந்தே அவள் ரொம்பவும் அதிர்ந்து போயிருந்தாள். ''வீணாவிற்கு என்ன, என்னாச்சம்மா?'' என்று அவள் பதறிக்கொண்டே படியிறங்கவும், பரிமளா, ''ஏம்மா இத்தனை பதற்றம். நல்ல விஷயம்தான். சுபமான சமாச்சாரம் தான். இந்த வார்த்தையை அவள் சொல்லத்தான் நாம இத்தனை நாள் காத்திருந்தோமடி'' என்றாள்.

''நிஜமாம்மா நீங்க சொல்றது. அம்மன் அருள்தான்'' என்று பெண்ணிடம் வந்து அவளை அப்படியே அணைத்துக் கொண்டாள்.

''ஜயந்தி, நான் போய் பால் காய்ச்சி காபி போடறேன். நீ வாசல் தெளிச்சுக் கோலம் போடு. குளிச்சுட்டு குழந்தையை உட்கார்த்தி வெச்சு பாலும் பழமும் கொடு. இன்றைய பொழுது நன்றாக விடிஞ்சிருக்கு. இன்னிக்கு நீ காலேஜுக்குப் போக வேண்டாம்மா, கொள்ளை வேலை இருக்கு'' என்று பரிமளா பேசிக் கொண்டே போனாள்.

பிறகென்ன? ஐயாரப்பன் காம்பௌண்ட்டே சந்தோஷத்தில் மூழ்கியது. பெண்களெல்லாம் சேர்ந்து செய்ய வேண்டியதைச் செய்தார்கள்.

ஒரு 10 நாட்கள் கழித்து எல்லார் வீட்டிலிருந்தும் எல்லோருமாக ஒரு பெரிய வேனாக வைத்துக் கொண்டு, அம்மனுக்குப் புடவை சாத்த விலை உயர்ந்த பட்டுப் புடவை வாங்கிக் கொண்டு கருப்பம்பட்டி போய் வந்தார்கள்.

இத்தனை நாள் கழித்து ஆகியிருக்கிறாளே என்று டாக்டரிடமும் ஒரு முறை அழைத்துப் போய் வந்தாள் ஜயந்தி. எல்லாம் நார்மலாக இருக்கிறது என்று தெரிந்து கொண்டவுடன் எல்லோருக்கும் நிம்மதியாயிற்று. இப்போது எல்லார் வீட்டிலும் கருப்பம்பட்டி அம்மானின் போட்டோ பூஜை அறையில் இடம் பெற்றது. மொத்தத்தில் ஐயாரப்பன் காம்பௌண்டில் இன்னமொரு இனிய நிகழ்ச்சி.

## 12

யார் என்ன சந்தோஷத்தில் மிதந்தார்களோ என்னவோ ராமனாதனுக்கும் சீனிவாசனுக்கும் அன்று கோவிலில் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்ததிலிருந்து நிம்மதியில்லை. ராஜேந்திரன் வீட்டிற்கு நேரத்திற்கு வந்தானா என்று மட்டும் தொடர்ந்து கவனித்துக் கொண்டனர். மூன்றாம் நாள் திரும்ப கோவிலில் சந்தித்தனர்.

''ராமனாதா, எனக்கொரு தீர்வு தோணியிருக்கு. இந்தப் பிரச்னையை சரி செய்ய. நான் நாளைக்கு மதியம் 3 மணிக்கு உன் ஆபீஸ் பக்கத்திலிருக்கிற உடுப்பி ஹோமிற்கு வரேன். நீயும் வா சொல்றேன்'' என்று சொல்லிவிட்டு



ஏதோ அவசர வேலையிருப்பதால் சீக்கிரம் போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் சீனிவாசன்.

ராமனாதன் அன்றைய தினம் கோவில் பிரகாரத்திலும் சரி, வீட்டில் படுக்கையிலும் சரி ஏதேதோ எண்ணங்கள் அவனை அலைக்கழித்தன. பாவம் அவன். வாழ்க்கையில் பெரிய சந்தோஷமெல்லாம் பார்த்தவனேயில்லை. புத்தி தெரிந்ததிலிருந்து தஞ்சாவூரிலே தான் இருந்தான். சுபாவமாகவே சாது. நன்றாகப் படிப்பான். ஒன்றும் ஓஹோ என்று வசதியில்லா விட்டாலும் ஒரே பிள்ளையான அவனுக்கு வேண்டியதெல்லாம் செய்யும் அளவிற்கு அவன் அப்பாவிடம் பணமும், அம்மாவிடம் பாசமும் இருந்தது. அம்மாவும் பரம சாதுதான். தனி வீடு வேண்டும் என்று அவன் அப்பா எல்.ஐ.சி. காலனியில் சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொண்டார். கொஞ்ச நாட்கள் கூட அவர்கள் அந்த வீட்டில் சேர்ந்து இருக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் அவர் மாரடைப்பால் இறந்து விட்டார்.

ரொம்ப சொந்தங்களும் கிடையாது. அவருடைய ஆபீஸிலிருந்து வந்த சொல்ப பணத்தை பேங்கில் வட்டிக்குப் போட்டுவிட்டு வீட்டை வாடகைக்கு விட்டாள் அவர் மனைவி. வீட்டின் பின் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய ரூமிற்கு தனியாக காம்பௌண்டிலிருந்து வழியும், அதனுள்ளே அட்டாச்டு பாத்ரூமும் கட்டியிருந்ததால் அதில் அம்மாவும் பிள்ளையுமாக இருந்து கொண்டார்கள். மொத்தத்தில் ஸ்கூலில் 10வது படித்துக் கொண்டிருந்த ராமனாதனை நல்ல விதமாக டிகிரி வரை படிக்க வைத்து விட்டாள்.

அந்தக் காலத்திலிருந்தே வரதன் சாருடன் அவனுக்கு ரொம்ப பழக்கம். அவருக்கு இவன் நன்றாகப் படிக்கும்

பையன், எந்த வம்புதும்புக்கும் போகாதவன்'' என்பதால் இவன் மேல் ஒரு தனிப் பிரியம். பழைய புஸ்தகங்கள் வாங்கித் தருவார். முடிந்த போதெல்லாம் உபகாரச் சம்பளமும் வாங்கிக் கொடுப்பார். இவன் டிகிரி முடித்து சர்வீஸ் கமிஷன் தேர்வும் எழுதி வேலையில் சேர்ந்த புதிது. கல்யாணியின் பெற்றோர் இருவரும் ஒரே நாளில் ஆக்ஸிடெண்டில் இறந்துவிட, பொன்னி அத்தை மட்டுமே அவளைப் பார்த்துக் கொள்ள ஆரம்பித்த நாட்கள் அவை. பித்துப் பிடித்ததுபோல் இருந்தாள் கல்யாணி. அவள் டிகிரி இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தாள். அவளும் வரதன் சாரிடம் படித்தவள் தான். அவர்தான் பொன்னியிடம் 'அவளுக்கு டியூஷன் வையம்மா, டிகிரி முடிந்ததும் அவளுக்கு மாப்பிள்ளை தேடலாம்' என்றார், யாரிடம் டியூஷனுக்கு அனுப்புவது என்ற கேள்வி எழுந்ததும், ராமனாதனை சிபாரிசு செய்தார் வரதன். ''சின்ன வயதுப் பையன்னாக்க பயமா இருக்கு. மாமா'' என்று தயங்கினாள் பொன்னி. ''ஒரு பயமும் வேண்டாம் அம்மா, அவன் ஒரு அப்பழுக்கு இல்லாத பையன். தைரியமாக வீட்டுக்கு வரச் சொல்லி அவனிடமே டியூஷன் வை. நான் சொல்லும்போது உனக்கென்ன பயம்'' என்றார். டியூஷனும் ஆரம்பித்து இரண்டாவது வருடத்தை நல்ல மார்க்குடன் பாஸ் செய்து விட்டாள் கல்யாணி.

அந்த வருட பெரிய லீவில் 'பையன் பெரிய வேலைக்குப் போய் விட்டான்' என்ற ஒரே நிம்மதியுடன் கண்ணை மூடி விட்டாள் ராமனாதனின் தாயார். மனமுடைந்து போய் விட்டான் ராமனாதன். அந்த சின்ன வீட்டில் தாயாரும் இல்லாமல் தங்க கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை அவனுக்கு. ஆதலால் தன் மொத்த



நேரத்தையும் வரதன் சார் வீட்டிலோ, அல்லது பொன்னி யின் வீட்டிலோ செலவழிக்க ஆரம்பித்தான். வஞ்சனை இல்லாமல் கல்யாணிக்குப் பாடம் சொல்லிக் கொடுத் தான். அவளும் முழு மூச்சுடன் படித்தாள்.

இருவருக்குமே அம்மா, அப்பா இல்லை என்பதே இருவர் மனங்களும் ஒன்றை ஒன்று நெருங்கக் காரண மாய் இருந்தது. ஆனாலும் அவர்கள் தங்கள் மனதை அந்த வழியில் போக விடக்கூடாது என்று கடிவாளம் போட்டு அடக்கும் வழியையும் தெரிந்து வைத்திருந் தனர். என்றாவது ஒரு நாள் அவளும் மூடு அவுட்டாகி உட்கார்ந்திருப்பாள். இவன் இரண்டு வார்த்தை ஆறுதல், தைரியம் சொல்வான். ஒவ்வொரு நாள் இவன் வாழ்க் கையையே வெறுத்துப் பேசுவான். கல்யாணி அவனுக்குத் தைரியம் சொல்லுவாள். இருவருக்குள்ளும் சிநேகம் இருந்தாலும் காட்டிக் கொள்ளும் தைரியம் இருவருக் குமே இல்லை. தைரியம் என்பதைவிட இருவருக்குள்ளும் இருந்த சோகத்தில் கல்யாணம், காட்சி என்றெல்லாம் புத்தி போகவில்லை. அதெல்லாம் தங்களுக்கு அவசியம் என்று தோன்றவும் இல்லை.

முக்கால்வாசி நாட்கள் பொன்னி அத்தை வீட்டிலோ, வரதன் சார் வீட்டில் கணேசனுடனோ சாப்பிட்டு விடு வான். இரவில் தன் வீட்டில் தூங்கும்போது மனம் இருண்டு விடும். எத்தனையோ நாட்கள் இரவு முழு வதும் தூங்காமல் கழித்திருக்கிறான்.

கல்யாணி டிகிரி முடித்து விட்டாள். அடுத்து என்ன செய்வது? பொன்னிக்கு கவலை பிடித்துக் கொண்டது. மனதில் ஏதோ பளிச்சிட, ஒரு நாள் வரதனிடம் கேட் டாள்.

''மாமா, கல்யாணி டிகிரி முடிச்சுட்டா. சிறப்பாகத் தேறியிருக்கா. இதற்கான என் நன்றி முழுவதும் உங்களுக்கும் ராமனாதனுக்கும் தான் சொல்லணும். மாமா நீங்க ஒரு தடவை சொன்னீங்க 'இவள் படிப்பு முடியட்டும். கல்யாணத்துக்குப் பார்க்கலாம்'னு அந்த வேளை வந்துடுத்துன்னு நினைக்கிறேன்...''

''புரியறதம்மா. கையிலே வெண்ணெயை வைச்சுண்டு நெய்க்கு அலைவானேன்? நம்ம ராமனாதனைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?'' என்று கேட்டார்.

''நானும் அந்த எண்ணத்தோடுதான் இங்கே வந்தேன், மாமா. இத்தனை வருஷமா நான் பழகிய வரையில் அவன் ஒரு அப்பழுக்கு இல்லாத தங்கம். எந்த விதமான கெட்ட பழக்கங்களும் இருப்பதா தெரியல்லே. கல்யாணியும் அவனும் நன்றாகத்தான் பழகறாங்க. அவன் அவளுக்கு ஒரு சிறந்த பாதுகாப்பாக இருப்பான் என்று நான் உறுதியாக நம்பறேன். இவங்க கல்யாணம் பண்ணிகிட்டா, தாய் தந்தை இல்லாத அந்தக் குழந்தைக்கு நான் செய்யற பெரிய நன்மைன்னு நினைக்கிறேன். ஆனா மாமா! அவங்க இரண்டு பேர் மனசிலும் என்ன இருக்குன்னு தெரியல்லே. நான் கவனிச்சதுலே கல்யாணி அவனை விரும்பறான்னுதான் படறது. ஆனா அவன் என்ன நினைக்கிறானோ? இதை எப்படித் தெரிஞ்சுக்கறது?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''கவலைப் படாதேம்மா! நான் தெரிஞ்சிண்டு உனக்குச் சொல்றேன்'' என்றார் வரதன்.

மறுநாளே ராமனாதனை வரதன் கேட்டார். ''ஏம்பா, ராமனாதா, பொன்னி உன்னை தன் வீட்டு மாப்பிள்ளையாக்கிக்கணும்னு நினைக்கறா. நீ என்ன சொல்றே.



உனக்கு மனசுலே வேறே மாதிரி எண்ணம் ஏதாவது இருந்தா வெளிப்படையாச் சொல்லிடு'' என்றார்.

''எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் வேணும் மாமா!'' என்றான்.

''கல்யாணியோட தனியாப் பேசணுமா? ஒரு நாள் சிவகங்கை பூங்காவுக்கு வேணுமானா போய்ட்டு வாங்கோ. அதுதானே நம்ம ஊர் மெரினா!'' என்று சொல்லிச் சிரித்தார் கூட இருந்த கணேசன்.

''இல்லையண்ணா. பெரிய கோவிலுக்குவேணா சாயந்திரம் போகலாமா?''

''எல்லாத்திலுமே நீ வித்தியாசமானவன்டா. ஆக உனக்குப் பேசணும்கற எண்ணம் இருக்கு. சொல்லத் தயக்கம். இன்னும் என்னடா தயக்கம்? சரி சாயந்திரம் நீங்க இரண்டு பேருமாக பெரிய கோவிலுக்குப் போய் வாங்களேன்'' என்றார் கணேசன்.

''இல்லையண்ணா, எல்லாருமே போகலாம்.''

பெரிதாகச் சிரித்தார் கணேசன், ''சரி, சரி எல்லாருமே போகலாம்'' என்றார்.

சாயந்திரம் எல்லோருமாக பெரிய கோவிலுக்குப் போனார்கள். கருவூர் சித்தர் சந்நிதியில் சற்று உட்கார்ந்தார்கள். மற்றவர்கள் நாருக்காக எழுந்து பிரகாரத்தைச் சுற்றி வருகிறோம் என்று கிளம்ப, கல்யாணியும், ராமனாதனும் தனித்து விடப்பட்டனர்.

இருவருக்கும் என்ன பேசுவது என்பதே புரியவில்லை. கடைசியில் மௌனத்தைக் கலைத்தது ராமனாதன் தான்.

''என்ன கல்யாணி, நீ என்ன நினைக்கிறே?''

''எதைப் பத்தி?''

''பெரியவர்கள் சொல்வதைப் பத்தித்தான்!''

''பெரியவர்கள் என்ன சொல்றாங்க?''

''என்ன சொல்றாங்களா? சமர்த்தா இருங்கோன்னு தான்.''

''சரி, சமத்தா இருந்துட வேண்டியதுதானே?''

''ஏய், விளையாடாதே! எனக்கு உன் உண்மையான அபிப்ராயம் வேணும்.''

''எதைப் பத்தி?''

''அதுதான் வரதன் சார், கணேசன் அண்ணா, உங்க அத்தை எல்லாரும் சொல்வதைப் பத்தித்தான்.''

''அவங்கள்ளாம் என்ன சொல்றாங்க?''

''கடவுளே! பேசாமல் சித்தர் வழியில் போய்விடுவது தான் சாமி பெட்டர்!'' என்று எழுந்தான்.

''ஐயய்யோ! அப்படியெல்லாம் நீங்க சொல்லிட்டா என் கதி?'' என்று உட்கார்ந்த வாக்கில் அவன் கையைப் பிடித்து இழுத்து விட்டாள் கல்யாணி. ஒரு உணர்ச்சி வேகத்தில் அப்படிச் செய்து விட்டாளே தவிர, முகம் சிவக்க உடனே கையை எடுத்துவிட்டு, ''ஸாரி, ஸாரி'' என்றாள்.

''என்னவோ அப்படி உதறிக்கறயே கையை, என் கையில் என்ன அவ்வளவு அழுக்கா இருக்கு?'' என்ற ராமனாதன் தன் கையைத் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டான்.

''என்ன ஆச்சு? வலிக்கும்படியா இழுத்துட்டேனா, ஸாரி!'' என்றாள் கல்யாணி. ஆனால் அவன் முகத்தில் மலர்ச்சியைப் பார்த்தவள் மேலும் கேட்டாள். ''சரி, நீங்க சீரியஸாகச் சொல்லுங்க. உங்களுக்கு என்னைப் பிடிச்



சிருக்கா? இல்லை எல்லோரும் சொல்றதைத் தட்டமுடி யாம, தாட்சண்யத்துக்காக ஒத்துக்கறீங்களா? எனக்கு நிஜம் தெரியணும்!'' என்றாள்.

''எனக்கும் அதே நிஜம் தெரியணும். அத்தைக்கு வரன் தேடற சிரமம் குறையணுங்கறதுக்காகத் தான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கறயா? உனக்கு என்னைப் பத்தி எல்லாம் தெரியும். நான் ஒரு அனாதை. பணக் காரனும் இல்லை. ஆனா உனக்கு ஒரு நல்ல பத்திரமான வாழ்க்கையைத் தர முடியும். எனக்கும் இந்த தனி வாழ்க்கை கஷ்டமாகத்தான் இருக்கு. உன் அத்தையும் உன்னைக் கொடுக்க இஷ்டப் படும்போது எனக்குச் சம்மதன்னுதான் சொல்லத் தோன்றுகிறது.''

''இந்தக் காரணங்கள் எல்லாம் எனக்கும் பொருந்தும், ஆனா இதையெல்லாம் தாண்டி ஒரு காரணம் இருக்கு'' என்றாள் கல்யாணி.

''அது என்னவோ, நான் தெரிஞ்சுக்கலாமா?''

''சொல்றேன். அதுக்கு முன்னாடி எனக்கு ஒண்ணு தெரியணும். நீங்க நிஜத்தைச் சொல்லணும்.''

''நான் பொய் பேசுவதில்லைன்னு உனக்குத் தெரியும். என்ன தெரியணும் சொல்லு!''

''நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்ன காரணங்கள் எல்லாமே உண்மையானாலும் அதையெல் லாம் தாண்டி வேறே ஒரு காரணம் இருக்கணும். அது இல்லைன்னா கஷ்டம்.''

''என்ன அது.''

''என்ன ட்யூஷன் மாஸ்டர் நீங்க, இதுகூட உங்களுக்குப் புரியலையா?'' என்று கேட்ட கல்யாணி அவனை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''இல்லை கல்யாணி, எனக்கு நிஜமாகவே புரிய வில்லை.''

''ஐயோ மக்கு மாஸ்டர், நீங்க என்னை விரும்புகிறீர்களா என்பது முக்கியமில்லையா? நான் அதைத் தெரிந்து கொள்ள எவ்வளவு தவிக்கிறேன் என்பதும் உங்களுக்குப் புரியவில்லையா?'' என்று கேட்டாள் ஏனோ அவள் கண்களில் நீர் கட்டிவிட்டது.

அவள் கையை எட்டிப் பிடித்த ராமனாதன், ''ஸாரிம்மா நீ சொல்றது உண்மைதான் நான் ஒரு மக்கு. எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. இன்னிக்கு இல்லை உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்தே என் மனசிலே புகுந்துட்டே. என்ன, நம் மனதுக்கு நாமே போட்டுக் கொள்ளும் கோடுதான் அதை வெளிக்காட்ட விடாமல் நல்ல பையனாக இருக்க வைத்தது. நேரம் வந்து விட்டது வெளியே சொல்றேன்'' என்றான்.

''எங்க சொல்றீங்க? வாயிலிருந்து வார்த்தையைப் பிடுங்க வேண்டியிருக்கிறதே'' என்று முணுமுணுத்தாள் கல்யாணி.

''வெரிவெரி ஸாரி, கல்யாணி நான் கொஞ்சம் ஸ்லோ. ஆனா எனக்கும் இதே கேள்விக்கு பதில் தெரியணுமே! ப்ளீஸ், சொல்லேன்!'' என்றான்.

இடதும் வலதுமாய்த் தலையசைத்தாள் கல்யாணி.

''இல்லையா, ஐயோ! பின்னே எதுக்கு சரின்னு சொன்னே கல்யாணத்துக்கு?''

அதிர்ந்துபோய்க் கேட்ட ராமனாதனைப் பார்க்க கல்யாணிக்குப் பாவமாக இருந்தது ''I love you from day number one'' என்றாள்.



''அம்மாடி, இதை நல்ல தமிழில் சொல்லக் கூடாதா, என் பைங்கிளியே.''

''ஐயய்யோ, பயமா இருக்கே உங்க வேகம்'' என்றாள் கல்யாணி.

''பின்னே எதுக்கு தலையை நெகட்டிவா ஆட்டினே?''

''நான் அதை இப்போ வாயால சொல்ல மாட்டேன்னு சொல்ல வந்தேன். அதுக்குள்ளே உங்களைப் பார்த்ததும் பதட்டத்தைத் தீர்க்க சொல்லிவிட்டேன்'' என்றாள் புன்சிரிப்புடன்.

அதற்குள் பிரதட்சிணம் செய்யப் போன மற்றவர்கள் எல்லாம் திரும்பி விட்டனர். இவர்களைப் பார்த்து, ''என்ன, எல்லோரும் வேகமாக நடக்கறாப்ல இருக்கு!'' என்று ஜயந்தி சிரித்துக் கொண்டே சொன்னபிறகுதான் இவர்கள் ஒருவரை ஒருவர் பிடித்திருந்த கைகளை விட்டனர்.

''என்னம்மா, அந்த கோல்டன் வேர்ட்ஸை சொல்லிட்டானா?'' என்று கேட்டார் கணேசன்.

''அவரா எங்கே சொன்னார்? நான் தான் அவர் வாயிலிருந்து வார்த்தைகளைப் பிடுங்கினேன்'' என்றாள் கல்யாணி.

''கவலைப் படாதே! இனிமே ராமனாதா, நீ தினமும் காலை, மத்தியானம், மாலை, இரவுன்னு குறைந்தது 10 தடவை கல்யாணியைப் பார்த்து ஐ லவ் யூ சொல்லணும்'' என்றார் கணேசன்.

''அப்படித்தான் அவ்விடத்தில் பழக்கமோ?'' என்று நமுட்டுச் சிரிப்புடன் கேட்டான் ராமனாதன். அதன் பிறகு கோவிலுக்குள் இருக்கும் கடையில் இரண்டு தலையாட்டி பொம்மைகள் வாங்கினான்.

''ரொம்ப ஸிம்பாலிக்கா அவர்கள் வாழ்க்கையைக் கோடி காண்பித்துவிட்டார்கள், பாத்தியா, ஜயந்தி'' என்று கேட்டான் கணேசன்.

''ஆமாம், ஒருவருக்கொருவர் தலையாட்டிக் கொண்டே இருந்துவிட்டால் பிரச்னை ஏது வாழ்க்கையில்?'' என்றாள் ஜயந்தி.

பேசிக்கொண்டே நடந்தார்கள். ஜயந்தியைப் பார்த்து, ''ஆனால் உலகத்திலேயே சித்தர் சன்னிதியில் வைத்து ஐ லவ் யூ சொன்னது நம்ப ராமனாதனாகத்தான் இருக்கும், என்ன சொல்றே?'' என்றான் கணேசன்.

''அதுதான் அண்ணா எனக்குக்கூட ஒரு பயம் இருக்கு. பொன்னியத்தை கூட முன்னே இரண்டு மூன்று தடவை சொல்லியிருக்காங்க.''

என்னம்மா, என்ன பயம்? ராமனாதன் விஷயமாகவா? ஏதானாலும் இப்பவே தெளிவு படுத்திக்கோ, பெண்ணே! மனதில் வைச்சுண்டு மாலைக்கு கழுத்தை நீட்டாதே'' என்றாள் ஜயந்தி.

''ஏம்மா, உனக்கு அப்படி என்ன பயம்?'' என்று கேட்டான் கணேசன்.

''இவர் சந்யாசி, சித்தர்ன்னு போய்விடுவாரோ என்று எனக்கு சின்னதா ஒரு பயம். ஏன்னா முன்னே இரண்டு, மூன்று நாள் உப்பில்லாமல் பண்ணின ஏதோ டிபனைக் கூட ஒன்றுமே சொல்லாமே சாப்பிட்டிருக்கார். எத்தனை நாள் இரண்டு காலிலேயும் வெவ்வேற கலர் ஹவாய் செருப்புகளைப் போட்டுண்டு வந்துருக்கார், தெரியுமா? அப்படி எதிலேயும் ஒரு பிடிப்பே இல்லாமல் இருந்தவராச்சேன்னு தான் இந்த பயம்'' என்றாள் கல்யாணி.



''அதெல்லாம் அப்போ. இப்போ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதுன்னு தீர்மானம் செஞ்சுட்டான். இனிமே அவன் வேற மாதிரி இருப்பான், என்ன, ராமனாதா, நான் சொல்வது சரியா; சொல்லுப்பா உன் வாயாலே அவளுக்கு?'' என்றான் கணேசன்.

''வாஸ்தவம்தான் அண்ணா, நான் அப்படித்தான் இருந்தேன் என் நிலையில் நான் விருப்புகளை வளர்த்துண்டா பின்னால் ஏமாற்றத்தைத் தாங்க முடியாது என்று நினைச்சேன். ஆனா இப்போ என் நிலையே வேறே நான் மனதார ஆசைப்பட்டது எனக்கு கிடைக்கிறது என்பதால் என் நியாயமான ஆசைகளை வளர்த்துக் கொள்ளவே விரும்புவேன். கல்யாணியின் பயம் அர்த்தமற்றது. அநாவசியமாக ஒரு நல்ல பெண்ணுடைய வாழ்க்கையை பாழடிக்க மாட்டேன் அண்ணா, இது சத்தியம்'' என்றான் ராமனாதன் உணர்ச்சிபூர்வமாக.

அதற்குப் பிறகு நாள் குறித்து, வேண்டியதை வாங்கி எளிமையாக கல்யாணம் முடித்து கொஞ்சு நாட்கள் தஞ்சையில் இருந்தனர். சீக்கிரமே சென்னையில் கணேசன் ஃப்ளாட்டிலேயே இடம் வாங்கி வீடு கட்டிக் குடியேறினர்.

குழந்தை இல்லாதது குறைதான் இருவருக்குமே ஆனால் ஒருநாளும் அதைப் பற்றியெல்லாம் பேசி ஒருவர் மனதை ஒருவர் காயப்படுத்திக் கொண்டதில்லை. கடவுள் கண் திறப்பார் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றனர்.

ஆமாம் இப்போது இன்று ராத்திரி தூக்கம் வராமல் இதையெல்லாம் ஏன் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று இப்படியும், அப்படியுமாகப் புரண்டு கொண்டிருந்த ராமனாதனுக்கே புரியவில்லை.

எதற்காக பழசெல்லாம் நினைவுக்கு வருகிறது என்று யோசித்தபோது ஒழுங்கான, நேர்மையான காதல் சரியான நேரத்தில் வரும்போது அது நமக்கு மட்டுமல்லாமல் அடுத்தவர்களுக்கெல்லாம் சந்தோஷத்தை தருகிறது அப்படி இல்லாமல் பிஞ்சிலேயே பழுக்கின்றவர்களை எல்லாம் என்ன செய்ய முடியும். அதுதான் வெம்பல். இந்த ராஜேந்திரன் அன்னிக்கு டிஸ்கோவில் பெண்களுடன் எல்லாம் ஆடிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் அதனால் வந்த பயமும்தான் இந்த எண்ணங்கள் ஞாபகம் வருவதற்குக் காரணம் என்று அவனுக்குத் தோன்றியது.

காலையில் லேட்டாக எழுந்து, அவசரம் அவசரமாக ஆபீசுக்குக் கிளம்பி ஏதோ மனம் ஒட்டாமல் வேலை பார்த்துவிட்டு மூன்று மணிக்குப் புறப்பட்டு உடுப்பி ஹோமிற்க்குப் போனான்.

அங்கும் இவன் லேட் அங்கே இவனுக்கு முன்பே காத்திருந்தார் சீனிவாசன். அவருடன் கூட இவன் எதிரே பார்க்காமல் கணேசன் மிஸஸ் ஜயந்தி உட்கார்ந்திருந்தாள். ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.

மூன்று மசால் தோசை என்று ஆர்டர் பண்ணிவிட்டு பேச ஆரம்பித்தார்கள். ஜயந்தி சொன்னாள் ''இப்போது நம்ம பிரச்சனை ராஜேந்திரன். அவனை நாம சரி செஞ்சாகணும். சீனி அண்ணா சொல்வது போல கூடுமானவரை, கூடுமானவரை என்ன, நிச்சயமாக ராஜேந்திரன் காதுவரை விஷயம் போகாமல் பார்த்துக் கொள்ளணும். நீங்க ஏதாவது ஐடியா வெச்சுருக்கீங்களா, ராமனாதன்'' என்றாள்.

''எனக்கு ஒண்ணுமே தோணல்லே, உங்களுக்கு அண்ணா?''



''எனக்கு மட்டுமில்லை. சுப்ரமணியத்திடம் பேசினேன். அவரும் தனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை என்கிறார். அதனால்தான் ஜயந்தியிடம் விஷயத்தைச் சொல்லி அவளையும் கூட அழைத்து வந்தேன். என்ன இருந்தாலும் ஸ்டுடெண்ட்ஸ்ஸுடன் பழகுபவள் இல்லையா. அவளிடம் இதற்கு விடை இருக்கும் என்று நினைக்கிறேன்.''

''வாஸ்தவம்தான், அண்ணா. நான் ஒரு யோசனை வச்சிருக்கேன். சொல்லட்டுமா.''

''சொல்லுங்க, அண்ணி, சொல்லுங்க! எதை செஞ்சாவது பிரச்சனையைத் தீர்க்கணும், இல்லையா?''

''இப்போ எங்க காலேஜிலே கவுன்ஸிலிங் பண்ணணும்னே ஒரு டீச்சரை அப்பாயிண்ட் பண்ணியிருக்கோம். சாதாரணமாக அவங்கல்லாம் சைக்காலஜில டாக்டரேட் பண்ணியிருப்பாங்க. அந்த மாதிரி ஒரு பொண்ணுதான் எங்க காலேஜில வேலைக்குச் சேர்ந்திருக்கா. கலாவதின்னு பேரு. என்னோட ரொம்ப ப்ரெண்டாயிட்டா. அவளுடைய யோசனையை நான் இந்த விஷயத்தில் கேட்டேன்.

அவள் இதற்குமுன் ''சேவா'' என்ற அமைப்பில் வேலை செஞ்சிருக்கா. நல்ல தன்னம்பிக்கையும் இருக்கிறது. அதனால்தான் அவளிடம் யோசனை கேட்டேன்.''

''என்ன சொல்கிறாள் அவள் இந்த விஷயத்தில்?''

''ராஜேந்திரனுடன் இரண்டு மூன்று தடவை பேசினாலே அவனை சரி செய்துவிடலாம் என்கிறாள்.''

''ஆனா அவன் இவளுடன் பேச எப்படி சம்மதிப்பான்? நாமெல்லாம் பேசினாலே அவன் பேச மாட்டான்.

இன்னும் முரட்டுத்தனம்தான் அதிகமாகிவிடும்ன்னு தானே நாம் வேற வழி தேடறோம்?''

''அதற்கெல்லாம் அவள் யோசனை வெச்சிருக்கா. அவள் சின்னப் பெண், அழகா இருக்கா. அவள் ராஜேந்திரனின் போன் நம்பர் வாங்கிக் கொண்டிருக்கா. இரண்டு நாள் கழித்து சாயந்திரம், போன் பண்ணிவிட்டு பெசன்ட் நகர் அஷ்டலஷ்மி கோவிலுக்கு வரச் சொல்லி யிருக்கா, பார்க்கலாமே!''

''சரியாக ஒர்க்கவுட் ஆகுமா, ஜயந்தி?'' என்று கேட்டார் சீனிவாசன்.

''ஆகும் அண்ணா, எனக்கு நம்பிக்கை இருக்கு. இன்னிக்கே அவள் ராஜேந்திரனுக்குப் போன் செய்வதாகச் சொன்னா. உங்களிடம் பேசிட்டு சரி சொல்வதாகச் சொல்லியிருக்கேன். என்ன சொல்றீங்க? இது சரியாச் சுன்னா அவளுக்கு ஏதாவது கிஃப்ட் வாங்கிக் கொடுத்துடலாம்'' என்றாள்.

''ரொம்ப சரிம்மா. ஆகும் செலவை நம்ம நாலு பேருமா போட்டுட்டா போச்சு'' என்றார் சீனிவாசன்.

''ஆனா, அவள் ஒன்றும் வேண்டாம்னு தான் சொல்றா சரி, அப்போ நான் அவளிடம் சரின்னு சொல்லிடறேன், கிளம்பலாமா'' என்று ஜயந்தி சொல்ல மூவருமாகக் கிளம்பினார்கள்.

## 13

அன்றைக்கு சற்று நன்றாகவே தூங்கினான் ராமநாதன் என்றுதான் சொல்ல வேண்டும். அன்றைக்கு



புதன் கிழமை. ஜயந்தி இவர்கள் இருவருக்கும் போன் பண்ணி 'அவள் இன்னும் இரண்டு நாள் டைம் கேட்கிறாள். ராஜேந்திரன் கேஸ் சற்று கடினமாக இருக்கிறது. அதனால்தான்' என்கிறாள் என்று சொல்லவே இவர்கள் சற்று நிம்மதியிழந்தனர். தினமும் கோவிலுக்குப் போய் வேண்டிக் கொண்டார்கள். ராஜேந்திரன் சரியாக இருக்கிறானா என்றும் பார்த்துக் கொண்டார்கள்.

மறு புதன் கிழமைதான் இவர்களை கூப்பிட்டாள் கலாவதி. மூவரையும் அஷ்டலஷ்மி கோவிலுக்கு வரச் சொன்னாள். அங்கு இவர்கள் போய் சேர்ந்தபோது ஏற்கனவே அங்கு கலாவும் ராஜேந்திரனும் வந்திருந்தார்கள். செல்லில் ஜயந்தியைக் கூப்பிட்டு அவள் இருக்கும் இடத்திற்கு வரச் சொன்னாள் கலா.

இவர்களைப் பார்த்ததும் ராஜேந்திரன் அதிர்ச்சி எதும் அடையவில்லை. முன்னமேயே கலா சொல்லியிருந்தாள் போலிருக்கிறது. அன்றைக்கு இவர்களுடன் சுப்ரமணியமும் வந்திருந்தார். இவர்களைப் பார்த்ததும் பழைய ராஜேந்திரனாக எல்லோருக்கும் வணக்கம் சொன்னான்.

''என்ன ராஜேந்திரா, எப்படி இருக்கேப்பா?'' என்று ஆதரவாக ஜயந்தி அவன் தோளில் கை வைத்துக் கேட்டாள்.

அதற்காகவே காத்திருந்தாற்போல் ராஜேந்திரன் பொல பொலவென்று கண்ணீர் உகுத்துவிட்டான். முகத்தை முழங்காலில் புதைத்துக் கொண்டு அவன் அழுவதைப் பார்க்க கண்றாவியாக இருந்தது இவர்களுக்கு.

''உங்களுக்கெல்லாம் ரொம்பக் கவலை கொடுத்து விட்டேன், இல்லையா? ரொம்ப ரொம்ப ஸாரி. என்னை மன்னிச்சுடுங்க'' என்றான்.

''ஆனால் ராஜேந்திரன் அப்படி போனதுக்குக் காரணத்தையும் நீங்க எல்லோரும் தெரிஞ்சுக்கணும், சொல்லுங்க, ராஜேந்திரன்!'' என்றாள் கலா.

''நீங்களே சொல்லுங்க, மேடம்'' என்றான் ராஜேந்திரன்.

''சரி, ராஜேந்திரனுக்கு அரவிந்த் என்று ஒரு அண்ணா இருக்கிறாராமே.''

''ஆமாம்'' என்றாள் ஜயந்தி.

''அவரால்தான் இவருக்கு இந்தப் பிரச்னையெல்லாம்'' என்று கலா சொல்லவும் எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன சொல்றீங்க, மேடம்! அரவிந்த் ரொம்ப நல்ல பையனாச்சே'' என்று ராமனாதன் சொல்ல, ''ஆமாம், ரொம்ப நல்ல பையன், நன்னா படிக்கிறவன்'' என்று சீனிவாசன் சொல்ல, சுப்ரமணியமும், ஜயந்தியும் அதை ஆமோதித்தனர்.

''பாத்தீங்களா, இதுதான் இவருடைய பிரச்னையே!'' என்றாள் கலாவதி.

''புரியலையே மேடம்!'' என்றான் ராமனாதன்.

''அவர் நல்ல உயரமாகவும், பார்க்க சிகப்பாகவும், அழகாவும் இருப்பாராமே'' என்று கலா கேட்க, எல்லோரும் ஆமாம் என்று தலையாட்டினர்.

''அதுதான் எல்லா கஷ்டங்களுக்கும் காரணம், ''என்றவள், தொடர்ந்தாள், ''ஆரம்பத்திலிருந்தே அவன் உசத்தி, தான் தாழ்த்தி என்ற மனப்பான்மை இவரை ரொம்பக் கஷ்டப் படுத்தியிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் வேறு சில காரியங்களும் இவர் வீட்டில நடந்திருக்கு. எல்லாமாச் சேர்ந்துதான் இவரை மோசமான சிநேகிதர்கள் வலையில் விழ வெச்சுருக்கு.''



அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராஜேந்திரன் எழுந்து, ''நான் கோவிலுக்குப் போய்ட்டு, வீட்டுக்குப் போகட்டுமா, நீங்கள் எல்லாம் கொஞ்ச நாழி பேசிக் கொண்டிருந்துவிட்டு வாருங்கள்'' என்றான்.

''சரிப்பா, நீ போ! நாங்களும் இதோ பத்து நிமிடத்தில் கிளம்பிவிடுவோம்'' என்றார் சீனிவாசன்.

''உங்கள் எல்லார் கிட்டேயும் நான் இன்னொருதரம் மன்னிப்புக் கேட்டுக்கறேன். இனிமேல் நான் தப்பு வழியில் நிச்சயமாகப் போக மாட்டேன் ஒழுங்கா காலேஜ் போய் நல்லா படிப்பேன், அப்பாகிட்டே தயவுசெய்து சொல்லாதீங்க, அங்கிள்!'' என்றான் ராஜேந்திரன்.

''சொல்லமாட்டோமப்பா, நிச்சயமாகச் சொல்லமாட்டோம் உங்கப்பாவுக்குக் தெரியக் கூடாதுன்னு தானே நாங்க இத்தனை ரகசியமாக எல்லாம் செய்கிறோம், நீ கவலைப் படாதே, கண்ணா! நீ நன்னா படிச்சு முன்னுக்கு வந்தா அதுபோதும் எங்களுக்கு'' என்றார் சுப்ரமணியம்.

''தேங்க்ஸ் அங்கிள், தேங்க்ஸ் ஆன்ட்டி தேங்க்யூ கலா மேடம், நான் வரேன்'' என்று கண்களில் நீர் மல்கச் சொல்லிவிட்டு கிளம்பினான், ராஜேந்திரன்.

அவன் சற்று நகர்ந்ததும் சீனிவாசன் சொன்னார் ''பாவம் ரங்கராஜனும் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களைப் பார்த்தவன் தான். இப்போதுதான் எல்லாம் சரியாகப் போயிண்டுருக்கு அவனுக்கு இதெல்லாம் தெரிய வேண்டாம்.''

''சரி கலா, இதை எப்படி சாதிச்சீங்க? சொல்லுங்களேன்'' என்றார் சுப்ரமணியம்.

''நான் நடந்தது மொத்தமும் சொல்றேன். நீங்கள் சொன்னதுபோல் முதலில் நான் ராஜேந்திரன் செல்லுக்குப் போன் பண்ணி face book-ல் உன்னைப் பற்றிப் பார்த்தேன். உன்னுடன் சிநேகிதமாக இருக்க விரும்புகிறேன் என்றெல்லாம் ரீல் விட்டு என்னைச் சந்திக்க வரவழைத்தேன். வந்த பிறகு நீ Drug யூஸ் பண்ணுவாயான்னு கேட்டதும் அவன் ''நான் ஏதோ ஓரிருமுறை உபயோகப் படுத்தியிருக்கிறேன், உனக்கு வேணுமா''ன்னு கேட்டான்.

''வேணும் உன்னிடம் கிடைக்கும்ன்னாங்களே'' என்றேன். ''யார் சொன்னது?'' என்று கோபப் பட்டான். அவனிடம் ''Drug உபயோகப் படுத்த ஆரம்பித்தால், தானே அந்த நெட் ஓர்க்கில் பேர் பிரபலமாகி விடாதா?'' என்றேன். ''முதலில் நண்பர்கள் நடுவில் பிரபலமாகும். அப்புறமாக போலீஸ் நடுவேயும் பிரபலமாகிவிடும் உள்ளே தள்ளி விடுவார்கள். ஒருதடவை போலீஸ் ரிகார்டில் பெயர் வந்தால் நீ ஆயுசுக்கும் குற்றவாளி என்று தான் கருதப் படுவாய்'' என்றேன்.

''நீங்க ஏன் என்னைப் பயமுறுத்துறீங்க? நீங்க போலீஸா?'' என்று கேட்டான்.

''நான் போலீஸெல்லாம் இல்லை. ஆனால் உன்னைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறேன்.''

''என்ன தெரியும் உங்களுக்கு? நீங்க யாரு?''

''இதோ பார்! நீ கொஞ்ச நாளா வேண்டாத வழியில் போய் வேண்டாத சகவாசங்களால் எது எதிலோ



மாட்டிண்டு இருக்கே. உங்கப்பாவே போலீஸ் ஆபீஸரானாலும் இந்த மாதிரி தப்பையெல்லாம் போலீஸும் சரி, உனக்குத் தெரிந்தவர்களும் சரி ரொம்பக் கடுமையாகத் தான் பார்ப்பாங்க. இருக்கட்டும். இதுக்கு பதில் சொல்லு. கடைசி பரிட்சை இரண்டு செமஸ்டரிலும் நீ பெயிலாமே? நிஜம்தானா?'' என்றேன் நான்.

சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டிருந்தவன், ''அதனால்தானே இதுக்குப் போனேன்'' என்று முணுமுணுத்தான்.

''இதனால்தான் அது. அதனால்தான் இது. தெரிஞ்சுக்கோ! முதல்ல நீ இந்த கெட்ட சகவாசம், பழக்கம் இதிலிருந்தெல்லாம் விடுபடணும். நான் உனக்குத் தேவையான உதவி செய்யறேன்.''

''இந்தா, இதெல்லாம் சொல்ல எனக்கு நீ யார்? நீ யாரோ என்னவோ எனக்கு முன்னே பின்னே தெரியாது. என்னவோ நீ face book-ல் வந்து கூப்பிட்டாயே, ஏதோ ஜாலியாக கொஞ்ச நேரம் பொழுது போக்கலாம்ன்னு வந்தா நீ என்னவோ ஒளவையார் மாதிரி அட்வைஸ் பண்றியே! நான் கிளம்பறேன், நீயும் கிளம்பு'' என்று கோபமாக எழுந்தான். அவன் சுபாவமாகவே சாது என்று அவனைப் பார்த்த உடனேயே தெரிந்து கொண்டேன். என்னவோ காரணம் இருக்கிறது அவன் இப்படியெல்லாம் நடந்து கொள்ள என்று மனதில் வலுவாகத் தோன்றியது.

''இதோ பார், எனக்கு உன்னோடு நிச்சயமாக உன்னோடு பேச நிறைய இருக்கிறது. நீ என்ன பண்றே, நாளைக்கும் இதே நேரத்திற்கு இங்கே வரே'' என்றேன்.

''நீ சொன்னா நான் வரணுமா? எனக்கு நீ யார்? எனக்கு வேறே வேலை இல்லையா என்ன? நான் வருவதாக இல்லை. நீ என்னை எதிர்பார்க்காதே. இன்னிக்கு நான் இங்கே வந்ததே பெரிய தப்பு'' என்றான்.

''இது தப்பில்லை. நீ போய் கொண்டிருக்கிறாயே அந்த வழிதான் தப்பு. நீ இப்போது செய்வதெல்லாம் தப்பு. நீ போகிற இடங்களும் தப்புதான். நான், நீ அதிலிருந்துஎல்லாம் வெளியே வர உதவி செய்யத்தான் உன்னைக் கூப்பிடறேன் நீ நிச்சயமாக வருவே நான் நாளைக்கு இதே இடத்தில் இதே நேரத்தில் உனக்காக காத்துக் கொண்டிருப்பேன்'' என்று சொல்லிவிட்டு எதிர்பக்கம் நடந்துவிட்டேன்.

மறுநாள் அவனுக்காக நான் அங்கே போகும் முன் அவன் எனக்காகக் காத்திருந்தான். ''ஹலோ'' என்று நான் சிநேகமாக நீட்டிய கையைப் பிடித்து நாசூக்காகக் குலுக்கினான்.

''உன்னை யார் அனுப்பினாங்க? அதைத் தெரிஞ்சுக்க மட்டும்தான் நான் இன்னிக்கு இங்கே வந்தேன். சொல்லு, எனக்கு வேறே வேலை இருக்கிறது. நான் கிளம்பணும்'' என்றான்.

''சரி, நீ இப்போ உன்னைப் பற்றிச் சொல்லப் போகிறாய்'' என்றேன் நான்.

''நீ இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்ல வில்லை. யார் அனுப்பி நீ இங்கு வந்தாய்?''

''உன் அப்பா'' என்றேன் அதிர்ந்து போய்விட்டான்.

துள்ளி எழுந்தவன், ''ஏய், விளையாடாதே! நிஜத்தைச் சொல்லு'' என்றான்.



''சரி, அதை விடு. நீ கொஞ்ச நாளா Pub-க்குப் போறே.., குடிக்க ஆரம்பிச்சுருக்கே. Drug- வேறே எடுத்துக்கறே. இதுதான் ஆரம்பம். இப்போவே நீ சுதாரிச் சுக்க முடியும்.. நீ இன்னும் இதிலே அமிழ்ந்துட்டேன்னா என்ன ஆகும்ன்னு யோசிச்சுப் பாத்தியா?''

''ஒண்ணும் ஆகாது. எனக்கு அளவு தெரியும்.''

''குடிக்க ஆரம்பிக்கும்போது எல்லோரும் சொல்ற வார்த்தைகள் தான் இது. இப்போ உனக்குத் தெரியல்லே. உனக்கு தெரியும்போது ரொம்ப லேட்டாயிடும்.''

''நீ யாரு எனக்கு அட்வைஸ் பண்ண? எனக்கு அப்பா, அம்மா, கூடப் பிறந்தவங்க எல்லாரும் இருக் காங்க, தெரிஞ்சுக்கோ.''

''நீ தான் அவங்க எல்லாரையும் வருத்தத்தில் ஆழ்த்தப் போறியே!''

''அவங்களாலேதான் நான் இப்படி ஆயிருக்கேன்'' என்று மெதுவாகச் சொன்னான். பிறகு நான் உண்மையைச் சொன்னேன். நான் யார், யார் சொல்லி அவனுடன் பேசறேன்னு தெரிஞ்சதும் அவனுக்குப் பயங்கர அதிர்ச்சி.

''இதோ பார், ராஜேந்திரா! நீ ஏதோ காரணத்தில்தான் இந்த வழில போயிண்டிருக்கே. இரண்டு ஸெமஸ்டராக உன் அப்பா கையெழுத்தை நீ போட்டுருக்கே. ஃபோர்ஜரி எத்தனை பெரிய குத்தம்னு பெரிய போலிஸ் ஆபீசரின் பிள்ளையான உனக்கு நான் சொல்லித்தான் தெரிய ணுமா? முக்கியமா எதுக்குத் தெரியுமா சீனிவாசன் ரொம்ப பயந்துண்டு இருக்கார்? நீ போகும் பப்பிலேயே போலீஸ் ரெய்ட் அடிக்கடி நடக்குமாம். ஒரு வேளை நீ பிடிபட்டால் உன் அப்பாவுக்கு எவ்வளவு பெரிய மானக் கேடு? நல்ல அப்பா, அம்மா, நல்ல வசதி

எல்லோருக்கும் கிடைப்பதில்லை. உனக்கு அந்த அதிர்ஷ்டம் இருக்கும்போது எதுக்கு இந்த வழி?''

''நல்ல அப்பா, அம்மா, ஹூம்---! நீங்கதான் மெச்சிக்கணும் உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று சொன்னவன நீண்ட யோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

அன்று அதன்பின் இருட்டிவிட்டது. நாங்கள் புறப்பட்டுவிட்டோம். அதற்கு அடுத்த இரண்டு நாள் அவன் வரவில்லை. திரும்ப ரொம்ப தரம் போன் செய்து அவனை வரவழைத்து இந்த இரண்டு மூன்று நாட்களில் நான் அவனிடமிருந்து சேகரித்த விவரம் எல்லாம் சொல்றேன் கேளுங்க!

''ஆதியிலே இவனுக்குத் தாழ்வு மனப்பான்மை வரக் காரணம் வீட்டிற்கு வந்த சில உறவுக்காரங்க தான். இவனை வைத்துக் கொண்டே இவன் ஏன் இப்படி கருப்பாய் பிறந்திருக்கிறான், பெரியவன் நல்ல சிகப்பு என்று ஏதேதோ கமெண்ட் பண்ணியிருக்காங்க. இவனுக்கு அவங்கெல்லாம் யாருன்னு கூடத் தெரியல்லே. ஆனா அவங்க சொன்ன அந்த வார்த்தைகள் அவன் மனதில் ஆழமா பதிஞ்சிருக்கு ரொம்ப வருத்தமா இருந்திருக்கு. இப்பவும் அந்த வருத்தம் இருக்கு.

அடுத்தது அவன் அண்ணா அரவிந்த் நன்னா படிக்க ஆரம்பிச்சான். அதுக்கும் ஓரளவு அவன் அப்பா, அம்மா தான் காரணம். அவனை பள்ளியில் சேர்த்து அவன் ஐந்து கிளாஸ் வருவதற்குள் அவனை முதல் ரேங்கில் கொண்டு வந்து நிறுத்திவிட முடிந்தது அவன் அம்மாவால். அவங்களுக்கும் அப்போ நிறைய நேரம் இருந்திருக்கு. ஆமாம், அப்போ அவங்க ஸ்கூல் டீச்சராக இருந்திருக்காங்க. நேரமும் நிறைய இருந்து, சப்ஜெக்டிலேயும்



தொடர்ந்து டச்சிலே இருந்ததாலே அரவிந்தை எப்போதும் வகுப்பில் முதல் மாணவனாகவே கொண்டு வர முடிந்தது.

ராஜேந்திரன் சின்னவனாக இருந்தபோது அவங்களுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் வேலை கிடைச்சுடுத்து. அதுவும் ஐந்து நாள் ஆபீஸ்தான் என்பதால் ஐந்து நாளும் தினம் வீட்டிற்கு வர லேட்டாகும். ராஜேந்திரனுக்கு சனிக்கிழமை ஸ்கூல் முழு நாள் உண்டு. ஆக, அம்மாவின் அருகாமை, அவள் பாடம் சொல்லிக் கொடுக்கறது எதுவுமே தனக்குக் கிடைக்கவே இல்லைன்னு இவனுக்கு ஏக்கம். அரவிந்திற்கு கிடைச்சிருக்குன்னு அவன்மேல் கோபம்.''

''அத்தனை சின்னவயது கோபம் இத்தனை நாள் கழிச்சு கூடவா வேலை செய்யும்?'' ஆச்சரியப்பட்டார் சுப்ரமணியம்.

''ஐயோ, நீ இதைத் தெரிந்து சொன்னது எல்லாருக்குமே ஒரு பாடம்மா'' என்றாள் ஜயந்தி.

''இன்னும் கேளுங்க! அரவிந்த் நன்றாகப் படித்து நிறைய மார்க் வாங்க வாங்க இருவரையும் ஒப்பிடுவதும் அதிகமாகி இருக்கு. இதில் என்ன கொடுமை என்றால் வெறும் சப்-இன்ஸ்பெக்டராக இருந்த ரங்கராஜனுக்கு ஆபீஸில் பிரமோஷன் அடுத்தடுத்து வர அவரும் எப்போதும் டென்ஷனாகவே இருக்கத் தொடங்கினார். அந்த நேரத்தில் இவன் சரியாக மார்க் வாங்காவிட்டால், அவர் போலீஸ்காரன் இயல்பை இவனிடம் காட்டி நிறைய நாள் அடிச்சிருக்காரு. பெல்டால் அடிக்கும் தகப்பனிடம் பிள்ளைக்கு எரிச்சல் வராதா? இவன் பாட்டிதான் இவனுக்கு ஆறுதலாக இருந்திருக்கா, ஆனா அவளையும்

இவனுக்குச் செல்லம் கொடுத்து கெடுக்காதேன்னு திட்டுவார்களாம்.

ஆனா என்ன சொன்னாலும் இவன் செய்வதையே நியாயப் படுத்த முடியாது. ஆனா பெரியவர்களும் கண்டிப்பையும், சலுகையையும் ஒரு பாலன்ஸாக காண்பிக்க வேண்டியிருக்கிறது.

''சரி, இப்போ இந்த அளவு அவன் தப்பை உணர்ந்து இனி நல்ல பையனாக இருப்பேன் என்கிறானே, அதுக்கு என்ன செஞ்சீங்க, கலா? மேற்கொண்டு என்ன செய்யணும் நாங்க? சொல்லும்மா'' என்றார் சீனிவாசன்.

''சொல்றேன், அங்கிள்! அவனிடம் எந்த தப்பையும் யாரும் வேணும்னே செய்யல்லை என்று அவன் அம்மா, அப்பா தரத்து நியாயத்தை எடுத்துச் சொல்லி ஏத்துக்க வைக்கறதுதான் பெரிய பாடாகி விட்டது. 'உன் அப்பாவும், அம்மாவும் பெரிய வேலை பார்ப்பதெல்லாம் யாருக்காக? யாருடைய வசதிக்காக? பெரிய வேலை பார்ப்பதென்பது அவர்களுக்கும் மெண்டலாக, பிஸிக்கலாக பெரிய ஸ்ட்ரெயின் தான்' என்றெல்லாம் எவ்வளவோ எடுத்துச் சொல்லிவிட்டுத் தான் கொஞ்சம் கொஞ்சமாக அவனை ஒத்துக் கொள்ள வைத்தேன். ''அரவிந்த் உன்னுடன் எப்பவாவது சண்டை போடுவானா என்றால், இல்லை ஆனால் புத்தி சொல்லிக் கொண்டே இருப்பான். ரொம்பவும் எரிச்சலாக இருக்கும் என்கிறான் குந்தவையை தெரியாத கணக்கைச் சொல்லிக் கொடுக்கிறேன் வா என்று கூப்பிட்டால் கூட அரவிந்த் அண்ணா வரட்டும், அவனிடம் சொல்லிக் கொள்கிறேன் என்று சொல்லிவிடுவாளாம்.

ஆக, உலகமே தனக்கு எதிராகத்தான் இருக்குன்னு ராஜேந்திரன் தீவிரமான எண்ணமாகிவிட்டது. எதுவுமே



யாரும் வேணும்னே செய்ததில்லை, அவர்களுடைய எந்த சூழ்நிலையில் எதைச் சொன்னார்கள், என்ன சொன்னார்கள் என்று நீ யோசிச்சா உனக்கே அவர்கள் செய்ததெல்லாம் குற்றமாகத் தோன்றாது என்று தினமும் வேப்பிலை அடித்தேன்.''

இந்த வார்த்தைகளை கலாவதி சொன்னவுடன் ஜயந்தி சிரித்துவிட்டாள். ''எதுக்கு சிரிக்கிறீங்க? கவுன்ஸிலிங்கறது என்ன? வேப்பிலை அடிக்கறதுதானே! அதைத்தான் தொடர்ந்து செய்தேன். தவிர மலர் மருத்துவத்தில் ட்ரெக்கையும், குடியையும் மறுக்கும்படியான மருந்து இருக்கு. அதைச் சாப்பிடச்சொல்லி இங்கே கொடுத்தேன். கொஞ்ச நாளைக்கு தொடர்ந்து சாப்பிடணும். சாப்பிடுவதாக சொல்லியிருக்கிறான். ஏன், சத்தியமே பண்ணியிருக்கிறான். அப்புறம் ஸ்வாமி சுகபோதானந்தாவின் புத்தகங்கள் சிலதைக் கொடுத்திருக்கிறேன். தியானம் செய்யும் முறையையும் கற்றுக் கொடுத்து அதற்கான வழிமுறையை சொல்லும் கேஸட்டும் கொடுத்திருக்கிறேன். மூன்று, நான்கு நாட்களாகவே ஆரம்பிச்சுட்டான். முக்கியமாக நீங்க இத்தனை பேர் அவனுக்காகக் கவலைப் படுகிறீர்கள் என்ற எண்ணம்தான் தான் செய்வது தப்பு என்று அவனுக்கு உணர்த்தியிருக்கிறது. அப்புறம் அவன் அப்பா, அம்மா, அண்ணா மூன்று பேரிடமும் நீங்கள் யாராவது ஒருவர் ஒரு முறை பேசி, இவன் விஷயத்தில் அவர்களுடைய அணுகுமுறையை சற்று மாத்திக்கச்சொல்லுங்க எல்லாம் சரியாகிவிடும்'' என்றாள்.

''அம்மாடி கடைசியா ஒரு கேள்வி. என் பெரிய பெண் திவ்யா மாதிரி உன்னை நினைச்சி இதைக் கேட்கிறேன். தப்பா நினைச்சுக்காதேம்மா. நீ சின்னப் பொண்ணு.

பார்க்கவும் நன்னா இருக்கே, உன்கிட்டே அவன் தப்பா எதுவும் பேசிடலையேம்மா'' என்றார் சீனிவாசன்.

''இல்லை சார். நான் முதலில் அவனை வரவழைக்க ஃபேஸ் புக் என்றெல்லாம் ரீல் விட்டேன். தவிர மறு நாளே அவனைவிட நான் பெரியவள், கல்யாணம் நிச்சய மாயிருக்குன்னு சொல்லிட்டேன். அதுவும் ரீல்தான். எனக்கு அவன் ரொம்ப ரொம்ப நன்றிதான் சொன்னான் சார். சாதாரணமாக இந்த மாதிரி பழக்கங்களெல்லாம் ஆரம்பிக்கும் போதுதான் குற்ற உணர்ச்சி இருக்கும். அப்புறம் இல்லாத, பொல்லாத நியாயத்தை எல்லாம் கற்பித்துக் கொண்டு அதில் மூழ்கிவிடுவார்கள். அப்போ வெளியே வந்துடணும்னு தோணும் ஆனால் முடியாது.

ஏதோ கடவுள் கிருபையிலே நல்லபடியா திருந்திட்டான். கொஞ்சம் எல்லோரும் அவனுக்கு கம்பெனி கொடுங்க. சாயந்திரம் TT விளையாடுங்க. உடம்பு இளைச்சுப் போகணும், நன்னா சாப்பிடணும், நன்னா தூங்கணும் அப்படி இருந்தா எல்லாம் சரியாகிவிடும். கவலைப் படாமல் போங்க. யாரும் அவனிடம் இதைப் பற்றிப் பேச வேண்டாம். சரி சார். எனக்கு நாழியாகிறது நான் கிளம்பறேன்'' என்றாள் கலாவதி.

''வாம்மா, இங்கே எல்லாம் திருட்டுப் பயம் அதிகம். நாம சேர்ந்தே போகலாம்'' என்றார் சீனிவாசன்.

''நான் ஸ்கூட்டியிலே வந்திருக்கேன் சார். மெயின் ரோட் வரை உங்களோடயே வரேன்'' என்றாள் கலா.

''அம்மா கலா. நாளைக்கு நாங்கள் உனக்கு ஒரு பரிசு ஜயந்தி மூலம் அனுப்புகிறோம். தட்டாமே வாங்கிக்க ணும்மா'' என்றார் சுப்ரமணியம்.



''எதுக்கு சார் இதெல்லாம்? நான் என்ன செய்துட் டேன் பிரமாதமாக?''

''அப்படி இல்லேம்மா. எங்க கவலைக்கு நீ முக்கியத் துவம் கொடுத்து இந்த கேசை எடுத்துண்டியே. அதுக்கு உனக்கு எப்படி நன்றி சொன்னாலும் போதாதம்மா'' என்றார் சுப்ரமணியம் ''வா போகலாம்'' என்று எல்லோரும் ஒன்றாகவே நடந்தார்கள்.

## 14

''என்ன, சாமிநாதா! என்ன பேசறே நீ? சுப்ரமணியம் காதில் விழுந்தால் என்ன ஆகும்? எப்படி வருத்தப் படுவான்? ஏதாவது யோசித்துத்தான் பேசறயா நீ?'' என்று படபடவென்று பொரிந்தார் வரதன்.

''எதுக்கு நீ இப்படி பதட்டப்படறே? நான் ஏதாவது காட்டுக்கா போறேங்கறேன்? இந்த ஊரிலேதான் இருக்கப் போகிறேன். எப்போ வேணுமோ பார்க்க முடியும். எப்போ வேணுமோ நானும் இங்கே வரலாம். நீங்களும் வரலாம். இத்தனை அப்செட் ஆக வேண்டிய அவசியமே இல்லை.''

அதற்குள் அங்கு ப்ரதீப் வந்தான். ''தாத்தா என்ன வேணும்''னு கேட்டுக் கொண்டே.

''போயி சுப்ரமணியம் அங்கிளைக் கூட்டிக் கொண்டு வாப்பா'' என்றார் வரதன்.

''இல்லை, நாம இரண்டு பேருமே அங்கே போவோம். நானும் சீக்கிரமே அவங்ககிட்டே ஒருநாள் சொல்லணும்னு

தான் நினைச்சிண்டுருக்கேன். அதை இன்னிக்கே சொல்லிட்டாப் போச்சு'' என்றார் சாமிநாதன்.

''உனக்கு ஏதோ கிறுக்குதாண்டா பிடிச்சுருக்கு! இல்லாட்டா நீ இப்படியெல்லாம் பேசமாட்டே'' என்றார் வரதன்.

இருவருமாக சுப்ரமணியத்தின் வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்களைப் பார்த்த நளினி எழுந்து வர ''பாத்துக்கோடா, இந்த காலத்திலே மாமனார் வரார்ன்னு எழுந்து நிக்கற மருமகடா உன் மருமக, உனக்கென்னடா குறை?'' என்று வரதன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே உள்ளிருந்து வெளியே வந்தார் சுப்ரமணியம்.

''வாங்க மாமா, வாங்க. உட்காருங்க'' என்று சோபாவைக் காண்பித்தார்.

''என்னப்பா, இரண்டு நாளா உன்னைப் பார்க்கவேயில்லையே! பொண்ணுங்க இரண்டும் எங்கே காணோம்?'' என்று வரதன் கேட்டார்.

''எங்கே மாமா, கடையில் கவனமாகப் பாத்துக்க வேண்டியிருக்கு. இன்னிக்கு ஏதோ முஸ்லீம் பண்டிகை. லேபர் ஹாலிடே அதனாலே கடை லீவு. பசங்க இரண்டும் சீனிவாசன் வீட்லே ரம்யா, காவ்யாவோட பேசிகிட்டு இருப்பாங்க'' என்றார் சுப்ரமணியம்.

நளினி அதற்குள் இரண்டு கப்பில் பாதாம் கீர் எடுத்து வந்தாள்.

''இந்த வேளைக்கு அதுவும் எதுத்தாப்பலே இருந்து இங்கே வந்ததற்கு எதற்கப்பா இந்த உபசாரமெல்லாம்'' என்ற வரதன், ''ஏம்பா, உங்கப்பா சொல்றதைக் கேட்டியா? என்னவோ பைத்தியக்காரப் பேச்சு பேசறாரே!'' என்று சாமிநாதனைப் பார்த்தார்.



''என்னப்பா, என்ன விஷயம்? என்ன சொன்னீங்க?''

''ஒண்ணுமில்லேப்பா, நான் ரொம்ப நாளா மனசிலே நினைச்சிண்டு இருந்ததுதான். இப்பவும் சொல்லலேன்னா அப்புறம் எப்ப சொல்றது?''

''ஏம்பா, என்ன ஆச்சு உங்களுக்கு, உடம்பு முடியல்லையா?'' என்று பதறிப் போய்க் கேட்டார் சுப்ரமணியம்.

''சொல்லுடா. இப்படி பதட்டப் படற பிள்ளைகிட்டே, எனக்கு உன்னை விட்டு எங்கேயாவது போகணும்னு இருக்குன்னு.''

''என்னப்பா, என்ன சொல்றார் மாமா?'' என்று பதட்டமாய்க் கேட்டார் சுப்ரமணியம். ''என்னை விட்டுப் போகணுமா? இப்படிச் சொல்ல எப்படிப்பா மனசு வந்தது உங்களுக்கு? இங்கே யாராவது ஏதாவது சொன்னாங்களா?'' என்று ஜாடையாக நளினையைப் பார்த்தார்.

''சொல்லுங்க மாமா. நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா? ஏதானாலும் மன்னிச்சுடுங்க, மாமா'' என்றாள் நளினி.

''நீ எல்லாம் ஒண்ணும் சொல்லலேம்மா. ஏன் இரண்டு பேருக்கும் இவ்வளவு பதட்டம்?''

'''அப்போ குழந்தைங்க ஏதாவது தப்பா பேசிட்டாங்களா? ஏய், நளினி அந்த இரண்டு கழுதைங்களையும் காதைப் பிடித்து இழுத்துண்டு வா'' என்று இரைந்தார் சுப்ரமணியம்.

''ஐயய்யோ, குழந்தைங்க இரண்டும் தங்கம். அவங்களை ஒண்ணும் சொல்லாதே.''

''பின்னே சொல்லுப்பா, உன் பிள்ளை பதறிப் போய் கேக்கறானில்லை? சொல்லு. யார் என்ன பண்ணினாங்க?'' என்று கேட்டார் வரதன்.

''ஏய். ஏம்பா எல்லோரும் அமர்க்களப் படுத்துறீங்க? ஒண்ணும் நடக்கலே, என்னை யாரும் எதுவுமே சொல்லலே.''

''பின்னே எதுக்குப்பா இப்படி ஒரு யோசனை?''

''ஒண்ணுமில்லேப்பா, ரொம்ப நாளாவே எனக்கு இப்படி ஒரு யோசனை இருக்கு. அந்தக் காலத்திலே சொல்வாங்களே 'வானப் பிரஸ்தம்'னு கேட்டதில்லையா, அதுபோல இருக்கலாம். அதுதான் சரி என்பதால்தானே அப்படி வெச்சிருந்தாங்க முன் காலத்திலே, அதை இப்போதும் கடைப் பிடிக்கலாமே என்ற எண்ணம், குறிப்பாக காரணம் ஒண்ணும் இல்லேப்பா. நான் இங்கே இருப்பதனாலே என்னை வேறு நளினி பாத்துக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தை அவளும் கடையிலே செலவழிச்சா வியாபாரம் விருத்தியாகுமே! தவிர இப்போது எனக்கு உடம்பும் நன்னா இருக்கு. இப்போதே ஒரு முதியோர் இல்லத்திலே சேர்ந்து அங்கு உள்ளவங்களுக்கு ஒத்தாசையாக இருந்தால், பின்னாடி அவங்க என்னைப் பார்த்துக் கொள்ள, சுணங்க மாட்டாங்க, இல்லையா? இப்படி ஒரு வலுவான எண்ணம் தோணி ரொம்ப நாளாறது. இப்பதான் வெளியே சொல்றேன். அவ்வளவுதான்.''

திகைத்துப் போன சுப்ரமணியம் கண்களில் நீர் மல்க, ''ஏம்ப்பா, நான் என்ன பாவம்ப்பா செஞ்சேன்? இந்த வீடு கட்ட ஆரம்பிக்கும் போதே அம்மா இல்லையேன்னு ரொம்ப வருத்தப்பட்டேன். சொந்த வீட்டில் பெத்த அம்மாவோட இருக்கும் பாக்கியம்தான் கிடைக்கலே, நீங்களாவது இருக்கீங்களேன்னு சந்தோஷமாகத்தான் இருக்கோம். உங்களை நல்லபடியாகத்தானே வெச்சுருக்கோம்? உங்களை கலந்துக்காமலோ, உங்களை மீறியோ நாங்க ஏதாவது பண்ணியிருக்கோமா? எனக்கு என்ன பண்ணணும்னே புரியல்லே. நளினி, உனக்கு அப்பாவோட இந்த முடிவுக்குக் காரணம் ஏதாவது தெரியுதா? என்னப்பா, நீங்க இப்படி சொல்றதுக்கு என்ன காரணம், உங்களுக்கு என்ன குறை இருந்தாலும் சொல்லுங்கப்பா, நான் தீர்த்து வைக்கிறேன். மாமா, நீங்கதான் அப்பாவுக்கு பெஸ்ட் பிரண்ட் ஆச்சே, நீங்க சொல்லுங்க இவருக்கு யார் மேலே என்ன கோபம், வருத்தம்?'' பேச்சாக ஆரம்பித்தவர் பேசி முடிக்கையில் அழலானார்.



''பாருடா! இந்தக் காலத்திலே இப்படி பாசமுள்ள ஒரு பிள்ளையைப் பெத்துட்டு, நீ பாசமில்லாமல் பேசறயே! ஏதாவது நியாயமிருக்கா உன் பேச்சிலே?'' என்ற வரதன் கூடவே, ''ஏய் சுப்பு, ஒண்ணு பண்ணுப்பா உன் அக்கா பூர்ணிமாவை வேணுமானா வரச் சொல்லு. கொஞ்ச நாள் அவள் குடும்பத்தோட இங்கே வந்து இருந்துட்டுப் போனா, சாமிநாதனுக்கு கொஞ்சம் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பூர்ணிமா கெட்டிக்காரியாச்சே, இவனுடைய இந்த பைத்தியக்கார யோசனையையும் அவ மாத்திடுவா'' என்றார்.

''இப்போ மனோஜுக்கு அங்கே பரிட்சை சமயம். அப்படியெல்லாம் நினைச்சவுடனே புறப்பட்டு வந்துட முடியுமா? இப்பவே போன்லே பேசலாம்'' என்று ஹைதராபாதிலுள்ள அக்கா பூர்ணிமாவுக்கு டயல் செய்தார்.

''என்னப்பா, என்னாச்சு இந்த டயத்துக்குப் போன் பண்றே. அப்பாவுக்கு உடம்பு ஒண்ணுமில்லையே?'' என்று கவலையோடு கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைக்கா அப்பா திடீர்னு முதியோர் இல்லத்திற்குப் போறாராம். என்ன,

எதுக்குன்னு கேட்டா பதிலில்லை. எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு. அதான் உனக்கு போன் பண்ணினேன்.''

''என்னப்பா சொல்றே? இப்போ என்ன குறை அவருக்கு அங்கே?'' என்று கேட்டாள். ''அப்பாகிட்டே போனைக் கொடு, நான் பேசறேன்.''

''அப்பா, பூர்ணிமா உங்களோட பேசணுமாம்'' என்று சொல்லி போனை அவரிடம் கொடுத்தார் சுப்பு.

''என்னம்மா, சௌக்கியமா இருக்கியா, மாப்பிள்ளை, குழந்தைகள் எல்லாம் சௌக்கியமா?'' என்று விசாரித்தார் சாமிநாதன்.

அடுத்து. ''ஒரு கஷ்டம். ஒரு தொந்திரவும் யாரும் கொடுக்கல்லேம்மா! என்னவோ இது ரொம்ப நாளத்திய எண்ணம். இதை செயலாக்கணும்னு பார்த்தால், உன் தம்பி. வரதன் அங்கிள் எல்லோருமா அமர்க்களம் பண்றாங்கம்மா'' என்றார்.

''வரதன் அங்கிள் அங்கே இருக்காரா, அவரிடம் போனைக் கொடுங்கள், அப்பா'' என்றாள்.

வரதன் கைக்கு ரிசீவர் போனதும், ''அங்கிள், நமஸ்காரம் வீட்லே எல்லாரும் சௌக்கியமா'' என்று விசாரித்துவிட்டு, ''ஏன் அங்கிள், அப்பா திடீர்னு இப்படியெல்லாம் பேசறார்? என்னால் உடனே புறப்பட்டு வரக்கூட முடியாது. அவர் வேற ஊர் போயிருக்கார். அதனாலே, நீங்க தயவு பண்ணி அப்பா இது மாதிரி ஏதும் பண்ணிடாமே பாத்துக்கோங்க. ஒண்ணு வேணும்னா பண்ணுங்க, அப்பாவை கொஞ்ச நாள் என்கூட வந்து இருக்கச் சொல்லுங்க. ஒரு மாறுதல் இருந்தா எல்லாம் சரியாயிடும்னு



தோணுது. நானும் எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் வரப் பார்க்கிறேன்'' என்றாள்.

திரும்ப நளினியிடம் பேசின அவள் ''அப்பாவைப் பாத்துக்கோ நளினி, வயசானா குழந்தையா ஆயிடறாங்க. என்ன பண்ணறது, எனக்கு கவலையா இருக்கே ஒழிய வேறே ஒண்ணும் செய்யத் தெரியல்லே'' என்றாள்.

''நீங்க கவலைப்படாதீங்க அக்கா! ஹைதராபாதிலேயே கலவரமும், அமர்க்களமுமாய் இருக்கு. நீங்க வேறே எங்கேயாவது புறப்பட்டு வந்துடப் போறீங்க. நான் திரும்ப நாளைக்கு உங்களோடு பேசறேன்'' என்று சொல்லி போனை வைத்தாள் நளினி.

''சரி, சரி! எல்லோரும் சாப்பிட்டுவிட்டு படுத்து தூங்குங்க. கார்த்தாலே பேசிக்கலாம்'' என்று வரதன் கிளம்பினார். அதற்குள் பெண்கள் இருவரும் வந்துவிடவே எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

அன்றிரவு சாமிநாதனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ நினைவுகள் வந்து அவரைத் தொந்திரவு செய்தன. தாம் எடுத்திருக்கும் இந்த முடிவு சரிதானா என்பது குறித்து அவருக்கே தெரியவில்லை. தனக்கு இங்கு என்ன குறை? ஒன்றுமில்லையே! ஆனாலும் போய்த்தான் ஆகவேண்டும். இது சரியா தவறா என்பது பற்றி யாரிடம் விவாதிக்க முடியும்? தங்கம் இப்போது இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? அவள் வழக்கம்போல் நல்ல ஆலோசனை சொல்லித் தன்னை வழி நடத்தியிருப்பாளோ! அவள் ஆலோசனை எப்போதும் தவறாகப் போனதேயில்லையே!

அவளைப் பற்றி நினைத்தவுடனேயே அவர் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. எவ்வளவு பெரிய, புண்ணிய

ஆத்மா அவள்! ஒரு நிமிஷத்தில் என்னைவிட்டுப் போய்விட்டாளே, கடன்காரி! அவர் நினைவு அவரின் இளமைக் காலங்களுக்குப் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

அவர் மனைவி தங்கம் பெயரைப் போலவே குணத்திலும் தங்கம்தான். ஆனால் அது அவருக்குத் தெரியவர காலம் பிடித்தது. அவளை அவர் திருமணம் செய்து கொண்டதே ஒரு பெரிய கதை. சாமிநாதனின் தந்தை சுப்ரமணியம் ஒரு கவர்ன்மெண்ட் காண்ட்ராக்டராக இருந்தார். அரசாங்கத்திலிருந்து எந்த விதமான காண்ட்ராக்ட் பற்றி அறிவிப்பு வந்தாலும் அவர் அதில் போட்டி போடுவார். அந்த விதத்தில் அவருக்கு நிறைய பேர்களின் அறிமுகம் கிடைத்தது. அப்படிக் கிடைத்தவர்களில் ஒருவர்தான் விஸ்வநாதன். ஆரம்பத்தில் தொழில் முறையில் போட்டி இருந்தாலும் நாளடைவில் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டார்கள். ஒருவரை ஒருவர் ஒருமையில் அழைக்கும் வரை அவர்களின் நட்பு வளர்ந்தது.

ஒருநாள் விஸ்வநாதனைப் பார்க்க சுப்பு அவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவர் இருந்த நிலையைப் பார்த்து திடுக்கிட்ட சுப்பு "என்ன விசு, என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி சோர்ந்துபோய் உட்கார்ந்துருக்கே?" என்று கேட்டார்.

"என்னத்தைச் சொல்ல, சுப்பு! வழக்கம்போல் இந்த தடவையும் பெண் பார்க்க வந்தவங்க தங்கத்தைப் பிடிக்கல்லேன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்கப்பா. இந்தப் பொண்ணுக்கு எப்போ விடிவு காலம்னே தெரியல்லையே" என்று சொல்லி வருத்தப் பட்டார்.



"கவலைப் படாதேப்பா. இனிமேலே எவனாவது பொறந்து வரப்போறான்? எங்கேயோ பொறந்து இருக்கான். நம்ம கண்லேதான் இன்னும் மாட்டல்லே. காலம் கனிஞ்சு வந்தா தன்னாலே உன்னைத் தேடி வருவான்" என்று ஆறுதலாகச் சொன்னார்.

சற்று நேரம் தொழில் ரீதியாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு சுப்பு புறப்பட்டார். அவர் நினைவில் விசுவின் கவலை விஸ்வரூபம் எடுத்தது. விசுவின் பெண் தங்கம் மிகவும் நல்லவள். ஆனால் பார்க்க ரொம்பவும் சுமாராகத்தான் இருப்பாள். அவளைப் பெண்பார்க்க வந்த அனைவரும் அவளை நிராகரித்து விட்டனர். நாசூக்காக நிராகரித்தவர் சிலர் பெண் பார்த்த அன்றைக்கே நிராகரித்தவர் பலர். இதனால் மிகவும் மனமொடிந்து போனார் விசு. இவர் நிலையே இப்படியென்றால் அந்தப் பெண் தங்கம் என்னத்தைச் சொல்ல? இவர்களுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமே.

பளிச்சென்று அவர் மனதில் மின்னலடித்தது. நம்ம பையன் சாமிநாதனுக்கு தங்கத்தை ஏன் பார்க்கக் கூடாது? சம்பந்திகள் ஆகிவிட்டால் தொழில் முறையிலும், நட்பு முறையிலும் எல்லா விதத்திலும் நன்மைதானே. என்ன, சாமிநாதன் அடம் பிடிப்பான். கல்யாணம் என்று ஆகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

ஒருவாரம் கழித்து சுப்பு விசுவைப் பார்க்கப் போனார். "வாப்பா, என்ன கொஞ்ச நாளாவே காணோம்?" என்று வரவேற்றார் விசு.

"என்னப்பா, அப்புறம் ஏதாவது வரன் வந்ததா?"

"போப்பா, ஒண்ணையும் காணோம். இவ கவலையே பெரிய கவலையாப் போச்சு. இப்பவே வயசு 16 ஆச்சு.

இவளுக்கு எப்போ வரன் அமைஞ்சு, எப்போ கல்யாணம் பண்றது? ஊர்லே எல்லாரும் ஒரு மாதிரியா பேச ஆரம்பிக்க மாட்டாங்களா?''

''நான் ஒரு யோசனை சொல்லட்டுமா, விசு?''

''சொல்லேன், உனக்கு தெரிஞ்ச நல்ல வரன் ஏதாவது இருக்கா?''

''உம். பையன் ரொம்பவே நல்லவன். அவன் அப்பாகூட உனக்குத் தெரிஞ்சவர்தான். அவர் நல்லவரா கெட்டவரான்னு நீதான் சொல்லணும்.''

''என்னப்பா புதிர் போடறே, யார் அவர்?''

சிறிது நேரம் தலையைக் குனிந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்த சுப்பு பளிச்சென்று கேட்டார் ''விசு, நாம ஏன் சம்பந்திகளாகக் கூடாது?''

ஒரு கணம் திகைத்துப் போன விஸ்வநாதன், ''என்னப்பா நிஜமாகத்தான் சொல்றையா, இல்லே நீயும் என்னை வேதனைப் படுத்திப் பார்க்கணும்னு பேசறியா'' என்று கேட்டார்.

''இல்லேப்பா, நிச்சயமாக இல்லை. ஒரு வாரமாகவே என் மனசிலே இந்த எண்ணம் ஓடிண்டு இருக்கு. என் பையன் சாமிநாதன் அப்படி ஒண்ணும் ஓசத்தியான அழகில்லாவிட்டாலும் பார்க்க சுமாரா இருப்பான். நீதான் பாத்திருக்கியே! பி.ஏ வரை படிச்சிருக்கான். இப்பத்தான் போஸ்டாபீசிலே வேலைக்குச் சேர்ந்திருக்கான். நல்ல பையன். அவனைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?''

மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போன விஸ்வநாதன் சுப்புவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டார். ''எனக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டமா? ரொம்ப நன்றி, சுப்பு'' என்று ஏதோ சொல்ல வந்தவர்,



திடீரென்று அவர் கையை விட்டுவிட்டு யோசனையில் ஆழ்ந்தார்.

''வேண்டாம் சுப்பு. இது விபரீத விளையாட்டு. நமக்குள்ளே தீர்மானித்தால் ஆச்சா? உன் பிள்ளை ஒத்துக்க வேண்டாமா?''

''என்னப்பா இப்படி பேசறே? அவன் என் பிள்ளை நான் சொன்னா கண்டிப்பா கேட்பான்.''

''இல்லேப்பா, நீ மத்தவங்க மாதிரி இல்லே எனக்கு. மத்தவங்க பாத்ததும் பிடிக்கலைன்னு சொன்னா அது வேறே ஆனா உன் பிள்ளையும் பிடிக்கல்லேன்னு சொன்ன நான் நொறுங்கிப் போயிடுவேன். ஆசையை வளர்த்துப்பானேன், பின்னாடி அதனால் அவஸ்தைப் படுவானேன்? இதனாலே நம்ம நட்புக்கு பங்கம் வந்துடுமோன்னு பயமா இருக்கு சுப்பு! வேண்டாம். இதை இப்படியே விட்டுடு'' என்றார் விஸ்வநாதன் அவர் கைகள் உணர்ச்சி வேகத்தில் நடுங்கின.

சுப்பு அவரை அப்படியே அணைத்துக் கொண்டார். ''இதோ பார் விசு நம்ம நட்பின் மேல் ஆணையா சொல்றேன். தங்கம்தான் என் மருமகள், நீ கவலையே படாதே!'' என்றார்.

சுப்புவின் கால்களில் விழப்போன விஸ்வநாதனைத் தடுத்து ''இதோ பார், இதெல்லாம் வேண்டாம் நமக்குள். ஒரு நல்ல நாளாப் பாத்து பெண் பார்க்க வரோம். சொல்லி அனுப்பறேன்'' என்று சொல்லி விடை பெற்றார்.

மலைத்து நின்ற விஸ்வநாதன் ''அடியே, எங்கே இருக்கே?'' என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடினார்.

நேராக தன் வீட்டிற்குச் சென்ற சுப்ரமணியம் தன் மனைவியை அழைத்து விஷயத்தைச் சொன்னார்.

அவள் என்றைக்குமே அவர் வார்த்தைக்கு மறுப்புச் சொன்னது இல்லை. இப்போது மட்டும் சொல்லவா போகிறாள்? எல்லாவற்றிற்கும் தலையாட்டிவிட்டாள்.

ஒரு புதன் கிழமை நல்ல நாளில் குடும்பத்துடன் வருவதாக விஸ்வநாதனுக்குச் செய்தி அனுப்பிவிட்டு பெண் பார்க்கப் புறப்பட்டார். சாமிநாதனுக்குப் பெண் யார் என்று கேட்பதற்குப் பயம். அவன் எப்போதுமே அப்பா முன் பேசுவதற்கே பயப்படுவான். இதை எப்படித் தெரிந்து கொள்வது? அம்மாவிடம் நைஸாகக் கேட்டான்.

''அம்மா, இப்போ நாம எங்கே போகிறோம்?''

''பெண் பார்க்கத்தான்.''

''அதுதான் தெரியரதே, எங்கே?''

''உங்க அப்பாவோட நண்பர் விஸ்வநாதன் தெரியுமில்லையா உனக்கு? அவரோட பொண்ணு தங்கத்தைத்தான் பாக்கப் போகிறோம்.''

''பொண்ணு பேரு தங்கமா, இல்லே பொண்ணே தங்கமா?''

''இரண்டும்தான் நல்ல குடும்பம்.''

''பார்க்கலாம். ஆனா எனக்குப் பொண்ணை பிடிச்சிருந்தாத்தான் சரின்னு சொல்வேன். இதை அப்பாகிட்டே சொல்லவேண்டியது உன் பொறுப்பு.''

''அப்பா எது செஞ்சாலும் சரியாத்தான்டா இருக்கும்.''

''உன் புருஷனை நீ விட்டுக் கொடுப்பியா? ஆனா இது என் வாழ்க்கை.''

''சரி, சரி! இப்பவே என்ன அதைப் பத்தி, எல்லாம் நல்லபடியா நடக்கட்டும் பார்க்கலாம்.''



சுப்ரமணியம் குடும்பத்துடன் விஸ்வநாதன் வீட்டில் போய் இறங்கினார். முக மலர்ச்சியுடன் அவர்களை வரவேற்ற விசு அவர்களை உள்ளே அழைத்து உபசரித்து உட்கார வைத்தார். பெண் பார்க்கும் படலம் ஆரம்பித்தது.

சாமிநாதன் கடைசிதடவையாக காலரைச் சரிசெய்து கொண்டு, தலையை லேசாகக் கோதிவிட்டுக் கொண்டு தயாரானான்.

பெண்ணை அழைத்து வந்தார்கள். குனிந்த தலை நிமிராமல் வந்து எல்லோரையும் நமஸ்கரித்துவிட்டு அமர்ந்தாள் தங்கம்.

''டேய் பொண்ணை நல்லாப் பாத்துக்கோ,'' என்றார் சுப்பு. தலையை சற்று தூக்கி ஓரக் கண்ணால் பார்த்தவன் திடுக்கிட்டான். 'ஐயோ, இதுவா பொண்ணு? என்ன இது? நாம கற்பனை செஞ்சு வெச்சது வேறே. இப்ப வந்து உட்கார்ந்திருக்கிறது வேறே. துளிக்கூட சம்பந்தம் இல்லையே. இப்ப எப்படி வேண்டாம்னு சொல்றது? அப்பா கொன்னுடுவாறே!'' சாமிநாதன் அவஸ்தையால் நெளிந்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த விசுவிற்குப் புரிந்துவிட்டது. சரி, இதுவும் பழையபடிதான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அவரும் நெளிந்தார்.

''விசு, பொண்ணை பாடச் சொல்லப்பா'' என்றார் சுப்பு.

கணீரென்று குரலெடுத்துப் பாட ஆரம்பித்தாள். நாட்டை ராகத்தில், ''ஸ்வாமிநாத பரிபாலயாசுமாம்'' தேனாக ஓடியது. எல்லோரும் அசைவின்றிக் கேட்டனர். சாமிநாதனும் இதனால் ஈர்க்கப்பட்டு உன்னிப்புடன்

கவனித்துக் கேட்க ஆரம்பித்தான். அவனுக்கு கர்நாடக சங்கீதத்தில் நல்ல ஈடுபாடு உண்டு. அதனால் பெண் பிடிக்கவில்லை என்றாலும் பெண்ணின் பாட்டு பிடித்து விட்டது.

''ரொம்ப நன்னா பாடறேம்மா! ஆமா, என் பிள்ளையோட பேரு என்னன்னு தெரியுமா உனக்கு?'' என்று சிரிப்புடன் கேட்டார் சுப்பு. அவள் வெட்கத்துடன் தெரியாது என்று தலையசைத்தாள்.

''விசு, இதுதான் பகவத் சங்கல்பம்கறது. எம் பிள்ளை பேரு தெரியாமலேயே அவன் பெயருள்ள ஸ்வாமி பாட்டை பாடியிருக்கா, பாரு! ரொம்ப நல்ல சகுனம்பா! ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயதார்த்தம் வெச்சுக்கலாம்'' என்றார் சுப்பு.

சாமிநாதனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்ன இது அராஜகமா இருக்கே? என் சம்மதம் கேட்க வேண்டாமா?'' அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''சுப்பு. ஒரு விஷயம், மாப்பிள்ளையோட கலந்து பேசி அப்பறமா சொல்லேன்'' என்றார் விசு பரிதாபமாக.

''நீயே தான் மாப்பிள்ளைன்னுட்டியே! அப்புறம் என்ன? எல்லாம் நான் அவனோட பேசிக்கறேன். நீ ஒரு நல்ல நாளா பார்த்துச் சொல்லி அனுப்பு, என்ன?'' என்றார் சுப்பு.

அவர்கள் திரும்பிப் போகும் போது கேட்டார். ''என்னடா, பிடிச்சிருக்கா?''

''அப்பா, இப்ப எனக்கு என்ன அவசரம்பா கல்யாணத்துக்கு? இன்னும் இரண்டு வருசம் போகலாமே?'' என்றான் தலையைக் குனிந்து கொண்டு.



''இதைப் பொண் பார்க்கப் போறதுக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாமே! ரொம்ப டீக்கா டிரெஸ் பண்ணிண்டு கிளம்பினே. இப்ப வேண்டாமா?''

''இல்லே, அவன் சம்மதத்தையும் தெரிஞ்சிண்டு நீங்க சொல்லியிருக்கலாமேன்னு...'' என்று இழுத்தாள் அம்மா.

''ஏன், சாருக்குப் பொண்ணைப் பிடிக்கல்லையாமா? மொதெல்ல பாக்கப் பிடிக்கலைன்னாலும் பார்க்கப் பார்க்க பிடிச்சு போயிடும். ஏன், உன்னை நான் பார்க்காமலேயே கல்யாணம் பண்ணிக்கல்லியா. இப்ப என்ன குறைஞ்சு போச்சு?''

''இல்லை, அது வந்து...!''

''இதோபார். விசு என் உயிர் நண்பன். அவனுக்கு நான் வாக்கு கொடுத்துட்டேன். இனிமே அதிலே மாத்தமில்லே உனக்கே தெரியும் நான் வாக்கு கொடுத்தா அதை உயிரைக் கொடுத்தாவது காப்பாத்துவேன்னு. உன் பிள்ளையைக் கேட்டுச் சொல்லு. அவன் தாலிக் கயத்தை எடுக்கறானா, இல்லே நான் தூக்குக் கயத்தை எடுக்கவா?'' என்று உறுமினார். அவர் சொன்னதைச் செய்யக்கூடியவர்.

## 15

இப்படியாகத்தானே சாமிநாதனின் கல்யாணம் அவன் சம்மதமின்றி நடந்தேறியது. முதல் கொஞ்ச நாட்கள் அவன் யாருடனும் பேசவில்லை. ரொம்பவும்

கோபமாக இருந்தான். வீட்டிலேயே இருப்பதில்லை. இருக்கும் கொஞ்ச நேரத்தையும் தங்கம் கண்ணில் தான் படாமல் பார்த்துக் கொண்டான். ஆபீஸ் முடிந்ததும் தனியாக எங்காவது போய் உட்கார்ந்து பொறுமுவான். இல்லை நண்பர்கள் வீட்டிற்குப் போய்விடுவான். முதலில் இதை சகஜமாக எடுத்துக் கொண்ட நண்பர்கள், இவனது நண்பர்கள் வீட்டு விஜயம் தொடர்ந்தது மட்டு மல்லாமல், அதிகரிக்கவும் செய்ததைப் பார்த்து 'என்னவோ சரியில்லை இவனிடம்' என்று புரிந்து கொண்டார்கள்.

''ஏண்டா சாமி, ஏன் எப்பவும் டல்லா இருக்கே'' ஒரு நண்பன் கேட்டான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைடா'' என்றான் சாமி.

''ஏய், பொய் சொல்லாதே! சம் திங் ராங் வித் யூ.''

''சேச்சே, ஐ யாம் ஆல்ரய்ட்.''

''ஏண்டா, கல்யாணம் ஆகி கொஞ்ச நாள் தான் ஆகுது. உன்னோட சாயந்திர நேரத்தையெல்லாம் எங்களோட செலவழிக்கறே? வீட்லே உன் வொய்ஃப் தனியா இருப் பாங்க என்கிற நினைப்பே உனக்கில்லையா? என்னடா ஆச்சு, ஆர் யூ நாட் ஹாப்பி?''

சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தவன் சொல்லத் தொடங்கினான்'' எஸ், ஐயாம் நாட் அட் ஆல் ஹாப்பி. டேய், நான் என் கல்யாணத்தைப் பத்தி என் னன்னவோ கோட்டை கட்டியிருந்தேன்னு உங்க எல்லாருக் கும் தெரியும். நான் ஒண்ணும் மன்மதன் இல்லைன்னு எனக்கும் தெரியும். ஆனா, நான் கொஞ்சம் அழகான நல்ல நிறத்தோடு அம்சமா உள்ள பொண்ணை பண் ணிக்கணும்னு நினைச்சதுகூடத் தப்பா? நீங்கதான் பாத்தீங்களே என் மனைவியை. கருப்பா, ஒல்லியா



அழகே இல்லாமல். சே!'' என்றான் சாமி, ''ஏழை கதா நாயகி மாதிரி ஒரு மூச்சி. எப்பப்பாரு ஒரு சோகம். அதனாலேயே எனக்கு வீட்டுக்குப் போகப் பிடிக்கல்லே'' என்றான்.

''ஏய் நிறுத்துடா. கல்யாணத்துக்கப்பறம் தன் மனை வியைப் பத்தி அடுத்தவங்க கிட்டே விமர்சிக்கறது பெரிய தப்பு. இப்ப இப்படி வருத்தப் படறியே, பொண்ணைப் பாத்துதானே சம்மதம் சொன்னே? அப்ப எங்கே போச்சு உன் புத்தி?''

''என் சம்மதத்தை யார் கேட்டா? உங்களுக்குத்தான் என் அப்பாவைப் பத்தி நல்லாத் தெரியுமே? அவர் சொன்னா சொன்னதுதான். ரோபோ மாதிரி அவர் சொன்னதை மத்தவங்க அப்படியே கேக்கணும். இல்லைனா ருத்ர தாண்டவம் ஆடிடுவார் வாக்குக் கொடுத்துட்டாராம். வாக்கு, பெரிய வாக்கு! என்னைக் கேட்டா கொடுத்தார்? தன் பிள்ளைக்கும் ஒரு மனசு இருக்குன்னு ஒரு அப்பா வுக்குத் தெரிய வேண்டாம்? எல்லாம் முடிஞ்சு போச்சு.''

''இதோ பார் சாமி! வருத்தப் படாதே இழந்ததையே நினைச்சு வருத்தப் பட்டு இருக்கறதையும் இழந்துடாதே. பிள்ளைக்கு ஒரு மனசு இருக்கும்னு அப்பாவுக்குத்தான் தெரியலே. உன் மனைவிக்கும் ஒரு மனசு இருக்குன்னு உனக்குத் தெரியல்லியே! செய்யாத தப்புக்கு அவங் களைத் தண்டிக்கறது என்ன நியாயம்? போனது போகட்டும். நாளைலேர்ந்து நீ இங்கே வராதே. சாயந்திர வேளையிலே அவங்களை எங்கேயாவது அழைச்சிட்டு போ. நீ அன்பா பேசக்கூட வேண்டாம். உன் அருகாமையே அவங்களுக்கு மிகுந்த ஆறுதலா இருக்கும். எல்லாம் காலப் போக்கிலே சரியாகிவிடும்'' என்று அறிவுரை கூறி அவனை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஏதேதோ சிந்தனையுடன் வீடு திரும்பினான் சாமிநாதன். ''என்னடா, எங்கே சுத்திட்டு இவ்வளவு லேட்டா வரே? வேலை முடிஞ்சா நேர வீட்டுக்கு வரவேணாமா'' என்றாள் அவன் அம்மா விசாலம்.

''அப்படியா? இங்கே என்ன இருக்கு அப்படி ஓடி வர?''

''என்னடா இப்படிப் பேசறே? கல்யாணம் ஆகி கொஞ்ச நாள் தான் ஆச்சு அதுக்குள்ளே இப்படி விட்டேத்தியா பேசறயே'' என்று வருத்தப் பட்டாள் அவன் அம்மா.

''அம்மா, இப்போ எனக்குப் பசிக்கிது, சாதம் போடறயா.''

ஒரு பெருமூச்சுடன் அவனுக்குச் சாப்பாடு பரிமாறினாள். இதை சமையல் கட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தங்கம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மறுநாள் வாசலில் கறிகாய் விற்பவன் வரவே சாமிக்குப் பிடித்த காய் வாங்கலாம் என்று வாசலுக்கு விரைந்தாள் அவன் தாயார் விசாலம். அங்கு எதிர்த்த வீட்டு மாமி காய் வாங்கிக் கொண்டிருந்தாள்.

''என்ன விசாலம் எப்படி இருக்கா உன் மாட்டுப் பொண்ணு?'' என்று விசாரித்தாள் காய்களைப் பொறுக்கிக் கொண்டே.

''என்னத்தைச் சொல்லறது ஒண்ணும் சரியில்லை.''

''ஏன் உன் பேச்சைக் கேக்க மாட்டேங்கறாளா?''

''அச்சச்சோ, தப்பு, தப்பு! அவ பேருக்கேத்த மாதிரி குணத்திலேயும் தங்கம் தான். ரொம்ப புத்திசாலி. எதையும் ஜாடையிலேயே புரிஞ்சிக்கறா. இந்த மாதிரி ஒரு பொண்ணு மருமகளா வரக் கொடுத்து வெச்சுருக்க வேண்டாமா?



''பின்னே என்ன உன் பிரச்னை?''

''அவ கல்யாணமாகி வந்ததிலிருந்தே ஒரு மாதிரியா இருக்கா. முகம் எல்லாம் வாடி இருக்கு. அவ அப்பா அம்மாவைப் பிரிஞ்சு வந்ததனாலே இருக்கும்னு நினைச்சேன். ஆனா நடக்கறதையெல்லாம் பாத்தா அப்படியும் தோணல்லே.''

''உன் பிள்ளை அவ கிட்டே அன்பா இருக்கான், இல்லையா?

''அங்கதான் எனக்கு ரொம்ப சந்தேகமா இருக்கு. புதுசா கல்யாணம் ஆன பிள்ளை மாதிரியே இல்லை அவன். சாயந்திரம் ரொம்ப லேட்டா வரான். கேட்டா ஏதேதோ சால்ஜாப்பு சொல்றான். அவளை வெளியே அழைச்சிண்டு போறதே இல்லை. நம்ம காலம் போல இல்லாமே நான் அவங்களை வெளியே போய் சுத்திட்டு வாங்கடாங்கறேன். இவன் காதிலேயே போட்டுக்கறதில்லை.''

''நான் ஒண்ணு சொல்லட்டுமா, நீ தப்பா எடுத்துக்கக் கூடாது.''

''சொல்லேன்.''

''நீ கொஞ்சம் ஒதுங்கி இருக்கப் பாரேன், பிரச்னை தானாகவே சரிபாயிடும்.''

''என்ன சொல்றே நீ? நான் அவங்களை ஒண்ணும் சொல்றதில்லையே!''

''நான் அந்த அர்த்தத்திலே சொல்லலே! தான் இன்னும் கொஞ்சம் புருஷனோட நெருக்கமா இருக்கணும்னு அந்த பொண்ணு நினைக்கறதோ என்னவோ. நீ ஒண்ணும் சொல்ல மாட்டேன்னாலும் அவளுக்கு கொஞ்சம் தயக்கமாக இருக்கும் இல்லையா.''

''அப்படீங்கறே?''

''ஆமாம். உம் பிள்ளை ஆபீஸிலிருந்து வரபோது நீ அவன் கண்ணிலேயே படாதே. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நாமே எல்லாம் செய்ய முடியும்? அவனைக் கவனிச்சுக்கத்தான் தங்கம் வந்துட்டாளே! அநேகமா இதிலே எல்லாம் சரியாயிடும் பாரேன்!'' என்றாள்.

''சரி பார்க்கலாம்'' என்ற விசாலம் உள்ளே போய்விட் டாள்.

அன்று இரவு சுப்ரமணியம் சற்று முன்னமேயே வீடு வந்துவிட்டார். ''என்ன, சாமி இன்னும் வீட்டுக்கு வரலியா?'' என்று விசாலத்தைக் கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே சாமிநாதன் உள்ளே நுழைந்தான். அப்பா சாப்பிட அமர்ந்திருப்பதைப் பார்த்து அப்படியே மெதுவாக நழுவி மாடிக்குப் போகப் பார்த்தான். அவனுக்கு இப்போதெல் லாம் அப்பாவோடு கூட அமர்ந்து சாப்பிடுவதென்றால் சற்று பயம்தான், ஏதாவது சொல்லுவார். ஆனால் முன்பெல்லாம் இருவருமாக சேர்ந்துதான் சாப்பிடு வார்கள். ஒன்றும் பெரிதாகப் பேசிக் கொள்ள மாட் டார்கள் மௌனமாகவே சாப்பிட்டுவிட்டு பிரிந்துவிடு வார்கள்.

ஆனால் கொஞ்ச நாளாகவே அவருக்கு ஒரு மன உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. சாமிநாதன் விஷயத்தில் தவறு செய்துவிட்டோமோ என்று. அவன் சம்மதத்தையும் கேட்டிருக்க வேண்டும். அதற்கேற்றாற் போல் அவனும் தங்கத்துடன் சுமுகமாக இல்லை என்பதையும் கவனித்து வைத்திருந்தார்.



சாமிநாதன் நைஸாக மாடிக்கு நழுவுவதைப் பார்த்த சுப்பு அவனைக் கூப்பிட்டார். ''என்னடா, சாப்பிட வேண்டாமா, நீ பாட்டுக்கு மாடிக்குப் போறே? கை கால் அலம்பிண்டு வா, சாப்பிடலாம்'' என்றார்.

''நீங்க சாப்பிடுங்கப்பா. நான் அப்புறமா சாப்பிட்டுக் கறேன்.''

''உனக்குன்னு தனியா ஒருதரமா போடறது. வா வந்து உட்கார் உனக்கப்பறம் மத்தவங்களெல்லாம் சாப்பிட வேண்டாமா.''

சாமிநாதன் கை கால்களை அலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

விசாலம் பறிமாற ஆரம்பித்தாள். இந்த காலம்போல் அந்தக் காலத்தில் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப் பிடுவது என்பது கிடையாது. ஆண்கள் எல்லோரும் சாப்பிட்டபிறகு தான் பெண்கள் சாப்பிடுவார்கள். சாதம் பரிமாறிவிட்டுத் திரும்பியவள் தலையை சுற்றவே பக்கத்து சுவரைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏய். என்னாச்சு விசாலம்?'' என்று கேட்டார் சுப்பு.

''ஒண்ணுமில்லே. கொஞ்சம் தலையை சுத்தித்து. அவ்வளவுதான்.''

''இதோ பார்! நீ இன்னும் எத்தனை நாள்தான் இந்த காரியமெல்லாம் செய்வே? அதுதான் மாட்டுப் பொண் வந்துட்டாளே! இனிமே அவள் கிட்டே இந்தப் பொறுப்பை யெல்லாம் ஒப்படைச்சுட்டு நீ நிம்மதியா இரு! ஆமா சொல்லிட்டேன்'' என்றார். அடுத்த நாளிலிருந்து அந்தப் பொறுப்பை தங்கம் ஏற்றுக் கொண்டாள். இப்படியே சில நாட்கள் கழிந்தன.

அன்று சாமிநாதன் சற்று முன்னமேயே வந்துவிட்டான். நேரே வீட்டிற்குள் வந்தவன் கை கால்களையும் முகத்தையும் கழுவிக்கொண்டான். முகத்தைத் துடைத்துக் கொள்ள டவலைத் தேடியபோது, புதுத்துவாலையுடன் ஒரு வளைக்கரம் அவன் முன் நீண்டது. ஒரு கணம் தடுமாறியவன், தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''அம்மா, அம்மா'' என்று கூப்பிட்டான்.

''அம்மா வெளியே போயிருக்கா'' என்றாள் தங்கம்.

''எங்கே?''

''கோவிலுக்குப் போயிருக்கா.''

பதில் பேசாமல் அவளிடமிருந்து டவலை வாங்கி முகத்தைத் துடைத்துக் கொண்டவன் திரும்ப அவளிடம் கொடுக்காமல் பக்கத்தில் இருந்த கொடியில் போட்டான்.

''சாப்பிட வரீங்களா?''

''எல்லாம் அம்மா வரட்டும், அப்புறம் பாத்துக்கலாம்.''

''இல்லே, அம்மா வரதுக்கு நேரமாகும்னு சொன்னா. உங்களுக்கும் பசி தாங்காது. அதுதான்...!'' தனக்குப் பசி தாங்காது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறாளே பேஸ்! கல் மனது லேசாகக் கரைய ஆரம்பித்தது.

''சரி போடு.''

அவள் பரபரவென்று செயல்பட்டாள். அவன் நன்றாக ரசித்து சாப்பிடக் கூடியவன். சாப்பிடும்போது ஒரு முறையோடுதான் சாப்பிடுவான். எதற்கப்புறம் எதைப் போட வேண்டும் எவ்வளவு போடவேண்டும் என்பதை அவன் தாயார் விசாலம் நன்கு அறிந்து வைத்திருந்தாள்.

ஏதோ சிந்தனையில் சாப்பிட உட்கார்ந்தவன் சிறிது சாதத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.



பக்கத்தில் தான் சாப்பிடும் அளவுக்குமேல் நெய் இருப்பதைக் கண்டு ''என்னம்மா, இன்னிக்கு நெய் அதிகமாயிருக்கு'' என்று கேட்டான்.

''அம்மா இன்னும் கோவிலிலிருந்து வரலே.''

திடுக்கிட்டுத் தன் சுய நினைவிற்கு வந்தவன் தங்கத்தை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு தன் சாப்பாட்டுத் தட்டை நோக்கினான். எல்லாம் நேர்த்தியாக அளவுடன் பறிமாறப் பட்டிருந்தது, நெய்யைத் தவிர.

''நான் தான் கொஞ்சம் நெய் அதிகம் போட்டேன். கொஞ்ச நாளாகவே உங்க உடம்பு இளைச்சிருக்கு. ஆபீசில் கடுமையாக உழைச்சிட்டு வரவங்களுக்கு உடம்பிலே தெம்பு இருக்கணும் இல்லையா? அதனால்தான். தப்பா இருந்தா மன்னிச்சுக்கோங்கோ'' என்றாள் தங்கம்.

''ம்'' என்றான் தன் முக மலர்ச்சியை மறைத்துக் கொண்டு. பரவாயில்லை நல்ல பொண்ணுதான். அன்றைய சாப்பாடு சற்று அதிகமாகவே உள்ளே இறங்கியது.

சாப்பிட்டுவிட்டு சற்று ஓய்வாக நாற்காலியில் அமர்ந்தான். சற்று நேரத்தில் திரும்பி வந்த விசாலம் அவன் நாற்காலியில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

''வாப்பா, எப்போ வந்தே? நான் கோவிலுக்குப் போயிருந்தேன். இந்தா பிரசாதம் எடுத்துக்கோ. கை, கால் அலம்பிண்டு வா, சாப்பிடலாம்.''

''நான் சாப்பிட்டாச்சு, அம்மா, இன்னிக்கு உன் சமையல் அபாராம், அவ்வளவு நன்னா இருந்தது.''

''அப்படியா,'' என்று சிரித்தவள் ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ, இன்னிக்கு நான் சமையல்கட்டுப் பக்கமே போகலே!''

அசடு வழிய சிரித்துக் கொண்டு, ''நானும் அப்படித் தான் நினைச்சேன். ஏன்னா ரசத்திலே கொஞ்சம் உப்பு கூட, சாதம் கூட கொஞ்சம் குழைஞ்சிருந்தது.''

''அப்படியா, அப்போ கொஞ்சமாத்தான் சாப்பிட் டிருப்பே?''

''அப்படீன்னு இல்லே. நன்னா பசிச்சதா, அதான்...!'' அசடு ஆறாக ஓடியது.

சிரித்துக் கொண்டே உள்ளே போன விசாலம் கதவருகில் நின்று கொண்டு எல்லாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்த தங்கத்தை அணைத்துக் கொண்டு திருஷ்டி கழித்தாள்.

விசாலம் அன்றையிலிருந்து மாலை வேளைகளில் கோவிலுக்குத் தவறாமல் போய் தவறிப் போயும் முன் னமே வராமல் நடந்து கொண்டாள். இரு வாரம் இப்படியே ஓடியது.

அன்று சற்று முன்னமேயே வந்துவிட்டான் சாமிநாதன். உள்ளே நுழையவிருந்தவன் வீணை இசையுடன் பாட்டும் கேட்கவே சற்று தயங்கி நின்றான். உள்ளே பூஜை அறையில், வீணையுடன் அமர்ந்து தங்கம் தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள் பைரவி ராகத்தில் ''தாயே ஏழைபால்'' என்ற கீர்த்தனையை வீணையில் வாசித்துக் கொண்டே பாடினாள். உள்ளே நுழைந்து கை கால்களை அலம்பிக்கொண்டவன் சற்று மறைவாக நின்றுகொன்டு கேட்க ஆரம்பித்தான். ஓ இவளுக்கு வீணை கூட வாசிக்க வருமா? மிக நன்றாக வாசிக்கிறாளே!

தங்கம் அந்தப் பாட்டின் சரணத்தில் மிதந்து கொண் டிருந்தாள். 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, எட்டாத பேராசை கோட்டை கட்டி' சரளமாக ஸ்ருதி



சுத்தத்துடன் நிரவல் பண்ணிக் கொண்டிருந்தாள். ஓ, இவ்வளவு திறமைசாலியா இவள்? தெரியாமல் போயிற்றே! தன்னை மறந்து 'சபாஷ்' போட்டுவிட்டான்.

திடுக்கிட்டு திரும்பியவள் அவன் நிற்பதைப் பார்த்து விட்டு பாட்டை நிறுத்திவிட்டாள். ''மன்னிச்சுக்கோங்கோ, நீங்க வந்ததை நான் கவனிக்கல்லே'' என்று எழுந்திருக்க முயன்றவளைத் தடுத்தான். ''இல்லை தங்கம், பாடு. உனக்குள்ளே இவ்வளவு திறமை இருக்கறதை நான் இத்தனை நாள் கவனிக்கவேயில்லை. என் தப்புத்தான். இந்த பைரவி ராகம் எனக்கு ரொம்பவே பிடிக்கும். ராகங்களில் ராணி அவள் அதை இன்னும் அழகூட்டி நீ இப்ப பாடினது என் மனசு நிறைஞ்சு விட்டது. ஆமாம், உனக்கு இன்னும் என்னென்ன தெரியும்?'' என்றான், பரவசத்தோடு. அதற்குள் அம்மா அங்கு வந்துவிடவே நைஸாக நழுவி விட்டான்.

பிரமித்து நின்ற அவளையும், அவள் முகத்தில் நிறைந்திருந்த மலர்ச்சியையும், கண்களில் இருந்த நீரையும் கண்டு ஒன்றும் சொல்லாமல், மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன் அந்த இடத்தை விட்டு அகன்றாள் விசாலம்.

இப்போது கல் நெஞ்சு முழுமையாக கரைந்து தூள் தூளாகிவிட்டது. இப்போதெல்லாம் அவன் ஆபீஸ் முடிந்ததும் பத்தாவது நிமிஷத்தில் வீட்டில் ஆஜர். விசாலம் வழக்கம் போல் விலகிக் கொண்டாள். அவள் எதிர்பார்த்ததும் இதைத்தானே! அம்பாளுக்கு மனதார நன்றி சொல்லி அர்ச்சனை செய்தாள். இந்த மகிழ்ச்சியும், அன்னியோன்யமும் தொடர வேண்டும் என வேண்டிக் கொண்டாள். தன்னை விரைவில் பாட்டியாக்கிவிட்டால்

எவ்வளவு நன்றாக இருக்கும்? அவள் ஆசைப் பட்டதில் தவறில்லை. ஆனால் அதற்குத்தான் அவளுக்கு கொடுப்பினை இல்லாமல் போயிற்று. அம்பாளின் கருணை வெள்ளம் இந்த இடத்தில் சற்று வற்றிவிட்டது ஆம்! அவள் நோய்வாய்ப்பட்டாள்.

என்ன வியாதி என்றே தெரியவில்லை. எத்தனையோ டெஸ்ட்கள் எடுக்கப்பட்டன. எத்தனையோ டாக்டர்கள் அழைக்கப் பட்டனர். அவள் உடம்பு நாளுக்கு நாள் தேய்ந்ததே தவிர தேறவேயில்லை. இத்தனை நாள் அவள் வேலைகளை தட்டுத் தடுமாறி அவளே செய்து கொண்டிருந்தவள் ஒரு நாள் அதுவும் முடியாமல் படுத்த படுக்கையாக்கிவிட்டாள். பணம்தான் கரைந்ததே தவிர பலன் ஒன்றுமில்லை.

இப்போது எல்லாமே தங்கம்தான். வீட்டு வேலைகளையும் பார்த்துக் கொண்டு மாமியரையும் மாமனாரையும் கவனித்துக் கொண்டு, வீட்டின் வரவு செலவுகளையும் கவனித்துக் கொண்டு பம்பரமாய்ச் சுழன்றாள். எந்த வித அருவறுப்புமின்றி விசாலத்திற்கு அவள் பணிவிடை செய்த விதம் சாமிநாதனை மிகவும் உருக்கிவிட்டது. அதுவும் இல்லாமல் அவள் தன் அப்பாவைப் பார்த்துக் கொண்டதும், அவர் எள் என்பதற்குமுன் எண்ணெயாக நிற்பதையும் கண்ட அவன் மனம் மகிழ்ந்தான். அவன் அகக் கதவைத் திறந்து கொண்டு தங்கம் மெல்ல உள்ளே புகுந்தாள்.

அன்று இரவு சாமிநாதன் விசாலம் அருகில் அமர்ந்து சாத்துக்குடிப் பழத்தை உரித்துக் கொண்டே ''அம்மா, இன்னிக்கு எப்படிம்மா இருக்கே? நீ உடம்பு தேறி வந்து உன் கையாலே மறுபடியும் சாப்பிடணும்னு ஆசையாய் இருக்கு.''



''எனக்குக் கூடத்தான் அந்த ஆசை இருக்கு ஆனா அது சாத்தியமான்னுதான் தெரியல்லே.''

''என்னம்மா அப்படிச் சொல்றே? நீ ரொம்ப சீக்கிரம் சரியாகி பழைய மாதிரி ஆயிடுவேம்மா. கவலைப் படாதே!''

''என்னைப் பத்தின கவலையை விடு. எனக்கு உன் கவலைதான் ஜாஸ்தியா இருக்கு. ஏம்பா, நீ சாப்பிட்டாச்சா?

''ஆச்சும்மா.''

''தங்கம் சாப்பிட்டுட்டாளா?''

''சாப்ட்டுருக்கணும்.''

''இதுதான் எனக்குப் பிடிக்கவே, நீ ஒருநாள் லேட்டா சாப்பிட்டாலும் உனக்காக அவள் காத்திருந்து நீ சாப்பிட்டப்பறம்தான் சாப்பிடுவா. உனக்கானால் அவளைப் பத்தின அக்கறையே இல்லை.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா.''

''இதோ பாரப்பா! பிடிச்சோ பிடிக்காமலோ நீ அவளைக் கல்யாணம் பண்ணிட்டாச்சு. நானும் கவனிச்சுண்டுதான் வரேன். நீ அவளைச் சரியாகவே நடத்தறதில்லே.. நீ இப்படி உதாசீனப் படுத்தற மாதிரி அவ என்ன தப்பு செஞ்சா? நாம நினைக்கறது எல்லாம் நடந்துட்டா அப்புறம் தெய்வம் ஏதுமில்லை. அவளை மாதிரி ஒரு மனைவி கிடைக்க நீ கொடுத்து வெச்சுருக்கணும். உடல் அழகு எத்தனை நாள் வரும்? இரண்டு பிள்ளை பெத்தா உடல் வாடிடும். மனசழகுதாம்ப்பா ரொம்ப முக்கியம். நம்ம சந்ததி உன்னோடு முடிஞ்சுடுமோன்னு எனக்கு கவலையா இருக்கு. நான் சாகறதுக்குள்ளே என்

பேரனோட பிஞ்சுக் கையாலே அடி வாங்கணும்னு ரொம்ப ஆசையா இருக்குப்பா எனக்கு அந்தக் கொடுப்பினை இருக்கோ என்னவோ?'' என்று சொல்லி வருத்தப் பட்டாள்.

சாமிநாதன் தர்ம சங்கடத்தில் நெளிந்தான். அவனும் இப்போது முன்மாதிரி இல்லை. அவளோடு சகஜமாகப் பேசுகிறான். அவள் கையால் சாப்பாடு போடச் சொல்லி சாப்பிடுகிறான். ஆனாலும் அவன் இன்னும் தாம்பத்யத் திற்கு தயாராக இல்லை. அந்த நெருக்கம் ஏனோ அவன் மனதில் இதுநாள் வரை ஏற்படவில்லை.

''அம்மா வருத்தப் படாதே. இந்தா இந்தப் பழத்தைச் சாப்பிடு'' என்று அவளுக்கு அந்த பழத்தை ஊட்டி விட்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன அன்று ஒரு வெள்ளிக் கிழமை. ஆபீசில் அன்று வேலை அதிகமில்லையாத லால் சாயங்காலம் அவன் சுருக்கவே வீடு திரும்பிவிட் டான். அவன் மனதில் அம்மாவின் வருத்தம் குடைந்து கொண்டிருந்தது. என்ன செய்வது. இப்போது மனதில் அவ்வளவாக வெறுப்பு இல்லாவிட்டாலும் இதற்கான தைரியம் ஏதோ உண்டாகவில்லை.

வீட்டிற்கு வந்தவனை வீணையும் வாய்ப்பாட்டும் வரவேற்றன. வழக்கம்போல் ஸ்வாமி சன்னதியில் விளக்கேற்றி வீணையுடன் அமர்ந்து பாடிக் கொண்டிருந் தாள் தங்கம். காப்பி ராகத்தில் ''என்ன தவம் செய்தனை, யசோதா'' அமிர்தமாக ஒடியது. அவனுக்கு மிகவும் பிடித்த பாட்டு. அதற்கு இவள் எப்படியெல்லாம் மெருகேற்றிப் பரவசப் படுகிறாள். கண்ணன் இவளுடன், ஆடுகிறான், பாடுகிறான், கொஞ்சுகிறான், கெஞ்சுகிறான்.



''ஓ இவள் மனதில் இப்படி ஒரு ஏக்கம்தான் பாட்டாக வெளிப்படுகிறதா? யசோதையைப் போல இவளும் குழந் தையை கையில் ஏந்தி, சீராட்டி, பாலூட்டி தாலாட்ட ஆசைப் படுகிறாள். நான் ஒரு மடையன். என் உணர்ச்சி களுக்கு அப்பா மதிப்பு கொடுக்கவில்லை என்று நினைத்து வருத்தப் பட்டேனே தவிர அவள் உணர்ச்சி களுக்கு நான் மதிப்பு கொடுக்கிறேனா?'' அவளின் குழந்தை ஏக்கம் இவனையும் பற்றிக் கொள்ள ஆரம் பித்தது.

சாமிநாதன் தன்னை மறந்தான். அந்தப் பாட்டின் மென்மை, அவளின் குரல் வளம் அவளின் எளிமையான உடை அலங்காரம் (இத்தனை நாள் ஏன் என் கண்ணில் படவில்லை) எல்லாம் அவன் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச வெறுப்பையும் சுத்தமாகத் துடைத்தெறிந்து விட்டது. வேகமாக உள்ளே நுழைந்தவன் ''தங்கம்'' என்று கனிவுடன் அழைத்துக் கொண்டே அவளைத் தழுவிக் கொண்டான். திகைத்து, திக்குமுக்காடிப் போனாள் தங்கம். அப்படியே அவன் கால்களில் சரிந்து விழுந்து நமஸ்கரித்தாள்.

''என்னை மன்னித்து விடு, தங்கம்! நீ இத்தனை நாள் என் அருகாமையில் இருந்தும் உன் அருமை எனக்குத் தெரியாமல் போயிடுத்து... உடல் அழகே பெரிசுன்னு நினைச்சிண்டு இருந்த என்னை நீ மாத்திட்டேம்மா! இனிமே என்னைப் பொருத்தவரை நீ தான் உலக மகா அழகி. நீ அம்மாவைப் பாத்துக்கற பொறுமை, வீட்டை நிர்வகிக்கிற திறமை, என்னன்னு சொல்ல, எப்படிப் புகழ? நான் இத்தனை நாள் கண்ணிருந்தும் குருடனாக இருந்ததற்கு ரொம்பவே வெக்கப் படறேன். என்னை

மன்னிச்சுடும்மா இனிமே உன்னை என் கண்ணிலே வெச்சு காப்பாத்துவேன்'' என்று நா தழுதழுக்கச் சொன்னான். அம்பாள் சன்னதியில் அவன் சொன்னதை கடைசி வரை காப்பாற்றினான்.

அன்று உருவானவள்தான் அவனின் பெண் பூர்ணிமா.

சில நாட்கள் சென்றன. அம்மாவின் உடல்நிலை திடீரென்று மோசமடைய ஆரம்பித்தது. அவளின் ஆசை நிறைவேறுவதற்குள் காலன் முந்திக் கொண்டுவிட்டான். ஆனாலும் அவள் தன் பிள்ளை சாமிநாதன் தங்கத்துடன் சந்தோஷமாக குடும்பம் நடத்துவதைப் பார்த்துவிட்டுத்தான் கண்களை மூடினாள்.

அவளின் சாவு அந்தக் குடும்பத்தை ரொம்பவே பாதித்துவிட்டது. தங்கம் சொல்லிச் சொல்லி அழுதாள். அம்மா எவ்வளவு நல்லவள், எவ்வளவு பெரிய விவேகி, தன்னை எப்படியெல்லாம் நன்றாகப் பார்த்துக் கொண்டாள் என்று... சாமிநாதன் அவளுக்கு ஆறுதல் சொல்லி தன் துக்கத்தையும் மறக்க முயன்றான். சுப்ரமணியம் ரொம்பவே தளர்ந்து போய்விட்டார். இப்போது இவர்கள் எல்லோருக்கும் தங்கம்தான் பக்கபலமாகவும் உறு துணையாகவும் இருந்தாள்.

காலாகாலத்தில் தங்கத்திற்குப் பெண் குழந்தை பிறந்தது. அதைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள். எப்போதும் அவள் எண்ணம், செயல் எல்லாம் அந்தக் குழந்தையைச் சுற்றியே இருந்தது. சாமிநாதன் வியந்து போனான். தாய்மை என்பது இதுதானா? அந்தக் குழந்தையின் சிறு அசைவைக் கூட அவள் புரிந்து கொண்டு செயல்பட்ட விதம் அவனைப் பிரமிக்க



வைத்தது. அவ்வப்போது உடல்நிலை சரியில்லாமல் படுக்கும் மாமனார் மனம் கோணாமல் சேவை புரிந்தாள். இந்நிலையில் அவள் மறுபடியும் கருவுற்றாள். இந்த தடவை அவர்கள் தங்களுக்கு ஆண் குழந்தைதான் பிறக்கும் என்று உறுதியாக நம்பினார்கள் அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. குழந்தைக்கு சுப்பிர மணியன் என்றுதான் பெயர் வைக்க வேண்டும் என்று சாமிநாதன் பிடிவாதமாகப் சொல்லிவிட்டான். ''எதற்கப்பா என் பெயர்? என்று அவர் கூறியும் அவன் ''இல்லை யப்பா, இந்தப் பெயரே இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டான். தனிமையில் அவன் தங்கத்திடம் ''நம்ம கல்யாணமான புதுசுலே எனக்கு அப்பா மேலே கோபம் இருந்தாலும் அவர் எனக்கு எவ்வளவு பெரிய நன்மை செய்திருக்கார் என்பது இப்போதுதான் புரிந்தது. என் பிடிவாதத்திற்கு இணங்கி உன்னை மருமகளாக்கிக்க அவர் மறுத்திருந்தா நான் எவ்வளவு பெரிய பொக் கிஷத்தை இழந்திருப்பேன்? கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் இந்த சந்தோஷம் எனக்கு வந்திருக்குமா? அதற்கு நன்றிக் கடனாக என் அப்பாவின் பெயர்தான் வைக்கணும்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான். அதைத் தங்கமும் மனதார வரவேற்றாள்.

காலம் உருண்டோடியது. அவ்வப்போது உடல் நலம் குன்றிப் படுத்த சுப்ரமணியம் ஒரு நாள் கீழே விழுந்து தலையில் அடிபட்டு, அதே சாக்கில் காலமானார். அது அவர்களுக்கு ஒரு பெரிய இழப்பாக இருந்தாலும் தங்கமும், சாமிநாதனும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள். ஆனால் விதி வேறு விதமாக அவர்களுடன் விளை யாடத் தீர்மானித்தது அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் அவர்கள் தங்கள் இரு குழந்தைகளுடன் எங்கோ சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வரும் வழியில் ஒரு ரயில்வே லெவல் கிராசிங் உண்டு. அதன் அருகில் வந்ததும் நிறைய மனிதர்கள் கும்பலாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். சாமிநாதன் வேறு குறுக்கு வழியாகப் போய்விடலாம் என்று சொன்னான். ஆனால் அவளின் போதாத காலமோ என்னவே அவள் ''அது என்ன என்று பார்த்துவிட்டுத்தான் போவோமே'' என்றாள். கும்பலைத் தள்ளிக் கொண்டு முன்னே சென்றவர்கள் கண்டது..! அப்பப்பா! கோரம்! ஒரு ஆண் உடல் இரண்டாக வெட்டப் பட்டு தண்டவாளத்தின் அருகில் சிதைந்து கிடந்தது. எவேனா ஒரு துர்பாக்கியசாலி ரயில் வரும் போது கடந்திருக்கிறான். சாமிநாதன் சட்டென்று தங்கத்தையும் குழந்தைகளையும் திருப்பி அழைத்து வேறு வழியாக சென்றுவிட்டான். ஏதோ அந்த பொழுதில் மிக்க வருத்தமாக இருந்தாலும் காலப்போக்கில் மறக்க வேண்டிய நிகழ்வுகளில் ஒன்றுதானே அது!

ஆனால் தங்கத்தால் அதை அப்படி எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவள் மனதில் அந்த காட்சி திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது. சாமிநாதன் வேலை முடிந்து அந்த வழியாகத்தான் வருவான் என்பது அவளுக்குத் தெரியும். ஐயோ! இந்த மாதிரி ஏதாவது அவனுக்கு நடந்துவிட்டால்? நினைக்கவே அவள் உடம்பு நடுங்கியது. அவன் எவ்வளவு தேற்றியும் அவளால் அதை மறக்க முடியாமல் தவித்தாள். இது அவளை படுக்கையில் தள்ளிவிட்டது. ஒரு நாள் காலை அவள் வழக்கம்போல் எழுந்திருக்கும் நேரத்தில் எழுந்திருக்காத



தால் சாமிநாதன் பதறிப் போய் அவளை எழுப்ப முயன்றான். எல்லாம் முடிந்து விட்டது என்பது அவனுக்குப் புரிய சற்று நேரம் பிடித்தது. ஆமாம். அவள் ஒரு நல்ல ஆத்மா இல்லையா. அதுதான் யாருக்கும் எந்த தொந்திரவும் கொடுக்காமல் சுமங்கலியாய் அம்பாளின் திருவடிகளை அடைந்துவிட்டாள்.

கதறி அழுதான், இப்படி இரண்டு பிஞ்சுகளை விட்டுவிட்டு போயிட்டியே என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான். என்ன அழுது என்ன செய்ய? போன மகராசி போய்விட்டாள். இனி இவர்களை எப்படி வளர்த்து ஆளாக்குவது? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். இவர்களை எப்படியும் நல்லவர்களாக வளர்த்து ஆளாக்க வேண்டியது என் பொறுப்பு. என் தங்கம் தெய்வமாக இருந்து எனக்கு வழி காட்டுவாள் என்று மனதைத் தைரியப் படுத்திக் கொண்டு மிகவும் சிரமப் பட்டு அவர்களை ஆளாக்கிவிட்டார் சாமிநாதன்.

## 16

**ரா**ஜேந்திரன் 'நல்ல பிள்ளையாக இருக்கிறேன் என்று சொன்னதிலிருந்து அவன் நடவடிக்கைகளில் ஒ நல்ல மாற்றம் தெரிந்தது. சீக்கிரம் எழுந்து சூரிய நமஸ்காரம் செய்தான். ஜாகிங் போனான். காலையி லேயே உட்கார்ந்து படித்தான். சரியான நேரத்திற் புறப்பட்டு காலேஜ் போய் சரியான நேரத்திற்கு திரும்பி வந்தான் ஓரிரு நாட்கள் அவனைத் தேடிவந்த சிநேகி

களை அவன் இல்லை என்று குந்தவையைவிட்டுச் சொல்லச் சொன்னதை ராமநாதன் கவனித்தார். இதையெல்லாம் சீனிவாசனிடம் சொல்லி ஆனந்தப் பட்டார். கணேசனிடம் நடந்த விஷயம் மொத்தத்தையும் ஜயந்தி சொல்லியிருந்தாள். ரங்கராஜன் இல்லாத ஒரு வேளையில் அவரிடம் சொல்லவேண்டுமா, எவ்வளவு சொல்ல வேண்டும் என்றெல்லாம் மற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அதன் பிறகு சீனிவாசன், ராமனாதன், ஜயந்தியுடன் மட்டும் போய் ஒருநாள் தனியாக வெளியே எங்காவது ரங்கராஜனையும், தேவிகாவையும் பார்த்து ஓரளவு சொல்லி விடுவது என்று தீர்மானத்திற்கு வந்தனர். சொல்லாமலே இருந்துவிடலாம்தான். ஆனால் அந்தப் பிள்ளையிடம் இவர்கள் மேற்கொண்டு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும் இல்லையா?

அன்று செவ்வாய்க் கிழமை. பார்க்கில் ரொம்பக் கூட்டம் இல்லை. ராஜேந்திரனைப் பற்றி பேசவேண்டும் என்றதும் அரவிந்தையும் கூட்டிக் கொண்டு அவர்கள் வந்தனர்.

எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியாமல் சற்று மௌனம் நிலவியது அங்கே. பிறகு ரங்கராஜனே ஆரம்பித்தார்.

''என்னம்மா, பெரிய தகராறா, என்ன பண்ணிட்டாம்மா அந்த ராஸ்கல்'' என்று கேட்டார் சூடாக.

''பாத்தியா, ஆரம்பிக்கும்போதே அந்தப் பையன் குற்றம் பண்ணியிருப்பான் என்ற எண்ணம்தானே



உனக்கு? பிள்ளைகள் மேல் நமக்கு நம்பிக்கை இருக்கணும்ப்பா'' என்றான் ராமனாதன்.

''நம்பிக்கை இருக்கிறார்போல் அவங்களும் நடந்து கொள்ளணும், இல்லையா?'' என்றார் ரங்கராஜன்.

''என்னப்பா, நீ? அவர்கள் நடத்தை என்பது பிறந்த போதே வருகிறதா? நாம் நடந்து கொள்வதையும் பொருத்துத்தானே இருக்கிறது!'' என்றார் சீனிவாசன்.

''இப்போ நாங்க என்ன பண்ணிட்டோம்ங்கறே நீ?'' என்றார் ரங்கராஜன்.

அரவிந்த் குறுக்கிட்டான் ''அப்பா, கொஞ்சம் இருங் கப்பா சீனிவாசன் மாமா ஏதோ சொல்வதற்குத் தானே கூப்பிட்டிருக்கிறார். அவர் என்னதான் சொல்கிறார் என்று கேளுங்கப்பா'' என்றான்.

''இதோ பார் ரங்கா, நீ கொஞ்சம் பொறுமையா முழுவிஷயத்தையும் கேட்கணும். கோபப்படக் கூடாது நடுவில் எழுந்து போகக் கூடாது. சரியா? என்ன, உனக்குக் கோபம் வரக்கூடிய விஷயம்தான் சொல்லப் போறோம்'' என்றார் சீனிவாசன்.

ரங்கராஜனின் கண்கள் சிவந்தன ''நெனைச்சேன். என் பிள்ளை ஏதோ எக்கச்சக்கமாய் விளையாடியிருக்கான். சொல்லு. என்ன பண்ணினான். முட்டிக்கு முட்டி தட்ட வேண்டிய குத்தமா? இந்த மாதிரி ஏதாவது நடக்கும்னு நான் கொஞ்ச நாளா எதிர்பார்த்ததுதான்.''

இப்போது தேவிகா குறுக்கிட்டாள் ''ஐயய்ய, கொஞ்சம் மத்தவங்க பேசறதையும்தான் கேளுங்களேன். உடனே உங்க போலீஸ்கார பாணியிலே ஆரம்பிக்கணுமா'' என்றாள்.

''எல்லாம் நீயும் எங்க அம்மாவும் கொடுக்கற செல்லத்தினால வந்ததுதாண்டி இருக்கட்டும். எல்லா விஷயங்களும் தெரிஞ்சப்பறம் வெச்சுக்கறேன் வீட்லே.''

அப்பப்பா, என்ன இது முழு விவரமும் தெரிஞ்சிக்காமே கோபப்பட்டா மட்டும் ஆச்சா? நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்து கேளு'' என்றார் சீனிவாசன்.

''நீ சொல்லு.''

மூவருமாக அவனை பப்பில் பார்த்ததில் ஆரம்பித்து, யோசித்து அவர்கள் கவுன்ஸிலிங் கொடுக்க கலாவதியைக் கூப்பிட்டது என்பதையெல்லாம் சொல்லி விட்டு, ''அவன் அப்படியெல்லாம் ஏன் நடந்து கொண்டான் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது'' என்று சொல்லி முடித்தார் சீனிவாசன்.

''இப்படியெல்லாம் செய்ய அந்த அயோக்யனுக்கு காரணம் வேறு இருக்காமா? யாருக்கு காது குத்தறான் அவன்? பெல்ட் பிஞ்சுடும்'' என்று உறுமினார் ரங்கராஜன்.

''இதோ பார், ரங்கா! நீ இப்படியெல்லாம் ஆத்திரப் படுவாய் என்பதால்தான் உன்னிடம் சொல்லவே தயங்கித் தயங்கி தாமதப் படுத்தினோம். முழு விவரத்தையும் கேட்டுவிட்டு அப்புறமா நிதானமா யோசி, தப்பு எங்கே இருந்திருக்குன்னு தெரியும்'' என்றார் சீனிவாசன்.

''அந்த கவுன்ஸிலர் எத்தனை யுத்தியாக இந்த விஷயத்தைக் கையாண்டாள் தெரியுமா? சாதுரியமான பேச்சால் அவன் மனதில் இருப்பதை எல்லாம் வெளியில் கொட்ட வைத்தாள் அவள்.''

''என்ன அண்ணா சொன்னான் அவன்?'' என்றாள் தேவிகா.



''ஆரம்பத்திலேயே அவனுக்குத் தாழ்வு மனப்பான்மை உருவாகிவிட்டதம்மா.'' என்று ஆரம்பித்து அவன் சொன்னதையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னார் சீனிவாசன்.

''அவன் அப்பா, அம்மா பாசத்தை எதிர்பார்த்து ஏங்கியிருக்கிறான் அம்மா. அவன் இதையெல்லாம் சொல்லும் போது எப்படி அழுதான் என்று அந்த கலாவதி சொன்னதும் நாங்களும் அழுதுவிட்டோம்.''

ரங்கராஜனும், தேவிகாவும் திகைத்துப் போய் சிலையாகிவிட்டனர்.'' ஆஹா, அந்தக் குழந்தை மனதை எப்படியெல்லாம் நோகடித்திருக்கிறோம்'' என்று தெரிந்ததும் அவர்கள் கண்களில் கண்ணீர் கரகரவென்று கொட்டியது.

''சரி இதுக்கு மேல நீங்க கவலைப்பட வேண்டாம். அந்தப் பெண் நிறைய் சொல்லி அனேகமா மாத்திட்டா'' என்று அவள் சொன்ன மற்ற விஷயங்களையும் சொன்னார் சீனிவாசன்.

கடைசியாக, இவர்கள் இனி அவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவள் சொல்லியதை எல்லாம் சொல்லிவிட்டு, முடிந்தால் கலாவதியுடன் ஒரு மீட்டிங் ஏற்பாடு பண்ணிக்கொள்ளச் சொன்னார்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட ரங்கராஜன் உடனேயே கலாவதியை போனில் தொடர்பு கொண்டு தன் நன்றியைத் தெரிவித்தார். மறுநாள் அவளைச் சந்திக்க ஏற்பாடும் செய்து கொண்டார்கள்.

''ஒரு காசுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பதே எங்களுக்கு மறந்துவிட்டது. அவன் பக்கத்து நியாயத்தைக் கேட்கும்போதுதான் எங்க தப்பு புரிகிறது. நாங்க

இனிமே நிச்சயமா கலாவதி சொல்வதுபோல் நடந்துக்கறோம் கொஞ்ச நாளாகவே எதற்கெடுத்தாலும் சள்புள்ளென்னு கோபப்படறதும், தனியே இருந்துண்டு செல்லில் பேசுவதுமாக இருந்தான். சரியாக சாப்பிட மாட்டான். ஏதோ வயசுக் கோளாறு என்று நினைச்சேன். கூடவே அவன் தப்பு வழிக்கெல்லாம் போயிடக் கூடாதேன்னு மனதினுள் பயந்துகிட்டிருந்தேன். ஆனா தீவிரமா யோசிக்கக் கூட முடியாமே எனக்கும் ஏதோ வேலை பளு. தப்பு பண்ணிட்டேன், ஜயந்திக்கா, தப்பு பண்ணிட்டேன்'' என்று ஜயந்தி மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள் தேவிகா.

அவள் சற்று அழுது ஓய்ந்ததும், ''இதோ பார், தேவிகா! போனதெல்லாம் போகட்டும். எல்லாம்தான் நல்லபடியாக முடிந்துவிட்டதே. இனிமே அவன் தப்பா நடந்துக்க மாட்டான். கவலைப்படாதே. அவனுக்கு தேவை நிறைய அன்பும், ஆதரவும்தான். அதைக் கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும். இனி நல்லதே நடக்கும்னு நம்புவோம்'' என்றாள் ஜயந்தி.

''அதெல்லாம் சரி, உங்களுக்கெல்லாம் நாங்க எப்படி நன்றி சொல்றது? என்ன செய்து இந்த நன்றிக் கடனைத் தீர்ப்பது?'' என்று கேட்டார் ரங்கராஜன்.

''எப்படி, எப்படி? நன்றிக் கடன் தீர்ப்பதா? எங்கே, என் முகத்தைப் பார்த்து இதைச் சொல்லு பார்க்கலாம். இது என்ன புதுப் பழக்கம்?'' என்று கேட்டார் சீனிவாசன்.

''ஆமாம், ராஜேந்திரன் உனக்கு மட்டும் பிள்ளையா? நன்றி சொல்றானாம், நன்றி! இடியட்'' என்று கணேசன் ரங்கராஜன் முதுகில் செல்லமாகத் தட்டினார்.

நிம்மதி நிறைந்தது அனைவர் நெஞ்சுக்குள்ளும்.



# 17

வரதன் சொல்லி எல்லோருக்கும் சாமிநாதன் கவலையே பெரிய கவலையாக இருந்தது. சாமிநாதன் அப்படிச் சொன்னார் என்றால் அதன் பின்னே ஏதோ வலுவான காரணங்கள் இருக்கும் என்று மட்டும் பரதன் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. ஏனென்றால் சாமிநாதன் அப்படியெல்லாம் அவசரமாக எதுவும் பேசிவிடக் கூடியவர் அல்ல. அவரே இப்படி பேசுவதென்றால் என்ன காரணமாக இருக்கும்? எல்லோருக்கும் மண்டை காய்ந்தது.

வீட்டாருடன் அடிக்கடி பேசினாலும் அரவிந்துடன் எப்போதாவது திவ்யா நெட்டில் பேசத்தான் செய்தாள். அநேகமாக அவளுடைய அமெரிக்க வாழ்க்கை, படிப்பு இப்படித்தான் இருக்கும் அவர்கள் பேச்சு. வாரம் ஒரு முறையாவது இவன் குரலைக் கேட்காவிட்டால் அம்மாவிற்கு மனம் சாந்தி இருக்காது என்பதால் பேசிவிடுவாள். வீட்டு மனிதர்களிடம் சொல்வதுபோலவே அரவிந்துடன் பேசும்போதும் உங்கள் எல்லாரையும் மிஸ் பண்ணுகிறேன் என்பாள். அவனும் கூட நாங்கள் எல்லாருமே ஐயாரப்பன் வீட்டில் உன் நினைவாகவே இருக்கிறோம் என்று பேச்சின் முடிவில் டைப் செய்வான். ஒருவருக்கொருவர் புரிந்த மாதிரியும், புரியாத மாதிரியுமாக ஏதோ ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு அவர்களுக்குள் நடந்து கொண்டிருந்தது. இருவருக்கும் படிப்புதான் முதலில் என்ற விவேகம் இருந்தது.

ஆனால் சாட்டிங் என்று வரும்போது அரவிந்த் இங்கு ஐயாரப்பன் காம்பௌண்டின் எல்லா விஷயங்களையும் சொல்லிவிடுவான். அப்படித்தான் சாமிநாதன் முதியோர் இல்லத்திற்குப் போக நினைக்கிறார் என்றும் சொல்லி விட்டு வருத்தப் பட்டான். ''இரு, இரு, எனக்கு என்னவோ பொறி தட்டுகிறது'' என்றாள் திவ்யா.

''என்ன திவ்யா, என்ன சொல்ல வருகிறாய்?''

''ஒரு விஷயம் எனக்குத் தோண்றது அரவிந்த். அது சரியான்னு பாரு.''

''சொல்லு, எதைப் பத்தி சொல்றே?''

''கொஞ்ச நாளில் ராக்கி வரும் இல்லையா? நம்ம பில்டிங்கிலும் எல்லா பொண்ணுங்களும் ராக்கி கட்டு வாங்க இல்லையா? அன்னிக்கு நம்ம காம்பௌண்ட்லே ரம்யா, காவ்யா, உன் தங்கச்சி குந்தவை, இன்னும் எல்லோரும் சேர்ந்து ஒரு வேடிக்கையான வில்லுப் பாட்டு நடத்தப் போறாங்க. அதுபத்தி இந்த பசங்க எங்கிட்டேகூட சொன்னாங்க. அதுலே பெரியவங் களைக் கேலி பண்ணி அவங்க தொந்திரவுங்கற மாதிரி ஏதோ வரியெல்லாம் வருது. நான் இதெல்லாம் சின்ன பசங்க செய்யும் விளையாட்டு, வேடிக்கைப் பாட்டுன்னு நினைச்சு விட்டுட்டேன்.

எனக்கு இங்கேதான் சந்தேகமா இருக்கு. உனக்கு இவங்க பண்ணற ப்ரோக்ராமின் ஸ்க்ரிப்ட் கிடைக்குமா, பாரேன், குந்தவையைக் கேட்டால் கூட அது கிடைக் கலாம். அதுவே எதையாவது கேட்டு சுப்பு மாமா ஹர்ட் ஆகியிருக்கிறாரோ என்னவோ என்று தோன்றுகிறது'' என்றாள். அதன் பிறகு கொஞ்சம் sweet nothings. அதோடு அவர்கள் சாட் முடிந்துவிட்டது.



அரவிந்த் அவசரமாக கம்ப்யூட்டரை அணைத்துவிட்டு குந்தவையைக் கூப்பிட்டான். அவள் என்ன அண்ணா என்று ஓடி வந்தாள்.

''எப்போ வந்தே நீ?''

''இப்போதான் அண்ணா'' கூட ப்ரதீப்பும் வந்திருந் தான்.

''எங்கிருந்து வரே, ரம்யா வீட்டிலிருந்துதானே?''

''ஆமாண்ணா!''

''அங்கே இத்தனை நாழி என்ன பண்ணிட்டுருந்தே?''

''படிச்சிட்டுருந்தோம்.''

ப்ரதீப் ஏதோ சொல்ல வர ஜாடை காண்பித்து அவனை சும்மா இருக்கச் சொல்லி அடக்கினாள் குந்தவை.

''ப்ரதீப், எனக்குத் தெரியும் நீ பொய் சொல்லமாட் டேன்னு. உண்மையை சொல்லுப்பா, என்ன பண்ணிட்டு இருந்தீங்க அங்கே'' என்று அரவிந்த் அதட்டிக் கேட் டதும், ''டிராமா ப்ராக்டிஸ் பண்ணிட்டுருந்தோம்'' என்று அவன் சொல்லிவிட்டான்.

குந்தவை அவனை முறைத்தாள்.

''டிராமாவா, வில்லுப் பாட்டா?''

''வில்லுப் பாட்டு சரியா வரலே, அதுதான் டிராமாவே போடறோம்.''

''சரி, அந்த டிராமாவோட ஸ்க்ரிப்ட் எனக்கு வேணும், எடுத்துண்டு வா!''

''அதெல்லாம் ரம்யாகிட்டேதான் இருக்கு.''

''பொய் சொல்லாதே. உங்கிட்டே இருந்தா குடுத்துடு. இல்லைன்னா உதைபடுவே!''

''இல்லேண்ணா, நிஜமாகவே ரம்யாகிட்டேதான் இருக்கு.''

''சரி நீங்க இரண்டுபேரும் போங்க'' என்ற அரவிந்த் வேகமாக ரம்யா வீட்டிற்குப் போனான்.

''வாப்பா, அரவிந்த்!'' என்று வரவேற்றாள் லஷ்மி.

''ஆன்ட்டி, ரம்யாவைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன்'' என்றான். அதற்குள் ரம்யாவே இறங்கி வந்துவிட்டாள். ''என்ன அரவிந்த், கூப்பிட்டாயா'' என்று கேட்டாள்.

''ஆமாம், டிராமாவெல்லாம் போடப் போறீங்களாமே! அந்த ஸ்க்ரிப்ட்டை கொஞ்சம் குடுக்கறயா, நான் பார்க்கணும்.''

''அது எதுக்கு உனக்கு? அதெல்லாம் தர முடியாது.''

''இல்லை ரம்யா, அதை நான் நிச்சயமாகப் பார்க்கணும்.''

''நாங்க கேர்ள்ஸ் எல்லோருமா சேர்ந்து ஏதோ ஸர்ப்ரைஸா பண்ணனும்னு நினைச்சா, நீங்க எதுக்கு அதைக் கெடுக்கணும்?''

''ஆன்ட்டி, இந்த ரம்யாவைப் பாருங்க ஆன்ட்டி! அந்த ஸ்க்ரிப்ட்டை கொடுக்கச் சொல்லுங்க, ஆன்ட்டி'' என்றான்.

''ஏய், ரம்யா! பெரியவன் அவன் கேட்கிறான் இல்லையா? ஏதோ காரணமில்லாமல கேட்கப் போகிறான்? கொடும்மா'' என்றாள் லஷ்மி.

''நான் தரமாட்டேன். அது ஒரு பிளஸண்ட் ஸர்ப்ரைஸாக எல்லோருக்கும் இருக்கட்டும்னு நாங்க நினைச்சா, அதை ஏன் எல்லோருமா கெடுக்கறீங்க.''



''ஆன்ட்டி. இந்த டிராமாவாலே ஒரு பெரிய விபரீதம் முளை விட்டுருக்கு. அதைத் தடுக்கத்தான் கேட்கிறேன். ப்ளீஸ் கொடு ரம்யா'' என்று அவன் கேட்டதும் ரம்யா பயந்துபோய் அதைக் கொடுத்துவிட்டாள்.

''என்னப்பா விபரீதம், நீ என்ன சொல்றே, அரவிந்த்?'' என்று கேட்டாள் லஷ்மி.

''ஏன் ஆன்ட்டி, இந்த ஸ்க்ரிப்ட்டை நீங்க படிச்சு பாக்கல்லியா? இருங்க, நான் படிச்சுப் பார்த்து இப்பவே சொல்றேன்'' என்று அங்கேயே உட்கார்ந்து படிக்க ஆரம்பித்துவிட்டான். 15 நிமிடம் படித்து முடித்தவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''ஏய், ரம்யா! நீங்கள்ளாம் என்ன லூசுங்களா? இப்படி ஒரு டிராமாவை யார் தயார் பண்ணினது? நல்ல பைத்தியக்காரப் பொண்ணுங்க, நீங்க'' என்று பொரிந்தான்.

லஷ்மி பயந்துவிட்டாள். ''என்ன அரவிந்த், அது எதைப் பத்தின டிராமா?'' என்று கேட்டாள்.

''ஆன்ட்டி, இப்போ எல்லாம் புரியறது. சாமிநாதன் தாத்தா திடீர்னு முதியோர் இல்லத்துக்குப் போறேன்னு பிடிவாதம் பிடிக்கிறாரே அது உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?

''என்னப்பா இப்படி கேக்குறே இப்போ நம்ம எல்லார் வீட்டுக் கவலையும் அதைப் பத்திதான். அதை எப்படித் தடுக்கலாம்னுதான் யோசனையே. பாவம்! சுப்புவும், நளினியும் மனமொடிஞ்சே போய்ட்டாங்க. ஆமாம், அதற்கும் இந்த டிராமாவுக்கும் என்ன சம்மந்தம்?''

''இருக்கு, ஆன்ட்டி, நிறைய இருக்கு! நீங்க இந்த டிராமாவை முழுக்கப் படிச்சுப் பாருங்க, புரியும். ஏய், ரம்யா, இந்த டிராமாவை எழுதினது யாரு?''

''ஏதோ ஒரு புக்லே பார்த்தோம். திரும்ப எழுதற சிரமம் வேண்டாம்னு அந்த ஸ்க்ரிப்ட்டை அப்படியே எடுத்துண்டுருக்கோம். என்ன தப்பு அண்ணா அதிலே?'' என்று கேட்டாள் ரம்யா.

''நீ என்ன குழந்தையா இதைப் படித்துப் பார்த்த உடனேயே இதில் இருக்கிற தப்பு தெரிய வேண்டாம்? சரி இப்போ சொல்லு, இந்தடிராமா எதைப் பத்தி?''

''ஒரு குடும்பக் கதை அவ்வளவுதான்.''

''அவ்வளவுதானா? நீதான் நம்ப பில்டிங் குழந்தைகளிலேயே பெரியவள். யாரெல்லாம் இருக்கீங்க இதில்?''

''எல்லோரும் இருக்கோம். ராக்கியன்னிக்கு இதை போட்டு எல்லோரையும் சந்தோஷப் படுத்த நெனைச்சோம் சாரி. என்ன தப்பாயிடுத்தண்ணா?'' என்று இப்போது வணக்கமாய்க் கேட்டாள்.

''இதில் வர கேரக்டர்ஸை சொல்லு, அம்மாவும் கேட்கட்டும்.''

''நான் ஒரு தாத்தா, சுபாதான் பிள்ளை, காவ்யா மருமகள், வினோ, வீணா இரண்டுபேரும் பேத்திகள், குந்தவையும், ப்ரதீப்பும் பக்கத்து வீட்டுக் குழந்தைகள்.

''அம்மா தாயே, கதையையும் கொஞ்சம் சுருக்கமாய்ச் சொல்லு, அம்மா அதையும் கேட்கட்டும்'' என்றான் அரவிந்த்.

''கூட்டுக் குடும்பம், தாத்தா தொணதொணப்பா இருக்கார். அம்மா படிச்சிருக்கா. வேலைக்குப் போக ஆசை ஆனா, ''பாட்டியில்லாமே தாத்தாவைப் பாத்துக்கறது கஷ்டமாக இருக்கு. அதனாலே அம்மா வீட்லேயே



இருக்கா.'' குந்தவையும், ப்ரதீப்பும் அப்பப்ப வந்து எங்க வீட்லே இது வாங்கியிருக்கா, அது வாங்கியிருக்கா, இதெல்லாம் உங்க வீட்லே இல்லையான்னு கேப்பா. வீணா, வினோ இரண்டுபேரும் அவகிட்டே 'உங்கம்மா வேலைக்குப் போறா, அதனாலே எல்லாம் வாங்க முடியும் ஆனா எங்கம்மா வீட்லேயே இருக்கா, எல்லாம் இந்த தாத்தாவாலதான் என்பார்கள். அன்னிக்குப் பாத்து ஸ்கூல்லே டீச்சர் மஹாபாரதத்திலே திருதராஷ்ட்ரன், காந்தாரி, குந்தி எல்லோரும் வானப்ரஸ்தம் போறதைப் பத்தி சொல்லியிருப்பா. நம்ம தாத்தாவும் பேசாமே வானப்ரஸ்தம் போகலாம் இல்லையான்னு கேப்பாங்க பேத்திங்க. தாத்தா இதைக் கேட்டுட்டு நிஜமாவே வானப்ரஸ்தம் கிளம்பிடுவார். இதுதான் கதை'' என்று முடித்தாள்.

''ஏண்டி கழுதை! இதென்ன ஏதாவது சின்னப் பசங்க போடற டிராவுக்குக் கருத்தாடி? வேறு ஏதாவது காமெடிங்கற மாதிரி போடக்கூடாது?'' என்று சொன்னாள் லஷ்மி.

''இதிலேயே ப்ரதீப்பும், குந்தவையும் பேசிக்கறது மொத்தம் நகைச் சுவையாகத் தானேம்மா அமைஞ்சுருக்கு? இதிலே என்ன ப்ராப்ளம்?'' என்றாள் ரம்யா.

''இன்னுமா புரியல்லே? நம்ம ஐயாரப்பன் காம்பொண்ட்லே மொத்தம் எத்தனை தாத்தாக்கள் இருக்காங்க தெரியுமாடி உனக்கு? இந்த டிராமாவைப் பார்த்தா நம்மைத்தான் குத்திக் காட்டறாங்கன்னு அவங்க நினைச்சுக்க மாட்டாங்க? உங்க டிராமாவை ரிகர்சல்லேயே சாமி தாத்தா பாத்துருக்கார்டி! பைத்தியம். அதனால்தான் நாம மத்தவங்களுக்கு தொந்திரவா இருக்கக்கூடாது, முதியோர் இல்லத்துக்கு போயிடலாம்னு தோணியிருக்கு அவருக்கு.

அரவிந்த்! இப்போ என்ன பண்ணலாம், இதை எப்படி சரி செய்யறது?'' என்று புலம்பினாள்.

இந்த விஷயத்தில் தீவிரத்தைப் புரிந்து கொண்ட ரம்யா தடுமாறிப் போனாள்.'' சாமித்தாத்தா அப்படியாம்மா சொன்னார்? எங்களுக்கெல்லாம் தெரியாதே! தினம் சாயந்திரம் ப்ராக்டிஸ், ப்ராக்டிஸ்ன்னு இருக்கறதனாலே எங்களுக்கு இதெல்லாம் தெரியல்லேம்மா.''

''சரி அவங்களுக்குத்தான் தெரியல்லே, நீ வளர்ந்த, பெரிய பொண்ணுதானே உனக்குப் புரிய வேண்டாம்? நம்ப காம்பௌண்ட்லே பெரியவங்களெல்லாம் நமக்குத் தொந்திரவாகவா இருக்காங்க? அவங்க மனசு புண் படாது? மண்டு! சரி, நீ போய் வினோ, சுபா இரண்டு பேரையும் அம்மா கூப்பிடறான்னு கூட்டிட்டு வா?'' என்றான் அரவிந்த்.

தயங்கித் தயங்கி நடந்தாள், ரம்யா.

அடுத்த ஐந்து நிமிடத்தில் சுபாவும் வினோவும் வந்துவிட்டனர்.

''என்னம்மா, உங்க தாத்தா வீட்டிலே இருக்காறா?'' என்று கேட்டான் அரவிந்த்.

''தாத்தா வரதன் தாத்தாவோட பேசிண்டு இருக்கார்'' என்றாள் சுபா.

''ஏம்மா, உங்க தாத்தா முதியோர் இல்லம் போகப் போறேன்னு சொல்றாராமே, உனக்குத் தெரியுமா?'' என்றான் அரவிந்த்.

''தெரியும் அண்ணா! எங்களுக்கெல்லாம்கூட ரொம்ப வருத்தம். தாத்தா போகாதீங்கன்னு அவர்கிட்டே தினம் தினம் நாங்க சொல்லிண்டே இருக்கோம்'' என்றாள் சுபா.



''உங்க அப்பா, அம்மா ''தாத்தாவை நீங்க ஏதாவது சொன்னீங்களா''ன்னு கேட்டாங்களா உங்களை?'' என்று கேட்டாள் லஷ்மி.

''கேக்கறதா? அப்போ நீங்கதான் ஏதோ சொல்லியிருக் கணும்னு சொல்லி எங்களை ரொம்பவும் திட்டிட்டார். அம்மாவும் கூட சேர்ந்துகொண்டு ரொம்ப திட்டிட்டா. தெரியுமா? நாங்க ஒண்ணும் பண்ணலேன்னு சொன்னாக் கூட நம்ப மாட்டேங்கறாங்க. எங்களுக்குத் தாத்தாவை ரொம்ப பிடிக்கும். நாங்க ஏதாவது சொல்வோமா? நீங் களே சொல்லுங்க, ஆன்ட்டி என்றாள்'' சுபா பரிதாபமாக

''ஆனா நீங்கதான் காரணம் உங்க தாத்தா இப்படி ஒரு முடிவு எடுத்ததுக்கு, தெரியுமா?'' என்றான் அரவிந்த்.

''ஐய்யயோ நாங்களா? நாங்க ஒண்ணுமே பண்ணல் லையே! நீங்களாவது எங்களை நம்புங்க அண்ணா.''

''போங்கடி மக்குப் பசங்களா! நீங்கஎல்லாம் ஒரு டிராமா போடறீங்களே, அது எதைப்பத்தி? அதை தாத்தா படிச்சாரா?''

''ஐயய்யோ, ஒரு வேளை படிச்சிருப்பாரோ என்னவோ, எங்க ரூமிலே டேபிள் மேலேயே வைச்சுருந்தோம்.''

''இப்பவாவது புரியுதா, நீங்க தான் இதுக்கு மறைமுக மாகக் காரணம்னு? உங்க ஸ்க்ரிப்ட்டை படிச்சு நீங்க தன்னைத்தான் மறைமுகமாக சொல்றீங்கன்னு தாத்தா தப்பா எடுத்துண்டார்.''

''அதேதான். சந்தேகமேயில்லை. இப்போ இதை எப்படி அரவிந்த் சரி செய்யறது? என்ன ரம்யா நீயும் டிகிரி படிக்கற பொண்ணு. சுபாவும் உன் வயசுதான். இப்படிக் கூடவா மடத்தனமாக காரியம் பண்ணுவீங்க? இப்போ உங்களாலே எல்லோருக்கும் எவ்வளவு மனக்கஷ்டம்

பாருங்க! இரண்டு நாளா நம்ம காம்பௌண்டில் யாருமே சரியா சாப்பிடலலே. எனக்கு உன்னை நன்னா நாலு சாத்து சாத்தணும்னு இருக்கு'' என்று புலம்பினாள் லஷ்மி.

தங்களின் மடத்தனமான விளையாட்டால் ஏற்பட்டுள்ள தர்ம சங்கடமான நிலையை உணர்ந்த ரம்யாவுக்கு கண்களில் நீர் வந்து விட்டது. ''வெரி வெரி சாரிம்மா! எங்களை மன்னிச்சுடு! நாங்கள் அரவிந்த அண்ணாவை யாவது கலந்துண்டிருக்கணும்.''

''சரி சரி! இப்போ அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. மேலே என்ன செய்து இதை சரி பண்ணறதுன்னுதான் பார்க்கணும். இந்த விஷயத்தை பெரியவங்க யாருகிட்டேயும் சொல்லிடாதீங்க! குழந்தைகளை உண்டு இல்லைன்னு பண்ணிடுவாங்க'' என்றான் அரவிந்த்.

''போகட்டும், ஒண்ணு பண்ணுங்க!'' என்று தொடர்ந்த அரவிந்த், ''அந்த டிராமா ஸ்க்ரிப்ட்டை எங்கிட்டே குடுங்க. முடிவை வேற மாதிரி அமைச்சுத்தரேன். ஆமாம், பிராக்டிஸ் பண்ண இன்னும் எத்தனை நாள் இருக்கு, வினோ?'' என்று கேட்டான்.

''இன்னும் மூணுநாள் கழிச்சுத்தான் டிராமா. நீங்க எழுதிக் கொடுங்கண்ணா. நாங்க பிராக்டிஸ் பண்ணிடுவோம்.

''சரி கொண்டா, ராத்திரிக்குள்ளே எழுதித்தரேன் இதையாவது தாத்தா கண்களில் படாம வெச்சுக்கோங்க'' என்ற அரவிந்த் ஸ்க்ரிப்ட்டை வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

யோசித்துக் கொண்டே, சாப்பிட்டதாகப் பெயர்பண்ணி விட்டு மொட்டை மாடிக்குப் போனான் அரவிந்த்.



தீவிரமாக அரை மணி யோசித்தவன், அந்த டிராமாவை இரண்டு மணி நேரம் எடுத்துக் கொண்டு வேறு மாதிரி எழுதினான்.

காலையில் முதல் வேலையாக ரம்யாவிடம் அதைக் கொண்டுபோய்க் கொடுத்தான். ''இப்போது வேறு புது நாடகமேகூட நீங்க போட்டுடலாம். ஆனா, அதனாலே இந்தப் பிரச்னை தீராது. ஆகையினாலே இதைப் படி. அதே டிராமாவையே போடுங்க. தாத்தாவைக் கண்டிப்பா நாடகத்துக்கு அழைச்சிண்டு வாங்க'' என்று சொன்னவன் கூடவே சில திருத்தங்களையும் சொல்லிவிட்டு, ''பெஸ்ட் ஆஃப் லக், கேர்ள்ஸ்'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

## 18

ராக்கி நாளும் வந்தது. ராக்கி என்பது வடக்கே கொண்டாடப்படும் பண்டிகை என்ற எண்ணமெல்லாம் மாறி இப்போதெல்லாம்தான் தெற்கேயும் எல்லா இடங்களிலும் கொண்டாடுகிறார்களே. அதுபோல் குழந்தைகளின் இந்த மாதிரி சந்தோஷங்களுக்கெல்லாம் ஐயாரப்பன் காம்பௌண்டில் பெரியவர்கள் யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள். ஏதோ நல்ல விஷயம்தானே. பண்ணி விட்டுப் போகட்டும் என்பது அவர்கள் எண்ணம்.

காலையிலிருந்தே ஆண் குழந்தைகளும் சரி, பெண் குழந்தைகளும் சரி கண்ணிலேயே படவில்லை. பார்க்கப் போனால் எல்லா இல்லத்தரசிகளும் கூட பிஸிதான்.

ராக்கி பௌர்ணமி என்பதால், எல்லோருமாக கணேசன் வீட்டு மொட்டை மாடியில் இரவு சாப்பாடு என்பது அங்கே வழக்கம். வீட்டிற்கு இரண்டு, மூன்று பதார்த்தங்களாக சமைத்து விடுவார்கள். அந்த காம்பௌண்டில் உள்ள ஆண்பிள்ளைகள் எல்லோரும் உடன்பிறவா சகோதரிகளுக்காக பரிசுகள் வாங்கப் போயிருந்தார்கள். ஷோபா மும்பாயில் வளர்ந்த பெண் என்பதால் அவளுக்கு இந்த பண்டிகையில் நாட்டம் அதிகம். மாமியாருக்கு முழுமூச்சாக ஒத்தாசை பண்ணிக் கொண்டிருந்தாள்.

குழந்தைகள் திரும்பத்திரும்ப ரிகர்ஸல் பண்ணிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் அவர்களுக்கு உள்ளூர கொஞ்சம் வருத்தம். தப்பு பண்ணிவிட்டோமே என்று பயம். மாற்றி எழுதியிருந்ததால் சரியாகச் செய்யணுமே என்ற கவலை.

அப்பாக்கள் எல்லோரும் மேடை கட்டி காம்பவுண்டையும் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். சாமிநாதன் மட்டும் எதிலும் பங்கெடுக்காமல் ஏதோ பறிகொடுத்தவர்போல் இருந்தார். வரதனும், ரங்கராஜனும் இதைப்பற்றி கவலைப்பட்டு பேசிக் கொண்டிருக்கையில் அரவிந்த் வந்து அவர்கள் பேச்சில் குறுக்கிட்டான். சரி சொல்லிவிட்டு 'ராக்கிக்குப் பிறகு சாமிநாதன் அங்கிள் மாறிடுவார்' என்று சொல்லிச் சென்றான். ஏதோ அவன் சொன்னால் சரியாகத்தான் இருக்கும் என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு காரியத்தில் ஈடுபட்டனர்.

சாயந்திரம் விளக்குகள் எல்லாம் போட்டபின் மேடை நிகழ்ச்சிகள் தொடங்கின. ப்ரதீப் ஆசைப்பட்டதால்



''சகோதரிகளின் உயர்வு'' என்ற தலைப்பில் அவனுக்கு ராஜேந்திரன் ஒரு ஸ்பீச் எழுதிக் கொடுத்திருந்தான். இருப்பதில் அங்கு பெரிய அண்ணாவானதால், விஜய் தான் தலைமை தாங்க வேண்டும் என்று குழந்தைகள் எல்லோரும் அழைத்தனர். விஜய்யுடன் ஷோபாவையும் கூப்பிட்டு மேடியில் அமர்த்திவிட்டு முதலில் கடவுள் வணக்கம் ஒன்று பாடினர் வினோவும், வீணாவுமாக. சாமிநாதன்தான் வரவே முடியாது என்று சொல்லி ரொம்பவே அடம்பிடித்தார். ஆனால் விடாப்பிடியாக அரவிந்த், விவேக் எல்லோருமாகப் போய் கூட்டிவந்து முன்னாடி உட்கார்த்தி வைத்தனர். அடுத்து எல்லாக் குழந்தைகளுக்குமான அறிவுரை நிறைந்த ஒரு சொற்பொழிவை வரதன் நிகழ்த்தினார். எல்லோரும் வற்புறுத்த ஷோபாவும் ஒரு ஹிந்தி பாட்டு பாடினாள். அதற்குப் பிறகு எம்.கே. தியாகராஜ பாகவதர் காலத்து டூயட் பாடல் ஒன்றை கணேசனும் ஜயந்தியும் பாடினார்கள். ப்ரதீப்பும் தான் பேசவேண்டிய பேச்சை நன்றாகப் பேசி கைதட்டல் பெற்றுக் கொண்டான். அடுத்தது முக்கியமான நிகழ்ச்சி. நாடகம்.

இத்தனை நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்த சாமிநாதன் நெளிய ஆரம்பித்தார். மெல்ல எழுந்து தன் வீட்டை நோக்கி நகர ஆரம்பித்தார். அவரையே கவனித்துக் கொண்டிருந்த அரவிந்த் சட்டென்று எழுந்து அவரை அங்கேயே உட்கார வைத்தான்.

திரைக்குள்ளிருந்து குரல் ''ஐயாரப்பன் வீட்டின் சின்னப் பெண்களான நாங்கள் இன்று எங்கள் எல்லா அண்ணான்களுக்காவும் ஒரு நாடகத்தை நடத்தப் போகிறோம். இந்நாடகத்தின் மூலம் கொஞ்ச நேரம்

சந்தோஷத்தையும், நல்ல பொழுதுபோக்கையும் தருவது தான் எங்கள் நோக்கம். யார் மனதையும் நோகடிக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. எனவே, சிறியவர்கள் நாங்கள் நடத்தும் இந்த நாடகத்தைக் கண்டு, குறை களைப் பொறுத்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டு கிறோம்.''

தடங்கலின்றி பேசி முடித்தாள் ரம்யா. அடுத்து நாடகம் தொடங்கினது. ''இந்த நாடகத்தின் பெயர் 'முதியோர் இருப்பு - சிறியோர் சொத்து' எழுதி இயக்கியவர் குமாரி ரம்யா'' என்று அறிவிக்கப்பட்டது. இதை கேட்டதும் சாமிநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருக்கு ஆச்சரியம் ஏனென்றால் அவர் பார்த்த தலைப்பு ''வனப்பிரஸ்தம்'' என்பது. அவரது ரியாக்ஷனை கவனித்துக் கொண்டே இருந்தான் அரவிந்த்.

மைக் மீண்டும் அலறியது. ''இந்த நாடகத்தில் நடிப்பவர்கள் - ரம்யா - தாத்தா, சுபாஷிணி - பிள்ளை மாதவன், காவ்யா - மருமகள் ராணி, விநோதினி - பெண் ஹேமா, குந்தவை, ப்ரதீப் பக்கத்து வீட்டுக் குழந்தைகள், வீணா - ஜயலஷ்மிப் பாட்டி.'' இப்படி அறிவிப்பைக் கேட்க கேட்க சாமிநாதனுக்கு ஒரே ஆச்சரியம்!

நாடகம் முக்கால் வாசி ரம்யா எழுதியிருந்தது போல் போயிற்று. நடுவில் பெண் நம் வீட்டில் அதில்லை, இதில்லை என்றபோது, ''அதனால் என்ன? நீ பெரிய வளாகி சம்பாதித்ததும் வாங்கிக் கொண்டால் போயிற்று. அவர்கள் வீட்டில் அம்மா நாள்பூரா இருக்க மாட்டார் இல்லையா? நான் பார்! உன்னோடயே இருந்து உன்னைப் பார்த்துக்கிறேன்'' என்று அம்மா சொல்கிறாள்.



கடைசியில் பக்கத்து வீட்டுப் பையன் தன் வீட்டு சாமான்களைப் பற்றி நிறைய பீத்திக் கொள்ளும்போது இவள் அம்மா இவளிடம், ''இதோ பார்! உன் அம்மா வீட்டிலிருந்து உன்னைப் பார்த்துக் கொள்கிறாளே என்று பொறாமையாக இருக்கிறது அவனுக்கு. அதுதான் உன்னைத் தூண்டிவிடுகிறான்'' என்று சொல்லி, இன்னும் ஏதோகூட அவள் காதில் சொல்லிக் கொடுக்கிறாள்.

மறுநாள் அந்தப் பையனுடன் வாக்குவாதம் வரும் போது அந்தப் பெண் சொல்கிறாள். ''இதோ பார், எங்கள் வீட்டில் தாத்தா என்று ஒரு பெரிய சொத்து இருக்கிறது. உங்க வீட்டில் இருக்கா? எங்க தாத்தாவின் துணையும், புத்திமதியும், ஆசீர்வாதமும் எவ்வளவு விலை மதிப்பில் லாதது. தெரியுமா? எங்க தாத்தா எங்களிடம் எத்தனை அன்பாக இருப்பார். எத்தனை நல்ல நல்ல கதைகளெல் லாம் சொல்லுவார் தெரியுமா? நீ ரொம்பப் பாவம் ஏதோ காரும், பெரிய டீவியும், ஃப்ரிட்ஜும் தான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். நீ என்ன மிஸ் பண்ணியிருக்கிறாய் என்பது உனக்குப் புரியவில்லை. வீட்டில் பெரியவர்கள், அதுவும் எங்கள் தாத்தா, பாட்டி போன்றவர்கள் இருந்தால் அதுதான் மிகப்பெரிய சொத்து. நீ சொன்னது எதுவும் இல்லை'' என்கிறாள்.

மறுவாரம் பக்கத்து வீட்டுக்கு ஒரு பாட்டி வந்திருக் கிறாள். அவள் யார் என்று அந்தப் பையனைக் கேட்க, அவன் சொல்கிறான் ''அவங்க என் பாட்டி. நீ சொன் னதை யோசித்துப் பார்த்ததில் ஒரு மாபெரும் உண்மை புரிந்தது. மற்ற உயிரில்லாத சாமான்கள் எதையும் விட தாத்தா, பாட்டிங்கறதுதான் மிகப் பெரிய சொத்துன்னு நான் தெரிஞ்சிகிட்டேன். அதனாலே பிடிவாதம் பிடித்து

முதியோர் இல்லத்திலே இருந்த எங்க பாட்டியை கூட்டிக் கொண்டு வந்திருக்கோம். இப்போ நாங்களும் அதிர்ஷ்டக் காரர்களாயிட்டோம்'' என்று சொல்லி முடித்தான். ''முதியோர் இருப்பு இளையவர் சொத்து'' என்ற கோஷத்துடன் நாடகம் இனிதே நிறைவு பெற்றது. கைத்தட்டல் காதைப் பிளந்தது. சாமிநாதன் மிகவும் நெகிழ்ந்துபோய் அழுது விட்டார். தன் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 500/- எடுத்து, ''குழந்தைகளா! இந்தப் பணத்தை உங்களுக்கு என் ஆசீர்வாதமாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி, கொடுத்து, தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

## 19

எல்லோருக்கும் இனி சாமிநாதன் முதியோர் இல்லம் என்று பேசமாட்டார் என்று நிம்மதியாக இருந்தது. சாப்பிடப் போகும் முன் தங்கைகளெல்லாம் அண்ணன்களுக்கு ராக்கி கட்டினார்கள். எல்லா பெண்களுமே அரவிந்த், ராஜேந்திரன், விவேக், விஜய், ப்ரதீப் எல்லாருக்கும் ராக்கி வாங்கி வைத்திருந்தனர். ரம்யா, காவ்யா, வீணா, குந்தவை, வினோதினி, சுபாஷிணி ஆகிய ஆறு பெண்களுக்கும், ஆண் பிள்ளைகள் பரிசுப் பொருட்கள் வாங்கியிருந்தனர். ஸ்வீட்ஸ் எல்லாம் மாடிக்கே போய் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று பேசிக் கொள்ளலாம் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். விஜய் எல்லோருக்கும் ஹேன்ட்பேக், விவேக் செல் கவர்,



ப்ரதீப அவன் அப்பாவைக்கேட்டு கவரில் ஆளுக்கு ரூபாய் 50/- போட்டு வைத்திருந்தான். அரவிந்த் எல்லோருக்கும் குட்டி டைம்பீஸ் வாங்கி வைத்திருந்தான். ராஜேந்திரன் எல்லோருக்கும் அன்னை சாரதா தேவியைப் பற்றிய சின்னப் புத்தகங்கள் வாங்கியிருந்தான். எல்லா பெண்குழந்தைகளும் அண்ணன்களுக்கு கையில் ராக்கி கட்டிவிட்டு பரிசுப் பொருட்களை சந்தோஷமாக வாங்கிக் கொண்டனர். சுபாஷிணி முறை வந்தபோது விவேக்கிடம் பரிசை வாங்கிக் கொண்ட அவள் ராக்கியைக் கட்டாமல் 'ஒன்று குறைகிறதே' என்று முணுமுணுத்துவிட்டு நைஸாக நகர்ந்து விட்டாள். யாரும் இந்த அடாவடியில் தன்னைக் கவனிக்கவில்லை என்று நினைத்து நிம்மதியாக இருந்தாள். அந்த நிம்மதி அந்த இரவு மட்டும்தான் நீடித்தது.

காலையில் காலேஜுக்கு கிளம்பும்போதே வினோதினி இவளின் திருட்டுத்தனத்தைப் பற்றிக் கேட்டுவிட்டாள். ''ஏய், என்ன காரணத்திற்காக நீ விவேக்கிற்கு மாத்திரம் ராக்கி கட்டாமல் விட்டுட்டே? யாரும் பார்க்கல்லைன்னு நினைச்சியா? நான் பாத்துட்டேனே!'' என்றாள்.

சுபாஷிணிக்கு குப்பென்று வேர்த்து விட்டது. ''ஏய் அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ பாட்டுக்கு ஏதாவது கற்பனை பண்ணிக்காதே'' என்றாள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு. அதற்குள் அவள் போக வேண்டிய பஸ் வர ஏறி உட்கார்ந்து அப்பாடா என்று பெருமூச்சுவிட்டாள். அவளுக்கு இப்போதெல்லாம் எப்போதும் விவேக் நினைவாக இருந்தது நிஜம்தான். விவேக் ஆறடி ஆணழகன். ரெப்ரஸன்டேடிவ் என்பதால்

நன்றாக டிரெஸ் செய்துகொள்வான். சரளமான ஆங்கிலத்தில், அழகான ஏற்ற இறக்கங்களுடன் பேசக் கூடியவன். புல்லெட்டில் ஏறி அவன் போகும்போது ஜயந்திக்கே யார் கண்ணாவது பட்டுவிடப் போகிறதே என்று தோன்றும். அவனுக்கு தான் எஞ்சினியரிங், மெடிக்கல் என்றெல்லாம் படிக்கவில்லையே என்பதில் பெரிய வருத்தம் கிடையாது.

கணேசனுக்கும் ஜயந்திக்கும்தான் சற்று வருத்தம். மூத்தவன் விஜய் எம்.டெக் படித்து கை நிறைய சம்பளம் கொடுக்கும் சாஃப்ட்வேர் வேலை செய்வதால்தானே ஷோபா மாதிரி அழகான, அறிவான, எல்லாவற்றிற்கும் மேலாக, ஃபைனான்ஸ் கம்பெனி அதிகாரியாக கை நிறைய சம்பாதிக்கும் பெண் நல்ல குடும்பத்திலிருந்து மனைவியாய் வந்திருக்கிறாள். இந்தக் கலத்துப் பெண்கள் எல்லாம் நல்ல விவரமானவர்கள் தான் வெறுமே அழகாக இருப்பதால் மட்டும் வெறும் எம்.ஏ வரை படித்த பையனை கல்யாணம் செய்து கொள்வார்களா? பெண்களெல்லாம் பிரமாதமாகப் படித்து சம்பாதித்து, வீடும், காரும் தாங்களாகவே வாங்கிக் கொண்டு அமர்க்களமாய் இருக்கும் காலம் இது. இவன் என்னவோ எதிர்காலத்தைப் பற்றிச் சரியாக கணிக்காமல் வெறும் எம்.ஏ வரை நன்றாகப் படித்து விட்டான். இந்த காம்பௌண்டில் எத்தனை பெண்கள் இருந்தாலும் சுபாஷிணி மீது அவனுக்கு ஒரு தனிப்பட்ட பிடிப்பு, கவர்ச்சி இருக்கத்தான் செய்தது. அவனும் ராக்கியன்று அவள் ராக்கி பந்தன் கட்டினால் தவிர்க்கும் எண்ணத்தில் தான் இருந்தான். அவளே தவிர்த்துவிட்டுப் போனதை யார் கவனித்தார்களோ, இவன் கவனித்து மகிழ்ந்துபோனான்.



வேண்டுமென்றுதான் அப்படிச் செய்தாள் அவள் என்பதில் அவனுக்குச் சற்றும் சந்தேகமேயில்லை. சீக்கிரமே அவளைத் தனியே சந்தித்துப் பேச துடித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவள் இப்போதுதான் டிகிரி இரண்டாவது வருடத்தில் இருக்கிறாள். அவள் மனதில் தான் இருப்பது பற்றி விவேக்கிற்கு கொஞ்சம் கூட சந்தேகமில்லை. ஆனால் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? சரியாகத் திட்டமிட வேண்டும் என்ற நினைப்பில் இரண்டு மூன்று நாட்களைக் கடத்தினான்.

சுபாஷிணியின் நிலையும் அதுதான். அவளுக்கும் விவேக் தன்னை விரும்புகிறான் என்பதில் சந்தேகமில்லை. அன்று அவனிடம் பரிசை வாங்கிக்கொண்டு இவள் இரண்டு நொடிகள் நின்றபோது அவன் மற்றவர்களைப் போல் தன் கையை நீட்டவேயில்லையே! அன்றுதான் அவளுக்குத் தோன்றியது என்பதில்லை. கொஞ்ச நாட்களாகவே அவளுக்கு விவேக் நினைவாகவே இருந்தது. அடிக்கடி அவள் தன்னை அவன் காதலியாக நினைத்துக் கொண்டு மகிழ்ந்து போவாள். அவன் மனைவியாகக் கற்பனை செய்து கொண்டு தனக்குத்தானே சந்தோஷப் பட்டுக் கொள்வாள். இந்த ஸெமஸ்டருக்குத் தான் சரியாகப் படிக்கவில்லை, நல்ல மார்க் வாங்கணுமே என்று வேறு விசாரமாக இருந்தது. வீட்டிற்குத் தெரிந்தால் அப்பா தோலை உரித்து விடுவார். அவருக்கு பெண்கள் ரொம்ப மாடர்னாக டிரெஸ் செய்து கொள்வது கூடப் பிடிக்காது. அவருடைய கடையில் கூட ரொம்ப மாடர்ன் டிரெஸ்ஸெல்லாம் விற்பனைக்கு வைக்க மாட்டார். டிகிரி முடிந்தால் கல்யாணம்தான். திவ்யா மாதிரி மேல்படிப்பு என்கிற மாதிரியெல்லாம் அவளை

அனுப்ப பெற்றவர்களுக்கு எண்ணம் இல்லை. இவளுக்கும் இல்லை. ஆனால் மனது அலைபாய்வதை அவளால் தடுக்க இயலவில்லை. இவள் கல்யாணத்தைப் பற்றி ஒருமுறை பேச்சு வந்தபோது, காதல், கத்தரிக்காய் என்றெல்லாம் சுபாவோ, வினோதினியோ என்றாவது பேசினால் அவர்களுக்குத் தலை முழுகிவிடுவோம் என்று இவளின் பெற்றோர் கூறியது நினைவுக்கு வந்தது. ஹைதராபாத்தில் இருக்கும் பூர்ணிமா அத்தையின் பிள்ளைக்குத் தன்னை கல்யாணம் செய்து கொடுக்கும் எண்ணம் தாத்தாவிற்கும் அப்பாவிற்கும் இருப்பதும் இவளுக்கு அரசல் புரசலாகத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் காதல் என்பது யாரையாவது அனுமதி கேட்டுக்கொண்டா வருகிறது? அதெல்லாம் வயதுக் கோளாறல்லவா! ஆக இத்தனை தடங்கல்கள் இருந்தாலும், சுபாஷிணியும் விவேக்கிடம் தனிமையில் பேச சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள்.

விவேக்கின் பெற்றோர்களுக்குக் கூட அவனுக்குக் கல்யாணம் பண்ண தற்போது அவசரமில்லை என்பது தான் அபிப்ராயம். அதிலும் விஜய் விவேக்கை எம்.பி.ஏ பண்ணு என்று தொணத்திக் கொண்டிருந்தான். அந்த அடிஷனல் குவாலிஃபிகேஷன் இருந்தால் அவன் எதிர்காலத்திற்கு நல்லது என்று அவன் பெற்றோர்களும் வற்புறுத்தினார்கள். இதெல்லாம் அவர்கள் காதலைத் தீவிரப்படுத்தத்தான் உதவியது. ஆக இருவரும் ஒரே கவலையும், டென்ஷனுமாக அந்த வாரத்தைக் கடத்தினார்கள்.



## 20

கல்யாணிக்கு டாக்டர் அபயாம்பா அன்று லக்ஷ்மி பற்றி பேசும்போது தனக்கும் வைத்தியம் செய்து குழந்தை பிறக்க வைக்கலாம் என்று சொன்னது இரவும் பகலும் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. சாவகாசமாக இருந்த ஒருநாளில் ராமனாதனிடம் அவள் கேட்டாள் ''அந்த டாக்டர்கிட்டே போய்க்காண்பிக்கலாம்னு தோணிண்டே இருக்கு, நீங்க என்ன சொல்றீங்க?'' என்று.

''எனக்கு ஒண்ணும் பெரிய நம்பிக்கை வர மாட்டேன் என்கிறது, கல்யாணி. எனக்கும் குழந்தை ஆசை இல்லாமல் இல்லை. அத்தையைப் பார்த்தாலும் பாவமா இருக்கு இன்னும் நீ ட்ரீட்மெண்ட், ட்ரீட்மெண்ட் என்று எத்தனை தூரம் உடம்பை பாழ் பண்ணிப்பே? இந்த கஷ்டத்துக்கு பேசாம உனக்கு நான் குழந்தை, எனக்கு நீ குழந்தைன்னு இருந்துடலாம்னு தோணறது இல்லையா, கொஞ்ச நாள்ல ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம், விடு, கல்யாணி!'' என்றான்.

''ஏங்க தங்கச்சி பிள்ளை தன் பிள்ளையானால் தபஸுக்கு எதுக்குப் போகணும்பாங்க. நம்ம குழந்தையே நமக்கு ஒட்டுமா, ஒட்டாதா தெரியாது. ஊரார் பிள்ளை ஒட்டுமா, சொல்லுங்க? போய் ஒரு தடவை அந்த டாக்டரைப் பார்த்துட்டு வந்துடலாங்க. அத்தைகிட்டயும் இதைப் பத்தி பேசினேன். செய்யலாம், நம்பிக்கை தானே வாழ்க்கைன்னு சொன்னாங்க நீங்க என்ன இப்படிச்

சொல்றீங்க? நாளைக்கு நாள் நல்லா இருக்காம். பழைய ரிப்போர்ட் எல்லாம் எடுத்து வெச்சுருக்கேன். உங்களுக்கு என்ன தயக்கம்? ப்ளீஸ், சரின்னு சொல்லுங்களேன்'' என்று கெஞ்சினாள் கல்யாணி.

அவளையே சற்று உற்று நோக்கிவிட்டு பெருமூச் செறிந்தான் ''உனக்குப் புரியல்லையா? ஒரு வேளை இந்த டாக்டர், அப்போ அத்தனை நம்பிக்கையுடன் சொன்னவர், இப்போ ஒருதடவை உன்னைப் பார்த்து விட்டு பிரயோசனமில்லைன்னு சொல்லிவிட்டால்? நீ தாங்குவியா, கலா? நீ வேதனைப் பட்டா என்னால அதை எப்படி பார்த்துண்டிருக்க முடியும், சொல்லு? உண்மை என்னவா இருக்குமோ என்னவோ, அதை சந்திக்கும் தைரியம் எனக்கு இல்லை, கலா!'' என்றான்.

''உண்மையை ஏத்துண்டுதான் ஆகணும். பார்ப் போமே. எனக்கு கடவுள் மேல் நம்பிக்கை இருக்கிறது ஒரு வேளை இப்போதான் நமக்கு நல்ல வேளை வரதோ என்னவோ!

''அப்படியிருந்தால் நல்லதுதான், கண்ணம்மா! ஆனால் நீ எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணணும்!''

''என்ன, சொல்லுங்க.''

''ஒண்ணுமில்லை நாம டாக்டரிடம் போவோம் அவர் சொல்றபடி செய்வோம். ஆனால் ட்ரீட்மெண்டால் குழந்தை பிறக்கும் வாய்ப்பில்லை என்று இப்போதே சொல்லிட்டாலோ, அல்லது ட்ரீட்மெண்ட் செய்து பலன் இல்லாம போனாலோ நீ மனசு உடைந்து போகக் கூடாது சரியா, கண்ணம்மா?'' என்று அவள் விரல்களை நீவி சொடக்கு எடுத்துக் கொண்டே அவன் சொன்னதைக் கேட்டு அவள் உருகியே போனாள்.



அவள் கண்களில் நீர் வழிந்ததைக் கண்டு பதறிப் போன ராமனாதன், ''என்னடா, உன்னை அழவிடவா நான் இதெல்லாம் சொன்னேன்?'' என்றதும் அவனரு கில் நகர்ந்து அவன் தோளின் மேல் சாய்ந்துகொண்டு, ''இல்லை, இது ஆனந்தக் கண்ணீர். எனக்குத்தான் பிரச்னை என்பது இதற்குமுன் பார்த்த டாக்டர்கள் எல்லோரும் சொன்ன விஷயம்தான். அப்படியிருக்க, இன்னும் என்மேல எப்படி இத்தனை அன்பா இருக்க முடிகிறது உங்களால? வேற ஒருத்தரா இருந்தா என்னை விரட்டிட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் பண் ணிண்டுடுவாங்க'' என்றாள்.

''ஐயய்யே, என் அசட்டுச் செல்லமே! ரொம்ப சமத் தாக பேசறதா எண்ணமா? நீ ரொம்ப சீரியல் பார்த்துப் பார்த்து கெட்டுப் போயிட்ட. வாழ்க்கைக்கு குழந்தை அவசியம்தான். ஆனால் ஏதோ விதிவசத்தால குழந்தை பிறக்கல்லைன்னா நம்மை நாமே பிராண்டிக் கொண்டு காயப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? கலா, என் கண்ணில்லே! ப்ளீஸ், அழாதேடா!'' என்று அவள் முகத்தைத் திருப்பி கண்களைத் துடைத்து விட்டான். அவள் கன்னத்தில் அவன் ஒரு முத்திரை பதிக்கப் போன அந்த நிமிடம் பொன்னி வாசல் கதவை தடால் என்று திறந்துவிட்டாள். பிறகு தான் ஒன்றும் பார்க்காததுபோல் கதவைச் சாத்திவிட்டு வெளியே யாருடனோ பேசுவதுபோல் இரண்டு நிமிடம் பேசி விட்டு வந்தாள். அதற்குள் சுயநினைவிற்கு வந்த அவர்கள் அசடு வழிந்து கொண்டே மாடிக்கொருவரும், கிச்சனுக்கொருவருமாகக் போய்விட்டனர். கொஞ்ச நேரம் பொன்னி கண்ணிலேயே படவில்லை. ''பைத்

தியங்கள், கதவைச் சாத்திக் கொள்ளக் கூடாதா'' என்று நினைத்துக்கொண்ட பொன்னி தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

அம்மாவிற்கும் மேலான அந்த அத்தையிடம் எதையுமே மறைத்துப் பழக்கமில்லாத கல்யாணி, அவளின் டாக்டர் அபயாம்பாளிடம் போக ராமனாதன் சம்மதித்து விட்டதைச் சொன்னாள். ''கண்டிப்பாகப் போய்வாம்மா! யார் ரூபத்தில், எப்போ அம்பாள் கண் திறப்பாள் என்று யாருக்குத் தெரியும்? கொஞ்சம் இரு, நாள் பார்த்துச் சொல்கிறேன்'' என்று பஞ்சாங்கத்தைப் புரட்டியவள், ''நாளை மறுநாள் நல்ல நாள் போயிட்டு வந்துடம்மா, ஆமாம், ராமனாதன் உங்கூட வரணுமா?'' என்று கேட்டாள்.

ராமனாதனை மாப்பிள்ளை என்பதால் அவர், இவர், என்றெல்லாம் மரியாதையாகச் சொல்லிப் பழக வேண்டும் என்று பொன்னி எப்போதும் நினைத்துக் கொள்வாள். ஆனால் அவனைச் சின்னப் பையனா இருந்த காலத்திலிருந்தே நன்றாகத் தெரியும் என்பதால் அவளால் அது முடியவில்லை. அதற்கு மேல் ராமனாதனும் ''என்ன அத்தை, நீங்க! நான்தான் உங்க பிள்ளை. உங்க அண்ணா பெண் மருமாள் என்றாள் அவள்தான் உங்க மாட்டுப் பெண் அத்தை'' என்பான். பாவம்! நல்ல பையன் ஏன் கல்யாணியும் பாவம்தான். தனியே வளர்ந்து விட்டாள் அவளுக்கு குறைந்தது இரண்டு குழந்தைகளாவது பிறக்கணும் என்று ஆண்டவனிடம் எப்போதும் வேண்டிக் கொள்வாள்.

''அத்தை என்ன திடீர்னு யோசனை? அவர் வரதாச் சொன்னார். அப்படி முடியலேன்னா நீங்க வாங்களேன்'' என்றாள் கல்யாணி.



''நான் வேண்டாம்மா! நான் வாழ்க்கையில் என்னத்தைக் கண்டேன்? பெற்றேனா, வளர்த்தேனா, ஏதோ எதையும் நினைக்காம தள்ளுகிறேன் நாட்களை'' என்றாள்.

''என்ன அத்தை, நான் இருக்கும்போது இப்படியெல்லாம் பேசலாமா? அவர் வருவார், வராட்டா நீங்க வந்தால்தான் நான் போவேன்'' என்றவள், ராமனாதனிடம் நாளை மறுநாள் லீவு போடமுடியுமா என்று கேட்கப் போனாள்.

மறுநாள் கோவிலுக்கு போய் 108 பிரதட்சிணம் செய்தாள். தன் குறை தீரவேண்டும் என்று மனதார அம்பாளை வேண்டிக் கொண்டாள்.

அதற்கு மறுநாள் காலை 9 மணிக்கு டாக்டர் வரச் சொல்லியிருந்ததால் சரியாக காலை 9 மணிக்கு அங்கிருந்தனர். டாக்டர் அபயாம்பாள் ரொம்ப சிநேகிதமாக சிரித்துப் பேசினாள். ''கல்யாணி, ஏம்மா இத்தனை டென்ஷன்? முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பது இந்த காலத்தில் குழந்தை உண்டாவதற்கும் பொருந்தும். கவலைப் படாமல் இருந்தாலே இயற்காயாக நடக்கவேண்டியது நடக்கும். சார், நீங்களும்தான் பதட்டப் படாதீங்க கொஞ்சம் வெளியே வெயிட் பண்ணுங்க'' என்றவள். அவன் வெளியேறியதும், கல்யாணியைப் பரிசோதித்த டாக்டர் அவளுக்கு சில டெஸ்டெல்லாம் எழுதிக் கொடுத்தாள். ராமனாதனுக்கும் சில டெஸ்ட்கள் செய்யச் சொல்லி எழுதிக் கொடுத்த டாக்டர் ''சார் இந்த டெஸ்ட்களையெல்லாம் சீக்கிரம் பண்ணிக் கொண்டு வந்துவிடுங்க. நல்லதையே நினைப்போம்'' என்றாள்.

டெஸ்ட்கள் எல்லாம் எடுத்து ரிஸல்ட் வர ஒரு வாரம் ஆகிவிட்டது. ரிஸல்ட்டையெல்லாம் இவர்களே பார்த்து விட்டு அதிலிருப்பது ஒன்றும் புரியாமல், மிகவும் டென்ஷனாக நாட்களைக் கடத்தினர். ஆயிற்று டாக்டரிடம் போக வேண்டிய நாளும் வந்து பொன்னியத்தை அவர்களுக்குத் தைரியம் சொல்லி அனுப்பினாள்.

எல்லா டெஸ்ட் ரிஸல்ட்களையும் டாக்டர் படித்துப் பார்த்தாள். பிறகு இவர்கள் இருவரிடமும் நேரிடையாகவே பேசினாள். ''நீங்க இரண்டுபேரும் ஏற்கனவே டெஸ்டெல்லாம் பண்ணி என்ன தெரிஞ்சுகிட்டீங்களோ அதேதான் இப்போவும் வந்திருக்கு. கல்யாணி, உனக்கு ஃபாலோப்பியன் ட்யூப் இரண்டுமே பழுதாகியிருக்கும்மா. இதுக்கப்புறம் டெஸ்ட்ட்யூப் பேபி தான் ஒரே வழி. ஏன் அதுக்கு எந்த டாக்டரும் முயற்சி செய்யல்லேனு தெரியலே. போகட்டும் இப்பவும் ஒண்ணும் லேட்டா கிடலே. ஏம்மா, அதற்கான வழிகளைப் பார்க்கலாமா?''

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் சரி என்று சம்மதித்தனர்.

''ஆனா இதிலே நிறைய விஷயம் இருக்கு. முதல்ல உங்களுக்குத் தேவை பொறுமை. ரொம்பப் பொறுமை. எனக்குத் தேவை விடாமுயற்சி. இப்போதெல்லாம் மெடிக்கல் ஸயன்ஸ் ரொம்பவே வளர்ந்திருக்கு. என்ன ஒண்ணு, என் மேல் பூர்ண நம்பிக்கை வெச்சு நான் சொல்றபடி நீங்க செய்யணும், சரியா?'' என்றாள்.

''செய்யறோம் டாக்டர். நீங்க சொல்றதையெல்லாம் அப்படியே செய்யறோம். என்ன செய்யணும்னு சொல்லுங்க'' என்றான் ராமனாதன்.



''முதல்லே டெஸ்ட் ட்யூப் பேபின்னா நிறைய செலவாகும். நான் உத்தேசமாக ஒரு தொகை சொல்றேன். ஏறக்குறைய ஆகலாம். அது பரவாயில்லையா, முதல்ல அதைச் சொல்லுங்க.''

''பரவாயில்லை டாக்டர். எங்களுக்கு குழந்தை வேணும் என்ன செலவானாலும் பரவாயில்லை'' என்று இருவருமாகச் சொன்னார்கள்.

''அடுத்து. இது நாளை காலையிலேயே உன் வயத்துலே வந்துடாது. இரண்டு, மூன்று மாதங்கள் நான் உன்னைக் கவனிக்கணும். நான் தெம்புக்காக தர மாத்திரைகளை எல்லாம் தவறாம சாப்பிடணும் அப்புறம் முதல் இரண்டு, மூன்று தடவை முயற்சி தோற்றுப் போக நிறைய சான்ஸ் இருக்கு. அதைப் பொருட்படுத்தாம மனதை சந்தோஷமாக வச்சிண்டா தான் பின்னாடி செய்யும் முயற்சி பலிதமாகும். அந்த மாதிரி நேரங்களிலே, மிஸ்டர்.ராமனாதன், நீங்கதான் உங்க மனைவிக்கு பூரணா மாரல் சப்போர்ட்டாக இருக்கணும். என்ன, இதுவரை நான் சொன்னதெல்லாம் புரிஞ்சுதா?''

''கண்டிப்பா இருப்பேன். டாக்டர் சந்தேகமே வேண்டாம்'' என்றான் ராமனாதன்.''

''வெரி குட். ஐ ஸீ தெட் இன் யூ போத்'' என்றாள் டாக்டர் சிரித்துக் கொண்டே.

பிறகு கல்யாணியின் மாத சுழற்சி நாட்களைப் பற்றி ஏதோ கேட்டுட்டு,'' இன்னிலேருந்து இந்த மருந்தெல்லாம் எடுத்துக்க ஆரம்பிச்சுடும்மா, மிஸ்டர்.ராமனாதன், உங்களுக்கும் சில டேப்லெட்ஸ் கொடுத்திருக்கேன். நீங்களும் தவறாமல் அதையெல்லாம் சாப்பிடணும். நம்பிக்கையோடு தொடங்குங்க. லெட் அஸ் ப்ரே

பெஸ்ட் ஆஃப் லக் பார் ஆல் ஆஃப் அஸ்'' என்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

# 21

அன்று சுபாஷிணிக்கு ஒரு பரிட்சை இருந்தது. மனசு பூர்த்தியா நன்றாக படிக்க வேண்டும் என்று நினைத்து நேற்று சாயந்திரம் காலேஜிலிருந்து வந்ததிலிருந்து அவளும் முயற்சி செய்கிறாள் அது என்னவோ கொஞ்ச நாளாகவே மனது பாடத்தில் செல்வதேயில்லை. அதுவும் ராக்கியன்று விவேக் இவளைப் பார்த்த விதத்தில இவளுக்கு அவன் மனது நன்றாகவே புரிந்து விட்டது. அவனுக்கும் இவள் மனது தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும். அதன் பிறகு ஏதோ சாக்கு வைத்துக் கொண்டு இவர்கள் வீட்டிற்கு இரண்டு, மூன்று தடவை வந்து போய்விட்டான். நல்ல வேளையாக இவர்கள் 5 வீட்டிலும் யார் வீட்டிற்கு யார் போவதையும் யாரும் விகல்பமாக எடுத்துக் கொள்வதில்லை. அவளுக்கு இருந்தது ஒரு வித அவஸ்தைதானே ஒழிய அவளுக்கே அது என்ன என்று இனம் காணமுடியவில்லை.

இன்னும் இரண்டு நாட்களில் ஸெமஸ்டர் ஆரம்பிக்கிறது. ஒன்றுமே படித்தபாடில்லை. படித்ததும் மனதில் தங்கவில்லை. அன்று வெள்ளிக் கிழமை. காலையில் மொட்டை மாடியில் போய் நடந்துகொண்டே படிக்கலாம் என்று புத்தகத்தை எடுத்துக் கொண்டு போனாள்.

வானிலை அன்று அபார அழகாக இருந்தது மழை வரும் போலும் வராது போலும் இருந்தது. குளிர்ந்த



காற்று தென்றலாக வீச ஆரம்பித்தது. இந்த ரம்யமான சூழ்நிலையில் விவேக் பக்கத்திலிருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். நன்றாக என்றால் என்ன செய்வான் என்று யோசித்த போதே காது மடல்கள் சூடாகி விட்டன. இதயம் வேகமாக அடித்துக் கொள்வதை அவளால் உணர முடிந்தது. திடீரென்று தன்னை யாரோ பார்ப்பது போல உணர்ந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் இதயம் ஒரு கணம் நின்று பிறகு அடிக்கத் துவங்கியது. ஆமாம்! விவேக் தன் வீட்டு மாடியில் கைகளைக் கட்டிக் கொண்டு இவளையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான். இவளுக்கு கால்கள் துவண்டுவிட்டன.

மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அனிச்சை செயலாக புத்தகத்தை உள்ளே வைத்தவள் தான் மட்டும் நனைந்து கொண்டிருந்தாள். படிக்கட்டில் வினோதினி ''சுபா, சுபா'' என்று கூப்பிட்டுக் கொண்டே ஏறிவரவும் இவள் அவசரமாக இறங்கி ஓடிவிட்டாள் போகும் முன் இரண்டு முறைகள் திரும்பிப் பார்க்கவும் தவறவில்லை.''

கீழே போனதும் அம்மா நல்ல டோஸ் விட்டாள். ''ஏண்டி, நன்னா படிச்சுட்டு பரிட்சை எழுத முடியாமல் போனா என்ன செய்வே? அப்படி என்ன மழையில நனைஞ்சிண்டே படிப்பு வேண்டியிருக்கு. தலையைத் துவட்டு முதல்ல'' என்று கடிந்து கொண்டாள்.

''அக்கா, அம்மா சொல்றது கரெக்ட்தான். ஏற்கனவே ஏதேதோ நினைவுகளில் உன் மண்டை சூடாகிப் போயிருக்கிறது. உடனே தலையை துவட்டல்லேன்னா கண்டிப்பா ஜலதோஷம் பிடிக்கும்'' என்றாள் வினோ கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

சுபாஷிணி அவளை முறைத்தாள். வினோ இவளைப் பார்த்த பார்வையில் ஏதோ விஷமம் தெரிவதுபோல் இவளுக்குத் தோன்றியது.

ஒருமாதிரி தயாராகி காலேஜுக்கு கிளம்பினாள் சுபா. கொஞ்சம் தூரல் இருந்தது. அம்மா கூட கேட்டாள் "இன்னிக்கு ஒருநாள் லீவு போடறியா?" என்று

"வேணாம்மா, மழை ஒண்ணும் பெரிசா இல்லையே. இன்னிக்கு முக்கியமான கிளாஸ் இருக்கு. நான் கண்டிப்பா போயாகணும்" என்று சொல்லி கிளம்பிவிட்டாள்.

பஸ் ஸ்டாண்டில் நின்று, நின்று கால் வலித்தது தான் மிச்சம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பஸ்களையே காணோம். பேசாமல் வீட்டிற்கே திரும்பிவிடலாமா என்று நினைத்தபோது, சர்ரென்று தேங்கி நின்ற தண்ணீரைக் கிழித்துக் கொண்டு அவள் அருகில் வந்து ஸ்டலாக தன் மோட்டார்சைக்கிளை நிறுத்தினான் விவேக். சுபாஷிணிக்கு ஒரே படபடப்பாகி விட்டது. சற்று நேரம் சும்மா இருந்தாள்.

"என்ன சுபா மேடம்! ஒன்னும் பேசாமலே இருக்கீங்களே? வாங்க. எங்கே போகணுமா அங்கே கொண்டு விட என் ரதம் தயாராக இருக்கிறது" என்றான் விவேக்.

"இல்லை, காலேஜுக்குப் போற பஸ்ஸே இன்னும் வரல்லே. நான் வீட்டுக்குத் திரும்பற ஐடியாவில் தான் இருக்கிறேன்" என்றாள் சுபா.

"அப்படிச் சொன்னா எப்படி? நல்ல வெதர், வாகாக நான் வந்திருக்கேன். காலேஜில கொண்டு போய் விட்டுவிடுகிறேன்" என்றான் விவேக்.

"இல்லை, இல்லை. நானே போய்க் கொள்ளுகிறேன். தேங்க்ஸ் பார் த ஆஃபர்" என்றாள் சுபா.



"இதோ பார்! பஸ் வரும்னு எத்தனை நேரம் நிப்பே? அதற்குள்ளே காலேஜுல லஞ்ச் இன்டெர்வெல் விட்டுடு வாங்க. பேசாம என்னோட வா. எங்கேயாவது போய் டிபன் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போயிடலாம்" என்றான் விவேக்.

"இதோ பார்! நீ என்னை இப்படி கூப்பிடாதே. இது சரியில்லை நான் வர மாட்டேன். நீ புறப்படு" என்றாள் சற்று கோபத்துடன்.

"என்ன இப்படி சொல்றே, சுபா! நாம ஒண்ணும் இன்னிக்குத்தான் ஒருத்தரை ஒருத்தர் பாத்தவங்க இல்லை. சின்ன வயசிலிருந்து ஒண்ணா வளர்ந்தவங்க. என்னோட வரதுக்கு என்ன தயக்கம்?" என்று கேட்டான் விவேக்.

"அதெல்லாம் வேறே. ஆனா எனக்கு உன்னைப் பாத்தா பயமா, படபடப்பா இருக்கு. ப்ளீஸ்! நீ என்னை விட்டுட்டுப் போயேன். நான் என் வழிலே போறேன்.

"என்னைப் பாத்தா பயமா, படபடப்பா இருக்கா? ஓஹோஹோ! இதுக்குப் பேரு என்ன தெரியுமா?" என்று கேட்டான்.

சுபா மௌனமாக வேறு பக்கம் பார்க்கவே, அவனே தொடர்ந்தான். "அது சரி, சுபா, நீ ஏன் எனக்கு மட்டும் ராக்கி கட்டல்லே? இதில் பதில் சொல்லேன்."

"அன்னிக்கு ராக்கி தீர்ந்து போயிடிச்சு அவ்வளவு தான்" என்றாள் சுபா பலவீனமாக.

"ஏய், ஏய்! பொய் பேசக்கூடாது. எனக்கு அப்புறம் நீ இரண்டு பேருக்கு கட்டல்லே? நான் கவனிச்சிட்டுத் தான் இருந்தேன், பெண்ணே!"

''சரி எனக்கு உன்னை அண்ணான்னு ஏத்துக்க இஷ்டமில்லைன்னு வெச்சுக்க.''

''அதுதான் ஏன்? நான் உன் அண்ணா இல்லைன்னா பின்னே யாரு?''

சுபாஷிணி இதற்கு பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

''சரி, வெட்டிப் பேச்சு எதுக்கு? இன்னிக்கு இல்லைன்னாலும் கொஞ்ச நாள் கழிச்சாவது நம்ம மனசிலே இருக்கிறதைப் பேசிக்கத் தானே போறோம். அதுவரை பை, மை ஸ்வீட் ஹார்ட்'' என்று சொல்லி ஒரு முத்தத்தை காற்றில் பறக்கவிட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் பறந்துவிட்டான்.

சுபாஷிணி திகைத்துப் போய்விட்டாள். ராஸ்கல், என்ன தைரியம் முத்தத்தை காற்றில் பறக்கவிட்டு விட்டு போகிறானே! அவளையறியாமல் அவள் கை அவள் கன்னத்தை தடவியது. இப்படி அவள் மனதில் இருப்பதை பிட்டு பிட்டு வைத்துவிட்டானே? ரொம்ப தான் கொழுப்பு!

அடுத்த நொடியிலேயே இவளுக்குத் தோன்றியது. 'அவனோட போயிருக்கலாமோ என்னவோ? அந்த பில்லியன் ரைட் குஷியாத்தான் இருந்திருக்கும்' என்று நினைத்துக் கொண்டாள். வீட்டுக்குப் போன பின்னும் அவன் நினைவுகளை மனதிலிருந்து துரத்த முடிய வில்லை. அவன் நினைவில் வேண்டாம் என்று நினைக்க, நினைக்க அது என்னவோ மனதில் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டே இருந்தது. அந்த வேதனையில் தூங்கவும் முடியாமல் மிகவும் அவஸ்தைப் பட்டாள்.



அன்று கணேசன் ரொம்ப மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கையில் ஆபீஸில் இருந்து போன் கால் வந்தது. ரங்கராஜனிட மிருந்து போன் கால் வந்தது. சாதாரணமாக அவர் அப்படியெல்லாம் ஆபீஸ் நேரத்தில் போன் செய்யமாட் டார், அவசியம் இருந்தாலொழிய. அவர் குரலில் ஒரு பதட்டம் தெரிந்தது. ''என்ன விஷயம்'' என்று கணேசன் கேட்க, ''நீ சாதாரணமா வீட்டிற்கு லேட்டாத்தானே வருவே. ஆனா இன்னிக்கு கொஞ்சம் சீக்கிரம் வரமுடி யுமா?'' என்று கேட்டார் ரங்கராஜன்.

''என்ன விஷயம் ரங்கா?'' என்றார் கணேசன்.

''நீ வாயேன் சொல்றேன்'' என்றார் ரங்கராஜன். குழம்பிப்போன கணேசன் 'சரி, வந்துடறேன்' என்றவர் அரை நாள் லீவு போட்டுவிட்டு வீட்டிற்கு உடனே கிளம்பினார்.

அங்கு போனதும்தான் தெரிந்தது, சுப்பு, ராமனாதன், சீனிவாசன் எல்லோரையும் சீக்கிரம் வரச் சொல்லி போன் செய்திருக்கிறார் என்று. தேவிகா, ஜயந்தி கூட சீக்கிரமே வந்திருந்தார்கள். கணேசன் நேராக ரங்கராஜனைத் தேடிப் போனார். தேவிகா தலைக்குக் குளித்திருந்தாள். அவள் முகம் கலங்கி இருந்தது. ''சுந்தரா அக்கா எங் கேம்மா?'' என்று கேட்டார்.

''இன்னிக்கு அத்தையை அவங்க சிநேகிதி வந்து அவங்க பொண்ணுக்கு சீமந்தம்னு நகை வாங்கக் கூட்டிகிட்டுப் போயிருக்காங்க'' என்றாள் அதற்குள் ரங்கராஜன் குளித்துவிட்டு வந்திருந்தார். ''வா கணேசா'' என்று கூப்பிடும்போதே அவர் கண் கலங்கிவிட்டது.

'என்னப்பா ரங்கா, என்ன ஆச்சு? ஏன் எப்படியோ இருக்கே?'' என்று கேட்டவுடன், ''வா எல்லாம்

தோட்டத்தில் உட்கார்ந்து பேசலாம்'' என்றார்.

தோட்டத்தில் எல்லோரும் உட்கார்ந்திருந்தனர். ஆளுக்கு 'என்ன ஆச்சு' என்று ரங்கராஜனைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நல்ல வேளை ப்ரதீப் இன்னும் வரவில்லை. ஸ்கூலிலிருந்து அப்படியே யாரோ நண்பன் வீட்டிற்குப் போயிருந்தான்.

''அம்மா இப்போதான் வெளியே போயிருக்கா. அவள் வரதுக்குள்ள பேசிடலாம்'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தார் ரங்கராஜன்.

''இல்லை, அந்த மாமி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து அம்மா ராத்திரி இருட்டுல திரும்பிவர வேண்டாம். காலையிலே அனுப்பறேன்னுதான் சொன்னா. அம்மா கூட பிள்ளைகிட்டே சொல்லாமே போகத் தயங்கினா. அந்த மாமிதான் அம்மாவுக்குத்தான் எல்லாம் தெரியும்னு கம்பெல் பண்ணி கூட்டிண்டு போனா'' என்றாள் தேவிகா. ''இன்னிக்கு இல்லைன்னா இன்னும் கொஞ்ச நாளைக்கு நல்ல நாளே இல்லையாம். அதுதான் அம்மா கிளம்பிப் போயிருக்கா. நாளைக்கு காலையிலேதான் திரும்பி வருவா'' என்றாள்.

அவரே தொடரட்டும் என்று எல்லோரும் காத்திருந்தனர்.

''உனக்கு நம்ம தஞ்சாவூர் பச்சண்ணா சந்து கல்யாணத்தை தெரியுமில்லையா'' என்றார் கணேசனைப் பார்த்து.

''யாரு, சட்டுன்னு நினைவுக்கு வரலியே'' என்றார் கணேசன்.

அதற்குள் ராமனாதன், ''அவர்தான் அங்கிள், ஒரே தடவையில கால் படி சாதம் சாப்பிடுவார்ன்னு ரொம்ப



பிரசித்தமே. கொஞ்சம் திக்கு வாய் கூட, இல்லே?'' என்றார்.

''அவனா, இப்போ நினைவுக்கு வருது. எப்பப்பார்த்தாலும் கொங்கணேஸ்வரன் கோவிலில் தண்டமா உட்கார்ந்திருப்பானே! ஆமாம் அவனுக்கென்ன?'' என்று கேட்டார் கணேசன்.

''ஆமாம். சரியான வம்பு பிடிச்சவன்'' என்றார் சீனிவாசன்.

''அவனை இன்னிக்கு தற்செயலா தி.நகர் பஸ் ஸ்டாண்டில் பார்த்தேன். அவன் ஒரு விஷயம் சொன்னான்'' என்றார் ரங்கராஜன்.

''என்னப்பா, என்ன சொன்னான் நீ இப்படி அப்செட் ஆகிறமாதிரி?'' என்று ஆதரவாகக் கேட்டார் வரதன்.

பதில் சொல்லாமல் முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு குலுங்கினார் ரங்கராஜன்.

''தேவிகா, நீயாவது சொல்லும்மா! என்ன ஆச்சு?'' என்றார் சாமிநாதன்.

பொன்னி அத்தையும், பரிமளாவும் வாயைத் திறக்காமல் கவலையாய் நின்றிருந்தனர்.

கடைசியில் ரங்கராஜன் வாயைத் திறந்தார். ''என்னுடைய அப்பா தவறிப் போய்விட்டாராம். கல்யாணம் காசிக்குப் போயிருந்தானாம். அங்கு யாரோ விஷயத்தைச் சொன்னார்களாம்.''

''சரி, யாரோ சொன்ன நியூஸ், அதுவும் கல்யணாம் மாதிரி ஆள் சொன்னதை நம்பியா நீ இப்படி அழறே'' என்றார் சுப்ரமணியம்.

''அதானே, தவிர உனக்குத்தான் உன் அப்பான்னாலே கோபம்தானே வரும். இப்போ எதுக்கு அழறே?'' இது பரிமளா.

''ஆமா, இருக்கச்சே அப்படியே வந்து விட்டிலே இருந்து பார்த்துக் கொண்டாரா, இப்போ போனதுக்கு நீ இத்தனை வருத்தப்படறதுக்கு. ரொம்ப அழகுதான் போ'' என்றாள் பொன்னி.

''ஐய்யோ, உங்க யாருக்குமே புரியல்லையா நான் எதுக்கு வருத்தப் படறேன்னு'' என்று பச்சை குழந்தையாய் ஒரு பார்வை பார்த்தார் ரங்கராஜன்.

''நிஜமா புரியல்லேயப்பா'' என்றார் வரதன்.

''எங்கம்மாவை நினைச்சுத்தான் அழறேன். பாவம், இந்த மனிதரால் அவள் என்னிக்கு சுகப்பட்டாள்?'' என்றார் ரங்கா.

''ஏம்பா, அதான் நீயே சொல்லிட்டியே என்னிக்கும் உங்க அம்மா அவராலே சுகப்படலேன்னு. அவர் இருந்தா என்ன, போனா என்ன? போ!'' என்றார் கணேசன் கடுப்பாகி.

''அப்பிடி இல்லை கணேசா, எங்கம்மாவை பூவும் பொட்டும் இல்லாமே எப்படி பார்க்கப் போறேன் நான்?''

''இருங்கோ, இருங்கோ! இதென்ன பேச்சு? உங்கம்மா இப்போ எதுக்காக பூவும் பொட்டும் இல்லாம இருக்கணும்? நல்ல நியாயமிது'' என்று அதுவரை பேசாமல் இருந்த ஜயந்தி பொங்கிக் கொண்டு வந்தாள்.

''காலம் எவ்வளவோ மாறினாலும் சிலதை எல்லாம் மாத்த முடியுமா? சொல்லு ஜயந்தி'' என்றார் ரங்கராஜன்.

''அவசியமே இல்லை. இப்போவெல்லாம் யாரும் கணவன் செத்துப் போனதுக்காக தோற்றத்தை



மாத்திக்கறதே இல்லை. பொம்மனாட்டிகள், என்ன, கல்யாணம் ஆனதுக்கு அப்புறமாத்தான் நகை போட்டுக் கறாங்களா. புருஷனோட அதையெல்லாம் தூக்கிப் போட்டுட'' என்று நளினி கேட்க ''அதேதான் நானும் சொல்றேன். அதுவும் உங்கப்பா மாதிரி மனுஷனுக்காக அப்படி ஒரு பொண்டாட்டி ஏன் பண்ணனும்?'' என்றாள் லஷ்மி.

''நாமெல்லாம் 21வது நூற்றாண்டில் இருக்கோம், அண்ணா! ஞாபகம் வெச்சுக்குங்க'' என்றாள் கல்யாணி.

''சரி நீங்க எல்லோரும் அப்படி நினைக்கறீங்க. ஆனா விஷயம் தெரிஞ்சா சுந்தராம்பாவே அதை எப்படி எடுத்துப்பாள்னு சொல்ல முடியாதே'' என்றாள் பொன்னி.

தேவிகா குறுக்கிட்டாள் ''இதோ பாருங்க, எங்கத்தை அமங்கலமா மாறுவதை நான் ஒரு நாளும் ஒத்துக்க மாட்டேன். ஆமாம், நான் கேட்கிறேன், எதுக்காக மாறுவது? காலமெல்லாம் கூட இருக்கிற புருஷனுக் காவே யாரும் மாறுவதில்லை. இந்த மாதிரி புருஷனுக் காக இதெல்லாம் அவசியமேயில்லை.

''அப்படியானால் உன் அம்மாவுக்கு இதை சொல் லவே கூடாது. அது சாத்யமா?'' என்றார் சுப்பு.

பரிமளா, எப்போதுமே அழுத்தம் திருத்தமாக பேசாதவள் இப்போது அழுத்தமாச் சொன்னாள். ''ஏன் சாத்தியமில்லை? நாம யாராவது சொன்னால்தானே அவளுக்குத் தெரியப்போறது?''

''ரங்கா, முதல்லே இந்த நியூஸ் உண்மைதானான்னு ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளப்பா'' என்றார் சாமி.

''இந்த நியூஸ் நிஜம்தான் மாமா நானும் அந்த அசட்டுக் கல்யாணம் சொன்னதை உடனேயே

நம்பிடலே. அவர் வாரணாசியிலே எங்கேயே தங்கி யிருந்தார் என்பது தெரியுமில்லையா? அந்த ஊ எஸ்.பிக்கு fax அனுப்பினேன். மத்தியானம் அதுக்கு தான் வீட்டுக்கு வந்து போட்டோ எடுத்துண்டு போனே என்றார் ரங்கராஜன். கூடவே அந்த S.P. கிட்டே காலம்பறவே போட்டோவை அனுப்பிச்சதுக்கு. அவ ''நிஜம் தான். ஏதோ மடத்தில்தான் அவர் இருந்திருக்கா கூட இருந்தவங்க எல்லாம் சொல்லிட்டாங்க'' என்று பதில் அனுப்பிவிட்டடார்'' என்றார்.

''சரி, அம்மாகிட்டே இதைச் சொல்லி அவளை வருத்தப் படுத்தறதும், அலங்கோலப் படுத்தறதும் எனக்கும் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. ஆனால் அம்மா பூஜை, புனஸ்காரம்னு நிறைய பண்றவள். அவள் குறைஞ்ச பட்சம் தலைக்குக் குளிக்கணும். இது நடந்து எத்தனையோ நாளாயிட்டதாம். குறைந்த பட்சம் மூணு மாசத்துக்கு மேல் இருக்கும்னு வாரணாசி S.P. சொன்னார் என் கிறாயே, அதனாலே தீட்டெல்லாம் கிடையாது'' என்றார் கணேசன்.

''ஆனா நீ கவலையே படவேண்டாம். நாளைக்கு ஏகாதசி. உங்கம்மா எப்படியும் தலைக்குக் குளிச்சுடுவா. விடு கவலையை. நீ குளிச்சாச்சு, இல்லையா? தேவிகா, நீ தலையை நன்னா துவட்டி முடி. குழந்தைகளை காலேலே குளிக்கறச்சே தலைக்குக் குளிக்கச் சொல்லு அப்புறம் என்ன கவலை'' என்றாள் பொன்னி.

''ஆனா இதிலே இன்னொரு விஷயம் இருக்கு. நீங்க சொன்னதையெல்லாம் லௌகீகம் வரை சரிதான். ஆனா வைதீகம்ன்னு ஒண்ணு இருக்கே. என்ன இருந்தாலும் உன் பிறப்பு அவராலேதான் ஏற்பட்டது. நீ அவருக்கு



பண்ண வேண்டிய கர்மாக்களை பண்ணணும். பண்ணித் தான் ஆகணும். உன் குழந்தைகள் எல்லாம் நாளைக்கு நன்னா இருக்கணும் இல்லையா? அதனாலே இதைப் பத்தியும் யோசிக்கணும்'' என்றார் வரதன் அமைதியாக.

''போங்க மாமா! அவர் என்னையும் எங்கம்மாவையும் வெச்சிருந்த லட்சணத்துக்கு நான் காரியம் பண்ணறது ஒண்ணுதான் குறைச்சல்'' என்றார் ரங்கா.

''இதோ பார் ரங்கா! இது அவருக்குன்னு பண்ணி னாலும் கீழ்க்கிளைகள் நல்லா இருக்கறதுக்காக செய்யற காரியம்பா நான் தான் சொன்னேனே! உனக்குப் பிறப்பு தந்தவர் நீ செய்ய வேண்டியதை அவருக்குக் குறைக்கக் கூடாது. அதுதான் என் அபிப்ராயம்'' என்றார் வரதன்.

''சரி, நான் என்ன பண்ணணும்னு சொல்லுங்க மாமா!'' என்றார் ரங்கா. கூடவே ''நான் என்னிக்கு உங்க வார்த்தையைத் தட்டியிருக்கேன், சொல்லுங்கோ? நீங்க சொல்றீங்க என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் நான் இதை செய்யப் போகிறேன்'' என்றார்.

''சரி, அதுதான் ஒரு நல்ல பிள்ளைக்கு அடையாளம்'' என்றார் வரதன். ''நாளை எனக்கு மதுராந்தகம் போற வேலையிருக்கு. அங்கு வேத பாட சாலை வரைக்கும் போறேம்ப்பா. அப்படியே விசாரிச்சிண்டு வரேன். ஒரு நாள் ஓசைப் படாமல் தேவிகாவையும் கூட்டிக் கொண்டு போய் பண்ணிட்டு வந்துடு. ரொம்ப நாள் முன்னாடியே போயிட்டார் என்கிறதனாலே ஒரு நாள் காரியமாகத்தான் இருக்கும். நான் ஏற்பாடு பண்ணிடறேன்'' என்றார்.

''இதோ பார்! உங்க அம்மாவை யாரும் ஒண்ணும் பண்ணப் போறதில்லை. அவளுக்குத் தெரியவே வேண் டாம். போய் நிம்மதியாகத் தூங்கு'' என்று சொல்லிவிட்டு சாமிநாதன் கிளம்பினார்.

# 22

கொஞ்ச நாழி பேசிக் கொண்டிருந்துவிட்டு தேவிகா உள்ளே வந்தாள். நல்ல வேளையாக சிநேகிதன் வீட்டில் கம்பைன் ஸ்டெடி என்று போயிருந்தான் ராஜேந்திரன். அரவிந்தன் ஏதோ ப்ராஜெக்ட் டூர் போயிருந்தான். குந்தவை இன்னும் குழந்தைதான் எப்போதோ தூங்கிப் போயிருந்தாள்.

உள்ளே வந்த தேவிகா போன் மணி அடித்ததும் எடுத்தாள். சுந்தராம்பா தான் பேசினாள் ''நாளைக்கே வருகிறேன். 'வேலை இன்னும் கொஞ்சம் இருக்கிறது இரு' என்கிறாள் மாமி. நான் நாளை சாயங்காலம் வருகிறேன்'' என்றாள்.

இவளுக்கு நிம்மதியாகவே இருந்தது. உள்ளே டீவி முன்னால் உட்கார்ந்து இலக்கில்லாமல் சேனல் மாற்றிக் கொண்டிருந்த கணவனுக்கு அவருடைய இரவு சாப்பாடான மூணு ரொட்டியை பண்ணி, கூட்டுடன் கொண்டு வைத்தாள். ரங்கராஜன் மௌனமாக சாப்பிட்டு முடித்தார். தானும் சாப்பிட்டு சமையலறையை சுத்தம் செய்துவிட்டு வந்தவளுக்கு இன்னும் ரங்கராஜன் அதே நிலையில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் போய் மெதுவாக அவர் தோளைத் தொட்டார்.'' ''வாங்க மணி 10 வந்து படுங்க'' என்றாள்.

இருவரும் போய் படுத்தனர். ரங்காவிற்கு தூக்கம் வரவில்லை. புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டிருந்



தார். கொஞ்ச நாழி பேசாமல் இருந்தால் தானே தூங்கி விடுவார் என்று நினைத்த தேவிகா தூங்கிவிட்டாள்.

ஒரு தூக்கம் தூங்கியபின் புரண்டு படுத்தபோது பக்கத்தில் ரங்கராஜன் எழுந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

''என்ன நீங்க கடினமான பலாப் பழத்திற்குள் அத்தனை தித்திப்பான சுளை இருப்பதுபோல் உங்களுடைய போலீஸ் டிரெஸ்ஸுக்கும், உத்யோகத்திற்கும் சம்பந்தமில்லாமே இப்படி ஒரு மென்மையான மனமா உங்களுக்கு?'' என்றவள் உள்ளேபோய் சூடாக கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து எடுத்து வந்து அவர் கையில் கொடுத்தாள்.

அவர் குடித்து முடிந்ததும் ''படுங்க பேசாமே'' என்று அதட்டி அவரைப் படுக்க வைத்தாள் இரண்டு நிமிடம் கழித்து தானும் சாய்ந்து படுத்து அவர் தலையைக் கோதிக் கொண்டு ''சொல்லுங்க, நீங்க எப்பவுமே உங்க அப்பாவைப் பத்தி ரொம்ப பேச மாட்டீங்க. அப்படி பேச்சு வந்தாலும் தொடர மாட்டீங்க. உங்க பழைய நினைவெல்லாம் கொட்டித் தீர்த்துடுங்க. நல்ல வேளையா வீட்டிலும் யாருமில்லை. விளக்கைப் போடவா?'' என்றாள் பரிவுடன்.

''வேண்டாம்மா! எங்கப்பாவைப் பத்தி என்னன்னு சொல்வது புத்தி தெரிஞ்ச நாளிலிருந்து அவரால் அனுபவிச்ச கஷ்டம்தான் அதிகம். உனக்கே தெரியும். எங்கம்மா அவள் அம்மாவுக்கு ஒரே பெண். அப்பாவும் ஒரே பிள்ளையே தவிர எனக்கு இரண்டு அத்தைகள் உண்டு, தெரியுமில்லையா? அத்தைகள் கல்யாணம் வரை தாத்தா, பாட்டி நல்லாதான் இருந்திருக்காங்க.

அதுவரை எல்லாம் ஒழுங்காத்தான் நடந்தது. அதுக்கப்புறம் தாத்தா கொஞ்சம் கொஞ்சமா கெட்ட வழிக்குப் போக ஆரம்பித்திருக்கிறார். வடபாதி மங்கலம், உடையாள்புரம், எல்லா கிராமங்களிலும் நல்ல நஞ்சை விளைச்சல் நிலம் நிறையத்தான் இருந்தது.

''குடும்பத்துக்கு சம்பாதித்துப் போட வேண்டியவர், வேலைக்குப் போகாததோடு, கெட்ட சகவாசமும் சேர்ந்தால் என்னவாகும்? அதுதான் எங்க தாத்தாவுக்கும் ஆச்சு. ஒவ்வொரு நிலமா வித்துருக்கார். கடைசியிலே மெலட்டூரில் இருந்த நிலத்தை விற்கும் முன்னாடிதான் பாட்டி ரொம்ப சண்டை போட்டுருக்கா. அத்தனை அசடாகவே இருந்து தாத்தா வழிக்கே போய்க் கொண்டிருந்த பாட்டி திடீரென்று முழிச்சிண்டா யாருக்குப் பிடிக்கும்? மொத்தத்தில் அந்த தலைமுறையிலேயே பிள்ளையை வைத்துக் கொண்டு நிர்க்கதியாய் நிக்கறது ஆரம்பிச்சிருக்கு'' என்று சொல்லிவிட்டு ''ஆமாம், இப்ப எதுக்கு இதையெல்லாம் நான் உன்னை உக்காத்திவெச்சு, தூக்கத்தையும் கெடுத்துண்டு சொல்லிண்டிருக்கேன்? எனக்கே தெரியல்லே, ஆனா தூக்கமும் வரலே'' என்றார்.

''உங்கமனசு அலைபாயுது. அதுதான் தூக்கம் வரலே. மனசிலே இருக்கறதையெல்லாம் கொட்டிட்டா, நிம்மதியா தூக்கம் வரும். அதுக்காவது எல்லாவற்றையும் சொல்லிடுங்க'' என்றாள் தேவிகா.

சற்று நேரம் மௌனமாக இருந்த ரங்கராஜன் தொடர்ந்தார். ''இந்த மாதிரியெல்லாம் வீட்லே அப்பாங்கிறவர் நடந்துக்கும் போது, பிள்ளைகள் நார்மலா எப்படி இருப்பாங்க? ஒண்ணா தானும் கெட்ட வழிக்குப்



போயிடுவாங்க, இல்லே, எங்கப்பா மாதிரி பக்தி முத்திப் போயிடும்.

சின்ன வயசிலெல்லாம் நான் பாட்டி செல்லமாத்தான் வளர்ந்தேன். பாட்டி எங்கப்பாவைப் பத்தி புலம்புவாள். தாத்தா கெட்ட வழியில் போனதைக் கூட கத்தி, அழுது, ஆர்ப்பாட்டம் பண்ணிட்டு அவளால் விட முடிந்தது. ஆனால் எங்கப்பா சாமி, பூதம்னு அலைஞ்சதுதான் அவளாலே தாங்க முடியல்லே.''

''ஆமா, உங்கப்பா ஆரம்பத்திலேருந்து இப்படித் தானாமா?'' என்று கேட்டாள் தேவிகா.

''ஆமாம், தேவிகா, பாட்டி சொல்லியிருக்கா. அங்கே கோவிலுக்குப் பஞ்சமா, என்ன? ஏதாவது ஒரு கோவிலுக்குப் போய் முழங்காலை முதுகோடு ஒரு துண்டை எடுத்து சுத்தி முடி போட்டுண்டு தியானத்தில் ஆழ்ந்துடுவாராம். பாட்டி தேடித்தேடித்தான் வீட்டிற்கு கூட்டி வருவாளாம்.''

''பின்னே எதுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சாங்களாம்? உங்கம்மா வாழ்க்கையையும் கெடுக்கறதுக்காமா?''

''நானும் கேட்டிருக்கேன் கொஞ்சம் வளர்ந்த பின்னாடி இதே கேள்வியை ''சாதாரண குடும்ப வாழ்க்கையிலே பற்றில்லாம் இருந்தா, ஒரு குணவதியான, அழகான பொண்ணை கட்டிவெச்சா பையன் திருந்தி வாழ்க்கையிலெ இன்ட்ரஸ்ட் காண்பிப்பான்னு எல்லா அப்பா, அம்மா நினைக்கிற மாதிரிதான் நானும் நினைச்சேன். உங்கம்மாவுக்கு என்னடா குறைச்சல்? ரொம்ப இதமாதான் நடந்துண்டா இந்த பைத்தியக்காரப் பிள்ளை கிட்டே. அவன்தான் மாறவேயில்லை. நடுவிலே நீயும் பொறந்துட்டே. ஐயய்யோ, இந்த பொண்ணு சுந்தராவின்

வாழ்க்கையை சீரழிச்சுட்டோமேன்னு நான் தான் பாத்துப் பாத்து, மாஞ்சு போயிண்டிருக்கேன். என் காலத்திற்கப்புறம் அவள் உன்னையும் வெச்சுண்டு நாதியில்லாம நிப்பாளேடா! நான் பகவானை 'எனக்கு நீண்ட ஆயுசைக் கொடு. அந்தப் பொண்ணுக்கு நான் துணையாக இருக்கணும். என் பேரன் நன்னா படிச்சி பெரிய வேலைக்குப் போறவரைக்கும் என்னை திடமா வை'னு வேண்டிண்டே இருக்கேம்பான்னு'' சொல்லிவிட்டு என்னைக் கட்டிக்கொண்டு அழுவாள்.

பாவம் அவள் என்ன செய்வாள்? வீட்டுக்காரர் பரம கெட்ட வழி, பிள்ளை பரம பக்தி வழி. அம்மா பாவம் முடிந்தவரை எதையும் காட்டிக் கொள்ளாமல் நடமாடுவாள்.''

''ஆன்மீகத்தேடல் என்றால் முழுவதுமாக வீட்டிற்கே வரமாட்டாரா?'' என்று கேட்டாள் தேவிகா.

''அப்படின்னு இல்லை. நான் இன்டெர்மீடியட் படிக்கும் வரைகூட வீட்டில் தான் இருந்தார். வீட்டிற்கு வந்து படுத்துப்பார். சாப்பிடுவார் அவ்வளவுதான். நான் டிகிரி முடிக்கும் வேலையில்தான் ஒரேடியா வீட்டை விட்டு போனது. நான் போய்த் தேடி ஒருதரம் ரமணாஸ்ரமத்திலிருந்து ரொம்பக் கெஞ்சிக் கூத்தாடி கூட்டி வந்திருக்கேன். ஆனா ஆறு மாசம் கழிச்சு இதே கதை தான். கொல்கத்தாவிலிருந்து ஒரு தரம் லெட்டர் போட்டார். தான் ராமகிருஷ்ணா மடத்தில் இருப்பதாகவும், தேட வேண்டாம், கவலை வேண்டாம் என்றெல்லாம் எழுதியிருந்தார். அந்த முறைதான் பாட்டிக்குத் தாங்க முடியல்லே, பாவம், ரொம்பவே தளர்ந்து போயிட்டா. படுத்த படுக்கையாயிட்டா அப்பாவுக்கு தெரிவிச்சோம்.



அப்பா வரலே. பாட்டி செத்துப் போனதை தெரிவிச்ச போது வந்தார். அப்போ ரிஷிகேஷ்லே இருந்தாராம். அம்மா, 'நீங்க இந்த வீட்டிலேயே இருங்கோ. நீங்க வீட்டிற்கு ஆம்பிள்ளைன்னு எதுவும் செய்ய வேண்டாம். பேருக்கு இருங்கோ, போதும்'ன்னு காலிலே விழுந்து கதறினாள். பாவி மனுஷன் காதிலேயே வாங்கிக்கல்லே. கிளம்பிவிட்டார் திரும்ப.''

''சரி விடுங்க. உங்களை அம்மா எப்படியோ முன்னுக்குக் கொண்டு வந்தாச்சு. இப்ப என்ன கெட்டுப் போச்சு?'' என்றாள் தேவிகா.

''உனக்கென்ன தேவிகா சுலபமா சொல்லிவிட்டே! ஸ்கூல்லே பசங்க என்னை எப்படி டீஸ் பண்ணுவாங்க, தெரியுமா? 'சாமியார் பெத்த பிள்ளை என்றெல்லாம் பேசும்போது ரொம்ப அழுகை வரும். அப்போதெல்லாம் கணேசன் குடும்பமும், சுப்பு குடும்பமும் தான் எங்களுக்கு மாரல் சப்போர்ட்.

பாவம் அம்மா எத்தனை பேர்கிட்டே எத்தனை வார்த்தை வாங்கிக் கட்டிண்டிருப்பா, தெரியுமா? இத்தனைக்கும் அப்பா குணம் அவரோட பழகின எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் ஒரு பெண் தனியா ஆகிவிட்டா பேச்சுக் கென்ன? அதுவும் அம்மா பாக்க வேற நன்னாயிருப்பா. ''இவ சரியா இருந்தா அவன் ஏன் வீட்டைவிட்டு போறான்'' என்கிற வார்த்தையெல்லாம் வாங்கிக் கட்டிண்டு இருக்கா.

''அதுனாலேதான் கணேசன் 'நிலம் இருக்குடா, வீடு கட்டிண்டு இங்கேயே வந்துடறியா'ன்னு கேட்டபோது ஊரில் இருந்த கடைசி கொஞ்சம் சொத்தையெல்லாம் வித்துவிட்டு இங்கே ஓடி வந்துட்டேன். ரொம்ப மூடியாக

இருந்த என்னை வளர்க்க அம்மா ரொம்ப கஷ்டப் பட்டிருக்கிறாள். அதனால்தான் அப்பா போயிட்டார் என்பது எனக்குத் தோன்றவில்லை. அவர் என்ன செய்திருக் கிறார் எனக்கு. நான் இப்போ வருத்தப் படறமாதிரி? என்னோட கவலை, வருத்தம் எல்லாம் அம்மாவை யாரும் எதுவும் அலட்சியப்படுத்தப் போறாங்களோன்னு தான்.''

''இல்லை. யாரும் அம்மாவை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. எனக்கு நிச்சயமாகத் தெரியும். வேற விதமா நடத்தவும் மாட்டாங்க.''

''எப்படி தேவி இத்தனை நிச்சயமா உன்னாலே சொல்ல முடியுது? எனக்கு என்னவோ பயமாகத்தான் இருக்கு.''

''தேவையில்லாத பயம். நேத்து சாயந்தரம் ஜெண்ட்ஸ் எல்லாம் உள்ளே போனதுக்கப்புறம் நாங்க லேடீஸ் கொஞ்ச நாழி உட்கார்ந்திருந்தோம், இல்லையா? அப்போ என்ன பேசிகிட்டோம்ன்னு உங்களுக்குத் தெரிந்தா உங்களுக்குத் தைரியமாக இருக்கும்.''

''அப்படியா, என்ன பேசிக்கிட்டீங்க, சொல்லு?''

''நீங்களெல்லாம் உள்ளே போயிட்டீங்க பொன்னியத்தை தான் முதலில் சொன்னாங்க. ''நாம எக்காரணம் கொண் டும் சுந்தராவை வேறே மாதிரி நடத்தவே கூடாது. எனக்குப் புத்தி தெரியறச்சேயே என்னை இந்தக் கோலமாக் கிட்டாங்க. எங்க அண்ணன் தந்த ஆதரவும், அவன் பெண்ணை வளர்க்கும் பொறுப்புமாகத்தான் என்னை உயிரோடு வெச்சுருக்கு. கல்யாணி என் பொறுப்பில் இல்லாமே இருந்தா நான் என்னா ஆகியிருப்பேனோ. யாருக்குத் தெரியும்? நான் கேக்காத வார்த்தையா, குத்தல்



பேச்சா, படாத அவமானமா? என்னவோ எல்லாத்தையும் முழுங்கிவிட்டு நானும் இத்தனை வயதைத் தள்ளி யிருக்கேன். என்னை மாதிரி இன்னும் யாரும் அவஸ்தை படக்கூடாது. நான் இப்போ உங்கள் எல்லோரையும் கேட்டுக்கறதெல்லாம் இப்ப மாதிரியே சுந்தராவை எப்பவும் நடத்துங்கோங்கறதுதான். அப்படிச் சொல்லி விட்டு அழுதுவிட்டாள். கூடவே கல்யாணியும் கண் கலங்கிட்டா.''

''அப்புறம்?''

''பரிமளா அத்தை சொன்னாங்க, 'பாருங்கடி, ஒவ்வொரு பொண்ணுக்குமே இருக்கும் ஆசை எல்லாம் தன் புருஷனுக்கு முன்னாடி போய்சேரணும்கறதுதான். அதுவும் வயது 60 ஆயிட்டா பயம்தான். புருஷனுக்கு ஒரு காலை தலையை வலிச்சாக்கூட பொம்மனாட்டிகள் தவிச்சுப் போறது இதனால்தான். பாவம் சுந்தரா! என்னிக்கு புருஷனோட சுகப்பட்டிருக்கா, இப்போ புதுசா துக்கப்பட? அவளுக்கு சொல்லாம இருக்கறதே உத்தமம்.''

''ஆமாம் அத்தை! நல்ல வேளையா ரங்கண்ணா திருவையாறுக்குப் போய் காரியம் பண்ணப் போற தில்லை. போனால் ஊரில் தெரிஞ்சவா யாராவது பார்த்து பின்னால் சுந்தரா ஆன்ட்டி காதில் விழற வாய்ப்பு இருக்கு. நிஜமாகவே தெரிய வேண்டாம் இந்த விஷயம்'' என்றாள் நளினி.

''எல்லோரும் கேட்டுக்குங்க! நானும் குழந்தைகளை வெச்சிண்டு இருக்கேன். இப்போ மாதிரியேதான் அத் தையை நாமெல்லாம் வித்தியாசமில்லாமல், ராசின்னு அவளை முன்னே வெச்சுதான் எந்த நல்ல காரியமும்

செய்யணும், செய்வோம். என் பங்கிலிருந்து இது உறுதி'' என்றாள் லஷ்மி.

''வாஸ்தவம்தான். அந்த மனுஷராலே அத்தை சுகப்பட்டிருக்காளா, இப்போ புதுசா கஷ்டப்பட சுந்தரா அத்தைக்கு இதனால் ஒரு பாதிப்பும் இருக்காது. அதனாலே நம்ம எல்லோரும் சேர்ந்து உறுதி எடுத்துக்கலாம்'' என்று ஜயந்தி அக்கா சொன்னாங்க.

''இத்தனைபேரும் ஒரே மனசா இப்படிச் சொல்லும் போது நீங்க கவலைப் பட ஒண்ணுமே இல்லைன்னு தான் நான் சொல்லுவேன்.

''அப்பா, இப்போ எனக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு. தேவி! ரொம்ப தேங்க்ஸ்'' என்ற ரங்கா தொடர்ந்தார், ''சின்ன வயசிலே ஸ்கூல்லே யாராவது ஒருத்தர் இல்லைன்னா ஒருத்தர் என்னை இன்ஸல்ட் பண்ணிக்கிட்டே தான் இருப்பாங்க.''

''சின்னப் பசங்க, என்ன சொல்லத் தெரியும்?'' என்று கேட்டாள் தேவிகா.

''அப்படி நினைக்காதே 'ஏய், இவங்க வீட்லே அப்பாவே இல்லை, தெரியுமா? என்பான் ஒருவன்'' ஏன் அம்மா துரத்திட்டாங்களா? என்பான் இன்னொருத்தன். இல்லன்னா நேரிலேயேகூட எங்கிட்டே கேட்பாங்க ''ஏன்டா, உங்கம்மா அப்பா சொன்னதைக் கேட்க மாட்டாங்களாமே, அதனால்தான் இப்ப வாழாவெட்டியா இருக்காங்களாமே'' என்று. ''ஏய், வாழாவெட்டின்னா என்னடா''ன்னு என் காதுபடிவே இன்னொருவன் கேட்பான். ''இவங்கம்மா மாதிரி புருஷன் இல்லாமே காலந் தள்ளறவங்களுக்குத்தான் அப்படி பேர்டா'' என்று பெரிசா விளக்கம் கொடுப்பான் மற்றொருவன். எனக்கு



தற்கொலை பண்ணிக்கலாமான்னு சில சமயம் தோணும்.''

''நீங்க இத்தனைக்கும் பேசாமலா இருப்பீங்க?''

''தினமுமே அம்மா ரொம்பதூரம் ஓதி ஓதிதான் ஸ்கூலுக்கே அனுப்புவாங்க. யாரோடயும் வம்பு வளர்க்கக் கூடாது. யார் என்ன சொன்னாலும் லட்சியமே பண்ணக் கூடாதுன்னுதான் சொல்லி அனுப்புவாங்க. அம்மா காதிலே விழுறமாதிரி அக்கம்பக்கத்திலே பெண்கள் பேசிக் கேட்டு அம்மாவுக்கு மரத்துப் போச்சு. ஆனா நான் சின்னப் பையன்தானே, அப்புறமா ஒரு வெறி வரும் பாரு, கையிலே சிக்கிக் கிட்டவனையெல்லாம் புரட்டி எடுத்துட்டு, நானும் இரண்டு, மூன்று இடத்திலாவது ரத்தக் காங்களுடன் வீடு வந்து சேருவேன். அம்மா என்னைக் கட்டிகிட்டு அழுவா.''

''இப்போது கண்ணீர் சிந்துவது தேவிகாவின் முறையாயிற்று. இருட்டில் அவள் கண்ணீர் இவர் மேல் சிந்த பதறிவிட்டார் ரங்கராஜன். எழுந்து உட்கார்ந்தவர், அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டு ''இப்போ நீ எதுக்கும்மா அழறே?'' என்று ஆதரவாகக் கேட்டார்.

''பாவங்க நீங்க! எங்க வீட்லே நானும் என் அண்ணாவுமாக இரண்டு குழந்தைங்கதானே. நான் சின்னவளா இருக்கும்போதே அப்பா அடிக்கடி டூர் போவார். எனக்கு ஆத்திரமா வரும். அண்ணாவும் ஐ.பி.எஸ் படிக்க ஆரம்பிச்சப்புறம் அவனும் அடிக்கடி டூர் போயிடுவான். எனக்குத் தனியா அம்மாவோட இருக்கும்போதெல்லாம் கோபமா வரும், எரிச்சல் பத்திக்கிட்டு வரும். நீங்க பாவம். தனியாகவே இருந்து எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்திருக்கீங்க. அதை நினைச்சப்ப

தான் கண்லே தண்ணீர் வந்துடுச்சுங்க. வேறே ஒண்ணு மில்லை'' என்றாள்.

''நீ அழவே கூடாது. நான் பாரு. என்னிக்குமே உங்க எல்லார்கிட்டேயும் மென்மையாகத்தானே நடந்துக்கறேன். ராஜேந்திரன் ஒருத்தன்கிட்டே தான் நான் கொஞ்சம் கடுமையாக நடந்துகிட்டு இருக்கிறேன். அதுவும் அவன் கன்னாபின்னாவென்று ஊரை சுத்தறானே, படிச்சு உருப்படணுமேங்கற கவலையினால் தான். இப்போ அந்த கவலையும் இல்லை. அவன் நல்ல பிள்ளையா மாறிட்டது ரொம்பவே நிம்மதியா இருக்கு.''

''நிஜமா உங்க வேலைக்கும் உங்க மனசுக்கும் சம்மந்தமேயில்லங்க.''

''ஆமாம். எனக்கு எங்க டிபார்ட்மெண்ட்லே கனிவான ஆபீஸர்ன்னுதான் பேரு. உத்யோக நிமித்தம் சில வேளைல தீராத போதுதான் கடுமையா நடந்துக்க வேண்டி வரும். ஆனா, நான் போலீஸ் ஆபீஸரானதாலே தான் நீ எனக்குக் கிடைச்சே. உனக்கு நினைவிருக்கா அந்த நாளெல்லாம்?''

''ஐய்யே, நினைவில்லாமலா? எத்தனை இனிமையான, சுகமான காலம். அதெல்லாம் மறக்குமா? மொமொதல்லே எங்க அண்ணா உங்களைக் கூட்டிகிட்டு வந்த நாள் அப்படியே படமா இன்னிக்கும் நெஞ்சிலே ஓடிக்கிட்டேதான் இருக்கு'' என்றாள் தேவிகா.

ஆமாம். முதல் நாள் கூடப் படிக்கும் நண்பன் என்று தேவிகாவின் அண்ணன் ரங்கராஜனை தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்த அன்று வீட்டில் தேவிகா மட்டும்தான் இருந்தாள். அறிமுகப்படுத்தி வைத்தானே அண்ணா. அந்த நேரம் ரதி, மன்மத ஆதிக்க நேரமாக இருந்திருக்க



வேண்டும். இருவர் நெஞ்சிலும் காதல் நரம்புகள் மீட்டப்பட்டன.

ஆனால் ரங்கராஜனுக்கு இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் குலை நடுக்கம். அதுவும் தேவிகா அப்பா அப்போதே டி.எஸ்.பி.யாக இருந்தவர். பெரிய மீசை, நல்ல உயரம். அதுக்கேற்ற ஆகுருதி. அதிரடியாகத்தான் பேச வார். இடி இடியென்று தான் சிரிப்பார்.

ஏதோ நல்ல உயரத்துடன், நன்கு விளையாடி பாடியும் நன்றாகப் பில்டப் ஆகியிருந்தால், போலீஸ் ட்ரெனிங் எடுத்து அந்த வேலையிலும் சேரப் போகிறானே ஒழிய, தன் தந்தை சரியில்லை என்ற தாழ்வு மனப்பான்மை எங்கு போகும்? லேசில் தன் எண்ணத்தை யாரிடமும் சொல்லவில்லை. சில பார்வைப் பரிமாற்றங்களைத் தவிர அவர்கள் இருவருக்குள்ளும் வேறு எதுவும் கிடையாது.

ஆனால் அதையே தன் கூர்மையான பார்வையால் கவனித்துவிட்ட தேவிகாவின் அண்ணன், தனிமையில் தேவிகாவைக் கேட்க, அவளும் ஆமாம் என்று தலையசைத்துவிட்டாள். முக்கியமாக அவனும் போலீஸ் வேலைக்குச் சேரப் போகிறான். நல்ல பையன் என்று அவள் அப்பா, அம்மாவிற்குப் பிடித்துவிட அவர்கள் சுந்தராவை அணுகி அவள் சம்மதத்தைப் பெற்றார்கள். சுந்தராவின் சார்பில் வரதன், சாமிநாதனுடன் பேசி அழகாகக் கல்யாணத்தை நடத்தி வைத்தனர்.

''என்ன, அந்த காலத்துக்கே போயிட்டியா, கண்ணம்மா?'' என்றார் ரங்கா. அவளை அணைத்திருந்த கைகளை எடுக்காமலே.

''நிஜம்தாங்க. நீங்க எனக்குக் கிடைச்சதைப் பெரிய அதிர்ஷ்டமா நினைக்கிறேங்க'' என்றாள் தேவிகா.

''இல்லை ராஜாத்தி! அதிர்ஷ்டம் என் பக்கம் தான் அதிகமாகவே அடிச்சுருக்கு. இல்லேன்னா நீ எனக்குக் கிடைச்சிருப்பியா'' என்ற ரங்காவை அணைத்துக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டாள் தேவிகா.

அவர் மனக்குமுறலுக்கு சந்தனமும், பன்னீருமாய் கலந்து தடவியது போன்ற அவளுடைய அணைப்பிலும், அன்பு வார்த்தைகளிலும், தன் வயதை மறந்து, குழந்தையாகி, வேதனை மாறி உறங்கிப் போனார் ரங்கராஜன்.

## 23

கல்யாணி இரண்டு மாதம் மருந்துகள் சாப்பிட்டு விட்டு டாக்டர் அவயாம்பாவிடம் போனாள். ''வாம்மா, நல்லா இருக்கியா, மருந்தெல்லாம் விடாமே சாப்பிடறியா?'' என்று கேட்ட டாக்டர் ''உன் ஹஸ்பெண்ட் எங்கேம்மா?'' என்று கேட்டாள். ''வெளியே இருக்கார் டாக்டர்'' என்றாள் கல்யாணி. ராமனாதனையும் உள்ளே வரச்சொன்ன டாக்டர் ''உட்காருங்க சார்! நீங்க இரண்டுபேரும் நான் சொல்றதை கவனமாக் கேளுங்க.

கல்யாணி நான் முதல்தரம் உன் ரிப்போர்ட் மொத்தமும் பார்த்தேன். அன்னிக்கே எனக்குத் தெரிஞ்சிடுத்து. உன்னோட ஃபெலோபியன் டியூப் இரண்டையும் சரி செய்ய முடியாது என்பது. அதனால் நான் அன்னிக்கே உனக்கு டெஸ்ட் ட்யூப் பேபிக்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்ய ஆரம்பிச்சுட்டேன். நீங்க படிச்சவங்க உங்களுக்கே தெரிஞ்சுருக்கும். அந்த ட்யூப் இரண்டு



உண்டு. சினைப்பையில் உருவாகும் முட்டையை கருப்பைக்கு கொண்டு போவதற்கு அது முக்கியம். உனக்கு அது இரண்டிலும் அடைப்பு இருந்து சரி செய்ய முயற்சித்து இன்னும் மோசமாகிவிட்டது.''

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கல்யாணிக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அவள் அவஸ்தையை அறிந்து அவள் கையை ஆறுதலாகப் பற்றிக் கொண்டான் ராமனாதன்.

''டோன்ட் பிகம் டென்ஸ். அது அவசியம் இல்லை. உனக்கு குழந்தை பிறக்காதுன்னு நான் சொல்லலியேம்மா! நல்ல வேளையாக உன்னுடைய சினை முட்டையும் இவருடைய விந்தணுவும் நல்ல ஆரோக்கியமாகவே இருக்கிறது. டெஸ்ட் ட்யூப் பேபின்னு ஒரு அற்புதமான விஷயம் இப்போது நிறையவே பழக்கத்தில் வந்து விட்டதே! டெஸ்ட் ட்யூப் பேபி என்பது வேறு ஒன்றுமில்லை. இரண்டையும் ட்யூபில் இணைய வைத்து உன் கருப்பையில் செலுத்திடுவோம். நல்லபடியாக் குழந்தை பிறக்கும். கவலையே படாதே! பிறக்கும் குழந்தையும் நல்ல ஆரோக்கியமா, நார்மலா இருக்கும். என்ன ஒண்ணு. இது ஒரே தடவையில் பலிதமாகாமல் போகலாம். பொறுமையாக இருக்கணும். திரும்பவும் சொல்றேன். உடனே பலிதம் இல்லைன்னா அதுக்காக மனசொடிஞ்சு போகக் கூடாது. சரி, இன்னும் இரண்டு நாளில் நம்முடைய முதல் முயற்சியைத் தொடங்கலாம். நான் ஏன் முதல் முயற்சின்னு சொல்றேன்னா, இதிலியே பலிதமாவதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்குன்னாலும் பலிக்காமல் போவதற்கும் நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கு. அதனால் தான்'' என்றவள் ராமனாதனைச் சற்று

வெளியே இருக்கச் சொல்லிவிட்டு கல்யாணியிடம் சில விஷயங்களை விளக்கமாக, விவரமாகச் சொல்லி அனுப்பினாள்.

பாவம் கல்யாணி! அன்று காலை எழுந்திருக்கும் போதே ஒரு படபடப்பாகவே எழுந்திருந்தாள். ராமனாதன் அவளைப் பார்த்ததும், ''என்ன கண்ணா இது? நீ தேவையில்லாமல் பதட்டப்படுகிறாய். இப்படி பதட்டப்பட்டியானா அதுவே எதிர்மறையா வேலை செய்யும் ப்ளீஸ் மா! ஏதானாலும் சுலபமா எடுத்துக்குவேன்னு எனக்கு பிராமிஸ் பண்ணிட்டு நீ இப்படி இருக்கலாமா?'' என்று அவளைத் தன் மார்போடு அணைத்து சமாதானப்படுத்தினான்.

''பயமா இருக்கு'' என்ற கல்யாணியிடம் ''இதோ பார்! நிச்சயமா நல்லதுதான் நடக்கும். ஒரு வேளை நமக்கு குழந்தையே பிறக்காதுன்னு டாக்டர் சொல்லிட்டார்னே வெச்சுக்க, என்ன ஆயிடும்? இந்தியாவில் எத்தனையோ குழந்தைகள் கவனிப்பாரின்றி திண்டாடுறாங்க. அதிலே ஒண்ணை எடுத்து நம்ம குழந்தையா நினைச்சு வளர்த்துக்கலாம். ஏதானாலும் தைரியமா எடுத்துக்கணும்டா செல்லம்'' என்றான்.

இரண்டு நாள் கழித்து கல்யாணியும் மனதை தைரியப்படுத்திக்கொண்டு தான் வந்திருந்தாள். ராமனாதன், அத்தை இரண்டு பேருமே கல்யாணியுடன் வந்திருந்தார்கள். பொன்னியத்தை முதலில் கூட வருவதற்கு மிகவும் தயங்கினாள். ''நான் வரல்லையப்பா, என் ராசி அவளையும் தொத்திக்குமோன்னு பயமாயிருக்கு. நீங்க மட்டும் போங்க. இல்லைன்னா பரிமளா அத்தையையோ வேறு யாரையாவதையோ கூட்டிப் போங்களேன்'' என்றாள் மிகவும் தயங்கியபடியே.



''அத்தை என்ன பேசறீங்க, நீங்க? இரண்டு நாள் முன்னாடி சுந்தராம்பா அத்தையை எப்போதும் போல் தான் நடத்தணும்னு அத்தனை தீவிரமா சொன்னது நீங்கதானே? ரொம்ப அழகா இருக்கு நீங்க இப்போ பேசறது. எங்க இரண்டு பேருக்கும் நல்லது நடக்கணும்னு உங்களை விட யார் அதிகமாக நினைக்கப் போறாங்க? வாங்க போகலாம்'' என்று கல்யாணி கண்டிப்பாகச் சொன்னாள். அதனால் தான் மூவருமாக வந்திருந்தார்கள்.

உள்ளே ஆபரேஷன் தியேட்டரில் கல்யாணிக்கு சிகிச்சை அளித்து முடித்த டாக்டர் வெளியே வந்தாள். ''சார், என் வேலையை வெற்றிகரமாய் முடிச்சுட்டேன் காட் இஸ் கிரேட் நல்லதே நடக்கும்னு நம்புவோம். நீங்க அவளுக்கு பூர்ணமாக ஓய்வு கொடுங்க. அப்புறமா ரொம்ப சிரமப் படுத்திக்காமல் நார்மலான வேலைகளைச் செய்யலாம். பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டு போய்விட்டாள். அவள் சொல்லியபடியே மாலை வரை அங்கிருந்து விட்டு கல்யாணியை அதிராமல் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் அவர்கள் இருவரும்.

வீட்டில் கல்யாணியை படுக்கையைவிட்டு நகர விடாமல் பொன்னியத்தை சகலமும் செய்தாள். டாக்டர் சொல்லவில்லை யென்றாலும் அதிக உப்பு, காரம், புளி சேர்க்காத ஆகாரத்தையே கொடுத்தாள். வேலை செய்த நேரம் போக அவள் பூஜை அறையிலேயே மற்ற நேரத்தைக் கழித்தாள். ராமனாதனைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். ஆபீஸிலிருந்து வந்ததிலிருந்து கோவிலில் சந்நிதி, சந்நிதியாகப் பிரதட்சணம் செய்து கொண்டிருந்தான்.

ஐயாரப்பன் காம்பௌண்டில் எல்லோருக்கும் அரசல் புரசலாக விஷயம் தெரிந்தாலும் யாரும் விவரமாக ஏதும்

கேட்டுக் கொள்ளவில்லை. இந்த விஷயத்தை தெரிந்து கொண்டதாகவே யாரும் காட்டிக் கொள்ளவில்லை. பத்து நாள் பெட் ரெஸ்ட் ஆகிவிட்டது. இவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்த போதிலும் 25வது நாள் இவர்கள் நம்பிக்கை பொய்த்துவிட்டது.

எத்தனை சமாதானம் செய்தாலும் அழத்தான் செய்தாள் கல்யாணி. அவளைத் தேற்ற முயன்ற ராமனாதன் தோற்றுப் போய் அவளாகவே அழுது ஓயட்டும் என்று விட்டுவிட்டான். அடுத்துவந்த இரண்டு மாதங்களிலும் இதே கதை தான். டாக்டரே கொஞ்சம் ஏமாந்துவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் பொன்னியத்தைதான், ''ஒரு முறை தட்டிப் போனால் மூன்று முறை தட்டிப்போகும் என்பார்கள். இன்னும் ஒரு தடவை பார்க்கத்தான் வேண்டும்'' என்று நம்பிக்கையுடன் சொன்னாள்.

ஆம், பெரியவளின் நம்பிக்கை நிஜமாயிற்று. கடவுள் கண் திறந்துவிட்டார். கல்யாணி கருத்தரித்துவிட்டாள். ஐயாரப்பன் காம்பௌண்டில் எல்லோருமே ஒரு வீட்டினர் போலத்தான் என்றாலும் யாரிடமும் பொன்னியாகப் போய் விஷயத்தைச் சொல்லவில்லை. மற்றவர்களும் தெரிந்தால்கூட தெரிந்தது போல் காட்டிக் கொள்ளவில்லை.

சரியாக மூன்று மாதம் முடிந்தது. பொன்னி நிறைய சர்க்கரை பொங்கல் செய்து எல்லார் வீட்டிற்கும் தானே கொண்டு போய் கொடுத்துவிட்டு வந்தாள். எல்லோருக்கும் ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. யாரும் இத்தனைநாள் சொல்லாததற்கும் கோபப்படவில்லை. நிஜம்தானே! இத்தனை நாள் கழித்து உண்டாகி



யிருக்கும்போது நிச்சயமாகவிட்டு தான் சொல்வார்கள். இதில் தவறேதும் இல்லை என்று தான் நினைத்தார்கள். ஆளாளுக்கு ஸ்வீட்டும், பழமுமாக கொண்டு வந்து கொடுத்து கல்யாணியை அப்படிக் கொண்டாடினார்கள். அவள் நல்லபடியாக பிள்ளை பெற்றெடுக்க வேண்டும் என்று எல்லோரும் கடவுளை வேண்டிக் கொண்டு கோவில்களில் அர்ச்சனை செய்து பிரசாதத்தைக் கொண்டு வந்து கொடுத்தனர். கல்யாணி மகிழ்ச்சியில் மிதந்தாள்.

## 24

அன்றைக்கு சுபாவிற்கு பாடத்தில் ஏதோ சந்தேகம். எப்போதுமே ஸயன்ஸ் கொஞ்சம் பிரச்னைதான் அவளுக்கு. இப்போதோ மனம் ஒட்டாத படிப்பு. ஒரே குழப்பமாக இருந்தது. பாடத்தை எடுத்துக் கொண்டு கணேசன் வீட்டிற்குப் போனாள். ஜயந்தி ஆன்ட்டி சொல்லிக் கொடுத்தால் அது ஆயுசு உள்ளவரைக்கும் மறக்காது. அப்படிச் சொல்லிக் கொடுப்பாள். ஆன்ட்டி ஃப்ரீயாக இருக்க வேண்டுமே என்று வேண்டிக் கொண்டே போனாள். 'காலேஜுலே பாடத்தைக் கவனிக்கறதே இல்லையா?' என்று எப்படியும் கொஞ்சம் திட்டுவாள். வாங்கிக் கொள்ளவேண்டியது தான், வேறென்ன செய்ய? பெயிலானால் எத்தனை அசிங்கம்!

''ஆன்ட்டி'' என்று அழைத்துக் கொண்டே அவர்கள் வீட்டில் நுழைந்தாள் சுபாஷிணி. ஜயந்தி எங்கோ வெளியே போகத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

''ஸாரிம்மா, எனக்கு இப்போது முடியாது. அவசரமா வெளியே போயிண்டிருக்கேன்'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக் அங்கு வந்துவிட்டான். ''என்ன சப்ஜெக்ட்?'' என்று கேட்டான் சுபாஷிணியைப் பார்த்து. ''கொஞ்சம் ஸயன்ஸ்தான் கேட்கணுமாயிருந்தது. நான் அப்புறமா வரேன்'' என்று சொல்லிப் போகத் திரும்பினாள்.

''கொண்டா இங்கே, நான் பார்க்கிறேன்'' என்றான் விவேக். இவள் தயங்க, உள்ளே இருந்தே ஜயந்தி, ''அவனிடம் கொடு சுபா, அவன் ஸயன்ஸ் ஸ்டூடண்ட் இல்லைன்னாலும் அதைப் பற்றி நன்றாகத் தெரியும்'' என்றாள். டேபிளில் புத்தகத்தை வைத்துக் கொண்டு சேரில் உட்கார்ந்தான் விவேக். இவள் தனக்கு சந்தேகமான பாடத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். இதயம் வெளியே குதித்து விழுந்துவிடும் போல் அடித்துக் கொண்டது. அவன் படித்துக் கொண்டிருக்க, இவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். ''உட்காரேன், சுபா!'' என்றான் விவேக் பக்கத்திலிருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டியபடி. இவளுக்கு கால்கள் துவண்டன. தொண்டை வரண்டது. வயிற்றில் புரட்டல். கண்ணை கிர்ரென்று வருவது போல் இருந்தது. இத்தனையும் தன் உள்ளம் கவர்ந்தவனின் அருகாமை கொடுத்த பரிசு.

ஜயந்தி வெளியே போய்விட்டாள். மாடியில் விஜய் பாட்டு வைத்துக் கேட்டுக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. ப்ரதீப்பும் அதே ஹாலில்தான் படித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் இவளுக்கு அவன் தன்னை என்ன பண்ணிவிடுவானோ என்று பயம். ''ரொம்ப நாளாகி விட்டதா. எனக்கு இந்த பாடம் உடனே புரியவில்லை



அண்ணி வந்ததும் கேட்டுக்கோ'' என்றான். ''சரி'' என்றவள் வீட்டிற்குப் போகத் திரும்பினாள். ''ஒரு நிமிஷம். இந்தா'' என்று சொல்லி ஒரு பேப்பரை நீட்டினான். அவசரமாக அதை வாங்கிக் கொண்டவள் வேகமாக வீட்டிற்குத் திரும்பிவிட்டாள். நேராக தன் அறைக்குச் சென்றவள் கதவைத் தாளிட்டுக் கொண்டு அவன் கொடுத்த காகிதத்தைப் பிரித்தாள். ''நாளை லஞ்ச் அவரில் நீ காலேஜிலிருந்து வெளியே வா. காத்திருப்பேன் உனக்காக'' என்று எழுதியிருந்தது.

இவளுக்கு வேர்த்துவிட்டது 'என்ன துணிச்சல் இந்த விவேக்கிற்கு? இன்னும் இவள் தனக்கு அவனைப் பிடிச்சிருக்கறதாகக் கூடச் சொல்லலை. அதற்குள் என்ன துணிச்சல் கடிதம் எழுதி நீட்டுகிறானே! இவன் என்ன என்னை வரச் சொல்றது? போகக்கூடாது. கண்டிப்பாகப் போகக்கூடாது' என்று மனதில் நினைத்துக் கொண்டாள். இருந்தாலும் மனது படபடவென்று அடித்துக் கொள்ள அந்த லெட்டரை மறுபடி பிரித்து படித்தாள். முகம் சிவக்க 'ஐயோ, எதுக்கு வரச் சொல்கிறான்?' என்று நினைத்துக் கொண்டாள். 'போகக் கூடாது. கண்டிப்பாகப் போகக்கூடாது' ஆனால் கூடவே இந்த துணிச்சல்தான் தனக்கு அவனைப் பிடித்திருப்பதற்குக் காரணமோ என்றும் தோன்றியது.

கீழிருந்து அம்மா தன்னை அழைக்கும் குரல் கேட்கவே அவசரம் அவசரமாக அந்தப் பேப்பரை சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டுவிட்டுக் கீழே வந்தாள். ''என்னம்மா, கொஞ்ச நேரம் என்னைப் படிக்க விடமாட்டியா?'' என்று கேட்டாள். ''இல்லம்மா, மாடில ஏதோ சத்தம் கேட்டது. அதுக்காகத்தான் கூப்பிட்டேன். நீ போய் படி!'' என்றாள்.

மறுபடி மாடிக்கு வந்தவள் "இந்த ஸயன்ஸ் சனியன் சந்தேகத்தை எப்படிப் போக்கிக்கறது? ஐயந்தி ஆன்ட்டி யிடம் போகப் பயமாக இருந்தது. தன் சிநேகிதிக்குப் போன் செய்து ஓரளவு தன் சந்தேகத்தை தீர்த்துக் கொண்டாள். ஆனால் அது மனதில் தங்கவில்லை.

அடுத்த கவலை. நாளைக்கு அவனைப் பார்ப்பதாக வேண்டாமா? பார்த்துப் பேச ஆசையாய் இருந்தது. ஆனால் மிகவும் பயமாக இருந்தது. யாராவது பார்த்து விட்டால்? கடைசியில் விக்டர் ஹ்யூகோ கதையில் வருவது போல் மனதில் எப்போதும் கெட்டது தான் ஜெயிக்கும் என்று நினைத்துக் கொண்டு நாளைக்குப் போய்த்தான் பார்ப்போமே. அப்படி என்ன சொல்லிவிடப் போகிறான்" என்று ஒருவாறு முடிவுக்கு வந்தபின் தான் சுமாராகத் தூங்கினாள்.

மறுநாள் கொஞ்சம் அக்கறையோடு டிரெஸ் செய்து கொண்டு காலேஜிற்குக் கிளம்பினாள். இவளின் அலங் காரத்தைப் பார்த்த வினோதினி "என்னம்மா கண்ணு! சௌக்கியமா? இன்னிக்கு என்ன விசேஷம்?" என்று கண்களில் குறும்பு மிளிரக் கேட்டாள்.

"ஒரு விசேஷமும் இல்லை. ஏன். எதற்காகக் கேட் கிறாய்?" என்று கேட்டாள் பதிலுக்கு.

"இல்லே. இன்னிக்கு என்னமோ இவ்வளவு அமர்க்கள மாய் காலேஜிற்குப் போறியேன்னு கேட்டேன்."

சொல்லிவைத்தது போல் அவள் இப்படிக் கேட்கவும் இவளுக்கு பக்கென்றாகிவிட்டது. "போடி உன் வேலையைப் பார்த்துண்டு" என்று அவள் மேல் எரிந்து விழுந்து விட்டு தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு புறப் பட்டாள்.



போனதிலிருந்து லன்ச் அவரையே நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். லன்ச் அவர் ஆரம்பித்ததும் அவசர அவசரமாக வாசலுக்கு ஓடினாள். அவள் எதிர் பார்த்தபடியே விவேக் முன்னதாகவே வந்து அவளுக் காகக் காத்திருந்தான்.

அவனைப் பார்த்ததும் ஒரு நிமிடம் அசந்து போனாள். அடேயப்பா! என்ன அழகு என்று நினைத்துக் கொண் டாள். அவளைப் பார்த்ததும் அவன் ஹாய் என்று கை அசைத்தான். இருவருமாக காம்பௌண்ட் சுவரின் உள்பக்கமாக ஒரு மரத்தடிக்கு வந்தனர்.

"விவேக், எதுக்கு என்னை வரச் சொன்னாய்? என்ன விஷயம்? நான் சீக்கிரம் உள்ளே போகணும்" என்றாள் சுபா.

"அம்மணி, நம் பிரதமர் ரஷ்யாவிற்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டிருக்கிறார் இல்லையா? அது பற்றி உன் அபிப்ராயத்தைக் கேட்கத்தான் வந்தேன்" என்றான் விவேக் சிரிக்காமல்.

"ஏய், இந்த விளையாட்டெல்லாம் எங்கிட்டே வேண் டாம்."

"எல்லா விளையாட்டையுமே உங்கிட்டேதான் விளை யாடப் போறேன் வாழ்க்கை பூரா. அதைச் சொல்லத்தான் வந்தேன்."

"இதோ பார். சொல்லிட்டேயில்லே நீ கிளம்பு" என்றாள் ஒற்றை விரலை நீட்டி.

"என்ன நீ, விரல் நீட்டி பேசறே!"

"ஏன் என்ன செய்வே விரல் நீட்டிப் பேசினால்?"

"என்ன செய்வேனா? இதைத்தான் செய்வேன்" என்று அவளுடைய நீட்டிய விரலில் ஒரு மோதிரத்தை சடாரென்று மாட்டிவிட்டான் விவேக்.

சுபா திகைத்துப் போனாள். ''இதெல்லாம் என்ன?'' என்றாள் காட்டமாக.

''சாந்தம் கண்ணே. சாந்தம். இதெல்லாம் என்று பன்மையில் கேட்கிறாயே! இது மோதிரம். என் முதல் காதல் பரிசு.''

சுபா தடுமாறிப் போனாள். ''ஏய், இது ரொம்பவே அராஜகம். அநியாயம் நான் எப்போவாவது உன்னைக் காதலிப்பதாகச் சொன்னேனா? யார் உனக்கு இந்த அதிகாரம் கொடுத்தது?'' என்று படபடத்தாள்.

''எந்த அதிகாரம்? ஓஹோ, மோதிரம் போட்டதைச் சொல்லுகிறாயா! சரி, உனக்குப் பிடிக்கல்லைனா ஒண்ணு பண்ணு. திருப்பி என் விரலிலேயே போட்டுவிடு.''

''இது என்ன பேச்சு? ரொம்பவே சரியில்லை.''

''சரியில்லைன்னா நீ போட்டுவிட வேண்டாம் என் கையிலேயே கொடுத்துடு, போதும்.''

சுபா பதிலே பேசவில்லை. ''எனக்கு லேட்டாயிடுச்சு'' என்று திரும்பி நடந்தாள். சற்று தூரம் நடந்தவள் அவன் இருக்கிறானா என்று திரும்பிப் பார்த்தாள். அதுவரை அங்கு காத்திருந்த விவேக் ''பை'' என்று கை அசைத்து விட்டுச் சிரித்துக் கொண்டே புறப்பட்டு விட்டான்.

அவனுக்கு எத்தனை சாமர்த்தியம். அழகாக, வெள்ளி கூட இல்லாமல், ஒரு ஒயிட்மெட்டலில் வாங்கி இருந்தான். ரொம்பவும் அழகாகவே இருந்தது. வெள்ளி என்றால் கூட ஏது? என்ன? என்று அம்மா கேட்டாள். அதுவும் அந்த வினோ கடங்காரி கண்டிப்பாக குடைந்தெடுத்துவிடுவாள். ஆனால் இது என்றால் சமாளிப்பது சுலபம்.



அடுத்த நாளும் லஞ்ச் நேரத்தில் ஒரு எதிர்பார்ப்புடன் வெளியே வந்து பார்த்தாள். அவள் நினைத்தது சரிதான். அதோ நிற்கிறானே, மரத்தில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு! விடுவிடுவென்று அவன் அருகில் வந்தாள்.

''கண்மணி, சுகமா?'' என்ற விவேக், ''ஹாய் டார்லிங்! யூ ஆர் லுக்கிங் கிரேட்யா'' என்றான்.

''நோ ஐஸ், ப்ளீஸ்!'' என்ற சுபா, ''இதோ பார் விவேக், தயவு பண்ணி ஒரு 15 நாட்கள் என் வழிக்கு வராதேயேன். நான் நல்லபடியா என் எக்ஸாமை முடிச்சுடறேன்.'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''அவ்வளவு தானே! என்னிக்கு பரிட்சை முடியுதுன்னு சொல்லு. அதுக்கப்புறம் நாம ரெகுலரா சந்திக்கலாம்.''

''ரெகுலரா சந்திக்கிறதா! எதுக்கு?''

''ஐய்யே, என் மக்கு மஹாராணி! இது தெரியாதா? நம்ம எதிர்காலத்தைப் பத்தி சிந்திக்கத்தான்.''

''நம்ம எதிர்காலம்! மை காட்.''

''நாம இன்னிக்கு காதலர்கள்தான். ஆனா நாளையே புருஷன் பொண்டாட்டியாயுடுவோமே! நம்ம எதிர்காலத்தைப் பத்தி யோசிக்க வேண்டாமா?''

''நாம் காதலர்கள்னே நான் ஒத்துக்கல்லியே.''

''இதோ பார்! நான் தந்த மோதிரத்தை நீ இன்னும் திருப்பித் தரல்லே. என்னைப் பிடிக்கலைன்னா அதைத் திருப்பித்தர வேண்டியது தானே! நான் என் வழியைப் பாத்துக்கிட்டு போயிகிட்டே இருப்பேன்.''

''என் வழின்னா?''

''நான் கேட்டது ஒரு வேளை கிடைக்கலேன்னா, வேறு எது கிடைக்குதுன்னு பார்த்து பின்னாடியே போக வேண்டியது தான்.''

''எது கிடைக்குதோன்னு நீ மீன் பண்ணுவது என்னத்தை?''

''அதோ பார். அதோ போகுதே ஒரு நீல சுடிதார். அழகான தலைமயிர். டைட் பேண்டோட! அதாக்கூட இருக்கலாம்.''

சுபா முகம் சிவந்து போனாள். உதடு துடிக்க ஆரம்பித்தது. ஒரு அழுகை அரங்கேற ஆயத்தமானது.

''ஏய், உனக்கோ என் மீது காதல் இல்லை. அப்புறம் நான் என்ன பண்ணினா உனக்கென்ன?''

சுபா கலங்கிய கண்களுடன் அவனை ஆழமாகப் பார்த்தாள்.

''ஏய். இன்னும் டிராமா போடாதே! எனக்கு நீ என்னை தீவிரமா காதலிக்கறேன்னு ரொம்ப கிளியராத் தெரியும். என்னிக்கு எக்ஸாம் முடியுது? கடைசி நாள் சிநேகிதிகளோட சினிமாவுக்குப் போறேன்னு வீட்லே சொல்லிவிட்டு வந்துடு. நாம சேர்ந்து கொஞ்ச நேரம் செலவழிக்கலாம் ஓகே தானே! அதுவரை நான் உன்னை டிஸ்டர்ப் செய்ய மாட்டேன்.'' என்று சொல்லிப் போகத் திரும்பியவன், திடீரென்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டு.

''கலங்காதிரு என் கண்மணியே! நான் என்றும் உன் அடிமைதான்'' என்று அமெரிக்கன் பவுடன் (bow) சொன்னான்.

சுபா சிலையாக நின்றாள். இவளுக்கு அப்பாடா என்றிருந்தது. தன் உணர்ச்சிகள் சுயக் கட்டுபாடின்றி வெளி வந்ததற்கு மிகவும் வெட்கமாகிவிட்டது இருந்தாலும் பொய்க் கோபத்துடன் ''நீ யார் பின்னாடி வேணும்னாலும் போ. எனக்கென்ன வந்தது?'' என்றாள்.



''ஹா. அப்படியா! இரண்டு நிமிஷம் முன்னாடி அம்மையாரைப் பார்த்திருக்கணும் நாலு கர்சீப் காணாது'' என்றான் விவேக்.

''சரி, சரி. நான் போறேன்'' என்று திரும்பினாள்.

''சுபாக்கண்ணு! 15 நாள் கழிச்சு தொடருவோமில்லையா? தொடர்கிறோம். பை, பை'' என்றவன் புறப்பட்டு விட்டான்.

''சீ, இன்னும் ஒரு பத்து நிமிஷம் பேசிக் கொண்டிருக்காமல் போனோமே'' என்று இவளுக்குத் துக்கமாய் வந்தது. காலேஜில் பாடத்தில் மனதைச் செலுத்த முயன்று தோற்றுப் போனாள்.

இவன் நினைவை ஒதுக்கிவிட்டு படிப்பில் தீவிரமாக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் வீட்டிலும் கூடுமான வரை அவன் கண்ணில் படாமல் தவிர்த்துவிட்டு படிக்க ஆரம்பித்தாள். 'நான் நன்றாகப் படிக்கக்கூடியவள். இது இடையில் வந்த எண்ணம். இதை ஒதுக்குவேன்' என்று அவ்வப்போது தனக்குள் சொல்லிக் கொண்டு சமர்த்தாகப் படித்தாள்.

## 25

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டுக்கு வீடு நீ என்ன பட்சணம் பண்ணப் போறே. நீ என்ன புடவை வாங்கினே? என்கிற பேச்சு. ஐயாரப்பன் காம்பௌண்டைப் பொருத்தவரை திவ்யா இல்லாதது லக்ஷ்மி, சீனிவாசனுக்கு வருத்தம் என்றால், அப்பா தவறி

விட்டாரே. பண்டிகை பண்ணலாமோ, கூடாதோ என்று ரங்கராஜனுக்கு சந்தேகம். 12 வருஷத்திற்குமேல் பார்க் காதவர்களுக்காக இதெல்லாம் கொண்டாட வேண்டியது சாஸ்திரமுமில்லை, லாஜிக்கும் இல்லை என்று தேவிகா ஒரேயடியாய் அடித்துச் சொல்லிவிட்டாள். எல்லா வீடுகளிலும் கல்யாணியை மட்டும் அவசியம் என்ன பட்சணம் செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளத் தவறவில்லை.

சுந்தரா அன்று காலை சமையலுக்குப் பிறகு கொஞ்சம் மெஷினுக்குப் போக வேண்டிய சாமானெல்லாம் தயார் செய்துவிட்டு சாப்பிட்டாள். அந்த செய்தி வந்த பிறகு ஒரு நாலு நாட்கள் போல ரங்கா அம்மாவின் முகத்தைப் பார்த்தே பேசவில்லை. அவர் அப்படி நடந்து கொண்டது சுந்தராவை மிகவும் பாதித்தது. ''ஏம்பா ஒரு மாதிரி இருக்கே?'' என்று பிள்ளையைக் கேட்டாள் ''ஒன்றுமில்லை'' என்று ரங்கா சொன்னாலும், சுந்தரா தேவிகாவிடம் ''என்னம்மா, ரங்காவுக்கு என் மேல் ஏதாவது கோபமா, ஏன் இப்படி இருக்கான்?'' என்று கேட்டாள்.

''என்ன அத்தை. நீங்க யாராவது அம்மா மேலே கோவிச்சுப்பாங்களா? இல்லை நீங்க அப்படி கோபப் படும்படி என்ன செஞ்சிட்டீங்க? அவருக்கு ஏதோ ஆபீஸ் டென்ஷன். நீங்க ஏன் மண்டையை உடைச்சுக்கிறீங்க. அநாவசியமாய் அதுக்கு?'' என்று சொல்லிவிட்டாள். ரங்காவும் சொல்லிவைத்த மாதிரி அதையே சொல்ல, சரி என்று அதோட விட்டுவிட்டாள் சுந்தரா. பாவம், ஆதியிலிருந்தே எல்லாவற்றையும் அது வருகிற போக்கிலேயே ஏற்றுக் கொண்டு தானே வாழ்ந்திருக் கிறாள். ஒரு வாரத்தில் ரங்காவும் நார்மலாகிவிட்டார்.



ஏதோ எண்ணமிட்டுக் கொண்டு படுத்துக் கொண் டிருந்தவள் தன்னை மறந்து கண்ணயர்ந்துவிட்டாள். திடீரென்று போன் அலறியது. வீட்டில் யாரும் இல்லாத தால், இவளே அவசரமாக எழுந்து போனை எடுத்தாள். குந்தவையின் பள்ளிக்கூடத்திலிருந்து தான் போன். குந்தவைக்கு ரொம்ப ஜுரம் அதிகமாகி மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். நீங்கள் உடனே வரமுடியுமா இல்லே நாங்களே ஏதாவது ஹாஸ்பிடலில் சேர்த்து விடட்டுமா என்று கேட்டார்கள். வேண்டாம், ''இதோ நாங்கள் யாராவது வந்து விடுகிறோம்'' என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டாள்.

அவசரமாக ரங்காவிற்குப் போன் போட்டாள். அவர் நம்பரே கிடைக்கவில்லை. ஆபீஸிலும் இல்லை. தேவிகாவிற்குப் போன் போட்டாள். அவள் ஆபீஸ் காரியமாக வெளியே போயிருப்பதாக பதில் வந்தது. அதற்குள் உடம்பு தொப்பலாக வியர்வையில் நனைந்து விட்டது சுந்தராவிற்கு. சீனிவாசன் சாப்பிட வந்திருப்பார் என்பது நினைவுக்கு வர, அவரைப் போய் அழைத்து அழுகையும் பேச்சுமாக விஷயத்தைச் சொல்லி முடித்தாள்.

''இதோ நான் போய் பார்க்கிறேன் அம்மா ஒண்ணும் ஆகாது. நீங்க கவலைப்படாம வீட்டிற்குப் போங்க'' என்றார்.

''நானும் வேணா வரேனே'' என்றாள் சுந்தரா.

''வேண்டாம்மா, நான் போகிறேன் இவரோட'' என்று லக்ஷ்மி சொல்லி அவளும் தயாராகிவிட்டாள்.

ஸ்கூலுக்குப் போகும் வழியில் ரங்காவிற்கு லக்ஷ்மி திரும்பத் திரும்ப போன் செய்ய கடைசியில் லைன் கிடைத்தது. விஷயத்தைச் சொன்னதும் அவர்

பதட்டமாகிவிட்டார். "நாங்க ஸ்கூலுக்குத்தான் போய்கிட்டு இருக்கோம். நீங்க அவங்களுக்குப் போன் பண்ணி குழந்தையை எங்களோடு அனுப்பச் சொல்லுங்க" என்றாள் லக்ஷ்மி. இவர்கள் பெண்களும் அதே பள்ளியில் படித்தவர்கள் தான். எனவே பிரச்னை இருக்காது. ஆனாலும் நேரத்தை வீணாக்கக் கூடாதே இது போன்ற சமயங்களில். அதனால் ஒரு முன் ஜாக்ரதை தான்.

இவர்கள் போய் சேரும் முன் ஸ்கூலின் அவளை மயக்கம் தெளிவித்து, சூடாக காப்பி கொடுத்திருந்தார்கள். ஆனாலும் குழந்தை சரியாக இல்லை. புறப்படும் முன் பாட்டி லக்ஷ்மியிடம் குழந்தைக்கு இன்று நான்காவது நாள். பாத்துக்கோ என்றும் வேறு சொல்லியிருந்தாள். எனவே லக்ஷ்மி சீனிவாசனிடம் அபயம் நர்சிங் ஹோமிற்கோ கூட்டிப் போகலாம் என்றாள். நல்ல ஜூரம், உடம்பு அனலாய்க் கொதித்தது. ஏதோ பேத்தல் வேறு. இவர்கள் இருவருக்கும் பயமாகவே இருந்தது. ஸ்கூலில் இவர்கள் அந்த நேரம் போய் சேராவிட்டால், குழந்தைக்கு ஸ்பான்ச் பாத் கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள்.

இங்கே அபயம் நர்சிங் ஹோமிலும் அதைத்தான் செய்தார்கள். டாக்டர் அபயம் ஜூரம் குறைய ஒரு ஊசியும் போட்டாள். "நல்ல வேளைம்மா. நான் வீட்டிற்குப் புறப்பட்டுகிட்டே இருந்தேன். சரியான நேரத்துக்குக் கூட்டுண்டு வந்துட்டீங்க இனிமேல் பயமில்லை" என்றாள்.

அவள் குந்தவை இவர்கள் பெண் என்று நினைத்துக் கொண்டு வரிசையாகக் கேள்விகள் கேட்டாள். "நாங்கள்



இவளின் பக்கத்து வீட்டுக்காரர்கள் டாக்டர்" என்று சொன்னதும் அந்த வேளையிலும் "அப்பா, என்ன ஒத்துமைம்மா உங்க காம்பௌண்டில் என்று வியக்கத் தவறவில்லை.

அதற்குள் தேவிகா, ரங்கா, சுந்தரா எல்லோரும் வந்துவிட்டனர். காலையிலேயே தலை சுத்துகிறது. வாந்தி வருகின்றது என்றாளாம். அப்புறம் சாப்பிடவும் இல்லையாம். ஆனால் காலையிலே ஜூரம் இல்லை. இருந்திருந்தா ஸ்கூலுக்கு அனுப்பியிருக்க மாட்டோம். அப்போ கூடப் போக வேண்டாம்ன்னுதான் சொன்னேன். இல்லம்மா, பரிட்சைக்காக முக்கிய கேள்விகள் கொடுக்கறாங்க இன்னிக்குன்னு போனா. எதனால டாக்டர் இப்படி திடீர்னு ஹைஃபீவர்?" என்று கவலையுடன் கேட்டாள் தேவிகா.

"இப்ப வர வைரல் ஃபீவர் இப்படித்தான் வரும்மா. இன்னிக்கு ஒரு நாள் வேணும்னா இங்கேயே இருக்கட்டும். திரும்ப ஜூரம் ஏறல்லைன்னா நாளைக்கு வீட்டிற்குக் கூட்டிப் போகலாம்" என்றாள் டாக்டர். "ஆமாம், ஐயாரப்பன் காம்பௌண்ட் தானே நீங்களெல்லாம்? கல்யாணி ராமனாதன் மட்டும் இந்தப் பெண்ணைப் பார்க்க வரக்கூடாதுன்னு சொல்லிடுங்க. இப்ப அவர்களுக்கு ஜூரம் வந்தால் கஷ்டம். ஆன்டிபயாட்டிக்கும் கொடுக்க முடியாது. அதனால்தான் சொல்கிறேன். முடிஞ்சா அவங்க அத்தை, வீட்டுக்காரர் யாரையுமே உங்க வீட்டுக்கு வர வேண்டாம்னு சொல்லிட்டீங்கன்னா நல்லது" என்று சொல்லிவிட்டு மறுபடியும் குந்தவையைப் பார்க்கப் போனாள் டாக்டர். இதற்குள் அவளுக்கு ஜூரம் குறைய ஆரம்பித்திருந்தது.

கண் கலங்கி உட்கார்ந்திருந்த ரங்கா, தேவிகா தம்பதிகளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு சீனிவாசன் கடைக்குப் போனார். சுந்தராம்பாவையும் வற்புறுத்தி கூட்டிப் போனார். போகும் போது அவர் எடுத்துக் கொண்டு போன ரூபாய் 2000/- த்தையும் லக்ஷ்மி கையில் கொடுத்துவிட்டு சாயங்காலம் வருவதாகச் சொல்லி புறப்பட்டார்.

திரும்ப சாயந்திரம் நல்ல ஜுரம் அடிக்க ஆரம்பித்து விட்டது. டாக்டர் திரும்ப இஞ்செக்ஷன் கொடுத்து ஜுரத்தை இறக்கினாள். ''நீங்க வீட்டிற்குப் போங்க சார் நாங்க பாத்துக்குறோம்'' என்றாள். அரை மனதாகக் கிளம்பிப்போனார் ரங்கராஜன். தேவிகா அப்படியே சித்திரம்போல உட்கார்ந்திருந்தாள். லக்ஷ்மி வற்புறுத்தி அவளுக்கு காப்பியும் பிஸ்கட்டும் வாங்கி கொடுத்தாள்.

சற்று நேரத்தில், ''குந்தவைக்கு என்னம்மா ஆயிற்று?'' என்று கேட்டுக் கொண்டே அரவிந்தும், ராஜேந்திரனும் வந்துவிட்டனர். குழந்தை படுத்திருந்த கோலத்தைப் பார்க்க சகிக்கவில்லை அவர்கள் இருவருக்கும்.

''லக்ஷ்மி ஆன்ட்டி, நீங்க வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்க. இப்போ நளினி ஆன்ட்டி அம்மாவுக்கு சாப்பாடு கொண்டு வராங்களாம் ராத்திரி அம்மாவோட நானும் இங்கேயே இருந்துடுவேன். ஒரு அவசரம்னா அம்மா தனியா என்ன பண்ணுவாங்க, பாவம்!'' என்றான் அரவிந்த்.

இத்தனை மருந்துக்கும் கட்டுப் படாமல் இரவு திரும்ப இரண்டுதரம் ஜுரம் ஏறவே டாக்டர் மறுநாள் பிளட் டெஸ்ட்டுக்கு எழுதிக் கொடுத்தாள். உடனடியாக எதுவும் புரியவில்லை. இப்படி கவலையில் கழிந்தது



மூன்று நாட்கள். குழந்தை அரை உடம்பாகிப் போனாள். தேவிகா, ரங்கா, சுந்தரா ஒருவர் முகத்திலும் ஈயாட வில்லை. ராஜேந்திரனும், அரவிந்தும் மாறி மாறி ஹாஸ்பிடலிலேயே தங்கினர்.

இன்னும் இரண்டு நாளில் தீபாவளி. யாருக்கும் எதுவும் செய்யத் தோன்றவில்லை. பண்டிகை செய்யும் மூடிலும் யாரும் இல்லை. எல்லார் எண்ணமும் குந்தவை நல்லபடியாகத் தேறி வீடு வந்தால் போதும் என்பதில் தான் இருந்தது. எப்போதும் ப்ரதீப்தான் பட்டாசு வாங்கு வதில் மும்முரமாக இருப்பான். அவனும் குந்தவையும் தான் எல்லா விஷயங்களிலும் கூட்டு, எப்போதும் சண்டை என்று இருப்பார்கள். இப்போது அவனுக்குக் கூட ஒன்றும் தோன்றவில்லை. தீபாவளிக்கு முதல் நாள் காலை வீட்டிற்கு குளித்து சாப்பிட வந்த தேவிகா வீடுவீடாகப் போய் 'எல்லோரும் பண்டிகையைக் கொண்டாடுங்க. குந்தவைக்கு ஜுரம் என்ற கவலை யால் யாருமே பண்டிகை கொண்டாடாமல் இருக்கலாமா' என்று ரொம்ப தூரம் சொல்லிப் பார்த்தாள். பொன்னி யத்தையிடமும் போனில் பேசினாள். பாவம் குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்றதுமே போய்ப் பார்க்கத் துடித்த அத்தை டாக்டர் சொன்னதால் வேறு வழியில்லாமல் பேசாமல் இருந்துவிட்டாள்.

தேவிகா போனில் பேசியதைக் கேட்ட பொன்னியத்தை, ''இதோ பார், தேவிகா! நாமெல்லாம் வேறே வேறே வீட்டுக் காரங்களா? அது எப்படி குழந்தை ஆஸ்பத்திரியில் இருக்கும் போது இங்கே நாங்க பண்டிகை கொண் டாடுவது? கார்த்திகை வரும் அதை நன்றாகக் கொண்டாட லாம். பேசறதைப் பாரு!'' என்று கடிந்து கொண்டாள்.

''ப்ரதீப்புக்கு மட்டுமாவது பட்டாசெல்லாம் வாங்கி கொடுங்க'' என்று விஜய் ஷோபாவிடம் சொன்னான். ப்ரதீப்பிடமும் ''நீ பட்டாசெல்லாம் வாங்கி வெடிப்பா, கண்ணா! கார்த்திகைக்கு வெடிக்கும் போது குந்தவையும் வந்துடுவா, உன்னோடு சேர்ந்து வெடிப்பா'' என்றாள் தேவிகா. ஆனால் அவன், ''நானும் கார்த்திகைக்கு வெடிச்சுக்கறேன், ஆன்ட்டி'' என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போய்விட்டான். கண்களைத் துடைத்துக் கொண்டு, அவன் வேண்டுமானால் வெட்கப்பட்டானே தவிர அரவிந்தும், ராஜேந்திரனும் வெட்கமே படவில்லை. தங்கையின் நிலையைக் கண்டு அழுதுவிட்டனர். அவர்களுக்குத் தங்கை என்றால் உயிர்.

ஆஸ்பத்திரியை விட்டு யாரும் அப்படி, இப்படி நகரவில்லை. தீபாவளியன்று பாயசம் செய்து ஆண்டவனுக்கு நைவேத்யம் பண்ணுகிறோம். அது போதும் என்று பரிமளா மாமி சொன்னது போல் தான் எல்லா வீட்டிலும் செய்தனர். ப்ரதீப் புதிய டிரெஸ் கூட போட்டுக் கொள்ள மாட்டேன் என்றுவிட்டான்.

தீபாவளிக்கு மறுநாள், ஜுரம் வந்து ஒரு வாரம் ஆன பின்தான் குந்தவையின் ஜுரம் டைபாய்ட் என்று தெரிந்தது. அதற்கான வைத்தியம் செய்து டாக்டர் ஜுரத்தைக் குறைத்தாள். ஆனாலும் டாக்டர் இன்னும் இரண்டு நாட்கள் தன் கண்காணிப்பில் வைத்துத்தான் குழந்தையை டிஸ்சார்ஜ் செய்தாள். ஒரு மாதிரி அகதிகள் தோற்றத்தில் வீடு வந்து சேர்ந்தனர் எல்லோரும். குழந்தையைப் போய் பார்க்கலாமா என்று கல்யாணி கேட்டதற்கு டாக்டர் அனுமதி மறுத்துவிட்டாள். ராமநாதன் குடும்பத்தாருக்கு நெஞ்சு வரை குறை. அவன் தனக்குத்



தெரிந்த எல்லாவற்றிற்கும் பரிகாரமான நவக்கிரகப் பிரதிட்சணத்தை நாள் தவறாமல் செய்தான்.

''சீனிவாசா, உனக்கு நான் தேங்ஸ் சொல்லவேயில்லை. லக்ஷ்மிக்கும்தான்'' என்றார் ரங்கா சாவகாசமாக.

''ஏண்டா, உடம்பு எப்படியிருக்கு? உதை வாங்கப் போறே. நன்றி சொல்றானாம், நன்றி!'' என்று கோபப் பட்டார் சீனிவாசன். மொத்தத்தில் குந்தவை நல்லபடியாக எழுந்து நடமாடும் வரை யாருக்கும் அங்கு வேறு சிந்தனையே இல்லை என்றால் அது மிகையாகாது.

மொத்தத்தில் ஐயாரப்பன் காம்பௌண்டின் ஐந்து குடும்பங்களுக்கும் உள்ள ஒற்றுமைக்கு இன்னும் ஒரு சாட்சியாகிவிட்டது குந்தவைக்கு ஜுரம் வந்தது.

# 26

''ஏம்மா, ஷோபா! இதென்ன இப்படி சாப்பிட்டுட்டு எழுந்திருக்குறே? வேலைக்குன்னு வெளிலே போற பொண்ணு இப்படி சாப்பிட்டா என்னமா போதும்? சக்தி வேண்டாமா உடம்பிலே'' என்று கேட்டாள் பரிமளா.

''போதும் பாட்டி'' என்று சொல்லி எழுந்துவிட்டாள் ஷோபா. அதற்கு மேல் சாப்பிட அவளுக்குப் பிடிக்கவில்லை. நிஜமாகவே அவள் கொறித்துவிட்டு எழுந்த அழகு அப்படித்தான் இருந்தது.

''இந்தா ஜயந்தி! உன் மாட்டுப் பெண் சாப்பிட்ட அழகைப் பார்த்தியா? என்னவோ ஏதோ விசாரிக்க மாட்டியா?'' என்று தன் மாட்டுப் பெண்ணை கிழவி கேட்டாள்.

''என்னம்மா ஷோபா, என்ன ஆச்சு? ஏன் சரியா சாப்பிடவில்லை?'' என்றவள் ஷோபாவைப் பார்த்தும் ''ஏய், குளித்து எத்தனை நாளாச்சு? மசக்கையா என்ன?'' என்றாள் ஜயந்தி.

''இல்லம்மா, அதெல்லாம் ஒண்ணுமேயில்லை'' என்றாள் ஷோபா பரிதாபமாக.

''பின்னே என்ன ஆச்சு? ஏன் நீ சரியா சாப்பிடல்லை யாம்? நாலு நாளா இப்படித்தான் என்கிறாளே பாட்டி'' என்று கேட்டாள் ஜயந்தி.

''ஒண்ணுமில்லேம்மா'' என்று மாடியேறினாள் ஷோபா.

அவள் சொன்ன விதத்திலேயே ஏதோ பிரச்னை என்று புரிந்துகொண்ட ஜயந்தி அவள் பின்னாலேயே போனாள். ஷோபா நேரே தன் அறைக்குப் போனாள். கட்டிலில் போய் உட்கார்ந்தவள் கைகளினால் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள். தூக்கி வாரிப் போட்டது ஜயந்திக்கு.

மாட்டுப் .பெண் அழுவதைப் பார்க்க ஜயந்திக்கு மனசு தளரவில்லை. அவள் என்ன டி.வி. சீரியலில் வரும் மாமியாரா அல்லது அந்தக் காலத்து மாமியாரா, மருமகள் அழுவதைப் பார்த்து சந்தோஷிப்பதற்கு? பதறிவிட்டாள். அதுவும் ஷோபாவின் அம்மா இரண்டு வருடங்கள் முன் இறந்தபின் ஷோபாவைப் பார்க்கும் போதெல்லாம் தாயில்லாத பெண்ணாயிற்றே என்று இன்னும் பாசமாக இருப்பாள். ஷோபாவும் மென்மையான பெண். தன் நடத்தை, பேச்சு எல்லாவற்றாலும் அந்தக் குடும்பத்தினர் எல்லோரையும் கட்டிப் போட்டிருந்தாள்.

''என்னம்மா ஷோபா, என்ன ஆச்சு? ஏன் அழறே?'' என்று ஜயந்தி கேட்டதும் அவள் மடியில் படுத்துக்



கொண்டு கதறிவிட்டாள். அவள் தலையைக் கோதிக் கொண்டிருந்த ஜயந்திக்கு ரொம்பவே படபடப்பாகி விட்டது. ஆனாலும் அவள் சற்று அழுது ஓயட்டும் என்று காத்திருந்தாள்.

''அம்மா, நான் மோசம் போயிட்டேம்மா'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள் ஷோபா.

''என்னடி சொல்றே. புரியல்லையே! சரியாகச் சொல்லு. என்ன நடந்தது?'' என்று கேட்டாள் ஜயந்தி.

''பெரிய பிரச்னை. எப்படி மீளப் போறேனோ. தெரியல்லேம்மா'' என்று விசும்பினாள்.

''என்னம்மா நடந்தது? சரியாகச் சொன்னாத்தானே நான் ஏதாவது செய்ய முடியும்?'' என்று ஜயந்தி கேட்டாள்.

''ஆபீஸில் ஒருத்தன் என்னை மோசம் பண்ணி பணத்தைத் திருடிவிட்டான்'' என்றாள் ஷோபா.

சற்று நேரம் ஜயந்தி பேசவில்லை. கல்யாணம் ஆகும் போதே பெண் ஃபைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறாள் என்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. என்றைக்கானாலும் பிடுங்கல் பிடித்த வேலை என்று அபிப்ராயப்பட்டாள். ஆனால் 'அவள் ரொம்ப புத்திசாலி. கவர்ன்மெண்ட் வேலைக்கான பரிட்சை எழுதியிருக் கிறாள். ரிஸல்ட் வந்ததும் அரசாங்க வேலைக்கான உத்தரவு வரும்'' என்று அவள் வீட்டினர் சொன்னதால் ஒத்துக் கொண்டாள். அப்போது அவளுக்கு அந்த பெரிய ஃபைனான்ஸ் கம்பெனியில் நான்கு வருட சர்விஸ் ஆகியிருந்தது. நல்ல சம்பளமும் கூட இவளுக்கு அர சாங்க வேலை வர இரண்டு வருடமாகிவிட்டது. அதற் குள் அவளுக்கு பிரமோஷன் வந்து கிளார்க்கிலிருந்து

ஆபீஸராகிவிட்டாள். இவள் வேலையில் சிறந்து விளங்கியதால் இவளை விட இஷ்டமில்லாமல் இவ ளுக்குச் சம்பளத்தை வேறு நிறைய ஏத்திக் கொடுத்தன தவிர கவர்ன்மெண்ட் வேலை வேறு ஊரில் வேறு ஊரில் போஸ்டிங்குடன் வந்ததால், இந்த கம்பெனியி லேயே நீடித்தாள். இதுவரை ஒரு பிரச்னையும் இல லாமல் இருந்தது. இப்போது என்னவோ இப்படி அழு கிறாளே. என்ன ஆயிருக்கும்? இத்தனை எண்ணங்களும் ஜயந்திக்கு ஒரு நிமிடத்தில் மனதில் தோன்றியவை.

ஷோபா விவரம் சொல்லத் தொடங்கினாள். ஆபீஸில் ஸேப்டி லாக்கர் இருந்தாலும் கொஞ்சம் நிறைய பணம் சேர்ந்தால் உடனே பேங்கில் போய் கட்டிவிடுவார்கள். ஒரு கிளர்க்காக தன் மேலதிகாரியுடன் பேங்கிற்குப் போய்க் கொண்டிருந்த அவள் இப்போது தான் ஒரு மேலதிகாரியாகி விட்டதால் கிளர்க் துணையுடன் போவது வழக்கம். தீபாவளிக்கு மறுநாள் சாயந்திரம் ரூபாய் 10 லட்சம் சேர்ந்துவிடவே பேங்கிற்குப் போகும் வேலை நேர்ந்தது. ஆனால் அந்த சமயத்தில் இவளுக்கு சில கணக்குகள் சரியாக முடியவில்லை. தலையை வேறு நமநமவென்று வலித்தது.

எப்போதும் நாகராஜன் என்ற கிளார்க்தான் இவளுடன் கூட வருவான். அன்று அவன் தானே போய்வருவதாகச் சொன்னதும் இவளுக்கு இந்தவரை அவன் உதவி செய்கிறானே என்று சந்தோஷமாக இருந்தது. துணைக்கு யாரையாவது பியூனை அழைத்துக் கொள்ளுங்கள் சார் என்று சொல்லி பணத்தை கவுண்டிங் மெஷினில் எண்ணிக் கட்டிக் கொடுத்தாள்.

எப்போதும் பணத்தை பேங்கில் கட்டிவிட்டு என்ட்ரி போட அப்போதே நின்றால் ரொம்ப லேட்டாகிவிடும்



என்பதால் அடுத்தநாள் பியூன் போய் போட்டுக் கொண்டு வருவது வழக்கம். நாகராஜன் பணம் கட்டி வருவதாக எடுத்துப் போனது ஒரு சனிக்கிழமை. ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்பதால் திங்கட் கிழமை என்ட்ரி போட எடுத்துக் கொண்டு போன ப்யூன் திரும்ப பாஸ் புத்தகத்தை இவளிடம் கொடுத்து புது என்ட்ரி ஒன்று மில்லை மேடம் என்று சொல்லவும் இவளுக்கு பகீரென்றது.

நாகராஜனைக் கூப்பிட்டுக் கேட்டாள். அவன் ''நீங்க எப்போது மேடம் பணம் கொடுத்தீங்க. கொடுக்கறேன்னு சொன்னீங்க. அப்புறம் திங்கட் கிழமை பாத்துக்கலாம்னு சொல்லிட்டீங்களே மேடம்'' என்றான் கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல்.

''என்ன சொல்றீங்க. நாகராஜன்? சாயந்திரம் எனக்குத் தலைவலின்னு சொன்னதும் நீங்க தானே நான் மட்டுமே போய் வரேன்னிங்க. நான் கூட ப்யூனைக் கூட்டிண்டு போங்கன்னு சொல்லலியா?'' என்றாள்.

''இல்லை, மேடம்! நீங்க ஏதோ நினைப்பில் என்னவோ சொல்றீங்க. ஏன் மேடம், எப்பவும் நாம இரண்டு பேரும் சேர்ந்துதானே போவோம். இவ்வளவு பெரிய தொகையை ஒருத்தனை நம்பிக் கொடுத்திருப்பீங்களா? எங்கேயாவது கை மறதியா வெச்சுருப்பீங்க, நல்லா பாருங்க மேடம்'' என்றான் நாகராஜன்.

''நாகராஜன் சார். விளையாடாதீங்க. எனக்கு பட படன்னு வருது. நான் ஒண்ணும் தட்டுக்கெட்டுச் சொல லலை. நிச்சயமாக உங்ககிட்டேதான் கொடுத்தேன். என்ன பண்ணீங்க அந்த பணத்தை?'' என்று குரலை உசத்தி இவள் கேட்க, நாகராஜன் ''பாருங்கய்யா இந்த

மேடம் பேசறதை. ஏதாவது நம்புகிறமாதிரி இருக்கா'' என்றான் அங்கு கூடிய ஆபீஸ்காரர்களிடம். மொத்தத்தில் இருவர் குரலும் தடிக்க மேனேஜர் கூப்பிட்டனுப்பினார்.

கண்களில் நீர்ததும்ப ஷோபா நடந்தவற்றை மேனேஜரிடம் சொல்ல. அதற்கு மறுப்பாக நாகராஜன் தான் சொன்னதையே சொல்ல இருவர் சொன்னதையும் அவரால் தள்ள முடியவில்லை. நாகராஜன் ஷோபா வருவதற்கு ஒரு வருடம் முன்பிருந்தே அந்த கம்பெனியில் வேலை பார்ப்பவன் ஆகையால் அவன் சொல்வதையும் நம்பாமல் இருக்க முடியவில்லை.

''இதோ பாருங்க. நீங்க இரண்டுபேரும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வாங்க. இப்போ திங்கள் காலை 12 மணி. உங்களுக்கு புதன் கிழமை காலை 12 மணிவரை டைம் தரேன். அதுக்குள்ள எனக்கு அந்தப் பணத்தைப் பற்றி தெரிஞ்சாகணும். இல்லாட்டா நான் போலீஸில் புகார் கொடுக்க வேண்டியிருக்கும். ஒண்ணா, இரண்டா 10 லட்சம் விளையாட்டாகவா இருக்கு உங்களுக்கு'' என்று கடுமையாகச் சொன்னார்.

ஷோபாவிடம் தனியாக வந்து ஆபீஸில் உள்ள ஒவ்வொருவரும். ''என்னம்மா நீ. ஒரு சாட்சி வெச்சிண்டு கொடுக்க மாட்டியா? யோசிச்சுப் பாரு! யாராவது கூட இருந்தாங்களா? நீங்க ஒரு கையெழுத்து வாங்கிக்கிட்டு கொடுத்திருக்கலாமேம்மா. தப்பு பண்ணிட்டீங்களே'' என்று துளைத்து எடுத்தனர். ''யாரை நம்ப முடியுது இந்த காலத்தில்? கெட்ட நேரம், வேறென்ன?'' என்று அங்கலாய்த்தனர்.



மறுநாள், அதற்கு மறுநாள் என்று இரண்டு நாள் விசாரித்து சரியான பதில் கிடைக்காத மேனேஜர் ''நாளைக்கு போலீசில் கம்ப்ளையின்ட் செய்யப் போகிறேன்'' என்றார். நல்ல வேளை முதலாளி ராமரத்னம் சிங்கப்பூர் போயிருக்கிறார் அவர் வரும் முன் எப்படியாவது பணத்தை கண்டுபிடித்து கொடுத்துடுங்க இல்லைன்னா வி ஷயம் விபரீதமாகிவிடும்'' என்று இருவரையும் எச்சரித்தார்.

இன்றைக்கு நான்கு நாட்களாகிவிட்டது. இன்று மேனேஜர் போலீசுக்குப் போகப்போகிறாராம். அதுதான் பயந்து கொண்டு ஷோபா ஒரே அழுகை. இத்தனையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட ஜயந்தி, ''அவங்க என்ன போலீசுக்குப் போவது, நாம் போவோம். அழாதே. இரு வரேன்'' என்ற ஜயந்தி நேரே ரங்கராஜன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டாள். ''வேண்டாம்மா, என்னைப் பத்தி ரங்கா அங்கிள் என்ன நினைப்பார்?'' என்று ஷோபா கேவினாள்.

''என்ன நினைப்பார்? உன்னைப் பத்தி அவருக்குத் தெரியாதா, என்ன? நீ சும்மா இரு. பின்னே இதிலிருந்து எப்படி வெளியே வருவது?'' என்ற ஜயந்தி நேரே ரங்கராஜன் வீட்டிற்குப் போய் கதவைத் தட்டினாள். அவசரமாக அவருடன் பேச வேண்டும் என்றதால் ரங்காவை போனில் கூப்பிட்டாள் சுந்தரா.

''அண்ணா, நான் ஜயந்தி பேசறேன் ஒரு அவசர காரியம், அண்ணா'' என்றாள்.

''என்னம்மா, எதுக்கு இத்தனை டென்ஷனாக இருக்கே?'' என்றார் ரங்கா.

''நம்ம ஷோபா ஆபீசிலே'' என்று அவள் சொல்ல ஆரம்பிக்க, குறுக்கிட்ட ரங்கராஜன் ''சரிம்மா நீ போனிலே ஒண்ணும் பேசாதே. இது ஒப்பன் லைன். நான் இந்த ஏரியாவிலேதான் இருக்கேன் உடனே வரேன் நேரே பேசலாம்'' என்று சொல்லி போனை வைத்தவர் அடுத்த 10 நிமிஷங்களில் வந்துவிட்டார்.

''என்னம்மா, என்ன விஷயம்?'' என்று அவர் கேட்டதும் ஷோபா எல்லாவற்றையும் கொட்டிவிட்டாள். கூடவே ''நான் அம்மாகிட்டே சொல்ல மறந்துட்டேன். அங்கிள்! அந்த ராஸ்கல் நாகராஜன் என்னை பைத்தியக்காரிங்கறான். எனக்கு வீட்டிலே ஏதோ டிப்ரஷனாம் அதனாலே புத்தி மாறாட்டமாம். அதான் தட்டுகெட்டு சொல்றேனாம். பணம் போனதைவிட இது எனக்கு ரொம்ப தாங்கல்லை'' என்று 'ஹோ' என்று அழுதாள்.

''அப்படியா சொல்றான் அந்த ராஸ்கல்? அவன் இப்பவும் ஆபீஸுக்கு வந்து கிட்டுருக்கானா?'' என்று கேட்டார் ரங்கா.

''தினம் வருகிறான், அங்கிள்! நேத்திக்குக்கூட என்னை நேருக்கு நேர் பார்த்து பணம் பத்தி ஏதாவது தெரிஞ்சுதா? பாவம் மேடம், நீங்க'' என்றான்.

''சரி, நீ ஒரு லீவு லெட்டர் எழுதிக் கொடு, இரண்டு நாள் ஆபீசுக்குப் போகவேண்டாம் நான் பாத்துக்கறேன். விஜய் கிட்டே சொல்லி இவளை ஏதாவது தீம்பார்க். வேடந்தாங்கல்ன்னு கூட்டிகிட்டு போகச் சொல்லு. அம்மா ஜயந்தி நீ ஒண்ணும் கவலைப்படாதே. எல்லாம் சரி பண்ணிடலாம். அந்த ராஸ்கலை நான் கவனிச்சுக்கறேன். நான் வரேம்மா'' என்று கிளம்பிவிட்டார்.



ஷோபா மளமளவென்று லீவு லெட்டர் எழுதி அவர் வீட்டில் கொண்டு கொடுக்கச் சொல்லி ஜயந்தியிடம் கொடுத்தாள். நேரே அவள் ஆபீசுக்குப் போன ரங்கா மேனேஜரைப் பார்த்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். தான் ஷோபாவின் பக்கத்துவீட்டில் இருப்பதாகவும், ஷோபா தன் பெண்ணுக்கும் மேலே என்றும் சொன்னார். மேனேஜரிடம் தற்போது போலீசில் கம்ப்ளைண்ட் கொடுக்க வேண்டாம் என்றும் தானே இதில் நேரடியாக இறங்கி வெகு விரைவில் குற்றவாளியைக் கண்டுபிடித்து விடுவதாகவும் சொன்னார். ஒரு மாவட்ட டி.எஸ்.பியே நேரடியாகவந்து உத்திரவாதம் கொடுப்பதால் சற்று நிம்மதியடைந்த மேனேஜர்'' எங்களுக்கு ஷோபா மேல் சந்தேகம் கிடையாது, ஸார்! அவங்க ஒரு கடுமையான உழைப்பாளி, சிறந்த ஒழுக்கமுள்ள பெண். ஆனாலும் இதில் துரதிருஷ்டவசமாக சம்பந்தப்பட்டுவிட்டார்கள். ஆதலால் எங்க முதலாளியிடம் பேசி விட்டு அவர் முடிவைச் சொல்கிறேன் சார்'' என்றார். உடனேயே போன் செய்து முதலாளியிடம் எல்லாவிவரமும் சொல்லி அவரின் அனுமதியைப் பெற்றுவிட்டார். அவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்த ரங்கராஜன் நாகராஜனை அடையாளம் காட்டும்படிக் கேட்டுக் கொண்டார் ஆனால் அன்று அவன் ஆபீசுக்கு வரவில்லையாதலால் அவன் போட்டோ ஒன்றையும் அவன் வீட்டு விலாசத்தையும் வாங்கிக் கொண்டு இந்த விஷயத்தை ரகசியமாக வைக்கக் கேட்டுக் கொண்டு மேனஜரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

பிறகு தன் அலுவலகத்திற்கு வந்த ரங்காராஜன் இரண்டு கான்ஸ்டபிள்களை அழைத்து மடமடவென்று உத்தரவு போட ஆரம்பித்தார்.

# 27

இரண்டு நாட்கள் கழிந்தன ஷோபாவைத் தனியே விடாமல், ஜயந்தி, விஜய் என்று யாரோ ஒருவர் மாற்றி ஒருவர் அவளுடன் இருந்துகொண்டே இருந்தனர். மூன்றாம் நாள் காலையில் ஆபீசிலிருந்து ஷோபாவிற்கு போன் வந்தது. போனை எடுத்துப் பேசிய ஜயந்தி அகமும் முகமும் மலர "தேங்க்யூ, ஸார். இவ்வளவு சீக்கிரம் அவன் மாட்டுவான் என்று நாங்களும் நினைக்கவில்லை. ஷோபாவைப் பற்றி நீங்கள் கணித்த கணிப்புக்கும், அவளுக்கும் தந்த இந்த உதவிக்கும் மிக்க மிக்க நன்றி சார்" என்று சொல்லி போனை வைத்தாள்.

"ஏய் மருமகளே! இங்கே வா. ஒரு நல்ல சேதி. உன் ஆபிசிலிருந்து போன் வந்தது. அந்த ராஸ்கல் மாட்டிண்டுட்டான். உன்னை உடனே வரச் சொன்னார் மேனேஜர்" என்றாள்.

"அம்மா, நிஜமாகவா சொல்கிறீர்கள்?" என்று கேட்ட ஷோபா ஜயந்தியைக் கட்டிக் கொண்டு கதறிவிட்டாள் சந்தோஷத்தில்.

"அடி அசட்டுப் பெண்ணே! ரங்கராஜன் அங்கிள் இருக்கும்போது நமக்கு என்ன பயம்? எனக்கு அவர் கிட்டே சொன்னபோதே மனசு நிம்மதியாகிவிட்டது. பார் ஒரே வாரத்தில் அந்த ராஸ்கல் மாட்டிக் கொண்டான். நீ நிறைய ஸ்வீட் வாங்கி கொண்டு போய் அங்கிளுக்கு நன்றி சொல்லிவிட்டு ஆபீசுக்குப் புறப்படு" என்றாள் ஜயந்தி.



ஷோபா இரண்டு கிலோ மைசூர்பா வாங்கிக் கொண்டு ரங்கராஜனைப் பார்த்து கொடுத்து தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். அவர் உதவி இல்லையெனில் தன்னைப் போலீஸ் கைது செய்திருப்பார்கள் என்று சொல்லி இந்த அவமானத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்கு 100 முறை நன்றி சொன்னாள்.

"எப்படி இதைச் சாதிச்சீங்க. அண்ணா?" என்று கேட்டாள் ஜயந்தி. கூட கணேசன், விஜய், சுந்தரா எல்லோரும் வந்துவிட்டனர். பாவம். அன்றைக்கு ரங்கராஜன் நான் பாத்துக்கறேன். நீங்கள் யாரும் கவலைப் படவேண்டாம்" என்று பெண்களிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தாலும் கணேசன். விஜய் இரண்டு பேருமே ஆபீசிலிருந்து வந்ததும் ரங்காவைப் பார்த்து ரொம்ப கவலைப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். "அவங்களுக்கு சொன்னது தான் உங்களுக்கும் சொல்றேன் இரண்டுபேரும் அநாவசியமாகக் கவலைப்படவேண்டாம். நான் பாத்துக்கறேன். தைரியமாக இருங்கள்" என்று திரும்பத் திரும்பச் சொல்லியனுப்பினார் ரங்கா.

ஷோபாவிற்கு நல்ல நியூஸ் வந்த அன்று ஆபீசுக்கு கிளம்பிக்கொண்டிருந்த கணேசன், விஜய் இருவருமே போன் செய்து ஆபீசுக்கு லேட்டாக வருவதாக சொல்லி விட்டு ரங்கராஜன் வீட்டிற்கு வந்துவிட்டனர்.

"சொல்லு ரங்கா. என்ன செய்து இவ்வளவு சீக்கிரம் குற்றவாளியைக் கண்டுபிடிச்சே? நீ புத்திசாலின்னு தெரியும். ஆனா இவ்வளவு அதிபுத்திசாலித்தனமாக அந்த அயோக்யனை இரண்டே நாளில் எப்படிப் பிடிச்சே?" என்று கேட்டார் கணேசன்.

ஆம். அன்று காலை குற்றவாளியான நாகராஜன் தன் குற்றத்தை ஒத்துக் கொண்டு விட்டான். அவனிடமிருந்து

முழுப் பணமும் கிடைத்துவிடும் என்பதால் ஆபீசில் போலீசில் புகார் கொடுக்க வேண்டாம் என்றும், அவளை வேலையிலிருந்து நீக்கிவிடுவதென்றும் தீர்மானித்தனர். அதுதான் காலை வந்த செய்தி.

''ஏய். இது என்னப்பா கேஸ் இதெல்லாம் ஜுஜுபி ஆனாலும் இது ஒரு இன்டரெஸ்டிங் கேஸ் தான். முதலில் என் கான்ஸ்டபிள் ஒருத்தரை மஃப்டியில் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு குறுகிய சந்திலிருக்கும் அவன் வீட்டிற்கு அனுப்பினேன். நான் எதிர்பார்த்தபடி வீடு பூட்டி இருந்தது. பக்கத்து வீடு நாகராஜன் மனைவியின் அக்கா வீடு. என் கான்ஸ்டபிள் முதலிலேயே இந்த விவரங்களையெல்லாம் சேகரித்து வைத்துக் கொண்டதால் நேராக அந்த வீட்டிற்குப் போய் கதவைத் தட்டினார்.

வெளியே வந்த பெண்மணி பரம தரித்திரத்தில் இருந்தாள். வயதும் நிறைய இருக்கும். ஆனாலும் இவர் 'நீங்க நாகராஜனின் சம்சாரம் தானே' என்று கேட்டிருக்கிறார்.

''ஐயே, அவள் என் கடைசி தங்கச்சி. என்னைவிட 10 வயது சின்னவள்,'' என்றாள் நாணிக் கோணியபடி.

''ஓ. நான் நாகராஜன் சம்சாரத்தை எப்பவோ பார்த்தது. அதுதான் சட்டுனு அடையாளம் தெரியவில்லை. அது சரி. அவங்க எங்கே வெளியே போயிருக்காங்களா? வீடு பூட்டியிருக்கே? எப்போ வருவாங்க?'' என்று கேட்டார்.

''அவங்க வெளியூர் போயிருக்காங்க. திரும்பி வர ஒரு வாரம் ஆகும்'' என்றாள்.

''ஒரு வாரமாகுமா? ஐயோ, நான் ஒரு முக்கிய விஷயமாக நாகுவைப் பார்க்கணுமே! எந்த ஊருக்குப் போயிருக்காங்க? தெரியுமா?''



''அவங்களா, என் அண்ணன் மகளுக்கு சடங்கு சுத்தறாங்க அதுக்குப் போயிருக்காங்க. அங்கேருந்து நிறைய ஊருக்கெல்லாம் போயி சாமி கும்பிட்டுட்டு வாறதுக்கு 10 நாள் கூட ஆகுங்க.''

''அப்படிங்களா! ஏங்க கொஞ்சம் தண்ணி கொடுங்களேன்'' என்றார் நம்மவர். அவர் மகா சாமர்த்தியக்காரர் என்று பெயரெடுத்தவர். ''சரி, அவங்க வர ஒரு வாரமாகும்ங்கிறீங்க. நான் பிள்ளைகளுக்காக பிஸ்கெட்டும் பழமும் வாங்கிவந்தேன். இந்தாங்க, உங்க பிள்ளைகளுக்குத்தான் கொடுங்க'' என்று நீட்டினார் கான்ஸ்டபிள் சிதம்பரம்.

''வாங்க, உள்ளே வந்து உட்காருங்க தண்ணி என்ன மோரே தரேன்'' என்றாள்.

''ஆமா, உங்க அண்ணன் மவ சடங்குக்கு நீங்க போகலியா?'' என்று கேட்டார்.

''ஆங். அவங்க மூணு பவுன் சங்கிலி எடுத்துட்டுப் போயிருக்காங்க. நான் என்னத்தை ஒரு புடவை, ஜாக்கெட் மட்டும் வாங்கிகிட்டுப்போய் நிக்கறது? எனக்கு அதான் இஷ்டமில்லை. போவல்லை. அப்படிப் போனா ஒரு மரியாதை இருக்குங்களா, சொல்லுங்க!'' என்றாள்.

''பரவாயில்லையே! என் தோஸ்த் பவுன் விக்கற விலையிலே மூணு பவுன் சங்கிலி கொளுந்தியாளுக்கு எடுத்துக் கொடுக்கற அளவுக்கு வசதியா இருக்கானா? ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா!''

''என்னத்தை சந்தோஷம். இப்பவே அவளுக்கு மண்டை கனத்திடுச்சி. இன்னும் கூட ஏதோ நகையெல்லாம் வாங்கியிருக்கா. என்னடி, கழுத்துச் செயினும், கைவளையுமா ஒண்ணரை லட்சத்துக்கு மேலே

இருக்கும் போல இருக்கேடின்னேன் இது கவரிங் அக்கா அப்படீன்னா. கவரிங் வாங்கனதுக்கா இம்மாம் பெரிய ஸ்டீல் அடுக்கு இனாம் தருவான்? மூனு. நாலு சாமான் கொடுத்திருக்கான். இங்கே பாருங்க எனக்கே ஒரு டப்பாவும் ஒரு பர்ஸும் கொடுத்திருக்கா.''

''அப்படியா'' என்று பர்ஸைக் கையில் வாங்கிப் பார்த்து கடையோட பெயரை மனதில் குறித்துக் கொண்டவர், ''ஏம்மா சடங்கு எங்கேம்மா நடக்குது?'' என்று கேட்டார்.

''அதுவா. பெண்ணாடம் பக்கத்திலே சின்னக் குளித்தலை தெரியுமில்லே அங்கே தான் எங்கம்மா வீடு.''

''ஆமாம்மா, எப்பவோ நாகு சொல்லியிருக்கான். இப்பதான் நினைவுக்கு வருது சரிம்மா. நான் வரேன்.''

''இதோ பாருங்க, பத்திரிகையெல்லாம் போட்டு நல்லாதான் செய்யுறாங்க. மூத்த பொண்ணு எனக்குத்தான் மதிப்பில்லை. உலகம் பணக்காரங்களுக்குத்தான் மரியாதை செய்யுது. என்ன சொல்றீங்க?

''நெசம்தாம்மா. இந்த பத்திரிகையை கொஞ்சம் கொடுங்களேன். எனக்கு நாளைக்கு உளூர்ந்தூர்பேட்டையில் ஒரு வேலை இருக்கு. முடிஞ்சா அப்பிடியே அங்கே போய் நாகுவைப் பார்க்கிறேன். எனக்கு அவன் கொஞ்சம் பணம் தரணும். இப்போ கேட்டா கிடைக்கும் போலிருக்கே. நீங்க சொல்றதைப் பார்த்தா!'' என்றார் சிதம்பரம். அக்காவின் பொறாமை தங்கை புருஷனைக் கண்டுபிடிக்க நன்றாக உவியது.

''ஆமாம். கேளுங்க. கேளுங்க. இப்போ நல்ல ஓட்டம் தான் கையிலே. வேறே நல்ல வீடு வாங்கப் போறதாக் கூடச் சொன்னாள்'' என்றாள் அந்தப் பெண்.



ஸ்டேஷனுக்குத் திரும்பி வந்த சிதம்பரம் எல்லா விஷயங்களையும் சொன்னார். நான் உடனே அந்த நகைக் கடைக்குப் போனால், நாகராஜன் போட்டோவைப் பார்த்துவிட்டு அவன் 15 பவுன் வாங்கியதை அவர்கள் சொல்லி விட்டார்கள். ஏனென்றால் அட்ரஸ், பெயர் எல்லாம் பொய்யானதே கொடுத்திருந்தான்.

அடுத்தது ரங்கா தலைமையில் நாலு பேராகப் போய் அவனையும் அவன் மனைவியையும் கைது செய்து கூட்டிவந்தார்கள். நாகு லேசில் குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

''இதோ பார் நாகராஜ்! நீயா சொல்லிடு. நீ மறுத்த நாங்க எங்க வழிலே உண்மையை வரவழைக்க வேண்டியிருக்கும். ஆனா நீ வாழ்நாள் முழுவதும் நடமாட முடியாமல் போயிடுமே. பரவாயில்லையா'' என்று ரங்கா கேட்டார். அதற்கு பதிலில்லை ரங்கா சைகை செய்ய நாகராஜின் மனைவியை அடைத்து வைத்திருந்த பக்கத்து ரூமின் ஜன்னலை திறந்தனர் போலீசார். அவன் மனைவி அடுத்த ரூமிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே. அவன் கழுத்தில் ரங்கா பிஸ்டலை வைத்து, ''நீ தான் அந்த 10 லட்சத்தை எடுத்திருக்கேன்னு எங்களுக்கு நல்லாத் தெரியும். நீ ஒத்துக் கிட்டேன்னா உனக்கு ரொம்ப கொறஞ்ச தண்டனை வாங்கிக் கொடுக்க என்னால் முடியும். நீ ஒத்துக்கல்லேன்னு வையி. உன் கதையை முடிச்சுட்டு, தப்பிக்கப் பாத்தான் அதான் சுட்டுட்டோம்ன்னு சொல்லிட்டு, உன் பொண்டாட்டி கிட்டே அப்புறமா நாங்க உண்மையை, பணத்தை எல்லாம் வரவழைச்சுப்போம்'' என்றார்.

அவர் சொன்ன விதத்தில் நாகு மனைவி நடுங்கிப் போய், ''ஐயோ. நான் சொல்லிடறேன். அவர் அந்த

ஷோபா அம்மா பேங்கலே கட்டச் சொன்ன பணத்தைக் கட்டாமே தான் இதெல்லாம் வாங்கி வந்தாரு. அவரை கொன்னுடாதீங்கய்யா! அவரில்லாமல் நகையை வெச்சுகிட்டு நான் என்ன செய்யப்போறேன்? தயவு செஞ்சு அவரை விட்டுவிடுங்கய்யா. எய்யா, மச்சான், சொல்லிடுய்யா. உனக்கு எதுக்கு இத்தனை வருஷமில்லாமே இந்த புத்தி? குத்தத்தை ஒத்துக்கய்யா?'' என்று பெரிய குரலெடுத்து அழுதாள்.

''அப்புறம்?''

''அப்புறமென்ன? எல்லாத்தையும் ஒத்துக்கிட்டான். அவனுக்கு போலிசிலே கம்ப்ளையின்ட் கொடுக்கலேன்னு தெரியாது. நம்ம மிரட்டலிலேயே எல்லாத்தையும் கக்கிட்டான். இனிமே அவன் மேலே கம்பெனிதான் நடவடிக்கை எடுக்கணும். ஸோ, கேஸ் முடிஞ்சாச்சு, இதோ ஸ்வீட் வந்தாச்சு'' என்று சொல்லி சிரித்தார் ரங்கராஜன்.

எல்லோரும் பெருமூச்சு விட்டுக் கொண்டே எழுந்தனர் ஷோபா மறுபடியும் அவருக்கு நன்றி சொல்லி ஆபீசுக்குப் புறப்பட்டாள்.

## 28

''இதோபார் எத்தனை தான் நீ சொன்னாலும் எனக்குப் பயமாகத்தான் இருக்கு'' என்றாள் சுபாஷிணி.

ஆமாம், இப்போதெல்லாம் வாரம் இரண்டு, மூன்று முறையாவது கிளாசைக் கட்டடித்து விட்டோ, மாலை வேளைகளில் ஸ்பெஷல் கிளாஸ் என்று பொய்



சொல்லிவிட்டோ அவள் விவேக்கை சந்திக்கத் தவறுவதேயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கியவர்கள் இப்போது வாழ்க்கையில் இணைய வீட்டைவிட்டு ஓடிப் போய் விடலாம் என்று இப்போதெல்லாம் தினம் சொல்கிறான் விவேக்.

''ஆமாம், சுபா நான் இன்னும் நிறைய சம்பாதிக்கணும். அதுக்கு எம்.பி.ஏ படிக்கணும்ன்னு எங்கம்மாவிற்கு ஒரு பிடிவாதமான ஆசை. அதெல்லாம் நடக்காதவரை எங்கம்மா இந்த சம்பளத்தில் நான் இருக்கும் போது கல்யாணம் பண்ணிவைக்க மாட்டாங்க. உங்க வீட்டிலேயும் நீ டிகிரி வாங்காம கல்யாணம் பண்ண மாட்டாங்க. அதனாலே, நாமளா எங்காவது போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்துட்டோம்னா அப்புறமா ஆரம்பக் கோபம் தணிஞ்சுடும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. நீ சரின்னு சொல்லு மற்ற ஏற்பாடுகள் எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்'' என்று தினம் அவளைப் பார்க்கும் போதெல்லாம் வேப்பிலை அடித்துக் கொண்டிருந்தான். ''உனக்கு என்ன பயம்? என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு பின்னாலே கை கழுவிவிடுவேனோன்னு பயப்படறியா? சொல்லு. சுபாக் கண்ணா, என்ன பயம்?'' என்று அவள் கைகளை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டான், விவேக்.

இவளுக்கு அவன் அருகில் இருக்கும்போதெல்லாம் மூளையும் வேலை செய்வதில்லை. வாயும் பேச முடியாமல் ஒரு மயக்கமான, பரவசமான நிலையிலேயே இருப்பாள். இந்த யோசனையை அவன் நிறையத் தடவை சொல்லிவிட்டான். இவளும் எப்படியோ நிறையத்

தடவை தட்டிக் கழித்துவிட்டாள். இவளுக்கு பயமே ஒழிய, மனது நிறைய ஆசை தான். ஆனால் பெண் அல்லவா! கிளம்பி எங்கே போவது. எப்படி நாட்களைத் தள்ளுவது? என்ற எண்ணங்கள் அவளைத் துளைத்தன. அவன் கடைசியில் 'நான் நன்றாய் யோசித்துவிட்டேன், இது தான் என் திட்டம்' என்று சொல்ல ஆரம்பித்தான்.

''சுபா செல்லம், கவனமா கேட்டுக்கோ, நீ காலேஜி லிருந்து சிநேகிதிகள்லே ஒருத்திக்கு கல்யாண ரிஸப்ஷன் இங்கே. கல்யாணம் வெளியூர்ல நடந்தாக்க நாங்க எல்லாருமா போறோம் நான் 9 மணிக்கு வீடு திரும்பிடுவேன்னு சொல்லிவிட்டு புறப்பட்டு வா. டிரெஸ் இரண்டு செட் வெச்சு, மேலே பட்டுப் புடவை வெச்சு எடுத்துக்கோ. காலேஜிலிருந்து என் லெக்சரர் கூட வராங்கன்னு சொல்லு. கூட இன்னும் 10 பெண் களாகப் போறோம்ன்னு சொன்னா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அப்படிச் சொன்னாலும் கெஞ்சிக் கூத்தாடி பர்மிஷன் வாங்கிடு. நான் உன் காலேஜிற்கு வந்து கூட்டிக்கிறேன்'' என்றான் விவேக்.

''கூட்டிகிட்டு எங்கே போவீங்க.''

''என் ப்ரண்ட் அஷோக் உனக்குத் தெரியுமில்லையா? அவனும் என் கம்பெனியில் தான் வேலை செய்யறான் அவன் வீடு இங்கிருந்து ரொம்ப தூரம். உள்ளகரத்தில் இருக்கு. ஒருத்தருக்கும் அவனைத் தெரியாது. அவன் இருக்கிற வீட்டையும் அவ்வளவு சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது. அங்கே போயிடுவோம் அவனோட அப்பா, அம்மா அவன் தங்கை டெலிவெரிக்காக அமெரிக்கா போகப்போறாங்க. நாம அன்னிக்கு ராத்திரி அங்கே தங்கறோம்.



''ஐயையோ, உங்க இரண்டு பேரோடு ஒரு நாள் தனியா தங்கறதா? என்னால் முடியாதுப்பா. நீங்க என்னதான் தெரிஞ்சவர்னாலும் என்னால் உங்களை நம்பவே முடியாது.

''ஏய் என்ன பேசறே? நாம இரண்டுபேரும் எத்தனை நாளா தெரிஞ்சவங்க. எத்தனை நாளா இப்படிக் காதலிக் கறோம்? அப்புறம் என்ன பயம்?

''அது தான் பயம்.''

''மறுநாள் கல்யாணம் பண்ணி முடிஞ்சிட்டா நீ என் சொந்தம் உன்னை என்ன வேணாலும் பண்ணலாம் அப்படி இருக்கும்போது நான் ஏன் முதல் நாள் உங்கிட்டே வரப்போறேன்?''

''அப்புறமும் கூட எங்கிட்டே வரக்கூடாது. எனக்கு படிப்பை முடிக்கணும். இன்னும் ஒரு ஸெமஸ்டர் பாக்கி இருக்கு. கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நீங்க சொல்றதே வயத்திலே பயம் வந்து கஷ்டப்படுத்துது'' என்றாள் சுபாஷிணி.

''ஐயோ சுபா, நான் ரொம்ப பொறுப்பா நடந்துக்கு வேன். என் கண்ணில்லே, பயப்படாமே இரு. அது போதும். ஓரளவு உன் பயம் போய், வீட்டுலே நம்மை ஏத்துகிட்டு. உன் பரிட்சையும் முடியற வரை நான் ரொம்ப நல்லவனா நடந்துப்பேன். பிராமிஸ்!'' என்று அவள் கையில் தன் உதடுகளால் முத்திரை பதித்தான்.

''எனக்குத் தெரிந்து பிராமிஸ் கையாலதான் பண்ணு வாங்க.''

''ஆங். இது விவேக் ஸ்டைல். பிராமிஸ். ஓ.கே! சரி உள்ளகரத்திலே போய் தங்கிட்டு மறுநாள் அங்கேயே கிட்டே இருக்கிற ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலேயே நமக்கு

கல்யாணம். அதுக்கப்புறமா நாம வீட்டுக்குப் போகலாம். அதுவரைக்குமே உன்னைக் காணாமே தவிச்சிகிட்டு இருந்திருப்பாங்க. இல்லையா? அதனாலே நீ வந்ததே போதும்ன்னு உன்னை மன்னிச்சுடுவாங்க. எப்படி மொத்த திட்டமும்?''

''நீங்க எப்போ வீட்டை விட்டு கிளம்புவீங்க?''

''நான் முதல் நாளே வெளியூருக்குப் போவதாகச் சொல்லிவிடுவேன். சம்பந்தமே இல்லாமே மதுரை பக்கம் சேல்ஸ் விஷயமா போறேன்னு கிளம்பிப் போயிட்டேன்னா ஆச்சு. இரண்டு பேர் வீட்டிலேயும் நாமா கல்யாணம் பண்ணிக்கிட்டோம்றதைத் தவிர பெரிய எதிர்ப்பு இருக்காதுங்கறதுதான் என் நினைப்பு.''

''அப்ப நாமும் அவங்களைக் கேட்டே பண்ணிக்காலம் இல்லையா?''

''கேக்கலாம்தான். ஆனா எங்கம்மா நீ இன்னும் கொஞ்சம் படி. பார்க்கலாம்பாங்க. உங்கப்பா இன்னும் கொஞ்சம் படிச்ச பையனா பார்க்கறேம்பாரு. நீ படிப்பை முடி பண்ணறேம்பாங்க. என்னத்துக்கு இத்தனை வம்பு? அதுதான் நாம்பளே முடிச்சுகிட்டு அப்புறமா சம்மதம் கேட்டா நிச்சயமா கிடைக்கும் அதுதான் இந்த யோஜனை.''

''ஆமாம் அதென்ன இன்னும் 15 நாள் கழித்து நாள் பாத்துருக்கீங்க. எதுக்கு?''

''ஏன் அதுக்குள்ள அவசரமா, தேவியாரே? நாளைக்கே கல்யாணம்ன்னு வெச்சுப்போமா?'' என்று விளையாட்டாகக் கேட்ட விவேக் தொடர்ந்தான் ''ஒன்று அது ரொம்ப நல்ல நாள். இரண்டு நம்ப அவசரம் தெரியாத



அஷோக்கின் அப்பா, அம்மா 15 நாள் கழித்துத்தான் அமெரிக்கா கிளம்பறாங்க. வெரி பேட்'' என்றான்.

''என்னவோ ரொம்ப பயமா இருக்கு'' என்று சொன்ன சுபா அவன் தோளில் மெதுவாகச் சாய்ந்து கொண்டாள். ''ஒண்ணும் ஆகாதுடி செல்லம், பயப்படாதே'' என்று அவள் தலையைக் கோதிக் கொடுத்தான் விவேக்.

அவர்கள் உட்கார்ந்திருந்தது என்னவோ பெஸன்ட் நகர் பீச்தான். ஆனால் அவர்கள் மனம் பறந்து கொண்டிருந்ததென்னவோ சந்திர மண்டலம் தாண்டி, தாண்டி போய்க் கொண்டே இருந்தது. அது வேறு உலகம். காதலர் உலகம். அங்கே இந்த பொல்லாத காதலும், அதையொட்டிய ஆனந்தமும், தவிர மற்ற எந்த உணர்ச்சிகளுக்கும் இடமில்லை.

## 29

''என்னடி, என்னடி நீ பேத்தறே! இத்தனை சிரமப் பட்டு கிடைச்சதை தூக்கி எறியணுமா? என்ன கொழுப்புடி உனக்கு?'' பொன்னியத்தை கல்யாணியைப் பார்த்து பொரிந்து கொண்டிருந்தாள்.

''இல்லையத்தை, எனக்கு இது வேண்டாம். வேண்டாம், நிச்சயமாக வேண்டாம்'' கல்யாணி அவளுக்கு மேல் கத்தினாள்.

''அது தான் ஏன்னு கேக்கறேன். சரியான காரணம் சொல்லு. நான் ஒத்துக்கறேன்'' என்றாள் பொன்னி.

''நான் காரணமெல்லாம் சொல்ல மாட்டேன் நீங்க வாங்க, டாக்டரிடம் போயிட்டு வரலாம்'' என்றாள் கல்யாணி.

''இப்போ என்னன்னு சொல்லு. கல்யாணி, ப்ளீஸ்! என்னை சோதிக்காதே பயமா இருக்கா? எதுனாலே இப்படி பிடிவாதம் பிடிக்கறே?''

''நாளைக்கு இந்த குழந்தை பிறந்து எத்தனை பேர் என்னைப் பார்த்து சிரிப்பாங்களோ தெரியாது. அதுக்கு இப்பவே அழிச்சுட்டா நல்லதுதானே.''

''ஏய், பைத்தியக்காரி, எதுக்கடி உன்னைப் பார்த்து யாரும் சிரிக்கப் போறா? என்ன நினைச்சிண்டு நீ பேசறே?''

இதே ரீதியில் கொஞ்சம் நயமாகவும், பயமாகவும் அத்தை கேட்க, கல்யாணி பிடிவாதம் பிடிக்க, என்று ஒரு மணி நேரத்தை வீணாகியபிறகு தான் விஷயம் வெளியே வந்தது.

முதல் நாள் வெள்ளிக்கிழமை. கல்யாணி, டீ.வி.யில் லக்ஷ்மி ஸஹஸ்ரநாமம் வரவே அதைக் கேட்டு கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்... லக்ஷ்மியும் நளினியும் நளினியின் வீட்டில் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஸஹஸ்ரநாமம் முடிந்துவிடவே கல்யாணியும் சற்று அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கலாமே என்று போயிருக்கிறாள்.

உள்ளே தன் பெயர் அடிபடவும் சற்று தயங்கி வெளியே நின்றிருக்கிறாள். லக்ஷ்மி சொன்னாள் ''கல்யாணி எங்கே காணோம், நளினி.''

''எங்கே அவள் இப்போதெல்லாம் நிறைய ஸ்லோகம் கேட்பது. பூஜை பண்ணுவது என்று அதிலேயே தானே இருக்கிறாள். அதுதான் வந்திருக்க மாட்டாள்.'' என்றாள் நளினி.

''எப்படியோ அவள் பிரச்சனை தீர்ந்தது. ஏன், நம்ம எல்லோருக்குமே இருந்த வருத்தம் மாறிவிட்டது. சந்தோஷம்தான். ஆனாலும்...........'' என்று இழுத்தாள்.



''என்ன இழுக்கறே, லக்ஷ்மி?'' என்று நளினி கேட்கவும்,

''நளினி நான் சொல்வது உன் மனசோடு மட்டும் இருக்கட்டும். கல்யாணிக்கு குழந்தை பிறப்பது நம் எல்லோருக்கும் சந்தோஷம் தான். ஆனா இந்த டெஸ்ட் டியூப் பேபி பற்றி எல்லோரும் என்ன சொல்றாங்க தெரியுமா?''

''என்ன சொல்றே, லக்ஷ்மி?''

''அதாவது இப்போ கணவனுக்கு விந்தணு சரியில்லைன்னு வெச்சுக்கோயேன். யாரோட விந்தணுவை யாவது செலுத்தி மனைவியைக் கர்ப்பமாக்கிவிடுவாங்களாம். அதிலும் டாக்டர் அவயாம்பா இந்த விஷயத்தில் ரொம்ப எக்ஸ்பர்ட்டாம். தெரியுமா. முந்தா நாள் என் பிரண்ட் ரமாவைப் பார்த்தேன் அவதான் சொன்னா.''

''ஏன், இந்த விஷயத்தை சில டாக்டருங்க சொல்லிட்டுக் கூட செய்யறாங்க போலிருக்கே'' என்றாள் நளினி.

''ஆமா நளினி, அப்படி சொல்லிட்டு செஞ்சா தப்பில்லை. சொல்லாமே இவங்க இஷ்டத்தை கேக்காமே செஞ்சா அது தப்பில்லையா? அதுக்கு அவ பாட்டுக்கு ஒரு குழந்தையை தத்து எடுத்தே வளர்த்துடுவாளே.''

''நிஜம்தானக்கா. அப்படி யாரோட விந்தணுவை யாவது நம்ம வயத்துக்குள்ள வளரவிடணும்னா, ஐயய்யோ, அது எவ்வளவு அருவருப்பான விஷயம். நினைச்சாலே குமட்டிகிட்டு வருது.''

இந்த ரீதியில் அவர்கள் பேச தான் வந்த சுவடே தெரியாமல் திரும்பிவிட்டாள் கல்யாணி... அதன் ரிஸல்ட் தான் இந்த பிடிவாதம்.

பற்றிக் கொண்டு வந்தது பொன்னிக்கு. கண்ணில்லாத வனுக்கு கண் கிடைத்ததுபோல நம்ம வீட்டுக்கு ஒரு வாரிசு வரப் போறவேளையில் இப்படி ஒரு குழப்பமா?

சடாரென்று ராமனாதனுக்குப் போன் செய்தாள். கல்யாணி கர்ப்பமான நாளிலிருந்து தினம் குறைந்த பட்சம் மூன்று முறை போனில் பேசுவாள் ராமனாதன். ஆபீசிற்குப் போய்விட்டு என்னை நினைச்சுகிட்டு இருந்தா வேலை செய்து கிழிச்ச மாதிரிதான் என்று அவனைச் சீண்டுவாள் கல்யாணி. எனவே அத்தை போன் செய்து உடனே வா என்றதும் பதறிவிட்டான்.

''என்னாச்சு அத்தை? கல்யாணிக்கு ஏதாவது பிராப்ளமா?'' என்று அவன் கேட்க,

''பிராப்ளம்தான். ஆனால் கவலைப்படாமல், பதட்டப் படாமல் வா. அவளுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை'' என்று சொல்லி போனை வைத்துவிட்டுத் திரும்பினாள். கல்யாணி அங்கேயே தரையில் படுத்து தூங்கிப் போயிருந்தாள். பாவம், அவள் என்ன இருந்தாலும் மசக்கைக்காரி இல்லையா? அழுத களைப்பு வேறே. நன்றாகத் தூங்கிவிட்டாள்.

மனதில் ஒரு தீர்மானத்துடன் பொன்னியத்தை லக்ஷ்மி யின் வீட்டிற்குப் போய் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த லக்ஷ்மி அவள் முகத்தைப் பார்த்ததுமே திடுக் கிட்டாள்.

''என்ன அத்தை. என்ன ஆச்சு? முகமே நன்னாயில் லையே!'' என்று லக்ஷ்மி பயந்துகொண்டே கேட்டாள்.

''என் முகம் இருக்கட்டும் நளினியைக் கொஞ்சம் கூட்டிக் கொண்டு வா.''



லக்ஷ்மிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் அத்தை சொன்னதைக் கேட்டு நளினியை அழைத்து வந்தாள்.

''என்ன அத்தை இப்படி இருக்கறீங்க? கல்யாணிக்கு ஏதாவது பிரச்சனையா? டாக்டர்கிட்டே போகணுமா'' என்று கேட்டபடி வந்தாள் நளினி.

''பிரச்னைதாண்டி என் கல்யாணிக்கு. அதுவும் உங் களாலேதான். இப்போ டாக்டர் கிட்டே போகணுமாம்'' என்று பொன்னி சொல்லவும்,

''என்ன அத்தை, எங்களால் பிரச்னையா? ஒண்ணும் புரியல்லையே!'' என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

''உங்களுக்குப் புரியாதுடி, புரியாது'' என்று சொன்ன பொன்னியைப் பார்க்கவே அவர்களுக்குப் பயமாக இருந்தது. அத்தை இத்தனை கடுமையாகப் பேசி அவர்கள் பார்த்ததில்லை. அது மட்டுமில்லை எப்போதாவது ரொம்ப செல்லமாக இருந்தால் 'டி' போட்டு பேசுவாள். கோபமாக 'டி' போட்டு பேசுவது இதுதான் முதல் முறை.

''நேத்திக்கு நீங்க இரண்டு பேரும் என்ன பேசிகிட் டிருந்தீங்க? அதனால் என்ன ஆச்சு எல்லாம் நான் சொல் றேன். கேட்டுக்கோங்க'' என்ற பொன்னியத்தை அன்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னாள்.

இருவரும் வெலவெலத்துப் போனார்கள். ''ஐயய்யோ, தப்பு நடந்துபோச்சு, நாங்களும் சந்தோஷம்தான் அத்தை பட்டோம். என்னவோ காதில் விழுந்ததைப் பற்றி சகஜ மாகப் பேசிக் கொண்டிருந்தோம். அவ்வளவு தான். அத னால் இப்படி ஒரு விபரீதம் நடக்கும்னு நாங்க கொஞ்சம் கூட நினைக்கல்லே. மன்னிச்சுக்கோங்க. அத்தை! நாங்க உங்கள் கால்லே விழுந்து கேட்கிறோம். அத்தை. இப்பவே கல்யாணிகிட்டேயும் வந்து மன்னிப்புக் கேட்கிறோம்'' என்றனர் இருவரும்.

அதே நேரம் ராமனாதன் வீட்டிற்கு வந்து சேர்ந்திருந்தான். கல்யாணி கீழே எங்கும் தென்படாதிருக்கவே மாடிக்குப் போனான். கல்யாணி அங்கே படுத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். கணவனைப் பார்த்ததும் 'ஓ' வென்று கதறிக் கொண்டு அவன் மார்பில் புதைந்துவிட்டாள். எந்தப் பெண்ணிற்கும் முதலும் கடைசியுமான புகலிடம் கணவன் மார்புதானே! அவளை ஆசுவாசப்படுத்தி ''என்ன கண்ணம்மா, என்ன நடந்தது? யார் என்ன சொன்னாங்க உன்னை?'' என்று கேட்டான் அவள் தலையைக் கோதிக் கொண்டே,

அதற்குள் வீட்டிற்கு திரும்பிவந்த பொன்னியத்தை வாசல் கதவு திறந்திருப்பதை கண்டு ராமனாதன் வந்துவிட்டதை ஊகித்துக் கொண்டாள். நேரே மாடிக்கு போனாள். அவளைக் கண்ட ராமனாதன், ''என்ன அத்தை அபார்ஷன் ஆயிடும் போல இருக்கா, எதற்கு இப்படி அழறா?'' என்று கவலையுடன் கேட்டான். பொன்னியத்தை நடந்த விஷயத்தை எல்லாம் விலாவாரியாக விவரித்தாள்.

''அத்தை, நீங்க உடனே போய் லக்ஷ்மி அக்கா, நளினி அக்கா இரண்டு பேரையும் இப்போ இங்கே வரவேண்டாம்னு சொல்லுங்கத்தை போங்க'' என்றான்.

''அவங்க என்னுடனேயே கல்யாணியிடம் மன்னிப்பு கேட்க கிளம்பினாங்க. நான் தான் நீங்க இரண்டு பேரும் இப்ப வரவேண்டாம்னு கண்டிஷனா சொல்லிவிட்டு வந்தேன். இவளை எப்படி சமாதானப்படுத்துவது. நீ சொல்லு?'' என்றாள்.

''இல்லையத்தை நாம இவளை டாக்டர்கிட்டே கூட்டிகிட்டுப்போயி அவங்களையே கல்யாணியின்



சந்தேகத்தை தீர்த்து வைக்கச் சொல்லலாம். மணி இப்போ என்ன ஆகிறது? இப்போ டாக்டர் ஃப்ரீயாத்தான் இருப்பாங்க. வாங்க உடனே போகலாம் இல்லைன்னா இவள் அழுது அழுதே உடம்புக்கு வரவழைச்சுப்பா போல இருக்கே. நான் கூட்டிப் போறேன். கிளம்பு கல்யாணி'' என்றான்.

டாக்டர்கிட்டே போகலாம்னு அவன் சொன்னதுமே கல்யாணி உடனே கிளம்பிவிட்டாள். ''வாங்க, போகலாம் எனக்கே என்னைப் பார்த்தா அருவருப்பா இருக்கு'' என்றாள்.

''நீ இப்போ வாயை மூடிண்டு என்னோடு வா'' என்று உறுமினான் ராமனாதன். டாக்டர் இவன் நினைத்தது போல சற்று ஓய்வாகத்தான் உட்கார்ந்திருந்தாள்.

அவள் அறைக்குள் நுழைந்த கல்யாணியின் அழுத கண்ணையும், சிந்திய மூக்கையும் பார்த்து டாக்டர் அதிர்ந்து போய்விட்டாள். டபக்கென்று தன் ஸீட்டிலிருந்து எழுந்த அவள், ''என்ன ஆச்சு, கல்யாணி? ராமனாதன், உள்ளே வாங்க, சிட்டவுன்'' என்றாள். தன் அருகே மூடிவைத்திருந்த கிளாஸ் தண்ணீரை கல்யாணி பக்கம் நகர்த்தினாள்.

வீட்டில் அதுவரை அழுது கொண்டிருந்த கல்யாணி இப்போது ஒரே கோபத்தில் இருந்தாள். முகமெல்லாம் ஜிவுஜிவுக்க டாக்டரிடம், ''எனக்கு என் குழந்தை வேணுன்னுதானே உங்ககிட்டே வந்தேன்?'' என்றாள்.

''என்னம்மா கல்யாணி, என்ன சொல்றே? என்ன கேக்கறயோ அதைக் கொஞ்சம் புரிகிற மாதிரி கேளும்மா'' என்றாள்.

''உங்களுக்குப் புரிகிற மாதிரியே கேக்கறேன். டாக்டர் நான் சுமந்திட்டுருக்கிறது என் கணவராலே உற்பத்தி

பண்ணப்பட்ட குழந்தைதான்னு எனக்கு உறுதியா தெரியணும்.''

''இது என்னம்மா திடீர் சந்தேகம்?'' என்றாள் டாக்டர் அதிர்ச்சியுடன்.

''கொஞ்சம் இரு, கல்யாணி!'' என்ற ராமனாதன் தானே எல்லா விவரத்தையும் டாக்டரிடம் சொன்னான்.

டாக்டர் அவயாம்பாளுக்கு பயங்கர கோபம். இப்போது எரிச்சலுடன் பேசுவது அவள் முறையாயிற்று.

''என்ன நினைச்சுகிட்டிருக்கீங்க நீங்க இரண்டு பேரும்? எவ்வளவு தைரியம் இருந்தா யாரோ சொன்னதைக் கேட்டு இங்கு வந்து என்னைக் கேள்வி கேப்பீங்க? யார் இப்படியெல்லாம் வதந்தியைப் பரப்புவது? கூட்டிகிட்டு வாங்க அவங்களை இங்கே. நாங்க சில சமயத்திலே விந்து தானம் செய்யறவங்க கிட்டேயிருந்து தானம் பெற்று செய்வதுண்டு. ஆனா அது சம்மந்தப்பட்டவங்க சம்மதத்தோடதான் நடக்குமே தவிர ஒரு நாளும் தெரிவிக்காமே பண்ணமாட்டோம். இது ரொம்பவும் சென்ஸிட்டிவான மேட்டர். அதுவும் தவிர எங்கள் மெடிக்கல் எதிக்ஸுக்கு எதிரானது. இப்படிச் செய்வது தெரிந்தால் எங்கள் பிராக்டிஸை தடை பண்ணிவிடுவார்கள் தெரியுமா உங்களுக்கு? நான் இப்போ இப்படிச் சொன்னவங்க மேலே மான நஷ்ட வழக்குப் போடப்போறேன்'' என்று கத்திவிட்டாள்.

''வெரி வெரி ஸாரி, டாக்டர். சொன்னவங்க யாரோ சம்பந்தமில்லாதவங்க. படிக்காதவங்க. அதை நம்பி இவள் கொஞ்சம் உணர்ச்சி வசப் பட்டுவிட்டாள். எங்களை மன்னிச்சுடுங்க, டாக்டர்'' என்றான் ராமனாதன்.



''இப்போ நான் உங்களுக்கு நிரூபணம் செய்யறேன் அந்தக் குழந்தை உங்களதுதான்னு. முதல் தரம் உங்கள் இரண்டு பேரையும் பார்த்த அன்னிக்கே நான் சொன்னேனா, இல்லையா, கல்யாணிக்குத்தான் டியூபிலே பிரச்னை, உங்களுக்கு ஸ்பெர்ம் கவுண்ட் நார்மல்தான்னு? ஒரு நிமிஷம் உங்க ஒய்ஃப் பேச்சைக் கேட்டு உணர்ச்சி வசப்படாமே இருந்திருந்தீங்கன்னா உங்களுக்கு இந்த முக்கியமான பாயிண்ட் நினைவுக்கு வந்திருக்கும். அவங்களும் இப்படி என்னை இன்ஸல்ட் பண்ணாமே வீட்டிலேயே சமாதானமாயிருப்பாங்க. இல்லையா?

''நீங்களெல்லாம் படிச்சவங்க, உங்க மனவேதனையைத் தீர்த்த எனக்கு நீங்க கொடுக்கிற பரிசு இதுதானா? ரொம்ப அழகுதான் போங்க'' என்று கோபமாக கொட்டித் தீர்த்துவிட்டாள் டாக்டர்.

ராமனாதனுக்கு முகம் தொங்கிப் போய்விட்டது. ''மன்னிச்சுருங்க, டாக்டர்! நீங்க சொல்றமாதிரி இவள் கேட்பார் பேச்சைக் கேட்டாலும் இங்கே வருவதற்கு முன்னாடி நான் யோசிச்சிருக்கணும். தவறிவிட்டேன் டாக்டர், ரொம்ப தப்பாயிடிச்சி.''

கல்யாணி கண்களில் கண்ணீருடன் டாக்டரை கீழே விழுந்து வணங்கி மன்னிப்பு கேட்டுவிட்டாள். டாக்டர் அபயாம்பா சுபாவத்தில் மிக நல்லவள். ''இதெல்லாம் என்ன கல்யாணி எழுந்திரம்மா. நல்லபடியா உன் குழந்தையை பெற்று எடு. என்ன ராமனாதன், உங்க மனைவிக்கு சந்தேகம் தீர்ந்திருக்குமா? நீங்க வீட்டுக்குப் போய் உங்கள் ரிப்போர்ட்டை எடுத்து உங்கள் மனைவிக்கு விவரமாக எடுத்துச் சொல்லுங்கள் இல்லை எங்கிட்டே அதோட காப்பி இருக்கு. அதை கொண்டுவரச் சொல்லி நானே காண்பிக்கவா'' என்றாள்.

''இல்லை டாக்டர் அவள் அழுததைப் பார்த்து கலங்கிப் போய் நான் அவளை இங்கே கூட்டிவந்தது பெரிய தவறு. நாங்கள் இருவரும் அறியாமல் செய்த தவறுக்கு மிகவும் வருந்துகிறோம். எங்களை மன்னித்துவிடுங்கள் டாக்டர்'' என்றான் ராமனாதன். தலையைக் குனிந்து கொண்டிருந்த கல்யாணி கை கூப்பி கண்களாலேயே மீண்டும் மன்னிப்புக் கோரினாள்.

''சரி, சரி இரண்டு பேரும் போயிட்டு வாங்க. அடுத்த செக்கப்புக்கு தவறாமல் வந்து சேருங்க'' என்றாள் டாக்டர். வீடு வரை ஒன்றுமே பேசாமல் வந்த ராமனாதன் வீடு வந்ததும் கல்யாணியிடம். ''இப்போ போய் ரெஸ்ட் எடு'' என்றான். அத்தையிடம் வெட்கத்தைவிட்டு தானே விவரம் சொன்னான். இவர்கள் வந்தது தெரிந்து எட்டிப் பார்த்த லக்ஷ்மி நளினி இருவரிடமும் பொன்னி விவரம் சொன்னாள்.

''தப்பு பண்ணிட்டோம். அத்தை. பெரிய தப்பு பண்ணிட்டோம். அதுதான் ஐயாரப்பன் காம்பௌண்டைப் பொறுத்தவரை எப்போதுமே யாரைப் பற்றியுமே அவர்கள் இல்லாதபோது பேசக்கூடாது என்று ஒரு சட்டம் வைத்திருக்கிறோமே! அது தான் சரி'' என்றார்கள் லக்ஷ்மியும், நளினியும் மாறி மாறி. கல்யாணியை சாயந்திரம் பார்த்து மனசார மன்னிப்புக் கேட்டனர் இருவரும்.

''உங்கள் மேல் தவறில்லை அக்கா. நான் தான் என் கணவரைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவசரப் பட்டுவிட்டேன். டாக்டர் ஆரம்பத்திலேயே எல்லா விவரமும் சொல்லியும் கூட நான் தான் உணர்ச்சிவசப்பட்டு தவறு செய்துட்டேன் நீங்கள் எதையும் மனதில்



வைத்துக் கொள்ளாதீர்கள்'' என்று சமாதானப் படுத்தினாள் கல்யாணி.

''இதற்குப் பரிகாரமாக என் வீட்டில் ஒரு நாள். இவள் வீட்டில் ஒரு நாள் உனக்கு விருந்து. உனக்கு என்ன பிடிக்கும்ன்னு சொல்லு. அந்த ஐட்டம் மட்டும் செய்து ஜமாய்த்துவிடுகிறோம்'' என்றாள் லக்ஷ்மி. நளினியும் அதை ஆமோதித்தாள்.

## 30

திவ்யாவிற்கு அங்கே குளிர்காலம் ஆரம்பித்து விட்டது. ரொம்ப கஷ்டமாக இருந்தது. காலையில் எழுந்திருப்பதும், சமைப்பதும் இந்தக் குளிரில் வாசலில் சேரும் பனியைத் தள்ளி, வீட்டு வேலைகளை பண்ணி விட்டு காலேஜ் போவதும் எல்லாமே ரொம்பவும் சிரமமாக இருந்தது. ஆனாலும் எல்லாம் செய்துவிட்டு படிப்பிலும் நன்றாக கவனத்தைச் செலுத்தினாள். சில நாள் தனிமை ரொம்பவும் வாட்டும் அப்போதெல்லாம் வீட்டுக்குப் போன் செய்து பேசுவாள்.

அரவிந்தோடு என்றோ கம்ப்யூட்டரில் சாட்டிங் செய்தது போக இப்போதெல்லாம் அடிக்கடி அவனைக் கூப்பிட்டு பேச ஆரம்பித்தாள். அவனோடு ஒரு முறை பேசினால் குறைந்த பட்சம் ஒரு வாரம் அது அவளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்ற நிலை. பேச என்னவோ நிறைய விஷயங்கள் கிடைக்கும். அரவிந்த் முக்கால் வாசி ஐயாரப்பன் காம்பௌண்டின் எல்லா வீட்டுக்

காரர்களைப் பற்றியும் ஏதாவது முக்கிய செய்தி வைத்திருப்பான். முழுக்க முழுக்க பேசியபின்னும் இருவருக்குமே நிறுத்த மனது வராது. என்னவோ சொல்ல நினைத்தேனே'' என்று அவளும், ''என்னவோ கேட்க நினைத்தேனே'' என்று அவனும் தடுமாறுவார்கள். கடைசியில் மனமே இல்லாமல் பேச்சை கட் செய்து விடுவார்கள்.

ஒரு நாள் திவ்யா அவனோடு பேசிக் கொண்டிருந்தாள் ஏதேதோ அரட்டை அடித்தவிட்டு ''அப்புறம் வேறு என்ன விசேஷம் அங்கே'' என்று கேட்டாள்.

''ஓ. மறந்தே போனேன். உனக்கு ரொம்ப தேங்க்ஸ், திவ்யா!'' என்றான்.

''தேங்க்ஸா, எதுக்கு.''

''உன் புத்திசாலித்தனத்துக்குத்தான்.''

''என்ன அரவிந்த். என்ன சொல்றே?''

''உனக்கு நினைவிருக்கா. திவ்யா, நம்ம காம்பௌண்டில் சாமிநாதன் அங்கிள் பற்றிய ஒரு எபிசோட்.''

''ஓ. கேட்க மறந்தே போனேன். அந்தப் பிரச்னை என்ன ஆயிற்று. அரவிந்த்?''

''அது திவ்யா என்ற மகாபுத்திசாலிப் பெண்ணால் தீர்ந்து விட்டது.''

''ஏய், என்ன கிண்டலா?''

''ஐய்யயோ, கிண்டல் இல்லை. அந்தப் பிரச்சனையை எப்படித் தீர்ப்பதுன்னு நாங்க எல்லோரும் மண்டையை உடைச்சிண்டோம். அப்போது நீ பேசியபோது அதுபற்றி உன்னிடம் சொன்னேன். அதற்கு நீ உடனேயே காரணம் இதுவாக இருக்கும் என்று உன் ஊகத்தைச் சொன்னாய்



உன் ஊகம் சரியாக இருந்ததால் அந்தப் பிரச்னையை என்னால் தீர்க்க முடிந்தது. அதற்குத்தான் தேங்க்ஸ்.''

''அப்படியா? அப்படி நான் என்ன சொன்னேன்?''

''அப்பா, என்ன தன்னடக்கம்? இருந்தாலும் சொல்றேன். நம்ம காம்பௌண்டில் ராக்கி தினத்தன்று ஒரு நாடகம் போடுவதாக இருந்தார்கள் இல்லையா? நான் இந்தப் பிரச்னை பற்றி சொன்னவுடன் நீ அந்த நாடகத்தின் ஸ்க்ரிப்ட்டைப் பார் அதில்தான் இதற்கு பதில் இருக்கு'' என்றாய். ''நீ சொன்னது நிஜம் தான் அந்த ஸ்க்ரிப்ட்டை வாங்கி நான் பல இடங்களில் வசனத்தை மாற்றி எழுதிக் கொடுத்தேன் பிரச்னை தீர்ந்தது.''

''ரொம்ப சந்தோஷம், அரவிந்த்! பிரச்னையை நீ தீர்த்துவைத்ததற்கு'' என்றாள்.

அரவிந்த் பெரிதாகச் சிரித்தான் ''நானா, லூக், திவ்யா! இந்தப் பிரச்னை என்னால் தான் தீர்ந்தது என்று தான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு கிரடிட் பூரா உனக்குத்தான். ஆமாம், இந்த ஐடியா உனக்கு எப்படித் தோன்றியது?''

''ராக்கிக்கு 15 நாட்களுக்கு முன் நான் ரம்யாவுடன் பேசிக் கொண்டிருந்த போது அவள் தாங்கள் இந்த மாதிரி ஒரு நாடகம் போடப்போகிறோம் என்றும் அதன் கரு என்னவென்றும் என்னிடம் பேச்சுவாக்கில் சொன்னாள். நீ சொன்னதும் எனக்கு தவறு எங்கே இருக்கும் என்று தெரிந்துவிட்டது. அது தான் சொன்னேன்.''

''எனவே, ஒரு பெரிய ப்ராப்ளம் உன்னால் தீர்ந்தது. அன்னிக்குப் பூரா நான் உன்னையே நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''அன்னிக்கு மட்டும்தானா.''

அரவிந்திற்கு தன் காதுகளை நம்பமுடியவில்லை. ''ஹலோ, ஹலோ! என்ன சொன்னே? திருப்பிச் சொல்லு?''

''குட்நைட்னு சொன்னேன்'' என்று சொல்லி லைனை கட் செய்துவிட்டாள். அவள் மனதில் வானவில் தோன்றி மறைந்தது. அரவிந்தின் நிலையும் அதே தான்.

கொஞ்ச நாள் ஆயிற்று இந்த கண்ணாம்பூச்சி ஆட்டம் இருவருக்குமே அலுத்துவிட்டது. அதிலும் அரவிந்திற்கு இதற்கு மேல் பொறுமை இல்லை. திவ்யாவிற்கு ஆசை இருந்தாலும் பொறுமையாக இருப்பது போல் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டாள். இருவருக்குமே தப்பு பண்ணுகிறோமோ என்னும் ஒரு குறுகுறுப்பு. காதலிக்கும் எல்லா ஆண், பெண்களுக்கும் எந்தக் காலத்திலும் வருவதுதானே இந்த தடுமாற்றம். புராண காலத்திலிருந்து இன்று வரை யாரை விட்டு வைத்திருக்கிறது இந்த காதலும் தடுமாற்றமும்? இவர்கள் மட்டும் விதி விலக்கா, என்ன?

கடைசியில் ஒரு நாள் தன் ராசிபலன், நியூமராலஜி டாரட் கார்ட் எல்லாவற்றிலும் நல்ல பலனாகப் போட்டிருந்த ஒரு சுபயோக சுப தினத்தில் அவளை சாட்டில் வெளிப்படையாகவே கேட்டுவிட்டான்.

''திவ்யா, நீ எப்போ திரும்பி வரப்போறேன்னு இருக்கு.''

''என்னாச்சு, திடீர்னு?''

''நான் தான் முதல்லேர்ந்து சொல்லிக்கிட்டியிருக்கேனே. ஐயாரப்பன் காம்பௌண்ட் உன்னை மிஸ் பண்ணுதுன்னு.''

''அப்படியா?''



''ஆமா, இனிமே என்னாலே தாங்க முடியாது. இன்னிக்கு நான் ஒப்பனா சொல்றேன் நான் உன்னை ரொம்பவும் மிஸ் பண்ணறேன். நானாகிய அரவிந்த்'' என்றான்.

கொஞ்ச நாழி சப்தமே இல்லை.

''ஸாரி திவ்யா, நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா? ஏதாவது பேசு, திவ்யா!''

''என்ன பேசணும்?''

''நீ என்ன நினைக்கிறே, தயவு பண்ணி சொல்லேன்! எனக்கு டென்ஷன் ஏறிகிட்டே இருக்கு.''

''நான் நினைக்கிறேன் நானும் நீங்களும் நல்ல படியா படிப்பை முடிக்கணும்னு.''

திடீரென்று நீ, நீங்களாக மாறியதை கவனித்த அரவிந்த்திற்கு ஜிவ்வென்று இருந்தது.

''படிப்பை முடிக்கணும்னு எனக்கும் தெரியும். ஆனா இது என் கேள்விக்கு பதில் இல்லை'' என்றான் அரவிந்த்.

''நண்பர்கள் கூட ஒருவரை ஒருவர் மிஸ் பண்ணலாமே'' இது திவ்யா.

''ஏய், நீ என் வாயைக் கிண்டறே! நான் உனக்கு வெறும் நண்பன் மட்டும்தானா? சரி அந்த கோல்டன் வேர்ட்ஸை நான் சொல்லிவிடட்டுமா?''

''ம்.''

''திவ்யா, ஐ லவ் யூ நான் உன்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன்'' என்றான் அரவிந்த்.

டாக்டர் படிப்பை முடிக்கப் போகும் தனக்கு இதை இத்தனை நாள் பழகிய ஒரு பெண்ணிடம் சொல்லுவது இத்தனை கடினமாக இருக்கும் என்று அவன் நினைத்ததே இல்லை. வியர்வையில் தொப்பலாக நனைந்து

விட்டான். அவளின் பதிலுக்குக் காத்திருந்தான். ஒரு நிமிஷம் கூட முழுதாக ஆகியிருக்காது. ஆனால் இவனுக்கு இன்னும் டென்ஷன் பயங்கரமாக ஏறிவிட்டது.

''ஹலோ, திவ்யா, ஆர் யூ தேர்?'' அரவிந்திற்கு இதயம் வெளியே குதித்துவிடும் போல் இருந்தது.

கடைசியாக அவன் காதில் தேன் பாய்ந்தது. அவன் சொன்ன அந்த கோல்டன் வேர்ட்ஸை அவளும் உதிர்த்துவிட்டாள். ''நான் உங்களை என் உயிரினும் மேலாகக் காதலிக்கிறேன். மை டியர் அரவிந்த்!'' என்று சொல்லியே விட்டாள். அவனுக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஷாக் அடித்தது போல் ஒரு உணர்வு. அந்த உணர்வை அவன் அப்படியே வருணிக்க அவளும் தனக்கு அதற்குமேல் என்னவோ செய்கிறது. மயக்கம் வருகிற மாதிரி இருக்கிறது என்றாள்.

''ஏய், ஏய், திவ்யா! என் கண்ணே! ஜாக்ரதை எங்கேயாவது மயக்கம் போட்டு விழுந்து வைக்காதே. அங்கே உன்னைப் பார்த்துக் கொள்ள யாருமில்லை. என்னோட இருக்கும் போதுன்னாக்கூட பரவாயில்லை'' என்றான்.

''உங்களோடு இருக்கையில் விழுந்தால் என்ன செய்வீர்களாம்?'' என்றாள் திவ்யா கொஞ்சலாக.

திவ்யாவின் இந்தக் குரல் இவன் இதுவரை கேட்காத ஒன்று. இவனுக்கு உடனேயே அவளைப் பார்த்து கையில் அள்ளிக் கொள்ளணும் போல் இருந்தது. அதை அப்படியே அவளுக்குச் சொல்ல, அவள், 'சீ, ஆனாலும் நீங்க ரொம்பவே ஃபாஸ்ட்'' என்றாள். ''நானா ஃபாஸ்ட்? இந்த வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ள எத்தனை நாளா பயம். எத்தனை தயக்கம். இன்னிக்குத்தான் அந்த



இனிய நேரம் வந்தது. நான் ஃபாஸ்டாக இருந்திருந்தால் நீ அமெரிக்கா போகும்போதே இதைச் சொல்லியிருப்பேன், தெரியுமா?''

''நிஜமாகவா? நீங்க அப்போதிலிருந்து என்னை........ என்னை.......'' என்று தடுமாறினாள்.

''ம், கேளு! கேட்க வந்ததை.''

''உங்களுக்கே தெரியறது. இல்லையா நீங்க தான் சொல்லுங்களேன்.''

''சொல்லட்டுமா! நான் உன்னை எனக்கு புத்தி தெரிஞ்ச நாளிலிருந்து காதலிக்கிறேன். தெரியுமா? ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் இத்தனை நாள் மனதில் பூட்டி வெச்சிருந்தேன். நீ யு.எஸ் போறதுக்கு முன்னாடியே உனக்கு என் மனதை திறந்து காண்பிக்கணும்னு துடிச்சிகிட்டு இருந்தேன். உன்னைப் பிளேனில் ஏத்திவிட்டு வந்த பின்னாடி நான் 4 நாள் சரியாகவே சாப்பிடல்லே எப்ப பார்த்தாலும், எங்கே பார்த்தாலும் நீ தான் தெரிஞ்சே, கண்ணம்மா! என்னைப் பாடாய்ப்படுத்தி வெச்சுட்டே! சரி, இனிமே குறைந்த பட்சம் வாரத்துக்கு 4 தடவை யாவது கூப்பிடு. திவ்யா... உங்கூட பேசாமல் என்னால் இருக்க முடியாது'' என்றான் அரவிந்த்.

''சரிதான் நாம இரண்டு பேரும் படிச்சு உருப்பட்ட மாதிரிதான். அந்தக் கதையெல்லாம் வேண்டாம். மொதல்லே எங்கம்மா என்னை எதுக்கு இங்கே அனுப்பவே பயந்தா, இந்த விஷயம் கொஞ்சம் போல தெரிஞ்சால் கூட, ''போதும், உடனே திரும்பி வா. நீ படிச்சு கிழித்தது போதும்''ன்னு திரும்பி வரச் சொல்லிடுவா'' என்றாள்.

''ஹை, ரொம்ப நல்லதாப் போச்சு! திரும்பி வரச் சொல்லி எனக்கு உன்னைக் கல்யாணம் பண்ணி வெச்சுடுவாங்க, இல்லையா?'' என்றான் அரவிந்த்.

''ஆசை, தோசை.''

''பின்னே அவங்க பயப்பட்டது நீ எங்காவது வெள்ளைக் காரனை காதலிச்சுடப் போறியேன்னு தான். நீ என்னைத் தான் காதலிக்கறேன்னு தெரிஞ்சா உடனே நமக்கு கல்யாணம் பண்ணி வெச்சுடுவாங்க.''

''ஹலோ, மிஸ்டர் ஹீரோ! மூச்சு விடப்படாது. நமக்கு படிப்புன்னு ஒண்ணு இருக்கு. அது முடிஞ்சப்புறம்தான் எல்லாமே. சரி எனக்கு கொள்ளை வேலையிருக்கு ஒரு சாதமாவது வெச்சு சாப்பிடணும். கஷ்டமாயிருக்கு டியர்'' என்றாள்.

''கொஞ்ச நாள் தானே, டார்லிங்! ஓடிப்போயிடும். என் உடம்பைப் பாத்துக்கோ. கவலையா இருக்கு.''

''ஹாங், என்ன சொன்னீங்க?''

''இல்லே, உன் உடம்பை நல்லா பாத்துக்கோன்னு தான் சொன்னேன்.''

''அதானே பார்த்தேன். நான் இங்கே வந்து எத்தனை நாளாச்சு, இப்போதுதான் கவலையாக இருக்காக்கும்.''

''நீ புறப்பட்டதிலிருந்தே கவலைதான். இப்போதான் சொல்றேன்.''

''சரி, நான் போய் என் வேலையைப் பார்க்கிறேன். இப்போதைக்கு பை பை சரியா?''

''சரியில்லை, சரியில்லை! எனக்கு இன்னிக்கி ஷட்டவுன் பண்ண பிடிக்கவேயில்லை, கண்ணே!'' என்றான்.

ஆனாலும் இருவரும் மனமில்லாமல் பை சொல்லிக் கொண்டனர்.

''தீவிரமாக படிங்க, டாக்டர் ஸார்! இருவரும் நல்ல ரேங்கிலே பாஸ் பண்ணிவிட்டு அப்புறமா கல்யாணம் பண்ணிவைன்னு கேக்கணும் அப்பா, அம்மாவை''



''ஆஹா, பெண்டாட்டியா லட்சணமா இப்பவே அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சாச்சா, தங்கள் சித்தம் என் பாக்கியம்'' என்று சொல்லி அப்போதைக்கு விடை பெற்றான் அரவிந்த்.

## 31

சுபாஷிணி திட்டமிட்டபடி தன் துணிமணிகளில் இரண்டு செட் மட்டும் எடுத்துக் கொண்டு காலேஜுக்குப் புறப்பட்டாள். முதல் நாள் அவள் அம்மாவிடம் சொல்லி, அம்மா அப்பாவிடம் கேட்டு, வினோதினியின் குடையும் கேள்விகளுக்கு ஏதோ பதில் சொல்லி சமாளித்து போதும் போதுமென்றாகிவிட்டது அவளுக்கு.

ஒருமாதிரி படபடக்கும் இதயத்தோடு வீட்டை விட்டுப் புறப்பட்டவள் பூஜை அறையில் ஸ்வாமியை நமஸ்காரம் செய்துவிட்டு காலேஜில் அதிகமாக கவனத்தைக் கவராத இடமாகப் பார்த்து பைக்கை வைத்தாள். கரெக்டாக வந்துவிட்டான் காலேஜ் விடும் வேளையில், விவேக்.

''மணமகளே, மணமகளே வா, வா'' என்ற பாட்டை சீட்டியடித்துக் கொண்டு இவளை வரவேற்று அவள் பின்சீட்டில் உட்கார்ந்து கொண்டபின் விர்ரென்று புறப்பட்டான் விவேக்.

''பயமா இருக்கு, விவேக்'' என்றாள் சுபா.

''என்னை இறுக்கிக் கட்டிக்கோ. புருஷன் ஆகப் போறவன் கூட வரும்போது வேறு என்ன செய்வாங்க, சொல்லு.''

''நீ எப்படி விவேக் இத்தனை கூலா இருக்கே? எனக்கானா படபடப்பு தாங்கலே.''

''சுபா. ஒண்ணும் பயமில்லை உங்கம்மாவுக்கு என்னை ரொம்ப பிடிக்கும். எங்க அப்பா, அம்மாவுக்கும் உன்னை ரொம்ப பிடிக்கும். அப்புறம் என்ன பிரச்னை. இவங்களைக் கேட்டா நம்ம கல்யாணத்தை சீக்கிரம் நடத்திவைக்க மாட்டாங்க. வேறே என்ன? சரி நீ கவலை, பயம் எல்லாத்தையும் மூட்டை கட்டிவிட்டு அழகா சிரிச்சிண்டு சந்தோஷமா வா, பார்க்கலாம்'' என்றான்.

''நீ ஆண்பிள்ளை, எல்லாம் சொல்லுவே, பெண்களுக்குத்தான் பிரச்னை. என்னை ராத்திரி 9 மணிவரை தேட மாட்டாங்க. நீ என்ன சொல்லியிருக்கே வீட்டில்?'' என்று கேட்டாள்.

''நான் இரண்டு நாள் போகலேன்னாக்கூட என்னைத் தேட மாட்டாங்க. நான் வெளியூர் போவது வழக்கம் தானே'' என்றவன் வேகமாக வண்டியை ஓட்டினான்.

''ரொம்பத்தான் பறக்குது உன் வண்டி'' என்றாள்.

''இதுக்கு மேலேயும் பறக்கும். பின்னாடி காதலி இருக்கும்போது வேறே எப்படி ஓட்டுவான் ஒருத்தன், மக்கு!'' என்றான் விவேக்.

ஒரு இடத்தில் சடன் பிரேக் போட்டதும் அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள் சுபா.

''அப்பாடா! இப்போதாவது மனது வந்ததே நான் சொன்னதைச் செய்ய.'' என்றவன், ''நீ வண்டியிலே வேகமா போனதில்லியா?'' என்று கேட்டான்.

''ஓ, போயிருக்கேனே! என் பிரண்ட்ஸ்லேயும் எத்தனை பேர் வேகமாக போறவங்க இருக்காங்க தெரியுமா?'' என்றாள்.



ஒரு நொடி வண்டியின் வேகத்தைக் குறைத்து அவளைத் திரும்பிப் பார்த்தான். ''யாரம்மா அந்த பிரண்ட்ஸ்? நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்றான்.

''என்ன அதுக்குள்ளே சந்தேகமா, இல்லே பொறாமையா.''

''எனக்கு சந்தேகமே வராது உன் விஷயத்திலே'' என்றான். இவள் சந்தோஷமடையத் தொடங்கின நிமிஷத்தில் ''ஏன்னு கேக்கலியே, நீ!'' என்றான்.

''ஏனாம்'' சுபா எனும் கிளி கொஞ்சியது.

''உன்னை என்னைத்தவிர எவன் சீந்தப் போறான் என்கிற ஒரே நம்பிக்கைதான். நான் தான் ஏதோ பரிதாபப் பட்டு காதலிச்சு வெச்சேன்.''

''ஏய், வண்டியை நிறுத்து.''

''எதுக்கு?''

''நான் எதிர்ப்பக்கமா நின்னு ஒரு ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போறேன்.''

''ஐய்யோ, அதுக்குள்ள கோபத்தைப் பாரேன் என் மகாராணிக்கு! சும்மா உன்னை சீண்டினேன். கண்ணம்மா, ஸாரி'' என்றான் விவேக்.

''நிஜத்தைச் சொல்லு விவேக். நீ எப்பவுமே எங்கிட்டே அன்பா இருப்பியா? என்னை உண்மையாகவே காதலிக்கிறாய்தானே?''

''உடனே இத்தனை பயமா, கண்ணம்மா? நான் உன்னை என் உயிருக்கும் மேலே காதலிக்கிறேன். என் உயிர் மேலே, எங்கம்மா மேலே பிராமிஸ் நீ இதை இவ்வளவு சீரியஸாக எடுத்துப்பேன்னு நான் நினைக்கல்லே வெரி ஸாரி ராசாத்தி!''

சுபா ஒன்றும் பேசாதிருக்கவே வண்டியை நிறுத்தினான்.

''என்ன ஆச்சு'' என்றாள் சுபா.

''நாலு தோப்புக்கரணம் போட்டு மன்னிப்பு கேட் டுரலாம்னுதான்.''

''ஐயே, சமர்த்து வழியுது! வண்டியை எடு. ரொம்ப இருட்டாக இருக்கு. பயமா இருக்கு.''

''நான்தான் கூட இருக்கேனே அப்புறம் என்ன பயம்?''

''அதுதான் பயம் நீ வண்டியைக் கிளப்பு'' என்றவள் தொடர்ந்து ''எனக்கு நிஜமாகவே ரொம்ப வெட்கமா இருக்கும், தெரியுமா?'' என்றாள்.

''எதுக்கு வெட்கம், கல்யாணம் பண்ணிக்கவா?''

''அதில்லை, கல்யாணத்துக்கு அப்புறம் உன்னோடு கூட வெளியே வரவோ, நடக்கவோ எனக்கு எத்தனை வெட்கமா இருக்கும் தெரியுமா? நீ அத்தனை அழகா இருக்கே பக்கத்தில் நான் உனக்கு சூட்டாகவே மாட்டேன். அந்த வருத்தம் எனக்கே இருக்கு. தெரியுமா?

''சீ பைத்தியம், அழகுங்கறது மனது சம்மந்தப்பட்டது. இந்த மாதிரி நீ இன்னோருதரம் பேசினா நான் உங்கூட பேசவே மாட்டேன். நீ என் லவ், என் உயிர். ஏன் அதுக்கு மேலே. இது நீ அழகா இருக்கியா. உயரமா இருக்கியா வெளுப்பாங்கறது எல்லாத்தையும் பார்த்து வரதில்லை. உனக்குத் தெரியுமோ என்னவோ. சின்ன வயசிலேருந்தே என் மனசிலே உன்னை என் பொண்டாட்டின்னுதான் நினைச்சுகிட்டு இருக்கேன். தெரியுமா? என் கண்ணுக்கு நீ எப்போதுமே ரதிதான். சரி, போகட்டும் ஒரு பாட்டு பாடேன். டூ வீலர்லே ராத்திரிலே போகும்போது



பாடிண்டே போனா எத்தனை சுகமா இருக்கும் தெரியுமா? பாடேன்'' என்றான்.

''நீயே பாடு, விவேக்'' என்றாள் அவன் தோளில் தொத்திக் கொண்டிருந்த சுபா.

''வாராய், நீ வாராய்'' என்று குரலெடுத்துப் பாடினான் விவேக் எதிர்த்தாற்போல் இவர்களைத் தாண்டி சென்ற பஸ்ஸிலிருந்து யாரோ நான்கு பேர் கையாட்டிக் கொண்டே போனார்கள்.

இவர்களுக்கு ஒரே சிரிப்பு. ''ஏய், உனக்கு வேறே பாட்டே கிடைக்கலியா. இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டே என்னைக் கூட்டிப்போய் எங்கேருந்து தள்ளப் போறே'' என்று கேட்டுவிட்டு, ''நீ ஒண்ணும் பாடவேண டாம், நான் பாடறேன்'' என்றவள் ''பூப்பூக்கும் ஓசைதனை கேட்கத்தான் ஆசை'' என்று பாடி நிறுத்தியவள், ''இன்னும் வேகமாய் போயேன். மஜாவா இருக்கும்'' என்றாள் அவள் சொன்ன வேளை எவ்வளவு கெட்டது என்று அவள் அறியவில்லை.

விவேக்கிற்கு குஷி பிய்த்துக் கொண்டது ஒரு காளைக்கு வேறு என்ன வேண்டும்? வண்டி பிய்த்துக் கொண்டு சீறியது. வேகம் எப்போதும் விவேகமாகுமா? ஊரைவிட்டு நிறைய தள்ளி இருந்த அந்த இடத்தில் ஒரு வாய்க் காலின் மதகு சுவர் முடிந்து இருந்த பள்ளத்தின் அருகே வரும்போது வண்டியின் கண்ட்ரோல் போய்விட்டது. தூக்கி எறியப்பட்ட இருவரும் அந்த பள்ளத்தில் விழுந்துவிட் டார்கள். அந்த வேளையில் அங்கு நடமாட்டமும் இல்லை. வண்டி போக்குவரத்தும் இல்லை இருவருமாக பயங்கரமா அடிபட்டு, மயக்கமாய் கிடந்தார்கள்.

# 32

சுப்ரமணியம் நளினியைக் கடுப்படித்துக் கொண்டிருந்தார். "பெண் குழந்தைகளை வளர்க்கிற லட்சணமா இது? சிநேகிதி கல்யாண ரிஸப்ஷனாம். பெண் கேட்டாளாம். அம்மா அனுப்பினாளாம். அவளுக்குத்தான் மூளை இல்லேன்னா உனக்கு எங்கேடி மேயப் போச்சு? மணி என்ன பார் 10 ஆகிவிட்டது."

"9 மணிக்குள் வந்துடறேன்னுதாங்க சொன்னா. பிரண்ட்ஸ்லே இந்தப் பக்கம் வரவங்க இருக்காங்களாம். அவங்களோட பத்திரமா வந்துடறேன்னுதான் சொன்னா. நீங்க ஏன் இவ்வளவு டென்ஷனாகி என்னையும் திட்டுறீங்க" என்றாள் நளினி.

"போடி அறிவுகெட்டவளே! ஊர் நடப்பு ஏதாவது தெரிஞ்சா இப்படி பேசமாட்டே" என்றவர் கோபத்துடன் உலாத்த ஆரம்பித்தார்.

"ஏண்டி உன் அக்கா இப்படி எனக்கு திட்டு வாங்கித் தரா" என்று வினோதினியிடம் வந்து சிடுசிடுத்தாள் நளினி பாவம் வினோ என்ன பண்ணுவாள். அவளுக்குப் பசித்தது. தூக்கம் வந்தது. அம்மாவும் அப்பாவும் இருக்கிற நிலைமையில் இந்த இரண்டையும் தான் செய்தால் கொன்றுவிடுவார்கள் என்று தோன்றவே ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள் வினோதினி. அரை மணிக்கு மேலாகியது. சுபா இன்னும் வீடு வந்து சேரவில்லை.



இப்போது நளினிக்கும் டென்ஷனாகிவிட்டது. "ஏண்டி, எந்த சிநேகிதி ரிஸப்ஷன்? எந்த ஏரியா? நான் ஒரு பைத்தியக்காரி. விசாரிக்கவேயில்லை. உனக்கு ஏதாவது தெரியுமா" என்று தன் சின்னப் பெண்ணைப் பிடித்துக் கொண்டாள்.

"எனக்குத் தெரியலியேம்மா" என்றாள் பரிதாபமாக வினோ.

இவள் சின்னக் குரலில் கேட்பதாக நினைத்துக் கொண்டுதான் கேட்டாள். கூடத்தில் உட்கார்ந்திருந்த சுப்ரமணியத்தின் காதுகளுக்கு இந்த கேள்வி தப்பவில்லை.

"ஒரு பொறுப்பான அம்மாவா இருந்தா இப்படி கேட்காம கூட அனுப்புவியா நீ? உன்னை என்ன பண்ணா தேவலை" என்று சிடுசிடுத்தார்.

திரும்பப் போய் கூடத்து சோபாவில் உட்கார்ந்த அவருக்கு மேலே என்ன செய்வது என்று தெரியவில்லை. டி.வி., புத்தகம் என்று எதைத் தொடவும் பிடிக்கவில்லை. அடுத்து என்ன செய்வது என்று யோசித்தார். அவளுக்கு ஒரு செல் வாங்கிக் கொடுத்திருக்கலாம். இப்போது நொந்துகொண்டு என்ன பிரயோசனம்?

வெளியே வந்து பார்த்தார். யார் வீட்டிலும் லைட்டே எரியவில்லை. மணியைப் பார்த்தார் 11. இவர் விளக்கைப் போட்டுக் கொண்டு வாசலுக்கு வந்ததைப் பார்த்த ராமனாதன் எழுந்து வந்தான். "என்ன ஆச்சு, இந்த வேளை வாசல்ல வந்து நிக்கறீங்க?" என்று கேட்டான்.

"இந்த சுபாஷிணி ஒரு சிநேகிதிக்கு கல்யாண ரிசப்ஷன்னு போயிருக்கா இன்னும் வரக்காணும். அதுதான் கவலையாயிருக்கு. வழியைப் பார்த்து நின்னு பொழுதைக் கழிக்கிறேன். என்ன பண்ணுவதுன்னு புரியல்லேப்பா" என்று புலம்பினார்.

''அதுக்காக இப்படியே நின்னுகிட்டு இருந்தா எப்படி? வாங்க, ரிசப்ஷன் எங்கே நடக்குதோ அங்கேயே போவோம்'' என்றான்.

''அதுதான் தெரியல்லியே. ஒரு விவரமும் தெரிஞ்சுக்காம இவ அனுப்பி வெச்சுருக்கா.''

''ஆமாம், அவள் யாரோடு புறப்பட்டுப் போனாள்.?''

''ஏய், நளினி, அவளை அழைச்சிண்டு போக யாராவது வந்தாங்களா?''

''இல்லீங்க. அவள் ஸ்கூட்டியில்தான் புறப்பட்டுப் போனாள்.''

''ஸ்கூட்டியிலா?''

''ஆமாங்க காலேஜிலிருந்து அப்படியே போயிட்டு பிரண்ட்ஸ்களோடு பஸ்ஸில் திரும்பிவிடறதா சொன்னா. ஸ்கூட்டி காலேஜிலேயே பத்திரமா இருக்கும். நாளைக்கு எடுத்துக்கலாம்னு சொன்னா.''

''சரி, வாங்க, நாம இரண்டு பேருமாப் போய் பஸ் ஸ்டாப்பிலே பாக்கலாம்.''

இருவருமாக கிளம்பினார்கள். போகும் முன் நளினியை அழைத்து ''கதவை தாப்பாள் போட்டுக்கோ. அந்த கழுதை வந்தா என் செல்லுக்குப் போன் செய்'' என்றார்.

கொஞ்சம் பேச்சுக்குரலும் வெளிச்சமும் வர எல்லா வீட்டிலுமே விளக்கு எரிய ஆரம்பித்தது. என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேட்பவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல ரொம்பவும் சங்கடப்பட்டார் சுப்பு.

''ஒண்ணும் ஆயிருக்காதுப்பா! நீ கவலைப்படாதே வந்துடுவா நாலு சிநேகிதிகள் ஒண்ணா சேர்ந்தா பேசிண்டே இருந்து பஸ்ஸை கோட்டை விட்டுடுப்



பாங்க. ஒரு வேளை இப்போது வரல்லைன்னாகூட கார்த்தாலே வந்துடுவா'' என்றாள் பொன்னியத்தை.

நல்ல வேளையாக வரதன் எழுந்து வரவில்லை. சுப்புவின் அப்பா சாமிநாதன் 8 மணிக்கு சாப்பாடு, 9 மணிக்கு மாடியில் அவர் ரூமில் போய் தூக்கம், காலை 4 மணிக்கு விழிப்பு என்று ஒரே கதியில் இயங்குபவர். அவருக்கு இப்போதுதான் ஏதோ கீழே பேசுகிறார்கள் என்று காதில் விழுந்தது. கீழே இறங்கி வந்தார். விவரம் கேட்டுவிட்டு அவருக்கும் இப்போது கோபம், கவலை, படபடப்பு.

சரி, பஸ் ஸ்டாண்ட் போவோம் என்று புறப்பட்டனர். எங்கே கல்யாணம், எந்த சிநேகிதி? ரிசப்ஷன் எங்கே? ஒரு கேள்விக்கும் பதில் தெரியாமல் அசடு வழிந்தாள் நளினி.

''போம்மா நளினி, உள்ளே போய் கைகாலை அலம்பிக் கொண்டு சாமி விளக்கை ஏத்தி நமஸ்காரம் பண்ணு. குல தெய்வத்தை நினைச்சு மனசார வேண்டிக்கோ. ஒரு ஒரு ரூபாயை மஞ்சள் துணியில் முடிஞ்சி வை. எல்லாம் சுபா நல்லபடியா வந்து சேருவா'' என்றாள் சுந்தரா. நல்ல வேளையோ அல்லது பொல்லாத வேளையோ, ரங்கராஜன் ஆபீஸ் வேலையா வெளியூர் போயிருந்தார். அவர் இருந்திருந்தால் இன்னும் அமர்க்களமாகியிருக்கும்.

அரவிந்த் இப்போது ஹவுஸ் சர்ஜன்ஸி என்பதால் ஹாஸ்பிடலிலேயே தங்கியிருக்க, விஜய்யும் ஆபீஸிலேயே தங்கியிருந்தான். விவேக்கும் வெளியூர் போயிருக்கிறான். சின்னப் பசங்க ஒருத்தர்கூட உதவி பண்ண இல்லை பாருன்னு அங்கலாய்த்தாள் பரிமளா.

எங்கேன்னு தேடறது குருடன் யானையைப் பார்த்த கதையா இருக்கு என்று சலித்தபடி வந்து சேர்ந்தார் சுப்பு.

உள்ளே சுந்தரா சொன்னபடி முடிந்து வைத்துவிட்டு தெருப்பிள்ளையாருக்குத் தேங்காய் என்று ஆரம்பித்தவள், திருப்பதிக்கு வந்து அங்கப் பிரதட்சணம் வரை வேண்டுதல்களின் எண்ணிக்கையை ஏற்றிக் கொண்டே போனாள்.

"ஆனாலும் இந்தக் காலத்துப் பெண்களுக்குப் பொறுமை கிடையாது. வீட்டில் கவலையாக இருக்குமேன்னு தெரிய வேண்டாமா? சரி பஸ்ஸே கிடைக்கலே, அங்கேயே தங்க வேண்டி வந்தது. தன் கிட்டே செல்போன் இல்லாட்டாலும் யார்கிட்டேயாது வாங்கி வீட்டுக்கு தகவல் சொல்லாதோ இந்தப் பொண்ணு. என்ன குழந்தைகள் இவர்களெல்லாம்?" என்று தன் பங்கிற்கு சலித்துக் கொண்டாள் லக்ஷ்மி.

"எல்லோரும் எத்தனை நாழி கொட்டி கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமா? சரி, சுப்பு! நீ போய் படு. காலங்கார்த்தாலே வந்து நிப்பா பாரு. பொன்னியத்தை சொன்ன மாதிரி பொண்ணுங்க எல்லாம் கெக்கே பிக்கேன்னு பேசிண்டு நேரம் கழிச்சு புறப்பட்டிருக்கும். பஸ் இல்லாம திரும்ப மண்டபத்திற்கே போயிருக்கும். எல்லாம் காலம்பற சௌக்கியமா வந்து சேர்ந்துடுவா... நளினி, நீ ஏன் கண்கலங்கறே. பைத்தியம் போய் படு காலம்பற சீக்கிரமே உன் பொண் வந்து கதவைத் தட்டுவா பாரு!" என்று சற்று அதட்டலா பேசி சுந்தரா எல்லோரையும் போய்ப் படுக்க வைத்தாள். எல்லோரும் அவள் வார்த்தைக்குக் கட்டுப் பட்டார்களே ஒழிய ஒருத்தருக்கும் தூக்கம் வரவில்லை.

ஆச்சு, பொழுது விடிய ஆரம்பித்துவிட்டது. ஆனால் இன்னும் சரியாக விடியவில்லை. பகவானே, இன்னிப்



பொழுது நல்லபடியா விடியணும்பா என்று பிரார்த்தித்துக் கொண்டே வெளியே வந்தார் சுப்பு.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஐயாரப்பன் காம்பௌண்ட் மொத்தமும் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. ஆம். விவேக் பைக்குடனும் ஒரு பெண்ணுடனும் ரோடு ஓரத்தில் விழுந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. காலையில் ரோடில் போன சிலர் பார்த்துவிட்டு மூச்சு இருக்கிறதா என்று பார்த்திருக்கிறார்கள். நல்ல வேளையாக இரண்டு பேருக்கும் மூச்சு இருக்கவே தூக்கிக் கொண்டு போய் பக்கத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள். அப்படி நல்ல இதயம் படைத்த நாலுபேர் இன்றைக்கும் நாட்டில் இல்லாமலா இருக்கிறார்கள்? மோட்டார் சைக்கிளுக்கு பயங்கர சேதம். பயணித்த இருவருக்கும் கை கால்களில் பலத்த அடி. விவேக்கின் ப்ரீஃப்கேஸிலிருந்த விலாசம் போன் நம்பரைப் பார்த்து அவர்கள் வீட்டிற்குப் போன் செய்திருக்கிறார்கள். போனை எடுத்தது ஜயந்திதான். அவள் சாதாரணமாக ரொம்ப தைரியசாலி. ஆனால் பெற்ற பாசத்திற்கு முன் தைரியமாவது, ஒண்ணாவது பக்கத்திலிருந்த சோபாவை இறுக்கப் பற்றியவள் கணேசனிடம் போனைக் கொடுத்தாள். அவர் அதிர்ச்சியில் உறைந்து போனாலும், சற்றே சுதாரித்துக் கொண்டு, 'எந்த லொகாலிட்டி, எந்த ஹாஸ்பிடல்' என்று கேட்டுக் கொண்டார். கூடவே ஒரு பெண் என்று பேசியவர் சொன்னாரே தவிர அவளுடைய பெயர், விலாசம் அவர்களுக்குத் தெரியவில்லை.

அந்த நிலையிலும் மறக்காமல் நன்றி என்று நான்கு தடவை செய்தி சொன்னவருக்குச் சொன்ன கணேசன்

தானும் இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார். அப்போது தான் வேலை முடிந்து உள்ளே நுழைந்த விஜய்க்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு அப்பாவும், அம்மாவும் விட்டு விட்டு சொன்ன விவரங்களை சேகரித்தவன் ஷோபாவை அழைத்து அப்பா, அம்மாவிற்கு காபி கொடுக்கச் சொன்னாள். அதற்குள் அவளே காபி கொண்டு வந்து கொடுத்துவிட்டாள். பரிமளா பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டாள். ''பாட்டி அவர் தான் சொன்னாரில்லையா கை கால்களில்தான் அடி, உயிருக்கு ஆபத்தில்லை என்று. யாரும் அழக்கூடாது'' என்று கண்டிப்பாய்ச் சொன்னவன் வீட்டிலிருந்த மொத்த பணத்தையும், கிரடிட் கார்டுகளையும் எடுத்துக் கொண்டான்.

அதற்குள் மற்ற வீட்டில் எல்லோரும் விழித்துக் கொண்டு. ''சுப்புவின் பெண் வந்தாளா'' என்று கேட்க வெளியே வர விவேக்கின் ஆக்ஸிடெண்ட் விஷயம் தெரிந்து பதறிப் போய்விட்டனர். எல்லோரும் கணேசனுடன் போகத் தயாராக இருந்தனர். ''எல்லோரும் என்னோடு வரவேண்டாம். சுப்பு பெண் என்ன ஆனாளோ தெரியல்ல. அதனால் நீங்க எல்லோரும் அவனுக்குத் துணையாக இருங்க. நானும் விஜய்யும் போய்ப் பார்த்து விட்டு ஏதானாலும் போன் பண்ணிச் சொல்றோம்'' என்றார் கணேசன்.

நளினி தன் வீட்டிலேயே இருந்தாள். அவளுக்கு பெண் வராத கவலை ஒரு பக்கமிருந்தாலும், அவள் போன திக்குகூட விசாரித்துக் கொள்ளாமல் போய்விட்டோமே என்ற வெட்கம்தான் பெரிதாக இருந்தது.

வினோ அவளை பின் ரூமிற்குக் கூப்பிட்டாள். ''அம்மா, நீ போய் ஜயந்தி ஆன்ட்டியைப் பார்க்கலியா?''



என்றாள். ''என் பிரச்னையே பெரிசா இருக்கு. எனக்கு அவமானமா இருக்கு. நான் என்ன இன்னொருத்தரைப் பார்ப்பது?'' என்று அலுத்துக் கொண்டாள்.

''இல்லேம்மா, நான் ஒரு காரணமாத்தான் சொல்றேன். நீ போய் விவேக் இருப்பது எந்த ஆஸ்பத்திரி என்று கொஞ்சம் விசாரித்து தெரிந்து கொண்டு வாயேன். பேச்சோடு பேச்சாக நைஸா விசாரிம்மா'' என்றாள்.

அவளை வெறிக்க ஒரு பார்வை பார்த்தாள், நளினி.

''ப்ளீஸ்மா, நீ கேட்டுண்டு வா நான் உனக்கு விவரமா சொல்றேன். உடனேயே போயேன்'' என்றாள் வினோ.

அவள் குரலில் இருந்த தீவிரம் நளினியை உடனே புறப்படச் செய்தது. 10 நிமிஷங்களில் திரும்பி வந்துவிட்டாள்.

''என்னடி, என்ன சொல்லப்போறே, சொல்லித் தொலை.''

''எனக்கு, எனக்கு.....'' என்று இழுத்தாள்.

''சொல்லித் தொலையேண்டி, என்ன விஷயம்'' என்று சிடுசிடுத்தாள் நளினி.

''இல்லேம்மா, விவேக்கைப் பார்க்க நீயும் அப்பாவும் கூட போய்விட்டு வாங்கம்மா.''

''ஏண்டி, நம் வீட்டிலேயே பெரிய இடி ஒன்று இறங்கியிருக்கிறது. இப்போ அவர்கள் பிரச்னை அவசியமா நமக்கு. ஜயந்தி பாவம் தான். விவேக்கும் நம்ம வீட்டுப் பையன் தான். ஆனாலும் இப்போ முதலில் நாம் பார்க்கவேண்டியது நம்ம பிரச்னைதான்.''

''அம்மா, அம்மா. நான் என்ன சொல்ல வறேன்னா.......''

''என்னடி எத்தனை நாழி மென்னு முழுங்கப்போறே? சொல்லித் தொலையேன், சனியனே'' என்றாள் நளினி பொறுமை இழந்து.

''இல்லேம்மா, இரண்டு பிரச்னையும் ஒரே பிரச்னை தான் என்று நினைக்கிறேம்மா'' என்று வினோ சொல்ல, நளினி அவளை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தாள்.

''புரியும்படி சொல்லட்டுமா? விவேக்கோட ஒரு பெண்ணும் அடிபட்டு கிடக்கறாங்கன்னு சொன்னாங்க யில்லே, அது நம்ம சுபாவா இருக்குமோன்னு நினைக் கிறேன்.''

''அடிப்பாவி மகளே! உன் நினைப்பிலே இடிவிழ. எதுக்குடி இப்படி சொல்றே?'' என்று அலறிய நளினியின் வாயைப் பொத்தி அறையின் கதவைச் சாத்தினாள் வினோதினி. ஆமாம். சுப்பு ஒரு மணிநேரம் முன்புதான் சோபாவிலேயே சற்று கண்ணயர்ந்திருந்தார். இப்போது அம்மா முதலில் புரிந்து கொள்ளட்டும். அப்பா எழுந்து ருத்ர தாண்டவம் ஆடவேண்டாம்.

''அம்மா எனக்கு எதுவும் நிச்சயமாகத் தெரியாது. ஆனால் ஒரு சந்தேகம். விவேக்கோட சுபா போயிருப் பாளோ என்று ஒரு எண்ணம்.''

''எதனாலடி உனக்கு அப்படி தோணித்து. நீயும் கூட்டுக் களவாணியாடி, சனியனே'' என்று அவள் முதுகில் ஒரு போடு போட்டாள்.

''அம்மா, நீ அனாவசியமாக என்னிடம் கோபப்படறே. என்னுடையது ஒரு ஊகம் தான்.''

''என்ன ஊகமோ, சொல்லித் தொலை'' சீறினாள் நளினி.

''நீ கோவிச்சுக்காமே கேக்கறதாயிருந்தா நான் சொல்றேன்.''

''சொல்லு.''



''ராக்கியன்னிக்கி நம்ம காம்பௌண்ட்லே எல்லா பாய்ஸுக்கும் எல்லா கேர்ள்ஸும் ராக்கி கட்டினமா இல்லையா. அன்னிக்கு சுபா நைஸா விவேக்கிற்கு ராக்கி கட்டாமே தப்பிச்சுட்டா. நான் கேட்டதுக்கு 'உன் வேலையைப் பாருடி' ன்னு சொல்லிட்டா. அதுக்கப்புறம் அவள் கொஞ்ச நாளாவே நன்னா டிரஸ் பண்ணிக்கறது. பாடிண்டே இருக்கறது. மொட்டை மாடியிலே போய் படிக்கறேங்கறதுன்னெல்லாம் குஷியா இருந்தாளே, அம்மா! நீ கவனிக்கல்லையா?''

நளினிக்கு இப்போது சங்கடமாகவே இருந்தது. இந்த சின்னப் பெண் கண்ணில் பட்டது நம்ம கண்ணிலே படவில்லையே என்று, நானொரு மக்கு தன்னைத் தானே நொந்துகொண்டாள். வினோ தொடர்ந்தாள்.

''நேத்திக்கு அவள் காலேஜுக்கு கிளம்பறச்சே நான் ஒண்ணு பாத்தேம்மா. அவ ரிசப்ஷனுக்கு பட்டுப் புடவை வெச்சுருந்ததைத் தவிர, சுடிதாரும் இரண்டு செட் வெச்சுண்டாம்மா. நான் எதுக்குன்னு கேட்டதுக்கு, ''சும்மா இருடி'' என்று சொன்னவள் அப்புறம் அந்த கேள்வியையே தவிர்த்துவிட்டாள். எனக்கும் அதோட அந்த விஷயம் மறந்து போச்சு. இப்போ யோசித்துப் பாத்தா எல்லாத்துக்கும் கனெக்ஷன் இருக்காப்பலே தோணுதம்மா. பிளீஸ்மா. நீயும் விவேக் இருக்கிற ஆஸ்பத்திரிக்குப் போய் பாரும்மா. அப்பாகிட்டே எப்படியாவது மெதுவா எடுத்துச் சொல்லி அவரையும் கூட்டிட்டு போம்மா. அவங்க பாத்துட்டு வந்து உனக்கு நியூஸ் சொல்றதுக்கு முன்னாடி நீயும் சேர்ந்தாவது பாரும்மா அவங்களோடே'' என்று கண்களில் நீர்மல்க கை கூப்பினாள் வினோதினி.

நளினி சிலையாக நின்றுவிட்டாள். வினோதினி சொன்னதில் இருந்த விஷயத்தை கிரகித்துக் கொள்ளவே அவளுக்கு சில நிமிடங்கள் பிடித்தன. கோபம், ஏமாற்றம் பயம் தன் அறியாமை என்று பல உணர்ச்சிகள் அவளை ஆட்டிப் படைத்தன. கடைசியில் பெற்ற வயிறாயிற்றே சுபா எப்படியிருக்கிறாளோ (அவள் சுபாவாக இருக்கக் கூடாது) என்று வேண்டிக் கொண்டு சுப்ரமணியத்தை எழுப்பினாள்.

தூக்கிவாரிப்போட்டு எழுந்த சுப்பு. ''என்ன நளினி, வந்துட்டாளா சுபா?'' என்று கேட்டார் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே.

''நீங்க எழுந்து காரை எடுங்க நாம கொஞ்சம் வெளியே போகணும்'' என்றாள் நளினி.

''சுபா இன்னும் வரலியா? இப்போ நாம எங்கே போகணும்? அவ எங்கே இருக்கான்னு தெரிஞ்சுடுத்தா?'' என்றபடி கார் சாவியை எடுத்துக் கொண்டார். அதற்குள் அரவிந்த் வீட்டிற்கு வந்திருந்தான். அவனிடம் தேவிகா நடந்த இரண்டு விஷயங்களையும் சொல்லவே ''இப்போ நான் யாருக்கு உதவணும். சொல்லு. நான் வரும்போது தான் விஜய்யும் வந்தான். பார்த்தேன். அதனாலே கணேசன் அங்கிளையும் ஜயந்தி ஆன்ட்டியையும் அவன் கூட்டிப் போய்விடுவான். நான் போய் சுப்பு அங்கிளைப் பார்க்கிறேன்'' என்று கிளம்பினான்.

''ஆனா நீ ராத்திரி பூரா ஹாஸ்பிடலில் இருந்துட்டு வந்திருக்கே. உன்னால் வண்டி ஓட்ட முடியுமா?''

''நேத்திக்கு அவ்வளவு வேலையில்லேம்மா அதனாலே இரண்டு மணிக்கே படுத்துட்டோம். பரவாயில்லை நான் போய் சுப்பு அங்கிளைப் பார்க்கிறேன்'' என்று புறப்பட்டான்.



சுப்பு தன் காரை கிளப்பும் நிலையில், அரவிந்த் குறுக்கிட்டான். ''வேண்டாம் அங்கிள் இந்த மனநிலையில் நீங்க கார் ஓட்ட வேண்டாம். நான் ஓட்டுகிறேன்'' என்றான் இதற்குள் நளினியும் வந்து காரில் ஏறிக் கொண்டாள். ''தாத்தாவை பாத்துக்கோ வினோ'' என்று அவளை எச்சரித்தாள்.

கணேசன், ஜயந்தி மிகவும் படபடப்புடன் புறப்பட, விஜய் வண்டி ஓட்ட அவர்களும் புறப்பட்டார்கள். ஜயந்தி புலம்பிக்கொண்டே வந்தாள். ''உனக்கப்புறம் எவ்ளோ வருஷம் கழித்துப் பிறந்தவன் தெரியுமா இந்த கடன்காரன். அதான் உன்னை மாதிரி பொறுப்பா இல்லாமே போய்ட்டானோ என்னவோ?''

''என்னம்மா, வண்டி ஆக்ஸிடெண்ட் ஆனதுக்கு இவன் என்னம்மா பண்ணுவான்? நீ கொஞ்ச நாழி எதுவும் யோசிக்காமே பின்னாடி சாஞ்சிண்டு தூங்க முயற்சி பண்ணு. அப்பா நீங்களும் கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருங்க. ஹாஸ்பிடல் போய் சேர கொஞ்ச நேரம் ஆகும். நீங்க இரண்டு பேரும் கொஞ்சம் தூங்குங்க'' என்றான் விஜய்.

பின்னால் வந்த காரில் சுப்பு கோபத்தின் உச்சியிலிருந்தார். கூடவே பயம். படபடப்பு, கவலை எல்லாமும்தான். நளினி கூப்பிட்டதும் அவர் புறப்பட்டுவிட்டாரா என்ன?

வினோதினி சொன்னதைக் கேட்டுவிட்டு நளினி சுப்புவிடம் போய், ''நாம் வெளியே போகலாம்'' என்று சொன்னவுடன் அவர் இங்கே எகிறி அங்கே குதித்தார். ஆனால் நளினி கைகூப்பி. அழுது. ''தயவு செய்து என்னோடு வாங்க. நான்தான் கவனமா இருந்திருக்கணும் என் தப்பை ஒத்துக்கறேன் நீங்க என்ன தண்டனை

கொடுத்தாலும் நான் ஏத்துகிறேன். என் மேல் கோபம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போ தயவு பண்ணி என்னோடு வாங்க நான் வழியிலே எல்லாத்தையும் சொல்றேன்'' என்றெல்லாம் பலவிதமாக கெஞ்ச, சுப்பு புறப்பட்டார். முன்னாடி உட்காரப் போன சுப்புவை, ''அங்கிள், நீங்க பின்னாடி, ஆன்ட்டியோட உட்காருங்க'' என்றான் அரவிந்த்.

சரியென்று பின் சீட்டில் உட்கார்ந்தார் சுப்பு. ''எங்கே போகணும் அங்கிள்?'' என்று கேட்டான். அரவிந்த். ''விவேக்கை சேத்துருக்காங்களே அந்த ஆஸ்பத்திரிக்குப் போப்பா'' என்றாள் நளினி. அவளைக் கேள்விக் குறியோடு பார்த்தனர் ஆண்கள் இருவரும். ''காரணமாத்தான் சொல்றேன் அரவிந்த். ப்ளீஸ் அங்கேயே போயேன்'' என்றாள். ஒன்றும் புரியாமல் அவள் சொன்னாளே என்று அங்கேயே காரை செலுத்தினான் அரவிந்த்.

சுப்புவின் பார்வையில் இருந்த கேள்வியைப் புரிந்து கொண்ட நளினி வினோதினி சொன்ன எல்லாவற்றையும் அவரிடம் கூறினாள். சுப்புவிற்கு தலை சுற்றியது. ரொம்பவும் எரிச்சல். கூடவே இதையும் சொன்னாள் நளினி. ''இது ஒரு ஊகம்தானே தவிர போய்ப்பார்க்கும் வரை நிச்சயமாக என்ன சொல்ல முடியும்?''

எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கையில் இப்படியும் இருக்கலாமோ என்று சுப்புவிற்கும் தோன்றியது. தன்னை ஒருவாறு தேற்றிக் கொண்டவர், என்னதான் நளினியின் மீது கோபமாக இருந்தாலும் அழுதுகொண்டே வந்த நளினியை தன் தோளில் சாய்த்துக் கொண்டு சமாதானப் படுத்திக் கொண்டே வந்தார்.

இருவரும் சற்று கண்ணயர்ந்திருக்க வேண்டும். திடீரென்று கார் நின்றதும் இருவரும் கண் விழித்தனர்.



''இதுதான் அந்த ஹாஸ்பிடல்'' என்றான் அரவிந்த். 'திருமலா ஹாஸ்பிடல்' என்று போர்ட் போட்டிருந்தது. பிறகு தான் அங்கு கணேசனின் காரும் இருப்பதைப் பார்த்தனர்.

அவர்களும் அப்போதுதான் அங்கு வந்திருக்க வேண்டும். சுப்புவின் காரைப் பார்த்ததும் கணேசன் ''என்னப்பா சுபா வந்துட்டாளா? நீ இங்கே வந்திட்டியே?'' என்று கேட்டார்.

அதுவந்து, அதுவந்து.....'' என்று சுப்பு இழுத்தார். அதற்குள் விசாரிக்க உள்ளே போயிருந்த விஜய் ''அப்பா, இங்கே தான், உள்ளே வாங்க'' என்றான்.

உள்ளே பாய்ந்தாள் ஜயந்தி. கூடவே கணேசனும் போக. அவர்களை முந்திக்கொண்டு உள்ளே நுழைந்தாள் நளினி. தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தார் சுப்பு. உள்ளே இருப்பது தன் பெண்ணாக இருந்தால் நல்லதா, இல்லாவிட்டால் நல்லதா என்று அவருக்குப் புரியவில்லை.

வார்டுக்குள் நுழைந்த அவர்கள் படுத்திருப்பது தங்கள் பெண்தான் என்று தெரிந்ததும் திகைத்துப் போனார்கள். இவளும், விவேக்கும் எதற்காக இவ்வளவு தூரம் வந்தார்கள் என்பது புரியவில்லை. இதனுடைய பின் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதும் புரியவில்லை.

சுபாவைப் பார்த்ததும், நளினி பெரிதாகவே அழுது விட்டாள். சுபாவிற்கு ரத்தம் சற்று அதிகமாகவே வெளியேறிவிட்டதால் மிகவும் பலகீனமாக இருந்தாள். நளினி அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து, ''சுபா, என் கண்ணே, எப்படியம்மா இருக்கே?'' என்று ஆதூரத்துடன் அவள் தலையைக் கோதிக் கொண்டே கேட்டாள்.

மெதுவாக கண் விழித்த சுபா, ''அம்மா, நீயா? வெ அடியா அவருக்கு? அவர் உயிருக்கு ஒண்ணும் ஆபத் தில்லையே, எப்படியிருக்கார்?'' என்று கேட்டாள். ஸாரிம்மா. மன்னிச்சுக்கோ. விவேக் எங்கேம்மா? ரொம்

அவள் கேட்டவிதத்திலிருந்தே நளினிக்கு எல்லாம் புரிந்துவிட்டது. நேற்றுவரை குரங்கு. சிடுமூஞ்சி, வெளில வாடா என்றெல்லாம் சண்டையும், பூசலுமாக இருந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவராம், அவர்! திகைத்துப் போய்விட்டாள். இரண்டு படுக்கை தாண்டி விவேக். ''சுபா, சுபா'' என்று முனகிக் கொண்டே படுத் திருந்தான். கணேசன், ஜயந்திக்கு முகத்தில் ஈயாட வில்லை. இருவருக்கும் நிறைய காயங்கள் இருந்ததால் சலைன் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் அரவிந்த் வந்து எல்லோரையும் கூப்பிட் டான். வெளியே அந்த கிராமத்து ஜனங்கள் நான்கு பேர் இருந்தனர். ''இவங்கதான் விவேக்கையும் அந்தப் பெண்ணையும் காலையில் பார்த்து இங்கு அழைத்து வந்து சேர்த்தது'' என்றார் டாக்டர். கண்களில் நீர்மல்க கைகூப்பி அவர்களை வணங்கிய விஜய், ''ஐயா, நீங்கள் செய்த இந்த உதவியை நாங்கள் எங்கள் ஆயுள் உள்ள வரை மறக்க மாட்டோம். தயவு செய்து இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேணும்'' என்று சொல்லி தன் சட்டை பையிலிருந்து ரூ.1000/- எடுத்துக் கொடுத்தான்.

''பணமெல்லாம் வேண்டாம். சார். ஏதோ கண் முன் னாடி இரண்டுபேர் உயிருக்கு போராடிக் கொண்டிருக் கும் போது பாத்துட்டு சும்மா போகமுடியுமா எங்களாலே? முடிஞ்ச சின்ன உதவியைத்தான் சார் செஞ்சோம். மனுசனுக்கு மனுசன் செய்ய வேண்டிய இந்த மாதிரி



உதவிக்கெல்லாம் பணம் கொடுக்காதீங்க. நாங்க வாங்க மாட்டோம்'' என்றார் அதில் வயதில் பெரியவராக இருந்த ஒருவர்.

''அப்படியில்லை ஐயா, இந்தக் காலத்திலே இந்த மாதிரி விபத்துக்களைப் பாக்கறவங்க உதவி செஞ்சா எங்கே தங்களை கோர்ட்டுக்கு இழுத்தடிச்சுடுவாங் களோன்னு பயப்பட்டு சும்மா பார்த்துட்டே போயிடு வாங்க. உங்களை மாதிரி மனிதாபிமானம் உள்ளவங்க ரொம்ப குறைச்சலாகத்தான் இருக்காங்க.... மேலும் நீங்க இரண்டு ஆட்டோலே அத்தனை தூரம் இவங்களை கொண்டுவந்து சேத்துருக்கீங்க. அந்த செலவுக்காவது நீங்க இந்த பணத்தை வாங்கிக்கத்தான் வேணும். மறுக் காமே வாங்கிக்கோங்க'' என்று வற்புறுத்திக் கொடுத் தான். அவர்களும் வாங்கி கொண்டார்கள்.

''ஏதோ அவங்க சின்ன வயசு. புருஷனும். பொண் டாட்டியுமாக நல்லபடியா எழுந்திரிக்கணும். அதுதான் எங்களுக்கு வேண்டியது'' என்றார்கள்.

இவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள ''ஒன்றுமில்லை ஐயா, ரொம்ப நன்றி'' என்று சொல்லி கை கூப்பினாள், ஜயந்தி.

''சார், அவரோட மோட்டார் சைக்கிள் ரொம்பவே டேமேஜ் ஆகியிருக்கு. அதை இங்கே பக்கத்தில் ஒரு மெக்கானிக் ஷாப்பிலே கொடுத்திருக்கோம். நம்பகமான ஷாப்தான். அட்ரெஸ் குடுத்தீங்கன்னா ரிப்பேர் பண்ணி வண்டியை கொண்டு வந்து கொடுக்கச் சொல்கிறோம்'' என்றனர்.

''ரொம்ப நன்றிங்க உங்க உதவிக்கு. இதுக்கு நாங்க என்ன பிரதி உபகாரம் செய்ய முடியும்? இதோ என்

கார்டு. ரிப்போர் ஆனதும் கொஞ்சம் அந்த மெக்கானிக்கை என் நம்பருக்கு போன் செய்யச் சொல்றீங்களா?'' என்றான் விஜய்.

இதற்குள் அங்கிருந்த டாக்டர், அரவிந்த்தும் ஒரு டாக்டர் என்று தெரிந்ததும் அவனிடம் விளக்கமாகச் சொன்னார். ''அந்தப் பெண் இடது பக்கமா விழுந்திருக்கா. வேகமா ரோடில் போய்க் கொண்டிருந்த அவங்க கட்டுப்பாடு இழந்து வண்டியோட விழுந்திருக்காங்க. அந்தப் பெண் கையிலே போட்டிருந்த கண்ணாடி வளையல் உடைந்து கையில் குத்தி நிறைய கிழிச்சிருக்கு. தவிர தோள்பட்டையில் சதை கிழிந்து ரத்தம் வந்திருக்கிறது. இடது தொடையிலும் நல்ல காயம். விவேக் மல்லாந்து விழுந்திருக்க வேண்டும். நல்ல வேளையாக ஒரு அடர்த்தியான குத்துச் செடி அங்கிருந்ததனால தலைல அடி பலமில்லை. முதுகில்தான் அடி. ஆனா பெரிய எலும்பு முறிவு ஆகியிருக்கிறார் போல் தெரியவில்லை. எப்படியும் உங்களுக்கு போன் வந்து நீங்களும் வந்துட்டீங்க. இங்கே கொண்டு வந்து இரண்டு மணி நேரம் தான் ஆச்சு. அவசரமா செய்ய வேண்டிய சிகிச்சை எல்லாம் செய்துட்டோம். ஹஸ்பெண்ட், ஒய்ஃப் இரண்டு பேருக்குமே சலைன் ஏத்திகிட்டு இருக்கோம். எப்படியும் ஒரு மல்டி ஸ்பெஷாலிடி ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனீங்கன்னா எல்லா டெஸ்ட்டும் அங்கேயே எடுத்துப் பாத்துடலாம். இந்த சலைன் பாட்டில் இறங்கின உடனே நீங்க இவங்களை கூட்டிக்கிட்டுப் போயிடலாம்.''

''காரிலேயே கூட்டிக்கிட்டுப் போயிட முடியுமா, டாக்டர்?'' என்று கணேசன் கேட்டார்.

''தாராளமாக முடியும். பின் சீட்டில் படுக்க வெச்சு, யாராவது ஒருத்தர் பின் சீட்டில் உட்கார்ந்து போகலாம்.



போகும்போது மேடு பள்ளம் பாத்து ஓட்டிகிட்டுப் போங்க.''

''ரொம்ப தேங்க்ஸ், டாக்டர்'' என்று சொல்லி, நர்ஸ் கொடுத்த பில்லை கட்டினார். கணேசன். இரண்டு பேருக்கும் பில் ஒன்றாகவே வந்தது. அவர்கள் எல்லோரையும் பொறுத்தவரை அடிபட்ட இருவரும் கணவன் மனைவிதானே.!

அதற்குள் விவேக்கின் செல் போனில் யாரோ கூப்பிடுகிறார்கள் என்று நர்ஸ் கொண்டு வந்து கொடுத்தாள். ''அஷோக் காலிங்'' என்று செல்போன் சொல்லியது. போனை வாங்கிக் கொண்ட விஜய் அதை ஆன் செய்தான்.

''ஏண்டா அறிவுகெட்டவனே. உனக்குப் போன் பண்ணிப்பண்ணி கை அசந்து போயிடுத்து. உனக்கு ஏதாவது பொறுப்பு இருக்கா. என்னடா ஆச்சு உனக்கு? நீயும் சுபாவும் வரவுமில்லை. போனையும் எடுக்கல்லே. இன்னிக்கு ரெஜிஸ்ட்ரார் ஆபீஸுக்குப் போகணுமா, இல்லே கல்யாணமே கேன்ஸலா? உனக்காக எல்லா ஏற்பாடுகளும் செஞ்சு வெச்சுருக்கேன் இங்கே. பதில் சொல்லுடா, இடியட்'' யாருடன் பேசுகிறோம் என்று கேட்டுக் கொள்ளாமலேயே அவன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே போனான்.

''இதோ பார். போனை வெச்சுடாதே! நான் விவேக் இல்லை. அவனுடைய அண்ணா விஜய் பேசுகிறேன். விவேக்கும் சுபாவும் நேத்திக்கு ராத்திரி உங்க வீட்டுக்குத்தான் புறப்பட்டாங்களா?'' என்று கேட்டான்.

எதிர் முனையில் சற்று நேரம் பதில் இல்லை. பிறகு ''ஆமா சார்! அது வந்து.... அதுவந்து... என்று இழுத்தான் அஷோக்.

''இதோ பாருப்பா. இனிமே நீ தயங்க வேண்டாம் இப்போ நீ பேசினதிலிருந்து முழுசா எல்லாம் புரிந்துவிட்டது. ராத்திரி அவங்க மோட்டார் சைக்கிளிலே வரும்போது ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கு. ரோட்லே போன சில நல்லவங்க பார்த்து பக்கத்திலே ஒரு ஹாஸ்பிடல்லே சேர்த்து எங்களுக்கு தகவல் கொடுத்தாங்க. நாங்க வந்து அவங்களைக் கூட்டிகிட்டு போய்கிட்டு இருக்கோம்'' என்றான் விஜய்.

''ஐய்யோ, ஆக்ஸிடெண்டா? எப்படி இருக்காங்க சார் அவங்க? ஆபத்து ஒண்ணுமில்லையே?'' என்று பதட்டத்துடன் கேட்டான். அஷோக்.

''பதட்டப்படறதுக்கு ஒண்ணுமில்லேப்பா. ஆனா இரண்டு பேருக்குமே நல்ல அடி. நீ ஒண்ணு பண்ணு ஒரு இரண்டு நாட்கள் கழித்து பேசு'' என்று சொல்லி போனைக் கட் செய்துவிட்டான்.

வீட்டிற்குப் போகும்போது கணேசன் காரில் ஜயந்தி விவேக்குடன் சுப்புவையும் உட்காரச் சொல்லி விஜய் காரை எடுத்தான். சுப்பு காரை அரவிந்த் ஓட்ட சுபாவை பின் பக்கம் படுக்கவைத்துக் கொண்டு நளினி உட்கார முன்னால் கணேசன் உட்கார்ந்து கொண்டார்.

இப்போது வினோதினி சொன்னதெல்லாம் சுப்பு தம்பதியினர். கணேசன் தம்பதியினருக்குச் சொல்ல வேண்டியிருந்தது. தயங்கித் தயங்கி நளினி கணேச னிடம் விவரம் சொன்னபோது கணேசனுக்கு அதிர்ச்சி தாங்கவில்லை. இன்னொரு காரில் சுப்பு கோபமாய்ப் பல்லைக் கடித்துக் கொண்டு ஜயந்தியிடம் தான் இந்த காதல் விஷயத்தைப் புரிந்து கொண்ட வரை விட்டு விட்டுச் சொன்னார். விஜய் அஷோக்கிடமிருந்து வந்த



போன் காலைப் பற்றியும் சொன்னான். அப்போதுதான் ஜயந்தி சொன்னாள். ''நிஜம் தான். ஷோபா கூட சொன்னாள். இந்தப் பெண் சுபா இப்போ கொஞ்ச நாளா நிறைய நம் வீட்டிற்கு வந்து போறது இல்லே? உங்களை மஸ்கா அடிச்சா கொஸ்டின் பேப்பர் ஏதாவது வாங்கி கொடுப்பீங்கன்னு எண்ணமோ என்னவோ'' என்று அதுக்குள்ளே அங்கிருந்த வினோ ''அவ இப்போ கொஞ்ச நாளா ஒரே பாட்டெல்லாம் பாடிண்டு ரொம்ப ஹேப்பியா இருக்கா. ஏதாவது லவ்வோ. என்னவோ'' என்றாள் நான் திட்டினேன். அப்படிப் பேசக் கூடாதுன்னு ஒரு வேளை அன்னிக்கே வினோ எங்கிட்டே சொல்ல நினைச்சாளோ என்னவோ. இப்போது தான் புரியுது எல்லாம்.''

மேற்கொண்டு எதுவும் பேச இரண்டு பக்க பெற் றோருக்குமே பயம். நேரே வீட்டிற்கு அருகே இருந்த ஒரு மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனார்கள்.

அரவிந்த் ஒரு டாக்டர் என்பதற்கு நல்ல மதிப்பு இருந்தது உடனேயே சிகிச்சை ஆரம்பித்துவிட்டனர். அபாயம் ஏதும் இல்லை என்று டாக்டர்கள் சொல்லவும் அரவிந்த் ஹாஸ்பிடலிலேயே இருக்க, மற்றவர்கள் வீட்டிற்குப்போய் குளித்து டிபன் சாப்பிட்டு விட்டு வந்தார்கள். அதற்குள் விவேக்கிற்கும், சுபாவிற்கும் கட்டுகள் போட்டு சலைன் ஏற்றிக் படுக்க வைத்திருந் தனர். சுபாவிற்கு தலையில் ஸ்கேனும் எடுக்க வேண்டி யிருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுப்ரமணியம் அரவிந்த் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினார், ''அங்கிள், உணர்ச்சி வசப்படா

தீங்க, எல்லாம் சரியாகிவிடும்'' என்று ஆறுதல் சொல்லிக் கொண்டே இருந்தான். அவர்கள் கூடவே இருந்த டாக்டர்களிடம் அவ்வப்போது நிலைமையைத் தெரிந்து கொண்டு, எல்லோருக்கும் ஆறுதல் சொல்லி கொண்டிருந்துவிட்டு மாலைதான் வீட்டிற்குப் போனான். காம்பௌண்டில் எல்லோரும் இவர்கள் ஆரோக்கியத்தைப் பற்றி மட்டும்தான் கேட்டார்களே தவிர, இவர்கள் இருவரும் எங்கே, எதனால் ஒன்றாகப் போனார்கள் என்று எவருமே கேட்கவில்லை. எல்லோருக்கும் எல்லாம் அரசல்புரசலாகத் தெரிந்துதான் இருந்தது. இப்போது கேட்டு யார் மனதையும் புண்படுத்தக் கூடாது என்பது தான் அவர்கள் உத்தேசம்.

ஆயிற்று ட்ரீட்மெண்ட் முடிந்து விவேக், சுபா இருவரையும் வீட்டிற்கு அழைத்து வந்தாயிற்று. விவேக் நான்கு நாட்களிலேயே டிஸ்சார்ஜ் ஆகிவிட்டான். ஆனால் சுபா 10 நாட்கள் ஹாஸ்பிடலிலேயே இருக்க வேண்டியதாயிற்று. யாரும் யாருடனும் அதிகப் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை.

விவேக்கிற்கு காயங்கள் எல்லாம் ஆறி உடம்பும் குணமாகி விட்டாலும் இன்னும் ஒரு 10 நாட்களாவது ஓய்வு எடுத்துக் கொண்டபிறகு வேலைக்குப் போகலாம் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டதால் வீட்டிலேயே ரெஸ்ட்டில் இருந்தான். சுபாவைப் பார்க்க வரட்டுமா என்று ஷோபா மூலம் கேட்டுவிட்டான். நளினிக்குச் சிரிப்புதான் வந்தது. வரட்டும் என்று சொல்லிவிட்டாள். அவன் சுபாவைப் பார்க்க வந்த நேரத்தில் நல்ல வேளையாக சுப்ரமணியம் வீட்டில் இருக்கவில்லை. ரூமில் படுத்திருந்த சுபாவின் அருகே ஒரு நாற்காலியை



இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். சற்று நேரம் அவளையே உற்றுப் பார்த்த விவேக்கின் கண்களில் நீர் வழிந்தது.

''ஸாரி, சுபா! ஐ ஆம் வெரி ஸாரி. நான் கண்மண் தெரியாமல் அப்படி வேகமாக வண்டி ஓட்டினதாலதான் உனக்கு இந்த கதி ஏற்பட்டது. என்னை மன்னிச்சுடு'' என்றான்.

''இல்லை விவேக், நீங்க தான் என்னை மன்னிக் கணும். நான் உங்களை தூண்டிவிட்டதால்தான் நீங்க அவ்வளவு வேகமாகப் போனீங்க. உங்களுக்கும் நல்ல அடின்னு கேள்விப்பட்டு துடிச்சுப் போயிட்டேன். எல்லாம் என்னால்தான். இந்த ஏற்பாட்டிற்கே நான் ஒத்துக் கொண்டிருக்கக்கூடாது. இப்போ பாருங்க! நம்மைப் பெற்றவர்களுக்கு நம்மால் எவ்வளவு தலை குனிவு. அப்பா என்னிடம் பேசுவதையே நிறுத்திவிட்டார். என்னால் தாங்க முடியவில்லை, விவேக். நாம இன்னும் சற்று நிதானமா இருந்திருக்கணும். தப்பு பண்ணிட் டோம்'' என்றாள் கண்கலங்கியபடி.

''வாஸ்தவம்தான், சுபா! நாம தப்புத்தான் பண்ணிட் டோம். எனக்கும் அறிவில்லை. உன்னை அடையணும்கிற உத்வேகத்தில் நானும் தப்புதப்பா யோசித்து, உன் னையும் சிக்கல்லே மாட்டிவிட்டுட்டேன். ஆனாலும் இதிலே கூட ஒரு நன்மை நடந்திருக்கு, பார்! நாமா பயந்து செத்து நம்ம காதலை வெளியே சொல்றதுக்கு முன்னாடி அவங்களா நம்ம காதலின் தீவிரத்தை தெரிஞ்சிகிட்டாங்க. இப்ப இருக்கிற கோபம் எல்லாம் கொஞ்ச நாள்லே சரியாகி, நம்மை சேர்த்து வெச்சுடு

வாங்க பார்! தைரியமா இரு'' என்று சொல்லி புறப் பட்டான்.

சுபாவிற்கு பாட விஷயத்தில் வினோதினி, ஷோபா எல்லோரும் உதவுவதாகச் சொன்னார்கள். இப்போது தான் செமஸ்டர் ஆகியிருப்பதால் தற்போது ஒன்றும் தேவைப்படாது என்று சொல்லிவிட்டாள்.

அரவிந்த் இத்தனை உதவிகள் செய்யும் போதெல் லாம் அவன் மனதில் ஒரு எண்ணம் ஓடிக் கொண்டு தானிருந்தது. இதுவரை சுபா, விவேக் காதல் விவகாரம் தெரிந்தபின், ஐயாரப்பன் காம்பௌண்டில் யாரும் குறிப்பாக, சுபா, விவேக் இருவரின் அப்பா அம்மாக் களும் சிரித்தே அவன் பார்க்கவில்லை. அவசியத் திற்குப் பேசிக் கொண்டார்களே தவிர அவரவர் வேலை களை எந்திரம் போல் பார்த்துக் கொண்டிருந்தனர். நாளை தானும் திவ்யாவும் காதலிப்பது தெரிந்தாலும் எல்லோரும் இப்படித்தான் இருப்பார்களா என்பது தான் அந்த சந்தேகம். ஆனால் இவர்களைப் போலில்லாமல் நாங்கள் பெரியவர்கள் சம்மதம் இல்லாமல், படிப்பை முடிக்காமல் கல்யாணம் செய்துகொள்ள அவசரம் காண்பிக்க மாட்டோமே என்றும் நினைத்து தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வெவ்வேறா யிற்றே! தந்தைக்கு அது இன்னும் அதிகமாகவே பொருந்தும் இல்லையா?

சுப்ரமணியம் நளினியிடம் கேட்டார். ''உன் பொண்ணு சொல்லாம போக மட்டும்தான் செஞ்சாளா, இல்லை அதுக்கும் மேலே ஏதாவது நடந்திருக்குமா? அவளைக் கேட்டியா?''



''என்னங்க, நம்ம பொண்ணை நாம்பளே நம்பல்லைன்னா எப்படி? இப்படியெல்லாம் ஏன் யோசிக்கிறீங்க?'' என் றாள் நளினி.

''ஆமாம் நம்பற மாதிரித்தான் காரியம் பண்ணிருக்கா. நம்பிண்டே இரு! இந்த மாதிரி ஒரு பெண்ணைப் பெத் துட்டு பேச்சு வேறே'' என்றபடி வெளியே போய்விட்டார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே உள்ளே படுத்துக் கொண்டிருந்த சுபாஷிணி அவமானத்தால் அழுதுவிட் டாள். அழுகையினூடே அம்மாவிடம் ''அம்மா, நான் பெரிய தப்புதான் பண்ணிட்டேன். ஆனால் அப்பா நினைக்கிற மாதிரி யெல்லாம் ஒன்றும் இல்லைம்மா. என்னை நம்பு'' என்றாள்.

''பின்னே என்னத்துக்கடி இப்படிச் சொல்லாம கொள் ளாம வீட்டைவிட்டு போய்த் தொலைஞ்சே? நாங்க உனக்கு கல்யாணம் பண்ணி வைக்க மாட்டோம்னு நினைச்சியா?''

''ஐயோ அம்மா! அப்படியெல்லாம் இல்லை. விவேக் அம்மா, அப்பா அவர் எம்.பி.ஏ முடிச்சி பெரிய வேலைல சேர்ந்தால் தான் கல்யாணம்னு சொல்லிட்டாங்க. அப்பா என்னையும் படிப்பு முடிக்கவிட்டு ஹைதராபாத் அத்தை பிள்ளைக்கு கல்யாணம் செய்யப் போறதா சொல்லிக் கொண்டிருந்தார் ஒரு நாள். அதனாலே நாமளே ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிண்டுட்டா அப்புறம் ஒருத்தரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு இப்படி ஒரு முடி வெடுத்தோம். ரெஜிஸ்டர் மேரேஜ் முடிஞ்சு அன்னிக்கு சாயந்திரமே வீட்டிற்கு வரும் எண்ணத்தில்தான் இருந் தோம். ஸாரிம்மா, ரொம்ப ஸாரி, மன்னிச்சுடும்மா, ப்ளீஸ்!'' என்று கை கூப்பி அழுதாள்.

''ஏண்டி, ஒரு 24 மணி நேரம் நீ எங்கே போனேன்னு தெரியாமா நாங்க தவிச்ச தவிப்பு தெரியுமாடி. உனக்கு உன் மேலே எவ்வளவு நம்பிக்கை வெச்சுருந்தா அப்பா? எல்லாத்தையும் நாசமாக்கிட்டியேடி! இந்த அதிர்ச்சியிலே அவருக்கு ஏதாவது ஆகியிருந்தா, நான் என்னடி பண்ணுவேன் நீ படிச்சவ தானே? உன் மனசிலே இருக்கறதை எங்கிட்டேயாவது சொல்லியிருக் கலாம், இல்லையா? இப்படி எங்களை எரிமலை மேலே நிக்கவெச்சுட்டு நீ பாட்டுக்கு போயிட்டியே! இப்போ பாக்கறவங்க, கேக்கறவங்களுக்கெல்லாம் நான் என்னடி பதில் சொல்லுவேன்? என் பெண் ஒரு ஓடுகாலி, வீட்டை விட்டு ஓடிப் போய் திரும்ப வந்திருக்கான்னு சொல்லச் சொல்றியா? இனிமே உன்னை எப்படியடி நம்பறது?'' என்று சொல்லி அவளும் அழுதாள்.

சுபா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் ''நான் தப்பு பண்ணிட்டேன். பெரிய தப்பு பண்ணிட்டேன் என்னை மன்னிச்சுடு, அம்மா'' என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

பெற்ற மனம், இளகாமல் இருக்குமா? அன்றைக்கு ஹாஸ்பிடலில் போய் அவளைப் பார்த்ததும் ஏற்பட்ட உணர்ச்சிதான் இப்போதும் ஏற்பட்டது. வயிற்றில் ஜில்வென்று ஒரு புரட்டல். தான் பெற்ற பெண் அப்படி படுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் ஒரு தாய்க்கு ஏற்படும் உணர்ச்சிதான் அன்றும் அவளுக்கு ஏற்பட்டது. அப்படியே நெகிழ்ந்து போனாள்.

''சரி, தொலையட்டும்! இப்போவாவது உண்மையைச் சொல்லு தப்பு ஒண்ணும் நடந்துடல்லையே?''



படுத்துக் கொண்டிருந்த சுபா பளிச்சென்று எழுந்து அப்படியே அவள் அம்மா கால்களில் விழ்ந்தாள் ''அப்பா மேலே சத்தியம். எந்த தப்பும் நடந்துடல்லேம்மா'' என்றாள் அழுதபடி.

பதறிப்போன நளினி அவளை அப்படியே அணைத்துக் கொண்டு மறுபடியும் படுக்கையில் படுக்க வைத்தாள்.

அவ்வப்போது விவேக்கும் வந்து பார்த்துவிட்டுத் தான் போனான். கூடுமான வரை சுப்ரமணியம் இல்லாத சமயமாகப் பார்த்துத்தான் வருவான். இருவரும் கவலை களைப் பரிமாறிக் கொள்வார்கள். ஆனால் பொறுமை யாக இருந்தார்கள்.

இது இப்படியிருக்க, விவேக் வீட்டில் அசாதாரணமான மௌனம் நிலவியது. அவனை ஹாஸ்பிடலிலிருந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அழைத்து வந்த ஜயந்தி கீழ் ரூமிலேயே கட்டிலில் படுக்க வைத்துப் பார்த்துக் கொண் டாள். என்னதான் எலும்பு முறிவு ஒன்றும் இல்லை என்றாலும், மாடி ஏறி இறங்கும் சிரமம் வேண்டாம் என்று கீழேயே அவன் தங்க ஏற்பாடு செய்துவிட்டாள். பெற்ற மனது அவன் தவறுகளை மன்னித்து ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டாலும், கணேசன் அதற்குத் தயாராக இல்லை.

அன்று மாலை கணேசன் ஏதோ வேலையாக விவேக் இருந்த ரூமிற்குள் வந்த போது, அவரைப் பார்த்த விவேக் ''அப்பா'' என்று கூப்பிட்டான். அதைச் சிறிதும் சட்டை செய்யாத கணேசன் திரும்பிப் போக எத்தனித்தார். இதைக் கவனித்த விவேக் சற்று உரத்த குரலில் ''அப்பா'' என்று மறுபடியும் கூப்பிட்டான்.

''ஸார், கூப்டீங்களா'' என்ற கேட்டார் கணேசன்.

''என்னப்பா இது இப்படி பேசறீங்க?'' என்று வருத்தத்துடன் கேட்டான்.

''பின்னே எப்படி ஸார் பேசணும்? நீங்க ரொம்ப பெரிய மனுஷனாயீட்டீங்க. தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்னு சொல்வாங்க. நீங்க தோளுக்கு மேலே, மேலே வளர்ந்து எங்கேயோ போயிட்டீங்க. இப்போ உங்களை மகனேன்னு கூப்பிட முடியாது. உங்களைத் தோழனா வெச்சுக்கற தகுதியும் எனக்கில்லை. பின்னே எப்படி கூப்பிடறது?''

விவேக் கன்னத்தில் அறைபட்டது போல் மிரண்டான். ''அப்பா என்னை மன்னிச்சுடுங்கப்பா. நான் பண்ணினது பெரிய தப்புதான் அதுக்காக இப்படியெல்லாம் பேசாதீங்கப்பா'' என்றான்.

கணேசன் ஆவேசமானார் ''இப்போதெல்லாம் நீ ரொம்ப பெரிய லெவல்ல திங்க் பண்ண ஆரம்பிச்சிருக்கே. நாங்கள் எல்லாம் வேண்டாம்னு நீயே பிரண்ட்ஸ் மூலமா ஏதேதோ ஏற்பாடுகள் செஞ்சிண்டு இருக்கே நாங்க ஏதாவது சொன்னா எங்களை ஆட்களை விட்டு 'கவனிச்சுடுவியோன்னு' கூடப் பயமா இருக்கு. நீ ரொம்ப பெரிய மனுஷனாயிட்டே. இனிமே நாங்க. எதுக்கு? நீ ஆபீஸ் விஷயமாத்தான் அடிக்கடி வெளியூர் போறேன்னு நாங்க இத்தனை நாள் நினைச்சிண்டு இருந்தோம். நேத்திக்கு மாதிரிதான் நீ இத்தனை நாளும் வெளியூர் போயிண்டு இருந்தேன்னு இப்பதான் புரியறது. ஆமாம். இந்த சுபா எத்தனையாவது பொண்ணு? எல்லாம் முடிஞ்சாச்சா? இந்த விபத்து மட்டும் நடக்கலைன்னா



நீ எங்களையெல்லாம் தலை முழுகிவிட்டு போயிருப்பே. இல்லே? அப்படி எங்களையெல்லாம் ஒதுக்கும்படியா நாங்க என்னப்பா தப்பு செய்தோம்?'' ஆவேசமாக பேச ஆரம்பித்தவர் அழுகையுடன் முடித்தார்.

விவேக் தன் தவற்றின் வீரியத்தை உணர்ந்து பதில் பேச முடியாமல் தலை குனிந்து கண்ணீர் உகுத்தான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்த ஜயந்தி கணேசனை சமாதானப்படுத்த முயன்றாள். ''இதோ பாருங்க, கொஞ்சம் அமைதியா இருங்க. அவனை இன்னும் சின்னக் குழந்தையா நினைச்சு நாம நடந்துகிட்டதுதான் நம்ம தவறு. இப்போ அடிபட்டுகிட்டு வேறே வந்துருக்கான். இவன் பூரணமா குணமாகட்டும். அப்புறமா இதைப் பத்தி பேசலாம்.''

''இன்னும் என்னடி பேசறதுக்கு இருக்கு? நாம என்ன கல்யாணமே பண்ணி வைக்க மாட்டோம்னு சொன்னோமா? இன்னும் மேலே படிச்சு ஒரு நல்ல வேலைக்குப் போனபின்னாடி பண்ணிக்கலாம்னு சொன்னதிலே என்ன தப்பு. அதுக்காக இப்படி நம்ம காம்பௌண்ட் பொண்ணோடயே இப்படி அசிங்கப்பட்டு. சேச்சே! மானமே போயிடுத்து. இப்போ அந்த நல்ல மனுஷன் சுப்புவுக்கு என்ன பதில் சொல்றது?''

''எல்லாம் பகவான் ஒரு நல்ல வழி காட்டுவார். நீங்க அமைதியா இருங்க'' என்று சமாதானப்படுத்தினாள்.

''என்னவோ போ, இன்னும் என்னென்ன கண்றாவிகளை எல்லாம் பாக்கணுமோ, எல்லாம் நாம பண்ண பாவம்'' என்று சொல்லிவிட்டு கோபத்துடன் அங்கிருந்து சென்றுவிட்டார்.

மொத்தத்தில் ஐயாரப்பன் காம்பௌண்டில் எல்லார் மனதிலும் என்னென்னவோ கேள்விகள் இருந்தாலும் எல்லோரும் ஏதும் நடக்காததுபோல் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

## 33

காவ்யா இரண்டு நாட்களாகவே ஏதோ பேயறைந்தவள் மாதிரி இருந்தாள். பார்த்தால் அந்த மாற்றம் தெளிவாகவே தெரிய, லக்ஷ்மி பெண்ணை "என்ன ஆச்சும்மா" என்று இந்த இரண்டு நாட்களில் பலதடவை கேட்டுவிட்டாள். "ஒண்ணுமில்லைம்மா" என்பதைத் தவிர வேறு பதில் ஏதும் வரவில்லை.

சீனிவாசனே கேட்டுவிட்டார் "என்ன ஆச்சு இந்த காவ்யாவிற்கு? ஏன் இப்படி குரங்கை சாகக் குடுத்த ஆண்டி போல் இருக்கிறாள்" என்று.

"அவளைக் கேட்டா ஒண்ணுமில்லைங்கறா. ஆனா என்னவோ சரியில்லைன்னு தோணுது. பார்க்கலாம்" என்றாள் லக்ஷ்மி. ஆனாலும் அவளால் சும்மா இருக்க முடியவில்லை. ரம்யாவைக் கேட்டாள். "இவளுக்கு என்னடி ஆச்சு? ஏதாவது பரிட்சையிலே பெயிலாயிட்டாளா? டீச்சர் யாராவது ரொம்ப திட்டிட்டாங்களா?"

"அம்மா, அதெல்லாம் இல்லே. அவ மேலே எல்லா லெக்சரருக்குமே நல்ல அபிப்ராயம்... அவ நன்னா படிக்கறவ கூட. அதுனாலே நீ சொன்ன இரண்டு காரணமும் இருக்க சான்ஸே இல்லை."



அப்ப வேறே என்னவாயிருக்கும்? ஒருவேளை இவளும் காதல், கீதல்ன்னு ஆரம்பிச்சுருக்காளா? அது தான் மூடு ஆஃபா?"

"ஐயோ அம்மா! அவ இன்னும் சின்னக் குழந்தைம்மா. அவளைப் போய் சந்தேகப் படறயே."

"ஆமாண்டி, நாமெல்லாம் குழந்தைன்னு நினைச்சுகிட்டு இருப்போம். கடைசிலே அதது துணிஞ்சு ஏதாவது செஞ்சி வைக்கும். அதான் பாக்கறோமே! அதாண்டி கவலையா இருக்கு" என்றாள் லக்ஷ்மி.

எந்த விஷயத்தையும் எத்தனை நாள் மூடுவது, மறைப்பது? நான்காம் நாள் காலை காவ்யா காலேஜுக்கே கிளம்பாமல் உட்கார்ந்திருந்தாள். "ஏண்டி, காலேஜ் இல்லையா இன்னிக்கு?" என்று லக்ஷ்மி கேட்டதற்கு பதிலே இல்லை.

"என்ன காவ்யா, அம்மா கேட்டுகிட்டே இருக்கா நீ பாட்டுக்கு பதில் பேசாம இருந்தா எப்படி? என்னடி ஆச்சு உனக்கு?" என்று கேட்டாள் ரம்யா.

அதற்கும் பதில் இல்லாமல் போகவே, ரம்யா, "ஏய், வாடி இங்கே. என்ன நினைச்சுகிட்டு இருக்கே நீ?" என்று குரலை உசத்தி, கையைப் பிடித்து அறை நடுவே இழுத்து நிறுத்தவும், காவ்யா அழ ஆரம்பித்துவிட்டாள்.

"என்னடி, என்ன நடந்தது? சொல்லித் தொலையேன், வயத்தைக் கலக்கறது" என்று பரபரத்தாள், லக்ஷ்மி.

"சொல்லு காவ்யா, ஏதானாலும் அதற்கு தீர்வு உண்டு. கவலைப்படாம சொல்லு. அம்மாவும் அக்காவும் தானே கேக்கறோம் என்ன நடந்தது?"

''நான் இனிமே காலேஜுக்குப் போகப் போறதில்லையம்மா'' என்று சொல்லி கேவினாள்.

''ஏன்?''

கேவிக் கேவி அழுதுகொண்டு காவ்யா சொன்ன விஷயம் இதுதான். ஒரு பத்து நாளாகவே ஒரு பையன் இவளைச் சுத்தி சுத்தி வரானாம். பின்னாடியே வந்து விசிலடிப்பானாம். கண்ட பாட்டையெல்லாம் பாடி என்னென்னவோ சைகைகள் எல்லாம் பண்ணுவானாம். மூன்று நாட்கள் முன் இவள் காலேஜிக்குப் போகும் போது சைக்கிளை வேகமாக உரசரமாதிரி வந்து சுத்தி சுத்தி பாடினானாம். கடைசியில் அவன் உரசினதும் இவள் தன் செருப்பைத் தூக்கி 'ஏண்டா, செருப்படி படணுமா?' என்று கேட்டுவிட்டாளாம். கேட்டுவிட்டு இவள் வேகமாக நடக்க அவன், ''ஏண்டி, எங்கிட்டேயா செருப்பைக் காண்பிக்கறே? இரு. இன்னிக்கு சாயந்திரமே உன்னைத் தூக்கிடறேண்டி'' என்று கத்தினானாம்.

சாயந்திரம் இவள் கிளாஸ் முடிந்தாலும் காலேஜ் முடியும் வரை காத்திருந்து எல்லோருடனும் வெளியே வந்ததால், வழியில் இன்னும் நான்கு ரவுடிகளுடன் காத்திருந்த அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லையாம். ஆனால் பல்லைக் கடித்துக் கொண்டு அடித் தொண்டையில், ''இன்னிக்கு தப்பிச்சுகிட்டோம்னு சந்தோஷப் பட்டுக்காதேடி. நாளைக்கு இதே வழியில் தானே வரணும்? அப்போ வெச்சுக்கறேன் உன்னை'' என்று சொல்லிவிட்டுத்தான் போனானாம்.

இத்தனையும் சொல்லிவிட்டு ஒவென்று அழுதாள் காவ்யா. ''அதனால் எனக்கு காலேஜ் போகவே பயமா இருக்கு'' என்றாள்.



''எம்மா, எங்கிட்டே சொல்லியிருக்கலாமில்லையா?'' என்று கேட்டாள் லக்ஷ்மி.

''எப்படிம்மா சொல்லுவேன்? நான் ஏதாவது சொன்னா, ''நீ என்ன பண்ணியோ இல்லாட்டா உன் பின்னாலே மட்டும் ஒருத்தன் வருவானாடி?'' ன்னு என்னைத் தான் திட்டுவே! இப்போ எனக்கு வெளியே போகவே பயமா இருக்கு. காலேஜ் வேண்டாம்மா. நான் பாட்டுக்கு கரஸ்பான்டென்ஸ் கோர்ஸ்லே படிக்கறேன்'' என்று சொல்லி தேம்பினாள்.

''ஏய் லூசு! உளறாதே. தன் வேலையை மட்டும் பாத்துகிட்டு போற பெண்களைக் கூடத்தான் ரவுடி பசங்க கலாட்டா பண்ணுவாங்கறது எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம் தான். இதுக்கு உன்னை யாராவது திட்டுவாங்களாடி?'' என்றாள் ரம்யா.

''நீ அடக்க ஒடுக்கமா அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பாக்காமே போனா உன்னை ஏன் அவன் துரத்தறான்னு அப்பா நிச்சயமா கேப்பார்மா. அதுதான் ரொம்ப பயமா இருக்கு'' என்று அம்மா மடியில் தலையை புதைத்துக் கொண்டாள்.

''போடி பைத்தியம்! ரங்கராஜன் அண்ணாகிட்டே ஒரு வார்த்தை சொன்னா போறாதா? ஒரே நாளில் உன் பிரச்னையைத் தீர்த்துடுவார். அந்த பசங்க துண்டைக் காணோம், துணியைக் காணோம்னு ஓடிட மாட்டாங்களா? பைத்தியம் மாதிரி உனக்கு நீயே வேதனைப் பட்டுண்டு இருந்திருக்கியே. போகட்டும் ஒரு இரண்டு மூணு நாளைக்கு நீ காலேஜ் போகவேண்டாம். எல்லாம்

சரியாகிவிடும் நீ போய் குளிச்சு, சாப்டுட்டு வீட்டிலேயே ஏதாவது படி'' என்றாள் லக்ஷ்மி.

இந்த ஆதரவு தந்தால்தான் குழந்தைகள் மனதில் ஒரு நம்பிக்கையும், தைரியமும் வரும் என்பதுதான் அவள் எண்ணம். ரம்யாவிற்கு அன்று லீவாதலால் அவளிடம் காவ்யாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு ரங்கராஜன் வீட்டிற்குப் போனாள். நல்ல வேளையாக ரங்கராஜன் வீட்டிலேயே இருந்தார். இவள் முகத்தில் இருந்த கலவரத்தைப் பார்த்ததுமே ஏதோ பிரச்சனை என்று தெரிந்து கொண்டார்.

''உட்காரும்மா, லக்ஷ்மி! என்ன ஆச்சு? ஏன் கலவரமா இருக்கே?'' என்று கேட்டார் ரங்கா. லக்ஷ்மி எல்லா விஷயத்தையும் விவரமாகச் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வந்த தேவிகா, ''என்ன டி.எஸ்.பி சார். உங்க ராஜ்ய பரிபாலனம் இவ்வளவுதானா? உங்கள் ராஜ்யத்தில் இப்படி ஒரு தவறு நடக்கலாமா?'' என்று ஜோக்கடித்தாள். அவளை ஒரு முறை முறைத்தார் ரங்கராஜன்'' என்னம்மா. இதுக்கா இப்படி பதட்டப்படறே நீ? இது ரொம்ப சின்ன விஷயம்மா. சரி எங்கிட்டே விஷயத்தைச் சொல்லிட்டே, இல்லே! இனி நான் பாத்துக்கறேன். நீ போய் காவ்யாவை நான் வரச் சொன்னேன்னு சொல்லிட்டு நீ நிம்மதியா இரு'' என்றார்.

''அண்ணா, அவ இப்போ வருவாள்னு எனக்குத் தோணல்லே. ரொம்ப அழுதுண்டு இருக்கா'' என்றாள் லக்ஷ்மி.

''சரி, மத்தியானம் நான் சாப்பிட வரும்போது வரச் சொல்லு. ஒண்ணும் பயப்பட வேண்டாம்னு சொல்லு'' என்றார் ரங்கா.



இப்படி ஒரு அண்ணா இருக்கையில் என்ன குறை எனக்கு? என்று நினைத்த லக்ஷ்மி அதை வாய்விட்டும் சொல்லி ரங்கராஜனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தாள். மத்தியானம் காவ்யா வந்ததும் அவள் அடுத்தநாள் என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் விவரமாகக் கூறிய ரங்கராஜன், ''இதோ பார் காவ்யா! பயப்படாதே. நானிருக்கும் போது உனக்கு என்ன பயம்? உன்னை யாரும் ஒன்றும் பண்ணமுடியாது?'' என்று தைரியம் சொல்லி அனுப்பி வைத்தார்.

அவள் போனபிறகு தேவிகாவுடன் சற்றுப் பேசிக் கொண்டிருந்தார் அவர் பெண் குழந்தையைவிட காவ்யா கொஞ்சம் தானே பெரியவள், ''வரவர இந்த வயதுப் பிள்ளைகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. எப்படிப் பார்த்துண்டாலும் பிராணனை வாங்குறாங்க. குந்தவையையும் கவனிச்சுக்கோ, பாவம். இந்த பொண்ணுங்களெல்லாம் எங்கே வீட்டுக்குத் தெரிஞ்சால் நாம திட்டுவோமோன்னு பயப்படறாங்க அதனால் தான் வீட்டிலே உடனே சொல்வதில்லை. சொன்னால் அவங்களை நாம நம்புவோம். துணையா இருப்போம்னு அவங்களுக்குப் புரிய வைக்கணும்.''

''ஆமாங்க, ஆணோ, பெண்ணோ குழந்தைகளுக்கு அப்பா அம்மா தோழர்களாக இருப்பது ரொம்ப அவசியம் தான். நம்ம ராஜேந்திரன் விஷயத்தில் கூட நாம ஏமாறத் தெரிந்தோம். என்னவோ எல்லாருமா சேர்ந்து மீட்டுக் கொடுத்துட்டாங்க'' என்றாள் தேவிகா பெருமூச்சுடன்.

''இப்போதெல்லாம் அவன் ரொம்ப நல்ல பையனாகி விட்டான். இல்லையா? ஆனாலும் கவனமா இரு'' என்றார் ரங்கா.

''இல்லை இல்லை. இனிமே அவனைப் பத்தி பயமே இல்லை. முழுசா மாறிவிட்டான்'' என்று தேவிகா உத்திரவாதம் கொடுக்க, ரங்கா ஆபீசுக்குக் கிளம்பினார்.

## 34

அன்றைக்கு மாலை ஐயாரப்பன் வீட்டு அனைத்து ஆண்களுமே கூடியிருந்தார்கள் விவேக் தவிர. சீனிவாசன் பேச ஆரம்பித்தார்.

''என்ன வரதன் சார்! என்ன பண்ணப் போறீங்க மேற்கொண்டு?''

''எதற்கு மேற்கொண்டு? புரியல்லயே'' என்றார் வரதன்.

''பிள்ளைக்குத் தாத்தான்னா உடனே முறுக்கிக்கக் கூடாது. என்ன யோசிச்சிருக்கீங்க விவேக் விஷயத்தைப் பத்தி'' என்று கேட்டார் சீனிவாசன்.

''சிறு பிள்ளைத்தனமா நடந்துண்டுட்டான், இல்லையா?'' என்று ராமனாதன் சொல்ல அதற்கு ரங்கராஜன். ''ஏய் சிறுபிள்ளைங்கதாம்பா காதலிப்பாங்க. பின்னே நீயும் நானுமா காதலிக்க முடியும்? சொல்லு'' என்றார். தன் ஜோக்கிற்கு தானே சிரித்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தால் எல்லோரும் சீரியஸாகத்தான் இருந்தனரே ஒழிய யாரும் சிரிக்கிறாப்போல் இல்லை.

வரதனுக்கு அன்று காலை தன் வீட்டில் நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்தது. காலை அப்பா, அம்மா,



அண்ணா, அண்ணி, தங்கை, அண்ணா பையன் எல்லோரும் வெளியே போகக் காத்திருந்தான் போலிருக்கிறது. விவேக், பாட்டி தோசை வார்த்துப் போட மேடையிலேயே ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சட்னி, சாம்பார் என்று தொட்டுக் கொண்டு வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தான்.'' என்ன இருந்தாலும் என் பட்டுப் பாட்டி வார்க்கும் தோசைக்கு ஈடே கிடையாது. இதே தோசை மாவை யார் கையில் கொடுத்தாலும் கெடுத்துடுவாங்க'' என்றான் அனுபவித்து சாப்பிட்டுக் கொண்டே.

''என்ன, என் பேராண்டிக்கு என்ன வேணும்? ரொம்பவே ஐஸ் வெச்சாறது?'' என்றாள் பரிமளா.

''என்ன பாட்டி, நிஜமா, ஆத்மார்த்தமா சொல்றேன். ஐஸுங்கறேயே'' என்றான் விவேக். தொடர்ந்து. ''என் பாட்டி, நான் உன் செல்ல பேரன்னுதான் பேரே ஒழிய நீ என் விஷயத்தில் ஏதாவது அக்கறை எடுத்துண்டியா, சொல்லு?'' என்றான்.

அப்போது அங்கு வந்த வரதன் ''நீயே தான் ஓவரா எடுத்துண்டு இரண்டுங்கெட்டானா ஏதேதோ பண்ணி வெச்சருக்கியே'' என்றார்.

''போ தாத்தா! நீ ஒரு நாள் கூட என்னை சப்போர்ட் பண்ண மாட்டே எனக்குத் தெரியும்.''

''ஏண்டா மடையா! தானே எல்லாம் நடக்குங்கற போது உனக்கு என்ன அவசரம்?''

''ஆமாம், உனக்கு 20 வயசிலேயே கல்யாணம் ஆயிடுத்து. உனக்கு என் அவசரம் என்ன புரியும்?'' என்று பல்லிடுக்கில் முணமுணத்தான் விவேக்.

''ஏண்டா மொணமொணங்கறே? உங்கப்பா இன்னும் சகஜ நிலைமைக்கே வரல்லே. அவன்கிட்டே யார் பேசறது?'' என்றார் வரதன்.

''ஆமாண்டா. நீ இந்த அசட்டுத்தனம் பண்ணாமே இருந்திருந்தால் பேச எங்களுக்கு வாயிருக்கும். இப்போ வாயைத் திறக்கவே பயமா இருக்குடாப்பா'' என்றாள் பரிமளா.

''ஆமாம், நிஜமாகத்தான் கேக்கறேன். உனக்கு இப்போ கல்யாணத்துக்கு என்ன அவரம்?'' என்றார் வரதன்.

''நீங்க பேசாமே இருங்க! நம்ம கல்யாணத்தும் போது உங்களுக்கு 21வயசுதான். எனக்கு 16 வயசுதான். அதுக்குள்ளேயே நீங்க என் பின்னாடி எப்படி சுத்தியிருப்பீங்க?''

''பாட்டி, பாட்டி, சொல்லு பாட்டி! இவர் என்ன பண்ணினார். சொல்லு பாட்டி'' என்றான் விவேக்.

''ஏய், சும்மா இரு'' என்றார் வரதன்.

''ஆமா, நான் எங்கே போனாலும் பின்னாலேயே வந்து நிற்பார் உங்க தாத்தா. ஐய்யங்கடைத் தெருவா, காமாட்சி அம்மன் கோவிலா, சிவகங்கை குளத்துக்கு தண்ணி எடுக்கப் போனமா, எங்கே போனாலும் சரி. அத்தை பொண்ணு தானேன்னு சின்னவயசிலிருந்தே தன் பெண்டாட்டின்னு நினைப்பு. வீட்டில் பார்த்துட்டு இனிமே தாக்குபிடிக்க முடியாதுன்னுட்டு தான் என் ஸ்கூல் படிப்பை கூட நிறுத்திட்டு கல்யாணத்தை பண்ணி வெச்சுட்டாங்க. அப்படி படுத்தியிருக்கார் உங்க தாத்தா'' என்று பாதி வெட்கமும், பாதி பெருமையுமாக சொன்னாள் பரிமளா.



''ஏய், வந்து.... நான் சின்ன வயசிலிருந்தே இயற்கையை ரசிக்கறவன். அதுக்காக நான் பல இடங்களுக்குப் போவேன். நான் போன இடத்திலெல்லாம் இவளும் இருந்தா. அதுக்காக நான் இவ பின்னாடியே சுத்தினேன்னு அர்த்தமா? இவ நான் போற இடத்துக்கெல்லாம் வந்தான்னு ஏன் எடுத்துக்கக்கூடாது?'' என்று சிரிக்காமல் கேட்டார் வரதன்.

''என்ன கிழவனாரே, எல்லாத்தையும் எடுத்துவிடவா'' என்று கேட்டாள் பரிமளா, அவளும் சிரிக்காமல்.

ஹோன்னு சிரித்தான் விவேக். ''இப்போ இரண்டு பேரும் மாட்டிகிட்டீங்களா? என் ஆசையை நிறைவேத்தறது உங்க கடமை. அதுவும் சீக்கிரமேன்னு புரிஞ்சிகிட்டீங்களா? ஆக வேண்டியதை சட்டுபுட்டுன்னு பாருங்க பாட்டி, ப்ளீஸ்'' என்றான் விவேக்.

இத்தனையும் நினைவுக்கு வர சிரித்துக் கொண்டார் வரதன். ''என்ன வரதன் ஸார். பதில் சொல்லாமே இத்தனை நாழி யோசனை பண்ணிட்டு, நீங்களே சிரிச்சுகிறீங்க'' என்றான் ராமனாதன்.

''அவருதும் ஒரு வேளை காதல் கல்யாணமா இருந்திருக்கும். அதுதான் மலரும் நினைவுகள்'' என்றார் ரங்கராஜன்.

''அட போங்கப்பா! இப்போ என்ன செய்யலாம்னு யோசிப்பீங்களா, அதை விட்டுட்டு, ஏதேதோ பேசிக்கிட்டு இருக்கீங்களே'' என்று கடுப்படித்தார் சீனிவாசன்.

''நான் என்ன சொல்லட்டும்? என் பிள்ளைதான் விவேக்கைப் பெத்தவன். சுப்பு, பெண்ணைப் பெத்தவன், அவன் சொல்லட்டும்'' என்றார் வரதன்.

''என் பெண் பண்ணினது பெரிய தப்பு. நான் அதுக்கு முதல்லே கணேசன் கிட்டேயும், வரதன் சார்கிட்டேயும் மன்னிப்பு கேட்டுக்கறேன்.''

''சரி. அதுதான் ஆயிடுத்தே. இப்போ நடக்க வேண்டியதைப் பார்ப்போம்'' என்றார் ரங்கா.

''கணேசன் அண்ணா, உங்களுக்கு அவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்க இஷ்டம்தானே. அண்ணி என்ன சொல்றாங்க?'' என்று கேட்டான் ராமனாதன்.

''எனக்கென்னப்பா, சுப்புவைப் பிடிக்காதா. இல்லே அந்த பெண் சுபாஷிணியைத்தான் பிடிக்காதா? இப்படி நம்மளைக் கேக்காமே ஒரு அவப்பெயர் ஏற்படுத்திட்டாங்களேன்னுதான் கோபம்'' என்றார் கணேசன். ''என் பையன் பண்ணினதும் பெரிய தப்பு தான். நானும் சாரி மாமாகிட்டேயும் சுப்பு கிட்டேயும் மன்னிப்பு கேட்டுக்கறேன்.''

அந்த சமயத்தில் அங்கு வந்த ப்ரதீப் ''ஏதாவது உதவி செய்யணுமா. அங்கிள்'' ன்னு சரியான சமயத்தில் கேட்க'' போயி எல்லா ஆன்ட்டிகளையும் கூட்டிகிட்டு வாயேன். கண்ணா'' என்றார்.

ஓட்டமாக ஓடினான் ப்ரதீப். எல்லோரையும் கையோடு அழைத்து வந்துவிட்டான்.

''சாமிநாதன் அங்கிள், நீங்க என்ன நினைக்கறீங்க? சுப்புவோட அபிப்ராயம் என்ன? நளினி என்ன



சொல்றா?'' என்று சரமாரியாகக் கேள்வி கேட்டார் சீனிவாசன்.

''எப்போ இஷ்டப் பட்டுட்டாங்களோ இனிமே அவங்களைப் பிரிச்சு இன்னும் யாரோடயாவது கல்யாணம் பண்ணி வெச்சு நாம சாதிக்கப் போறது என்ன? நாம மேலே ப்ரொசீட் பண்ணலாம்னுதான் என்னோட அபிப்ராயம்'' என்ற சாமிநாதன் தன் பிள்ளை சுப்புவை ஒரு பார்வை பார்த்தார். அப்பா, பிள்ளை இருவர் மனதிலுமே ஹைதராபாதிலுள்ள சுப்புவின் அக்கா பிள்ளை மனோஜிற்கு சுபாவைக் கொடுக்கும் எண்ணமிருந்தது. தற்போது நிலைமை மாறிவிட்டதால் அந்த எண்ணத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டியதாகிவிட்டது.

''எல்லாம் சரி, நாம பார்த்து பண்ணி வெக்கச்சே ஜாதகம் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டார் சுப்பு.

''அதெல்லாம் இனிமே வேண்டாம்பா. இத்தனை தூரம் அதுகள் ஆசைப்படவிட்டு, இப்போ ஜாதகம் பார்க்கறேன்னு யாராவது எதையாவது சொன்னா குழந்தைகள் தாங்க மாட்டாங்க'' என்றாள் பரிமளா.

''எல்லாம் சரி. ஆனா எனக்கு ஒரு சந்தேகம் இருக்கு. எப்படிச் சொல்றதுன்னுதான் யோசிக்கறேன்'' என்றாள் நளினி.

''என்ன சொல்லும்மா. பெண்ணைப் பெத்தவ நீ. உன் சந்தேகம் என்னவாயிருந்தாலும் இப்போ விசாரித்த தெரிஞ்சுக்கோம்மா. அதிலே ஒண்ணும் தப்பில்லை' என்றாள் சுந்தரா.

''இல்லே, இவா இரண்டுபேருமா கல்யாணம் பண்ணிக்கணும்னு புறப்பட்டுப் போய் இப்படி ஆக்ஸி

டெண்ட் ஆயிடுத்தே. இதை என்னன்னு எடுத்துக்கறது? பயமா இருக்கு.'' என்றாள் நளினி.

''சீச்சீ அப்படியெல்லாம் நினைச்சுக்காதேம்மா! ஏதோ இந்த வரை ஆக்ஸிடெண்ட் ஆனதுக்கு இரண்டு பேருக்குமே பெரிய அடி எதுவும் படாமே இதோ சரியாவும் ஆயிடுத்தே! தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போச்சுன்னு நினைச்சுக்கோ'' என்றாள் பொன்னியத்தை.

'தற்செயலாக நளினியைப் பார்த்த ஜயந்தி அவள் ஏதோ தீவிரமாக சிந்திப்பதைக் கண்டு அவள் மனதில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொண்டதைப் போல் அவளைச் சற்று தனியே அழைத்தாள்.

''என்ன ஜயந்தி, எதற்குக் கூப்பிட்டே?'' என்று கேட்டாள் நளினி.

''உனக்கு இப்போது வேறு ஒரு சந்தேகம் வந்திருக்குன்னு எனக்குத் தோணறது அது நியாயமான சந்தேகம் தான். விவேக்கோட அப்பா டாக்டரிடம் வெளிப்படையாகவே கேட்டுத் தெரிஞ்சுண்டுட்டார். விவேக்கிற்கு இந்த விபத்தினாலே எந்த விதமான ப்ராப்ளமும் இல்லையாம். அவன் குடும்ப வாழ்க்கைக்கு 100% தகுதியுள்ளவனாக இருக்கிறானாம். இப்போது திருப்தி தானே?'' என்றாள் ஜயந்தி.

கண்களில் நீருடன் ஜயந்தியைத் தழுவிக்கொண்டாள் நளினி. பின் இருவருமாக திரும்பிவந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

''சாமிகிட்டே பூ கட்டி வேணா பார்க்கலாமா?'' என்று கேட்டார் சுப்பு.

''என்னத்துக்கு. அதெல்லாம் வேண்டாம். இப்போ அதிலே வேறே ஏதாவது வந்துட்டா எந்த வழியும் போக



முடியாமே திண்டாடணும். வேண்டவே வேண்டாம்'' என்று தீர்மானமாகவே சொன்னாள் பரிமளா. இரண்டும் ஒண்ணு மேலே ஒண்ணு பைத்தியமா இருக்குங்க. காலா காலத்தில் கல்யாணத்தைப் பண்ணிவெச்சு கண்ணாலே பாத்து சந்தோஷப்படுவோமே'' என்றாள்.

''சரி, இப்போ முக்கியமான பாயிண்ட்டுக்கு வருவோம். கணேசா, ஜயந்தி உங்க இரண்டு பேரையும் கேக்கறேன். உங்களுக்கு சுபாஷிணியை மருமகளாக ஏத்துக்க சம்மதமா. இதை நீங்க உடனே சொல்ல வேண்டாம். உங்களுக்குள்ளே நன்னா கலந்தாலோசித்து பதில் சொல்லுங்க'' என்றார் சீனிவாசன்.

''எங்களுக்கு பூரண சம்மதம் தான்'' என்று கணேசன். ஜயந்தி தம்பதியரும், சுப்பு நளினி தம்பதியரும் ஒரே குரலில் சொன்னார்கள். இதற்கு பெரிய கைதட்டல் கிடைத்தது.

சுப்பு சொன்னார். ''நான் முறைப்படி வீட்டிற்கு வந்து வேண்டுமானாலும் கேட்கிறேன். அதுதான் சரி இல்லையா?''

கணேசன் சுப்புவின் அருகில் போய் அவரை தன்னோடு அணைத்துக் கொண்டார். ''என்ன சம்பந்தி சார். ரொம்பவே பார்மாலிடி எல்லாம் பாக்கறீங்க. அதெல்லாம் வேணாம் ஸார்! நாம சம்பந்தியாவதுக்கு முன்னாடியிருந்தே திக் பிரண்ட்ஸ் இல்லையா?'' என்று தட்டிக் கொடுத்தார்.

''ரொம்ப நன்றி, கணேசா! ஆனாலும் நாலுபேர் என்ன சொல்லுவாங்க, சொல்லு? ஒரு பணக்கார மாப்பிள்ளையை சும்மா தட்டிண்டு போயிட்டான் சுப்புன்னு ஒரு பேச்சு வரும் இல்லையா?''

''பேஷ், பேஷ்! ரொம்ப பிரமாதமாக யோசிக்கற யாக்கும். அடேயப்பா!''

சுப்பு சீரியஸாக ''நிஜமாகத்தான் சொல்றேன் கணேசா! 10 நாள் முன்னாடி கூட என் பெண்கள் யாருக்கும் கல்யாணம் பண்ணனும்ங்கற யோசனை கூட வரல்லே. இப்போ திடீர்னு கல்யாணம்னு நாள் காசு பணத்துக்கு எப்படி ஏற்பாடு செய்வேன். இதெல் லாம் ஒரே குழப்பமாக இருக்கு தவிர எனக்கு சொந்தக் காரங்களும் பெரிசா யாரும் கிடையாது. என்ன செய்யப் போறேனோ, பயமா இருக்கு'' என்றார்.

''ஸ்டாப், ஸ்டாப்! ஏய் சுப்பு என்னடா இது? பிள்ளையைப் பெத்தவன் உன்னை பணம் காசு கேக்கல்லே அப்புறம் என்ன கவலை? அப்புறமா என்ன சொன்னே? மனுஷங்க இல்லையா? சாமி மாமா நீங்கதானே பக்கத் திலே உட்கார்ந்திருக்கீங்க. நல்லா இரண்டு சாத்து சாத் துங்களேன். நாங்களெல்லாம் உன் மனுஷாள தெரியல்லையா'' என்று படபடத்தார் சீனிவாசன்.

சுப்புவின் கண்களில் நீர் துளித்தது. ''இல்லை, இல்லை நான் அந்த அர்த்தத்தில் சொல்லல்லே. எனக்கு உங்களையெல்லாம் விட்டா யார் இருக்கா? நீங்கதான் என் மனுஷா. என் பலம். என் சொத்து எல்லாமே.''

''சரி, சரி! சுப்பு மேலே ஆக வேண்டியதைப் பாரு தஞ்சாவூருக்கு லெட்டர் போட்டு மேல வீதி வெங்கட ராம சாஸ்திரிகள் கிட்டே ஒரு நல்ல நாளா பாக்கச் சொல்லு'' என்றார் வரதன்.

''கல்யாணத்தை வேணுமானா அவளோட கடைசி ஸெமஸ்டர் முடிஞ்சதும் வெச்சுக்கலாமா? இன்னும்



மூணு, நாலு மாசத்திலே முடிஞ்சுடும்'' என்றாள் நளினி.

''அப்படியே செய்யலாம். இப்போ நிச்சயதார்த்தம் மாத்திரம் பண்ணிடலாம்'' என்று சொன்ன ஜயந்தி, ''கல்யாணம் ஆயிட்டா என் பிள்ளை அவளை எங்கே படிக்க விடப்போறான்?'' என்றாள்.

எல்லோரும் சிரித்தார்கள். எல்லா விஷயத்தையும் தன் வீட்டு வாசலிலேயே நின்று கேட்டுக் கொண்டிருந்த ரம்யா சுபாவிடம் விஷயம் சொல்ல ஓடினாள். இவர்கள் எல்லோரும் கூடி தன் திருமணத்தைப் பற்றிதான் பேசு கிறார்கள் என்று தெரிந்ததுமே, சுபாஷிணி தவித்துப் போய்விட்டாள். முடிவு நல்ல படியாக இருக்க வேண் டுமே என்று எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள். சற்று நேரம் கழித்து நிலை கொள்ளாமல் வினோதினியை அங்கு என்ன நடக்கிறது என்று தெரிந்து வர அனுப்பினாள். ஆனால் வினோ வந்தவுடன் நளினி அவளை ஒரு பார்வை பார்க்கவும் பயந்துபோய் அவள் வாயைத் திறக்காமல் திரும்பி விட்டாள். 'பெரிய வர்கள் பேசும் இடத்தில் உனக்கென்னடி வேலை' என்று அந்த பார்வைக்கு அர்த்தம் என்பது அவளுக்குத் தெரியாதா என்ன?

வினோ உள்ளே வந்ததும், ''என்னடி என்ன நடக்கிறது அங்கே?'' என்று ஆவலுடன் வினவினாள் சுபா.

''அக்கா, நான் அங்கே போனதும் அம்மா என்னை ஒரு பார்வை பார்த்தாள் எனக்கு பயமா போய்விட்டது. அதனாலே உடனே திரும்பிவிட்டேன். ஆனா உங்க இரண்டு பேர் பெயரும்தான் அடிபடுது அங்கே'' என்றாள் வினோ.

சுபா ரொம்ப டென்ஷனாகிவிட்டாள். ஒரு மணி நேரம் முள்மேல் நிற்பது போல் தவித்துவிட்டாள். ரம்யா உள்ளே வந்து கதவைச் சாத்திக் கொண்டு தன் முன்னே நிற்பதைக் கண்டு மிரண்டுபோனாள். ''என்னடி, என்ன ஆச்சு'' என்று கேட்டாள்.

அவளையே உற்றுப் பார்த்த ரம்யா ''ம் என்னன்னு சொல்றது'' என்றாள் சிரிக்காமல்.

அழுகை முட்டிக் கொண்டு வர சுபா, ''என்னடி சொல்றே'' என்று கேட்டாள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டு சுபாவைக் கட்டிக் கொண்டவள் அவள் இரண்டு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள். ''ரொம்பவே பயந்து போய்விட்டாயா, காவேரி வீட்டு மருமகளே! நீ ஜெயிச்சுட்டே! உங்க கல்யாணத்துக்கு எல்லோரும் முழு மனதோடு சம்மதிச்சுட்டாங்க'' என்றாள் ரம்யா.

சுபாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தாள். ரம்யாவைக் கட்டிக் கொண்டவள் அவள் இரண்டு கன்னத்திலும் மாறி, மாறி முத்தம் கொடுத்தாள். ''ஏய் நான் ரம்யா, விவேக் இல்லை'' என்றாள் ரம்யா.

''ரொம்ப தேங்க்ஸ்டி ரம்யா! நான் இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கேன். நானே ஒரு ராஜகுமாரியா இருந்தா 'இந்தா பிடி'ன்னு என் நகைகளை எல்லாம் கழட்டிக் கொடுத்திருப்பேன்' என்றாள் சுபா. பின்னாடியே வந்த வினோ ''வாழ்த்துக்கள், அக்கா'' என்றாள். அவளையும் அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள் சுபா.



நளினி உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்ட சுபா ஓடிப் போய் அவளைக் கட்டிக் கொண்டாள். ''தேங்க்ஸ்மா ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்'' என்றவள் ''என்னை ஆசீர்வாதம் செய்யம்மா'' என்று அவள் காலில் விழ்ந்து வணங்கினாள்.

''நன்னா இரு'' என்று வாழ்த்தியவள் ''இப்போ வர வாரம் உன் நிச்சயதார்த்தம் நடத்தப் போகிறோம். கல்யாணம் உன் எக்ஸாம் எல்லாம் முடிந்தபிறகுதான். அதுவரை விவேக்கோட ஊர் சுத்தாமல் சமர்த்தாகப் படி'' என்றாள் பின்னாலேயே வந்த சுப்புவும் அதையே சொல்லி அவளை வாழ்த்தினார்.

அன்று சுப்பு வீட்டில் மைசூர்பாக் செய்து எல்லோர் வீட்டிற்கும் கொண்டு போய்க் கொடுத்தனர் நளினியும், வினோதினியும்.

## 35

லக்ஷ்மி ரங்கராஜனுடன் பேசிய பிறகு இரண்டு நாள் காலேஜிற்குப் போகாத காவ்யா மூன்றாம் நாள் காலை எழுந்து சுறுசுறுப்பாக தயாரானாள்.

''என்னடி, காலேஜிக்கு கிளம்பிட்டியா? அப்பாவை வேணுமானா கூட வந்து பஸ் ஏத்திவிடச் சொல்லட்டுமா?'' என்றாள் லக்ஷ்மி.

''வேண்டாம்மா, ரங்கா அங்கிள் பாத்துக்கறதாச் சொல்லியிருக்கார்'' என்றாள் காவ்யா.

''உனக்கு தைரியம் இருந்தால் இன்னிக்குப் போ. இல்லைன்னா இன்னும் இரண்டு நாள் லீவு வேணா போடேன்.''

''இல்லம்மா அங்கிள் இன்னிக்குப் போகச் சொல்லியிருக்கார்மா'' என்று சொல்லிவிட்டு படி இறங்கினாள்.

''பத்திரமா போயிட்டுவாடி. திரும்ப நீ வீடு வந்து சேர்ரவரைக்கும் எனக்கு இருப்பாகவே இருக்காது'' என்றாள் லக்ஷ்மி.

''ஏம்மா, அங்கிள் அவளை கஷ்டப்பட்டு தைரியப் படுத்தியிருக்கார், நீ என்னவோ திரும்ப பயமுறுத்தறியே! ஒண்ணும் ஆகாதும்மா'' என்றாள் ரம்யா.

ஆனாலும் லக்ஷ்மியும் எல்லா அம்மாக்களும் சொல்ல வேண்டியதும், சில அம்மாக்கள் இந்தக் காலத்தில் சொல்லாமல் விடுவதுமான அந்த வார்த்தைகளைச் சொல்லித்தான் அனுப்பினாள். பெண்ணை ''துப்பட்டாவை சரியாகப் பிரித்துப் போட்டு பின் பண்ணிக் கொண்டு போம்மா'' என்று.

''சரிம்மா. நான் ஜாக்கிரதையா போயிட்டு வரேன். நீ கவலைப் படாதே'' என்று சொல்லிவிட்டுப் படி இறங்கினாள். காவ்யா.

தெரு முனையில் இன்னொரு பெண்ணும் அவளுடன் சேர்ந்து கொண்டாள். நேர்த்தியாக உடை அணிந்திருந்த அந்தப் பெண் இவளை விட சற்று பெரியவளாக இருந்தாள்.

பஸ் ஸ்டாண்ட்டுக்கு கொஞ்ச தொலைவுக்குமுன் அந்த ரவுடிகள் தென்பட்டார்கள். அதுவரை தைரியமாக



இருந்த காவ்யாவிற்கு வேர்த்துக் கொட்ட ஆரம்பித்து விட்டது. கால்கள் பின்ன மெதுவாக நடந்தாள்.

தூரத்தில் இவள் வருவதை அவர்கள் பார்த்துவிட்டனர். இவள் அவர்கள் அருகில் வரும் முன்பே அந்த ரோட்சைட் ரோமியோக்கள் இவள் எதிரே வந்து, ஏதோ ஒரு மட்டமான பாட்டை, மட்டரகமான சேஷ்டைகளுடன் பாட ஆரம்பித்து விட்டார்கள்.

''என் கண்ணு! இரண்டு நாளா உன்னைப் பார்க்கலியா. சோறே இறங்கல்லே'' என்றான் ஒருவன்.

''இன்னிக்கு இரண்டு கிளியா வந்திருக்குடா, புதுசும் ஜோர்தான், இல்லே?'' என்றான் இன்னொருவன்.

''டேய், இந்த பொண்ணுங்க இடுப்பு வெண்ணையிலே செஞ்சிருப்பாங்களா, இல்லே, வெண்ணையை இடுப்பிலே பூசியிருப்பாங்களா, சொல்லு பார்க்கலாம்?'' என்றான் ஒருவன்.

''தொட்டுப் பார்த்தா தெரியப் போவுது. நம்மள்ளே யார் முதல்லே தொடப் போறோம்'' என்று முதலில் பேசியவன் கிட்டே வந்து கையை கிட்டே கொண்டு வரும்போது அவன் பின்னந்தலையில் படீரென்று இடிமாதிரி ஒரு கை இறங்கியது. உபயம் காவ்யாவுடன் கூட நடந்து வந்து கொண்டிருந்த பெண் தான்.

''ஏண்டா, உடம்பு என்னமா இருக்கு?'' என்று அவள் கேட்கும்போதே அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டு, ''என்னடி, என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே? சொர்ணக்காவா நீ? ஆம்பிளைங்க மேலே கை நீட்டறே? இன்னிக்கு நீதாண்டி எங்களுக்கு விருந்து'' என்று கிட்ட வர, சரியாக அந்த நேரம் அங்கு வந்து நின்றது போலீஸ்

ஜீப். ஜீப்பிலிருந்து ரங்கராஜன் இறங்கினார். கூடவே வந்த இரண்டு இன்ஸ்பெக்டர்களும், இரண்டு கான்ஸ்டபிள்களும் சேர்ந்து ஓட முயன்ற அந்த ரவுடிக் கும்பலை சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

''ஏண்டா, இன்னிக்கு இவ தான் உங்களுக்கு விருந்தா?'' என்று கேட்டு 'பளார்' என்று ஒருவன் கன்னத்தில் அறைந்தார் ரங்கா.

''சார் தெரியாம பண்ணிட்டோம். எங்களை விட்டுடுங்க சார்?'' என்று கெஞ்சினார்கள்.

''ஏண்டா, பொறுக்கி நாயே! இடுப்பைத் தொட்டா வெண்ணை மாதிரி இருக்குமா? வாங்க ஸ்டேஷனுக்கு. உங்களுக்கு இடுப்பே இல்லாமல் பண்ணிடறேன். போலீஸ் அடி எப்படி இருக்கும்னு உங்களுக்கும் தெரியணுமில்லே. ஏறுங்கடா ஜீப்பிலே'' என்று உறுமினார் ரங்கராஜன்.

''இன்ஸ்பெக்டர், இந்த நாய்களைத் தனித்தனியே போட்டோ எடுத்து ''பொம்பளைப் பொறுக்கிங்க''ன்னு தலைப்புக் கொடுத்து இவங்களைப் பத்தி எல்லா விபரங்களோடவும் நெட்லே போட்டுடுங்க'' என்றார் தொடர்ந்து.

''மிக்க நன்றி மேடம்!'' என்று கை கூப்பி தன்னுடன் வந்த பெண்ணை வணங்கினாள் காவ்யா ''அங்கிள், நீங்களே வந்துட்டீங்களே! ரொம்ப தேங்க்ஸ்'' என்றாள், ரங்கராஜனைப் பார்த்து.

''போம்மா, நீ காலேஜுக்குப் போ! இனிமே யாரும் உன் வம்புக்கு வரமாட்டாங்க. உன்கிட்டேன்னு இல்லே. இந்த ஏரியாவிலேயே இனிமே இந்த மாதிரி தொந்தரவு



இருக்காது'' என்று காவ்யாவிடம் சொல்லிவிட்டு. ''இன்ஸ்பெக்டர், நீங்க இவளை காலேஜ் வரை போய் கொண்டு விட்டு வந்துடுங்க'' என்று அந்த பெண் இன்ஸ்பெக்டரிடம் சொல்லிவிட்டு ஜீப்பில் ஏறிக் கொண்டார்.

சாயந்திரம் அவருக்கு லக்ஷ்மி, சீனிவாசன், ரம்யா என்று ஒவ்வொருவராக வந்து நன்றி சொன்னார்கள்.

''இதிலே என்னம்மா இருக்கு. இது என் வேலை தானே! முதல் நாளே என்னிடம் சொல்லியிருந்தால் மனக் கஷ்டம் மிஞ்சியிருக்கும் உங்களுக்கு'' என்றார் ரங்கா.

## 36

பொன்னி இப்போதெல்லாம் ரொம்ப வெளியே வருவதில்லை. கல்யாணிக்கு 6 மாதம் ஆகிவிட்டது. டாக்டர் பயம் ஒன்றுமே இல்லை. தினம் ஒரு 10 - 15 நிமிடங்கள் நடக்கட்டும், சாதாரணமான வேலைகளைச் செய்யட்டும், கடினமான வேலைகள் மட்டும் செய்ய வேண்டாம். தினம் ஒரு சூப், கீரை இதெல்லாம் கண்டிப்பாக சாப்பிடணும், அதே சமயத்தில் ரொம்பவும் வெயிட் ஏறிவிடாமல் பார்த்துக் கொள்ளணும் என்றெல்லாம் சொல்லியிருந்தாள். எனவே பொன்னி பார்த்துப் பார்த்து செய்தாள். அருகில் உள்ள கோவிலுக்கு தினம் ஒருவர் முறை வைத்துக் கொண்டு அவளைக் கூட்டிப் போனார்கள். ராமனாதன் சீக்கிரம் வரும் வேளைகளில்

ஏதாவது நல்ல பாட்டுக்கள், ஸ்லோகங்கள் கேட்டபடி மொட்டை மாடியில் உலாவுவார்கள்.

ஒரு நாள் காலையில் பரிமளா சுடச் சுட ஆப்பமும் தேங்காய்ப் பாலும் கொண்டு வந்து கொடுத்தாள். ''ரொம்பக் கவலையாக இருக்கு, பரிமளா! கல்யாணிக்கு வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் பண்ணனும். நான் எந்த சாமான் வாங்கவும் இதுவரை போனதில்லை. அவளுக்கு ஒரு ஜோடி தங்க வளையல், பட்டுப் புடவை வாங்கணும். வருபவர்களுக்கெல்லாம் வெச்சுக் கொடுக்க ரவிக்கைத் துணி வாங்கணும். ராமனாதனுக்குத் தெரியாது. கல்யாணியால் அலைய முடியாது. என்ன செய்யறதுன்னு தெரியவில்லை. எனக்குக் கவலையாக இருக்கு, பரிமளா'' என்றாள்.

பரிமளா சிரித்தாள் ''இதற்கென்ன கவலை? என் நாட்டுப் பெண், சுந்தரா நாட்டுப்பெண் இன்னும் லக்ஷ்மி, நளினி எல்லாரும் இல்லையா? நாங்கள் எல்லாரும் பாத்துக்கறோம். நீ உங்க வீட்டு வழக்கம் என்னென்ன என்று சொல்லு. ஜமாய்ச்சுடலாம்.''

''ஆமாம், அவளுக்கு புக்ககம் என்று ஒன்றுமில்லை. ஏதானாலும் நான் தான் செய்யணும்'' என்றாள் பொன்னி.

''ஒரு நல்ல நாள் பார்த்து சீமந்தம் பண்ணி, அன்னிக்கே வளைகாப்பும் பண்ணிடலாம். பார்க்கப்போனா எனக்கு இன்னுமொரு எண்ணமும் இருக்கு. அன்னிக்கே விவேக் சுபா நிச்சயதார்த்தமும் பண்ணிடலாம். நீ சீக்கிரமே ஒரு நல்ல நாளைப் பாரு'' என்றவள் தொடர்ந்து ''இப்போ காலை வேளை. கொள்ளை காரியம் இருக்கு.



இன்னிக்கு நாம எல்லாரும் கூடிப் பேசி தீர்மானிச்சுடலாம்.''

''ஆமா, நிறைய பேரைக் கூப்பிடற எண்ணத்தில் இருக்கியா, என்ன?''

''இல்லையில்ல. நம்ம காம்பௌண்ட்லே எல்லாரையும் லீவு போடச் சொல்லி, சாப்பாட்டுக்கு நம்ம பாலன் கிட்டே சொல்லிடலாம். எனக்கும் கூப்பிட ரொம்ப பேர் கிடையாது. தவிர கல்யாணிக்கும் உடம்பு அசந்துடும். ஒருத்தர் கண் மாதிரியும் இருக்காது'' என்றாள் பொன்னி.

''நிஜம்தான், நீ கவலைப்படாமல் இரு. இன்னிக்கே நல்ல நாள்தான். லிஸ்டைப் போட்டு வேலையை ஆரம்பிச்சுடலாம்'' என்று சொல்லிவிட்டு பரிமளா தன் வீட்டிற்குக் கிளம்பினாள்.

அடுத்த வேளை நடப்பது யாருக்குத் தெரிகிறது, அந்த ஆண்டவனைத் தவிர? அன்று மத்தியானம் வாசலுக்கு வந்த பொன்னி வாசல்படி தடுக்கி தடால் என்று கீழே விழுந்து விட்டாள். எக்குத் தப்பாக விழுந்ததில் கை எலும்பு முறிந்து விட்டது. புஸுபுஸுவென்று கை வீங்கிவிட்டது. வலி பொறுக்க முடியாமல் அழுது தீர்த்து விட்டாள். நல்ல வேளையாக சீனிவாசன் சுப்ரமணியம் இருவருமே சாப்பிட வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

எல்லோருமாக அவளைக் காரில் போட்டுக் கொண்டு அருகில் உள்ள ஒரு பாலிகிளினிக்கிற்கு போனார்கள். அங்கே இவளுக்கு வலி மறக்க ஒரு ஊசி போட்டு எக்ஸ்ரே எடுத்ததில் 'ஆபரேஷன் தேவையில்லை, ஆனால் மாவு கட்டு போடணும்' என்று சொல்லி

உடனே செயலில் இறங்கி விட்டார்கள். தூக்கத்திற்கு ஒரு ஊசியைப் போட்டுவிட்டு, ஒரு நாள் அவர்கள் கவனிப்பில் இருந்துவிட்டு பிறகு வீட்டிற்கு அழைத்துப் போகலாம் என்று சொல்லி விட்டார்கள்.

போனில் விஷயம் தெரிந்து உடனே வந்துவிட்ட ராமனாதன் வெலவெலத்துப் போய்விட்டான். இத்தனை வருடம் கழித்து கல்யாணி உண்டாகியிருக்கும் சமயத்தில்தானா இப்படி நடக்க வேண்டும்? கிட்டத்தட்ட அழுது விட்டான்.

கல்யாணி திகிலடித்து உட்கார்ந்து விட்டாள். லக்ஷ்மியும், நளினியும் அவளைத் தேற்றி அவள் பயத்தைப் போக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். பொன்னி நன்கு தூங்கி விட்டதனால் துணைக்கு லக்ஷ்மியை இருக்கச் சொல்லி மற்ற பெண்கள் வீட்டிற்குப் போய் விட்டார்கள். கல்யாணி வீட்டிற்குப் போக மறுத்து விட்டாள். மிகவும் வற்புறுத்தியதன் பேரில் மனதே இல்லாமல் வீட்டிற்குப் புறப்பட்டாள். பொன்னிக்கு BP, சுகர் எதுவும் இல்லாததால் சீக்கிரமே காலில் பட்டிருந்த காயங்கள் ஆறிவிடும். ஆனால் கையை அசைக்கவே கூடாது என்று சொல்லி கையில் மாவுக்கட்டுப் போட்டு கழுத்திலிருந்து துணியைக் கட்டி தொங்கவிட்டாயிற்று.

பொன்னிக்கு நிறைய வலி நிவாரணி தொடர்ந்து கொடுக்கப் பட்டதால் அவளுக்கு அவ்வளவாக வலி இல்லை. ஆனால் மனதளவில் ரொம்பவே காயப்பட்டு விட்டாள். உண்டாகி இருக்கிற பெண்ணுக்கு தான் செய்ய வேண்டிய நிலையில் தனக்கு அவள் செய்ய வேண்டியதாகி விட்டதே என்று மிகவும் வருத்தப்பட்



டாள். வீட்டிற்குப் போய் அவளுக்கு தொந்திரவு கொடுப்பதற்குப் பதில் இங்கேயே தங்கி விடலாம் என்று கூட நினைத்தாள். ஆனால் அந்த எண்ணம் சரிவராது என்று எல்லோரும் எடுத்துச் சொல்லி அவளை நான்கு நாட்கள் கழித்து டிஸ்சார்ஜ் செய்து அழைத்துப் போனார்கள்.

இப்படி எல்லோருக்கும் பாரமாகி விட்டேனே என்று புலம்பிப் புலம்பி மாய்ந்து போனாள். சமையலுக்கு ஒரு ஆளைப் போடலாம் என்று ராமனாதன் சொல்ல, ஆள் தேடும் படலத்தில் எல்லோரும் இறங்கினார்கள். ஆனால் அத்தனை சுலபமா என்ன, நம்பிக்கையான ஆள் கிடைப்பது? அதுவரை இவர்களேதான் முறை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார்கள்.

பொன்னிக்கு குளிப்பாட்டி, தலைவாரி என்று செய்து துணைக்கு ராத்திரி வந்து படுத்துக் கொள்ளுவதையும் அவர்கள் வீட்டு வேலைக்காரி பார்வதமே ஏற்றுக் கொண்டு விட்டாள். சமையல் ஏதோ முடிந்ததை கல்யாணி செய்து கொண்டாள். மற்றதை யாராவது கொண்டு வந்து தந்துவிடுவார்கள். பொன்னிக்கு கொஞ்சம் எல்லோருடனும் பேசிக் கொண்டிருக்க வேண்டும். கோவிலுக்குப் போக வேண்டும். அவளுக்குத் தனிமை தோன்றாமல் இருப்பதற்காக சுந்தராம்பாவோ, பரிமளாவோ வந்து கம்பெனி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லோரும் நன்றாகத்தான் பார்த்துக் கொண்டார்கள்.

ஆனால் வளைகாப்பிற்கு முன் கட்டுப் பிரிக்க முடியவில்லை. ''அதனால் என்ன? எப்படியுமே நாங்க முன்னாடியே செய்ததுதானே, நாங்க பார்த்துக்கறோம்''

என்று பரிமளா சொல்ல, ஆளுக்கொரு வேலையாக எல்லோரும் எடுத்துக் கொள்ள பூச்சூட்டல் வேலைகள் ஆரம்பித்து விட்டன.

கல்யாணிக்கு சந்தோஷம் ஒரு பக்கம், இத்தனை வயது கழித்து இந்த நல்லது நடக்கிறதே என்று வெட்கம் ஒரு பக்கம், அத்தையால் ஒன்றும் முடியவில்லையே என்று துக்கம் ஒரு பக்கம் என்று உணர்ச்சிகள் கலவை யாக இருந்தன.

பூச்சூட்டல் நாளும் வந்தது. ஐந்து வீட்டிற்கும் நடுவில் இருக்கும் காலி மனையில் பந்தல் போடப்பட்டு ஒரு கோடியில் ஒரு மேடையையும் அமைத்து விட்டார்கள். பரிமளாவின் யோசனைப்படி விவேக், சுபா நிச்சயதார்த்தத்தையும் இந்த விழாவிலேயே நடத்த முடிவு செய்திருந்தனர்.

சுபாவும், விவேக்கும் அப்படியே மேகத்தின் நடுவே மிதந்து கொண்டிருந்தனர். நடுவில் எத்தனையோ முறை விவேக் சுபாவைப் பார்க்க வந்து கொண்டுதான் இருந்தான். 10 நிமிஷம் போல பேசிக் கொண்டிருப்பான். நளினிக்குப் பிடிக்கத்தான் இல்லை. ஆனால் மாப் பிள்ளையாகப் போகிறவன் என்பது உறுதியாக விட்டு நேரிடையாக எதுவும் சொல்லப் பயமாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் அவர்கள் பேச்சு இந்த ரீதியில் இருக்கும்.

''நமக்குக் கல்யாணம் ஆகி ஒரு மாதமாயிருக்கும். அதிர்ஷ்டம் லேட்டாகத்தான் அடிக்கிறது பார்'' என்பான்.

''அதுவும் நல்லதுதானே! பெரியவர்கள் ஆசீர்வாதத் தோடு நல்லபடியாகக் கல்யாணம் பண்ணிக்கப்



போறோம். எனக்கு இது ரொம்பப் பிடிச்சிருக்கு'' என் பாள் அவள்.

''பெரியவர்களாம் பெரியவர்கள்! அநாவசியமா ஆறு மாதம் ஒத்திப் போட்டுட்டாங்க'' விவேக் பொறுமு வான்.

''அதனால் என்ன? இப்ப மட்டும் பார்த்துக்காமலா இருக்கோம்? அதுதான் தினம் பார்த்துக்கறோமே!''

''பார்த்துண்டால் மட்டும் போதுமா? கண்ணுக் கெதிரே ஐஸ்கிரீமை வச்சுட்டு கையைக் கட்டிப் போட்ட மாதிரி இருக்கு, தெரியுமா!'' என்பான்.

''ஏய், நீ ரொம்பவே கெட்டவன். உன்னோடு சேர்ந்தா நானும் கெட்டுப் போயிடுவேன். நீ முதல்ல இடத்தைக் காலி பண்ணு'' என்பாள் சுபா.

''என் மேலே உனக்கு ஆசையே இல்லையா'' என்று அவன் அவளை வம்புக்கு இழுப்பான்.

''ஆசையா, உன் மேலேயா, எனக்கா? யார் சொன்னது அப்படி?'' என்று விஷமமாகக் கேட்டாள் சுபா.

''ஆசை இல்லாமதான் ஹாஸ்பிடல்லெ மயக்கம் தெளிஞ்சு என் பேரைச் சொல்லி முனகினியாக்கும்.''

''நான் உன் பெயரைச் சொன்னேனான்னு தெரியாது. ஆனா நீ 'சுபா, சுபா'ன்னு ஓயாமல் உருகினதை மட்டும் டீ.வி.யில் சொன்னாங்க'' என்பாள்.

மொத்தத்தில் ஏதோ இனிமையான உளறல்கள். காதல் கொண்ட இரண்டு இளம் நெஞ்சங்களின் பிதற்றலுக்கு அர்த்தம் இருக்க வேண்டிய அவசியம் என்ன?

நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது என்றதும் சிநேகிதர்கள் எல்லோரையும் கூப்பிடணும் என்று விவேக் சுபா இருவருமே சொல்லிப் பார்த்தனர். ''கல்யாணத்தின் போது எல்லோரையும் கூப்பிடலாம். இப்போ நம்ம காம்பௌண்டில் உள்ள நம்ம மனுஷங்க மட்டும் போதும்'' என்று சுப்பு, கணேசன் இருவருமே நிச்சயமாகச் சொல்லி விட்டனர்.

நிச்சயதார்த்தத்தன்று சுந்தராவில் ஆரம்பித்து காவ்யா, வீணா வரை எல்லோருக்கும் வேலை நிறையவே இருந்தது.

சுபாவிற்கு ஜயந்தி சங்கிலி போட, விவேக்கிற்கு சுப்பு பிரேஸ்லெட் போட என்று விமரிசையாகத்தான் நடந்தது. கல்யாணிக்கு மற்ற நான்கு வீட்டுக்காரர்களுமாகச் சேர்ந்து ஒரு கருக மணிச்சரம் பொன்னில் கோர்த்து வாங்கியிருந்தனர். பொன்னி சொன்ன பிரகாரம் அவள் கொடுத்த பணத்தில் கறுப்புப் புடவை, ஒரு ஜோடி வளையலும் வாங்கியிருந்தனர்.

காலையிலேயே பரிமளா வந்து நலங்கிட்டு கல்யாணிக்கு மங்கள ஸ்நானம் செய்வித்தாள். அவளின் அலங்காரமெல்லாம் ஜயந்தியும், தேவிகாவும் பார்த்துக் கொண்டனர். சுபாவிற்கு லக்ஷ்மி, ரம்யா எல்லோரும் அலங்காரம் செய்ய, ஆண்கள் முதல் நாளே பந்தலில் தேவை என்று சாஸ்திரிகள் சொன்ன சாமான்களையெல்லாம் வாங்கியிருக்க, பெரிய கல்யாணமாகவே ஆரம்பித்தது பூச்சூட்டல்.

விவேக்கை அன்றைக்கு மட்டும் யாராவது சினிமா தயாரிப்பாளர்கள் பார்த்திருந்தால் கொத்திக் கொண்டு



போயிருப்பார்கள். அப்படி ஒரு ஆணழகனாக இருந்தான். அவன் வாசலுக்கு வந்த போது பார்த்த வரதன் அசந்து போனார். ''ஏய், பரிமளா, என் பேரனுக்கு முதலில் சுத்திப் போடு. யார் திருஷ்டியாவது படப் போகிறது'' என்றார். பரிமளாவும் திருஷ்டி சுத்திப் போட தன் பேரனிடம் ''நீ அப்படியே அந்தக் காலத்து உங்க தாத்தா மாதிரியே இருக்கே'' என்று சொல்லி கண் சிமிட்டினாள்.

''அப்பா, இத்தனை வயசுக்கு முதல் தடவையா நான் அழகுன்னு ஒத்துண்டியே! அதிசயம் தான்'' என்றவர் ''டேய், விவேக்! உங்க பாட்டிக்கு இத்தனை நாளா அழகு மட்டும்தான் இருந்தது. இப்போ கொஞ்சம் அறிவும் வந்திருக்குடா'' என்றார்.

''போறுமே! பேரனுக்குக் கல்யாணம். வழிசல் குறையவே இல்லை. ரொம்ப சமர்த்து தான், போங்கோ'' என்றாள் பரிமளா சிரித்துக் கொண்டே.

''தாத்தா, எங்கே நீ கொஞ்சம் நில்லு. உன்னை சரியாகவே பார்க்கல்லே. பாட்டியைப் பாரு இன்னிக்கு எத்தனை அழகா ஜொலிக்கறா. உன் டிரெஸ் கூட ரொம்ப நன்னாயிருக்கு, தாத்தா! நீ எனக்குப் போட்டியா வந்துடப் போறே'' என்றான் விவேக்.

''நீ மன்மதன் மாதிரி இருக்கே, உனக்குத் தாத்தான்னா நான் ஒரு கெத்தா வர வேண்டாமா? அதுதான் இந்த மாதிரி டிரெஸ். வேண்டாம்னா சொல்லு. நான் தினம் போட்டுக்கற டிரெஸ்ஸிலேயே வரேன்'' என்றார் பொய்க் கோபத்துடன்.

''பாட்டி சொன்னது சரிதான்.''

''என்னடா சொன்லா உன் பாட்டி?''

''என்னைப் பார்த்து 'நீ அப்படியே அந்தக் காலத்து உன் தாத்தா மாதிரியே இருக்கு''ன்னு சொன்னா(ள்) பாத்தியா, பாட்டிக்கு இந்த டிரெஸ் ரொம்பப் பிடிச்சிருக்கு நீ ஏன் தாத்தா தினம் இந்த மாதிரி டிரெஸ் பண்ணிண்டு பாட்டியை சந்தோஷப் படுத்தக் கூடாது?'' என்று கேட்டான்.

''செய்யலாம்தான். ஆனா உன் பாட்டி சந்தேகப் பட ஆரம்பிச்சுடுவாளே! என்ன இருந்தாலும் நீயும் நானும்தான் இந்த கூட்டத்திலேயே ரொம்ப அழகு'' என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த பரிமளா, ''நன்னா யிருக்கு, தாத்தாவும் பேரனும் கொஞ்சிக்கறது. நான் ஒருத்தி இங்கே இருப்பது உங்களுக்குத் தெரியல்லியா'' என்றாள்.

''டேய், ஆமாண்டா உன் பாட்டிகூட இன்னிக்கு ரொம்ப அழகாகவே இருக்காடா.''

''வாஸ்தவம்தான் தாத்தா! எங்கே நீங்க இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கோ. இன்னிக்கு முதல் போட்டோ உங்களைத்தான் எடுக்கணும்'' என்றான் விவேக்.

அதற்குள் பரிமளா தன் கழுத்தில் இருந்த ஒரு சங்கிலியைக் கழட்டி தாத்தா கழுத்தில் போட வர, அவளுக்கு வாகாகத் தலை குனிந்தார் வரதன். அதைக் கிளிக்கினான் விவேக். பரிமளாவிடம் அதைக் காண்பித் ததும் அவள் வெட்கத்தில் முகம் சிவந்தாள்.



''ஐய்யோ, பாட்டிக்கு வெக்கத்தைப் பாரேன்! சின்னப் பொண்ணு மாதிரி'' என்றான் விவேக். ''பாட்டி, உனக்கு நான் தேங்க் பண்ணவே மறந்துட்டேன். நீ இந்தப் பேச்சை ஆரம்பிக்கலேன்னா இன்னிக்கு நிச்சயதார்த் தமே வெச்சுருக்க மாட்டார் அப்பா. தேங்க் யூ. பாட்டி! தேங்க் யூ வெரி மச்'' என்று சொன்ன விவேக் பரிமளா வின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டான்.

''எவன்டா அவன் என் பொண்டாட்டிக்கு முத்தம் கொடுக்கறவன்?'' என்று பொய்யாக மிரட்டினார் தாத்தா.

''எல்லாம் சின்ன வயசிலிருந்து எப்பவும் கொடுத்துக் கொண்டிருக்கிறவன்தான். வேணும்னா நீயும் வந்து குடேன், உன்னை யார் தடுத்தா'' என்றான் விவேக்.

''சீ, பேச்சைப் பாரு'' என்று செல்லமாக அவன் தலையில் குட்டிவிட்டு பரிமளா உள்ளே போய் விட் டாள்.

அதற்குள் ப்ரதீப் வாசலுக்கு வந்து ''தாத்தா, உங்களை சீக்கிரம் மேடைக்கு வரச் சொல்றாங்க, நேரமாயிட்டு இருக்காம்'' என்றான்.

கல்யாணிக்குப் பட்டுப் புடவை உடுத்தி நகை நட்டு போட்டு மாலை போட்டதும் அவள் இருந்த அழகு அத்தனை பேர் கண்களையும் கவர்ந்தது. சாதாரண அழகுள்ள பெண்ணாயிருந்தாலும் ஒரு குழந்தையை வயிற்றில் சுமக்கும்போது அந்தத் தாய்மையின் பூரிப்பும், மகிழ்ச்சியும் அவளை பல மடங்கு அழகாக்கிக் காட்டும். அதுபோல் இன்று கல்யாணி மிக அழகாக ஜொலித்தாள்.

ராமனாதன் அவளைக் கண்களாலேயே விழுங்கிக் கொண்டிருந்தான்.

லக்ஷ்மியும், தேவிகாவுமாக கல்யாணியை அழைத்து வந்தனர். நிறைய ஜரிகை போட்ட புடவையைப் போட்டிருந்த சோபாவில் அவளை உட்கார வைத்தனர். முதலில் பரிமளா பாட்டிதான் அவளுக்கு சந்தனம், குங்குமம் இட்டு, பூ வைத்து வளையலும் போட்டு விட்டாள். பின் பொன்னியை அழைத்தனர். அதற்கு அவள், "நான் எதற்கு, வேண்டாம்" என்று மறுத்தாள். "ஏய், உன்னைவிட கல்யாணிக்கு நல்லது நினைப்பவர்கள் யார்? எதுவும் பேசாமல் வந்து அவளுக்கு குங்குமம், சந்தனம் வை" என்றாள் பரிமளா கை கட்டுடன் அவளால் வளையல் போட முடியாவிட்டாலும் மற்றவற்றைச் செய்தாள்.

பிறகு சுந்தராவைக் கூப்பிட்டார்கள். அவளுக்கு ஒரு தோஷமும் கிடையாது என்று எல்லோரும் முதலிலேயே தீர்மானம் செய்திருந்தார்களே! ஆனால் அவள் வர மறுத்து விட்டாள். "நான் எத்தனையோ வருஷமாய் அவருடன் வாழாமல் இருக்கிறேன். அதனாலே எனக்கு சங்கடமாயிருக்கு. தயவு செய்து என்னை விட்டுடுங்களேன்" என்று கண்ணீர் மல்கக் கேட்டதும் விட்டு விட்டார்கள். அவள் நல்லபடியா பிள்ளை பெறணும். அதுதானே முக்கியம்" என்றாள் சுந்தரா. அதன் பிறகு சுபாவை உட்கார்த்தி வைத்து சாஸ்திரிகள் நிச்சயதார்த்த வாசகங்களை எழுதி வாசித்தார்.

பிறகு கல்யாணியின் சீமந்தம் ஜோராக நடைபெற்றது. அவளுக்கு ரொம்பவும் களைப்பு வர விடாமல்



சாஸ்திரிகள் நடத்தி வைத்தார். எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்த பின் சிறியவர்கள் எல்லாம் பெரியவர்கள் எல்லோரையும் கீழே விழுந்து நமஸ்கரித்தனர். பெரியவர்கள் எல்லோரும் சிறியவர்களை மனப் பூர்வமாக ஆசீர்வதித்தனர்.

சாமிநாதனுக்குத்தான் தன் பெண் வராதது மிகவும் வருத்தமாக இருந்தது. ஆனால் அவரைவிட சுப்புதான் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டார். ஏன் இருக்காது? அவர் தன் அக்காவை மிகவும் நேசித்தவர். சிறு வயதில் அம்மாவும் போய்விட, அக்காவிடமே அதிகம் ஒட்டிக் கொண்டவர். அவளும் அந்தக் காலத்தில் இவர் மேல் பாசமாகத்தான் இருந்தாள்.

அவள் திருமணம் முடிந்து புக்ககம் சென்றதும் இவர்களின் சிநேகம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. அவள் கணவர் ஒரு மோட்டார் கம்பெனியின் ஹைதராபாத் கிளையின் சேல்ஸ் மேனேஜராக இருந்தார். ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் படித்திருந்த அவர் விற்பனையில் புதிய முறைகளைப் புகுத்தி கம்பெனியின் விற்பனையை அதிகரித்ததால் அவருக்கு கம்பெனியில் நல்ல பெயரும் புகழும் கிடைத்தன.

பணம் கைகளில் தாராளமாகப் புரண்டது. இது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது மட்டுமல்லாமல் அவர்களின் குணத்தையும் மாற்றி விட்டது. இவள் லேடீஸ் கிளப், சங்கீத சபா என்று புழங்க ஆரம்பித்தாள். இவளின் சிநேகிதிகளும் இவளை ஏற்றிவிட நட்பு வட்டாரம் பெருகி, உறவினர் வட்டாரம் சுருங்க ஆரம்பித்து விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக

தங்கள் உறவினர்களைத் தவிர்க்க ஆரம்பித்தாள். இதற்கிடையில் அவள் பிள்ளை மனோஜும் பெரியவனாகி விட்டான். கார், பங்களா, எடுபிடிக்கு ஆட்கள் என்று வசதி பெருகப் பெருக அவன் நட்பு வட்டாரமும் பெருக ஆரம்பித்து விட்டது.

நல்ல நண்பர்கள் அமைவதற்குக் கொடுப்பினை வேண்டும், இல்லையா? ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. It is not an achievement to have 100 friends a year, but it is if you have a friend for 100 years. என்று. இவனுக்கு அந்தக் கொடுப்பினை இல்லாததாலும், பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பு இல்லாததாலும் இவனைக் கேட்பாரில்லாமல் போய்விட்டது. நண்பர்கள் சும்மா விடுவார்களா? இவன் செலவில் அவர்கள் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

ஆனாலும் எப்படியோ படித்து பி.எஸ்ஸி. முடித்து விட்டான். ஆனால் இவன் அம்மா இவன் பெரிய படிப்பு படித்திருப்பதாகவும் பெரிய வேலையில் இருப்பதாகவும் வெளியே சொல்லிக் கொள்வாள். இதை சுப்புவும் நம்பி தன் பெண் சுபாவை அவனுக்குக் கொடுக்கலாம் என்ற ஒரு எண்ணம் வைத்திருந்தார். இதை நளினியிடமும் அடிக்கடி சொல்லுவார்.

ஆனால் இந்த எண்ணம் நளினிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஒன்று அவளுக்கு நாத்தனாரைப் பிடிக்காது. நாத்தனாரைப் பிடித்த அண்ணன், தம்பி மனைவிகள் எத்தனை பேர் உலகத்தில்? தவிர அவளும் ஓரளவு படித்தவள். உறவில் கல்யாணம் என்பது சரியில்லை, குழந்தைகள் குறையுடன் பிறக்க வாய்ப் புண்டு என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. பிரச்னை



நெருங்கும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந் தாள்.

ஒருநாள் தாத்தா பேசியதை சுபாஷிணி கேட்க நேர்ந்தது. அவள் மனம் பதைபதைத்தது. ஐய்யோ, அவனுடன் கல்யாணமா? அவன் மூஞ்சியும், மொகரக் கட்டையும்! நடத்தையும்! முந்தா நாள் காலைலேகூட சொன்னதும் இருவரும் கொஞ்ச நேரம் சோகமாக உட்கார்ந்திருந்ததையும் பார்த்தாள் சுபா. உடனே இவள் மனம் சற்றுப் பின்னோக்கிச் சென்று நடந்த சில நிகழ்ச்சிகளை அசை போட்டது.

சில நாட்களுக்கு முன் அவளின் அத்தை பூர்ணிமாவும், அவள் கணவரும், பிள்ளை மனோஜுடன் பெரிய படகு போன்ற காரில் சென்னை வந்திருந்தார்கள். சவுத் டூர் போய்விட்டு ஹைதராபாத் போகும் வழியில் சென்னை வந்து அப்பாவையும், தம்பியையும் பார்க்கலாம் என்று வந்ததாகச் சொன்னார்கள். சுப்புவிற்கு ஏக சந்தோஷம்.

''என்ன அக்கா. இப்படி எங்களையெல்லாம் சுத்தமா மறந்துட்டே?'' என்று கேட்டார்.

''என்னப்பா செய்யறது? எனக்கு வேலை அதிகம் அங்கே நான் பல சங்கங்களிலே பிரஸிடெண்ட், செகரட்டரின்னு இருக்கேன். அதெல்லாம் நான் இல்லேன்னா நடக்காது. இப்பகூட பாரு, இந்த ட்ரிப் வரதுக்கு என்னை விடவே மாட்டேன்னுட்டாங்க. என்ன பண்ணறது. கொஞ்சம் புத்திசாலியாகவும் பாப்புலராகவும் இருந்தா இந்த தலைவலி தான்! இவர்கூட சொன்னார், நாம

சோழா செரிட்டன்ல தங்கிட்டு உங்களையெல்லாம் வந்து பார்க்கலாம், அனாவசியமா உங்களுக்கெல்லாம் தொந்திரவு தர வேண்டாம் என்றார். நான்தான் அதெல்லாம் வேண்டாம், கொஞ்சம் அசௌகரியம் தர வேண்டாம் என்றார். நான்தான் அதெல்லாம் வேண்டாம், கொஞ்சம் அசௌகரியம் இருந்தாலும் நம்ம மனுஷான்னு இருக்கச்சே அங்கேதான் நேரே போகணும்னு சொல்லிட்டேன்'' என்றாள்.

''ரொம்ப தேங்க்ஸ், அக்கா! உங்களுக்கு எந்த அசௌகரியம் இல்லாமே நான் பாத்துக்கறேன்'' என்றார் சுப்பு. அவள் கணவரானால் யாருடனும் எதுவும் பேசாமல் கெத்தாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்போது சுபாஷிணி எங்கோ வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த பூர்ணிமாவின் கண்கள் அகல விரிந்தன. ''ஏண்டா, சுப்பு இவ உன் பெண் சுபாஷிணி தானேடா? எப்பவோ பார்த்தது. அப்போ ஏதோ ஏப்ப சாப்பையா இருப்பா, இப்ப எவ்வளவு அழகாயிட்டா?'' என்று அதிசயித்தாள்.

சுபாஷிணிக்கு அத்தையைப் பார்த்த முதல் பார்வையிலேயே பிடிககவில்லை. என்ன என்று அவளுக்குத் தெரியவில்லை. சில பேருக்கு சிலரைப் பார்த்தவுடன் பிடித்துவிடும். பின்னால் அவர்கள் எப்படி இருந்தாலும் அது அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் சிலரைக் கண்டால் முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போய் விடும் அப்புறம் அவர்கள் எது செய்தாலும் குற்றம்தான். இந்த அத்தை இரண்டாவது ரகம். அதிலும் பூர்ணிமா பேசிய, நடந்து கொண்ட விதமும் சுபாவின் வெறுப்பை வளர்க்கத்தான் செய்தது.



''ஹாய், யாரது இந்த தேவதை?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் மனோஜ். பச்சை கலரில் முக்கால் பேண்டும், ஆரஞ்சு கலரில் கட் பனியனுடனும் இருந்தான்.

திடுக்கிட்டுத் திரும்பியவள் இவனைப் பார்த்ததும் கண்ணை சுருக்கினாள். 'யாரது இந்தக் கோமாளி' என்று நினைத்துக் கொண்டாள்.

''என்னடா. முழிக்கறே? எல்லாம் உன் முறைப் பொண்ணுதான், நம்ம சுபாக்குட்டிடா'' என்றாள், ''சுபா. இது உன் அத்தான் மனோஜ்'' என்றாள்.

''ஹாய், பேபி!'' என்றவன் அவள் முதுகில் லேசாக கை வைக்கப் போனான். பளிச்சென்று விலகிக் கொண்ட சுபா அவனை முறைத்துப் பார்த்தாள். சிகரெட் நாற்றம் ஊரைத் தூக்கியது. அவனது அந்த செய்கை அவளுக்கு அருவருப்பூட்டியது. 'இடியட்! மேனர்ஸ் தெரியாத மடையன்!'

சட்டென்று நிலைமையைச் சமாளித்த சுப்பு, ''வாங்க இரண்டு பேரும், சாப்பிடலாம் சுபா, நீ போய் தாத்தாவையும், சாப்பிடக் கூட்டிக் கொண்டு வா'' என்றார்.

''சாரி அங்கிள்! நான் வெளியே சாப்பிட்டு விட்டேன். லாங் டிரைவ் வந்தேனா, உடம்பு அசதியா இருக்கு தூங்கணும். ஹைய் பேபி பெட் ரூம் எங்கேயிருக்குன்னு காட்டறயா?'' என்றான் மனோஜ்.

''போம்மா, போய் நம்ம கெஸ்ட் ரூமைக் காண்பி'' என்றார் சுப்பு வேண்டா வெறுப்பாக அவனை அழைத்துச் சென்றாள் சுபா.

''ஓ. இதானா. பரவாயில்லை நான் அட்ஜெஸ்ட் பண்ணிக்கறேன். ஆமா உன் பெட்ரூம் எங்கே?'' என்று கேட்டான் மனோஜ்.

ஏனோ இந்த கேள்வி அவளுக்குப் பிடிக்கவில்லை. ''எனக்கு தனியாக பெட் ரூம்னு கிடையாது. நானும் வினோவும் ஹாலில் தூங்குவோம்'' என்றாள்.

''அது சரி, நீ மாடர்ன் டிரெஸ்ஸெல்லாம் போட்டுப் பியா.''

''மாட்டேன், அப்பாவுக்கு அதெல்லாம் பிடிக்காது.''

''ஆனா எனக்கு பிடிக்குமே. போகட்டும். உன்னோட ரீடிங் டேஸ்ட் எப்படி? இங்கிலீஷ் புக்ஸ் எல்லாம் படிப்பியா இல்லை தமிழ் மட்டும்தானா?''

''எனக்கு எல்லாம் பிடிக்கும் நிறைய இங்கிலீஷ் புக்ஸ் படிப்பேன்.''

''நான் ஆந்திராவிலேயே ரொம்ப நாள் இருக் கறதனாலே தெலுங்கிலேதான் என் டேஸ்ட். ஆனா, என் லைஃப் ஸ்டைல் எல்லாம் வெஸ்டர்ன் பேஸ்டு. இது எதுக்குச் சொல்றேன்னா, நீ அங்கே வந்தப்புறம் இதுக்கெல்லாம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கணும்.''

''இது என்ன புதுக்கதை? நான் ஏன் அங்கே வரணும்?''

''ஏன்னா எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு என்னைக் கல்யாணம் பண்ணிண்டா அங்கேதானே வரணும்?''

''அட, அப்படியா! ஆனா எனக்கு உன்னைப் பிடிக்கல்லியே! நீ இந்த முட்டாள்தனமான ஐடியாவை



டிராப் பண்ணிட்டு அங்கே ஒரு தெலுங்குப் பொண்ணைப் பண்ணிக்கோ. ஆமா, இந்த ஐடியாவை உனக்கு யார் குடுத்தா?''

''ஏன், உங்கப்பாவுக்கு இந்த மாதிரி ஒரு எண்ணம் இருக்கறது உனக்குத் தெரியாதா, என்ன?''

''தெரியாது. அப்படியே இருந்தாலும் அந்த எண் ணத்தை நான் மாத்திடுவேன். அதனாலே, பிளீஸ் கம் டு ரியாலிட்டி'' என்று சொல்லிவிட்டு நகர்ந்து விட்டாள்.

அடுத்த நாள் காலை மனோஜ் மெதுவாக மொட்டை மாடிக்குப் போவதைப் பார்த்தாள். 'ஆமாம் இவன் எதற்கு அங்கு போகிறான்' என்று சிந்தித்தவள் திடீரென்று பொறி தட்டினாற் போல் 'வினோ துவைத்த துணிகள் எல்லாவற்றையும் உலர்த்த மொட்டை மாடிக்குப் போயிருக்கிறாளே, இவன் போய் அவளிடம் எதாவது வம்பு செய்யப் போகிறானே' என்று நினைத்தவள், அங்கு விரைந்தாள்.

அவள் நினைத்தது சரிதான். வினோதினி துணி உலர்த்திக் கொண்டிருந்தாள். பின்னாலேயே சென்ற மனோஜ் திடீரென்று அவள் கண்களைப் பொத்தினான். திடுக்கிட்டுத் திரும்பிய அவள் ஒரு கணம் திகைத்து விட்டு 'பளீர்'ரென்று அவன் கன்னத்தில் அறைந்தாள்.

''இந்த வேலையெல்லாம் என்னிடத்தில் வேண்டாம்'' என்றவள் விரைந்து கீழே இறங்கி விட்டாள். இத்தனை யும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சுபா, 'தேவலையே, நாமா இருந்தால் ஒரு வேளை அழுது

இருப்போமோ என்னவோ, வினோ ரொம்ப தைரியசாலி தான்' என்று மனதுக்குள் அவளை மெச்சிக் கொண்டாள். மனோஜ் இதைப் பற்றி யாரிடமும் மூச்சு விடவில்லை என்பது அவன் அம்மா எல்லோரிடமும் வழக்கம்போல் பீற்றிக் கொள்வதிலிருந்து தெரிந்தது.

அடுத்த இரண்டு நாட்களில் அவர்கள் கிளம்பிச் சென்று விட்டனர். அதற்குள் மனோஜ் இரண்டு, மூன்று முறை சுபாவைத் தனியே பார்த்துப் பேச முயற்சித்தான். சுபா அதற்கு இடமே கொடுக்கவில்லை.

அவர்கள் கிளம்பும்போது சுப்பு கலங்கிய கண்களோடு விடை கொடுத்தார். ''அக்கா, ஜாக்கிரதையாகப் போய்வா. அடிக்கடி தொடர்புலே இரு. அக்கா! நம்ப உறவுமுறை இப்படி விட்டேத்தியா இருந்தா எப்படிக்கா? நாம இன்னும் நெருங்கி வரணும்னு ஆசைப் படறேங்க்கா. புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன்'' என்றார்.

''நீ கவலைப்படாதேப்பா! நாம்ப மீண்டும் கூடிய சீக்கிரம் சந்திக்க முயற்சி செய்வோம்'' என்றாள். ஆனால் அவள் அப்படிச் சொன்னாளே தவிர பின் ஒரு முறை கூட இவர்களைத் தொடர்பு கொள்ள முயற்சிக்க வில்லை.

அவர்கள் கிளம்பிச் சென்றதும் பெருமூச்சோடு உள்ளே திரும்பினார். ''மனோஜ் மாப்பிள்ளையா வந்தா நல்லாத்தான் இருக்கும். நீ என்ன சொல்றே, நளினி?'' என்று கேட்டார்.

''சும்மா இருங்க, வேண்டாததையெல்லாம் நினைச்சு கிட்டு'' என்று சிடுசிடுத்தாள் நளினி.



இத்தனையும் அவள் மனதில் சினிமா படம்போல் ஓடியது. அப்பா ஏன் இப்படி நினைக்கிறார்? அவர் எண்ணத்தை மாற்ற வேண்டுமே. கோபக்கார மனுஷர். எப்படி அவருக்கு இவர்களின் சுய ரூபத்தைப் புரிய வைப்பது என்று நினைத்து மிகவும் கவலைப் பட்டாள். நல்ல காலம் தற்போது நடந்த நிகழ்வுகள் எல்லாம் சுப்புவை மீறி நடந்து விட்டதால் இவள் தப்பித்தாள்.

சுப்பு அக்காவை நிச்சயதார்த்தம் என்று போனில் கூப்பிடும் போதே கொஞ்சம் மன்னிப்புக் கோரும் தொனியிலேயே பேசினார்.

''சரிதான் இஷ்டப்பட்டுட்டாங்கறே. பையன் அழ குங்கறே, நன்னா சம்பாதிக்கறானா?'' என்று கேட்டாள்.

''பரவாயில்லை'' என்று சுப்பு இழுத்தார்.

''மனோஜுக்கு இப்பவே வருஷத்துக்கு 20 லட்சம் வருது. அடுத்த வருஷம் வைஸ் பிரஸிடெண்ட் ஆகப் போறான். அப்போ இன்னும் பத்தோ, பதினஞ்சோ கூட வரும். நிறையப் பேர் இப்பவே ஜாதகம் கேக்கறாங்க. நான்தான் முட்டாளாட்டம் மருமாளை மனசிலே நம்பிண்டு இருந்ததால், ஒரு இடத்திலும் பிடிகொடுத்துப் பேசல்லே. சரிப்பா, குழந்தை எங்கிருந்தாலும் நன்னா யிருக்கட்டும். ஆல் தி பெஸ்ட்'' என்று போனை வைத்து விட்டாள்.

அதன் பிறகு போனில் கூடப் பேசவில்லை. பேசி னாலோ, போய் வந்து கொண்டிருந்தாலோ அப்பாவைத் தலையில் கட்டி விடுவார்களோ என்று கூட அவளுக்கு எப்போதுமே கொஞ்சம் பயம். என்பது நளினியின் ஊகம்.

இப்போது கொஞ்சம் கோபம் போலக் காட்டிக் கொண்டால்தான் தன் கை ஓங்கியிருக்கும் என்று அப்படிப் பேசினாளே தவிர சுப்பு கேட்டிருந்தால்கூட அவள் பிள்ளை மனோஜிற்குப் பண்ணிக் கொண்டிருப்பாளா என்பது சந்தேகம்தான். அங்கே அவள் பிள்ளை அவன் அம்மாவிடம் ''நான் ஒரு தெலுங்குப் பொண்ணைக் காதலிக்கிறேன். அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். இதை நான் உன் பர்மிஷன் வேணும்ங்கறதுக்காகச் சொல்லலே. ஒரு இன்பர்மேஷனுக்காகச் சொல்றேன்'' என்று சொல்லிவிட்டது இவர்களுக்கு அப்போது தெரியாது.

அந்தப் பெண்ணின் வீட்டில் கொஞ்சம் போகட்டும் என்று டைம் கேட்டிருந்தார்கள். அவர்களுடைய மூத்த பெண்ணிற்குக் கல்யாணம் ஆகவில்லை இப்போது.. இவளுக்குத் தமிழ் பேசுகிறவர்கள் வீட்டில் திருமணம் நடந்து விட்டால், அந்தப் பெண்ணிற்கு வரனே அமையாதாம். இந்த லவ் விஷயமெல்லாம் ஹைதராபாத் போய்வந்த இவர்கள் உறவினர் ஒருவர் வந்து ஒரு வாரம் முன்புதான் சொன்னார். அவர் அதை மட்டும் சொல்லவில்லை. மனோஜ் ஒரு கம்பெனியில் சாதாரணமான சேல்ஸ்மேன் உத்யோகம்தான் பார்க்கிறானாம். குடியில் ஆரம்பித்து ஒரு கெட்ட பழக்கத்துக்கும் குறைவில்லையாம். அப்பாவிற்கும் பிள்ளைக்கும் 'கடவுள் அருளால் பிழைத்தோம்' என்று நிம்மதியாயிற்று.

ஆனால் சம்பந்தம் செய்து கொள்ளா விட்டால் என்ன? ஒரே தம்பி. அவன் பெண் நிச்சயதார்த்தத்திற்கு



ஒரே அத்தை அவள். வரவேண்டாமோ. அதுதான் இவர்களுக்கு வருத்தம். அன்றுகூட அவள் ஆல் த பெஸ்ட் என்று சொல்லிவிட்டு போனை வைத்தும்கூட திரும்ப அவளுக்கு டயல் செய்தார் சுப்பு.

''அக்கா, என்ன போனை வெச்சுட்டே? வீட்டுக்குப் பெரிய பொண்ணு, நீ வந்து ஃபங்ஷனை நடத்தி வைக்கணும், கல்யாணத்திற்கு மாப்பிள்ளை, குழந்தைகளுடன் கண்டிப்பாக முன்னாடியே வந்திருந்து நடத்தி வைக்கணும்'' என்று சொன்னவர், அக்கா வீட்டுக்காரரையும் கூப்பிட்டு விடாப்பிடியாக அழைத்து விட்டுத்தான் போனை வைத்தார். அப்போதே தாங்கள் வருவதாக இல்லை என்றும் பூர்ணிமா தெரிவித்து விட்டாள்.

இப்போது மாப்பிள்ளைக் கோலத்தில் விவேக்கையும், சுபாஷிணியையும் பார்த்ததும் மனம் மிகவும் நிறைந்து விட்டது.

சீமந்த முகூர்த்தம் முடிந்து எல்லோருக்கும் பிரமாதமான விருந்து. மெனுவெல்லாம் இவர்கள் கூடி உட்கார்ந்து, யோசித்து தீர்மானித்த மெனுவாதலால், விலாவாரியாக திருவையாற்று விருந்துச் சாப்பாடு, தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களுக்குச் சாப்பாட்டில் இருக்கும் அற்புதமான ரசனையை தெரிவிப்பதாக அமைந்தது.

ஐந்து மாதம் கழித்துத்தான் கல்யாணம் என்றாலும் அன்றைக்கே அட்வான்ஸ் வாங்கிக் கொண்டுதான் கல்யாணபுரம் ஜகன்னாதன் வீட்டிற்குப் போனார். ஆக எல்லோரும் மனதும், வயிறும் நிறைந்து வீடு திரும்பினார்கள். அதற்குமுன் எல்லோரையும் நிற்க வைத்து திருஷ்டி சுத்திப் போடவும் பரிமளா மறக்கவில்லை.

# 37

சாப்பாடு முடிந்து வீட்டிற்கு வந்த அரவிந்த் மணியைப் பார்த்தான். அவனுக்கு அன்று இருப்பாகவே இல்லை. அந்த மத்தியானம் இரண்டு மணி என்பது திவ்யாவிற்கு பாதி ராத்திரியாக இருக்கும் என்பது நினைவிற்கு வரவே கோபம் கோபமாக வந்தது. என்ன தான் நல்ல பையன், நன்றாகப் படிப்பவன் என்றெல்லாம் இருந்தாலும் அவனும் காதல் வயப்பட்ட வாலிபன் தானே!

ஒருநாளும் மத்தியானம் தூங்காதவன் அப்படியே தூங்கிவிட்டான். அரைத் தூக்கத்திலேயே கற்பனையோ அல்லது கனவோ திவ்யா வந்தாள். இருவரும் படகில் போனார்கள். பனி படர்ந்த ஒரு மலையின் மீது ஓடிப் பிடித்து விளையாடினார்கள். குளிர் தாங்காமல் நடுங்கிக் கொண்டே இவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் திவ்யா. அவன் அவள் தலையை கோதிக் கொண்டே அவள் காதில் ஏதோ சொன்னான். அதற்கு அவள் கலகலவென்று சிரித்தாள். இந்த அருமையான கனவின் நடுவே அவன் தங்கை குந்தவை வந்து அவனை எழுப்பிவிட்டுவிட்டாள். ''அண்ணா, அம்மா உன்னை எழுந்திருக்கச் சொல்றா. விளக்கு வைக்கிற நேரமாச்சாம்'' என்றாள்.

எரிச்சலுடன் எழுந்து உட்கார்ந்தான். உள்ளே வந்த ராஜேந்திரன் ''என்ன பிரதர், தூக்கத்தில் யார் வந்தது?



என்னமோ உனக்கு நீயே பேசி சிரிச்சே!'' என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டான்.

''ஹாங், மர்லின் மன்றோவோட பாட்டி வந்தா கனவிலே, போடா, போய் வேலையைப் பாரு!'' என்று அவனை மிரட்டி அனுப்பினான்.

''ஓஹோ, ஆனா நேத்திக்கு அவ என் கனவுலே வரச்சே இன்னிக்கு உன் கனவிலே வரப்போறதா சொல்லலியே'' என்றான் சிரிக்காமல்.

''நீ உதை வாங்காமல் போக மாட்டே போலிருக்கே'' என்று எழுந்தவனைக் கண்டதும் ராஜேந்திரன் சிரித்துக் கொண்டே ஓடிவிட்டான்.

எப்போதுடா அவளுக்குப் பொழுது விடியும் என்று பார்த்துக் கொண்டு, காத்துக் கொண்டிருந்து, அறைக் கதவைச் சாத்திக் கொண்டு அவனின் லேப்-டாப்பை ஆன் செய்தான். அவளும் அங்கே அவனுக்காக காத்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது. உடனே வந்து விட்டாள்.

''ஹாய்! குட்மார்னிங் டார்லிங்! ஹவ் ஆர் யூ டுடே'' இது அரவிந்த்.

''ஹாய், குட் ஈவினிங் மை டியர்! ஆஸ் யூஷுவல் உங்க நினைவோட எழுந்திருந்தேன். அது சரி ஃபங்ஷன் எல்லாம் நன்றாக நடந்ததா?''

''ரொம்ப நன்றாகவே நடந்தது. யு வேர் த ஒன்லி கிளேரிங் ஆப்சென்டி! விவேக் மாப்பிள்ளை கோலத்திலே எப்படியிருந்தான் தெரியுமா? ஏய், எனக்கு அதெல்லாம் தெரியாது அவனைப் பார்த்ததும் எனக்கும்

அவன் மாதிரிப் மாப்பிள்ளையாகணும், இன்னிக்கே, இப்போதே!

''சரி, சரி, சரி!''

''எப்போ, எப்போ, எப்போ?''

''சீக்கிரம், சீக்கிரம், சீக்கிரமே! ஆமாம் பொண்ணு யாரு?''

''ஹாங், உங்க எள்ளுப் பாட்டி! கேள்வியைப் பார்! அது சரி நீ எப்பதான் திரும்பி வருவே?''

''நீங்க நான் கிளம்பும் முன்னாடியே சொல்லியிருந்தா நான் இங்கே வந்தே இருக்க மாட்டேன்.''

''நிஜமாவா? நீ எப்போதிலிருந்து என்னை லவ் பண்ணிக்கிட்டு இருக்கே?''

''ஃப்ரம் டைம் இம்மெமோரியல்.''

''பின்னே நீ எங்கிட்டே சொல்லியிருக்கலாமே!''

''நான் எப்படி சொல்ல முடியும்? ஒரு வேளை நீங்க எனக்கு சாதகமா பதில் சொல்லலேன்னா, எனக்கு எத்தனை அவமானம்?''

''நீ எப்போ அப்படி கேப்பேன்னுதான் நான் காத்துண்டு இருந்தேனே! சரி, அதை விடு. நீ எப்போ திரும்பி வருவே.''

''இப்படி அவசரப்பட்டால் எப்படி, ராஜா? இன்னும் அஞ்சே மாதம்தான் நிமிஷமா ஓடிடும்.''

''உனக்கு அப்படியா தோணுது? எனக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகம் மாதிரி இருக்கு. தெரியுமா?''



''நீங்க M.D. என்ட்ரன்ஸ் எழுதப் போறீங்க. நானும் ஸீரியஸா படிக்கிறேன் நீங்களும் நன்னா படிச்சு பரிட்சை எழுதுங்க. ஸீட் கிடைச்சுடுத்துன்னா, நீங்க எப்படியும் படிச்சுடுவீங்க. நான் M.S. முடிச்சுட்டு வந்துட்டேன்னா எனக்கு அங்கே நல்ல வேலை கிடைக்கும். நீங்க நல்லா செட்டில் ஆகறவரைக்கும் நான் வேலையை ஸீரியஸா பார்ப்பேன்.''

''அப்புறம் என்ன பாட்டியம்மா?''

''அப்புறம் நேரே பாட்டியாக ஆக மாட்டேன், தெரிஞ்சுக்குங்க!''

''நேரே பாட்டியாக மாட்டே, சரி, பின்னே என்ன ஆவே, சொல்லேன்.''

''முதலில் டாக்டர் திரு. அரவிந்த் M.D. அவர்களுக்கு வாழ்க்கை துணைவியாவேன்.''

''அப்புறம்.''

''அப்புறம் டைரக்டா பாட்டியாயிடுவேன்.''

''அப்படியா, ரொம்ப சரி! டபிள் பிரமோஷன். இப்போ நான் கேட்கறதுக்கு சரியா பதில் சொல்லு, திவ்யா கண்ணு!''

''கேளுங்க.''

''நீ வந்ததும் கல்யாணப் பேச்சை எப்படி ஆரம்பிக்கறது?''

''வாயாலேதான்.''

''ஏய், இரு வெச்சுக்கறேன். நான் ஸீரியஸாகவே கேக்கறேன் பதில் சொல்லு இல்லேன்னா ஷட்டவுன் பண்ணிடுவேன் இப்பவே.''

''கோவிச்சுகாதீங்க ராஜா! இப்போ என்ன சொல்ல முடியும்? எப்படியாவது நல்லது நடக்கும்னு நம்புவோம். இன்னிக்கு நடந்த ஃபங்ஷன் உங்களை ரொம்பவே பாதிச்சிருக்கு. போய் படுத்து தூங்குங்க. எனக்கும் லேட்டாயிடுச்சி குளோஸ் பண்ணிடவா.''

''ஏய், திவ்யா, குளோஸ் பண்ணாதேயேன், இன்னும் கொஞ்சம் பேசலாமே.''

அவன் பதில் சொல்வதற்குள் இங்கே கரண்ட் போய்விட்டது. எமெர்ஜென்ஸி லைட்டில் அவளுக்கு ஒரு sms அனுப்பினான் வெளியே வந்து எல்லோருட னும் பேசிக் கொண்டு தன் ஏக்கத்தை மறக்கப் பார்த் தான்.

## 38

பொன்னியத்தைக்கு கைக் கட்டு பிரித்துவிட் டார்கள். ஆண்டவன் அருளால் நன்றாக கை எலும்பு கூடிவிட்டது. கல்யாணிக்கு டெலிவரி டைம் நெருங்க நெருங்க, அவளுக்கு எப்படியிருந்ததோ என்னவோ, ராமனாதனுக்கு டென்ஷன் தாங்கவில்லை. கோவிலில் பிரதட்சணம் செய்வதே அவன் வேலையாகிவிட்டது. ஆபீஸ் போய்வந்த நேரம் போக கோவிலிலேயே குடியிருந்தான். கல்யாணியை அவனும், பொன்னியத் தையுமாக உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார்கள். அவளை டாக்டர் அபயாம்பா டெலிவரி எதிர்பார்த்த தேதிக்கு இரண்டு நாட்கள் முன்னமேயே அட்மிட் செய்யச் சொல்லியிருந்தாள்.



மறுநாள் காலை கல்யாணியை ஹாஸ்பிடலில் அட்மிட் செய்யணும் என்பதால் முதல் நாள் ராமனாதன் தூங்கவேயில்லை. கல்யாணிக்கானால் அவன் தவிப்பு வேடிக்கையாக இருந்தது. ஆச்சரியமாகவும், ஆனந்த மாகவும் இருந்தது. இந்த ராமனாதன் அவளுக்கு புதுசு. கல்யாணம் ஆன புதிதில் எல்லாம் அவனுக்குப் பாவம் அதிகமாகப் பேசக் கூடத் தெரியாது. இவளும் ரொம்ப அமைதியான டைப். ஆக ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு மௌனமாக சிவகங்கை தோட்டத் திலோ, குளத்தங்கரையிலோ, பெரிய கோவில் பிரகாரத் திலோ ஒரு ஓரமாக உட்கார்ந்திருப்பார்கள். அடிக்கடி கல்லணை, முக்கொம்பு என்று போய் வந்து நாளை சந்தோஷமாகக் கழித்துவிட்டு வருவார்கள். மாமியாரா, நாத்தனாரா, யார் தடுப்பவர்? பொன்னியைப் பொறுத்த வரை சின்னஞ்சிறுசுகள் மகிழ்ச்சியாக இருக்கட்டும் என்று நினைத்து அதைப் பார்த்து தானும் சந்தோஷப் படுவாள்.

நிறைய நாட்கள் ஹோட்டல் மங்களாம்பிகாவி லிருந்து டிபன் வாங்கி வருவான். ஸ்டேஷன் அருகே ஆபீஸ் என்பதால் முக்கால்வாசி நாட்கள் கதம்பம் நிறைய வாங்கி வருவான். கல்யாணிக்கு கதம்பம் ரொம்பவே பிடிக்கும். ஸ்வாமிக்கு வைத்துவிட்டு தானும் நிறையவே சூட்டிக் கொள்வாள். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் காமாட்சி அம்மன் கோவிலுக்குக் கண்டிப் பாக போவார்கள்.

இருவருமாக உட்கார்ந்து பேசினால் தங்கள் இருவருக் கும்தான் நிறைய மனிதர்கள் இல்லை அதனால் தாங்கள்

ஒன்றிரண்டு குழந்தைகளுடன் எல்லாம் நிறுத்திக் கொள்ளக் கூடாது. குறைந்தது நான்கு குழந்தைகளாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள். அடுத்தது அந்தக் குழந்தைகளை எப்படி, எவ்வளவு அதிகபட்சம் நல்லவர்களாக வளர்க்க வேண்டும் என்று திட்டம் போடுவார்கள். இதுபோல் எத்தனையோ ஆரம்ப காலக் கனவுகள். ஆனால் குழந்தை பிறக்க இத்தனை ஆண்டுகள் ஆனபோதும் அவன் ஒரு நாளும் தன் நிராசையைக் காட்டிக் கொண்டானில்லை. அதன் காரணமாக அவளைச் சிறுமைப்படுத்தவும் இல்லை.

என்றைக்காவது அவள்தான் யாருடனும் பேசமாட்டாள். ஒரு ஓரத்தில் உட்கார்ந்து அழுவாள். அந்த மாதிரி நேரங்களில் எல்லாம் பலவற்றையும் பற்றிப் பேசி அவளைச் சமாதானப்படுத்துவது அவனாகத்தான் இருக்கும். சின்ன வயதிலிருந்து தான் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு தீர்வாய் வந்த தேவதை அவள் என்று அவளை அணைத்துத் தேற்றுவான். தன் தேவதை தானும் சிரித்து என்னையும் சிரிக்க வைக்க வேண்டுமே தவிர, ஒரு நாளும் கண்களில் பொட்டுக் கண்ணீர் சிந்துவதை தான் அனுமதிக்க முடியாது என்பான்.

இத்தனை அன்புக்கும் மேலேயே ஒருபடி அன்பை இவள் கர்ப்பமாக இருந்த மாதங்களில் அவள் மேல் சொரிந்தான். தினமும் ஒரு சின்ன துண்டு ஸ்வீட்டாவது வாங்கி வருவான். வெளியே ரொம்ப போக மாட்டார்கள். நடுவில் வாழ்க்கையில் ஒரு தொய்வு ஏற்பட்டதுபோல் உணர்ந்தவர்கள் இந்தச் சில மாதங்கள் முழுவதும்



தங்களுடைய இரண்டாவது வசந்தமாகவே உணர்ந்தார்கள்.

இப்போது பிரசவ நேரம் நெருங்க நெருங்க கல்யாணியை விட இவன்தான் பயத்தில் டென்ஷனிலேயே இருந்தான். உடம்பே இளைத்துவிட்டது. அத்தை இவனுக்கும் ராத்திரியில் ஹார்லிக்ஸும், பேரீச்சம் பழமும் கொடுப்பாள். ''எனக்கெதற்கு அத்தை அவளுக்குக் கொடுங்கள்'' என்று அவன் சொன்னால் ''இதைத்தான் குறத்தி பிள்ளை பெற்றால் குறவன் மருந்து சாப்பிடுவது என்பார்கள்'' என்று பாதி தனக்கும், பாதி அவனுக்குக் கேட்கிற மாதிரி முணுமுணுப்பாள்.

ஹாஸ்பிடலுக்குப் போகும் நாளும் வந்துவிட்டது. நல்ல வேளை பார்த்து, தலையில் வேப்பிலை சொருகி, பரிமளாவும், பொன்னியும் கல்யாணியுடன் ஏறிக் கொள்ள, ராமனாதன் வண்டி ஓட்ட, ஐயாரப்பன் காம்பௌண்ட் மனிதர்கள் எல்லோரும் வந்திருந்து ''நல்லபடியா போய் பிரசவித்து கையும் குழந்தையுமாய் வந்து சேரும்மா'' என்று வாழ்த்தி அனுப்பினார்கள்.

டாக்டர் செக்கப் செய்துவிட்டு ''அநேகமாக நாளைக்கு சிசேரியன் செய்துவிடுவேன்'' என்றாள். பரிமளா உடனே மறுநாள் என்ன நட்சத்திரம் என்று பார்த்துக் கொண்டாள் பரணியாக இருக்கவே பொன்னியிடம் சொல்லி சந்தோஷப்பட்டாள். அந்த 24 மணிநேரம் ராமனாதனை நல்லபடியாக கவனித்துக் கொள்வதே சீனிவாசன், சுப்பு எல்லோருக்கும் பெரிய வேலையாக இருந்தது. ஆபரேஷன் தியேட்டருக்குப் போகும் முன் கல்யாணி ''தைரியமா இருங்க'' என்று ராமனாதனுக்கும் மற்றவர்களிடம் ''அவரைப் பாத்துக்குங்க'' என்றும் சொல்லி

விட்டுப் போனாள். ஆபரேஷன் என்றால் யாருக்குத்தான் பயமில்லை? பிரசவம் என்றாலே பயம். அதிலும் ஆபரேஷன் வேறு. கல்யாணிக்கும் ரொம்ப பயமாகத் தான் இருந்தது. ஆனால் ராமனாதனைப் பார்த்தால், பாவமாக, கவலையாக, பெருமையாக, ஏன், கொஞ்சம் கோபமாகக் கூட இருந்தது.

உள்ளே ஆப்ரேஷன் நடந்து கொண்டிருந்தது. ராம னாதன் இருப்புக் கொள்ளாமல் நடந்து கொண்டிருந்தான். எத்தனையோ சினிமாக்களில் உள்ளே மனைவியை பிரசவத்திற்கு அனுப்பிவிட்டு வெளியே நடைபயிலும் கணவன்மார்களைப் பார்க்கும் போதெல்லாம் இவனுக் குச் சிரிப்புதான் வரும். உலகம் முழுவதும் கோடானு கோடி பேர் இப்படித்தானே பிரசவித்திருக்கிறார்கள். இதில் எதற்கு இத்தனை பயம், டென்ஷன்? அபத்தக் களஞ்சியமாக இருக்கிறது என்று தோன்றும்.

இன்று தனக்கென்று வரும்போதுதான் அந்த சூழ்நிலை என்னவென்று இவனுக்குப் புரிந்தது. கூடவே இருந் தவர்கள் ''நீ கொஞ்சம் பேசாமல் உட்காருப்பா'' என்று அவ்வப்போது சொல்லி உட்கார்த்தி வைப்பார்கள். ஐந்து நிமிஷம் கூட அவனால் உட்கார முடியாது. திரும்ப நடக்க ஆரம்பிப்பான். ஆஸ்பத்திரி வளாகத்திலேயே இருக்கும் வேங்கடாஜலபதி சந்நிதிமுன் சற்றுநேரம் உட் கார்ந்து தியானம் செய்யப் பார்ப்பான். ஆனால் அதிலும் மனம் செல்லாது. நியூஸ் பேப்பர், பத்திரிகை எதையும் பார்க்கவும் மனம் ஒன்றவில்லை எப்படியோ முள்ளின் மேல் இருப்பதுபோல் ஒரு 45 நிமிஷங்களைத் தள்ளினான்.

சிறிது நேரம் கழித்து ஆபரேஷன் தியேட்டர் கதவு திறந்து, நர்ஸ் வெளியே வந்தாள். எல்லோரும்



ஆவலுடன் அவள் முகத்தைப் பார்க்க, ''ரொம்ப நல்ல சேதிதான் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலம்'' என்றாள் சிரித்துக் கொண்டே. ''இதோ டாக்டர் கொண்டு வந்து காண்பிப்பார்'' என்றாள் எல்லோர் முகத்திலும் கொள்ளை சந்தோஷம். ''ராமனாதா, கன்கிராஜுலேஷன்ஸ், ஒரு ஆண் குழந்தைக்கு அப்பாவாயிட்டே!'' என்று எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள். சிறிது நேரம் கழித்து டாக்டர் நர்ஸுடன் வெளியே வந்தாள் நர்ஸ் கையில் பூப்போல குழந்தை இருந்தது. அதைப் பார்த்ததும் ராமனாதன் கையை நீட்டினான்.

''வாழ்த்துக்கள், மிஸ்டர். ராமனாதன். குழந்தையைப் பார்த்தீர்களா? ஆனால் நீங்க இப்போ குழந்தையைத் தொட முடியாது. குழந்தையை இன்குபேட்டரில் வைக்கப் போகிறேன். குழந்தை ஆரோக்கியமாக இருந்தாலும், ஒரு ஜாக்கிரதைக்காகத்தான் இந்த ஏற்பாடு. கவலைப் படாதீர்கள். கல்யாணி நார்மலாக இருக்காங்க. ஆனாக் கூட கொஞ்சம் அதிகப்படியான ஜாக்கிரதை எடுக் கணும். ஏன்னா அவங்களுக்கு ஒரு ஜலதோஷம் வந்தாலும் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாது. குழந்தைக்குத் தாய்ப் பால் மிக மிக அவசியம். இரண்டு நாளானதும் குழந்தையை உங்கள் கையில் கொடுக் கிறேன். சரியா?'' என்றாள் டாக்டர்.

''டாக்டர், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வோம் நாங்க?'' என்றாள் பொன்னி.

''இவ்வளவு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்த உங்களை நாங்க இந்த ஜென்மம் பூரா மறக்க மாட்டோம்'' என்றான் ராமனாதன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா. இதுஎன் கடமை இல்லியா? எனக்கும் ரொம்ப சந்தோஷம் தான். ஒரு வாரம் கல்யாணி இங்கேயே இருக்கட்டும். நீங்க வந்து போகலாம், பேசலாம். ஆனா அவளுக்கு ரொம்ப ஸ்ட்ரெயின் கொடுக்காதீங்க. யாருக்காவது ஜுரம், ஜலதோஷம்ன்னு இருந்தா கல்யாணிக்கிட்டேயே போகாதீங்க. ஆமாம், குழந்தை என்ன நட்சத்திரம்மா?'' என்று கேட்டாள் டாக்டர்.

''தரணியாளும் நட்சத்திரம்தான் டாக்டர், என் பேரன்'' என்றாள் பொன்னி.

''ஓ, பரணி நட்சத்திரமா? ஆல் தெ பெஸ்ட்'' என்று சிரித்தபடி தன் காரை நோக்கி நடந்தாள் டாக்டர்.

ராமனாதன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து, காம்பௌண்டின் கேட்டைத் தாண்டி உள்ளே நுழைகையில், மேலேயிருந்து பூமழை தூவி பட்டாசு வெடித்து அமர்க்களப் படுத்திவிட்டார்கள் சின்னவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து... குழந்தையைப் பார்த்த அந்த நிமிடத்தில் தன் மனதில் தோன்றிய உணர்ச்சிகளை அசைபோட்டு, அசைபோட்டு ஆனந்தப்பட்டு கொண்டிருந்த ராமனாதனுக்கு இந்த பூமழை ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது. எல்லா குழந்தைகளும் கை கொட்டி சிரித்து ''வெல்கம் ஹோம், நியூ டாடி!'' என்று பாடினார்கள். ராமனாதனும் சிரித்துக் கொண்டே எல்லோருக்கும் கையசைத்து நன்றி சொல்லி உள்ளே போனான்.

''அங்கிள், கல்யாணி ஆன்ட்டி குழந்தையோடு வீட்டிற்கு வந்த பிறகு கொஞ்ச நாள் ரொம்பவே சத்தம் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க பெரியவங்க. அதுதான் இன்னிக்கே உங்களுக்கு கிராண்ட் வெல்கம் கொடுத்துட்டோம்'' என்றனர்.



ஒரு வாரம் கழித்து கல்யாணியை குழந்தையோடு வீட்டிற்கு அனுப்பும்போது டாக்டர் நிறைய ஜாக்கிரதைகள், புத்திமதிகள் சொல்லி அனுப்பினாள். ''ஒரு மாதம் கழித்து பெயர் சூட்டும் விழா வைங்க. ரொம்ப தவிர்க்க முடியாதவங்களை மட்டும் கூப்பிடுங்க, போதும். அவங்க மூலமா ஏதாவது இன்பெக்ஷன் வந்துடக் கூடாது குழந்தைக்கு. பாத்துக்குங்க! குழந்தையை கல்யாணியைத் தவிர வேறு யாரும் தூக்கக் கூடாது கொஞ்ச நாளைக்கு. குழந்தைக்கு குளிப்பாட்டிவிட இரண்டு மாசத்துக்கு ஒரு நர்ஸை, அனுப்பறேன். ரொம்ப மென்மையா குளிப்பாட்டி விடுவாள்.. அப்புறம் ரொம்ப முக்கியமானது. கல்யாணி இருக்கும் ரூமை துளிக்கூட தூசி இல்லாமல் பாத்துக்குங்க'' என்று பெரிய லெக்சர் அடித்துவிட்டாள்.

எல்லா விஷயங்களையும் துளிக்கூட மாறாமல் அப்படியே கடைப்பிடித்தார்கள். குழந்தைக்கு ''ப்ருகதீஷ்''னு பெயர் வைக்கணும் என்று ராமனாதன் சொன்னதும், பொன்னியும், கல்யாணியும் சந்தோஷமாக ஒப்புக் கொண்டார்கள். ஐயாரப்பன் காம்பௌண்டே சந்தோஷத்தில் மிதந்தது.

## 39

திவ்யா இந்தியா திரும்ப வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் ஒரு நாள் போனில் பேசும்

போது. ''அம்மா, நான் M.S. முடித்ததும் எனக்கு இங்கேயே நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும். நீ என்னம்மா சொல்றே'' என்று கேட்டாள். லஷ்மி பட்டென்று ''என்ன நினைச்சிண்டு நீ இந்த கேள்வியைக் கேக்கறே? உன்னை அங்கே அனுப்பியதே தப்பு. பரிட்சை எழுதி முடித்த உடனேயே, ரிசல்ட்டுக்குக் கூட காத்திருக்காமே, மூட்டை முடிச்சைக் கட்டிண்டு வீடு வந்து சேரு'' என்று கறாராகச் சொல்லிவிட்டாள்.

சீனிவாசன் கூட கொஞ்சம் சபலப்பட்டார். ''எதுக்கு உடனே யோசிக்காமே வேண்டாம்னுட்டே'' என்று கேட்டார்.

''பின்னே என்னங்க! உங்க பொண்ணு பேசினதைக் கேட்ட அப்புறம் அடுத்தது அங்கேயே ஒரு பையனை கல்யாணம் கூட பண்ணிண்டுடுவாளோன்னு பயமா இருக்கு'' என்றாள் லஷ்மி.

''சேச்சே, அப்படியெல்லாம் பண்ணிக்கற எண்ணம் இருந்தா இத்தனை நாள்லே சொல்லியிருப்பாடி! அவ அங்கே வேலை பார்த்தா இங்கேயெல்லாம் நினைச்சுக் கூட பார்க்க முடியாத அளவு சம்பளம் வரும், தெரியுமா?'' என்றார்.

''பணம் வரும் ஆனா பொண்ணு வாழ்க்கை நன்னா அமையணுமா, வேண்டாமா? அதையும் யோசிக்கணும், இல்லையா'' என்றாள் லஷ்மி.

''அதுக்கில்லை, லஷ்மி! கொஞ்ச நாள் அங்கேயே இருந்து நன்னா சம்பாதிச்சுண்டு வந்தாள்னா, நன்னா செலவழிச்சு அவளுக்கு பெரிய இடமா பார்க்கலாம்.



நாமளும் இன்னும் இரண்டு பெண்களை வெச்சுண்டு இருக்கோமே, அதனால்தான் சொன்னேன்'' என்றார்.

''அந்தக் கதையே வேண்டாம். ஒரு தரம் அவ சம்பாதிச்சு ருசி கண்டாச்சுன்னா அவளுக்கும் சரி, நமக்கும் சரி அப்புறம் அவளுக்குக் கல்யாணம் பண்ற எண்ணமே போயிடும். நல்ல படியா படிப்பை முடிச்சுட்டு வந்து சேரச் சொல்லுங்க'' என்று கண்டித்துச் சொல்லிவிட்டாள்.

அந்த வெள்ளிக்கிழமையன்று அரவிந்திற்கு ஹாஸ்பிடல் ட்யூட்டி ஏதும் போடாததால் சீக்கிரமே வீடு திரும்பிவிட்டான். லஷ்மி சுந்தராவோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். வேறே என்ன? அன்று திவ்யா போனில் கேட்டது, சீனிவாசனோட அபிப்ராயம், தான் சொன்ன பதில் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள். தனக்கு அதில் சுவாரசியம் இல்லாதது போல் காட்டிக் கொண்டு தன் ரூமில் உட்கார்ந்திருந்தாலும் அவர்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவள் எப்படி அப்படிக் கேட்கலாம்? ஒரே ஆத்திரம் மூன்று மணி நேரத்தை எப்படியோ கழித்துவிட்டு திவ்யாவை ஆன்லைனில் கூப்பிட்டான்.

''ஏய், என்ன நினைச்சிண்டு இருக்கே உன் மனசிலே?'' என்றான்.

''உங்களையே தான் நினைச்சிண்டு இருக்கேன், வேறே என்ன நினைப்பு எனக்கு?''

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். இன்னிக் கார்த்தாலே உங்கம்மாகிட்டே என்ன பேசினே?''

''என்னன்னவோ பேசினேன். குறிப்பா ஒண்ணும் நினைவுக்கு வரலியே.''

''ஓஹோ, ஞாபகம் வரல்லியா! நான் ஞாபகப் படுத்தறேன். அங்கேயே வேலை பார்க்கட்டுமான்னு கேட்டியாமே?''

''ஓ. அதைக் கேக்கறீங்களா? ஆமாம், கேட்டேன்.''

''ஏய், என்ன நெஞ்சழுத்தம் உனக்கு? நான் ஒருத்தன் இங்கு பேக்கு மாதிரி காத்துக் கொண்டிருக்கிறேன். நீங்க அங்கேயே வேலை பார்ப்பீங்களோ?''

''பேக்குன்னேகூட சொல்லலாம்.''

''ஏய், திமிரா உனக்கு? சரி, நானும் உனக்கு ஒரு நியூஸ் சொல்றேன், கேட்டுக்கோ! எனக்கும் நியூஸிலாந்திலே மேல் படிப்புக்கு ஸீட் கிடைக்க நல்ல சான்ஸ் இருக்கு. அதுக்கு அப்ளை பண்ணப் போறேன். நானும் கிளம்பறேன், ஓ.கே.?''

''ஐயய்யோ, அப்புறமா நான் என்ன பண்ணுவேன்? சும்மா விளையாடினேன், அரவிந்த் டியர்! அதுக்குள்ளே இவ்வளவு கோபமா? ஸாரி, ரியலி ஸாரி! நான் இங்கிருந்தே கன்னத்தில் போட்டுக்கறேன்.''

''நன்னா வலிக்கற மாதிரி நாலு தரம் போட்டுக்கோ! இது ஒரு விளையாட்டா? ஒரு வேளை அங்கேயே வேலை பாருன்னு உங்க அப்பா, அம்மா சொல்லியிருந்தாங்கன்னா, என்ன பண்ணுவே, கிராக்கு.''

''ஹய், பேக்கு அண்டு கிராக்கு! நன்னா இருக்குமே ஜோடி.''

''நீ மட்டும் எங்கிட்டே இந்த நிமிஷம் இருந்தா என்ன பண்ணுவேன், தெரியுமா?''



''நீங்க என்ன பண்ணுவீங்கன்னு எனக்குத்தானே தெரியுமே!''

''என்ன பண்ணுவேன், சொல்லு பார்க்கலாம்.''

''அதெல்லாம் சொல்ல முடியாது, சார்! நான் தான் ஸாரி சொல்லிட்டேனே! இன்னும் எதுக்கு என்மேலே கோபமாம்! தவிர எனக்கு நிஜமாகவே அப்படி ஒரு எண்ணம் கிடையாது. சும்மா அப்பா, அம்மா நினைப்பைத் தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். நான் கேட்கும் போதே அவங்க ஒத்துக்க மாட்டாங்கன்னும் எனக்குத் தெரியும்.

''சரி, இருந்துட்டே வான்னு சொல்லியிருந்தா?''

''அப்போ நீங்களும் இங்கே வந்துட வேண்டியது தானே! இதோ பாருங்க, ப்ளீஸ் இதை இதோடு நீங்க விடல்லேன்னா...'' என்று சொல்லி கண்ணீர் விடும் சிம்பலை அனுப்பினாள்.

''ஐயய்யோ! என் செல்லம், அழக்கூடாது'' என்று இவன் ஸ்மைல் சிம்பலை அனுப்பினான்.

இருவரும் ஐ.எல்.யு. என்று கொட்டை எழுத்தில் டைப் செய்து கொண்டு ஷட்டவுன் செய்தனர். மனம் சற்று லேசானது போல் உணர்ந்தான். ஒரு பாட்டை விசிலடித்துக் கொண்டே மொட்டை மாடிக்குப் போய்விட்டான். அங்கு ஒரு மேடை உண்டு. என்றுமே அதில் படுத்துக் கொண்டு நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டே கனவு காண்பது அவனுக்கு ரொம்பவும் பிடித்த விஷயம். இப்போது நிலவில் திவ்யாவின் முகத்தை கற்பனை செய்துகொண்டு படுத்திருந்தான்.

# 40

வழக்கம்போல ஒரு மாலை வேளை பெண்களில் ஒய்வாக இருந்தவர்கள் உட்கார்ந்து பூத்தொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கல்யாணியின் பிள்ளை ப்ரகதீஷ் அழும் குரல் கேட்டது.

''இப்படி குழந்தையை அழவிட்டுவிட்டு அத்தையும் மருமாளும் என்னதான் பண்ணுகிறார்கள்? நான் போய்ப் பார்க்கட்டுமா?'' என்றாள் சுந்தரா.

''அதெல்லாம் இல்லை. சாயந்திரம் குழந்தை சற்று கத்தினால் தொண்டை பிரிந்து கொடுக்கும்பா. இரண்டு நிமிடம் கத்த விட்டுவிட்டு வயிற்றுக்குக் கொடுப்பா. திருஷ்டி சுத்திப் போடுவா. எங்க பக்கங்களிலேயும் இந்தப் பழக்கம் உண்டு.''

''அம்மா...! ஒரு மாதிரி பொன்னி பாட்டியாயிட்டா. வெளியே ரொம்ப காமிச்சுக்கலேன்னாலும் மூணு பேரும் கொஞ்சமாகவா வேதனைப் பட்டிருப்பார்கள்?''

''ஏம்மா நளினி! சுபாவோட கல்யாண வேலையெல்லாம் எந்த அளவில் இருக்கு'' என்றாள் பரிமளா.

''இன்னும் நாளிருக்கே! ஒரு நல்ல நாள் பார்த்து பானு மூர்த்தி ஆச்சாரிகிட்டே எல்லாம் பண்ணக் கொடுக்கணும். நீங்க யாராவதுதான் துணைக்கு வரணும்'' என்றாள் நளினி.

''அதுக்கென்ன, வந்தா போச்சு'' என்றாள் பரிமளா.



''ஏய் சுந்தரா, சுபா கல்யாணம் முடிஞ்சா அடுத்தது உன் பேரன் கல்யாணமா? பார்க்க ஆரம்பிக்கல்லியா?'' என்று பரிமளா கேட்க,

''அது பார்க்க ஆரம்பிக்கணும். ஆனா அதுக்கு முன்னாடி வேற முக்கியமான கல்யாணம் ஒண்ணு இருக்கே! அதுக்கப்புறம்தான் இது'' என்றாள் சுந்தரா.

''அது என்னம்மா, அப்படி ஒரு முக்கியமான கல்யாணம் எனக்குத் தெரியாமே? யாருக்கு?''

''ஆமாமா. உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கலாய்த்தாள் சுந்தரா.

''நெசமாகத்தான் கேக்கறேன். அதென்ன முக்கியமான கல்யாணம், யாருக்கு?''

''என்ன, பரிமளா அக்கா, வரதன் மாமாவுக்கு சதாபிஷேகம் இல்லையா? இன்னும் இரண்டு மாதம் தானே இருக்கு அதுக்கு'' என்று சுந்தரா சொன்னதுதான் பரிமளாவிற்கே நினைவுக்கு வந்தது.

''ஆமாம் சுந்தரா! நிஜமாகவே மறந்துதான் போயிட்டேன்'' என்றாள் பரிமளா.

அதற்குள் அங்கு உட்கார்ந்த தேவிகா, ''அத்தை, உங்க கிட்டே சொன்னேனே? அரவிந்த் ஜாதகத்தை ஜோசியர் கிட்டே காண்பிச்சேன். அவனுக்கு இப்போ குருபலன் வருதாம். இப்போ பண்ணலேன்னா ரொம்ப வருஷம் கல்யாணம் ஆகாதாம். அதனாலே ஒரு நல்ல நாள் பார்த்து ஜாதகத்தை எடுத்துக் கோவில்லே வெச்சு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடணும், அத்தை!'' என்றாள்.

''ஆமாண்டி, காலம் கெட்டுக் கிடக்கிறது அப்புறம் ஏதாவது லவ்வு, கிவ்வுன்னு கண்ட பொண்களையும்

கூட்டிக் கொண்டு வந்துட்டான்னா அப்புறம் வருத்தப் பட்டு பிரயோஜனமில்லை. என் பேரனோ மன்மதன் மாதிரி இருக்கான். பெண்களெல்லாம் அப்புறம் விட்டு வைக்காதில்லையா? சீக்கிரமே பார்க்க ஆரம்பிக்க வேண்டியதுதான்.''

''சுபம்'' என்றாள் பரிமளா.

''ஆமாம், சத்திரம் எடுத்தால்தான் தேவலை, இல்லையா, சதாபிஷேகத்திற்கு?'' என்றாள் தேவிகா.

''அதெல்லாம் வேண்டாம். நம்ம காம்பௌண்ட் மட்டும் போதும். ரொம்ப பெரிசா பண்ணினா திருஷ்டி பட்டுடும்.''

''பாக்கலாம். ஜெயந்தியும், கணேசனும் என்ன நினைச்சுட்டு இருக்காங்களோ'' என்று சுந்தரா சொல்ல அன்றைய கூட்டம் கலைந்தது.

திவ்யா திரும்பி வரும் நாளும் நெருங்கி விட்டது. இந்த முறை அரவிந்தை வீடியோவுடன் சேட்டிங்கில் கூப்பிட்டாள். இதுவரை அவர்கள் யாஹூ மெஸ்ஸஞ்சரில் டைப் செய்தோ, இல்லை, ஸ்கைப்பிலோ தான் பேசிக் கொள்வார்கள். என்றைக்காவது போனில் கூப்பிடுவாள். வீடியோவில் சாதாரணமாக வரமாட்டாள். யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று இருவருக்கும் பயம். இன்றைக்கு யாருமில்லாத ஒரு வேளையில் பேசி வைத்துக் கொண்டு கூப்பிட்டாள். இவனுக்கு ஒரே த்ரில்.

''ஏய், திவ்யா குட்டி ஐய்யோ, வீடியோவில் பாக்கறச்சே நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?

''நீங்க கூடத்தான் ரொம்பவும் அழகா இருக்கீங்க, என் கனவுலே வர மாதிரி'' என்றாள் திவ்யா.



''ஆமா, நீ எப்போ வருவே, என்னிக்கு, எத்தனை மணிக்கு, எந்த ஃபிளைட்?''

''மெதுவா, மெதுவா!'' என்றவள் தான் கிளம்பும் தேதி, நேரம் சொன்னாள்.

''ஒகே! ஃபிளைட் நம்பர் சொல்லு. எந்த ஏர்லைன்ஸ்?''

''அது வேண்டாமே உங்களுக்கு'' என்றாள் திவ்யா.

''ஏய், என்ன விளையாடறயா? ஏன் வேண்டாம்? நான் ஏர்போர்ட்டுக்கு வர வேண்டாமா?''

''வேண்டாம், ராஜா வேண்டாம்'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''ஏன், திவ்யா, உன்னை உடனே பார்க்கணும்னு நான் எப்படி துடியாத் துடிக்கறேன், தெரியுமா? இது உனக்குப் புரியலையாடா'' என்றான்.

''புரியுது, ராஜா, புரியுது எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா என்ன? ஆனா நம்ம இரண்டு பேரின் ஒரு செய்கையோ, ஒரு சின்ன கண்ணசைவோ நம்மளைக் காட்டிக் கொடுத்துவிடும். தயவு செய்து புரிஞ்சிக்கோங்க, டியர்'' என்றாள்.

''காட்டிக் கொடுக்கட்டுமே! சீக்கிரமே தெரிய வேண்டிய விஷயம்தானே இது.''

''தெரியும்போது தெரியட்டுமே வந்ததும் வராததுமா உரசல் வேண்டாமே! சரி. உங்களுக்காக ஃபிளைட் நம்பர் கொடுக்கறேன். ஆனா ஏர்போர்ட்டுக்கு நீங்க வரக்கூடாது.''

''ஹூம், சரி மேடம்.''

''என் மேல் கோபமா.''

''இல்லைடா கண்ணா! உன் மேலே ஒரு நாளும் நான் கோபப்பட மாட்டேன். ஏமாற்றம்தான். ஆனா ஒரு கண்டிஷன். நீ வீட்டுக்கு வந்ததும் என்னைப் பார்க்கணும் சரியா?''

''என் ராஜாயில்லே, அது வேண்டாம் அப்போ பாதி ராத்திரி ஆயிடும். மறுநாள் வெச்சுக்கலாமே நம்ம சந்திப்பை'' என்று திவ்யா சொல்ல அவனும் அரை மனதுடன் சம்மதித்தான்.

அன்று வெள்ளிக்கிழமை. இரவு 11 மணிக்கு திவ்யா வரும் ஃபிளேன் வருகிறது.

''ஏர் போர்ட்டுக்கு, லக்ஷ்மி, காவ்யா, ரம்யா, எல்லோரும் வரணுமாம். என் காரில் இடம் பத்தாது. ரங்கா, இன்னிக்கு உன் Xyloவை எடுத்துக் கொண்டு போகலாமா?'' என்று கேட்டார் சீனிவாசன்.

''தாராளமா எடுத்துகிட்டுப் போயேன். ஒரு பிரச்னையும் இல்லை. ஆனா எனக்கு ஆபீசில் கொஞ்சம் வேலை இருக்கு. உன்னால் Xyloவை ஓட்ட முடியுமா? பழக்கமில்லாத வண்டியாச்சே, பரவாயில்லையா?'' என்று கேட்டார் ரங்கா.

பிறகு ''அரவிந்தைக் கேட்கலாம், அவன் ஃப்ரீயாக இருந்தால் அவனை வரச் சொல்றேன்'' என்று அவனை கூப்பிட்டு ''இன்னிக்கு ராத்திரி ஏர்போர்ட்டுக்கு இவங்களைக் கூட்டிகிட்டுப் போறாயாடா?'' என்று கேட்டார்.

''என்ன விசேஷம்? எதற்கு ஏர்போர்ட்? யார் வராங்க?'' என்று ஒன்றும் தெரியாத அப்பாவி போல் கேட்டான். அரவிந்த்.

''என்னடா, மறந்துட்டியா? இன்னிக்கு திவ்யா வராளே ஸ்டேட்ஸிலிருந்து. அதுக்குத்தான்'' என்றார் ரங்கா.



''ஆமா இல்லே! ஆனா எனக்கு இன்னிக்கு நைட் ஹாஸ்பிடலுக்கு போகணுமோ என்னவோ'' என்றான் தனக்கு சுவாரசியமில்லாதது போல் காட்டிக் கொண்டு.

''பின்னே நான் வேணும்னா ஸ்டேஷன்லே யாராவது டிரைவர் இருப்பான், கேட்டுப் பாக்கறேன்'' என்றார் ரங்கா.

அரவிந்த் டென்ஷனாகி விட்டான். காண்பித்துக் கொள்ளாமல், ''இல்லேப்பா, நானே அங்கிளைக் கூட்டிக்கிட்டுப் போறேன். என் பிரண்ட் ராஜனை நைட் டியூட்டிக்குப் போகச் சொல்றேன்'' என்றான்.

ஏர்போர்ட்டுக்குப் புறப்படும் முன் ரம்யா ''ஃபிளைட் கரெக்ட் டைமான்னு விசாரிச்சுகிட்டுப் போகலாமே'' என்றாள்.

''அதுவும் சரிதான். நீயே போன் பண்ணிக் கேளம்மா'' என்றார் சீனிவாசன்.

போன் செய்த ரம்யா ''அப்பா, ஃபிளைட் மூன்று மணி நேரம் லேட்டாம். 2 மணிக்குத்தான் வரும். அப்புறம் இமிக்ரேஷன் கிளியரன்ஸ் எல்லாம் ஆகி அவள் வெளியே வர மூணு மணியாகிவிடும். ஒரு மணிக்குப் புறப்படலாமே'' என்றாள்.

''அம்மா காவ்யா, நீ போய் அரவிந்த் அண்ணாவிடம் சொல்லிவிட்டு வந்துடம்மா. ராத்திரி ஒரு மணிக்குப் புறப்படலாம்ன்னு'' என்றார் சீனிவாசன்.

மறுபடியும் கிளம்பும் சமயத்தில் போன் செய்து விசாரித்ததில் இன்னும் 2 மணி நேரம் லேட் என்றார்கள். ''இதேதுடா வம்பாப் போச்சு? அந்தப் பிள்ளை அரவிந்தை வேறே தொந்திரவு பண்ண வேண்டியிருக்கே, ராத்தூக்

மில்லாமே'' என்று அலுத்துக் கொண்டார் சீனிவாசன். அவருக்கென்ன தெரியும் எப்படியுமே அவனுக்கு அன்று ராத்தூக்கம் கிடையாது என்பது. அதற்குள் லக்ஷ்மி காவ்யாவை அனுப்பி அரவிந்திற்கு விஷயத்தைத் தெரிவித்து விட்டாள்.

மறுபடியும் இரண்டு மணி நேரம் கழித்து போன் செய்ததில் அந்த விமானம் வந்து சேருவதில் கொஞ்சம் பிரச்னை இருக்கிறது என்றார்கள். இவர்களுக்குப் புரிய வில்லை. என்ன பிரச்னையாக இருக்கும்? எல்லோரும் ரொம்ப டென்ஷனாகி விட்டார்கள். அதன் பிறகு எப் போது போன் செய்தாலும் தொடர்பு கிடைக்கவில்லை. காலை மணி 4 ஆகிவிட்டது. இவர்களுக்கும் என்ன செய்வதென்பதே புரியவில்லை. பிறகு ரங்கராஜனைப் போய்ப் பார்த்து யோசனை கேட்கப் போனார் சீனிவாசன்.

ரங்கராஜன் அந்த அதிகாலையிலேயே வெளியே போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். விஷயத்தை கேட்டவுடன் அவருக்கும் சற்று கவலையாகி விட்டது. ''பரவாயில்லை கொஞ்சம் லேட்டாகவே போய்க் கொள் கிறேன். ஏர்போர்ட்டில் என் பிரண்ட் ஒருத்தன் பெரிய வேலைலே இருக்கான். அவன் செல் நம்பர் எங்கிட்டே இருக்கு. அவனுக்குப் போன் செய்து பார்க்கிறேன்'' என்று சொல்லி உடனே அவருக்குப் போன் போட்டார்.

அந்த நண்பன் என்ன சொன்னானோ என்னவோ சட்டென்று ஒரு நிமிஷம் ரங்காவின் முகம் கலவரமாகி விட்டது. உடனே ஒரு நொடியில் சுதாரித்துக் கொண் டவர் ''அவன் ட்யூட்டியில் இல்லையாம். கேட்டுச் சொல்கிறானாம். நீ போ சீனு நான் கேட்டுத் தெரிஞ்



சிண்டு உனக்குத் தகவல் சொல்றேன்'' என்றார். சீனிவாசன் தன் வீட்டிற்குப் போனார்.

ரங்கராஜன் அரவிந்தைக் கூப்பிட்டார். ''இதோ பார் அரவிந்த் ஃப்ளைட்டைப் பற்றி ஏதோ எக்குத் தப்பான நியூஸ். சரியான விவரம் இன்னும் தெரியல்லையாம். விசாரித்துப் போன் பண்ணுவதாக என் பிரண்ட் சொன் னான். இப்போதைக்கு சீனிவாசனுக்கு வேறே ஏதாவது சொல்லி சமாளிக்கணும்டா'' என்றார்.

சிலையாய் நின்று விட்டான் அரவிந்த்.

''நீ ஏண்டா அப்படியே நிக்கறே? ஒண்ணும் இருக் காதுன்னு நம்புவோம். பாவம் சீனிவாசன் நல்லவன். அவனுக்கு ஒரு கெடுதலும் வராது'' என்றார்.

அடுத்த கொஞ்ச நேரத்தில் ஐயாரப்பன் காம்பௌண்டே அமர்க்களப்பட்டது. ஆம். ரங்கராஜனின் பிரண்ட் நீலகண்டன் போன் செய்து அந்த துக்ககரமான செய் தியைச் சொன்னார். அந்த விமானம் லண்டனிலிருந்து புறப்படும்போது தீப்பிடித்து பாதிக்குமேல் எரிந்து நாசமாகி விட்டது. நிறைய பிரயாணிகள் உடல் கருகி இறந்து விட்டனராம்.

சட்டென்று எதற்கும் கலங்காத ரங்கராஜனே அதிர்ந்து போய் அப்படியே சோபாவில் உட்கார்ந்து விட்டார். சுந்தராம்பா ''என்னடா, என்னடா'' என்று கத்திக் கேட்க தேவிகாவும் அதிர்ந்து போய் ''ஐய்யோ'' என்று அலறி விட்டாள். சீனிவாசனுக்குச் சொல்லும் சிரமத்தை ரங்கா விற்கு வைக்காமல் ஏர்போர்ட் அதிகாரிகளுடன் பேசிய போது போனிலேயே தெரிவித்து விட்டனர்.

ஐயாரப்பன் காம்பௌண்ட்டே ஸ்தம்பித்து விட்டது. ''ஐயோ, இப்படியா ஆகணும்?'' என்று எல்லோரும்

சீனிவாசன் வீட்டிற்குப் போய் அவர்களுக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கினர்.

''முழுசா விமானம் எரியல்லையாம். அதனால் நம்ம திவ்யா பிழைத்திருக்க சான்ஸ் இருக்குன்னு நாம நினைப்போம். அந்தக் குழந்தைக்கு ஒன்றும் ஆகியிருக்காது'' என்று ஆளாளுக்குச் சொன்னார்கள். மறுபடி, மறுபடி ஏர்போர்ட்டுக்குப் போன் செய்தாலும் லைன் கிடைக்கவில்லை. ரங்கா தன் நண்பருக்குப் போன் செய்து பிழைத்திருப்பவர் பட்டியல் கிடைக்குமா என்று கேட்க, அதற்குச் சற்று நேரம் ஆகும் என்று பதில் கிடைத்தது.

''அரவிந்த், இதெல்லாம் சரிப்படாது. வா நாம் நேரே ஏர்போர்ட்டுக்கே போய் விசாரிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிய ரங்கா, அங்கே அவன் இல்லாததைக் கண்டு திகைத்தார். எங்கே போனான் இவன்?

''எங்கே அரவிந்தைக் காணோம்?'' என்று ரங்கா தேவிகாவைக் கேட்க, ''இங்கேதானே இருந்தான்!'' என்றாள் அவள். இதற்குள் ராஜேந்திரன் அங்கு வர, ''இதோ, நான் போய் பார்க்கிறேன்ப்பா'' என்றான்.

அரவிந்த் ரூமில் போய் கதவைத் தட்டினான் ராஜேந்திரன். பதிலில்லை. சிறிது இடைவெளிவிட்டு மறுபடியும் கதவைத் தட்டினான். அரவிந்திற்கு சிறிது நேரம் பிடித்தது கதவைத் திறப்பதற்கு. அவன் வெளியே வந்த கோலத்தைப் பார்த்ததும் பயந்தே போய்விட்டான் ராஜேந்திரன்.

''என்னண்ணா, என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி இருக்கே?'' என்று கேட்டான்.



''ஒண்ணுமில்லைடா, எதுக்குக் கூப்பிட்டே, சொல்லு?'' என்றான் அரவிந்த்.

''அப்பா கீழே உன்னைக் கூப்பிடறார்'' என்றான் ராஜேந்திரன்.

''நீ போ, நான் இதோ வரேன்.''

ராஜேந்திரன் கீழே போய் கொஞ்ச நிமிஷங்களில் தன்னை சரி செய்து கொண்டு அல்லது அப்படி நினைத்துக் கொண்டு கீழே வந்தான்.

தேவிகாவிற்கு அரவிந்தைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. ''ஏண்டா இப்படி இருக்கே?'' என்றாள்.

''திடீர்னு ரொம்ப தலைவலி, அதுதான் முடியல்லே'' என்றான் அரவிந்த்.

''நிஜம்தான். நமக்கு ரொம்ப வேண்டியவங்களுக்கு இவ்வளவு பெரிய கஷ்டம்னா அப்படித்தான் இருக்கும்'' என்றாள் தேவிகா.

ரங்கா சொன்னார் ''நான் ஏர்போர்ட் போகக் கிளம்பிண்டு இருக்கேன். நீ ஒருவேளை கூட வருவாயோன்னுதான் கூப்பிட்டனுப்பினேன். பரவாயில்லை நீ போ. நான் ராஜேந்திரனைக் கூட்டிப் போறேன். என்னடா நீ வறியா?'' என்று கேட்டார் ராஜேந்திரனைப் பார்த்து.

''நான் வரேம்பா'' என்றான் ராஜேந்திரன். அரவிந்த் மாடிக்குப் போய்விட்டான். சீனிவாசன் வீட்டில் எல்லோரும் கூடிவிட்டார்கள். யாரோ டி.வி.யை ஆன் செய்திருந்தார்கள். வேறு ஏதோ நிகழ்ச்சியின் கீழே செய்தி வரிகள் ஓடிக் கொண்டிருந்தது. ''லண்டனிலிருந்து சென்னை வரவேண்டிய விமானம் லண்டன் ஏர்போர்ட்டில் புறப்படும்போதே தீப் பிடித்து விபத்துக்குள்ளாகியது.

முன் பகுதி தீ பிடித்ததால் பின் பகுதியிலிருந்த சிலர் பிழைத்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் சரியாகத் தெரியவில்லை'' என்று.

இந்த செய்தியைப் பார்த்ததும் எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள். சட்டென்று உள்ளே நுழைந்தார் வரதன். ''இதென்ன சப்தம் இப்போ? திவ்யாவிற்கு ஏதோ ஆகி விட்டதுன்னு ஏன் நினைக்கணும்? அதுதான் சில பேர் பிழைத்திருக்கலாம்னு செய்தி வருதில்லே? பிழைத்திருப்பவர்களில் அவள் ஒருத்தியாக இருக்கபடியா வந்துடுவா'' என்று ஒரு சப்தம் போட்டார்.

''இந்தா சீனிவாசா! எழுந்திரு'' என்று சோபாவின் கைப்பிடியில் சாய்ந்து தேம்பிக் கொண்டிருந்த சீனிவாசனை எழுப்பினார். ''நீ இப்படி அழுதால் பெண்களெல்லாம் இன்னும் அழமாட்டாங்களா? ரங்கராஜன் ஏர்போர்ட்டுக்குப் போயிருக்கான் இல்லையா, அவன் ஒரு நல்ல செய்தியோடுதான் வருவான். எல்லோரும் எழுந்து அவரவர் வீட்டிற்குப் போங்க. போய் தூங்க முயற்சி செய்யுங்க. ரங்கா இன்னும் இரண்டு மணி நேரத்திலே நல்ல நியூஸோட வருவான்'' என்று நயமாகவும், பயமாகவும் சொல்லி எல்லோரையும் கிளப்பினார்.

''சரி, அண்ணா! நாங்கள் அழவில்லை. நல்ல செய்தி வரும் என்று நம்பி பிரார்த்தனை பண்ணறோம்'' என்றாள் சுந்தரா.

அரவிந்த் திரும்ப தன் அறைக்குப் போய் கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டான். 'இவன் டாக்டராகி என்ன செய்யப் போறான்? ரொம்பக் கோழையாக



இருக்கானே! மனதில் தைரியம் வேண்டாமா?' என்று தேவிகாவிற்குத் தோன்றியது. அதற்குள் ரங்கராஜன் ஏர்போர்ட்டிலிருந்து போன் செய்தார். ''அந்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் பிரிலிமனெரி லிஸ்ட் வந்துவிட்டது. அதில் நம் திவ்யா பெயரும் இருக்கிறது. ஆனால் ஃபைனல் லிஸ்ட் ஆஃப் பாசஞ்சர்ஸ், மற்றும் பிழைத்துள்ளவர்களின் விவரம் தெரிய இன்னும் கொஞ்ச நேரம் ஆகும் போலிருக்கு. நான் எல்லா விவரங்களையும் சேகரிச்சுண்டு வரேன்'' என்றார்.

இரண்டு மணி நேரம் தூக்கு மேடையை நெருங்கும் கைதியின் மனநிலையில் கழிந்தது. திடீரென்று சீனிவாசன் வீட்டில் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு போன் அலறியது. எல்லோரும் போன் அருகில் பாய்ந்து ஓடினர். ரம்யாதான் முதலில் போனை எடுத்தாள். ''ஹலோ, யார் பேசுவது.''

முதலில் யார் பேசுவது யார் என்று சரியாகக் காதில் விழவில்லை. கூடவே விமானம் புறப்படும் ஓசையும் கேட்டது. ரங்காதான் பேசுகிறார் என்று நினைத்து, ''அங்கிள், என்ன ஆச்சு? திவ்யாவைப் பற்றி என்ன நியூஸ்?'' என்று கேட்டாள்.

''ஹலோ, ஹலோ! நான் திவ்யா பேசறேன்.''

ரம்யாவிற்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ''யார், யாரு பேசறது?''

''நான் திவ்யா பேசறேன் அங்கே யார் பேசறது.''

அப்பா, அப்பா நம்ம திவ்யா.'' என்று திக்கித் திணறி சொல்ல ஆரம்பிக்க சீனிவாசன் பதறியடித்துக் கொண்டு ஓடிவந்தார். ''என்னடி, என்ன ஆச்சு?''

''அப்பா, நம்ம திவ்யா தான் பேசறா'' என்று உரக்கக் கத்தினாள். அதற்குள் அங்கு உட்கார்ந்திருந்த ப்ரதீப் வெளியே ஓடினான். ''நம்ம திவ்யா அக்கா பொழைச் சுட்டா. போன்லே பேசறா'' என்று உரத்த குரலில் மற்றவர்கள் காதில் விழும்படி சொல்லிவிட்டு திரும்ப வீட்டிற்குள் ஓடினான். அவரவர் வீட்டிற்குப் போனவர்கள் திரும்ப ஓடி வந்தனர். அரவிந்த் தான் அவர்களில் முதல் ஆள்.

ரம்யா போனில் தொடர்ந்தாள். ''அக்கா, எங்கேருந்து பேசறே? உனக்கு ஒண்ணும் ஆகல்லியே? என்னக்கா இப்படி பண்ணிட்டே? நீ நல்லா இருக்கேன்னு ஒரு போன பண்ணியிருக்கக் கூடாதா? இங்கே நாங்கள் எல்லோரும் எப்படி தவித்துப் போய்ட்டோம், தெரியுமா? அப்பா, அம்மா ரொம்பவும் அழுதுகிட்டு இருக்காங்க. மொத்த காம்பௌண்டும் அழுதுகிட்டு இருக்கு. இந்தா அப்பாவிடம் பேசு'' என்று சொல்லி சீனிவாசனிடம் ரிசீவரைக் கொடுத்தாள்.

''அம்மா திவ்யா, என் கண்ணே! உனக்கு ஒண்ணும் இல்லையே, நீ பொழைச்சுட்டேதானே? ஏம்மா முன்னாடியே போன் செய்யல்லே?'' என்று கேட்டு அழ ஆரம்பித்தார்.

''அப்பா, அப்பா! அழாதீங்கப்பா, எனக்கு ஒண்ணும் ஆகல்லேப்பா. நான் நல்லா இருக்கேன். நீங்க போனை ஸ்பீக்கரில் போடுங்க. நான் எல்லா விவரங்களையும் சொல்றேன்'' என்றாள்.

''அப்பா, நான் புறப்படுவதற்கு ஒரு வாரம் முன்னாலே என் சிநேகிதி அவந்திகாவைப் பார்த்தேன்.



அவள் ஒரு பைலட்டின் மனைவி. அவளும் அந்த விமானத்தில் என்னோடு புறப்பட்டு இந்தியா வரப் போவதாகச் சொன்னாள். தான் மட்டும்தான் இந்தியா போவதாகவும் அதனால் இருவரும் சேர்ந்தே ஒரு டாக்ஸியில் ஏர்போர்ட்டுக்குப் போகலாம் என்று சொன்னாள். அவள் வந்து என் ஹாஸ்டலிலிருந்து என்னைப் பிக்கப் செய்து கொள்வதாகச் சொன்னாள். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். நாங்கள் டாக்ஸியில் புறப்பட்டு ஏர்போர்ட்டுக்குப் போகும் வழியில் பெரிய டிப்பார்ட்மெண்டல் ஸ்டோர் ஒன்று உண்டு. அங்கே 99 செண்ட்டில் நல்ல சாமான்கள் எல்லாம் கிடைக்கும் என்று அவள் சொல்லி கடைக்குள் நுழைந்தாள். உங்களுக்கெல்லாம் ஏதாவது சாமான்கள் வாங்கலாம்னு நானும் அவளுடன் நுழைந்தேன். சாமான் வாங்கும் மும்முரத்தில் மணி ஓடினதே தெரியவில்லை. பின் அவசரம் அவசரமாக ஏர்போர்ட் ஓடினோம். ஆனால் அதுக்குள்ள விமானம் புறப்பட்டு விட்டது. எனக்கு ரொம்பவும் அழுகை வந்துடுச்சி. எல்லாம் உன்னால் தான் வந்ததுன்னு அவந்திகாவுடன் சண்டை போட்டேன். ஆனால் அவள் ஒன்றுமே அலட்டிக் கொள்ள வில்லை. ''நாளைக்குப் போனால் போச்சு'' என்றாள் கூலாக. நான் ''முடியவே முடியாது எனக்கு இன்னிக்குக் கண்டிப்பாக போயே ஆகணும். இல்லைன்னா எங்க வீட்ல ரொம்ப கவலைப் படுவாங்க. பெரிய அமர்க்களமாகிவிடும்''ன்னு ரொம்ப அடம் பிடிச்சேன். அதனாலே நாங்க அங்கே விசாரித்ததிலே இங்கிருந்து இந்தியா போக உடனேயே இன்னும் இரண்டு, மூன்று ஃபிளைட்கள் இருக்குன்னாங்க. சரி, முயற்சி பண்ணு

வோம்'' என்று சொல்லிவிட்டு அதற்கு முயற்சித்தோம். லண்டன் வழியாகச் செல்லும் மற்றொரு விமானத்திலும் இடமில்லைன்னுட்டாங்க. மூன்றாவதாக கிளம்பும் விமானத்திலும் அப்போதுதான் புக்கிங் க்ளோஸ் பண்ணியிருந்தாங்க..'' எனக்கு ஜுரம் வரும்போல இருக்கு. அப்படி ஜுரம் வந்துட்டா விமானத்தில் ஏறவிட மாட்டாங்க. அதனால் எப்படியாவது உன் கணவனின் இன்ஃபுளியன்ஸை யூஸ் பண்ணி எனக்கு மட்டும் ஒரு டிக்கெட் அந்த ஃபிளைட்டில் வாங்கிக் கொடு''ன்னேன். என்னைத் திட்டிண்டே மிகவும் கஷ்டப்பட்டு யார் யாரிடமோ பேசி, கெஞ்சி, ஒரே ஒரு டிக்கெட் வாங்கிக் கொடுத்தாள். அந்த அமர்க்களத்திலே உங்களுக்கு போன் பண்ண முடியல்லே. தவிர அந்த விமானத்தை விடவே இது சீக்கிரம் இந்தியா போயிடும்ன்னு சொன்னாங்க. சரி அப்புறமா போன் பண்ணிக்கலாம்னு இருந்துட்டேன்.

அப்புறம்தான் தெரிஞ்சிது இந்த விமானம் ஃப்ராங்பர்ட் போயி மும்பை வழியே சென்னை போற விஷயம். சரி, ஃப்ராங்பர்ட்டிலிருந்து உங்களுக்குப் போன் செய்யலாம்னு இருந்துட்டேன். ஆனா எவ்வளவு முயற்சி செய்தும் எனக்கு அங்கிருந்து லைன் கிடைக்கலே. எனக்கும் ரொம்ப தலைவலியாக இருந்தால் சரி, மும்பை போயி போன் செய்யலாம்னு நினைச்சு அப்படியே தூங்கிப் போயிட்டேன். இப்போ மும்பையிலிருந்துதான் போன் பண்றேன். நான் முதல்லே வர இருந்த விமானம் லண்டன்லே தீப் பிடித்து எரிஞ்சு போச்சுங்கற விஷயம் எனக்கு இங்கே வந்துதான் தெரியும். அதுதான் உடனே உங்களுக்குப் போன் பண்ணினேன். என்னோட



விமானம் இன்னும் சிறிது நேரத்தில் புறப்பட்டுடும். சென்னை வந்ததும் நானே ஒரு டாக்ஸி பிடித்து வீட்டுக்கு வந்துடறேன். பாவம் நீங்களெல்லாம் மனதளவிலே ரொம்பவே பாதிக்கப்பட்டு இருக்கறதனாலே யாரும் ஏர்போர்ட்டுக்கு வர வேண்டாம். நானே வந்துடறேன், சரியா? போனை வெச்சுடறேன்'' என்றாள் திவ்யா.

அதுவரை கேட்டுக் கொண்டிருந்த அரவிந்த் வெடுக்கென்று. போனை சீனிவாசனிடமிருந்து பிடுங்கி, ''நான் அரவிந்த் பேசறேன். எதுக்கு நீ இந்த ராத்திரியில் தனியா டாக்ஸியில் வரது? நாங்கள் எல்லாம் இல்லையா? இப்பகூட எங்கப்பா ஏர்போர்ட்டுக்குத்தான் போயிருக்கார். உனக்கு என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கறதுக்கு. அதனாலே நான் வந்துண்டு இருக்கேன். நீ மும்பையிலிருந்து இங்கே லாண்ட் ஆகறதுக்குள்ளே நான் வந்துடுவேன். தனியா ராத்திரியில் டாக்ஸியில் வரக் கூடிய ஊரா சென்னை? ஐம் கம்மிங் நோ செகண்ட் தாட்'' என்று உறுமிவிட்டு போனை வைத்தான்.

''என்னப்பா, நீ போய்க் கூட்டிக் கொண்டு வரயா அவளை'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டார் சீனிவாசன்.

தன் கையைப் பிடித்திருந்த சீனிவாசனின் கையைப் பிடித்துப் பார்த்த அரவிந்த், ''அங்கிள், உங்களுக்கு உடம்பு ரொம்ப ஆடுகிறது. பேசாமே கொஞ்சம் தூங்க முயற்சி பண்ணுங்க, அங்கிள். நான் போய் கூட்டிக் கொண்டு வரேன்'' என்றான்.

''வேணுமானா நான் வரட்டுமா? என்றான் ராமநாதன்.

''வேண்டாம், வேண்டாம் நானே போயிட்டு வரேன்'' என்று சொல்லி அவன் கிளம்புவதற்குள் எல்லோருக்கும் திவ்யா காலையில் வந்ததும் கொடுப்பதற்காக வைத்திருந்த லட்டுவை கொண்டு வந்து கொடுத்தாள் லக்ஷ்மி. எல்லோருக்கும் சந்தோஷத்தினால் கண்களில் கண்ணீர், ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர்.

ஒரு துளி லட்டுவை வாயில் போட்டுக் கொண்ட அரவிந்த் அவசரமாகக் கிளம்பி விட்டான். அவன் கவலை அவனுக்கு. நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சற்று நின்றால் யாராவது தொத்திக் கொண்டு விடுவார்களோ என்று அவன் கவலைப் பட்டான்.

போகும்போதே அவன் அப்பாவிற்குப் போன் பண்ணினான். ''டேய், அரவிந்த், எனக்கு ரொம்ப துக்கமா இருக்குடா அந்த விமானத்திலே வந்தவங்க ஒருத்தர்கூட பிழைக்கலேன்னு இப்பத்தாண்டா முழு விவரத்தையும் வெளியே விடறாங்க'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார் ரங்கராஜன்.

''அப்பா, என்னைக் கொஞ்சம் பேச விடுங்களேன். திவ்யா நன்னா இருக்காப்பா. இப்பதான் போன் பண்ணினாள். அந்த ஃபிளைட்டை மிஸ் பண்ணிட்டாளாம். வேறே ஃபிளைட்லே வந்திண்டு இருக்கா. இந்த ஃபிளைட் மும்பையை டச் பண்ணி வரதனாலே இன்னும் கொஞ்சம் நேரத்திலே சென்னைக்கு வந்துடுவா. நான் அவளைக் கூப்பிடப் போயிண்டு இருக்கேன் ஆன்ட்டி, சீனிவாசன் அங்கிள் எல்லோரும் ரொம்ப டென்ஷனாக இருந்தனாலே நான் மட்டும் ஏர்போர்ட் போயிண்டு இருக்கேன். நீங்க எங்கேப்பா இருப்பீங்க?'' என்று கேட்டான்.



''ஓ. தேங்க் காட்! திவ்யா பொழைச்சுட்டாளா? ரொம்ப நல்ல நியூஸ் சொன்னேப்பா! நான் வீட்டுக்குத்தான் போயிண்டுருக்கேன். நானும் ஏர்போர்ட்டுக்கே திரும்பி வரேன், நீ எனக்காக வெயிட் பண்ணு'' என்றார்,

''வேணாம்ப்பா, நீங்க ரொம்ப சிரமப்பட்டுட்டீங்க. நான் போய் சீக்கிரமா கூட்டிகிட்டு வந்துடறேன். நீங்க வீட்டுக்குப் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. ஆன்ட்டி லட்டு தருவாங்க. சாப்பிட்டுட்டுப் போய் தூங்குங்க.''

''இந்த வரைக்கும் திவ்யா நல்லபடியா இருக்கான்னு நல்ல செய்தி கிடைச்சுதே அது போதும்டா. பாவம் சீனிவாசன் ரொம்பவே ஆடிப் போயிட்டான். அவன் ரொம்ப நல்லவன்டா. அவனுக்கு எந்தக் கஷ்டமும் வரக் கூடாது.''

''வராதுப்பா. சரி, நீங்க ரொம்ப உணர்ச்சி வசப்படாதீங்க. வண்டி ஓட்டறச்சே. பத்திரமா போங்கப்பா.''

அவரைச் சொன்னோமே தான் உணர்ச்சி வசப்படாமல்தான் வண்டி ஓட்டுகிறோமா என்று அவனுக்கே சந்தேகம் வந்தது.

## 41

உணர்ச்சிகள் போட்டி போட அரவிந்த் ஏர்போர்ட் வந்து உள்ளே நுழையும்போது திவ்யா வரும் விமானத்தின் வருகையை அறிவித்து விட்டார்கள். ஆமாம்! ஒரே சமயத்தில் காதல், முன்னிரவின் பயத்தின் மிச்சம். ஆவல், எல்லாம் அவன் உள்ளத்தில் போட்டி போட்டுக்

கொண்டிருந்தன. இவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால் என்ற பயம் இன்னும் போகவில்லை அவனை விட்டு.

இப்போது எதிர்பார்ப்பு. அவளைப் பார்த்ததும் நான் என்ன செய்வோம், அவள் என்ன சொல்லுவாள், செய்வாள் என்கிற கற்பனை வேறு. காத்திருக்கும் கணங்கள் ஒவ்வொன்றும் ஒரு மணியாகத் தோன்றியது அவனுக்கு. சீனிவாசனுக்குப் போன் செய்து ஃபிளைட் இன்னும் வரவில்லை என்று சொல்லவும் தவறவில்லை.

விமானம் வந்து தரையைத் தொட்டது. இவனுடைய இதயத் துடிப்பு இவனுக்கே கேட்டது. நல்ல வேளையாக இவன் பொறுமையை ரொம்ப சோதிக்காமல் முதல் பத்து பேர்களில் ஒருத்தியாக இறங்கி விட்டாள். இவன் எங்கோ வெளியிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளும் பாவம் வெளியே ஒரு கண்ணும் கன்வெயர் பெல்ட்டில் ஒரு கண்ணுமாக நின்றாள். சிறிது நேரத்தில் பெல்ட்டில் வந்த தன் சாமான்களை எடுத்து ட்ராலியில் வைத்து தள்ளிக் கொண்டே வாசலுக்கு வந்தாள். அவள் கண்கள் அங்கும் இங்குமாய் அலை பாய்ந்தது. எங்கே அவன்?

திடும்மென்று அவள் முன் போய் நின்றான் அரவிந்த். ஒரு கணம் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தவள் அப்படியே அவன் விரித்த கைகளுக்குள் புகுந்து கொண்டாள். அவளைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்ட அவன் அவள் நெற்றியில் முத்தமிட்டான். அவள் முகத்தைத் தூக்க அவள் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தான். அவளும் அவன் தன் கன்னத்தை காண்பிக்கும் முன் தன் இதழ் பதிக்கத் தயங்கவில்லை.



திடீரென்று அவன் அவள் காதைப் பிடித்துத் திருகினான்.

''ஆ, வலிக்கிறது. இப்போ எதுக்கு என் காதைப் பிடித்துத் திருகினீங்க'' என்று கேட்டாள் திவ்யா.

''எதுக்கா? சாயந்திரத்திலிருந்து எத்தனை பேரை அழ வெச்சுருக்கே. லூசு முன்னாடியே ஒரு போன் பண்ணியிருக்க வேண்டாமா? எல்லோரும் செத்துப் பிழைச்சாங்க உங்க வீட்லே, தெரியுமா?''

''எங்க வீட்லே மட்டும்தானா?'' என்று குறும்பாகக் கேட்டாள்.

''எங்க வீட்டிலேயும் தான்'' என்றான் அரவிந்த்.

''உங்க வீட்லேன்னாக்கா என்ன அர்த்தம்?''

''எங்க பாட்டி, அம்மா, அப்பா எல்லோரும்தான்.''

''அவ்வளவுதானா?'' என்று இவள் கேட்டதும் அவனுக்கு இவளைச் சீண்டிப் பார்க்க ஆசை வந்தது.

''அவ்வளவேதான்'' என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்தான். சற்று தூரம் நடந்தவன் திரும்பிப் பார்த்தால் அவளைக் காணவில்லை.

அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். சிரித்துக் கொண்டே அவளருகில் சென்றவன் ''ஏன் இங்கேயே நின்னுட்டே'' என்று கேட்டான்.

அவள் பதில் ஏதும் சொல்லாமல் அவனை முறைத்துப் பார்த்தாள்.

''சரி, சரி! நானும்தான் டென்ஷனில் செத்துப் பிழைத்தேன். சரியா? இப்போ நட.''

''சரியில்லை நீங்க மொதல்ல ஸாரி சொன்னாத்தான் நான் இந்த இடத்தை விட்டு நகருவேன்.''

''ஸாரி, ஸாரி'' என்று சொன்னவன் தன் கையைப் பின் பக்கம் கொண்டு போய் அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

''ஏய், அரவிந்த்! இது இந்தியா, யு.எஸ். இல்லை'' என்றாள் தன்னை விடுவித்துக் கொண்டே.

''நீ தாம்மா யு.எஸ். ரிடர்ன். எனக்கென்ன தெரியும் அதைப் பற்றி.''

''நம்ம மனசிலிருப்பதை எல்லாம் பகிர்ந்து கொள்ள விட்டு ஏற்படும் முதல் சந்திப்பே ரொம்ப த்ரில்லிங்கா இல்லயா.''

''ஆமாண்டி, என் செல்லக் கிளியே!'' என்றவன் அவளை தன்னுடன் அணைத்துக் கொண்டே தன் காரை நோக்கி நடந்தான். அவளுக்கு அவனுடன் அப்படி ஒட்டி நடந்தது. கிரீடம் வைத்ததுபோல், ஒரு சாம்ராஜ்யத்திற்கே ராணியாகியது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு உரசிக் கொண்டு நடந்தார்கள் இரண்டு பேரும். காரின் டிக்கியைத் திறந்து சாமான்களை யெல்லாம் உள்ளே வைத்தனர். இவள் முன் சீட்டில் ஏறிக் கொள்ள அவனும் காரைக் கிளப்பினான். சிறிது தூரம் சென்றதும், ''ஏண்டா தள்ளி உட்கார்ந்திருக்கே இன்னும் என் பக்கம் சற்று தள்ளி உட்கார்'' என்றான்.

''வேண்டாம், வேண்டாம் எனக்கு இதுவே சௌகரிய மாக இருக்கிறது'' என்றாள்.

''எனக்கு சௌகரியமாக இல்லையே, செல்லம்!''

''உஷ்! ரோடைப் பார்த்து ஓட்டுங்க'' என்று அவள் சொன்னாலும் அவன் பக்கமே சற்று தள்ளி உட்கார்ந்தாள். வலது கையால் ஸ்டியரிங்கை பிடித்திருந்தாலும் இடது



கையால் அவள் கையைத் தொட்டவன் திடுக்கிட்டான். ''ஏய், உனக்கு நல்ல ஜுரம் இருக்குடா'' என்றான்.

''ஆமாம் அரவிந்த், முடியவேயில்லை'' என்று சொன்னவள் முன் சீட்டிலேயே சுருண்டு கொண்டாள்.

''என்னம்மா, பின் கதவைத் திறக்கட்டுமா? பின் சீட்டில் சௌகரியமாக படுத்துக் கொண்டு வரியா?'' என்று கேட்டான்.

''வேண்டாம், வேண்டாம், யாராவது இத்தனை நல்ல சான்சை விடுவாங்களா?'' என்றவள் ''நான் இங்கேயே முடங்கிக்கறேன்'' என்றாள்.

சற்று தூரம் போனதும் திவ்யா அப்பாவோடு பேசி னாள். ''அப்பா, நான் வந்துண்டே இருக்கேன்பா'' என் றாள். அதற்கு அவர் ''பத்திரமா வந்து சேரும்மா'' என்றார்.

அவளிடமிருந்து செல்லை வாங்கிக் கொண்ட அர விந்த், ''அங்கிள்! கவலைப் படாதீங்க. உங்க பொண்ணை பத்திரமா, சேதமில்லாம கொண்டு வந்து சேர்த்துடறேன்'' என்று சொல்லி செல்லை ஆஃப் செய்தான்.

''ஆர் யூ ஷ்யூர்'' என்று கேட்டாள். திவ்யா.

''எதற்கு. புரியவில்லையே.''

''புரியல்லையா? சேதமில்லாமன்னிங்களே! அதுக்குத் தான்.''

''ஓ, சேதப்படுத்திடுவோமே!''

''ஐய்யய்யோ! எனக்கு இதெல்லாம் ஒரே பயம்பா, நான் வரலே இந்த விளையாட்டுக்கு'' என்றாள் திவ்யா.

வீட்டை நெருங்கி விட்டார்கள் அரவிந்த். ''திவ்யா! சரியா உட்கார். வீடு வந்துடுச்சு'' என்றவன் காம்பௌண்

டிற்குள் நுழைந்து சீனிவாசன் வீட்டுக்கு முன் நிறுத்தி னான் அவர்களின் காதல் ரதத்தை. எல்லார் வீட்டிலும் விளக்கு எரிய ஆரம்பித்தது.

ஆரத்தி சுற்றி, திருஷ்டி கழித்தாள் பரிமளா. ''என் கண்ணே, வந்து சேந்தியா'' என்று கன்னத்தைத் தொட்டு முத்தம் கொடுத்தாள் லக்ஷ்மி. அவளை அணைத்துக் கொண்டு அவள் உச்சியில் முத்தம் கொடுத்தார் சீனிவாசன். திவ்யா எல்லோருக்கும் ஹலோ சொல்லி பொன்னி, பரிமளா, சுந்தரா எல்லார் பாதங்களையும் தொட்டு வணங்கினாள். ரம்யாவும், காவ்யாவும் அக்கா என்று கட்டிக் கொண்டார்கள். ''எதாவது சாப்பிடற யாம்மா'' என்று லக்ஷ்மி கேட்டாள். ''வேண்டாம்மா, பசியில்லை'' என்றாள் திவ்யா. அரவிந்த் அதற்குள் வேகமாகப் போய் ஒரு மாத்திரையை எடுத்து வந்தான். அவள் தேவிகாவிடம் வந்தபோது ''அம்மா, அவளுக்கு நல்ல ஜுரம் அடிக்கிறது. இந்தா திவ்யா, இந்த மாத்திரையைச் சாப்பிடு ஆன்ட்டி, கொஞ்சம் சூடான பாலோடு இதைக் கொடுங்க. ஜுரம் குறைந்து விடும். நீ போய் படுத்துத் தூங்கு. காலையில் பேசிக் கொள்ளலாம். எல்லோரும் போய் படுத்துக் கொள்ளலாமே'' என்ற அரவிந்த் மாத்திரையுடன், ஒரு 5 ஸ்டார் சாக்லெட்டும் சேர்த்து திவ்யாவிடம் கொடுத்தான்.

''இருப்பா, நீயும் கொஞ்சம் பால் சாப்பிட்டுவிட்டுப் போப்பா. பாவம் இன்னிக்கெல்லாம் உனக்கு ரொம்பவே ஸ்ட்ரெயின் ஆயிடுத்து'' என்றாள் லக்ஷ்மி.

''ஆமாம்பா, உனக்கு ரொம்ப தேங்க்ஸ்'' என்றார் சீனிவாசன்.



''இது என்ன புதுப் பழக்கம், அங்கிள்? நமக்கு நாமே தேங்க்ஸ் சொல்லுவது'' என்று கேட்டுவிட்டு தன் வீட்டிற்குப் போய் விட்டான். தன் ரூமிற்குப் போய் மெத்தையில் பொத்தென்று விழுந்தான். படுத்தவன் அந்த அணைப்புக்களையும், முத்தங்களையும் நினை வுக்குக் கொண்டு வந்து, கொண்டுவந்து சந்தோஷப் பட்டுக் கொண்டே தூங்கிப் போய்விட்டான்.

எல்லோரும் வீட்டிற்குப் போகும் முன் லக்ஷ்மி, ''ஒருத் தருமே இன்னிக்கு ராத்திரி சரியாகவே தூங்கல்லே. அதனாலே காலையிலே நான் கேட்டரர்ஸ் கிட்டே ஆர்டர் பண்ணிடறேன். எல்லோருக்கும் டிபன் எங்க வீட்டிலே'' என்று அறிவித்தாள். ''அப்போ மத்தியானச் சாப்பாடு எங்க வீட்லே'' என்றாள் தேவிகா.

''எதுக்கு தேவிகா, என் பொண்ணு செத்துப் பொழச் சிருக்கா. அதனாலே நான் டிபன் போடறேன். நீ எதுக்கு இழுத்து விட்டுக்கறே?'' என்றாள் லக்ஷ்மி.

''அதென்ன அப்படி பிரிச்சுப் பேசறே, லக்ஷ்மி? திவ்யா திரும்பி வந்த சந்தோஷம் எங்களுக்கும்தானே! எல்லாருக்கும் சாப்பாடு எங்க வீட்லேதான்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள் தேவிகா. எல்லோரும் அவரவர் வீட்டிற்குத் திரும்பினர்.

திவ்யாவிற்கு ஜுரம் மெதுவாகவேதான் இறங்கியது. ஒரே பிதற்றலுடன் தூங்கிக் கொண்டிருந்தாள். காலை யில் அரவிந்திற்கு விழிப்பு வந்தபோதே திவ்யாவின் நினைப்பும் வந்து விட்டது. கீழே இறங்கி வந்தால் அப்பா, அம்மா, பாட்டி மூன்று பேரும் உட்கார்ந்து பேசிக் கொண் டிருந்தார்கள். காலங்கார்த்தாலேயே இப்படி ஃப்ரீயாக

உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்களே என்று நினைத்துக் கொண்டான்.

''வா, அரவிந்த்! டிபன் சாப்பிடறியா?'' என்று கேட்டாள் தேவிகா.

''இல்லைம்மா நான் இன்னும் கொஞ்ச நாழி தூங்கிட்டு வரேனே'' என்றான்.

''தூங்கிட்டுத்தான் வாயேன்'' என்றாள் தேவிகா.

விட்ட இடத்திலிருந்து திவ்யாவுடன் தன் நேற்றைய சம்பவங்களை திரும்ப அசை போட்டுக் கொண்டு சற்று நேரம் படுத்திருந்தான். திரும்ப அவன் கீழே வரும்போது காம்பௌண்டின் பெரியவர்கள் எல்லோரும் வழக்கமான இடத்தில் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன, காலை வேளையில் இப்படிக் கூடிப் பேசுகிறார்களே என்று அவனுக்குப் பயமாக இருந்தது. என்னவென்று கேட்கலாமா என்று அருகில் போனால் அங்கே எல்லோரும் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். சரியென்று அவன் உள்ளே வந்து விட்டான்.

அரவிந்திற்கு டிபன் குந்தவை கொண்டு வந்து கொடுத்தாள். ''திவ்யாவிற்கு ஜுரம் இறங்கி விட்டதா, குந்தவை?'' என்று கேட்டான்.

அவன் கேட்டு முடிக்கும் முன், ''இப்போ அவளுக்கு ஜுரம் இல்லை'' என்று சொல்லிவிட்டுப் போனாள் குந்தவை.

தேவிகா தன் ரூமிலிருந்து வெளியே வந்தாள். பட்டுப் புடவை, நகை நட்டு என்று அமர்க்களமாய் இருந்தாள். ''என்னம்மா, எங்கேயாவது கல்யாணத்திற்குப் போகப் போறியா'' என்று அவன் கேட்க, அவள் பதில் சொல்லும் முன் போன் மணி அடித்தது.



''நான்தான் பேசறேன். மத்தியானச் சாப்பாட்டில் பால் பாயசமும் தயிர் வடையும் கூட சேர்த்துக் கொண்டு வந்துடுங்க'' என்றாள்.

''ஏம்மா, யாருக்குக் கல்யாணம்'' என்று அரவிந்த் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, சூப்பர் மார்க்கெட்டிலிருந்து பையன் வந்து லிஸ்டை கையில் வைத்துக் கொண்டு கடை பரப்பினான். எக்கச்சக்க பழ வகைகள், பாக்கு, மஞ்சள் எல்லாம் இருந்தன. அரவிந்திற்கு ஒன்றும் புரியவில்லை அதற்குள் அப்பா ஏதோ கல்யாணத்திற்குப் போவதுபோல் தயாராகி வந்துவிட்டார்.

''என்ன இன்னும் ராஜேந்திரனைக் காணோம்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அவனும் சுமக்க மாட்டாமல் பூ, ஸ்வீட்ஸ் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து விட்டான்.

''என்னம்மா, நான் கேட்டுண்டே இருக்கேன், என்ன விசேஷம், யாருக்குக் கல்யாணம்?'' என்றான் அரவிந்த்.

''கல்யாணம் ஒண்ணும் இல்லைடா. உனக்கு நிச்சயதார்த்தம் பண்ணலாம்னு கிளம்பிண்டு இருக்கோம். இன்னிக்கு விட்டா நாளைக்கெல்லாம் சூன்ய மாசம் பிறந்துடறது. அப்புறம் உனக்கு குரு பலனே இல்லையாம். அதுதான் இன்னிக்கே வெறுமே தட்டு மாத்திக்கலாம்னு போயிண்டு இருக்கோம்.''

''அம்மா, இது என்னம்மா இது அநியாயம்? என் கல்யாணத்தை என்னைக் கேட்காமலேயே நிச்சயம் பண்ணிடுவீங்களா? எனக்குப் பெண்ணைப் பிடிக்க வேண்டாமா? பெண்ணுக்கு என்னைப் பிடிக்க வேண்டாமா? இப்ப எனக்குக் கல்யாணம் பண்ணி வையுங்

கன்னு கேட்டேனா?'' என்று ஒவென்று அதிர்ச்சியில் கத்தினான் அரவிந்த்.

''ஏய், உன்னை வளர்த்து, படிக்க வெச்சு, ஆளாக்கின எங்களுக்கு உன் டேஸ்ட் தெரியாதாடா? எல்லாம் சரியாகத்தான் செய்யறோம். நீ சும்மா இரு'' என்றார் ரங்கராஜன்.

''அப்பா, இதென்ன அராஜகமா இருக்கு? ஒரு போட்டோலே கூட பாக்காத ஒரு பெண்ணை நான் கல்யாணம் செஞ்சுக்கறதா? நான் என்ன கொத்தடிமையா?'' என்று சத்தம் போட்டான்.

''இதோ பார் அரவிந்த். இது ஒரு நல்ல இடத்துச் சம்பந்தம். ரொம்ப நல்ல குடும்பம். பொண்ணு அழகா இருக்கா. நன்னா படிச்சிருக்கா நல்ல குணவதி. நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணு. எங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிச்சிருக்கு. அவ அப்பா அம்மாவெல்லாம் ரொம்ப நல்லவா. உன்னையும் அவாளுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதுவும் தவிர நாங்க அவங்களுக்கு வாக்குக் கொடுத்துட்டோம். நீ எங்க பேச்சை மீறமாட்டேங்கற நம்பிக்கையிலே, இப்போ இப்படிச் சொன்னா எப்படி? வீணா பிடிவாதம் பிடிக்காதே. கல்யாணம் ஆனா எல்லாம் சரியாகிவிடும்'' என்றாள் தேவிகா.

''வேண்டாம், வேண்டாம், வேண்டவே வேண்டாம். இந்தக் கல்யாணம், முடியாது, நான் மாட்டேன்'' என்று அலறினான்.

அதற்குள் சுந்தரா அங்கு வர ''பாட்டி நீயாவது சொல்லேன். உன் பிள்ளைக்கு. இதில் ஏதாவது நியாயம் இருக்கா.''



''எல்லாம் நியாயம் தெரிஞ்சவன்தாண்டா என் பிள்ளை'' என்று பாட்டி சொல்லிவிட்டு, ''தேவிகா, ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணிட்டுக் கிளம்பும்மா'' என்றாள்.

''கல்யாணத்தன்னிக்கு வீட்டை விட்டு ஓடிப் போயிட்டேன்னா அப்ப தெரியும்'' என்றான் அரவிந்த்.

''நீ அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்னு எங்களுக்குத் தெரியும், ஏன்னா நீ நாங்க வளர்த்த பையன்டா'' என்றாள் தேவிகா.

அதற்குள் அவர்கள் மூவரும் குந்தவையுடன் படி இறங்கி விட்டார்கள். அரவிந்த் அப்படியே உட்கார்ந்து விட்டான். ராஜேந்திரனிடம், ''ஏண்டா, நீயும் இதில் கூட்டா? போயி அவங்களுக்கு வண்டி ஓட்டு'' என்று உறுமினான்.

''வண்டியா, நடந்து போற தூரத்துக்கு வண்டி எதுக்கு?'' என்றான் ராஜேந்திரன்.

அரவிந்திற்கு டென்ஷன் தலைக்கேறிவிட்டது. 'ஐய்யோ, இப்போ நான் என்ன பண்ணுவேன்? திவ்யாவுக்குத் தெரிஞ்சா என்னைச் சுட்டெரிச்சுடுவாளே! ஐய்யோ, என் காதல் இப்படி மொட்டுலேயே கருக வேண்டியதுதானா? இருக்கட்டும், இவங்களுக்கு நான் யாரென்று காண்பிக்கறேன்' என்று மனதளவில் பொறுமியவன் வாசலை நோக்கினான்.

அவர்கள் எதிர்த்தாற்போல் உள்ள சீனிவாசன் வீட்டிற்குத்தான் போனார்கள். 'என்ன, அவர்களையும் கூட்டிக் கொண்டு போகிறார்களா? என் திவ்யா என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?' அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான். சற்று நேரத்தில் காவ்யா, குந்தவை

இரண்டு பேரும் ஓடி வந்தார்கள். ''ஆன்ட்டி ஆவின் திரட்டுப் பால் மறந்து விட்டாளாம். எடுத்துண்டு வரச் சொன்னாள்'' என்றாள். ராஜேந்திரன் உள்ளே போனான்.

அதற்குள் காவ்யாவை மடக்கிய அரவிந்த் ''ஏய், என்ன நடக்கிறது அங்கே?'' என்று தவிப்புடன் கேட்டான்.

''எல்லாம் உன் சமாச்சாரம்தான், மை டியர் பிரதர் இன் லா'' என்றாள்.

''என்னது, பிரதர் - இன் லாவா? என்னடி சொல்றே?''

''என்னது, மச்சினியை டீ போட்டு பேசறே. அக்கா கிட்டே சொல்லிடுவேன்.''

கூடவே இருந்த குந்தவை ''ஆமாண்ணா, திவ்யா கூட எனக்கு மன்னியாமே'' என்றாள் சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு ராஜேந்திரன் கொடுத்த திரட்டுப் பாலை வாங்கிக் கொண்டு ஓடிவிட்டாள்.

இவர்கள் சொன்னது அரவிந்தின் மூளையில் உறைக்க சற்று நேரமானது. ரத்தமெல்லாம் குப்பென்று தலைக் கேற அருகில் இருந்த ராஜேந்திரனைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டான் சந்தோஷத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல்.

''ஏய், எனக்கெதற்கு? எல்லாத்தையும் அங்கே வெச்சுக்கோ!'' என்றான் ராஜேந்திரன் எதிர்த்த வீட்டைச் சுட்டிக் காட்டி.

இங்கே நிலைமை இப்படி. சீனிவாசன் வீட்டில் காலை யில் திவ்யா எழுந்து வந்ததும் ''குட் மார்னிங், எவ்வரி படி'' என்றாள்.

''குட் மார்னிங்டா, எழுந்துட்டியா? பாவம் சத்தம் தூங்க முடியல்லியா'' என்றாள் லக்ஷ்மி. ''ஜுரம் எப்படிம்மா இருக்கு?'' என்று கேட்டார் சீனிவாசன்.



''இப்போ ஜுரம் இல்லேப்பா ஆனா ரொம்ப டயர்டா இருக்கு. அலுப்பினால் வந்த ஜுரம்தான்'' என்றாள் திவ்யா.

''எல்லாம் சரியாயிடும்மா. ஏம்மா, அந்த அவந்திகாவும் வந்துட்டாளா, தெரியுமா'' என்று கேட்டாள் லக்ஷ்மி.

''தெரியலேம்மா, விசாரிக்கணும்.''

''நீ அந்த அவந்திகாவைத் திட்டினாலும் இன்னிய பொழுது நாங்க உன்னை உருப்படியா பாக்கறதுக்கு அந்த பொண்ணுதானேம்மா காரணம்? அவ நன்னா இருக்கணும்'' என்று நா தழுதழுக்கச் சொன்னார் சீனி வாசன்.

''இப்போ ஏன் கண் கலங்கறீங்க. நல்லது நடத்தப் போற சமயத்திலே?'' என்றாள் லக்ஷ்மி.

''ஆமா, நீ ஏன் இன்னும் ரெடியாகல்லே?'' என்று கேட்டார் சீனிவாசன்.

''அம்மா எங்கேயானும் வெளியே போறயா?'' என்று கேட்டாள் திவ்யா.

''இல்லேம்மா, நாங்க எங்கும் வெளியே போகல்லே! பிள்ளை வீட்டுக்காரங்கள்தான் இப்போ வரப் போறாங்க. நீ போய் குளிச்சு தயாராகி, பளிச்சுன்னு வா பார்ப்போம்'' என்றாள் லக்ஷ்மி.

''யாருக்குக் கல்யாணம்? எந்த பிள்ளை வீட்டுக்காரங்க வரப்போறாங்க? எனக்கு ஒண்ணுமே புரியல்லையே!''

''எல்லா விவரமும் அப்புறம் சொல்றேன், நீ முதலில் டிரெஸ் பண்ணிண்டு வா'' என்றாள் லக்ஷ்மி.

அதற்குள் ஷாப் பையன் ஒருவன் வந்து, ''அம்மா, லிஸ்ட் படி எல்லா சாமானும் வாங்கியாச்சு, இந்தாங்க,

பில்லு. லிஸ்ட் மீதி பணம் செக் பண்ணிக்கோங்க'' என்று எல்லா சாமான்களையும் எடுத்து வெளியே வைத்தான். நிறைய பழங்கள், ஸ்வீட், இரண்டு மாலை எல்லாம் இருந்தது அதில்.

''எதுக்கம்மா இதெல்லாம்? சொல்லேன்! எனக்கு சஸ்பென்ஸ் தாங்க முடியல்லே'' என்று துடித்த திவ்யா ''நம்ம ரம்யாவிற்காம்மா கல்யாணம்?'' என்று கேட்டாள்.

''ரொம்ப அழகுடி உன் கேள்வி? உன்னை விட்டு விட்டு ரம்யாவிற்கு இப்போ என்ன அவசரம்?'' என்று கேட்டாள் லக்ஷ்மி.

''பின்னே?''

''பின்னே என்ன பின்னே? எல்லாம் உன் கல்யாண நிச்சயதார்த்தம்தான் இன்னிக்கு.''

''அம்மா'' என்று ஒரே அலறலாக அலறினாள், திவ்யா.

''என்னடி கூச்சல் போடறே? நீ என்ன சின்னக் குழந்தையா? இல்லே, கல்யாணம் பண்ணக் கூடாத வயசா? போ. போய் நன்னா டிரெஸ் பண்ணிண்டு வா.'' என்றாள் லக்ஷ்மி.

''அம்மா, இதென்ன அநியாயமா இருக்கு? எனக்கெதுக்கு இப்போ கல்யாணம்? பையன் யாரு? என்னைக் கேட்க வேண்டாமா, என் சம்மதம் வேண்டாமா? நீங்களெல்லாம் பண்ணுவது துளிக்கூட சரியில்லை. எனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதமில்லை'' என்று குதித்தாள் திவ்யா.

''சரி, சரி, அவளுக்கு என்ன தெரியும்? ரம்யா, நீ போய் அவளை டிரெஸ் பண்ணி கூட்டிவாம்மா'' என்றார் சீனிவாசன்.



''நான் ஒரு நாளும் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்'' என்றவள் தடதடவென்று மாடிக்கு ஓடி தன் அறைக் கதவை தடால் என்று சாத்திக் கொண்டாள். எல்லாம் தானே வருவாள் என்று கொஞ்ச நேரம் பார்த்த இவர்களுக்கு அவள் வராததால் பயம்.பிடித்துக் கொண்டது. மாடிக்கு ஓடின லக்ஷ்மி ''திவ்யா, வெளியே வா'' என்று கதவைத் தட்டினாள். பதிலே இல்லை. லக்ஷ்மிக்கு பயம் அதிகமாகி விட்டது. அதற்குள் சீனிவாசன், ரம்யா எல்லோரும் வந்து கதவை இடித்தார்கள் ''திவ்யா, வெளியே வாடி! கதவைத் திற'' என்று மூவரும் மாறி, மாறிக் கத்தினார்கள். அந்த ரூமிற்கு ஜன்னல் பால்கனி பக்கம். எனவே அது வழியே பார்க்கவும் வழி இல்லை. லக்ஷ்மிக்கு அழுகையே வந்து விட்டது. ''ஏய், பையன் அரவிந்த் தான் பயப்படாதே!'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாலும் எதுவும் அவள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

சட்டென்று ரம்யா ஒரு வேலை செய்தாள். கீழே ஓடிப் போய் ஒரு பிட் பேப்பரை எடுத்து வந்து மடமடவென்று அதில் எழுதினாள். ''நேத்து ஏர்போர்ட்டில் யாருக்கு முத்தம் கொடுத்தியோ அவர்தான் மாப்பிள்ளை'' என்று எழுதி கதவின் கீழ் வழியே உள்ளே தள்ளினாள். ''ஏய், திவ்யா! அந்தப் பேப்பரைப் படி'' என்று கத்தினாள்.

ஒரே நிசப்தம். சற்று நேரத்திற்கெல்லாம் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் அதற்கு மேல் ஒரே சிரிப்புமாய் கதவைத் திறந்தாள் திவ்யா. அப்படியே வந்து அம்மாவைக் கட்டிக் கொண்டாள். ''அம்மா, நான் வந்து, நான் வந்து...'' என்று திணறினாள்.

''நீதான் வந்துட்டியே! இப்போ சொல்லு உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லைன்னு நிறுத்திடவா'' என்றாள் லக்ஷ்மி.

''அம்மா, அது அப்படியில்லைம்மா அது வந்து, வந்து'' என்று திக்கித் திணறி தடுமாறினாள் திவ்யா. லக்ஷ்மி அவளை அன்போடு அணைத்துக் கொண்டாள். ''எம்மா, இத்தனை தூரம் உன்னை வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கிய எங்களுக்கு உன்னை எப்போ, யாருக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு தெரியாதா?''

''அதுக்காக எனக்கு முன்னே பின்னே தெரியாதவனுக் கெல்லாம் கழுத்தை நீட்ட முடியுமா என்ன?'' என்றாள் திவ்யா.

''அக்கா, முன்னே எப்படியோ, பின்னே ரொம்ப ரொம்ப அந்தரங்கமா தெரிந்தவனுக்குத்தான் கழுத்தை நீட்டப் போறே'' என்று கலகலவென்று சிரித்தபடியே சொன்னாள் ரம்யா.

''சரி, இப்போதான் எல்லாம் தெரிஞ்சுடுத்தே! வா, வா அவங்க எல்லாம் வர நேரமாச்சு. போய் சட்டுன்னு ரெடியாகு'' என்றாள் லக்ஷ்மி.

''ஆனா எப்படிம்மா தெரிந்தது?'' என்று வெட்கத் துடன் கேட்டாள் திவ்யா.

''அதெல்லாம் அப்புறமா சொல்றேன்'' என்று சொல்லி விட்டு கீழே இறங்கினார் சீனிவாசன்.

அடுத்த பத்தாவது நிமிஷத்தில் திவ்யாவா அல்லது திவ்ய தேவதையா என்று அதிசயிக்கும் வண்ணம் அலங்காரம் செய்து கொண்டு வந்து விட்டாள். பிங்க் நிறத்தில் பிளையின் ஷிபான் புடவை. நல்ல மருனில்



தங்க நிற ப்ரோகேட் ஜாக்கெட். தளர தலை பின்னல். பின்னலில் மல்லிகை. காதுகளில் முத்துத்தோடும் குடை ஜிமிக்கியும். கைகளில் நிறைய கண்ணாடி வளை யல்கள். ''ஓ! ஓ! நம்ம திவ்யாவா இது? என் கண்ணே பட்டுடப் போறதுடி. என் செல்லமே!'' என்று லக்ஷ்மி திருஷ்டி கழித்தாள். அதற்குள் எதிர் வீட்டிலிருந்து ரங்கா ஃபேமலி மொத்தமும் இங்கு வந்து விட்டனர், அரவிந்தைத் தவிர.

## 42

அரவிந்த் குறு குறுவென்று இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு அவர்கள் வீட்டில் உட்கார்ந்திருந்தான். தேவிகா விடம் ரங்கா ஏதோ கேட்க, அவள் உடனே சுந்தராவைக் கேட்க அவள் ''தாராளமாய் வரட்டுமே'' என்றாள். உடனே ரங்கா இங்கிருந்தே அரவிந்தை இங்கே வா என்று கை அசைத்துக் கூப்பிட்டார். அதற்கு அவன் முடி யாது என்று தலையை இடமும் வலமுமாய் ஆட்டினான். 'உதை வாங்குவே, வாடா' என்று மறுபடியும் கூப்பிட் டார் ரங்கா. அதற்கும் அவன் மாட்டேன் என்றான். சட்டென்று ராஜேந்திரனிடம் ஏதோ சொல்லியனுப் பினார் ரங்கா.

ராஜேந்திரன் நேரே அரவிந்திடம் போய் ''ஏய், இந்தக் கல்யாணத்தில் உனக்கு இஷ்டமில்லை என்றால் அப்பா இந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விடுகிறாராம், நீ உடனே வரல்லேன்னா உனக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

அடுத்த பத்து நிமிடங்களில் அவனால் எப்படித்தான் அத்தனை அழகாகத் தயாராக முடிந்ததோ தெரியவில்லை. ரெடியாகி வந்து விட்டான். சந்தனக் கலரில் ஜிப்பாவும், பைஜாமாவும் அவன் கலரோடு சேர்ந்து ஜொலித்தது. தலையை அப்படியே லேசாகத்தான் வாரியிருந்தான். அந்தக் காலத்து ஜெமினி கணேசன் போல் ராஜா மாதிரி இருந்தான்.

காலையிலிருந்து அங்கேயே சுற்றிக் கொண்டிருந்த விவேக் வந்து அவனை அழைத்துப் போனான். சுபா திவ்யாவுடன் நின்றாள். கல்யாணத்திற்கு இன்னும் கொஞ்ச நாளே இருந்த நிலையில் விவேக்கிற்கும், சுபாவிற்கும் இந்த தாமதம் கொஞ்சம் கூடப் பொறுக்க முடியாததாக இருந்தது.

''இத்தனை நாள் நமக்குக் கல்யாணமாகி உனக்கு வளைகாப்பு வந்திருக்க வேண்டியது'' என்றான் விவேக் சுபாவைத் தனியே பார்த்தபோது.

''ஆசை தோசை அப்பளம் வடை'' என்றாள் சுபா.

''அதெல்லாம் கூட ஆசையாய் சாப்பிடத்தானே'' என்றான் விவேக். அவள் கையை ஓங்க சிரித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தான் அவன்.

இன்றைக்கு அவர்களும் தாங்கள்தான் மணமக்கள் என்பதுபோல் அலங்கரித்துக் கொண்டு இவர்களை கேலி செய்யும் சாக்கில் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் பட்டுக் கொண்டும், தொங்கிக் கொண்டும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

''ஏய், யாருக்கு கல்யாணம் இன்னிக்கு? நீங்க இரண்டு பேரும் என்னவோ ஆகாசத்திலே பறக்கறீங்க? ஹூம்!''



என்று ஒரு அதட்டல் போட்டாள், பொன்னியத்தை விளையாட்டாக.

மாலையை எடுத்து விவேக் அரவிந்த் கழுத்தில் போட, அரவிந்த் பரிதாபமாக இவ்வளவு தானா என்று பார்க்க, ''இப்போ நீங்க ஒருத்தருக்கொருத்தர் மாலை போடறதெல்லாம் கிடையாது'' என்றாள் தேவிகா. அவன் பார்வையைப் புரிந்து கொண்டு. சுபா திவ்யா விற்கு மாலை போட ரங்கராஜனும், சீனுவாசனும் தட்டு மாற்றிக் கொண்டார்கள். முகம் கொள்ளாத சிரிப்பு எல்லோருக்கும்.

''அப்பா, சொல்லுங்கப்பா, அந்த ஒற்றன் யார்?'' என்று கேட்டாள் திவ்யா.

''நான் சொல்றேன். உனக்கு மட்டும் சொன்னால் போதுமா? அரவிந்துக்கும் சேர்த்து சொல்றேன்'' என்று தொடங்கிய ரங்கா பாடகர் போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''அப்பா, வேண்டாம்'' என்றான் அரவிந்த்.

''ஏன் வேண்டாம்? என்னுடைய பரம சாதுப் பிள்ளை 'சாது சாது என்ற சன்யாசிக்கு...' என்ற வசனம் போல் நடந்துண்டிருக்கான். விவரமாகச் சொல்ல வேண்டாமா?

''வேண்டாம், ஒரு விவரமும் வேண்டாம். அதுதான் நிச்சயம் செய்துட்டீங்களே'' என்றான் அரவிந்த் பரபரப் புடன்.

''இல்லை, இல்லை! நாங்கள் எல்லாம் கேட்கணும்'' என்று மற்ற எல்லோரும் கத்த ''ஓகே, ஓகே! உங்களுக்கு இல்லாததா?'' என்று சிரித்தபடி ஆரம்பித்தார் ரங்கா.

"அப்பா...!" என்று தர்ம சங்கடத்துடன் நெளிந்தான் அரவிந்த்.

"உஷ்...! கீப் கொயட்" என்றவர் "ராத்திரி நான் ஏர்போர்ட் போனேனா?" என்று ஆரம்பித்தார்.

"ஆமாம், போனீங்க அங்கே என்ன நடந்தது?" "இது ரம்யா, காவ்யா, ராஜேந்திரனின் கோரஸ்.

"போய் அங்கே என் பிரண்டைப் பார்த்ததும் அவன் 'மொத்த பிளேனும் எரிஞ்சுடுத்து'ன்னு சமாச்சாரம் சொன்னானா."

"ஆமாம்" இது கோரஸ்.

"என்னது இது. இரண்டுங்கெட்டான் குழந்தைகளை வச்சிண்டு" என்று தேவிகா திட்ட, ரங்கா "ஸாரி, மேடம்!" என்று கைகட்டி வாய் பொத்த. 'ஹோ' என்ற சிரிப்பு. மனம் நிறைந்திருக்கும்போது ஜோக் என்பது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், இல்லையா?

"எய், நேத்திக்கு நான் அந்தச் செய்தியை வச்சிண்டு சீனிவாசனை எப்படிப் பார்ப்பது என்று தடுமாறியபடி காரில் வந்து கொண்டிருந்தேன். அப்போது அரவிந்த் போனிலே திவ்யா வேறே பிளேனில் நல்லபடியா வந்து கொண்டிருக்கிறான்னு சொன்னான். எனக்கு மனம் கொள்ளாத சந்தோஷம். நானும் ஏர்போர்ட்டுக்கு திரும்ப வரேன்னு சொன்னேன். அதுக்கு இந்தத் திருட்டுப் பயல் அவசரம் அவசரமாய் 'நீ வராதேப்பா, நானே போய் கூட்டிக் கொண்டு வரேன்'னு சொல்லி என்னை அவாய்ட் பண்ணிட்டான்" என்றார்.

"அப்பா, அப்படியெல்லாம் இல்லை. உங்களுக்கு சிரமம் வேண்டாமேன்னுதான் அப்படிச் சொன்னேன்" என்றான் அரவிந்த் குறுக்கிட்டு.



"அப்படியா, உண்மைதான். நானும் வந்திருந்தால் சாருக்கு ரொம்ப சிரமமாகத்தான் இருந்திருக்கும்" என்றார் ரங்கா சிரித்தபடி. அரவிந்திற்கு முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது.

"மேலே கேளு! என் பிள்ளை வார்த்தையை அப்படியே நம்பி நானும் வீட்டுக்கு வந்திண்டிருந்தேன். அதுக் குள்ளே என் பிரண்ட் எனக்கு போன் பண்ணி, "உன் மருமகள் வேறே ஃப்ளைட்லே வந்துட்டா போலயிருக் கேடா" என்றான்.

"மருமகளா, என்னடா உளர்றே?" என்று நான் கேட்க, "உன் பிள்ளை அரவிந்த் இப்போ ஏர்போர்ட் வந்து ஒரு பெண்ணைக் கூட்டிப் போனானே. அது யாரு உன் மருமகள் தானே?" என்று கேட்டான்.

"என்னடா பேச்சு இது? உனக்குத் தெரியாமல் என் பிள்ளைக்கு நான் கல்யாணம் பண்ணியிருப்பேனா? அது என் எதிர் வீட்டுப் பொண்ணுடா, அவளும் என் பொண்ணு மாதிரிதான்" என்று நான் சொல்ல, "ஸாரிடா, அந்தப் பொண்ணைப் பார்த்ததும் அவன் அவளை ரிஸீவ் பண்ணின வேகம், அவன் முகத்தில் இருந்த சந்தோஷம், அவர்கள் இருந்த நிலை, அந்தப் பெண் அவனுடன் நடந்து போன விதம் எல்லாமே அவள் அவனுடைய ஒய்ஃப்ன்னுதான் எண்ண வெச்சுடுத்து... நான்தான் அவங்களை காரில் ஏறிக் கிளம்பும் வரை பார்த்தேனே! சரி, இதுவரை மருமகள் ஆகல்லேன்னா, நாளைக்கே அவள் தான் மருமகளா வரப் போறா. வாழ்த் துக்கள்" என்று சொல்லி போனை வைத்து விட்டான்" என்று சொல்லி முடித்தார் ரங்கா.

அரவிந்தும், திவ்யாவும் ஒருவரை ஒருவர் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டனர். ஒரே வெட்கம். இருவரும் குனிந்த தலை நிமிரவில்லை.

''அதில்லேப்பா, அவள் இனிமே எங்கே திரும்பி வரப் போறான்னு நினைச்சிண்டு இருக்கச்சே எதுத்தாப்லே வந்துட்டாளா, அதுதான் கொஞ்சம் உணர்ச்சி வசப் பட்டு...'' என்று முகம் சிவக்க வழிந்தான் அரவிந்த்.

''ஏண்டா, உன்னை இப்போ ஏன், எதுக்குன்னு ஏதாவது கேட்டேனா'' என்ற ரங்கா, ''ஏம்மா மருமகளே! இப்போ என் கேள்விக்கு பதில் சொல்லு. உங்க காதல் எப்போதிலிருந்துமா ஆரம்பம்?'' என்று கேட்டார்.

வெட்கம் தாங்காமல் முகத்தை கைகளால் மூடிக் கொண்டாள் திவ்யா.

''ஏய், திவ்யா, கையை எடு. இப்போ நீ சொன்னாத் தான் ஆச்சு'' என்றாள் காவ்யா.

''யெஸ், யெஸ் சொல்லு, சொல்லு'' என்று எல்லோரும் ஒரேடியாகக் கேட்க,'' ''நான் ஸ்டேட்ஸ் போய் ரொம்ப நாள் கழிச்சுதான் அங்கிள்.''

''அது சரி, அந்த கொஞ்ச நாள்லே உங்க காதலை நன்னாவே வளர்த்திருக்கீங்களே'' என்று சொல்லிச் சிரித்தார் சுப்பு.

''அது சரி! உங்க சிநேகிதர் சொன்னார்ங்கறதுக்காக நீங்க பாட்டுக்கு நிச்சயம் பண்ணிட்டீங்களே! எங்ககிட்டே ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சுருக்கான்னு கேட்க வேணாமா?'' என்றான் அரவிந்த்.

''அதானே!'' என்றாள் திவ்யா.



''அப்படியா, கேட்கணுமா? உங்க இரண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் எவ்வளவு பிடிச்சிருக்குன்னு இப்போ விலா வாரியா எடுத்து விடட்டுமா?'' என்று ரங்கா சொல்ல எல்லோரும் சிரித்தனர். ''முந்தா நாள் நீ அழுத அழுகை என்ன! உன் வாராத தலையும், கோலமும் என்ன. என்ன?'' என்று கேபி சுந்தராம்பாள் பாணியில் ஜோக் அடித்தார் ரங்கா.'' அது மட்டுமா, இன்னிக்கு கார்த்தாலே கூட 'இந்தக் கல்யாணம் மட்டும் நடந்துன்னா, நான் வீட்டை விட்டு ஓடிப் போயிடுவேன்னு கூட யாரோ சொன்னாங்களே! அந்த ஸார் இங்கேதானே இருக்கார்?'' என்றார் சிரிப்பலை தொடர்ந்தது.

அதற்குள் தேவிகா, ''ஆமாண்டா, முதல்லே நீ அழுதபோது கூட ஏதோ நீ சின்ன வயசிலேர்ந்து பழகிய பொண்ணு. இளகின மனசு அதான் அழறேன்னுதான் நினைச்சேன். அப்புறம் உன்னைக் கூப்பிட மாடிக்கு வந்தா நீ டேபிள்லே தலையை வெச்சுண்டு கையிலே முகத்தைப் புதைச்சிண்டு எப்படி அழுதிண்டு இருந்தே, தெரியுமா? என்னடா இது இப்படி அழறானேன்னு இருந்தது. அப்புறம் நீ உரிமை எடுத்துண்டு அவளைக் கூட்டிக் கொண்டு வந்து, மருந்து கொடுத்து, அவளை ரெஸ்ட் எடுத்துக்க வெச்சது. ஏண்டா நான் உனக்கு அம்மாவா இத்தனை வருஷமா இருக்கறதுக்கு இது கூட புரியாதாப்பா?'' என்றாள்.

சீனிவாசன் ஆரம்பித்தார் ''என் பொண்ணு ஜுர வேகத்திலே என்ன சொல்லி பிதற்றினாளாம், தெரியுமா?''

அப்பாவின் அருகில் ஓடின திவ்யா, ''அப்பா, ப்ளீஸ்! வேண்டாம்பா'' என்று அவர் வாயைப் பொத்தினாள்.

''அதெப்படி? என்னை மட்டும் என்ன பண்ணினேன்னு கேட்டுப்பே, நீ என்ன பண்ணினேன்னு எங்களுக்குத்

தெரிய வேண்டாமா? நீங்க சொல்லுங்க அங்கிள்!'' என்றான் அரவிந்த்.

இப்போது ரம்யா குறுக்கிட்டாள். ''அதாகப் பட்டது, திவ்யா மேடம் 'அரவிந்த்! லவ் யூ' என்பதை சற்று விரிவாகவே சொல்லிச் சொல்லி ஜுர வேகத்தில் புலம்பினதைக் கேட்டு அம்மா அப்பாவிடம் சொன்னது அடியேன் தான்'' என்று இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டாள்.

''கழுதை, உன்னை...'' என்று அவளை அடிக்கடி கை ஓங்கினாள். அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்ட ரம்யா, ''திவ்யா மேடம்! நான் சொன்னதனால்தான் அப்பாகிட்டே ரங்கா அங்கிள் விடியற்காலையிலேயே வந்து விட்டது. அவர் சரின்னு சொல்லி இந்த நிச்சய தார்த்தம் நடந்தது. தேங்க்ஸ் சொல்லுவியா, அடிக்க வரியே!'' என்றாள்.

''அம்மா, இனிமே நாம ஃப்ரி தானேம்மா வீட்டுக்குப் போலாமா? எனக்குப் பசிக்கறது. நான் டிபன் சாப்பிடல்லே'' என்றான் அரவிந்த்.

''அட ராமா! அப்பவே குந்தவை கொண்டு வெச்சாளே! சாப்பிடல்லயா, நீ?'' என்றாள் தேவிகா.

''ஆமாம், திவ்யா நீயும் ஏதாவது எடுத்துக்கோ'' என்றாள் லக்ஷ்மி.

''பின்னே, நம்ம வீட்டுக்கே போய் இரண்டு பேருமா டிபன் சாப்பிடுங்கோ'' என்றாள் சுந்தரா.

''என்ன அத்தை, கல்யாணத்துக்கு முன்னாடியே நம்ம வீட்டுக்கு அவள் வரலாமா?'' என்று கேட்டாள் தேவிகா.



''நன்னா வரலாம். இன்னிக்கு நல்ல நாள்னுதானே வெத்திலை பாக்கு மாத்திண்டோம்? எப்போ கல்யாணத் தேதி வைக்கறோமோ என்னவோ அதுவரைக்கும் திவ்யா நம்மாத்துக்கு வராம இருக்கணுமா என்ன?'' என்றாள் சுந்தரா.

இருவருக்கும் ஆரத்தி எடுத்தனர் குந்தவையும், ரம்யாவும். பின் அரவிந்த் திவ்யாவை அழைத்துக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தான்.

பரிமளா ரம்யாவிடம் ஆரத்தித் தட்டைக் கொடுத்து, ''நீயும் குந்தவையுமா அந்த வீட்டிலும் அவர்களுக்கு ஆரத்தி எடுத்துட்டு ஓடி வந்துடுங்கோ'' என்றாள்.

''டேய், வலது காலை உள்ளே வெச்சுப் போங்கடா'' என்று கத்தினார் வரதன்.

''அக்கா, டிபன், டிபன் மட்டும் சாப்டுட்டு வந்துடு, என்ன?'' என்றாள் ரம்யா கண்ணைச் சிமிட்டியபடியே.

ரங்கா உடனே ''ஏய் பையா, உன்னை உள்ளே அனுப்பறது டிபன் சாப்பிடத்தான்டா. இது கல்யாண ராத்திரி இல்லை'' என்று சொல்லிவிட்டு தானே சிரிக்க எல்லோரும் அவரவருடைய மலரும் நினைவுகளில் மூழ்கி மகிழ்ந்து போனார்கள்.

அரவிந்த் குனிந்த தலை நிமிராமல் திவ்யாவுடன் வீட்டிற்குள் நுழைந்தான்.

கணேசன் ரங்காவிடம், ''ஏய், பெரிய ஆளுப்பா உன் பிள்ளை. சாத்தறது தெரியாமல் தோள் பட்டையாலே கதவைச் சாத்திண்டு உள்ளே போறான், பாரேன்!'' என்றார்.

என்னவோ, ஏதோ அடுத்த 20 நிமிஷங்களில் அவர்கள் இருவரும் அசடு வழிய ஒரு மாதிரி நடந்து

வந்து எல்லோருடனும் சேர்ந்து கொண்டார்கள். தேவிகா போய்ப் பார்த்தபோது டிபன் தொடப்படாமல் அப்படியே இருந்தது.

## 43

அன்று அரவிந்திற்கு மதியம் இரண்டிலிருந்து இரவு 10 மணி வரை ஆஸ்பத்திரியில் டியூட்டி போட்டிருந்தார்கள். அவன் ஒரு மணிக்கே கிளம்பிப் போய் விட்டான். அப்போதுதான் ஒரு தற்கொலை கேசை கவனித்து விட்டு தன் ரூமிற்கு வந்து உட்கார்ந்தான். 'இவன் ஒரு மடையன், காதலில் தோல்வியாம், தற்கொலை பண்ணிக்கப் பாத்தானாம்! உலகம் காதலோடு நின்று விடுகிறதா? இதெல்லாம் தற்காலிகமானது என்பது படித்த அந்த முட்டாளுக்கு ஏன் தெரியவில்லை? நல்ல காலம் சரியான சமயத்தில் கொண்டு வந்தார்களோ, அவன் உயிர் பிழைத்தான்' என்று நினைத்துக் கொண்டவன். திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவன் பெரிதாகச் சிரித்தான். 'நாமும் அன்றைக்கு இந்த நிலையில் தானே இருந்தோம்? திவ்யா இறந்து விட்டாள் என்று நினைத்து எப்படியெல்லாம் வருத்தப் பட்டோம். ஒரு நிலையில் தானும் இந்த முடிவைத் தானே எடுக்கவிருந்தோம்? இப்போது நினைத்துப் பார்த்தால் இந்த ஆள் தற்கொலை பண்ணிக் கொள்ள முயற்சி செய்தது கூட ஒரு விதத்தில் நியாயமாகவே படுகிறது. காதல் தோல்வி என்பது எவ்வளவு



துயரமானது என்பது எனக்கு இப்போது நன்றாகவே புரிகிறது. திவ்யா இல்லாத வாழ்க்கையா? நெவர்' என்று நினைத்துக் கொண்டான்.

திடீரென்று யாரோ கனைக்கும் சப்தம் கேட்க, தன் கனவு உலகத்திலிருந்து விழித்துக் கொண்டவன் எதிரே பார்த்ததும் முகம் மலர்ந்தான்.

''வரவேணும், வரவேணும், மகாராணியாரே! இந்த ஏழையை ஆட்கொள்ள நினைத்து காட்சி கொடுத்தமைக்கு மிக்க நன்றி!'' என்று நாடக பாணியில் வரவேற்றான் திவ்யாவை.

''அரவிந்த், எனக்கு வீட்டிலே இருப்புக் கொள்ளவில்லை. அதுதான் உங்களைப் பார்க்க வந்தேன்.''

''அப்படியா, ஏன் உடம்பு என்ன செய்கிறது. இப்படி வந்து இந்தப் படுக்கையிலே படு. நான் பரிசோதிக்கிறேன்'' என்றான்.

''ஏய், என்ன கொழுப்பா? நான் உங்களோடு பேசிட்டுப் போக வந்தேன்.''

''ஓ, பேசலாமே! இந்த அன்னா ஹஸாரே இருக்காரே...'' என்று ஆரம்பித்தான்.

''ஸ்டாப், ஸ்டாப்! என்னை என்ன பைத்தியக்காரி என்று நினைச்சீங்களா?''

''இல்லையா பின்னே? எங்கே என் கண்ணைப் பார்த்துச் சொல்லு. நீ என் மேலே பைத்தியமாயில்லே?''

''ப்ளீஸ் அரவிந்த், ஜோக் அப்பார்ட், நாம நம்மைப் பத்திப் பேசலாமே!''

''ஸாரி, டியர், உன்னைப் பாத்தாலே எனக்கு குஷி வந்துடறதா, அதான் ஓகே. இன்னிக்கு ஒரு

வேடிக்கையான கேஸ் இப்பதான் கவனிச்சுட்டு வரேன். ஒருத்தன் காதல்லே தோல்வி அடைஞ்சதனாலே தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணியிருக்கான். சரியான டைம்லே கொண்டு வந்ததாலே பொழைச்சிக்கிட்டான். அவனை நான் நல்லா திட்டினேன். ''ஏம்பா, காதல்லே தோத்துப் போனா தற்கொலைதான் முடிவா? உன்னை நம்பி எத்தனை பேர் இருக்காங்க? இப்படி முட்டாள் தனமாக முடிவெடுத்துட்டியே?''ன்னு. அப்புறம் தான் எனக்கே உறைச்சது. உங்கிட்டே சொன்னேனோ இல்லையோ, நீ வந்த பிளேன் எரிஞ்சு போச்சு. யாரும் பிழைக்கல்லேன்னு நியூஸ் வந்ததும் நானும் இந்த முடிவுக்குத்தான் வந்தேன். நீ இல்லாத வாழ்க்கையை நினைச்சுக்கூடப் பார்க்க முடியல்லே. இது முக்காலும் சத்தியம், திவ்யா,'' என்றான் உணர்ச்சிப் பூர்வமாக.

திவ்யா அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''டார்லிங், உன்னைப் பார்த்துட்டேனா, இனிமே எனக்கு இங்கே வேலை ஓடாது. நான் ராஜனுக்குப் போன் பண்ணி என்னை உடனே ரிலீவ் பண்ணச் சொல்லி சொல்லிடறேன். நாம ஜாலியா வெளியே போகலாம். இப்போ மணி மூணாகிறது. நீ கொஞ்சம் வெளியே வெய்ட் பண்ணு. நான் சில ஃபார்மாலிட்டிஸை முடிச்சுண்டு வரேன்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் ராஜன் வந்தான் அரவிந்த் ரூமிற்குள் நுழையும் முன் வெளியே காத்திருந்த திவ்யாவை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.



''வாடா. இதோ பார் எனக்கு ரொம்ப தலையை வலிக்கறது. வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு பாக்கறேன். யூ ப்ளீஸ் டேக் ஓவர். உன் நைட் ஷிப்ட்டை நான் பாத்துக்கறேன்'' என்றான்.

''ஏண்டா அண்டப் புளுகு புளுகறே! உன் ஆளை நான் வெளிலே பாத்துட்டேன். போய்த் தொலை அவளையே நினச்சுண்டு இங்கே மருந்துக்கு பதில் மண்ணெண்ணெயை பேஷண்டுக்குக் கொடுத்துடுவே. போயிட்டு ராத்திரி ஒழுங்கா வந்து சேரு!'' என்றான் ராஜன் சிரித்துக் கொண்டே.

''தேங்க்ஸ்டா, என் செல்லம்'' என்று அவன் கன்னத்தை தடவி முத்தமிட்டான் அரவிந்த்.

''டேய், டேய் இதெல்லாம் அங்கே வெச்சுக்கோ, எங்கிட்டே வேண்டாம்.''

அதற்குள் அரவிந்த் சிரித்துக் கொண்டே வெளியே ஓடிவிட்டான்.

வெளியே காத்திருந்த திவ்யாவுடன் சேர்ந்து கொண்டு ''டார்லிங், எங்கே போகலாம். காந்தி மண்டபம் போகலாமா? இப்போ கும்பலும் இருக்காது! அதுதான் பெஸ்ட் பிளேஸ்'' என்றான்.

''ஐய்யோ, கும்பல் இருக்காதா, நான் வரலேப்பா. நீங்க சும்மா இருக்க மாட்டிங்க.''

''ராம ராமா! நான் ஒரு பர்பெக்ட் ஜென்டில்மேன். என்னை நம்பி நீ தாராளமா வரலாம்.''

''சரி, சரி பார்க்கத்தானே போறேன். வாங்க அங்கேயே போகலாம்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

இருவரும் பார்க்கில் தனிமையான ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டனர். ''அரவிந்த், உண்மையைச் சொல்லுங்க, நீங்க சொன்னதெல்லாம் உண்மையா?'' என்று கேட்டாள் திவ்யா.

''எதைச் சொல்றே?''

''நீங்க தற்கொலை பண்ணிக்க நினைச்சது பத்திதான்.''

''100% அக்மார்க் உண்மை. அந்த ஒரு ராத்திரி நான் பட்ட பாடு அந்த தெய்வம்தான் அறியும். நிஜமாகவே, திவ்யா, நீ இல்லாத வாழ்க்கை ஒரு நரகம்தான். என்னாலே நீ இல்லாமல் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. நீ மட்டும் சரியான சமயத்தில் போன் செய்யாமப் போயிருந்தேன்னா நான் போயி சேர்ந்திருப்பேன். சொர்க்கலோகத்தில நீ எங்கே, எங்கேன்னு தேடிண்டு அலைஞ்சுண்டு இருப்பேன்'' என்றான் கலங்கிய கண்களோடு.

திவ்யா அவன் கைகளை எடுத்து தன் நெஞ்சோடு வைத்துக் கொண்டாள். ''அரவிந்த், என் மேலே உங்களுக்கு இவ்வளவு காதலா? எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கு, தெரியுமா? இனிமே ஒரு கணம் கூட உங்களை விட்டுப் பிரிய மாட்டேன்'' என்றாள்.

''எங்கே, எல்லாம் பேச்சோடுதான் இருக்கு, செய்கையிலே காணோமே?''

''என்ன சொல்றீங்க?''

''பின்னே இதோ பார் எவ்வளவு கேப் நமக்குள்ளே.''

''சீ, இதுதான் நீங்க பர்பெக்ட் ஜென்டில்மேனாக இருக்கற லட்சணமா?''



''பின்னே, பர்பெக்ட் ஜென்டில்மேன்னா தன் காதலி மேலே ஒரு தூசுகூட விழாம பாத்துக்கணும் அதுதான். இதோ பார் இங்கே கொஞ்சம் தூசி இருக்கு.''

''ஏய், கையைக் கட்டிகிட்டு சும்மா இருக்கணும். இதெல்லாம் இப்போ எங்கிட்டே வெச்சுக்க வேண்டாம்.''

''என்னது, உங்கிட்டே வெச்சுக்காம பின்னே யார்கிட்டே வெச்சுக்கறது? அதோ போகுது பார் ஒரு டைட் பேண்ட் வித் டைட் பனியன். அதுகிட்டே வெச்சுக்கட்டுமா, ஹலோ மிஸ்...''

திவ்யா அவன் வாயைப் பொத்தினாள். ''ஏய், ரவுடி டாக்டர்! சும்மா இரு...''

பொத்தின கைகளை முத்தமிட்டான். ''ரொம்ப தேங்க்ஸ்.''

திடீரென்று உரத்த குரலில் பாட ஆரம்பித்தான். ''அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு.''

அவன் வாயை மறுபடியும் அவசரமாகப் பொத்தியவள் ''என்ன இது எல்லோரும் பாக்கறாங்க சும்மா இருங்க'' என்றாள்.

''மறுபடியும் ரொம்ப தேங்க்ஸ்'' என்று சொல்லி மறுபடியும் அவள் கையை முத்தமிட்டான்.

''ஐயோ, என்ன இது, சும்மா இருங்க எல்லோரும் பாக்கறாங்க கூட்டம் கூடிடப் போறது.''

''எல்லாம் பொறாமை பிடிச்ச பசங்க. எனக்கு அடிச்ச அதிர்ஷ்டம் அவங்களுக்கு இல்லே போலிருக்கு. அதான் எல்லாரும் மொறைக்கறாங்க.''

திடீரென்று நினைத்துக் கொண்டு திவ்யா "களுக்" என்று சிரித்தாள்.

"ஏய், என்னைப் பார்த்தா உனக்குச் சிரிப்பா இருக்கா? இப்போ எதுக்காகச் சிரிச்சே?"

"பின்னே இப்படியா ஏர்போர்ட்லே கையும் களவுமா மாட்டிப்பீங்க? எனக்கு எவ்வளவு வெக்கமா இருந்தது தெரியுமா?

"ஓ அதுவா? ஏன் தேவியார் கொஞ்சம் எட்டியே இருந்திருக்கறது. அட்டை மாதிரி ஒட்டிகிட்டே இல்லே அதுதான் மாட்டிகிட்டோம்."

"அதுவும் நல்லதுதான் உங்கப்பாவுக்கு நம்ம காதல் தானாவே தெரிஞ்சுடுத்து."

"ஆனா உங்கப்பாவுக்கு எப்படிம்மா தெரிஞ்சுது? அம்மணியின் தூக்கத்திலே ஐயா வந்து.. அது என்ன? ஒரே பிதற்றலாமே! ஆமா அப்படி உன் கனவிலே நான் வந்து என்னதான் செஞ்சேன்?"

திவ்யாவின் முகம் சிவந்தது "உஷ்! சொல்ல மாட்டேன். இந்த ஆம்பிள்ளைகளுக்கு வெக்கமே கிடையாது" என்றாள்.

திடீரென்று அவன் செல் அடித்தது. ராஜன்தான் "அடேய், அயோக்யா! எங்கடா இருக்கே? இப்போ மணி என்ன பாத்தியா? ஒழுங்கா வந்து சேரு, ஆமாம்!"

"யாரு அரவிந்த்!"

"எல்லாம் அந்த கரடிதான், சரி போகலாம் எனக்கு டியூட்டிக்கு டைம் ஆயிடுத்து" என்று சொல்லி அவளுடன் புறப்பட்டான்.



அதன் பிறகு கொஞ்ச நாட்களாகவே ஐயாரப்பன் காம்பௌண்டில் எல்லோரும் ரொம்பவே பிஸி... பரிமளாவும், வரதனும் ரொம்ப தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள். ஐயாரப்பன் காம்பௌண்டில் பொன்னி அத்தையிலிருந்து ப்ரகதீஷ் வரை எல்லோருக்கும் புதுத் துணி எடுக்க வேண்டும். ரொம்ப விலை உயர்ந்ததாக இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் ஒரே மாதிரி வாங்கணும் என்று... "என் பென்ஷன் பணமே நிறைய சேர்ந்திருக்குடா, வேணுமானா எடுத்துக்கோ" என்று வரதன் சொல்லி முடிக்கும் முன் விஜய், ஷோபா, கணேசன், ஜயந்தி என்று எல்லோரும் பாய்ந்து கொண்டு சண்டைக்கு வந்துவிட்டனர்... "என்ன பேச்சு இது? நாங்களெல்லாம் எதுக்கு இருக்கோம்? சும்மா இருங்கோ, நாங்க பாத்துக்கறோம்" என்று ஒரே அடியாக அடித்துப் பேசிவிட்டனர்.

பிறகு தஞ்சையில் இவர்களுக்குத் தெரிந்த மானம்புச்சாவடி தறிக்காரரை வரச் சொல்லி பிடித்த கலர் ஆனால் ஒரே டிசைன் ஒரே விலையில் எல்லோருக்கும் எளிமையான பட்டுப் புடவைக்கே சொல்லிவிட்டனர். ஆண்கள் எல்லோருக்கும் வேஷ்டி, ஜிப்பா என்று அமர்க்களமாய் துணி எடுக்கும் வேலை முடிந்தது.

வரதன், பரிமளாவின் சதாபிஷேகத்திற்கு மறுநாள் விவேக், சுபாஷிணியின் கல்யாணத்திற்கு நாள் கிடைத்து விட்டதில் எல்லோருக்கும் பரம திருப்தி. விவேக் திருமணத்திற்கு மாம்பலத்தில் ஒரு நல்ல திருமண மண்டபத்தையும் ஏற்பாடு செய்துவிட்டனர்.

சதாபிஷேகத்திற்கு பில்டிங்கின் நடுவில் பந்தல், வீடுகளின் பின்பக்கம் கார் பார்க்கிங், சாப்பாடு என்று

முடிவாயிற்று. சதாபிஷேகம் ஆனதும் மண்டபத்தில் கல்யாண ரிசப்ஷன், மறுநாள் கல்யாணம், மாலை வீட்டுக்கு வந்துவிடலாம் என்றும் தீர்மானமாயிற்று.

சதாபிஷேகத்திற்கு ஊரிலிருந்து வரவேண்டியவர்கள் மிகக் குறைந்த உறவினரே இருந்தனர். கல்யாணத்திற்கு வந்து தங்க வேண்டிய உறவுக்காரர்களும் ரொம்ப அதிக மில்லாததால், எல்லோரும் ஐயாரப்பன் காம்பௌண்டில் எல்லார் வீட்டிலுமாகத் தங்கிவிட்டனர்.

சதாபிஷேகத்திற்கு இரண்டு நாட்கள் முன்பிருந்தே அலங்கார விளக்குகள் கண்ணைப் பறித்தன. எல்லார் வீட்டு வாசலிலுமே மாவிலைத் தோரணங்கள், செம்மண் இட்ட கோலங்கள்.. முதல் நாள் மாலை நிகழ்ச்சிகள் எல்லாம் சிறியவர்கள் ஏற்பாடு. மதியமே ரம்யா, காவ்யா, வீணா, வினோதினி எல்லோருடைய சிநேகிதர்களுமாய் வந்து குந்தவையிலிருந்து பரிமளா வரை எல்லோருக்கும் மெஹந்தி இட்டுவிட்டார்கள். சுபா விவேக் ஜோடிக்கும், அரவிந்த், திவ்யா ஜோடிக்கும் ஒருவர் பெயரை ஒருவருக்கு மெஹந்தியில் இட்டு விட்டனர்.

''இதென்ன லூட்டி? நான் எப்படி ஹாஸ்பிடல் போவேன், இடாதீங்க பொண்ணுங்களா'' என்று அரவிந்த் ஓட அவனை ராஜேந்திரனும் பிரதீப்புமாகத் துரத்திப் பிடித்து ''திவ்யா'' என்று அவன் கையில் மெஹந்தி இட்டுவிட்டு தான் மறுவேலை பார்த்தனர். ''புல் கை ஷர்ட் போட்டுகிட்டு போங்கண்ணா'' என்று கைகொட்டி சிரிக்கவும் செய்தனர்.

மாலையில் பாட்டிக்கு குஜராத்தி ஸ்டைலில் புடவை கட்டிவிட்டு தலை அலங்காரம் எல்லாம் பண்ணி, பெண்கள் ஊஞ்சலில் அமர்ந்த வரதன் தாத்தாவை



ஆண்பிள்ளைகள் எல்லாருமாய் பைஜாமா, குர்த்தா துப்பட்டாவோடு அழைத்து வந்து உட்கார வைத்தனர். எல்லா பெண்களும் பாட்டுப் பாடி அமர்க்களப்படுத்தி விட்டனர். அடுத்தது பட்டி மன்றம், நடுவராக தேவிகா வின் காலேஜிலிருந்து ஒரு ப்ரொஃபஸர் வந்திருந்தாள். தலைப்பு: ஐயாரப்பன் காம்பௌண்டில் இரு தாத்தாக் களா, மூன்று பாட்டிகளா யார் ஒசத்தி என்பது. ஆச் சரியப்படும் விதத்தில் இரண்டு அணிகளிலும் பையன் கள், பெண்கள் இருபாலருமே இருந்தனர். ஒரே கார சாரமான விவாதம். ''சுந்தரா பாட்டிதான் முக்கியம்'' என்று திவ்யா, அரவிந்த் மஸ்கா அடிக்க, ''பொன்னி அத்தைதான் பரம உபகாரி, அவள் தான் ஒசத்தி'' என்று கல்யாணி ஜால்ரா அடிக்க, ''இல்லை பரிமளா பாட்டி தான்'' என்று விவேக், சுபா பெரிதாக வாதிக்க ''எங்க சாமித் தாத்தாத தான் காந்தி தாத்தா மாதிரி கொள்கை பிடிப்புள்ளவர் நான்கு பேருக்கு முன் மாதிரியாக வாழ்பவர்'' என்று வினோ, ப்ரதீப் குந்தவை சாதித்தனர். பின் வரதனுக்காக பேசியது ரம்யா, காவ்யா. அதன் பிறகு நடுவரின் தீர்ப்பு. ''கல்யாணப் பெண்ணான பரிமளா பாட்டியும், கல்யாணப் பிள்ளை வரதன் தாத்தாவும்தான் பெஸ்ட் தாத்தா, பாட்டி என்று தீர்ப்பாயிற்று. (எல்லாம் ஒரு செட்டப் தான்) உடனே ஒரு அழகு ட்ரேயில் ஒரு கவரை வைத்து நீட்டினார்கள் தாத்தா பாட்டியிடம் விஜய்யும் ஷோபாவும். அடுத்தது விஜய் ''இந்த கவரில் என்ன இருக்கு? யார் கரெக்டா ஊகம் செய்தாலும் அவர்களுக்கு ஒரு பரிசு.''

ஆளாளுக்கு காஷ்மீருக்கு டிக்கெட், குலு மனாலிக்கு டிக்கெட் என்றெல்லாம் சொன்னார்கள். தஞ்சையைக்

சுற்றி இருக்கும் கோவில்களுக்குப் போய்வர டிக்கெட் என்றார்கள். கடைசியாக ரம்யா "SEA SHELLS"க்கு தேன் நிலவு டிக்கெட் என்றாள்.

"நோ, நோ" என்று பெரிசா சப்தம் போட்டான் விவேக்.

"ஏண்டா, அந்த தீவை நீ விலைக்கு வாங்கிட்டியா" என்று கேட்டாள் ஜயந்தி.

"அங்கு நாங்கள் போகப் போகிறோம்" என்றான் விவேக்.

"ஒஹோ! அதுதான் இந்தக் கத்தலா? சரி, அதுவும் இல்லை. இப்போ சொல்லுங்கோ யாராவது. இந்தக் கவர்லே என்ன இருக்கு?" என்று விஜய் கேட்க, "OMR ROAD-லே ஒரு HOLIDAY RESORT-க்கு இரண்டு நாட்கள் ஸ்டேக்கு டிக்கெட்" என்று தேவிகா கரெக்டா சொல்லி ஒரு பெரிய மில்க் சாக்லேட் பாரை பரிசாகப் பெற்றாள். ஒரே கைதட்டல் இப்போது இன்றைய GRAND FINALE என்று விஜய் அனவுன்ஸ் செய்தான். என்ன அது எல்லோரும் கேட்க "அது ஸஸ்பென்ஸ்" என்றான்.

டேப்ரெக்காரடரை கொண்டு வந்து விஜய் கரெக்டாக வைக்க ஷோபா ரொம்ப அழகான கதக் டிரெஸ்ஸில் முழு கதக் மேக்கப்போடு வந்தாள். எல்லோருக்கும் படு ஆச்சர்யம். அவளுக்கு கதக் தெரியும் என்றே யாருக்கும் தெரியாது.

ரொம்ப அழகான ஜதிகள் அழகான சொற் கோர்வை களுடன் 15 நிமிடம் சுழன்று, சுழன்று ஆடிவிட்டு, கதக் இலக்கணப்படி சலங்கைகளைத் தனியாக ஒலிக்கவும்



வைத்துக் காட்டிவிட்டு திரும்ப முதலில் பாடிய கண்ணன் பற்றி வரிகளுக்கு அவள் ஆடி முடித்தபோது பெரிய கரகோஷம் விண்ணைப் பிளந்தது. எல்லோரும் அப்படி மெச்சிக் கொண்டார்கள்.

மொத்தத்தில் சதாபிஷேகத்திற்கு முதல் நாளே ஒரு படு அமர்க்களமான விழா. பரிமளா, வரதன் முகத்தில் சந்தோஷம், பூரிப்பு. "ஏய், பாட்டி முகத்தில் வெட் கத்தைப் பாரேன். பாட்டி இன்னிக்கு இருக்கும் அழகைப் பாரேன்" "ஏன் தாத்தா மட்டும் என்ன 18 பட்டி ஜமீன்தார் மாதிரின்னா இருக்கார்" என்றெல்லாம் சொல்லி சந்தோஷப் பட அந்த நிகழ்ச்சி முடிவடைந்தது.

கடைசியாக பெண்கள் எல்லோரும் கும்மி அடித்துப் பாட ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்ள, தத்தம் மனைவியரைப் பார்த்து கணவன்மார்கள் எல்லாரும் பூரித்துப் போக அன்றைய விழா இனிதே நிறைவு பெற்றது. பொன்னி போய் தேங்காய்மேல் கற்பூரம் ஏற்றி எல்லோருக்கும் திருஷ்டி சுற்றிப் போட்டாள்.

முதல் நாள் தாத்தா பாட்டியின் இத்தனை வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு மகத்தான நாள். அடுத்த நாள் விவேக், சுபாவின் வாழ்க்கையின் பொன்னான நாள். காலைச் சூரியனின் கதிர்கள் எழுமுன் ஐயாரப்பன் காம்பௌண்ட் விழித்துக் கொண்டு விட்டது. பாட்டி, தாத்தா மணப்பெண், பிள்ளையாக மணவறையில் அமர, புது நகைகள் எல்லாவற்றையும் சல்லடையில் வைத்து அவர்கள் மேல் மந்திரித்த நீரைப் பொழிந்து எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள். பாட்டி, தாத்தா புது துணிகள் அணிந்து திரு மாங்கல்ய தாரணம் அணிந்த போது எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

மணமேடையின் மேலிருந்து அவர்கள் மேல் பூச்சொரிய குழந்தைகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லோரும் பரிமளா, வரதனை கீழே விழுந்து வணங்கி அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். பின் அமர்க்களமான விருந்து. பின்னே, தஞ்சாவூர் பிச்சுமணி கைவண்ணத்தைக் கேட்கவா வேண்டும்?

ஒரு இரண்டு மணி நேரம் ரெஸ்ட். பிறகு அலங் கரிக்கப்பட்ட காரில் மாம்பலத்தில் இருக்கும் அந்த அருமையான கல்யாண மண்டபத்தை அடைந்தார்கள். நளினி வீட்டினர் முன்னமேயே போய் மண்டபத் திலிருந்து கொண்டு எல்லோரையும் வரவேற்க ஆறடி ஆணழகன் விவேக் சாட்சாத் மன்மதனாக அங்கு விளங்க, பக்கத்தில் சர்வாலங்கார பூஷிதையாக சுபாஷிணி... அவளை ''இன்னிக்கும் நாளைக்கும் ரொம்பப் பேசக் கூடாது. கல்யாணப் பொண்ணா லட்சணமா அடக்க ஒடுக்கமா இரு'' என்று நளினி ஏற்கனவே மிரட்டி வைத் திருந்ததால் சுபா விவேக் எது கேட்டாலும் ஒரு புன் னகையைத் தவிர பதில் ஏதும் தரவில்லை. போரடித்துப் போய் வாயை மூடிக் கொண்டான் விவேக். அவளையே முறைத்துக் கொண்டிருந்த அவன், ''தனியே எங்கிட்டே மாட்டுவேயில்லே. அப்ப கவனிச்சுக்கறேண்டி உன்னை'' என்றான் தணிந்த குரலில். அதையும் அனுபவித்து மனத்தினுள் சிரித்துக் கொண்டாள், சுபா!

இவர்கள் ஒருவிதம் என்றால் அரவிந்தும், திவ்யாவும் கூட நன்றாகவே அனுபவித்தார்கள் இவர்கள் கல் யாணத்தை... ப்ரகதீஷை எடுத்து வைத்துக் கொஞ்சிக் கொண்டு இருவரும் அவனைக் கீழே விடவேயில்லை. இவளை ஓரக்கண்ணால் அவனும், அவனை ஓரக் கண்ணால் இவளும் பார்த்துக் கொண்டு அந்தக் குழந்தையின் கன்னத்தில் முத்தமழை பொழிந்து தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொண்டார்கள். இருவரும் குழந்தைக்கு ஒரே சமயத்தில் இரண்டு கன்னங்களிலும் முத்தம் கொடுத்த போது அதை ரம்யா போட்டோ எடுத்துவிட்டாள். ஒருவரை ஒருவர் கண்ணால் விழுங்கிக் கொள்ள இந்தக் கல்யாணம் நல்ல சந்தர்ப்பமாக இருந்தது.



முதுமை வரும் போது பேச விஷயம் இருக்கிறதோ இல்லையோ, ஆனால் அன்பு மேலிடும். அதுவரை ஒருவருக்காக ஒருவர் செய்த தியாகங்களும், செயல் களும் நினைவுக்கு வரும். பலருக்குப் பிரியும் நேரம் வந்து விடுமோ என்ற பயம் கூட வரும். இதுதானே உலக வாழ்க்கையில் தாம்பத்திய நியதி!

முதல் நாள் ''எங்களுக்கு எதுக்கு இதெல்லாம்'' என்று பரிமளாவும் வரதனும், ஹாலிடே ரிசார்ட் டிக்கெட் வேண்டாம் என்று சொன்ன போது இதை ரொம்ப அழகாக, நாசூக்காக எடுத்துச் சொன்னார் சாமிநாதன். இந்த முதுமையில் தனக்கே தனக்கென்று இருக்க வேண்டியவள் இல்லாத வாழ்க்கை, வேறு எத்தனை தான் நல்ல விதமாக நடந்தாலும் ஒரு சூன்யம் தோன்றத் தானே செய்கிறது என்பதை நன்கு உணர்ந்து கொண்டிருப் பவர் அல்லவா அவர்!

''இதோ பாருங்க, வரதன்! 80 வயது வாழ்ந்திருக்கீங்க. 20 வயதில் கல்யாணமாகி இருந்தாலும் ஆரம்ப காலத்தில் அந்தக் காலத்திலெல்லாம் மண வாழ்க்கை என்பதில் பயமும், குடும்பத்தில் உள்ளவர்களை கவனித்துக் கொள் வதிலும் தானே போயிருக்கும்? பிறகு குழந்தை,

குட்டிகள், வீட்டின் நிதி நிர்வாகம், குழந்தைகளைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருவது, அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துத் தருவது என்று தானே காலம் போகிறது? பரிமளா அண்ணிக்கே அண்ணிக் கென நீங்க எத்தனை நாள் ஒதுக்கியிருப்பீங்க? இல்லே, உங்களுக்கே உங்களுக்கென அவங்க எத்தனை நாள் ஒதுக்கியிருப்பாங்க? இப்ப இந்த இரண்டு நாள் நீங்க அதைச் செய்யுங்க. குழந்தைங்க கரெக்டாகத்தான் செய்திருக்காங்க. போய் இதையும் அனுபவிச்சுட்டு வாங்க'' என்றார்.

''உங்களுக்கென எத்தனை பேர் இருந்தாலும் ஒரு கணவனுக்கென உள்ள ஒரே ஜீவன் மனைவிதான். அதேதான் மனைவிக்கும். அதை உணர்ந்துட்டு நல்லா இருந்துட்டு வாங்க. சின்ன வயதில் ஒருத்தரை ஒருவர் தேடுவதெல்லாம் வேறு எத்தனையோ காரணங்களுக் காக இருக்கலாம். ஆனால் வயதான பிறகு தேடுவது அன்பு கொண்ட ஆத்மாக்கள் இரண்டின் தேடல். இங்கு பேசலாம், பேசாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பழசை அசை போடலாம். நடந்த எத்தனையோ விஷ யங்களுக்காக வருந்தி சுய கௌரவம் பார்க்காமல் மன் னிப்புக் கேட்கலாம். எப்படிப் பார்த்தாலும் உங்களுக்கு இந்த தேன் நிலவு தேவைதான். அந்தக் காலத்தில் தேன் நிலவு போயிருக்க மாட்டிங்க. இப்போ அதையும் என்ஜாய் பண்ணிட்டு வாங்க'' என்றார் மேலும்.

சாமிநாதன் பேச ஆரம்பித்ததுமே கவனமாகக் கேட்ட எல்லோரும் ஜோராகக் கைத்தட்டினார்கள். ''ரிகார்ட் பண்ணி இருக்கேன், தாத்தா!'' என்றான் விஜய். ''இதை திவ்யா அரவிந்த் கல்யாணத்தில் ''தாம்பத்தியத்தின்



பரிபூரணம்'' என்று தலைப்பிட்டு குட்டி புத்தகமாகப் போட்டு எல்லோருக்கும் கொடுக்கப் போகிறேன்'' என்றான். ''நல்ல யோசனை! இன்னும் ஒரு கட்டுரை தாத்தா, பாட்டியிடம் கேட்டு வாங்கி அதையும் சேர்த்து வெளியிட்டுடு'' என்றார் கணேசன்.

இங்கேயோ திவ்யா, அரவிந்திற்கு இதெல்லாம் பற்றி எத்தனையோ இருந்தது விவாதிக்க. இரண்டு பேருமாக ரிஸப்ஷனுக்கு வருகிறவர்களை வரவேற்கிறோம் என்று வாசலிலேயே நின்று கொண்டிருந்தார்கள். ஐந்து நிமிஷம் கூட இருக்காது. ராஜேந்திரனும், குந்தவையும் வந்து கூட நின்றார்கள். ''ஏய் உள்ளே போய் சுபா, விவேக் பக் கத்தில் போய் நில்லுங்க'' என்று இவர்கள் இரண்டு தரம் சொல்லிப் பார்த்தார்கள். அவர்கள் நகர்கிற வழியாய் இல்லை. ''ஏன், உன்னை அப்பா கூப்பிடுகிறார்டா'' என்று சொல்லவும் தான் அவர்கள் ஒரு வழியாக நகர்ந் தார்கள்.

அடுத்த ஐந்து நிமிடங்களில் அங்கு வினோதினியும், ப்ரதீப்பும் வந்து நின்று கொண்டார்கள். தெரிந்த வித்தைகள் எல்லாம் படித்து சிரமப்பட்டு அவர்களை ஒரு வழியாக அங்கிருந்து கிளப்பினார்கள் அரவிந்தும், திவ்யாவும். ஐந்து நிமிஷம் கழியவில்லை இப்போது வீணாவும் காவ்யாவும் வந்து விட்டார்கள். அவர்கள் இருவரும் இடத்தை விட்டு நகராமல் ரொம்பவே அழிச் சாட்டியம் பண்ணினார்கள். இவர்களுக்குப் போரடித்து விட்டது. கடைசியில் விஜய்யும், ஷோபாவும் வந்து நின்று கை தட்டவும், ராஜேந்திரனில் ஆரம்பித்து இத்தனை நாழி இவர்களைத் தொந்திரவு செய்தவர்கள் எல்லாரும் ஒன்றாக ''ஒய் திஸ் ஹரிபரி, ஹரிபரி ஹரிபரி

டி'' என்று பாடிக் கொண்டே வந்தார்கள். கையைத்தட்டிக் கொண்டு கோரஸ்ஸாக இவர்கள் பாடவும் ''அட ராமா! பேசி வைத்துக் கொண்டுதான் இத்தனை நாழி படுத்தினீர்களா'' என்று கேட்டான் அரவிந்த்.

''அதுதான் ஆயுள் பூரா பேசிக் கொண்டே இருக்க பர்மிஷன் வாங்கிட்டீங்களே! இப்போ எதுக்கு இந்த அவசரம்? என்று கல்யாணி கேட்க. ஒரேடியா வெட்கப்பட்டு திவ்யா உள்ளே ஓடப் பார்த்தாள். அந்த சமயத்தில் ராமனாதன் அங்கு வர, ''சரி, சரி! நீங்க போங்க, நானும் இவருமா இங்கே நிற்கிறோம்'' என்றாள் கல்யாணி. சிரிப்பும் கைத்தட்டலும் காதைப் பிளந்தது.

## 44

கல்யாணத்தன்று எல்லாம் நல்லபடியாக நடந்தது. முகூர்த்தம் முடிந்து சாஸ்திரிகள் கிளம்பத் தயாரானார். நாற்காலியில் அப்போதுதான் வேலைகள் எல்லாம் கவனித்துவிட்டு அப்பாடா என்று சாய்ந்து கொண்ட சுந்தராவிடம் போய் ''பாட்டி, சாஸ்திரிகள் கிளம்பறார்'' என்றான் அரவிந்த்.

''ஆமாண்டா, முகூர்த்தம் ஆயிடுத்து. அதான் கிளம்பறார்'' என்றாள் சுந்தரா. இவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. சாஸ்திரிகள் தன் சிஷ்யர்களுடன் சுப்பு, ரங்காவிடம் வந்தார்.

''அப்போ நான் உத்தரவு வாங்கிக்கறேன், அண்ணா!'' என்றார்.



''ஒரு டம்ளர் பாயசமாவது எடுத்துக்கோங்கோ, சாஸ்திரிகளே'' என்று ரங்கா அவரிடம் சொல்லிக் கொண்டு இருக்கையிலே தேவிகா எல்லோருக்கும் பாயசம் எடுத்து வந்துவிட்டாள். எல்லோரும் பாயசம் சாப்பிட்டுவிட்டு மேடையை விட்டு இறங்கினார்கள். ''சரிம்மா, நாங்க கிளம்பறோம்'' என்றார்.

''பாட்டி, சாஸ்திரிகள் கிளம்பறார், பாட்டி'' என்றான் அரவிந்த் திரும்பவும்.

''கிளம்பட்டுமே, அதுக்கு நாம என்ன பண்ணணும்?'' என்று கேட்டாள் சுந்தரா.

''நான் அவரை கொஞ்சம் இருக்கச் சொல்லவா.''

''ஏண்டா, அவர் புறப்படட்டுமே! அதுக்கென்ன இப்போ?''

''இல்லே, பாட்டி! அவர்கிட்டே நீ பேச வேண்டாமா?''

''என்னடா பேசணும்?'' என்று சிரிக்காமல் கேட்டாள் சுந்தரா.

''அதில்லே பாட்டி, நாள் பாக்கறதெல்லாம் அவர் கிட்டே தானே கேக்கணும்?'' என்று இழுத்தான்.

''அதுவா...! என் கண்ணே! அதுக்குத்தான் இந்த அவஸ்தைப் பட்டியா?''

சாஸ்திரிகள் செருப்பு போட்டுக் கொள்வதை தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான், அரவிந்த்.

''பேராண்டி, இங்கே வா! நாளெல்லாம் பாத்தாச்சு'' என்றாள் சுந்தரா.

அரவிந்த் முகம் மலர்ந்தது. ''எப்போ பாட்டி, எப்போ?''

''ஹூம், அது கிடக்கு இன்னும் மூணு மாசம். உன் கல்யாணத்துக்கு அப்பவே நாள் குறிச்சாச்சு. சந்தோஷம் தானேடா.''

''இது ரொம்ப அநியாயம், கிட்டத்திலே நாளே இல்லையாமா? அப்போ நாங்க ஹனிமூன் போயிட்டு வந்துதான் கல்யாணம் பண்ணிப்போம், சொல்லிட்டேன்!'' என்று வாய்க்குள்ளேயே முணுமுணுக்க, பொன்னியத்தை ''அப்போ நேரே சீமந்தம்தான். கல்யாணச் செலவு மிச்சம்'' என்று ஜோக்கடிக்க, ஐயாரப்பன் வீட்டு மனிதர்கள் எல்லாருமாகச் சிரித்த சிரிப்பில் அந்த மண்டபமே அதிர்ந்தது.